ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

க்ருஷ்ணா! குருவாயூரப்பா!



ஸ்வாமி மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி அருளிச்செய்த

# ஸ்ரீமந் நாராயணீயம்

(மூலமும் உரையும்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

www.namperumal.com

1. ஸாந்த்ராநந்தாவ போதாத்மகம்
அனுபமிதம் காலதேசாவதிப்ப்யாம்
நிர்முக்தம் நித்யமுக்தம் நிகமசத
ஸஹஸ்ரேண நிர்பாஸ்யமாநம்
அஸ்பஷ்டம் த்ருஷ்ட மாத்ரே புநருரு
புருஷார்த்தாத்மகம் ப்ரஹ்ம தத்வம்
தத்தாவத்பாதி ஸாக்ஷாத் குருபவனபுரே
ஹந்த பாக்யம் ஜநாநாம்.

**பொருள் -** முழுமையான ஆனந்தமும் ஞானமும் தன்னுடைய வடிவமாகவே உடையது; எதனுடனும் ஒப்பிட முடியாதது; காலம் தேசம் போன்ற எல்லைகளைக் கடந்து நிற்பது; ஆயிரக்கணக்கான வேத நூல்களாலும் விவரித்துக் கூறப்பட்டாலும் உணர்த்தப் பட முடியாதது; அதனைக் கண்டவுடன் நமக்கு உயர்ந்த பலன்களை அளிக்க வல்லது; இப்படிப்பட்ட உயர்ந்த ஒரு ப்ரஹ்மம், குருவாயூரில் நின்ற ஒளிவீசுகிறது. இதனை அடைய மக்கள் செய்த புண்ணியம் என்னவோ? ஆச்சரியமாக உள்ளதே!

2. ஏவம் துர்லப்ய வஸ்துந்யபி
ஸுலபதாய ஹஸ்த லப்தே யதன்யத்
தன்வா வாசா தியா வா பஜதி பதஜன:
க்ஷுத்ரதைவ ஸ்புடேயம்
ஏதே தாவத் வயம் து ஸ்திரதர மனஸா
விச்வபீடாப ஹத்யை
நிச்சேஷாத்மான மேனம் குருபவன
புராதீசமேவ ஆச்ரயாம:

**பொருள் -** இப்படியாக கிடைப்பதற்கு மிகவும் அரிய ஒரு பொருள் நமக்கு எளிதாகக் கிடைக்கும்படி நிற்கிறது. நம்முடைய கைகளுக்கு எட்டிய தூரத்தில் உள்ளது. இதனை உணராமல் மனிதர்கள் தங்கள் உடலாலும் மனதாலும், வாக்காலும் மற்ற தெய்வங்களை நாடுகின்றனர். இது அவர்கள் அறியாமையே என்பது விளங்குகிறது. ஆனால் நாங்கள் உலகத்தில் உள்ளவர்களின் துன்பம் அனைத்தும் நீங்க, உறுதியான மனதுடன், அனைத்திற்கும் ஆத்மாவாக விளங்கும் இந்த குருவாயூரப்பனை மட்டுமே நாடி நிற்கிறோம்.

3. ஸத்த்வம் யத்தத் பராப்யாம் அபரி
 கலனதோ நிர்மலம் தேநதாவத்
 பூதைர் பூதேந்த்ரியை: தேவபுரிதி
 பஹுச: ச்ரூயதே வ்யாஸ வாக்யம்
 தத் ஸ்வச்சத்வாத் அச்சாதித பரஸுக
 சித் கர்ப்ப நிர்ப்பாஸ ரூபம்
 தஸ்மின் தன்யா ரமந்தே ச்ருதிமதி
 மதுரே ஸுக்ரஹே விக்ரஹே தே

**பொருள் -** குருவாயூரப்பா! ரஜோ மற்றும் தமஸ் குணங்கள் கலவாமல் ஸத்வகுணம் மட்டுமே உள்ளதால் தோஷம் இல்லாமல் விளங்கக்கூடிய பஞ்சபூதங்களாலும் பதினொரு இந்த்ரியங்களாலும் உனது திருமேனி ஆக்கப்பட்டது என்ற வேதவ்யாஸர் கூறுகிறார். இப்படியாக உனது திருமேனி உள்ளதால் அதற்குள் அடங்கிய ப்ரகாசமும் ஞானமும் ஆனந்தமும் மறையாமல் உள்ளது. இத்தகைய உனது அர்ச்சாவதார விக்ரஹத்தைக் கண்டும், அதனைப் பற்றிக் கேட்டும். அதனை த்யானித்தும் உனது அடியார்கள் மிகுந்த ஆனந்தம் பெறுகின்றனர்.

4. நிஷ்கம்பே நித்யபூர்ணே நிரவதி
 பரமானந்த பீயூஷ ரூபே
 நிர்லீனானேக முக்தாவலி ஸுபகதமே
 நிர்மல ப்ரஹ்ம ஸிந்தெள
 கல்லோ லோல்லாஸ துல்யம் கலு விமலதரம்
 ஸத்வம் ஆஹு: ததாத்மா
 கஸ்மாந்நோ நிஷ்கலஸ்த்வம் ஸகல இதி
 வசஸ்த்வத் கலாஸ்வேவ பூமந்

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ மாறுதல்கள் அடையாமலும், எப்போதும் முழுமை பெற்றவனாகவும், ஆனந்தம் அளிக்கும் அமிர்தம் போன்றும் உள்ளாய். இத்தகைய அமிர்தம் உள்ள கடலில் உனது அடியார்கள் முத்துக்கள் போல் நிரம்ப உள்ளனர். இத்தகைய ப்ரஹ்மம் ஆகிய கடலில் வீசும் அலைகள் உனது ஸத்வகுணம் ஆகும். பரிபூரணமாக உள்ளவனே (பூமன்)! நீ நிஷ்கலன் (முழுமையானவன், பிரிக்கவே

இயலாதவன்) என்பது உண்மையே! உன்னை ஸகலன் என்று கூறுவது நீ எடுத்த அவதாரங்கள் மூலமே பொருந்தும்.

5. நிர்வ்யாபாரோபி நிஷ்காரணம் அஜ பஜஸே
யத் க்ரியாம் ஈக்ஷணாக்யாம்
தேனைவோதேதி லீநா ப்ரக்ருதி ரஸதி
கல்பாபி கல்பாதி காலே
தஸ்யா:ஸம்சுத்தம் அம்சம் கமபி தம்
அதிரோதாயகம் ஸத்வரூபம்
ஸ த்வம் த்ருத்வா ததாஸி ஸ்வமஹிம
விபவாகுண்ட வைகுண்ட ரூபம்

**பொருள் -** தோற்றம் என்பதே இல்லாமல், பிறப்பில்லாமல் எப்போதும் உள்ள குருவாயூரப்பா! நீ செய்ய வேண்டும் என்று எந்தச் செயலும் இல்லை (அனைத்திற்கும் உன்னால் ஏவப்பட்டவர்கள் உள்ளனர்). இருந்தாலும் நீ பார்க்கும் பார்வையில் இருந்து ப்ரக்ருதி உண்டானது. அது ஸ்ருஷ்டிக்கு முன்னர் உன்னிடம் மறைந்து இருந்தது. கல்பம் தொடங்கியபோது அது உன்னிடம் இருந்து தோன்றியது. உனது மகிமையால் என்றும் குன்றாமல் உள்ள சக்தியை உடையவனே! வைகுண்டத்தில் உள்ளவனே! உனது சக்தியின் மூலம் மாயையான ப்ரக்ருதியின் ஸத்வ அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டு நீ இந்த ஒப்பற்ற உருவம் கொண்டுள்ளாய்.

6. தத்தே ப்ரத்யக்ர தாரா தரலலித
கலாயாவலீ கேலிகாரம்
லாவண்யஸ்ய ஏகஸாரம் ஸுக்ருதி ஜன
த்ருசாம் பூர்ண புண்ய அவதாரம்
லக்ஷ்மீ நிச்சங்க லீலா நிலயனம்
அம்ருதஸ்யந்த ஸந்தோஹ மந்த:
ஸிஞ்சத் ஸஞ்சிந்தகானாம்
வபுரனுகலயே மாருதாகாரநாத

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய திருமேனியானது எப்படி உள்ளது? நீர் கொண்ட மேகம் போன்று கறுத்தும் அழகாகவும்; காயம்பூ மலர் போன்று மனதிற்கு இன்பம் அளிப்பதாகவும்; எல்லையற்ற அழகிற்கு இருப்பிடமாகவும்; புண்ணியம் செய்த மனிதர்களுக்கு முன் ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் விளைவாகவும்; மஹாலக்ஷ்மீ மிகவும் விரும்பி விளையாடும் இடமாகவும்; த்யானம் செய்பவர்களின் மனதில் அமிர்தம் போன்ற இனிமை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இதனை, இந்தத் திருமேனியை நான் எப்போதும் த்யானிக்கிறேன்.

7. கஷ்டா தே ஸ்ருஷ்டி சேஷ்டா
பஹுதரபவ கேதாவஹா ஜீவபாஜாம்
மித்யேவம் பூர்வம் ஆலோசிதம் அஜித
மயா நைவமத்யாயி ஜானே
நோ சேஜ்ஜீவா: கதம் வா மதுரதரமிதம்
த்வத்வபு: சித்ர ஸார்த்ரம்
நேத்ரை: ச்ரோத்ரை: ச பீத்வா
பரமரஸ ஸுதாம்போதிபூரே ரமேரந்

**பொருள் -** யாராலும் வெல்ல முடியாதவனே! குருவாயூரப்பா! நீ ஸ்ருஷ்டிப்பதால் மனிதர்கள் இந்த உலகில் பிறக்கின்றனர். அப்படிப் பிறந்த பின்னர் பலவகையான துயரங்களை அனுபவிக்கின்றனர். ஆக உன்னுடைய ஸ்ருஷ்டி என்பது மனிதர்களுக்குத் துன்பம் அளிக்கவே உள்ளது என்று ஒரு காலத்தில் நான் எண்ணியது உண்டு. உன்னைக் கண்ட பின்னர் என்னுடைய இந்த எண்ணம் தவறு என்று அறிந்தேன்! நீ அப்படி எங்களை உருவாக்கவில்லை என்றால், பரமானந்தம் அளிக்கும் உனது இந்தத் திருமேனியை எப்படிக் காண இயலும் ? காதுகளால் உனது பெருமைகளை எப்படிக் கேட்க இயலும்? எப்படி ஆனந்தக் கடலில் மூழ்கவும் முடியும்?.

8. நம்ராணாம் ஸந்நிதத்தே ஸததம் அபி
புரஸ்தைர் அநப்யர்த்திதானபி
அர்த்தான் காமாந் அஜஸ்ரம் விதரதி
பரமானந்த ஸாந்த்ராம் கதிம் ச
இத்தம் நிச்சேஷ லப்யோ நிரவதி பல:

பாரிஜாதோ ஹரே த்வம்
க்ஷுத்ரம் தம் சக்ரவாடீ த்ருமம் அபிலஷதி
வ்யர்த்தம் அர்த்திவ்ரஜ: அயம்

**பொருள் -** ஹரே குருவாயூரப்பா! நீ எளிதாக அடையக் கூடியவனாகவும் கேட்ட பலன்களை உடனே அளிப்பவனாகவும், பாரிஜாத மரம் போன்றும் உள்ளாய். உன்னை வழிபடுவோர்களுக்கு அனைத்தையும் நிரம்ப வழங்குகின்றாய். என்ன கேட்பது என்று அறியாதவர்கள் மனதில் உள்ள விருப்பத்தைப் புரிந்தும் அளிப்பவன் நீயே. அவர்களுக்கு மிகுந்த ஆனந்தம் அளிப்பவனும் மோட்சம் அளிப்பவனும் நீயே. இப்படி நீ எளிதாக அடைய உள்ளவனாக இருந்தும் மனிதர்கள் தேவலோகத்தில் உள்ள கற்பக மரம் போன்ற அற்ப விஷயங்களையே விரும்புகின்றனரே!

9. காருண்யாத் காமம் அன்யம் தததி கலு
பரே ஸ்வாத்மதஸ்த்வம் விசேஷாத்
ஐச்வர்யாத் ஈசதே அன்யே ஜகதி
பரஜனே ஸ்வாத்மனோ அபீச்வர: த்வம்
த்வயி உச்சை: ஆரமந்தி ப்ரதிபத
மதுரே சேதனா: ஸ்பீதபாக்யா:
த்வம் ச ஆத்மாராமா ஏவ இதி அதுல
குணகணாதார சௌரே நமஸ்தே

**பொருள் -** இனிமையான திருக்கல்யாண குணங்கள் உடைய வாஸுதேவனே! குருவாயூரப்பா! இந்த உலகில் உள்ள பல தெய்வங்கள், தன்னை வணங்குபவர்களுக்கு தங்களை அல்லாமல் மற்றவற்றை மட்டுமே வழங்குகின்றன. நீயோ உன்னை வணங்குபவர்களுக்கு உனது ஆத்மாவையே (உன்னையே) கொடுக்கின்றாய். மற்ற தெய்வங்கள் ஐஸ்வர்யத்தின் மூலமும் அணிமா போன்ற சக்திகளின் மூலமாக தங்களது ஈச்வரத் தன்மையை விளக்குகின்றன. நீயோ ஆத்மாவையே வென்று அதனை நிரூபிக்கின்றாய். புண்ணியம் செய்தவர்கள் உன்னையே அடைந்து உயர்ந்த ஆனந்தம் அடைகின்றனர். யாரிடமும் எதனையும் எதிர்பாராமல் உள்ளவனே! ஆனந்த ரூபனே! உனக்கு நமஸ்காரம்.

10. ஐச்வர்யம் சங்கராதீச்வரவி நியமனம்

விச்வதேஜோ ஹராணாம்
தேஜ: ஸம்ஹாரி வீர்யம் விமலமபி யசோ
நிஸ்ப்ருஹை: ச உபகீதம்
அங்கா ஸங்கா ஸதா ஸ்ரீ: அகிலவித் அஸி
ந க்வாபி தே ஸங்கவார்த்தா
தத்வாதாகார வாஸின் முரஹர பகவச்
சப்த முக்யாச்ரய: அஸி

**பொருள் -** முரன் என்ற அசுரனைக் கொன்றவனே! ஹரியே! குருவாயூரில் என்றும் வாசம் செய்பவனே! உன்னுடைய செல்வம் எது? சங்கரன் போன்றவர்களை அவர்கள் கடமைகளில் அவர்களை ஈடுபட வைப்பது அன்றோ! அனைவரின் சக்தியையும் அபகரிக்கும் திறன் உடைய சங்கரனின் சக்தியையும் அபகரிக்கும் திறன் உடையவன் நீயே. உன்னுடைய புகழை முற்றும் துறந்த முனிவர்கள் பாடுகின்றனர். உன்னுடைய திருமேனியில் மஹாலக்ஷ்மி எப்போதும் வசித்து வருகிறாள். நீ அனைத்தையும் அறிந்தவன். எதிலும் பற்று இல்லாமல் உள்ளாய். பகவான் என்ற பதத்திற்கு இலக்கணமாக உள்ளாய். (பகவான் என்ற பதம் ஆறு குணங்களைக் குறிக்கும் - ஐச்வர்யம், புகழ், தேஜஸ், செல்வம், ஞானம் மற்றும் வைராக்யம்).

***

1. ஸூர்ய ஸ்பர்த்தி கிரீடம் ஊர்த்வ திலக
ப்ரோத்பாஸி பாலாந்தரம்
காருண்யாகுல நேத்ரம் ஆர்த்ர
ஹஸிதோல்லாஸம் ஸுநாஸாபுடம்
கண்டோத்யன் மகராப குண்டலயுகம்
கண்டோஜ்வலத் கௌஸ்துபம்
த்வத்ரூபம் வனமால்ய ஹாரபடல
ஸ்ரீவத்ஸ தீப்ரம் பஜே

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய க்ரீடம் சூரியனைவிட பல மடங்கு ஒளியுடையதாக உள்ளது. அழகாக நெற்றியில் இடப்பட்டுள்ள திலகத்தால் நெற்றி ஒளி வீசுகிறது. கண்களில் கருணை ததும்பி உள்ளது. அந்தக் கண்கள் புன்னகையும் வீசிச் சிரிக்கின்றன; மூக்கு எடுப்பாக உள்ளது; காதுகளில் அணிந்துள்ள குண்டலங்கள் மீன் போன்று கன்னங்களில் வந்து வந்து இடித்து நிற்கின்றன; கழுத்தில் கௌஸ்துபம் என்ற

மணி ஒளி வீசுகிறது; திருமார்பில் வைஜயந்தி என்ற மாலையும் முத்து மாலையும் உள்ளன; மேலும் ஸ்ரீவத்ஸம் கொண்டதுமாக உனது மார்பு உள்ளது. இத்தனை அழகான உனது உருவத்தை நான் த்யானம் செய்கிறேன்.

2. கேயூராங்கத கங்கணோத்தம
        மஹாரத்ன அங்குலீயாங்கித
   ஸ்ரீமத்பாஹு சதுஷ்க ஸங்க கதா
        சங்க்காரி பங்கேருஹாம்
   காஞ்சித் காஞ்சன காஞ்சி லாஞ்சித
        லஸத் பீதாம்பராலம்பினீம்
   ஆலம்பே விமலாம் புஜத்யுதிபதாம்
        மூர்த்திம் தவ ஆர்த்திச்சிதம்

**பொருள் -** ஸ்ரீஅப்பனே! உன்னுடைய நான்கு கைகளில் வளையல்கள், அங்கத ஆபரணம், கங்கணம், ரத்னம் உள்ள மோதிரங்கள் உள்ளன. அந்தக் கைகள் சங்கு, சக்கரம், கதை மற்றும் தாமரை மலர் ஆகியவற்றை ஏந்தி உள்ளன. உனது இடுப்பில் அரைஞாண் கயிறும், பட்டு ஆடையான பீதாம்பரமும் உள்ளன. உனது திருவடிகள் தாமரை மலர் போன்று அழகாக சிவந்து தூய்மையாக உள்ளன. உனது இத்தகைய அழகான திருமேனியைக் கண்டவர்களது துன்பங்கள் அனைத்தும் மறைந்து விடுகின்றன. இதனை நான் சரணம் என்று அடைகிறேன்.

3. யத் த்ரைலோக்ய மஹீயஸ: அபி
        மஹிதம் ஸம்மோஹனம் மோஹநாத்
   காந்தம் காந்தி நிதானத:
        அபி மதுரம் மாதுர்ய துர்யாதபி
   ஸௌந்தர்யோத்தரோபி ஸுந்தரதரம்
        த்வத் ரூபம் ஆச்சர்யதோபி
   ஆச்சர்யம் புவநே ந கஸ்ய குதுகம்
        புஷ்ணாதி விஷ்ணோ விபோ

**பொருள் -** அனைத்து இடங்களிலும் நிறைந்துள்ளவனே (விபோ) விஷ்ணுவே! உனது உருவம் எப்படிப்பட்டது? மூன்று உலகிலும் பெருமையும் சிறந்தும் உடைய பொருள் எது இருந்தாலும் அதனை விடச் சிறந்ததாக உள்ளது; எந்தப் பொருள் அனைவரது மனதையும்

கவருமோ அந்தப் பொருளை விட உனது திருமேனி கவரக்கூடியது; எந்தப் பொருள் கவர்ச்சியும் ஒளியும் கொண்டதோ அதனை விடக் கவர்ச்சியும் ஒளியும் உடையது; எது மிகவும் இனிமையாக உள்ளதோ அதனை விட இனிமையானது; எது அழகாக உள்ளதோ அதனைவிட அழகு நிறைந்ததாக உள்ளது; எது வியப்பை அளிக்கிறதோ அதனை விட வியப்பை அளிப்பதாக உள்ளது. இத்தனை சிறப்புடைய உனது திருமேனி யாருக்குத்தான் மன மகிழ்வை அளிக்காது?

4. தத்தாத்ருங் மதுராத்மகம் தவ வபு: ஸம்ப்ராப்ய ஸம்பந்மயீ
ஸா தேவீ பரமோத்ஸுகா சிரதரம் ந ஆஸ்தே ஸ்வபக்தேஷ்வபி
தேன அஸ்யா: பத கஷ்டம் அச்யுத விபோ த்வத்ரூப மனோஜ்ஞக
ப்ரேமஸ்தைர்யமயாத் அசாபல பலா சாபல்ய வார்த்தோதபூத்

**பொருள் -** எங்கும் உள்ளவனே! உனது அடியார்களை கைவிடாதவனே! (அச்யுதன்) அனைத்து ஐச்வர்யங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவள் மஹாலக்ஷ்மீ ஆவாள். அவள், ஒப்பு இல்லாத உயர்ந்த உனது திருமேனியை அடைந்து, அதனால் மிகவும் மனமகிழ்வு அடைந்து, தங்கிவிட்டாள். இதனால் அவள் தன்னுடைய அடியார்களிடம் கூட தங்கியிருப்பதில்லை. இதனால் அவளுக்கு சபலம் உடையவள், நிலை அற்றவள் என்ற அவப்பெயர் அல்லவா உண்டானது?

5. லக்ஷ்மீ ஸ்தாவக ராமணீயக ஹ்ருதைவேயம் பரேஷ்வஸ்த்திரேதி
அஸ்மிந் அந்யத் அபி ப்ரமாணமதுநா லக்ஷ்யாமி லக்ஷ்மீபதே
யே த்வத் த்யான குணாநு கீர்த்தன ரஸாஸக்தா ஹி பக்த ஜநா:
தேஷ்வேஷா வஸதி ஸ்திரைவ தயித ப்ரஸ்தாவ தத்தாதரா

**பொருள் -** குருவாயூரப்பா! மஹாலக்ஷ்மியின் நாயகனே! பதியே! உன்னுடைய திருமேனி அழகில் மிகவும் கவரப்பட்டு உன்னுடன் இருக்கும் மஹாலக்ஷ்மி, பிறரிடம் இருப்பதில்லை என்பதற்கு இன்னும் ஓர் ஆதாரமும் உள்ளது. உன்னைப் பற்றியும் உனது திருக்கல்யாண குணங்களைக் குறித்தும் நாம ஸங்கீர்த்தனம் செய்யும் உனது அடியார்களைக் கண்டு, "இவர்கள் எனது கணவரைப் பற்றி அன்றோ கூறுகிறார்கள்", என்று மகிழ்ந்து அவர்களிடமும் வாசம் செய்கிறாள் அன்றோ! இதன் மூலம் உன்னைப் பற்றிக் கூறாதவர்களிடம் மட்டுமே இவள் நிலையாக இருப்பதில்லை என்று உணரலாம்.

6. ஏவம்பூத மநோஜ்ஞதா நவஸுதா நிஷ்யந்த ஸந்தோஹனம்
த்வத்ரூபம் பரசித் ரஸாயனமயம் சேதோஹரம் ச்ருண்வதாம்
ஸத்ய: ப்ரேரயதே மதிம் மதயதே ரோமாஞ்சயதி அங்ககம்
வ்யாஸிஞ்சத்யபி சீதபாஷ்ப விஸரை: ஆனந்த மூர்ச்சோத்பவை:

**பொருள் -** குருவாயூரப்பா! கடந்த ச்லோகத்தில் கூறியதுபோல் உள்ள உனது அழகானது அமிர்தத்தை வழங்குவதாகவும், ஆனந்த வடிவமாகவும், பார்ப்பவர்கள் உள்ளத்தைக் கவருவதாகவும் இருக்கிறது. உனது திருமேனி அழகை ஒருமுறை யாராவது கூறக்கேட்டால் அதனைத் திரும்பத் திரும்பக் கேட்க மனம் துள்ளுகிறது. அப்படிக் கேட்டவுடன் மனதைப் பரவசம் நிரப்புகிறது. உடல் எங்கும் மயிர்க்கூச்சல் உண்டாகிறது. ஆனந்தக் கண்ணீர் பெருகி உடல் முழுவதும் நனைந்து விடுகின்றது.

7. ஏவம் பூததயா ஹி பக்த்யபிஹிதோ யோக: ஸ யோகத்வயாத்
கர்ம ஜ்ஞான மயாத் ப்ருசோத்தமதரோ யோகீச்வரைர் கீயதே
ஸௌந்தர்யைக ரஸாத்மகே த்வயி கலு ப்ரேம ப்ரகர்ஷாத்மிகா
பக்திர் நிச்ரமம் ஏவ விச்வ புருஷைர் லப்யா ரமாவல்லப

**பொருள் -** லக்ஷ்மியின் நாயகனே! குருவாயூரப்பா! மேலே உள்ள ச்லோகத்தின் நிலை நமக்கு உண்டாவதால்தான் பக்தி யோகமே சிறப்பானது என்று கூறப்பட்டது. இது கர்மயோகம், ஞானயோகம் ஆகியவற்றை விட உயர்ந்தது என்று யோகிகள் கூறுகின்றனர். அழகின் இருப்பிடமாகவே உள்ள உன்னிடம் காதலின் விளைவால் உண்டாகும் பக்தியோகம் மனிதர்களுக்கு எளிதில் கைகூடும் அல்லவா?

8. நிஷ்காமம் நியதஸ்வ தர்ம சரணம் யத்கர்ம யோகா பிதம்
தத்தூரேத்ய பலம் யத் ஔபநிஷத ஜ்ஞானோ பலப்யம் புன:
தத் அவ்யக்ததயா ஸுதுர்கமதரம் சித்தஸ்ய தஸ்மாத் விபோ
த்வத் ப்ரேமாத்மக பக்திரேவ ஸததம் ஸ்வாதீயஸீ ச்ரேயஸீ

**பொருள் -** எங்கும் நிறைந்துள்ள குருவாயூரப்பா! எந்த விதமான பலனையும் விரும்பாமல், தனக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வது கர்மயோகம் ஆகும்; இது பலநாள்

கழித்தே பலன் அளிக்கும். உபநிஷத்துக்களை நன்கு கற்பதன் மூலம் ஞானயோகம் கைகூடும். ஞானயோகத்தின் பலன் இந்த்ரியங்களால் அனுபவிக்கவோ உணரவோ இயலாது, ஆகக் கடினமானது. எனவே இந்த இரண்டை விட, உன் மீது வைக்கும் பக்தி மூலம் கிட்டும் பக்தி யோகமே இனிமையானதும் சிறப்பானதும் ஆகும்.

9. அத்யாயாஸ கராணி கர்மபடலானி ஆசர்ய நிர்யந் மலா:
போதே பக்தி பதேபி அதவாபி உசிததாம் ஆயாந்தி கிம் தாவதா
க்லிஷ்ட்வா தர்க்கபதே பரம் தவ வபுர் ப்ரஹ்மாக்யம் அந்யே புந:
சித்தார்த் ரத்வம் ருதே விசிந்த்ய பஹுபி: ஸித்யந்தி ஜன்மாந்தரை:

**பொருள் -** மன இருளை நீக்கி, இதனால் ஞானயோகத்திற்கும் பக்தி யோகத்திற்கும் தங்களைக் தகுதி உடையவர்களாக சிலர் செய்து கொள்கின்றனர். இதனால் என்ன பயன்? உனது அழகால் உள்ளத்தில் நெகிழ்வு உண்டாகாமல், வேதாந்தம் தர்க்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு, ப்ரஹ்மம் என்று உன்னைத் த்யானித்து, பல பிறவிகள் கடந்து உன்னை அடைகின்றனர்.

10. த்வத் பக்திஸ்து கதா ரஸாம்ருதஜரீ நிர்மஜ்ஜனேன ஸ்வயம்
ஸித்த்யந்தீ விமல ப்ரபோத பதவீம் அக்லேசத: தன்வதீ
ஸத்ய: ஸித்திகரீ ஜயத்யி விபோ ஸைவாஸ்துமே த்வத்பத
ப்ரேம ப்ரௌடி ரஸார்த்ரதர த்ருத்தரம் வாதால யாதீச்வர

**பொருள் -** ப்ரபுவான குருவாயூரப்பனே! உன்னிடம் உள்ள பக்தி என்பது உனது லீலைகள் நிரம்பிய கதைகளில் அல்லவா உள்ளது? அவை அமிர்தம் போன்று உள்ளன. அவை (கதைகள்) எந்தச் சிரமமும் இன்றி உனது மார்க்கத்தைக் காண்பிக்கின்றன. பிறவியின் பயனை உடனே அளிக்கின்றன. உன்னுடைய திருவடிகளில் நான் பொதிந்து கிடக்கும் அந்த பக்தி எனக்குச் சீக்கிரமாக உண்டாக வேண்டும்.

***

1. படந்தோ நாமானி ப்ரமத பரஸிந்தௌ நிபதிதா:
ஸ்மரந்தோ ரூபம் தே வரத கதயந்தோ குணகதா:
சரந்தோ யே பக்தாஸ் த்வயிகலு ரமந்தே பரம் அமூன்

அஹம் தந்யாந் மந்யே ஸமதிகத ஸர்வாபிலஷிதாந்

**பொருள் -** வரங்களை அளிக்கும் ஸ்ரீஅப்பனே! உனது நாமங்களை படித்துக் கொண்டும், உன்னுடைய அழகான திருமேனியைத் த்யானித்துக் கொண்டும் அமிர்தம் என்னும் கடலில் மூழ்கியுள்ளவர் யார்? உனது அடியார்கள். உனது திருக்கல்யாண குணங்களையும் அவற்றை விளக்கும் கதைகளையும் கூறிக் கொண்டுள்ளனர். அவர்கள் உன்னிடம் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். இத்தகைய உனது பக்தர்கள் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள் என்று நான் கூறுகிறேன்.

2. கதக்லிஷ்டம் கஷ்டம் தவ சரண ஸேவா ரஸபரேபி
அநாஸக்தம் சித்தம் பவதி பத விஷ்ணோ குரு தயாம்
பவத் பாதாம்போஜ ஸ்மரண ரஸிகோ நாம நிவஹான்
அஹம் காயம் காயம் குஹசன விவத்ஸ்யாமி விஜனே

**பொருள் -** விஷ்ணுவே! குருவாயூரப்பா! வெளியிலும் உள்ளும் உண்டாகும் நோயினால் கஷ்டப்படும் மனமானது, உன்னுடைய திருவடியில் நான் ஈடுபட்டாலும் அதனைத் த்ருப்தியுடன் ஈடுபடவிடாது தடுக்கிறது. ஆகவே எனது பற்று குறைகிறது. இது கஷ்டம் அன்றோ! கருணை காட்டமாட்டாயா? தனியான ஓர் இடத்தில் உனது திருவடித் தாமரைகளைத் த்யானித்தும், அதனால் மனம் நெகிழ்ந்தும், உனது திருநாமங்களைக் கூறிக்கொண்டும் இருக்க விரும்புகிறேன்.

3. க்ருபா தே ஜாதா சேத் கிம் இவ ந ஹி லப்யம் தநுப்ருதாம்
மதீய க்லேசௌக ப்ரசமனதசா நாம கியதீ
ந கே கே லோகே அஸ்மின் அநிசமயி சோகாபி ரஹிதா
பவத் பக்தா முக்தா: ஸுககதி மஸக்தா விதததே

**பொருள் -** குருவாயூரப்பா! உனது க்ருபை மனிதனிடம் இருக்கும் என்றால் அவனால் அடைய முடியாதது என்ன உள்ளது? இதுபோன்று என்னுடைய துன்பங்களை நீக்குவதும் உனக்கு மிகவும் சுலபமானதே! இந்த உலகில் உனது அடியார்கள் எந்த நேரத்திலும் துன்பம் என்பதே இல்லாமல் பற்று இல்லாதவர்களாக இன்பமாக உள்ளனரே!

4. முனி ப்ரௌடா ரூடா ஜகதி கலு கூடாத்ம கதயோ
பவத் பாதாம்போஜ ஸ்மரண விருஜோ நாரதமுகா:

சரந்தீச ஸ்வைரம் ஸதத பரிநிர்ப்பாத பரசித்
ஸதானந்த அத்வைத ப்ரஸர பரிமக்னா: கிமபரம்

**பொருள் -** ஈசனே! குருவாயூரப்பா! உலகத்தில் மிகவும் சிறந்து விளங்கும் முனிவர்கள் உனது தாமரை போன்ற திருவடிகளைத் த்யானித்த காரணத்தினால் அனைத்து துன்பங்களும் நீங்கப் பெற்றுள்ளனர். இதனால் தங்கள் விருப்பப்படி அத்வைத ஆனந்தத்தில் திளைத்து எங்கும் உலவி வருகின்றனர். இதற்கு மேல் இவர்களுக்கு கிடைக்கக்கூடிய பேறு என்ன இருக்கு முடியும்?

5. பவத்பக்தி: ஸ்பீதா பவது மம ஸைவ ப்ரசமயேத்
அசேஷ க்லேசௌகம் ந கலு ஹ்ருதி ஸந்தேஹ கணிகா
ந சேத் வ்யாஸஸ்ய உக்தி: தவ ச வசநம் நைகமவச:
பவேந்மித்யா ரத்யா புருஷ வசன ப்ராயம் அகிலம்

**பொருள் -** ஸ்ரீஅப்பனே! உன்னிடம் நான் கொண்டுள்ள பக்தி என்பது முழுமையாக இருக்கவேண்டும். என்னுடைய சகலவிதமான துயரங்களையும் அந்த பக்தியே நீக்கி விடும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அதனை விடுத்து அந்தப் பக்தியானது எனது துயரங்களை நீக்குமா என்று ஆராய்ந்தால் - வ்யாஸ பகவான் இயற்றிய பலவும், உனது வாக்கான ஸ்ரீமத் பகவத்கீதையும், வேதங்கள் கூறுவதும் தெருவில் போகும் வழிப்போக்கன் ஒருவன் கூறியது போல் அல்லவா ஆகிவிடும்?

6. பவத் பக்தி: தாவத் ப்ரமுக மதுரா த்வத்குண ரஸாத்
கிமபி ஆருடா சேத் அகில பரிதாப ப்ரசமநீ
புன: அந்தே ஸ்வாந்தே விமல பரிபோதோ தயமிலன்
மஹாநந்த அத்வைதம் திசதி கிமத: ப்ரார்த்யம் அபரம்

**பொருள் -** ஸ்ரீஅப்பனே! உன்னிடம் கொள்ளும் பக்தியானது துவக்கம் முதலே இனிமை அளிக்கிறது. அது மேலும் வளரும்போது அனைத்துத் துயர்களையும் நீக்குகிறது. அது மேலும் முதிர்ச்சி அடையும்போது இதயத்தில் மிகுந்த ஞானம் ஏற்படுத்தி, ப்ரஹ்ம ஐக்கியத்தையும் அளிக்கிறது. இதனை விட உயர்ந்தது உண்டோ?

7. விதூய க்லேசான் மே குருசரணயுக்மம் த்ருத ரஸம்
பவத் க்ஷேத்ர ப்ராப்தௌ கரமபி ச தே பூஜந விதௌ
பவன்மூர்த்யா லோகே நயனம் அத தே பாததுளஸீ
பரிக்ராணே க்ராணம் ச்ரவணம் அபி தே சாருசரிதே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ என்னுடைய துயரம் அனைத்தையும் நீக்க வேண்டும். எனது கால்கள் உனது கோயிலை அடையும்படி செய்ய வேண்டும். எனது கைகள் உன்னை பூஜை செய்ய வேண்டும். எனது கண்கள் உனது திருமேனியை மட்டுமே காண வேண்டும். எனது மூக்கு உனது திருவடிகளில் உள்ள துளசியை மட்டுமே நுகர வேண்டும். எனது காதுகள் உனது லீலைகள் அடங்கிய கதைகளை மட்டுமே கேட்க வேண்டும். இவற்றை நீ செய்வாயாக!

8. ப்ரபூதாதி வ்யாதி ப்ரஸப சலிதே மாமக ஹ்ருதி
த்வதீயம் தத் ரூபம் பரமஸுக சித்ரூபம் உதியாத்
உதஞ்சத் ரோமாஞ்சோ கலித பஹு ஹர்ஷாச்ரு நிவாஹோ
யதா விஸ்மர்யாஸம் துருபசம பீடாபரிபவான்

**பொருள் -** குருவாயூரப்பனே! என்னுடைய உள்ளமானது எனக்கு ஏற்பட்டுள்ள மிகுந்த துன்பங்களாலும் நோய்களாலும் கலக்கமுடன் உள்ளது. அவை நீங்கவேண்டும் என்றால், அந்த உள்ளத்தில் உனது திருமேனி தெரிய வேண்டும். அப்படித் தோன்றும் நேரத்தில் நான் மயிர்க்கூச்சல் பெற்று, கண்கள் ஆனந்தக் கண்ணீர் விடுத்து, அதனால் இந்தத் துயரங்களை மறந்து விடுவேன். இதனை அருள வேண்டும்.

9. மருத்கேஹாதீச த்வயி கலு பாரஞ்சோபி ஸுகினோ
பவத் ஸ்நேஹீ ஸோஹம் ஸுபஹு பரிதப்யே ச கிமிதம்
அகீர்த்திஸ்தே மாபூத் வரத கதபாரம் ப்ரசமயந்
பவத் பக்தோத்தம்ஸம் ஜடிதி குரு மாம் கம்ஸ தமன

**பொருள் -** குருவாயூரப்பா! கம்ஸனை அழித்தவனே! வரங்களை அளிப்பவனே! உன்னிடம் பக்தி இல்லாதவர்கள் கவலையின்றி உள்ளனர். உன்னிடம் மிகுந்த பக்தி உடைய நான் சிரமப்படுகிறேன். இது ஆச்சர்யமாக உள்ளது. இதனால் உன்னை அடைந்தவர்களை நீ

காப்பற்றவதில்லை என்று அவப்பெயர் உனக்கு வரக்கூடாது. என்னுடைய வ்யாதிகளை நீக்கி என்னை உனக்குச் சிறந்த அடியவனாக ஏற்க வேண்டும்.

10. கிம் உக்தை: பூயோபி ஸ்தவ ஹி கருணா யாவத் உதியாத்
அஹம் தாவத் தேவ ப்ரஹித விவிதார்த்த ப்ரலபித:
புர: க்லுப்தே பாதே வரத தவ நேஷ்யாமி திவஸாந்
யதாசக்தி வ்யக்தம் நதி நுதி நிவேஷா விரசயந்:

**பொருள் -** குருவாயூரப்பா! மீண்டும் மீண்டும் கூறுவதால் உண்டாகும் பயன் என்ன? என் மீது உனக்குத் கருணை ஏற்படும் வரை நான் புலம்புவதை விடப்போவதில்லை. உனது திருவடிகளில் சரணம் என்று புகுந்து வணங்கி, துதித்து, ஆராதிக்கப் போகிறேன். இப்படியே எனது நாட்களை நான் கழிக்கிறேன்.

***

1. கல்யதாம் மம குருஷ்வ தாவதீம்
கல்யதே பவத் உபாஸனம் யயா
ஸ்பஷ்டம் அஷ்ட வித யோகசர்யயா
புஷ்டயா ஆசு தவ துஷ்டிம் ஆப்நுயாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னை வணங்க எனது உடலுக்கு எந்த அளவு ஆரோக்யம் இருக்க வேண்டுமோ அதனை மட்டும் அளிப்பாயாக. அதன் மூலம் நான் அஷ்டாங்க யோகம் புரிந்து உனது அருளைப் பெற்று விடுவேன்.

**விளக்கம் –** அஷ்டாங்க யோகம் என்பது எட்டு அங்கங்கள் கொண்டதான பதஞ்ஜலியின் யோகம் ஆகும். அந்த எட்டு அங்கங்களாவன – யமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யானம் மற்றும் ஸமாதி ஆகும்.

2. ப்ரஹ்மசர்ய த்ருடதாதிபி: யமை:
ஆராப்லவாதி நியமைச்ச பாவிதா:
குர்மஹே த்ருடம் அமீ ஸுகாஸனம்

பங்கஜாத்யம் அபி வா பவத்பரா:

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது அருளையே நம்பியுள்ள நாங்கள் சுத்தமானவர்களாக இருப்போம். எப்படி? ப்ரம்மச்சர்யம் போன்ற யமம், குளித்தல் போன்ற நியமம், பத்மாசனம், ஸுகாஸனம் போன்ற ஆசனம் ஆகிய இவற்றால் ஆகும்.

**விளக்கம் –** அஷ்டாங்க யோகத்தின் ஒரு அங்கமான யமம் என்பது அஹிம்ஸை, ஸத்யம் (உண்மையே பேசுதல்), அஸ்தேயம் (திருடாமல் இருத்தல்), ப்ரம்மசர்யம், அபரிக்ரஹம் (தேவையற்ற சொத்து சேர்க்காமை) என்னும் ஐந்து அங்கங்கள் கொண்டதாகும். நியமம் என்பது சௌசம் (தூய்மை), ஸந்தோஷம் (மனநிறைவு), ஸ்வாத்யயம் (வேதங்களைக் கற்றல்), தவம், ஈச்வரப்ரணிதானம் (பகவானை வணங்குதல்) என்னும் ஐந்து அங்கங்கள் கொண்டதாகும். ஆக இங்கு அஷ்டாங்க யோகத்தின் மூன்று அங்கங்களான யமம், நியமம் மற்றும் ஆசனம் ஆகியவை கூறப்பட்டன.

3. தாரம் அந்தர் அநுசிந்த்ய ஸந்ததம்
ப்ராணவாயும் அபியம்ய நிர்மலா:
இந்த்ரியாணி விஷயாத் அபஹ்ருத்ய
ஆஸ்மஹே பவத் உபாசனோந்முகா:

**பொருள் -** ஸ்ரீஅப்பனே! நாங்கள் மேலே கூறியபடி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு “ஓம்” என்னும் ப்ரணவ மந்திரத்தை மனதால் த்யானித்தும், ப்ராணாயாமம் செய்தும் எங்களை பரிசுத்தம் ஆனவர்களாக மாற்றிக் கொள்கிறோம். மேலும் இந்த்ரியங்களை அவற்றுக்கு உரிய விஷயங்களிலிருந்து திசை திருப்பி, உன்னை உபாஸிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளோம்.

**விளக்கம் –** இங்கு அஷ்டாங்க யோகத்தின் இரண்டு அங்கங்களான ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம் ஆசனம் ஆகியவை கூறப்பட்டன.

4. அஸ்புடே வபுஷி தே ப்ரயத்னதோ
தாரயேம திஷணாம் முஹுர் முஹு:

தேந பக்திரஸம் அந்த: ஆர்த்ரதாம்
உத்வஹேம பவதங்க்ரி சிந்தகா:

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய திருமேனி எப்படி உள்ளது என்று வேதங்களாலும் சரிவர விளக்க இயலாது. இதனால், அந்தத் திருமேனி எங்கள் மனதில் தெளிவாகத் தோன்றி இருக்க மீண்டும் மீண்டும் மனதை ஒருநிலைப்படுத்துவோம். இதன் மூலம் உனது திருவடியைத் த்யானிக்கும் பேறு பெற்று, பக்தி அனுபவமும், இதய நெகிழ்வும் அடைவோம்.

**விளக்கம் -** இங்கு அஷ்டாங்க யோகத்தின் அடுத்த அங்கமான தாரணை என்பது கூறப்பட்டது. இது மனதை ஒருநிலைப்படுத்துவதாகும்.

5. விஸ்புடாவயவ பேத ஸுந்தரம்
த்வத் வபு: ஸுசிர சீலனாவசாத்
அச்ரமம் மனஸி சிந்தயாமஹே
த்யானயோக நிரதா: த்வத் ஆச்ரயா:

**பொருள் -** ஸ்ரீஅப்பனே! உன்னைக் குறித்து நாங்கள் த்யானத்தில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு அதிகமான நாட்கள் த்யானித்து அதன் பலனாக உனது திருமேனியில் உள்ள பல்வேறு உறுப்புகளின் எழிலையும் அனுபவிப்போமாக. அதன் பின்னர் உனது திருமேனி எங்கள் உள்ளத்தில் என்றும் த்யானப் பொருளாக நிற்கும்.

**விளக்கம் -** இங்கு அஷ்டாங்க யோகத்தின் அடுத்த அங்கமான த்யானம் என்பது கூறப்பட்டது.

6. த்யாயதாம் ஸகல மூர்த்திம் ஈத்ருசீம்
உன்மிஷன் மதுரதா ஹ்ருத ஆத்மனாம்
ஸாந்த்ர மோதரஸ ரூபம் ஆந்தரம்
ப்ரஹ்ம ரூபம் அயி தே அவபாஸதே

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உனது பூர்ணமான திருமேனியை மனதில் எப்போதும் த்யானிப்பவர்கள் அந்த அழகினால் மனதைப் பறிகொடுக்கின்றனர். இதன் பின்னர் உனது ஆனந்தமே உருவான ப்ரஹ்ம ரூபமானது என்றும் அவர்கள் மனதில் ஒளிவீசிக்கொண்டு விளங்குகிறது.

**விளக்கம் -** இங்கு அஷ்டாங்க யோகத்தின் அடுத்த அங்கமான ஸமாதி என்பது கூறப்பட்டது.

7. தத் ஸமாஸ்வ தனரூபிணீம் ஸ்திதிம்
த்வத் ஸமாதிமயி விச்வநாயக
ஆச்ரிதா புநரத: பரிச்யுதௌ
ஆரமேமஹி ச தாரணாதிகம்

**பொருள் -** குருவாயூரப்பா! உலகத்தின் நாயகனே! கடந்த ச்லோகத்தில் கூறிய நிலையானது ஸமாதி நிலையாகும். அதனை அடைந்து பின்னர் அதில் இருந்து சற்று சரிவு ஏற்பட்டாலும் மீண்டும் தாரணை செய்வோம்.

8. இத்தம் அப்யஸன நிர்ப்பரோல்லஸத் த்வத்
பராத்மஸுக கல்பிதோத்ஸவா:
முக்த பக்த குல மௌலிதாம்
கதா: ஸஞ்சரேம சுக நாரதாதிவத்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக மீண்டும் த்யானம் முதலியவற்றைப் பின்பற்றுவதால் உன்னுடைய ப்ரஹ்மரூபம் எங்களுக்குள் நீங்காமல் உள்ளது. இதனால் மிகுந்த ஆனந்தத்தில் மூழ்கி உள்ளோம். இதன் விளைவாக பக்தர்களின் சிறந்து விளங்கி, நாரதர், சுகமுனிவர் முதலானவர்களைப் போல் எங்கும் சென்று வருவோம்.

9. த்வத் ஸமாதி விஜயே து ய: புந:
மங்ஷு மோக்ஷரஸிக: க்ரமேண வா
யோகவச்யம் அநிலம் ஷடாச்ரயை:
உந்நயதி அஜ ஸுஷும்நயா சநை:

**பொருள் -** குருவாயூரப்பா! பிறப்பில்லாதவனே! இப்படியாக உன்னிடம் ஸமாதி நிலையை அடைந்த யோகிகள், மோக்ஷ முக்தியோ அல்லது க்ரம முக்தியோ (தெய்வீகமான பிறப்புகளைப் பெறுவது) அடைய விரும்புகின்றனர். இதற்காக ப்ராணவாயுவை தனது ஸூக்ஷ்ம நாடி வழியாக ஆறுவிதமான ஆதாரங்களைக் கடந்து மெதுவாக மேலே எழுப்பிச் செல்கிறார்கள் (ஆறு ஆதாரங்கள் - முதுகெலும்பில் உள்ள ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை மற்றும் மூலாதாரம்).

10. லிங்கதேஹமபி ஸந்த்யஜந்நதோ
        லீயதே த்வயி பரே நிராக்ரஹ:
    ஊர்த்வ லோக குதுகீது மூர்த்த:
        ஸார்தமேவ கரணை: நிரீயதே

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரஹ்மலோகத்தை விரும்பாமல், உன்னில் வந்து கலக்கும் மோக்ஷத்தை விரும்பும் ஒருவன், தனது சக்தியை ஆஜ்ஞை சக்கரத்திற்குக் கொண்டு சென்று, ஸூக்ஷ்ம உடலையும் விடுத்து உன்னை வந்து சேர்கிறான் (இது விதேஹ முக்தி எனப்படும்). ப்ரஹ்மலோகத்தை விரும்பும் ஒருவன் தன்னுடைய ஐந்து ப்ராணன்கள், ஐந்து கர்மேந்த்ரியங்கள், ஐந்து ஞானேந்த்ரியங்கள், மனம், புத்தி ஆகியவற்றுடன் கூடிய ஸூக்ஷ்ம உடலுடன் தலையில் உள்ள ப்ரஹ்மரந்த்ரம் வழியே வெளிக் கிளம்புகிறான் (இது க்ரம முக்தி எனப்படும்).

11. அக்னி வாஸர வலர்க்ஷ பக்ஷகை:
        உத்தராயண ஜுஷா ச தைவதை:
    ப்ராபிதோ ரவிபதம் பவத்பரோ
        மோதவான் த்ருவபதாந்த மீயதே

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரஹ்மலோகத்தை அடைய விரும்பும் உன்னுடைய பக்தன் ஒருவன் அக்னி, பகல் நேரம், சுக்லபக்ஷம், உத்தராயணம் ஆகிய தேவதைகளால் சூரியமண்டலத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அங்கு மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழிக்கும் அவன், பின்னர் த்ருவலோகம் செல்கிறான்.

12. ஆஸ்த்திதோத மஹராலயே யதா
சேஷவக்த்ர தஹநோஷ்மணார்த்யதே
ஈயதே பவதுபாச்ரய: ததா வேதஸ:
பதமத: புரைவ வா

**பொருள் -** குருவாயூரப்பனே! த்ருவலோகம் சென்ற பின்னர் அங்கிருந்து அவன் மஹர்லோகம் அடைகிறான். ஆதிசேஷனின் முகங்களில் இருந்து வெளிவரும் உஷ்ணக் காற்றானது (ப்ரளயத்தின்போது) இந்த ப்ரபஞ்சத்தையே தகிக்கும். அதற்கு முன்பாகவே உனது பக்தன் மஹர்லோகத்தில் இருந்து புறப்பட்டு ப்ரஹ்மலோகம் செல்கிறான்.

13. தத்ர வா தவ பதே அதவா வஸந்
ப்ராக்ருத ப்ரளய ஏதி முக்ததாம்
ஸ்வேச்சயா கலு புரா விமுச்யதே
ஸம்விபித்ய ஜகதண்டமோஜஸா

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உனது பக்தன் மஹர்லோகத்தில் (அல்லது ப்ரஹ்மலோகத்தில்) வசித்தபடி இருப்பான். பின்னர் ப்ராக்ருத ப்ரளயம் உண்டாகும்போது மோக்ஷம் அடைகிறான். அல்லது, தான் எப்போது விருப்பப்படுகிறானோ அப்போது, தனது யோக சக்தியால் ப்ரஹ்மாண்டத்தைத் துளைத்துக் கொண்டு மோக்ஷம் அடைகிறான் (விளக்கம் காண்க).

**விளக்கம் –** நான்முகனின் ஒரு பகல் என்பது 1000 சதுர்யுகம் ஆகும். இது 4, 32, 00, 00, 000 மனித வருடங்கள் ஆகும். இதே கால அளவும் கொண்டதாக நான்முகனின் ஒரு இரவு உள்ளது. இந்த இரவுப் பொழுதில், அனைத்து ஸ்ருஷ்டிகளும் சென்று நான்முகனில் லயிக்கின்றன. இதுவே நைமித்திக ப்ரளயம் எனப்படும். அடுத்த நாளின் தொடக்கத்தில் மீண்டும் ஸ்ருஷ்டி ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் ஒரு கல்பம் எனப்படும். இப்போது நாம் உள்ள கல்பமானது “ஸ்வேத வராஹ கல்பம்” ஆகும். இது போன்று 360 நாட்கள் கொண்டது நான்முகனின் ஒரு வருடம் ஆகும். இது போன்று நூறு வருடங்கள் என்பது நான்முகனின் ஆயுட்காலம் ஆகும். இது தலா 50 வருடங்கள் கொண்ட இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை பரார்த்தம் எனப்படும். தற்போது நாம் த்விபரார்த்தம் என்னும்

இரண்டாம் 50 வருட காலத்தில் உள்ளோம். இதன் முடிவில் ப்ராக்ருத ப்ரளயம் ஏற்பட்டு, அனைத்தும் சென்று ப்ரஹ்மத்தில் லயிக்கின்றன.

14. தஸ்ய ச க்ஷிதிபயோ மஹோநிலத்யோ
மஹத் ப்ரக்ருதி ஸப்தகாவ்ருதீ:
தத்ததாத்மகதயா விசந் ஸுகி யாதி
தே பதமநாவ்ருதம் விபோ

**பொருள் -** எங்கும் நிறைந்தவனே! குருவாயூரப்பா! மேலே கூறியபடி ப்ரஹ்மாண்டத்தைத் துளைத்துச் செல்லும் உன் பக்தன், அந்தப் ப்ரஹ்மாண்டத்தைச் சுற்றியுள்ள பூமி, நீர், ஒளி, வாயு, ஆகாசம், மஹத், ப்ரக்ருதி ஆகியவற்றைக் கடக்கிறான். இவற்றைக் கடந்து, எதுவும் சூழாமல் நின்றுள்ள உன்னிடம் வந்து முக்தி அடைகிறான்.

15. அர்ச்சிராதிகதிம் ஈத்ருசீம் வ்ரஜந்
விச்யுதிம் ந பஜதே ஜகத்பதே
ஸச்சிதாத்மக பவத்குணோதயாந்
உச்சரந்தம் அநிவேச பாஹிமாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உலகின் பதியே! இப்படியாக அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று உன்னை அடைந்த யாரும் நழுவுவதில்லை. ஸத்தாகவும், சித்தாகவும், ஆநந்தமாகவும் உள்ள உனது திருக்கல்யாண குணங்களையே எண்ணி இருக்கும் என்னை நீ காப்பாயாக!

***

1. வ்யக்தாவ்யக்தம் இதம் ந கிஞ்சித் பவத்
ப்ராக் ப்ராக்ருத ப்ரக்ஷயே
மாயாயாம் குண ஸாம்ய ருத்த விக்ருதௌ
த்வயி ஆகதாயாம் லயம்
நோ ம்ருத்யு: ததாம்ருதம் ச ஸமபூத்
நாஷ்நோ ந ராத்ரே: ஸ்த்திதி:
தத்ர ஏக: த்வம் அசிஷ்யதா:
கில பரானந்த ப்ரகாசாத்மனா

**பொருள் -** குருவாயூரப்பனே! முன்னர் மஹாப்ரளயம் உண்டானபோது ஸத்வ, ரஜோ, தமஸ் குணங்கள் சமமாக இருந்தன. அப்போது மாயை உன்னிடம் ஒடுங்கியே இருந்தது. அச்சமயம் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் காணப்படும் இந்தப் ப்ரபஞ்சமே இல்லை. அப்போது பிறப்பும், இறப்பும், பகலும், இரவும் ஆகிய எதுவும் இல்லை. நீ மட்டுமே உனது ஆனந்தமான திருமேனியுடன் தனியாக இருந்தாய் அல்லவா?

2. கால: கர்ம குணாச்ச ஜீவநிவஹா
விச்வம் ச கார்யம் விபோ
சில்லீலா ரதிம் ஏயுஷி த்வயி ததா
நிர்லீநதாம் ஆயயு:
தேஷாம் நைவ வதந்த்யஸத்வம் அயி
போ: சக்த்யாத்மனா திஷ்டதாம்
நோ சேத் கிம் ககனப்ரஸூந
ஸத்ருசாம் பூயோ பவேத் ஸம்பவ:

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரளயத்திற்கு முன்பு நீ உனது உன்னதமான ஆனந்தமான லீலையில் இருந்தாய், அப்போது மூன்று குணங்கள், காலம், கர்மங்கள், அனைத்து உயிர்கள், கார்யமான ப்ரபஞ்சம் ஆகிய அனைத்துமே மறைவாக இருந்தன. அவை இல்லை என்று வேதங்கள் கூறவில்லை. அப்படி அவை இல்லாமல் இருந்தால் ஆகாயத்தாமரை போன்று மீண்டும் எப்படித் தோன்ற இயலும்? (ஆகாயத்தாமரை - கற்பனையான பொருள்).

3. ஏவம் ச த்விபரார்த்த கால விகதௌ
ஈக்ஷாம் ஸிஸ்ருக்ஷாத்மிகாம்

பிப்ராணே த்வயி சுக்ஷுபே த்ரிபுவநீ
பாவாய மாயா ஸ்வயம்
மாயாத: கலு காலசச்தி: அகிலாத்ருஷ்டம்
ஸ்வபாவ: அபி ச
ப்ராதுர்பூய குணாந் விகாஸ்ய விதது:
தஸ்யா: ஸஹாயக்ரியாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! மேலே கூறிய நிலையானது இரண்டு பரார்த்தம் முடிய நீடிக்க நீ நினைத்தாய் (இரு பரார்த்த காலம் - நான்முகனின் ஆயுள்). அந்தக் காலம் முடிந்த பின்னர் நீ ஸ்ருஷ்டி செய்ய வேண்டும் என்று விரும்பினாய் (இது உபநிஷத்தில் – தத் ஐக்ஷத பஹுஸ்யாம் - நான் பலவாகக் கடவேன் என்று உள்ளது). அதற்கான உன் பார்வையைக் கண்டு மாயை கலங்கியது. அந்த மாயையில் இருந்து காலம் என்னும் சக்தியும், கர்மங்களும், கர்மங்களுக்கு ஏற்ற ஸ்பாவங்களும் தோன்றி அவை மாயைக்கு உதவியாக இருந்தன.

4. மாயா ஸந்நிஹித: அப்ரவிஷ்ட வபுஷா
லாக்ஷீ இதி கீதோ பவாந்
பேதைஸ்தாம் ப்ரதிபிம்பதோ விவிசிவாந்
ஜீவோபி நைவாபர:
காலாதி ப்ரதிபோதிதா அத பவதா
ஸம்சோதிதா ச ஸ்வயம்
மாயா ஸா கலு புத்தி தத்வமஸ்ருஜத்
யோ அஸௌ மஹாந் உச்யதே

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ மாயைக்கு அருகாமையில் இருந்தாலும் அதனுடன் கலக்காத ரூபத்துடன் உள்ளதால் உன்னை பலரும் ஸாக்ஷீ (பார்க்கக்கூடியவன்) என்று கூறுகின்றனர். அந்த மாயையின் ப்ரதிபிம்பமாக, ஆனால் வேறுபட்டதாகத் தோன்றும் ஜீவனும் நீயே ஆவாய். உன்னால் ஏவப்பட்ட அந்த மாயையே காலம், கர்மம், ஸ்வபாவம் என்று பலவாக விளங்குகின்றது. அது “புத்தி தத்வம்” எனப்படும் மஹத் தத்வத்தை உண்டாக்கியது.

### 5 தத்ர அஸௌ த்ரிகுணாத்மகோ அபி ச

மஹான் ஸத்வ ப்ரதான ஸ்வயம்
ஜீவே அஸ்மின் கலு நிர்விகல்பம் அஹம்
இதி உத்போத நிஷ்பாதக:
சக்ரே அஸ்மின் ஸவிகல்ப போதகம்
அஹம் தத்வம் மஹான் கல்வஸௌ
ஸம்புஷ்டம் திரி குணை; தமோதி பஹுலம்
விஷ்ணோ பவத் ப்ரேரணாத்

**பொருள் -** விஷ்ணுவே! குருவாயூரப்பா! மஹத் தத்துவம் என்பது மூன்று குணங்கள் சேர்ந்ததாக இருந்தாலும், அது ஸத்வ குணத்தையும் அதிகமாக உருவெடுக்கச் செய்து மனிதர்களிடத்தில் நான் என்ற அறிவை உண்டாக்குகிறது. மேலும் அதே மஹத் தத்துவம், தமோ குணத்தை அதிகரித்து மனிதனிடம் நான் பெரியவன். போன்ற மமதையை (அஹங்காரம்) வளர்க்கின்றது.

6 ஸ: அஹம் ச த்ரிகுணக்ரமாத் த்ரிவிததாம்
ஆஸாத்ய வைகாரிகோ
பூய: தைஜஸ தாமஸென இதி
பவன் ஆத்யேன ஸர்வாத்மனா
தேவான் இந்த்ரியம் ஆனினோ அக்ருத
திசாவாதார்க்க பாச்யச் வினோ
வஹ்நீந்த்ராச்யுத மித்ரகான்
விதுவிதி ஸ்ரீருத்ர சாரீரகான்

**பொருள் -** குருவாயூரப்பனே! மேலே கூறிய அஹங்காரம் என்பது மூன்று குணங்களாக உருவெடுத்தது. அவையாவன - வைகாரிகம் (இது ஸத்வ குணம் ஆகும்). (இது ராஜஸ குணம் ஆகும்). மற்றும் தாமஸம் ஆகும். இவற்றுள் முதலாவதாக <உள்ள ஸத்வ குணத்தில் இருந்து திசைகள், வாயு, சூரியன், வருணன், அச்வினிகள், அக்னிதேவன், இந்திரன், விஷ்ணுமித்ரன், ப்ரஜாபதி, சந்திரன், ப்ரும்மா, ருத்ரன், க்ஷேத்ரக்ஞன் ஆகிய தேவதைகள் தோன்றினர்.

7 பூமன் மானஸ புத்யஹம் க்ருதிமிலச்
சித்தாக்ய வ்ருத்யன் வீதம்
தத்ச அந்த: கரணம் விபோ தவ பலாத்

ஸத்வாம் ச ஏவ அஸ்ருஜத்
ஜாத: தைஜஸத: தசேந்த்ரிய கண:
தத்தாமஸம் சாத்புன:
தன்மாத்ரம் நபஸோ மிருத்புரபதே
சப்த: அஜனி த்வத் பலாத்

**பொருள் -** அனைத்து இடத்திலும் விளங்கி நிற்கும் குருவாயூரப்பனே! உன்னுடைய ஆணைக்கு இணங்க ஸாத்விக அஹங்காரம் என்பது மனம், புத்தி, அஹங்காரம் என்பவை இணைந்த சித்தம் என்பதைப் படைத்தது. ராஜஸ அஹங்காரம் என்பது பத்து இந்த்ரியங்களை உண்டாக்கியது. எஞ்சியுள்ள தாமஸ அஹங்காரம் என்பது ஆகாயத்தின் சூட்சுமமாக உள்ள சப்தத்தை உண்டாக்கியது.

8 சப்தாத் வயோம தத: ஸஸர்ஜித விபோ
ஸ்பர்சம் ததோ மாருதம்
தஸ்மாத் ரூபமதோ மஹத ச ரஸம்
தோயம் ச கந்தம் மஹீம்
ஏவம் மாதவ பூர்வ பூர்வ கலனாத்
ஆத்யாத்ய தர்மான் வீதம்
பூதக் ராமம் இமம் த்வமேவ பகவன்
ப்ராகாசய: தாமஸத்

**பொருள் -** மஹாலக்ஷ்மி என்றும் உறைபவனே (மாதவ! குருவாயூரப்பனே! பகவானே! ஓசையில் இருந்து ஆகாயமும், ஆகாயத்தில் இருந்த ஸபர்ஸ (தொடு) உணர்ச்சியும், ஸ்பர்ஸத்தில் இருந்து வாயுவும், வாயுவில் இருந்து ரூபமும், ரூபத்தில் இருந்து அக்னியும் உண்டானது. அக்னியில் இருந்து ரஸ்மும், ரஸத்தில் இருந்து நீரும், நீரில் இருந்து மணமும், மணத்தில் இருந்து பூமியும் உண்டானது. இப்படியாக வரிசையாக பஞ்ச பூதங்களை நீ தாமஸ அஹங்காரத்தில் இருந்து தோற்றுவித்தாய் அல்லவோ?

9 ஏதே பூதகணா: தத்இந்த்ரிய கணா
தேவா: ஜாதா: ப்ருதக்
நோ சேகு: புவனாண்ட நிர்மிதி
விதௌ தேவை: அமீபி: ததா

த்வம் நானாவித ஸூக்திபி: நுதகுண:
தத்வாத் யமூந் யாவிசம்
சேஷ்டா சக்திம் உதீர்ய தானி
கடயன் ஹைரண்ய மண்டம் வ்யதா:

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! இப்படியாகத் தோன்றிய பஞ்ச பூதங்கள் ஐந்தும், அவற்றின் தேவதைகளும் தனித்தனியாக இருந்தன. ஆகவே அவற்றால் எந்த ஸ்ருஷ்டியையும் செய்ய இயலவில்லை. அப்போது அந்தத் தேவதைகள் பலவிதமான ஸ்தோத்திரங்கள் மூலம் உன்னையும் உனது திருக்கல்யாண குணங்களையும் துதித்தன. உடனே நீ மஹத் போன்ற தத்துவங்களில் புகுந்து உண்டாக்கும் சக்தியை அளித்தாய். அதன் மூலம் பொன் போன்ற ப்ரம்மாண்டம் உருவானது.

10 அண்டம் தத்கலு பூர்வ ஸ்ருஷ்டஸலிலே
அதிஷ்டத் ஸஹஸ்ரம் ஸமா:
நிர்ப்பிந்தன் அக்ருதா: சதுர்தச
ஜகத்ரூபம் விராடாஹ்வயம்
ஸாஹஸ்ரை: கரபாத மூர்த்த
நிவஹை: நி: சேஷ ஜீவாத்மக;
நிர்பாத: அஸி ம்ருத்புராதிப ஸ மாம்
த்ராயஸ்வ ஸர்வாமயாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படி உருவான அண்டமானது. நீ முன்பே உருவாக்கிய நீரில் ஆயிரம் வருடம் இருந்தது. நீ அதனைப் பிளைந்தாய். அப்போது பதினான்கு லோகங்களின் ரூபம் கொண்டு விராட் புருஷன் என்ற உருவம் கொண்டாய். பல ஆயிரக்கணக்கான கைகள், கால்கள் தலைகள் போன்றவற்றுடன் அனைத்து உயிர்களுமாக நீயே தோன்றினாய் இப்படிப்பட்ட நீ எனது நோய்களில் இருந்து என்னைக் காக்க வேண்டும்.

***

1 ஏவம் சதுர்தச ஜகன் மயதாம் கதஸ்ய
பாதாளம் ஈச தவ பாததலம் வதந்தி
பாதோர்த்வ தேசமபி ரஸாதலம் தே
குல்பத் வயம்கலு மஹாதலம் அத்புதாத்மந்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! ஈசனே! தேவர்களின் தேவனே! பதினான்கு லோகமாக ரூபம் கொண்ட விராட் புருஷனின் உள்ளங்கால்கள் பாதாள லோகம் என்றும், கால்களின் மேற்புறம் ரஸாதலம் என்றும், கணுக்கால்கள் மஹாதலம் என்றும் முனிவர்கள் கூறுகின்றனர். (பாதாளம், ரஸாதலம், மஹாதலம் ஆகியவை கீழ் லோகங்கள்).

2 ஜங்கே தலாதலம் அதோ ஸுதலம் ச ஜாநூ
கிம்ச ஊருபாகயுகலம் விதாலதலே த்வே
க்ஷோணீ தலம் ஜகநம் அம்பரம் அங்க நாபி:
வக்ஷஸ்ச சக்ர நிலயஸ்தவ சக்ரபாணே

**பொருள் -** குருவாயூரப்பனே! சக்கரத்தை கையில் ஏந்தியுள்ளவனே! உன்னுடைய முழங்கால்களே தலாதலம். தொடைகள் ஸுதலம், இரு தொடைகளும் விதலம் மற்றும் அதலம், இடுப்பு பூலோகம், தொப்புள் ஆகாயம் (வானம்), மார்பு ஸ்வர்கம் என்றும் கூறப்பட்டது. (இங்கு தலாதலம், ஸுதலம், அதலம், விதலம் ஆகியவை கீழ் லோகங்கள் ஆகும்).

3 க்ரீவா மஹ: தவமுகம் ச ஜநஸ்தபஸ்து
பாலம் சிரஸ்தவ ஸமஸ்த மயஸ்ய ஸத்யம்
ஏவம் ஜகன்மயதனோ ஜகதாச்ரிதைர
அந்யைரபி நிபத்த வபுஷே பகவந் நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது கழுத்து மஹர்லோகம், எங்கும் நிறைந்துள்ள உனது தலையானது ப்ரம்மலோகம் ஆகும். இப்படியாக பதினான்கு லோகங்களையும் உனது உடலின் உறுப்புகளாகக் கொண்டவனே! இந்த லோகங்களில் உள்ள அனைத்துப் பொருட்களுமே உன் உடலில் உள்ளன. இப்படியான உடலை உடைய உனக்கு என் நமஸ்காரங்கள்.

4 த்வத் ப்ரஹ்மரந்தர பதம் ஈச்வர விச்வகந்த
சந்தாம்ஸி கேசவ கனா: தவ கேசபாசா:
உல்லாஸி சில்லியுகலம் த்ருஹிணஸ்ய கேஹம்
பக்ஷ்மாணி ராத்ரி திவஸௌ ஸவிதா ச நேத்ரே

**பொருள் -** ஈசனே! உலகின் கர்த்தாவே! குருவாயூரப்பனே! உனது தலை உச்சி (கபாலம்) என்பது வேதங்கள், அடியார் துயரை நீக்குபவனே (கேசவன்) உனது தலைமுடிகள் மேகங்கள்: மிகவும் அழகான புருவங்கள் இரண்டும் ப்ரும்மாவின் வீடு; உனது இரு கண், இமைகள் இரவு பகல்; கண்களே சூரியன் ஆகும்.

5 நி: சேஷ விச்வரசனா ச கடாக்ஷ மோக்ஷ:
கர்ணௌ திச: அச்வியுகலம் தவ நாஸிகே த்வே
லோபத்ரபே ச பகவன் அதரோத்த ரோஷ்டௌ
தாராகணாத் ச தசனா: சமன: ச தம்ஷ்டரா

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! இந்த உலக ஸ்ருஷ்டி என்பது உனது திருக்கண்களின் கடாட்ச பார்வையாகும். காதுகளோ திசைகள், மூக்குகள் அச்வினி தேவர்கள், கீழ் உதடு என்பது லோபம், மேல் உதடு வெட்கம், பற்களோ நட்சத்திரங்கள், தெற்றிப்பல் என்பதோ யமனாகும்.

6 மாயா விலாஸ ஹஸிதம் ச்வஸிதம் ஸமீரோ:
ஜிஹ்வா ஜலம் வசனம் ஈச சகுந்த பங்க்தி:
ஸித்தா தய: ஸ்வரகணா முகரந்த்ரம் அக்னி:
தேவாபுஜா: ஸ்தனயுகம் தவ தர்மதேவ:

**பொருள் -** ஈசனே! குருவாயூரப்பா! உன்னுடைய மனங்கவரும் புன்சிரிப்பு மாயை, உனது மூச்சானது வாயு, நாக்கானது நீர், வாக்கு என்பது பறவைகளின் கூட்டம், ஸ்வரங்கள் என்பது சித்தர்கள் கூட்டம், வாயானது அக்னி, கைகளோ தேவர்கள், உனது இரு ஸ்தனங்களும் தர்மதேவன் ஆகும்.

7 ப்ருஷ்டம் து அதர்ம இஹ தேவ மன: ஸுதாம்சு:
அவ்யக்தம் ஏவ ஹ்ருதயாம்புஜம் அம்புஜாக்ஷ
குஷி: ஸமுத்ர நிவஹா வஸனம் து ஸந்த்யே
சேப: ப்ரஜாபதி: அஸெள வ்ருஷணௌ ச மித்ர:

**பொருள் -** தேவர்கள் தேவனே! குருவாயூரப்பனே! தாமரை போன்ற அழகிய கண்கள் உடையவனே! உனது உடலின் பின்புறம் அதர்ம தேவதை, மனமோ சந்த்ரன், இதயமானது அவ்யக்தம் (ப்ரக்ருதி), வயிறோ சமுத்திரங்கள், அணிந்துள்ள ஆடையோ ஸந்த்யாகாலம், ஆண் குறியானது ப்ரஜாபதி மற்றும் அண்டகோசம் இரண்டும் மித்ர தேவதை ஆகும்.

8 ச்ரோணீஸ்தலம் ம்ருககணா: பதயோ: நகா: தே
ஹஸ்தி உஷ்ட்ர ஸைந்தவமுகா: கமனம் து கால:
விப்ராதி வர்ண பவனம் வதனாப்ஜ பாஹு:
சாரூரு யுக்ம சரணம் கருணாம்புதே தே

**பொருள் -** கருணையே கடலாக உள்ளவனே! குருவாயூரப்பனே! உனது இடுப்பானது மிருகக் கூட்டம்; காலில் உள்ள நகங்கள் யானை, குதிரை போன்றவை; உனது கம்பீர நடையானது காலம்; உனது தாமரை போன்ற முகம், கைகள், தொடைகள் மற்றும் கால்கள் என்பவையே ப்ராமணன் போன்ற வர்ணங்கள் ஆகும்.

9 ஸம்சார சக்ரம் அயி சக்ரதர க்ரியாஸ்தே
வீர்யம் மஹாஸுரகணா: அஸ்தி குலானி சைலா:
நாட்ய: ஸரித்ஸமுதய: தரவ: ச ரோம
ஜீயாத் இதம் வபு: அநிர்வசநீயம் ஈச

**பொருள் -** சக்கரத்தை ஏந்தியவனே! ஈசனே! குருவாயூரப்பனே! உன்னுடைய செயல்கள் அனைத்தும் சம்சார சுழற்சியான பிறப்பு இறப்பு என்பவை; உனது வீரதீரம் அசுரர்கள்; உனது எலும்புகளோ மலைகள்; உனது நாடி நரம்புகள் என்பது நதிகள்; உனது முடிகளோ மரங்கள் ஆகும். இப்படியாக வர்ணனை செய்யவே இயலாததாக உள்ள இந்த விராட் புருஷனின் திருமேனி என்றும் வெற்றி பெறுக!

10 ஈ த்ருக் ஜகன்மய வபு: தவ கர்ம பாஜாம்
கர்மா வஸான ஸமயே ஸ்மரணீய மாஹீ:
தஸ்ய அந்தராத்ம வபுஷே விமலாத்மனே தே
வாதால வாதிப நமோஸ்து நிருந்த்தி ரோகான்

**பொருள் -** அனைத்திற்கும் அந்தர்யாமியாகவும், எங்கும் நிறைந்து, நிர்மலமாகவும் உள்ளவனே! குருவாயூரப்பனே! உன்னுடைய இந்தத் திருமேனியின் தோற்றம் என்பது தங்கள் கர்மங்களைச் சரியாக நிறைவேற்றுபவர் யாரோ அவர்களுக்கு அந்தக் கர்மங்கள் முடிவுறும் நேரத்தில் த்யானிக்கத் தக்கது என்று சொல்கிறார்கள். இப்படியான உனக்கு என் நமஸ்காரம். எனது வ்யாதிகளை நீதான் போக்க வேண்டும்.
***

1 ஏவம் தேவ சதுர்தச ஆத்மக
ஜகத்ரூபணே: ஜாத; புன:
தஸ்ய ஊர்த்வம் கலு ஸத்ய லோகநிலயே
ஜாத: அஸி ததா ஸ்வயம்
யம் சம்ஸந்தி ஹிரண்யகர்ப்பம் அகில
த்ரைலோக்ய ஜீவாத்மகம்
ய: அபூத் ஸ்பீத ரஜோ விகார விகஸந்
நாநா ஸிஸ்ருக்ஷா ரஸ:

**பொருள் -** தேவனே! குருவாயூரப்பனே! இப்படியாக பதினான்கு லோகங்களின் வடிவமாகவே தோன்றிய நீ அவற்றின் மேலே உள்ள ஸத்யலோகம் என்பதில் ப்ரும்மாவாகத் தோன்றினாய். பூமி, சுவர்க்கம், பாதாளம் என்னும் மூன்று உலகங்களிலும் ஜீவனின் ரூபமாகவே உள்ளவனை ஹிரண்ய கர்ப்பன் என்பர். அப்படிப்பட்ட ப்ரும்ம (நான்முகன்) தனது மாறுபாடுகள் அடைந்த ரஜோகுணம் காரணமாக பலவிதமான ஸ்ருஷ்டிகளைச் செய்வதில் ஆர்வம் கொண்டான்.

2 ஸோ அயம் விச்வ விஸர்க தத்த
ஹ்ருதய: ஸம்பச்ய மாந: ஸ்வயம்
போதம் கல்வனாப்ய விச்வ விஷயம்
சிந்தாகுல: தஸ்திவான்
தாவத் த்வம் ஜகதாம்பதே தப தப இதி
ஏவம் ஹி வைஹாயஸீம்
வாணீம் ஏனம் அசிச்ரவ: ச்ருதி ஸுகாம்
குர்வன் தப: ப்ரேரணாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக ஸ்ருஷ்டி செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டு அதைப் பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்தும், இந்த ஸ்ருஷ்டியைக் குறித்த தெளிவான ஒரு முடிவுக்கு நான்முகனால் வர இயலவில்லை. இதனால் மிகவும் மனக்கவலை கொண்டான். இந்த ஜகத்தின் நாதனே! அப்போது நீ அவனது காதுக்கு இனிமை அளிக்கும்படியாக தவம் புரிவாயாக என்று அசரீரி வாக்காகக் கூறினாய்.

3 கோ அஸௌ மாம் அவதத் புமான் இதி
ஜலாபூர்ணே ஜகன்மண்டலே
திக்ஷு உத்வீக்ஷ்ய கிமபி அனீக்ஷிதவதா
வாக்யார்த்தம் உத்பச்யதா
திவ்யம் வர்ஷ ஸஹஸ்ரம் ஆத்த தபஸா
தேன த்வம் ஆராதித:
தஸ்மை தர்ஸிதவானஸி ஸ்வநிலயம்
வைகுண்டம் ஏகாத்புதம்

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ அசரீரியாகக் கூறிய போது உலகம் முழுவதும் நீரினால் நிரம்பியிருந்தது. இப்படி இருந்தும் தன்னை நோக்கி இவ்விதமாகக் கூறிய புருஷன் யார் என்று நான்முகன் அனைத்துத் திசைகளிலும் நோக்கினான். யாரையும் பார்க்க இயலவில்லை. இருந்தாலும் தனக்குக் கேட்ட அந்த அசரீரி வாக்கின் உட்பொருளை உணர்ந்த நான்முகன் உன்னைக் குறித்து ஆயிரம் தேவ வருடம் தவம் இயற்றினான். அப்படிப்பட்ட நான்முகனுக்காக, காண்பதற்கே வியப்பாக இருக்கின்ற உன்னுடைய இருப்பிடமான ஸ்ரீ வைகுண்டத்தை அவனுக்குக் காண்பித்தாய் அல்லவா?

4 மாயா யத்ர கதாபி நோவி குருதே
பாதே ஜகத்ப்யோ பஹி:
சோக க்ரோத விமோஹ ஸாத்வ ஸமுகா
பாவாஸ்து தூரம் கதா:
ஸாந்த்ரானந்த ஜரீ ச யத்ர பரம
ஜ்யோதி: ப்ரகாசாத்மகே
தத் தே தாம விபாவிதம் விஜயதே
வைகுண்ட ரூபம் விபோ

**பொருள் -** எங்கும் விளங்கியுள்ள குருவாயூரப்பனே! அந்த லோகத்தில் மாயை என்பது இல்லை. அந்த லோகம் அனைத்து லோகங்களுக்கும். அப்பால் உள்ளது. அந்த லோகத்தில் துக்கம். கோபம், அஞ்ஞானம், பயம் ஆகியவை இல்லை. அந்த லோகம் மாறுபாடு அடையாமல் என்றும் ஒளி வீசிக்கொண்டு உள்ளது. அங்கு எப்போதும் ஆனந்தம் நிறைந்து உள்ளது. இப்படியான லோகம் வைகுண்டம் ஆகும். இதனை நீ ப்ரும்மாவுக்கு காண்பித்தாய்.

5 யஸ்மிந்நாம சதுர்புஜா ஹரிமணி
ச்யாமாவதாதத் விஷ:
நாதா பூஷண ரத்ன தீபித
திச: ராஜத் விமானாலயா:
பக்தி ப்ராப்த ததாவித உன்னத பதா:
தீவ்யந்தி திவ்யா: ஜனா:
தத் தே தாம நிரஸ்த ஸர்வசமலம்
வைகுண்ட ரூபம் ஜயேத்

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த லோகத்தில் உள்ளவர்கள் நான்கு கரங்களை உடையவர்கள்; அவர்கள் இந்திரநீலம் போன்று உள்ளவர்கள்; கண்ணைக் கவர்கின்ற ஆபரணங்களையும், ரத்தினங்களையும் அணிந்து அதனால் அனைத்துத் திசைகளிலும் ஒளி வீசுபவர்கள்; ஒளி பொருந்திய விமானங்களில் (மாளிகை என்று கொள்ளலாம்) வசிப்பவர்கள்; அவர்கள் தெய்வீகமும் பக்தியும் பொருந்தியவர்கள் ஆவர். அவர்கள் தங்கள் பக்தியின் விளைவாக இப்படியாகப் ப்ரகாசமாக உள்ளனர். இப்படிப்பட்டவர்கள் உள்ள இடமும் பாவங்கள் நீங்கப்பட்ட இடமும் ஆகிய உனது வைகுண்டம் என்றும் சிறந்து விளங்க வேண்டும்.

6 நாநா திவ்ய வதூஜனை: அபிவ்ருதா
வித்யுல்லதா துல்யயா
விச்வோன் மாதன ஹ்ருத்ய காத்ரலதயா
வித்யோதிதா சாந்தரா
த்வத் பாதாம்புஜ ஸௌரபைக குதுகால்
லக்ஷ்மீ: ஸ்வயம் லக்ஷ்யதே

யஸ்மின் விஸ்மயநீய திவ்ய விபவா
தத்தே பதம் தேஹி மே

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த லோகத்தில் மஹாலக்ஷ்மி வாசம் செய்கிறாள். அவள் எப்படி உள்ளாள்? தேவ பெண்கள் பலரும் அவளைச் சூழ்ந்து உள்ளனர். மின்னலைப் போன்று மெல்லியவளாக அனைத்து மக்களையும் கவர்ந்து இழுப்பவளாக உள்ளாள்; அனைத்து திசைகளையும் ஒளியுடையதாகச் செய்பவளாக உள்ளாள்; அதிசயிக்கத்தக்க திருமேனி கொண்டவளாக உள்ளாள்; உனது திருவடித் தாமரைகளின் வாசனையை எப்போதும் முகர்ந்து இருக்கக் விருப்பப்பட்டு உள்ளாள். இத்தகைய இடமான உனது வைகுண்ட பதவியை எனக்கும் தர வேண்டும்.

7 தத்ர ஏவம் ப்ரதி தர்சிதே நிஜபதே
ரத்னாஸனாத் ஆஸிதம்
பாஸ்வத் கோடி லஸத்க்ரீட கடகாத்
யாகல்பதீ ப்ராக்ருதி
ஸ்ரீவத்ஸாங்கிதம் ஆத்த கவுஸ்துபமணிச்
சாயாருணம் காரணம்
விச்வேஷாம் தவரூபம் ஐக்ஷத விதி:
தத் தே விபோ பாது மே

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உனது வைகுண்டத்தை நீ ப்ரும்மாவுக்குக் காண்பித்தாய்! அங்கு உன்னை ப்ரம்மன் எப்படிக் கண்டான்? நீ ரத்னங்களால் அமைக்கப்பட்ட ஆசனத்தில் இருந்தாய். பலகோடி சூரியன்கள் ஒன்றாக இணைந்தால் உண்டாகும் ப்ரகாசம் அளவிற்கு ஒளிவீசும் க்ரீடம், தோள் வளையல்கள் போன்ற ஆபரணங்கள் அணிந்திருந்தாய்; ஸ்ரீவத்ஸம் என்ற மச்சமும் கவுஸ்துப மணியும் கொண்டிருந்தாய் - இப்படியான உனது திருமேனி எழிலைப் ப்ரும்மா கண்டான். ப்ரும்மா கண்டு ரசித்த அந்த ரூபமானது எனக்கும் தோன்ற வேண்டும்.
(குறிப்பு - இங்கு ஆசனத்தில் இருந்தாய். கொண்டிருந்தாய் போன்ற பதங்கள், வரிகளின் முழுமைக்காக எழுதப்பட்டனவே அன்றி அவை மூலத்தில் இல்லை).
***
8 காலாம் போத கலாய கோமலருசீ
சக்ரேண சக்ரம் திசாம்

ஆவ்ருணவானம் உதார மந்த ஹஸித
ஸ்யந்த ப்ரஸந்நானனம்
ராஜத் கம்புகதாரி பங்கஜதர ஸ்ரீமத்
புஜா மண்டலம்
ஸ்ரஷ்டு: துஷ்டிகரம் வபு: தவ விபோ
மத்ரோகம் உத்வாஸயேத்

**பொருள் -** எங்கும் நிறைந்தவனே! ஸ்ரீ அப்பனே! மழை நீர் உடைய கார் மேகத்தையும், காயாம் பூவையும் ஒத்த நிறமுடைய அழகான உனது திருமேனி அனைத்துத் திசைகளிலும் தனது ஒளியை வீசியபடி உள்ளது; உன்னுடைய கனிவான திருமுகத்தில் தவழ்கின்ற கம்பீரமும் அழகும் இணைந்த மந்தஹாசப் புன்னகை முகத்திற்கு மேலும் அழகு கூட்டுகிறது; உனது கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரை, ஆகியவை உள்ளன. இவற்றைக் கொண்டுள்ள புஜங்கள் அழகாக உள்ளன; இத்தகைய திருமேனி ப்ரும்மா மனம் மகிழும் வண்ணம் இருந்தது. இந்தத் தோற்றம் எனது வியாதிகளை நீக்க வேண்டும்.

9 த்ருஷ்ட்வா ஸம்ப்ருத ஸம்ப்ரம: கமலபூ;
த்வத் பாத பாதோருஹே
ஹர்ஷாவேச வசம்வத; நிபதித; ப்ரீத்யா
க்ருதார்த்தீ பவன்
ஜானாஸ்யேவ மனீஷிதம் மம விபோ
ஜ்ஞாநம் ததாபாதய
த்வைத் அத்வைத பவத் ஸ்வரூப பரம
இதி ஆசஷ்ட தம் த்வாம் பஜே

**பொருள் -** அனைத்து இடத்திலும் நிறைந்தவனே! குருவாயூரப்பனே! இப்படியாக உனது திருமேனி எழிலைக் கண்டு, தாமரை மலரில் அமர்ந்த நான்முகன் பரவசமும் பரபரப்பும் அடைந்தான். மிகுந்த ஆனந்தத்தில் மூழ்கினான். உன்னுடைய திருவடிகளான தாமரைகளில் விழுந்தான். மிகுந்த பக்தியுடன், குருவாயூரப்பனே! என்னுடைய எண்ணத்தை நீ அறிவாய். த்வைதமாகவும் அத்வைதமாகவும் காணப்படும் உனது திருமேனி குறித்த ஞானத்தை நீ அளிக்க வேண்டும் என்று வேண்டி நின்றான் அல்லவா? நானும் அப்படியே வணங்குகிறேன்.

10 ஆதாம்ரே சரணே வினம்ரம் அத தம்

ஹஸ்தேன ஹஸ்தே ஸ்ப்ருஸத்
போத: தே பவிதா ந ஸர்க்க விதிபி:
பந்த: அபி ஸஞ்ஜாயதே
இதி ஆபாஷ்ய கிரம் ப்ரதோஷ்ய நிரதாம்
தச்சித்த கூட; ஸ்வயம்
ஸ்ருஷ்டௌ தம் ஸமுதைரய! ஸ பகவன்
உல்லாஸய உல்லாகதாம்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! உன்னை கண்ட ப்ரும்மா சிவந்த உனது திருவடிகளில் விழுந்து வணங்கினான். அப்படி வணங்கியவுடன். நீ உனது திருக்கரத்தால் ப்ரும்மாவின் கரத்தைப் பிடித்து, உனக்கு அந்த ஞானம் ஏற்படும். மேலும் ஸ்ருஷ்டி மூலம் உண்டாகும் ஸம்ஸார பந்தம் உனக்கு உண்டாகாது என்ற சொற்களைக் கூறி அவனை மிகவும் மகிழ்வு கொள்ளச் செய்தாய். அது மட்டும் அல்லாமல் நீ அவனுடைய மனதில் நுழைந்து அவனை ஸ்ருஷ்டியில் ஈடுபடத் தூண்டினாய். இப்படிப்பட்ட நீ எனக்கு நல்ல ஆரோக்யம் அளிப்பாயாக.

***

1 ஏவம் தாவத் ப்ராக்ருத ப்ரக்ஷயாந்தே
ப்ராஹ்மே கல்பேஹி ஆதிமே ஸப்த ஜன்மா
ப்ரஹ்மா பூய: த்வத்த ஏவ ஆப்ய வேதான்
ஸ்ருஷ்டிம் சக்ரே பூர்வ கல்போபமாநாம்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! இப்படியாக ப்ராக்ருத ப்ரளயம் என்பது முடிந்த பின்னர் (காலத்தின் முடிவு என்பது நித்தியப் ப்ரளயம்; சங்கர்ஷணனான பகவான் முகத்தில் இருந்து தோன்றும் அக்னி அனைத்தையும் அழிப்பது நைமித்திகப் ப்ரளயம்; ஸத்வ, ரஜோ, தமஸ் குணங்கள் ஒன்றிவிடுவது ப்ராக்ருதப் ப்ரளயம்) முதலில் தோன்றும் ப்ரம்ம கல்பம் என்ற காலத்தில் ப்ரும்மா (நான்முகன்) தோன்றினான். அவன் உன்னிடம் இருந்து வேதங்களைக் கற்று, மீண்டும் முந்தைய கல்பத்தில் எவ்வாறு காணப்பட்டதோ அவ்விதமே ஸ்ருஷ்டியைத் துவக்கினான்.

2 ஸோ அயம் சதுர்யுக ஸஹஸ்ரமிதாநி அஹானி
தாவன்மிதா: ச ரஜநீ: பஹுசோ நிநாய

நித்ராதி அஸௌ த்வயி நிலீய ஸமம் ஸ்வஸ்ருஷ்டை:
நைமித்திக ப்ரளயம் ஆஹு அத: அஸ்ய ராத்ரிம்

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரும்மா ஆயிரம் சதுர்யுகங்களைத் தனது பகலாகவும், ஆயிரம் சதுர் யுகங்களைத் தனது இரவாகவும் அளித்தான். (நமது ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தேவர்களின் பன்னிரண்டு ஆயிரம் நாள் சேர்ந்தது ஒரு சதுர்யுகம் ஆகும். ஆக, இரண்டு ஆயிரம் சதுர் யுகம் சேர்ந்தது ப்ரும்மாவுக்கு ஒரு நாள் ஆகும்.) ப்ரும்மா உறங்கும்போது தான் உண்டாக்கிய அனைத்தையும் தன்னிடத்தில் இணைத்தே உறங்குகிறான். ஆக, ப்ரும்மாவின் இரவு என்பதே நைமித்திகப் ப்ரளயம் ஆகும்.

3 அஸ்மாத்ருசாம் புன: அஹமுக க்ருத்ய துல்யாம்
ஸ்ருஷ்டிம் கரோதி அனுதினம் ஸ பவத்ப்ரஸாதாத்
ப்ராக் ப்ரஹ்ம கல்ப ஜனுஷாம் ச பராயுஷாம் து
ஸுப்த ப்ரபோதந ஸமா அஸ்தி ததா விஸ்ருஷ்டி:

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய அனுக்ரஹத்தால் மட்டுமே ப்ரும்மா தினமும் எங்களைப் போன்றோர் செய்யும் காலைக் கடன்கள் போல், தனது ஸ்ருஷ்டி என்னும் செயலைப் புரிகிறான். முந்தைய கல்பத்தில் பல சிரஞ்ஜீவிகள் (சாகாவரம் பெற்றவர்கள்) வாழ்ந்திருக்கக்கூடும். அவர்களுக்கு இந்த ஸ்ருஷ்டி என்பது தூங்கி எழுவது போன்றது ஆகும். (சிரஞ்சீவிகள் = அசுவத்தாமன், பலி, வியாஸன், அனுமன், விபீஷணன், க்ருபாச்சார்யன், பரசுராமன்)

4 பஞ்சா சதப்தம் அதுநா ஸ்வ வயோர்த ரூபம்
ஏகம் பரார்தம் அதிவ்ருத்ய ஹி வர்த்த தே அஸௌ
தத்ர அந்த்ய ராத்ரி ஜனிதான் கதயாமி பூமன்
பச்சாத் தினாவதரணே ச பவத் விலாஸான்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! தற்போது ப்ரும்மா தன்னுடைய ஆயுளில் ஐம்பது வருடத்தைக் கழித்துள்ளான். இந்த ஐம்பது வருடம் என்பது ஒரு பரார்த்த காலம் எனப்படும். இத்தகைய

பரார்த்த காலத்தில், கடைசி இரவில் நிகழ்ந்தவற்றையும் அடுத்த நாள் காலையில் நிகழ்ந்தவற்றையும் கூறுகிறேன். என்ன நிகழ்ந்தன? அவை உனது லீலைகளே ஆகும்.

5 தினாவ ஸானே அத ஸரோஜ யோனி:
ஸுஷுப்திகாம: த்வயி ஸந்நிலில்யே
ஜகந்தி ச த்வஜ்ஜடரம் ஸமீயு:
ததா இதம் ஏகார்ணவம் ஆஸ விச்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரும்மா தனது ஒரு நாள் பகலை முடித்துக் கொண்ட பின்னர் தூக்கத்தை விரும்பியவனாய் உன்னிடம் இணைந்தான். (உறக்கம் என்பதே பரப்ரஹ்மமான நாராயணனிடம் இணைவது என்று பிரஹ்ம சூத்திரம் கூறுகிறது). அந்த நேரத்தில் மூன்று உலகங்களும் உன்னுடைய வயிற்றில் ஒடுங்கின. இப்படியாக இந்த உலகம் முழுவதும் சமுத்திரமாகவே மாறியது.

6 தலைவ வேஷ பணிராஜி சேஷே
ஜலைகசேஷே புவனே ஸ்மசேஷே
ஆனந்த ஸாந்த்ரானுபவ ஸ்வரூப;
ஸ்வயோக நித்ரா பரிமுத்ரிதாத்மா

**பொருள் -** குருவாயூரப்பனே! அனைத்து உலகங்களும் ப்ரளயத்தில் நீரில் மூழ்கி உள்ளபோது நீ உனது மற்றோர் அவதாரமான ஆதிசேஷன் மீது ஆனந்தமே உருவமாக யோக நித்திரையில் ஆழ்ந்து சயனித்திருந்தாய் அல்லவோ?

7 காலாக்ய சக்திம் ப்ரளயா வஸானே
ப்ரபோதய இதி ஆதி சதா கிலாதௌ
த்வயா ப்ரஸுப்தம் பரி ஸுப்த சக்தி
ப்ரஜேன தத்ர அகில ஜீவதாம்நா

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! உன்னிடம் பலவகையான சக்திகளும், ஜீவன்களும் ப்ரளய காலத்தின் போது ஒடுங்கியிருந்தன. அவற்றில் உள்ள காலம் என்னும் சக்தியிடம் ப்ரளயம் முடிந்த பின்னர் என்னை எழுப்புவாயாக! என்று கட்டளை இட்டியிருந்தாய். இப்படியாக

நீ ஆதிசேஷன் மீது நித்திரை கொண்டிருந்தாயாமே என்று பட்டத்ரி கேட்க, அதற்கு பகவானும் ஆமாம் என்று தலையசைத்தான்.

8 சதுர்யுகாணாம் ச ஸஹஸ்ரமேவம்
த்வயி பரஸுப்தே புன: அத்விதீயே
காலாக்ய சக்தி: ப்ரதம ப்ரபுத்தா
ப்ராபோதயத் த்வாம் கில விச்வநாத

**பொருள் -** விச்வத்திற்கு (உலகிற்கு) நாயகனே! குருவாயூரப்பா! ஆயிரம் சதுர் யுகங்கள் இப்படியாகக் கடந்தன. அதன் பின்னர் கால சக்தியானது விழித்துக் கொண்டது. அப்போது நீ மட்டுமே தனித்து உறங்கிக் கொண்டிருந்தாய். அந்த நேரம் கால சக்தி உன்னை எழுப்பியது அல்லவா?

9 விபுத்ய ச த்வம் ஜலகர்ப்ப சாயிந்
விலோக்ய லோகான் அகிலான் ப்ரலீனான்
தேஷ்வேவ சூக்ஷ்மாத் மதயா நிஜாந்த;
ஸ்திதேஷு விச்வேஷு ததாத த்ருஷ்டிம்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! ப்ரளயத்தின்போது நீரில் நீ சயனம் கொண்டிருந்தாய் நீ விழித்து எழுந்தபோது அனைத்து உலகங்களும் உன்னிடம் மறைந்துள்ளதைக் கண்டாய். உன் உள்ளே மறைந்திருந்த அவற்றின் மீது உனது கனிவான பார்வையை நீ செலுத்தினாய் அல்லவோ? இதற்கு ஸ்ரீ அப்பன் ஆம் என்றார்.

10 தத: தவ்தீயாத் அயி நாபி: அந்த்ராத்
உதஞ்சிதம் கிஞ்சன திவ்ய பத்மம்
நிலீன நி: சேஷ பதார்த்த மாலா
ஸம்க்ஷேப ரூபம் முகுலாய மாநம்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பனே! இப்படியான உனது பார்வைக்குப் பின்னர், உன்னுடைய கொப்பூழில் இருந்து ஓர் அழகான தாமரை மொட்டு வெளித் தோன்றியது. அந்த மொட்டில்தான் அனைத்து உலகங்களும் அவற்றில் உள்ளவையும் சூட்சும ரூபத்தில் மறைந்திருந்தன.

11 த தே தத் அம்போருஹ குட்மலம் தே
கலேபராத் தோய பதே ப்ரரூடம்
பஹி: நிரீதம் பரித: ஸ்புரத்பி:
ஸ்வதாமபி: த்வாந்தம் அலம் ந்யக்ருந்தத்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! அந்த தாமரை மொட்டானது உனது உடலில் இருந்து தோன்றி, நீரின் மேல் வளர்ந்து, தன்னுடைய ஒளியை அனைத்து இடங்களிலும், பரப்பி எங்கும் இருந்த இருளை நீக்கியது. இப்படியாக ப்ரளய இருள் நீங்கியது.

12 ஸம்புல்ல பத்ரே நிதராம் விசித்ரே
தஸ்மிந் பவத் வீர்ய த்ருதே ஸரோஜே
ஸ பத்ம ஜன்மா விதி: ஆவிராஸீத்
ஸ்வயம் ப்ரபுத்தா கிலவேத ராசி:

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! நன்றாக மலர்ந்த இதழ்களை உடையதும், வியப்பை அளிக்கக் கூடியதாகவும், உனது சக்தியினால் விளங்கிக் கொண்டுள்ளதாகவும் காணப்பட்ட அந்தத் தாமரை மலரின் மீது - அனைத்து வேதங்களும் (உன் அனுக்ரஹத்தால்) தானாகவே நினைவுக்கு வந்தவனாக பத்மஜன் என்று பெயர் கொண்ட ப்ரும்மா (நான்முகன்) தோன்றினான்.

13 அஸ்மின் பராத்மன் நநு பாத்ம கல்பே
த்வம் இத்தம் உத்தாபித பத்மயோனி:
அனந்த பூமா மம ரோக ராசிம்
நிருந்தி வாதாலய வாஸ விஷ்ணோ

**பொருள் -** குருவாயூரில் என்றும் வாஸம் செய்பவனே! விஷ்ணுவே! இப்படியாக பாத்ம கல்பத்தில் ப்ரும்மாவை நீ படைத்தாய். அளவில்லாத பெருமைகளை உடைய நீ என்னுடைய நோய்கள் அனைத்தையும் நீக்க வேண்டும்.
***

1 ஸ்தித: ஸ கமலோத் பவ: தவ ஹி நாபி பங்கேருஹே

குதஸ்வித் இதம் அம்புத உதிதம் இதி அனா லோகயன்
ததீக்ஷண குதூஹலாத் ப்ரதி திசம் விவ்ருத்தாநநம்
சதுர்வதநதாம் அகாத் விகஸதஷ்ட த்ருஷ்ட்ய அம்புஜாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய நாபிக் கமலத்தில் இருந்து தோன்றிய ப்ரும்மா, தான் அமர்ந்துள்ள அந்த தாமரை மலர், இந்த சமுத்திரத்தில் எந்த இடத்தில் இருந்து தோன்றியது என்று வியப்படைந்தான். அதற்காக ஒவ்வொரு திசையாக தனது பார்வையைத் திருப்பினான். அவ்வாறு தனது தலையை ஒவ்வொரு திசையில் திருப்பும்போதும் ஒவ்வொரு தலையைப் பெற்று, இப்படியாக நான்கு தலையையும், எட்டு கண்களையும் பெற்றான்.

2 மஹா அர்ணவ விகூர்ணிதம் கமலமேவ தத் கேவலம்
விலோக்ய தத் உபாச்ரயம் தவ தனும் து நாலோகயன்
க ஏவ கமலோதரே மஹதி நி: ஸஹாயோஹ்யஹம்
குத: ஸவித் இதம் அம்புஜம் ஸமஜநி இதி சிந்தாம் அகாத்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! அத்தனை பெரிய கடலில் அந்தத் தாமரை மலர் மட்டும் தனியாக அசைவதைக் கண்ட ப்ரும்மா, அந்தத் தாமரைக்கு ஆதாரமாக இருந்த உனது திருமேனியைக் காண முடியவில்லை. அப்போது ப்ரும்மா, இத்தனை பெரிய தாமரையில் தனியாக அமர்ந்துள்ள நான் யார்? இந்த மலர் எங்கிருந்து உருவானது? என்று சிந்திக்கத் தொடங்கினான்.

3 அமுஷ்ய ஹி ஸரோருஹ: கிமபி காரணம் ஸம்பவேத்
இதி ஸ்ம க்ருத நிச்சய: ஸ: கலு நாலரந்த்ராத் வநா
ஸ்வயோக பல வித்யயா ஸமவரூடவாந் ப்ரௌடதீ:
த்வதீயம் அதிமோஹனம் ந து கலேபரம் த்ருஷ்டவாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! மிகுந்த அறிவு கொண்டவனாக உன்னால் உருவாக்கப்பட்ட ப்ரும்மா, அந்தத் தாமரை மலர் தோன்றுவதற்கு ஏதோ ஒரு காரணப் பொருள் ஆதாரமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். தனது யோக சக்தியாலும், ஞானத்தாலும் அந்தத் தாமரை மலரின் தண்டில் உள்ள த்வாரம் வழியாக

கீழே சென்றான். இருந்தாலும் உன்னுடைய அழகான திருமேனி அவனுக்கு புலப்படவில்லை.

4 தத: ஸகல நாலிகா விவர மார்க்க: மார்கயந்
ப்ரயஸ்ய ஸத வத்ஸரம் கிமபி நைவ ஸந்த்ருஷ்டவாந்
நிவ்ருத்ய கமலோதரே ஸுக நிஷண்ண: ஏகாக்ரதீ:
ஸமாதி பலம் ஆததே பவத் அநுக்ரஹை காக்ரஹீ

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் அந்தத் தண்டில் உள்ள பல த்வாரங்களிலும் நுழைந்து நூறு வருடம் உன்னைத் தேடினான். அவனுக்கு எதுவும் புலப்படவில்லை. பின்னர் தேடுதல் முயற்சியைக் கைவிட்டு, அந்த மலரின் மீது சுகமாக அமர்ந்து, உன்னுடைய அனுக்ரஹத்தைப் பெற விரும்பி, தன் மனதை ஒருமைப்படுத்தி, ஸமாதி நிலையில் அமர்ந்தான்.

5 சதேந பரிவத்ஸரை: த்ருட ஸமாதி பந்த்தோல்லஸத்
ப்ரபோக விசதீக்ருத: ஸ கலு பத்மிநீ ஸம்பவ:
அத்ருஷ்டசரம் அத்புதம் தவ ஹி ரூபம் அந்தர் த்ருசா
வ்யசஷ்ட பரிதுஷ்டதீ: புஜக போக பாகாச்ரயம்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! இப்படியாக நூறு வருடம் ஸமாதி நிலையில் தவம் புரிந்தான். அதனால் மிகவும் தெளிவான ஞானத்தைப் பெற்றான். அதன் பின்னர் நூறு வருடமாக காணப்படாததும், வியப்பை அளிக்கக் கூடியதும், ஆதிசேஷன் மீது வீற்றிருப்பதும் ஆகிய உனது திருமேனியை தனது ஞானப் பார்வை மூலம் கண்டான் அதனால் மிகுந்த மகிழ்வு கொண்டான்.

6 க்ரீட மகுடோல்லஸத் கடக ஹார கேயூர யுக்
மணிஸ்ப்புரத மேகலம் ஸுபரிவீத பீதாம்பரம்
கலாய குஸுமப்ரபம் கலதலோல்லஸத் கவுஸ்துபம்
வபு: தத் அயி கமல ஜந்மனே தர்சிதம்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பனே! ப்ரும்மா உன்னை எப்படிக் கண்டான்? க்ரீடம், மகுடம் ஆகியவை ஒளிவீசும் தலை, வளையல்கள், முத்து மாலைகள், தோள் வளையல்கள் அலங்கரித்தும்; ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட ஒட்டியாணமும்; நேர்த்தியாக கட்டப்பட்டிருந்த பொன் ஆடையும்; கழுத்தில் ப்ரகாசிக்கும் கவுஸ்துப மணியும்; காயாம்பூவின் நிறமும் உடையதான உனது திருமேனியை - தாமரையில் தோன்றி ப்ரும்மா எப்படிக் கண்டானோ அதே போல் நானும் த்யானிக்கிறேன்.

7 ச்ருதி ப்ரகர தர்சித ப்ரசுர வைபவ ஸ்ரீபதே
ஹரே ஜயஜய ப்ரபோ பதம் உபைஷி திஷ்ட்யா த்ருசோ:
குருஷ்வ தியம் ஆசு மே புவந நிர்மிதௌ கர்மடாம்
இதி த்ருஹிண வர்ணித ஸ்வகுண பம்ஹிமா பாஹிமாம்

**பொருள் -** லக்ஷ்மியின் பதியே! ஸ்ரீ அப்பனே! உன்னைப் ப்ரும்மா எவ்வாறு துதித்தான் - வேதங்களால் காண்பிக்கப்பட்ட பெருமை உடையவனே! லக்ஷ்மியின் நாதனே! ஹரியே! உனக்கு ஜெயம் ஜெயம்! ப்ரபுவே! நான் செய்த புண்ணியம் நீ எனக்குத் தென்பட்டாய். இந்த உலகைப் படைப்பதற்குத் தேவையான ஞானத்தை நீ எனக்கு அளிக்க வேண்டும் - இப்படியாகப் ப்ரும்மாவால் துதிக்கப்பட்ட திருக்கல்யாண குணங்களை உடையவனே! குருவாயூரப்பா! என்னை நீ காக்க வேண்டும்.

8 லபஸ்வ புவநத்ரயீ ரசன தக்ஷதாம் அக்ஷதாம்
க்ருஹாண மத் அநுக்ரஹம் குரு தபச்ச பூயோ விதே
பவது அகில ஸாதநீ மயி ச பக்தி: அத்யுத்கடேத்
உதீர்ய கிரம ஆததா: முதித சேதஸம் வேதஸம்

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ரும்மாவின் ப்ரார்த்தனையைக் கேட்ட நீ அவனிடம் - ப்ரும்மாவே! குறைவற்ற மூன்று உலகங்களையும் ஸ்ருஷ்டிக்கும் திறமையை நீ பெறுவாய். எனது அருளைப் பெறுவாயாக. மறுபடியும் உனது தவம் தொடங்கட்டும். என்னிடத்தில் தீவிர மாகவும் அனைத்தையும் முடிக்கும் திறனுள்ளதாகவும் விளங்கும் பக்தி உனக்கு உண்டாகக் கடவது - என்று கூறினாய். இதனைக் கேட்ட ப்ரும்மாவை நீ மகிழ்ச்சியில் ஆழ்த்தினாய்.

9 சதம் க்ருத தபாஸ்தத: ஸகலு திவ்ய ஸம்வத்ஸரான்
அவாப்ய ச தபோ பலம் மதிபலம் ச பூர்வாதிகம்
உதீக்ஷ்ய கில கம்பிதம் பயஸி பங்கஜம் வாயுநா
பவத்பல விஜ்ரும்பித: பவந பாதாஸீ பீதவாந்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக நீ உபதேசம் செய்த பின்னர் ப்ரும்மா மேலும் நூறு தேவ வருடம் தவம் இயற்றினான். இதனால் அதிகமான தவ வலிமையும் அதனால் முன்பைவிட அதிக ஞானத்தையும் பெற்றான். அந்த நேரம் அவன் அமர்ந்திருந்த தாமரையானது காற்றில் மெதுவாக அசைந்து. உனது சக்தி பெற்ற ப்ரும்மா காற்றையும் நீரையும் உறிஞ்சினான்.

10 தவைவ க்ருபயா புன: ஸரஸி ஜேந தேநைவ ஸ:
ப்ரகல்ப்ய புவநத்ரயீம் ப்ரவவ்ருதே ப்ரஜா நிர்மிதௌ
ததா வித க்ருபயா பரோ குருமருத் புராதீச்வர
தவ்மாசு பரிபாஹிமாம் குருதயோக்ஷிதை; ஈக்ஷிதை:

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த ப்ரும்மா உன்னுடைய தயையால் (கருணையால்), அந்தத் தாமரை மலரையே தனது ஆதாரமாகக் கொண்டு மூன்று உலகங்களையும் படைத்து, அதனைத் தொடர்ந்து ஜீவன்களையும் படைக்கத் தொடங்கினான். இப்படிப் பட்ட பல மகிமைகளை உன்னுள் கொண்டவனே! குருவாயூரப்பா! உன்னுடைய கருணையான பார்வை மூலம் என்னையும் காப்பாற்ற வேண்டும்.
***

1 வைகுண்ட வர்த்தித பல: அத பவத் ப்ரஸாதாத்
அம்போஜயோநி: அஸ்ருஜத் கில ஜீவதேஹாந்
ஸ்தா நூநி பூருஹ்மயானி ததா திரச்சாம்
ஜாதீ: மநுஷ்ய நிவஹானபி தேவபேதாந்

**பொருள் -** வைகுண்ட நாதனே! குருவாயூரப்பனே! உன்னுடைய கடாட்சம் பெற்ற ப்ரும்மா மேலும் பலம் பெற்றான். அதன் பின்னர் மரம், செடி, கொடி, ஆகிய தாவரங்களையும், மிருகம், பறவை போன்றவற்றையும், மனிதர்களையும், தேவர்களையும் படைத்தான்.

2 மித்யா க்ரஹ அஸ்மிமதி ராக விகோப பீதி:
அஜ்ஞான வ்ருத்திம் இதி பஞ்ச விதாம் ஸ ஸ்ருஷ்ட்வா
உத்தாம தாமஸ பதார்த்த விதாந தூன:
தேநே த்வதீய சரண ஸ்மரணம் விசுத்யை

**பொருள் -** குருவாயூரப்பனே! அடுத்து ஐந்து விதமான அறியாமையை படைத்தான். இவை மித்யாக்ரஹம், அஸ்மிமதி, ராகம், கோபம், பயம் என்பவை ஆகும். (ஆத்மா வேறு, உலகம் வேறு என்று எண்ணுதல்= மித்யாக்ரஹம்; உடலையே தான் என்று கொள்ளுதல் = அஸ்மிமதி: பொருளில் வைக்கப்படும் ஆசை = ராகம்; ஆசை வைத்த பொருளைத் தன்னிடம் இருந்து எடுப்பவன் மீது வரும் வெறுப்பு, கோபம்; தனது பொருள்கள் பறிபோகும் என்று நினைத்தல் = பயம்). இதன் பிறகு இந்த அறியாமைக்கு இயல்பான தமோ குணத்தையும் படைத்தான். இப்படியாக அவன் தாழ்வனவற்றை படைத்தது அவன் அறியாமையே ஆகும். அந்த அறியாமை நீங்க உன்னை சரணம் என்று த்யானித்தான்.

3 தாவத் ஸஸர்ஜ மனஸா ஸநகம் ஸநந்தம்
பூய: ஸநாதன முனிம் ச ஸனத்குமாரம்
தே ஸ்ருஷ்டி கர்மணிது தேந நியுஜ்மானா;
த்வத் பாத பக்தி ரஸிகா ஜக்ருஹுர் ந வாணீம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பிறகு ப்ரும்மா தனது மனதினால் ஸநகன், ஸநந்தன், ஸனாதனன், ஸனத்குமாரன் ஆகியோரைப் படைத்தான். அவர்கள் நால்வரையும் படைக்கும் தொழிலில் ஈடுபடுமாறு ப்ரும்மா கூறினான். ஆனால் உனது பாதங்களில் பக்தியுடன் மூழ்கிய அவர்கள் ப்ரும்மாவின் சொல்லை ஏற்கவில்லை.

4 தாவத் ப்ரகோபம் உதிதம் ப்ரதிருந்தத: அஸ்ய
ப்ரூமத்யத: அஜநி ம்ருட: பவதேக தேச:
நாமாநி மேகுரு பதாநி ச ஹா விரிஞ்சேத்
ஆதௌ ருரோத கில தேந ஸ ருத்ர நாமா

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாகத் தனது சொல்லை மறுத்த ஸனகர்கள் போன்றோர் மீது உண்டான கோபத்தை அடக்கப் ப்ரும்மா முயற்சித்த போது, அவன் புருவங்களுக்கு நடுவில் இருந்து உன்னுடைய அம்சமாக ம்ருடன் (சங்கரன்) தோன்றினான். அவன் ப்ரும்மாவிடம், ப்ரும்மாவே! எனக்கு பெயரையும் இடத்தையும் அளிப்பாய் என்று அழத் தொடங்கினான். இதனால் அவன் ருத்ரன் என்ற பெயர் பெற்றான் அல்லவா?

3 ஏகாதசாஹ் வயதயா ச விபிந்த ரூபம்
ருத்ரம் விதாய தயிதா வநிதாச்ச தத்வா
தாவந்தி அதத்த ச பதாநி பவத்ப்ரணுந்த:
ப்ராஹ ப்ரஜா விரசனாய ச ஸாதரம் தம்

**பொருள் -** உன்னால் படைப்பதற்காகத் தூண்டப்பட்ட ப்ரும்மா, ருத்ரனை பதினொரு உருவங்கள் எடுக்கச் சொன்னான். ஒவ்வோர் உருவத்திற்கும் அன்பான மனைவியை (பதினொரு மனைவிகள்) அளித்தான். அவர்களுக்குத் தனித்தனியான இடமும் அளித்தான். பின்னர் ப்ரஜைகளை உருவாக்கும்படி கூறினான்.

6 ருத்ரா பிஸ்ருஷ்ட பயதாக்ருதி ருத்ர ஸங்க
ஸம்பூர்யமாண புவனத்ரய பீதி சேதா:
மா மா ப்ரஜா ஸ்ருஜ தபச்சர மங்கலாய இதி
ஆசஷ்ட தம் கமலபூ: பவதீரி தாத்மா

**பொருள் -** குருவாயூரப்பனே! ருத்ரனால் உண்டாக்கப்பட்ட பயங்கரமான தோற்றம் உடைய ருத்ரர்களால் இந்த மூன்று உலகங்களும் நிறைவதைக் கண்ட ப்ரும்மா பயந்தான். உன்னால் தூண்டப்பட்ட ப்ரும்மா ருத்ரர்களை நோக்கி, நீங்கள் இனி படைக்க வேண்டாம், உலக நன்மைக்காகத் தவம் இயற்றுங்கள் என்றான்.

7 தஸ்ய அத ஸர்க ரஸிகஸ்ய மரீசி: அத்ரி:
தத்ர அங்கிரா: க்ரதுமுனி: புலஹ: புலஸ்த்ய:
அங்காதஜாயத ப்ருகுச்ச வஸிஷ்ட தக்ஷௌ
ஸ்ரீநாரதச் ச பகவான் பவதங்க்ரி தாஸ:

**பொருள் -** குருவாயூரப்பனே! மீண்டும் படைத்தல் செயலில்தானே ஆர்வம் கொண்டான் (ப்ரும்மா). அப்போது அவன் உடலில் இருந்து ஒன்பது முனிவர்கள் தோன்றினர். அவர்கள் - மரீசி, அத்ரி, அங்கிரஸ், க்ரது, புலஹர், புலஸ்தியர், ப்ருகு, வஸிஷ்டர், தக்ஷர் ஆகியோர் ஆவர். மேலும், பகவானே! உன் மீதும் உனது பாதங்களின் மீதும் அன்பு பூண்ட நாரதர் தோன்றினார்.

8 தர்மாதிகான் அபிஸ்ருஜந் அத கர்தமம் ச
வாணீம் விதாய விதி: அங்கஜ ஸங்குல: அபூத்
த்வத் போதிதை: ஸநக தக்ஷமுகை: தநூஜை:
உத்போதித: ச விரராம தம: விமுஞ்சன்

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் ப்ரும்மா தர்மத்தையும் கர்த்தமரையும் படைத்தான். தொடர்ந்து சரஸ்வதியைப் படைத்து அவள் மீது காம வசப்பட்டான். அந்த நேரத்தில் ப்ரும்மாவின் புத்திரர்களான ஸநகன், தக்ஷன் போன்றோர் உன்னால் தூண்டப்பட்டு, ப்ரும்மாவுக்கு அறிவுரை செய்தனர். இதனால் அஞ்ஞானத்தில் இருந்து ப்ரும்மா மீண்டான்.

9 வேதான் புராண நிவாஹாநபி ஸர்வ வித்யா:
குர்வந் நிஜாநந கணாச் சதுரானை: அஸௌ
புத்ரேஷு தேஷு விநிதாய ஸ ஸர்க வ்ருத்திம்
அப்ராப்நுவம் ஸ்தவ பாதாம் புஜம் ஆச்ரித: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பனே! நான்கு முகங்கள் கொண்ட ப்ரும்மா தன்னுடைய முகங்களின் இருந்து வேதங்கள், புராணங்கள் மற்றும் அனைத்து வித்யைகளையும் படைத்தான். (இந்த வித்யைகள் சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பன). இவற்றை தனது புத்திரர்களுக்கு உபதேசம் செய்தான். இத்தனைக்குப் பிறகும் ஸ்ருஷ்டி, வளர்ச்சி அடையாதது கண்டு உன்னுடைய திருவடிகளை த்யானித்தான்.

10 ஜாநந் உபாயம் அத தேஹம் அஜ: விபஜ்ய
ஸ்திரீ பும்ஸபாவம் அபஜந் மனுதத்வ தூப்யாம்
தாப்யாம் ச மானுஷகுலானி விவர் தயம் ஸ்த்வம்
கோவிந்த மாருதபுராதிப நிருந்தி ரோகாந்

**பொருள் -** குருவாயூரின் அதிபதியே! கோவிந்தனே! அப்போது ப்ரும்மாவுக்கு ஸ்ருஷ்டிக்கான உபாயம் ஒன்று உதித்தது. தனது உடலை இரண்டாகப் பிரித்து மனு என்று ஆணாகவும் ஸதரூபை என்ற பெண்ணாகவும் தோன்றினான். அவர்கள் மூலம் மனித இனத்தைப் பெருக்கினான். இப்படியாக மனித குலத்தைப் படைப்பவனே! நீ பிணிகள் அனைத்தையும் நீக்க வேண்டும்.

***

1 க்ரமேண ஸர்கே பரிவர்த்தமானே
கதா அபி திவ்யா: ஸநகாதய: தே
பவத் விலோகய விகுண்ட லோகம்
ப்ரதிபேதிரே மாருத மந்திரேச

**பொருள் -** குருவாயூரப்பனே! ஸ்ருஷ்டிச் செயலானது நல்லபடியாக நடந்து வந்தது. அப்போது ஒரு முறை தெய்வீகமான ஸநகர் போன்றவர்கள் உன்னைக் காண, உன்னை வணங்க வைகுண்டத்திற்கு வந்தனர் அல்லவா? என்றார் பட்டத்ரி, இதற்கு ஸ்ரீஅப்பன் ஆம் என்றான்.

2 மனோக்ஞ நை: ச்ரேயஸ கானனாத்யை;
அனேக வாபி மணிமந்திரைச்ச
அனோபமம் தம் பவத: நிகேதம்
முனிச்வரா: ப்ராபு: அதோத கக்ஷ்யா:

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த முனிவர்கள் வைகுண்டத்தின் ஆறு கோட்டை வாசல்களைக் கடந்தனர்; தொடர்ந்து நைச்ரேயஸம் என்ற தோட்டத்தைக் கடந்தனர். அடுத்து பலவிதமான குளங்கள், ரத்தினகற்கள் பதிக்கப்பட்ட வீடுகள் ஆகியவை சூழ நிற்கும் உனது வைகுண்டத்தை அடைந்தார்கள் அல்லவா?

3 பவத்தித்ருக்ஷுன் பவனம் விவிக்ஷுன்
த்வா: ஸ்தௌ ஜய: தான் விஜய: அபி அருந்தாம்
தேஷாம் ச சித்தே பதம் ஆப கோப:
ஸர்வம் பவத் ப்ரேரணயைவ பூமந்

**பொருள் -** எங்கும் உள்ளவனே (பூமந்) குருவாயூரப்பனே! உனது தரிசனம் பெற விருப்பமுற்றவர்களாகவும் உனது இடத்திற்குள் நுழைய விரும்பியவர்களாகவும் வந்த ஸனகர் முதலியவர்களை வாயிற்காப் போர்களான ஜயன் மற்றும் விஜயன் ஆகிய இருவரும் தடுத்து நிறுத்தினர். இதனால் ஸனகாதிகள் மனதில் கோபம் உண்டாயிற்று. இவை உனது விருப்பப்படி அல்லவா நடந்தது.

4 வைகுண்டலோக: அநுசித ப்ரசேஷ்டௌ
கஷ்டௌ யுவாம் தைத்யகதிம் பஜேதம்
இதி ப்ரசப்தௌ பவதாச்ரிதௌ தௌ
ஹரிஸம்ருதி: ந: அஸ்து இதி நேமது: தான்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! ஸனகாதிகள் அந்த வாயிற்காப்பாளர்களை நோக்கி, துஷ்டர்களே! வைகுண்ட லோகத்திற்குப் பொருந்தாத விதமாக நீங்கள் நடந்து கொண்டதால் அசுரப் பிறவி அடைவீர்கள் என்று சபித்தனர். (இவர்கள் சாபத்தின்படி ஜயன் விஜயன் இருவரும் இரண்யகசிபு, இரண்யாட்சகன் ஆகவும், ராவணன், கும்பகர்ணனாகவும், சிசுபாலன், தந்த வக்கிரன் ஆகவும் பிறந்தனர்). இதனால் மனம் வருந்திய ஜயன் விஜயன் இருவரும் அந்த முனிவர்களிடம், நாங்கள் எப்படிப் பிறந்தாலும் அந்த ஹரியின் நினைவு நீங்காமல் இருக்க வேண்டும் என்று வேண்டினார்கள் அல்லவா?

5 ததேதத் ஆஜ்ஞாய பவான் அவாப்த:
ஸஹைவ லக்ஷ்ம்யா பஹி: அம்புஜாக்ஷ
ககேச்வர அம்ஸ அர்ப்பித சாருபாஹு:
ஆனந்தயம் தாந் அபிராம மூர்த்யா

**பொருள் -** தாமரை மலர் போன்று அழகான கண்களை உடையவனே! குருவாயூரப்பனே! வாயிலில் நடந்த விவரத்தை அறிந்து கொண்டு மஹாலக்ஷ்மியுடன் இணைந்து கருடனின் தோளில் உனது அழகான கைகளை வைத்துக் கொண்டு, உனது அழகான

திருமேனியுடன், ஸனகாதிகளை ஆனந்தப்பட வைப்பவனாக வெளியில் வந்தாய் அல்லவா?

6 ப்ரஸாத்ய கீர்ப்பி: ஸ்துவத: முனீந்த்ராந்
அனன்ய நாதௌ அத பார்ஷதௌ தௌ
ஸம்பரம் பயோகேன பவை: த்ரிபி: மாம்
உபேதாம் இதி ஆத்தக்ரூபம் ந்யகாதீ:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ உள்ளிருந்து வெளியே வந்த பின்னர் உன்னை முனிவர்கள் வணங்கி நின்றனர். அவர்களின் கோபத்தை உனது கனிவான சொற்களால் சமாதானம் செய்தாய். பின்னர் ஜயவிஜயன் ஆகியோரை நோக்கி, நீங்கள் இருவரும் என்னை விரோதம் செய்வதன் மூலம் உண்டாகும் த்வேஷ யோகம் செய்து, மூன்று பிறவிகளுக்குப் பின்னர், மீண்டும் என்னை வந்து அடைவீர்களாக என்று ஆதரவு இல்லாத அவர்களிடம் கூறினாய் அல்லவா?

7த்வதீய ப்ருத்யௌ அத கச்யபாத் தௌ
ஸுராரிர் வீரௌ திதௌ திதௌ த்வௌ
ஸந்த்யா ஸமுத்பாதன கஷ்டசேஷ்டௌ
யமௌ ச லோகஸ்ய யமாவிவாந்யௌ

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! உன்னால் நல்வார்த்தைகள் கூறப்பட்ட ஜயவிஜயன் ஆகிய இருவரும் கச்யப முனிவருக்கும் அவரது மனைவியான திதி ஆகிய இருவருக்கும் தேவர்களுடைய சத்ருக்களான அசுர வீரர்களாக பிறந்தனர். கச்யபரும் திதியும் இணைந்து ஸந்தியா காலத்தில். ஆகையால் இந்த இருவருக்கும் பிறந்த புத்திரர்கள் இருவரும் யமனைப் போன்றே (அனைவருக்கும் துயரை விளைவிப்பவர்களாக) விளங்கினர்.

8 ஹிரண்ய பூர்வ: கசிபு: கிலைக:
பர: ஹிரண்யாக்ஷ: இதி ப்ரதீத:
உபௌ பவந்நாதம் அசேஷலோகம்
ருஷா ந்யருந்தாம் நிஜவாஸனாந்தௌ

**பொருள் -** குருவாயூரப்பனே! அவர்கள் இருவரும் இரணிய என்ற பதத்தை முதலில் உடைய கசிபு (இரணியகசிபு) என்றும், இரண்யாக்ஷன் என்றும் பெயர் பெற்று இருந்தார்கள். இவர்கள் தங்களது அசுரப்பிறப்பால் தங்கள் அறிவை இழந்து உன்னை நாயகனாகக் கொண்டிருந்த அனைத்து உலகங்களையும் தங்கள் கோபத்தினால் அழிக்கத் தொடங்கினார்கள் அல்லவா?

9 தயோ: ஹிரண்யாக்ஷ பஹாஸு ரேந்த்ர:
ரணாய தாவந் அநவாப்த வைரீ
பவத்ப்ரியாம் க்ஷ்மாம் ஸலிலே நிமஜ்ய
சசார கர்வாத் விநதத் கதாவாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! அவர்களில் ஒருவனான இரண்யாக்ஷன் தன்னுடன் போர் புரியத் தகுந்த பகைவன் எவனையும் காண முடியாமல் அலைந்தான். அப்போது உன் மீது ப்ரியமானவளான பூமிதேவியை கவர்ந்து எடுத்துச் சென்று கடலின் அடியில் மறைத்து வைத்தான். தொடர்ந்து தனது கர்வத்தின் காரணமாக கர்ஜனை செய்து கதை ஆயுதத்துடன் சுற்றி வந்தான் அல்லவா?

10 தத: ஜலேசாத் ஸத்ருசம் பவந்தம்
நிசம்ய பப்ராம கவேஷயந் த்வாம்
பக்தைசத்ருச்ய: ஸ க்ருபாநிதே த்வம்
நிருந்தி ரோகான் மருதாலயேச

**பொருள் -** குருவாயூரப்பனே! கருணை என்பதே கடலாக உள்ளவனே! அந்த இரண்யாக்ஷன், வருணன் மூலமாக உன்னைத் தமக்கு நிகரானவன் என்று அறிந்தான் (இரண்யாக்ஷன் கடலில் இறங்கி வருணனிடம் சண்டையிடச் சென்றபோது வருணன் இதனைக் கூறினான்). அதன் பின்னர் உன்னைத் தேடி அலைந்தான். குருவாயூரின் அதிபதியே! பக்தனால் மட்டுமே உன்னைக் காணமுடியும் அன்றோ! (இதனை இரண்யாக்ஷன் அறியவில்லை போலும்). நீ அனைத்து பிணிகளையும் நீக்க வேண்டும்.
***

1 ஸ்வாயம்புவ: மனுரதோ ஜனஸர்க சீல:
த்ருஷ்ட்வா மஹீம் அஸமயே ஸலிலே நிமக்நாம்
ஸ்ரஷ்டாரம் ஆப சரணம் பவதங்க்ரி சேவா

துஷ்டாசயம் முநிஜனை: ஸஹ ஸத்யலோகே

**பொருள் -** குருவாயூரப்பா! ஸ்ருஷ்டிச் செயலில் ஈடுபட்டிருந்த மநு (ப்ரும்மாவால் உருவாக்கப்பட்டவன்) ப்ரளயம் அல்லாத ஒரு காலத்திலேயே பூமி நீரில் முழுகுவதைக் கண்டு முனிவர்களுடன் விரைவாக ப்ரம்ம லோகமான ஸத்யலோகத்திற்குச் சென்றான். அங்கு உன்னுடைய திருப்பாதங்களில் சரணம் புகுவதையே தனது தொழிலாகக் கொண்டதால் மகிழ்வான இதயம் கொண்ட ப்ரும்மாவின் கால்களில் சரணம் அடைந்தான்.

2 கஷ்டம் ப்ரஜா: ஸ்ருஜதி மயி அவனீ நிமக்னா
ஸ்தானம் ஸரோஜபவ கல்பய தத் ப்ரஜாநாம்
இதி ஏவம் ஏஷ கதிதோ மனுனா ஸ்வயம்பூ:
அம்போருஹாக்ஷ தவ பாதயுகம் வ்யசிந்தீத்

**பொருள் -** குருவாயூரப்பனே! தாமரை மலர் போன்ற அழகான கண்களை உடையவனே (அம்போருஹாக்ஷ)! நான் மக்களை படைத்துக் கொண்டிருக்கும் போதே இந்தப் பூமியானது முற்றிலும் நீரில் மூழ்கி விட்டது. இது வருத்தமடைய வைக்கிறது. ப்ரும்மாவே! நான் படைக்கும் மக்களுக்கு அவர்கள் வாழ ஓர் இடத்தை உண்டாக்க வேண்டும் என்று இப்படியாக மனுவால் வணங்கப்பட்ட ப்ரும்மா உன்னுடைய திருவடிகளை அல்லவா த்யானித்தான்?

3 ஹா ஹா விபோ ஜலம் அஹம் ந்யபிபம் புரஸ்தாத்
அத்யாபி மஜ்ஜதி மஹீ கிம் அஹம் கரோமி
இத்தம் த்வத் அங்க்ரியுகளம் சரணம் யத: அஸ்ய
நாஸாபுடாத் ஸமபவ: சிசுகோலரூபீ

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னிடம் வந்த ப்ரும்மா, எங்கும் நிறைந்துள்ளவனே (விபோ)! நான் ப்ரளயத்தின் முடிவில் அதிகமாகவே நீரைக் குடித்து விட்டேன். இருந்தாலும் இன்னமும் பூமி மூழ்குகிறது. நான் என்ன செய்வது? கஷ்டம்! கஷ்டம்! என்று கூறியபடி உனது திருவடியில் சரணம் என்று புகுந்தான். அப்போது அவனைக் காப்பாற்ற அவனது மூக்கில் இருந்து நீ வெண்மையான பன்றிக் குட்டியாகத் தோன்றினாய்

அல்லவா? (இப்படியாகத் தோன்றியதால் இந்த கல்பத்திற்கு ஸ்வேத வராஹ கல்பம் என்று பெயர் ஏற்பட்டது).

4 அங்குஷ்ட மாத்ர வபு: உத்பதித: புரஸ்தாத்
பூய: அத கும்பி ஸத்ருச: ஸமஜ்ரும்பதா: த்வம்
அப்ரே ததாவீதம் உதீக்ஷ்ய பவந்தம் உச்சை:
விஸ்மேரதாம் விதி: அகாத் ஸஹ ஸூனுபி: ஸ்வை:

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படித் தோன்றும் போது நீ கட்டைவிரல் அளவே இருந்தாய் (அங்குஷ்டம் என்றால் கட்டைவிரல். ப்ரஹ்ம சூத்திரத்தில் பரம் பொருளை அங்குஷ்ட மாத்ர: புருஷ: என்றே கூறப்பட்டது). அதன் பின்னர் பெரிய யானை அளவிற்கு நீ வளர்ந்தாய். தொடர்ந்து மேகம் வரை வளர்ந்தாய். இப்படியாக நீ வானத்தின் அளவு உயர்ந்து வளர்ந்ததைக் கண்ட ப்ரும்மா தன்னுடைய புத்ரர்களுடன் சேர்ந்து தானும் வியப்படைந்தான் அல்லவா?

5 க: அஸௌ அசிந்த்ய மஹிமா கிடி உத்தித: மே
நாஸாபுடாத் கிமுபவேத் அஜிதஸ்ய மாயா
இத்தம் விசிந்தயதி தாதரி சைலமாத்ர:
ஸத்யோ பவந் கில ஜகர்ஜித கோர கோரம்

**பொருள் -** குருவாயூரப்பனே! என்னுடைய மூக்கில் இருந்து வெளிப்பட்டதும், மிகுந்த திறமையும் மகிமையும் உடையதாகவும் காணப்படும் இந்தப் பன்றி யார்? யாராலும் வெற்றி பெற முடியாத விஷ்ணுவின் லீலையா இது? என்று ப்ரும்மா தன் மனதில் சிந்தித்தான். அப்போது நீ ஒரு பெரிய மலை அளவிற்கு வளர்ந்து மிகவும் பயங்கரமாகக் கர்ஜனை செய்தாய் அல்லவா?

6 தம் தே நிதாதம உபகர்ண்ய ஜநஸ்தப: ஸ்தா:
ஸத்ய ஸ்திதாச்ச முனயோ நுநுபு: பவந்தம்
தத் ஸ்தோத்ர ஹர்ஷுலமநா: பரிணத்ய பூய:
தோயாசயம் விபுலமூர்த்தி: அவாதர: த்வம்

**பொருள் -** ஸ்ரீ அப்பனே! இப்படியான உனது கர்ஜனையைக் கேட்ட ஜனலோகம், தபோலோகம், ஸத்யலோகம் ஆகியவற்றில் உள்ள முனிவர்கள் உன்னை த்யானித்து வணங்கினர். நீ அவர்களுடைய த்யானத்தினால் மனம் மகிழ்வு கொண்டாய். அதனால் மேலும் பெரிதாக வளர்ந்து கர்ஜனை செய்து கொண்டே கடலில் இறங்கினாய் அல்லவா? என்றார் பட்டத்ரி. ஸ்ரீ அப்பன் ஆம் என்று தலையசைத்தான்.

7 ஊர்த்த்வ ப்ரஸாரி பரிதூம்ர விதூதரோமா
ப்ரோக்ஷிப்த வாலதி: அவாங்முக கோர கோண:
தூர்ண ப்ரதீர்ண ஜலத: பரிகூர்ண தக்ஷ்ணா
ஸ்தோத்ரூந் முநீந் சிசிரயந் அவதேரித த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ அப்போது எப்படி இருந்தாய்? உனது ரோமங்கள் மேல் நோக்கியும், கறுப்பும் சிவப்புமாகவும், அசையும்படியும் இருந்தன. உனது வால் உயரமாகத் தூக்கி இருந்தது. உனது மூக்கு கீழாக நோக்கியபடி பயங்கரமான தோற்றத்துடன் காணப்பட்டது. மேகக் கூட்டத்தை நீ பிளந்தாய். உன்னைத் துதித்துக் கொண்டிருந்த முனிவர்களை உனது திருக்கண் பார்வையால் குளிரச்செய்து சமுத்திரத்தில் இறக்கினாய் அல்லவா? (இங்கு கூறப்பட்ட வராஹ மூர்த்தியின் தோற்றத்தை குருவாயூரப்பன், நாராயண பட்டத்ரிக்கு நேரிலே செய்து காண்பித்ததாகவே நம்பப்படுகிறது).

8 அந்தர்ஜலம் ததனு ஸங்குல நக்ர சக்ரம்
ப்ராம்யத் திமிங்கல குலம் கலுஷோர் மிமாலம்
ஆவிச்ய பீஷணரவேண ரஸாதலஸ்தான்
ஆகம்பயன் வஸுமதீம் அகவேஷய: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ இறங்கிய கடல் எப்படி இருந்தது? முதலைக் கூட்டங்கள் நிரம்பியதும், எங்கும் சுற்றுகின்ற திமிங்கலக் கூட்டம் உடையதாகவும், மிகப் பெரிய அலைகள் உடையதாகவும், கலங்கியதாகவும் அந்தக் கடல் இருந்தது. நீ உள்ளே சென்று எழுப்பிய கர்ஜனையால் ரஸாதல லோகம் கூட நடுங்கியது. இப்படியாகச் சென்று நீ பூதேவியைத் தேடினாய் அல்லவா? என்றார் பட்டத்ரி. ஸ்ரீஅப்பன் ஆம் என்றான்.

9 த்ருஷ்ட்வாத தைத்ய ஹதகேந ரஸாதலாந்தே
ஸம்வேசிதாம் ஜடிதி கூடகிடி: விபோ த்வம்
ஆபாதுகாந் அவிகணய்ய ஸுராரிகேடான்
தம்ஷ்ட்ராங்குரேண வஸுதாம் அததா: ஸலீலம்

**பொருள் -** எங்கும் உள்ளவனே (விபோ)! குருவாயூரப்பனே! பின்னர் மிகக்கொடிய அசுரன் ஹிரண்யாக்ஷனால் ரஸாதலத்தின் நடுவில் (சமுத்திரம் என்று கொள்ளலாம்) பாதுகாப்பாக வைக்கபட்டிருந்த பூமியை நீ கண்டாய். வராஹமூர்த்தியான நீ உன்னை எதிர்த்து வரும் அசுரர்களைக் கண்டு, அவர்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல், உனது கோரைப் பற்களால் பூமியை விளையாடுவது போன்று (அலட்சியமாக) குத்தி எடுத்தாய் அல்லவா? என்றார் பட்டத்ரி. ஸ்ரீஅப்பன் ஆம் என்றான்.

10 அப்யுத்தரந் அத தராம் தசனாக்ரலக்ந
முஸ்தாங்குராங்கித இவ அதிகபீவராத்மா
உத்தூத கோரஸிலிலாத் ஜலதே: உதஞ்சன்
க்ரீடா வராஹ வபு; ஈச்வர: பாஹி ரோகாத்

**பொருள் -** உனது விருப்பத்தினால் வராஹ உருவம் எடுத்தவனே? குருவாயூரப்பனே! கோரைப் பற்களின் நுனியில் கிழங்கு போன்று பூமியைக் கொண்டவனும், மிகவும் பெரிய உடலைக் கொண்டவனும், (அதிக பீவராத்மா), கலங்கியதும் பெரிய அலைகள் வீசுவதும் ஆகிய சமுத்திரத்தில் இருந்து வெளிவந்தவனும் ஆகிய நீ பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 ஹிரண்யாக்ஷம் தாவத் வரத பவதந் வேஷணபரம்
சரந்தம் ஸாம்வர்த்தே பயஸி நிஜ ஜங்கா பரிமிதே
பவத்பக்த: கத்வா கபடபடுதீ: நாரதமுனி:
சனை: ஊசே நந்தன் தனுஜம் அபி நிந்தந் தவ பலம்

**பொருள் -** வரங்களை அளிக்கும் குருவாயூரப்பனே! இப்படியாக நீ பூமியை மீட்டு வந்த பின்னர், ப்ரளய ஜலத்தில் உன்னை இரண்யாக்ஷன் தேடினான். அந்த நீர் அவனுக்கு முழங்கால் அளவே இருந்தது. அப்போது அவனிடம் சென்ற நாரதர் அவனைப்

பாராட்டியும் உனது பலத்தை இகழ்வாகவும் கூறினார் அல்லவா? இங்கு நாரதரை பட்டத்ரி எப்படி வர்ணிக்கிறார்? உன்னுடைய பக்தனும், கபடமாக பேசி மனதை மயக்குவதில் வல்லவரும் ஆகிய நாரதர் என்று கூறுகிறார். பகவான் பலத்தை நாரதர் குறைவாகக் கூறவேண்டிய காரணம் என்ன? அப்படிக் கூறினால் மட்டுமே தனது சொல்லை இரண்யாக்ஷன் கேட்பான் என்ற காரணத்தினால் ஆகும்.

2 ஸ மாயாவீ விஷ்ணு: ஹரதி பவதீயாம் வஸுமதீம்
ப்ரபோ குஷ்டம் கஷ்டம் கிமிதம் தேன: அபிகதித:
நதன் க்வ அஸௌ க்வ அஸௌ இதி ஸ முனினா தர்சிதபத:
பவந்தம் ஸம்ப்ராபத் தரணிதரம் உத்யந்தம் உதகாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! நாரதர் இரண்யாக்ஷனிடம், மாயாவியான விஷ்ணு உன்னிடம் இருந்து நீ வைத்திருந்த பூமியை அபகரித்துச் செல்கிறான். கஷ்டம்! கஷ்டம்! என்று கூறினார். இதனைக் கேட்ட இரண்யாக்ஷன், அந்த விஷ்ணு எங்கே! அந்த விஷ்ணு எங்கே! என்று சத்தம் எழுப்பிக் கொண்டு வந்தான். பின்னர் நாரத முனிவரால் காண்பிக்கப்பட்ட பாதையில் வந்து - பூமியை தூக்கிக் கொண்டு நிற்கின்றவனும், ஸமுத்திரத்தில் இருந்து வெளியில் வந்தவனும் ஆகிய உன்னிடம் வந்தான் அல்லவா?

3 அஹோ ஆரண்ய அயம் ம்ருக இதி
ஹஸந்தம் பஹுதரை:
துருக்தை: வித்யந்தம் திதிஸுதம்
அவக்ஞாய பகவன்
மஹும் த்ருஷ்ட்வா தம்ஷ்ட்ராசிரஸி
சகிதாம் ஸ்வேந மஹஸா
பயாதௌ ஆவாதாய ப்ரஸபம்
உதயுங்க்தா ம்ருதவிதௌ

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பனே! உன்னைக் கண்ட அந்த அசுரன், இது என்ன காட்டில் இருக்க வேண்டிய விலங்கா? என்று பரிகாசம் செய்து நகைத்தான். உன்னைப் பலவிதமான தீயச் சொற்களால் திட்டினான். திதியின் மகனான அவனை நீ பொருட்படுத்தாமல், உனது பல்லில் இருந்து கொண்டு இதனைக் கண்டு பயந்து நடுங்கிய

பூதேவியை, உன்னுடைய சக்தியால் நீரின் மீது மூழ்காமல் நிலையாக இருக்கும்படி நிறுத்தினாய். அதன் பின்னர் அவனுடன் யுத்தம் செய்ய தயாராக இருந்தாய் அல்லவா?

4 கதாபாணௌ தைத்யே த்வம் அபி க்ருஹீதோந் நத கத:
நியுத்தேந க்ரீடன் கடகட ரவோத்குஷ்ட வியதா
ரணாலோகௌத் ஸுக்யாத் மிலதி ஸுஸங்கே த்ருதம் அமும்
ந்ருந்த்யா: ஸந்த்யாத: ப்ரதமம் இதி தாத்ரா ஜகதிஷே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த அசுரன் தனது கைகளில் கதை ஆயுதம் வைத்திருந்ததைப் பார்த்த நீயும் மிகவும் பெரியதான கதையைக் கொண்டாய். நீயும் அவனும் யுத்தம் செய்தபோது உண்டான கடகட என்று சத்தம் விண்ணையே அதிரச் செய்தது. நீ விளையாட்டாகவே யுத்தம் செய்ததைக் கண்டு ரசிக்க தேவர்கள் கூடினர். அந்த நேரம் ப்ரும்மா உன்னிடம், இவனை ஸ்ந்த்யா காலத்திற்கு முன்பே கொல்ல வேண்டும்? என்று நினைவுபடுத்தினார் அல்லவா? (இதன் காரணம் ஸ்ந்த்யா காலத்திற்குப் பின் அசுர பலம் அதிகரிக்கும் என்பதால் ஆகும்).

5 கதோந் மர்தே தஸ்மிந் கலு கதாயாம் திதிபுவ:
கதாகாதாத் பூமௌ ஜடிதி பதிதாயாம் அஹஹ போ:
ம்ருது ஸ்மேராஸ்ய: த்வம் தநுஜகுல நிர்மூல நசணம்
மஹா சக்ரம் ஸ்ம்ருத்வா கரபுவி ததான: ருருசிஷே

**பொருள் -** பிரபுவே! குருவாயூரப்பனே! இப்படியாக நடந்த கதை சண்டையில் இரண்யாக்ஷனின் கதையால் அடிக்கப்பட்ட உனது கதை கீழே விழுந்தது. என்ன வியப்பு! (இப்படி கதை விழுந்ததும் பகவானின் விளையாட்டே ஆகும். வைகுண்டத்தின் வாயிற்காப்போனாக விளங்கியவனே இரண்யாக்ஷன் என்பதை நாம் முன்னர் பார்த்தோம். தன்னுடைய பக்தன் அவன்! அவன் ஒருமுறையாவது ஜெயிக்கட்டும் என்று பகவான் தனது கதையை நழுவவிட்டான்). அப்போது நீ அழகான புன்னகை பூத்த முகத்துடன், அசுரர்களின் குலத்தையே அழிக்கும் திறன் படைத்த சக்கர ஆயுதத்தை வரவழைத்து, அதனை வலது கையில் ஏந்தினாய் அல்லவா?

6 தத: சூலம் காலப்ரதிமருஷி தைத்யே விஸ்ருஜதி

த்வயி சிந்ததி ஏனத் கரகலித சக்ர ப்ரஹரணாத்
ஸமாருஷ்ட: முஷ்ட்யா ஸ கலு விதுதந் த்வாம் ஸமததோத்
கலந்மாயே மாயா த்வயி கில ஜகந் மோஹனகரீ

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் அந்த அசுரன் யமனுக்கு ஒப்பான கோபத்தைக் கொண்டவனாகத் தன்னுடைய சூலத்தை உன்மீது ஏவினான். நீ அந்த சூலத்தை முறித்தபோது அவன் மிகுந்த கோபம் கொண்டான். அப்போது உன்னைத் தனது கைமுட்டியால் அடித்தான். அதன் பின்னர் மாயைகளே நெருங்க இயலாத உன்னிடம் மாயைகளை ஏவினான் அல்லவா?

7 பவச்சக்ர ஜ்யோதிஷ்கண லவ நிபாதேன விதுதே
தத: மாயாசக்ரே விதத கநரோஷாந்த மநஸம்
கரிஷ்டாபி: முஷ்டி ப்ரஹ்ருதிபி: அபிக்னந்தம் அஸுரம்
கராக்ரேண ஸ்வேன ச்ரவண பதமூலே நிரவதீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த அசுரன் உன்மீது ஏவிய மாயைகள் அனைத்தும் உனது சக்கர ஆயுதத்தின் முன் தோன்றிய ஜோதியில் அழிந்தன. இதனால் மேலும் கோபம் கொண்ட அவன் அடுத்து என்ன செய்வது என்று குழம்பினான். தனது பெரிய முஷ்டிகளால் உன்னைக் குத்தினான். உடனே நீ உனது கையின் நுனிப் பாகத்தால் அவனது காதில் அடித்து அவனை வீழ்த்தினாய் அல்லவா?

8 மஹா காய: ஸ: அயம் தவ கரஸரோஜ ப்ரமதித:
கலத்ரக்த: வக்ராத் அபதத் ரிஷிபி: ச்லாகித ஹதி:
ததா த்வாம் உத்தாம ப்ரமதபர வித்யோதி ஹ்ருதயா:
முநீந்த்ரா: ஸாந்த்ராபி: ஸ்துதிபி: அநுவந் அத்வரதநும்

**பொருள் -** குருவாயூரப்பனே! மிகுந்த பருத்த உடலை உடைய அந்த இரண்யாக்ஷன் உன்னுடைய தாமரை மலர் போன்று சிவந்தும் அழகாகவும் உள்ள கைகளால் தாக்கப்பட்டவுடன் அவன் முகத்தில் இருந்து இரத்தம் வழிந்தது. உடனே முனிவர்களால் புகழப்பட்டு கீழே விழுந்து மடிந்தான். (இங்கு இவன் ஏன் முனிவர்களால் கொண்டாடப்பட வேண்டும்? பகவானின் திருக்கைகள் இவன் மீது பட்டது அல்லவா?

அந்தக் காரணத்தினால் ஆகும்) அதே நேரம் முனிவர்கள் ஆனந்தம் அடைந்தவர்களாக மிகுந்த ஓசையுடன் கூடிய ஸ்தோத்திரங்கள் மூலம் வராஹனான உன்னைத் துதித்தனர்.

9 த்வசி சந்த: ரோமஸு அபி குசகண: சக்ஷுஷி க்ருதம்
சதுர்ஹோதர: அங்க்ரௌ ஸ்ருக் அபி வதனே ச உதர இடா
க்ரஹா ஜிஹ்வாயாம் தே பரபுருஷ கர்ணே ச சமஸ:
விபோஸோம: வீர்யம் வரத கலதேச ச அபி உபஸத:

**பொருள் -** பரம புருஷனே! வரங்கள் அளிப்பவனே! குருவாயூரப்பனே! உன்னுடைய தோலில் காயத்ரி போன்ற சந்தங்கள்; ரோமங்களில் தர்ப்பைகள்: கண்களில் நெய்: கால்களில் நான்கு ரித்விக்குகள் (ப்ரம்மா, ஹோதா, உத்காதா, அத்வர்யு); முகத்தில் ஸ்ருக் என்னும் ஹோமபாத்திரம்; வயிற்றில் இடா என்னும் ஹோம பாத்திரம்; நாக்கில் க்ரஹம் என்ற பாத்திரம்; காதுகளில் ஸமஸம் என்ற தட்டுகளும் விந்துவில் ஸோமரஸம்; கழுத்தில் உபஸத்துகள் என்னும் இஷ்டி மந்திரங்கள் உள்ளன. ஆக பகவானின் உடலை வேதமயமானது என்று வர்ணிக்கின்றார்.

10 முனீந்த்ரை: இத்யாதி ஸ்தவத முகரை: மோதிதமனா:
மஹீயஸ்யா மூர்த்யா விமலதர கீர்த்யா ச விலஸந்
ஸ்வதிஷ்ண்யம் ஸம்ப்ராப்த: ஸுகரஸ விகாரீ மதுரிபோ
நிருந்த்யா ரோகம் மே ஸகலம் அபி வாதாலய பதே

**பொருள் -** மது என்ற அசுரனைக் கொன்றவனே! குருவாயூரின் பதியே! க்ருஷ்ணா! இப்படியாக முனிவர்கள் உன்னைத் துதித்தபோது நீ மனம் மகிழ்ந்தாய். மிகவும் பெரிய உருவத்துடனும், அளவிட இயலாத தூய்மையான புகழோடும் விளங்கிய நீ, உன்னுடைய இருப்பிடமான வைகுண்டம் அடைந்தாய். அங்கு பரமானந்தத்தில் திளைக்கும் நீ, என்னுடைய அனைத்து பிணிகளையும் நீக்க வேண்டும்.

***

1 ஸமநுஸ்ம்ருத தாவகாங்க்ரியுக்ம:
ஸ மநு: பங்கஜ ஸம்பவாங்க ஜந்மா
நிஜம் அந்தரம் அந்தராயஹீநம்
சரிதம் தே கதயந் ஸுகம் நிநாய

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தாமரையில் உதித்த ப்ரும்மாவின் மகனான அந்த மனு, உன்னுடைய திருவடிகளை எப்போதும் த்யானம் செய்து கொண்டும், உன்னுடைய லீலைகள் அடங்கிய சரிதங்களைச் சொல்லிக் கொண்டும், தன்னுடைய காலமான மந்வந்த்ரத்தை எந்தவிதமான தடைகளும் இல்லாமல், இனிமையாகக் கழித்தான்.

2 ஸமயே கலு தத்ர கர்த்தமாக்ய
த்ருஹிணச்சாய பவ ததீய வாசா
த்ருத ஸர்கரஸ: நிஸர்க ரம்யம்
பகவன் த்வாம் அயுதம் ஸமா: நிஷேவே

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! மந்வந்தர காலத்தில், ப்ரும்மாவின் நிழலில் இருந்து உதித்தவர் கர்த்தமர் என்பவர் ஆவார். அவர் ப்ரும்மாவின் ஸ்ருஷ்டி செய்ய வேண்டும் என்ற கட்டளையை ஏற்று, ஸ்ருஷ்டியில் விருப்பம் கொண்டார். க்ருஷ்ணா! இயற்கையாகவே அழகு கொண்ட உன்னைக் குறித்து பதினாயிரம் ஆண்டு மிகவும் கடுமையாக தவம் புரிந்தார்.

3 கருடோபரி காளமேக கம்ரம்
விலஸத் கேளி ஸரோஜ பாணி பத்மம்
ஹஸிதோல் லஸிதாநநம் விபோ த்வம்
வபு: ஆவிஷ்குருஷே ஸ்ம கர்தமாய

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரபுவே! அப்போது கர்த்தமருக்குக் காட்சி அளித்தாய். எப்படி? நீ கருடன் மீது அமர்ந்து இருந்தாய். உனது திருமேனி நீர் கொண்ட கருமேகம் போல் அழகாக இருந்தது; உனது அழகிய கைகளில் விளையாட்டிற்காக ஒரு தாமரை மலரை வைத்திருந்தாய்; உன்னுடைய முகத்தில் அழகான புன்சிரிப்பு காணப்பட்டது. இப்படியாக நீ கர்த்தமருக்குத் தோன்றினாய் அல்லவா!

4 ஸ்துவதே புலகாவ்ருதாய தஸ்மை
மநுபுத்ரீம் தயிதாம் நவாபி புத்ரீ:
கபிலம் ச ஸுதம் ஸ்வமேவ பச்சாத்

ஸ்வகதிம் ச அப்ய அநுக்ருஹ்ய நிர்கதோபூ;

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய தரிசனத்தின் மூலம் தனது மயிர்க்கூச்செறிந்து நின்றார் கர்த்தமர். அவருக்கு மநுவின் (ப்ரும்மாவின் மகன்) மகளான தேவஹூதி என்பவளை மனைவியாக அளித்தாய். அவர்களுக்கு ஒன்பது பெண்களை பிறக்க வைத்தாய். (அவர்கள் - கலை, அனசூயை, சிரத்தை, ஹவிற்பூ, கதி, க்ரியை, கியாதி, அருந்ததி மற்றும் சாந்தி) மேலும் உனது அவதாரமாக கபிலர் என்பவர் தோன்றுவார் என்றும் கூறினாய். அத்துடன் கர்த்தமர் மோட்சமும் கிடைக்கப் பெறுவார் என்றும் கூறினாய்.

5 ஸ மநு; சதரூபயா மஹிஷ்யா குண
வத்யா ஸுதயா ச தேவஹூத்யா
பவதீரித நாரதோபதிஷ்ட: ஸமகாத்
கர்த்தமம் ஆகதி ப்ரதீக்ஷம்

**பொருள் -** குருவாயூரப்பனே! மனுவானவன் நாரத முனிவரால் தூண்டப்பட்டான். (நாரதனை நீயே தூண்டினாய்). இவ்வாறு தூண்டப்பட்ட அவன் தனது மனைவியான சத்ரூபையுடன், நல்ல பண்புகள் நிறைந்தவளான தனது மகள் தேவஹூதி ஆகியோருடன், கர்த்தமரைச் சென்று அடைந்தான்.

6 மனுனா உபஹ்ருதாம் ச தேவஹூதிம்
தருணீ ரத்நம் அவாப்ய கர்த்தம; அஸௌ
பவதர்ச்சன நிர்வ்ருத: அபி தஸ்யாம்
த்ருட தச்ரூஷணயா ததௌ ப்ரஸாதம்

**பொருள் -** குருவாயூரப்பனே! கர்த்தமர், மனுவால் அழைத்து வரப்பட்ட அவனுடைய பெண் என்னும் இரத்தினத்தை மணந்து கொண்டார். அவர் உனக்குத் தொண்டுகள் புரிவதிலேயே தனது வாழ்க்கையைக் கழித்தார் என்றாலும் தனது மனைவியின் அன்பான பணிவிடைகள் மூலம் அவளிடத்தில் மிக்க அன்பு கொண்டார்.

7 ஸ புன: த்வத் உபாஸன ப்ரபாவாத்

தயிதா காமக்ருதே க்ருதே விமாநே
வநிதா குல ஸங்குல; நவாத்மா
வ்யஹரத் தேவபதேஷு தேவஹூத்யா

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னை ஆராதனை செய்த காரணத்தால் அவருக்கு மிகுந்த யோகபலம் இருந்தது. இதனால் தனது மனைவியின் ஆசைக்கு ஏற்ப உண்டாக்கப்பட்ட விமானத்தில் அமர்ந்து, தேவப் பெண்கள் புடைசூழ, அந்த விமானத்தில் மனைவியுடன் பல இடங்களில் உற்சாமாகத் திரிந்தார்.

8 சத வர்ஷம் அத வ்யதீத்ய ஸ: அயம்
நவ கந்யா: ஸமவாப்ய தன்யரூபா:
வநயாந ஸமுத்ய தேவி காந்தா; ஹிதக்ருத்
த்வஜ்ஜன நோத் ஸுக: ந்யவாத்ஸீத்

**பொருள் -** குருவாயூரப்பனே! கர்த்தமர் நூறு ஆண்டுகள் கழித்தார். மிகவும் அழகான தோற்றம் உடைய ஒன்பது பெண்களைப் பெற்றார். அதன் பிறகு துறவறம் மேற்கொண்டு காட்டிற்குச் செல்ல விருப்பம் கொண்டார். இப்படி எண்ணம் கொண்ட போதிலும் தன்னுடைய மனைவிக்கு துணையாக இருக்கவும், உன்னுடைய கபில அவதாரம் நிகழவும் அவர் மன விருப்பம் கொண்டு அங்கேயே தொடர்ந்து வசித்தார்.

9 நிஜபர்த்ரு கிரா பவந் நிவேஷா
நிரதாயாம் அத தேவ தேவஹூத்யாம்
கபில: த்வம் அஜாயதா ஜநாநாம்
ப்ரதயிஷ்யந் பரமாத்ம தத்வ வித்யாம்

**பொருள் -** தேவர்களின் தேவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படி தன்னுடைய கணவரின் வாக்கின்படி அவருக்கு இடைவிடாமல் தொண்டு புரிந்தாள் (தேவஹூதி). அவள் மூலமாகவே இந்த உலக மக்களுக்கு பரமார்த்த தத்துவத்தைக் குறித்து ஞானத்தை நீ உண்டாக்க விரும்பினாய். அதனால் நீ கபிலராகத் தோன்றினாய் அல்லவா!

10 வனம் ஏயுஷி கர்தமே ப்ரஸன்னே

மதஸர்வஸ்வம் உபாதிசத் ஜனன்யை
கபிலாத்மக வாயுமந்திரேச த்வரிதம்
த்வாம் பரிபாஹி மாம் கதௌகாத்

**பொருள் -** குருவாயூரில் வாசம் செய்பவனே! ஸ்ரீ அப்பனே! தனது கடமைகளை முழுவதுமாக முடித்த பின்னர் கர்த்தமருக்கு தெளிவான மனம் அமைந்தது. அதன் பின்னர் அவர் காட்டிற்குச் சென்று விட்டார். அதன் பின்னர் மதத்தின் தத்துவங்கள் அனைத்தையும் உனது தாயான தேவஹூதிக்கு நீ கபிலராகத் தோற்றம் கொண்டு உபதேசம் செய்தாய். என்னை பிணிகள் அண்டாமல் நீதான் காப்பாற்ற வேண்டும்.
***

1 மதி: இஹ குணஸக்தா பந்தக்ருத் தேஷு அஸக்தாது
அம்ருதக்ருத் உபருந்தே பக்தியோகஸ்து ஸக்திம்
மஹதநு கமலப்யா பக்தி: ஏவாத்ர ஸாத்யா
கபிலதநு: இதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! மூன்று குணங்களையும் ஆதாரமாகக் கொண்டு விளங்கும் புத்தியானது (பொருள்கள் மீது பற்று உள்ள புத்தி) ஸம்ஸார பந்தத்தை உண்டாக்குகின்றது. ஆனால் பற்று நீக்கிய புத்தி என்பது உயர்ந்த மோட்சத்தை அளிக்க வல்லது. பற்று அற்ற புத்தியை உண்டாக்குவது என்பது பக்தியோகம் மூலமே ஆகும். பக்தியோகம் பற்றுதலை தடுத்து நிறுத்த வல்லது. மஹான்களைப் பின்பற்றுவதன் மூலம் பக்தியோகம் கிட்டுகிறது. இந்த பக்தியோகம் என்பது இந்த உலகில் மட்டுமே கிட்டக்கூடியது என்று இவ்வாறு கபிலராகத் தோன்றிய நீ உனது தாயான தேவஹூக்கு உபதேசித்தாய் அல்லவா?

2 ப்ரக்ருதி மஹத் அஹங்காரம் ச மாத்ரா: ச பூதாநீ
அபி ஹ்ருதபி தசாக்ஷீ புருஷ: பஞ்சவிம்ச:
இதி விதித விபாக: முச்யதே அஸௌ ப்ரக்ருத்யா
கபிலதநு: இதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ப்ரக்ருதி, அஹங்காரம் ஆகியவை; பஞ்ச பூதங்களின் காரணமான வாசனை, சுவை, உருவம், தொடு உணர்ச்சி மற்றும் ஓசை

என்னும் தந்மாத்ரைகள்; பூமி, நீர், அக்னி, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள்; மனம், கண், காது, மூக்கு, நாக்கு, மெய் என்னும் ஐந்து ஞான இந்த்ரியங்கள்; பேச்சு, கை, கால், மர்மகுறிகள், மலமூத்திரக்குறிகள் என்னும் கர்ம இந்த்ரியங்கள் - ஆகிய இவற்றுடன் இணைந்த ஜீவன் இருபத்து ஐந்தாவது தத்துவமாகும். இப்படியாக இந்த வேறுபாடுகளை உணர்ந்த மனிதன் இந்தப் ப்ரக்ருதியின் பிடியில் உள்ள அறியாமையில் இருந்து விடுபடுகிறான் என்று கபிலரான நீ உனது தாய்க்கு உபதேசம் செய்தாய் அல்லவா?

3 ப்ரக்ருதிகத குணௌகை: நாஜ்யதே பூருஷ: அயம்
யதி து ஸஜதி தஸ்யாம் தத்குணா: தம் பஜேரந்
மதநு பஜந தத்வ ஆலோசநை: ஸாபி அபேயாத்
கபிலதநு: இதீ த்வம் தேவஹூத்யை ந்யாகதீ:

**பொருள் -** குருவாயூரப்பா! பொதுவாக இந்த ஆத்மாவானது ப்ரக்ருதியின் குணங்களால் தொடப்படாததாகவே உள்ளது. ஆனால் பற்று உடையவனாக மாறும்போது உடல் முதலானவற்றின் குணங்கள் ஆத்மாவை பற்றிக் கொள்ளும். ஆனால் அவை என்னிடம் பக்தி செலுத்தி, வேதாந்தங்களை பாராயணம் செய்வதன் மூலம் அகன்றுவிடும். இப்படியாக கபிலரான நீ உன் தாயிடம் உபதேசம் செய்தாய் அல்லவா?

4 விமலமதி: உபாத்தை: ஆசாநாத்யை: மதங்கம்
கருட ஸமதிரூடம் திவ்ய பூஷா யுதாங்கம்
ருசிதுலித தமாலம் சீலயேத் அநுவேலம்
கபிலதநு: இதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! யோகம் மற்றும் ஆஸனங்களைப் பயில்பவன் மனத்தெளிவு பெறுகிறான். அப்படிப்பட்டவன் என்னுடைய திருமேனியை கருடன் மீது உள்ளதாகவும், பலவிதமான ஆபரணம் மற்றும் ஆயுதங்கள் கொண்டதாகவும், தமால மலர் போன்று நீல நிறம் உடையதாகவும், எப்போதும் த்யானித்து இருக்க வேண்டும் என்று நீ உபதேசம் செய்தாய் அல்லவா?

5 மம குண கண லீலா கர்ணநை: கீர்த்தநாத்யை:
மயி ஸுரஸரி தோக ப்ரக்யா சித்தாநு வ்ருத்தி

பவதி பரம பக்தி: ஸாஹி ம்ருத்யோ: விஜேத்ரீ
கபிலதநு இதி த்வம் தேவஹூத்யை நியாகதீ

**பொருள் -** குருவாயூரப்பனே! பரம் பொருளான என் திருக்கல்யாண குணங்களையும், எனது லீலைகள் அடங்கிய சரிதங்களையும், என்னுடைய திருநாமங்களையும் எப்போதும் த்யானித்து வந்தால் போதுமானது. அவை கங்கையின் வெள்ளம் தடைபடாமல் ஓடுவது போல் என்னிடம் தடையற்ற பக்தியை உண்டாக்கும். இந்த பக்தியானது யமனைக்கூட அருகில் வரமுடியாமல் தடுத்து நிறுத்த வல்லது என்று உபதேசம் செய்தாய்.

6 அஹஹ பஹுல ஹிம்ஸா ஸஞ்சிதார்த்தை: குடும்பம்
ப்ரதிதினம் அநுபுஷ்ணன் ஸத்ரீஜித: பாலலாலீ
விசதி ஹி க்ருஹ ஸக்த: யாதநாம் மயி அபக்த:
கபிலதநு: இதி த்வம் தேவஹூத்யை ந்யாகாதீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! அன்றாடம் பலவிதமானவர்களையும் துன்புறுத்தி தானும் இம்சையை அனுபவித்து பொருளை ஈட்டுகிறான். எதற்காக? தன்னுடைய குடும்பத்தைக் காப்பதற்காக ஆகும். இவன் பெண்களால் வெல்லப்பட்டவனாகவும், பிள்ளைகளை சீராட்டுபவனாகவும், தனது வீட்டின் மீது அதிகமான ஆசை உள்ளவனாகவும் இருக்கிறான். இதனால் இவனுக்கு என்மீது பக்தி இல்லாமல் போகிறது. இப்படிப்பட்டவன் நரகத்தையே அடைகிறான்! கஷ்டம்! கஷ்டம்! என்று நீ உபதேசம் செய்தாய் அல்லவா?

7 யுவதி ஜடரகின்ன: ஜாதபோதோபி அகாண்டே
ப்ரஸவ களித போத: பீடயா உல்லங்க்ய பால்யம்
புநரபி பத முஹ்யத்யேவ தாருண்யகாலே
கபிலதநு: இதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒருவன் தனது தாயின் கர்ப்பத்தில் உள்ளபோது மிகவும் சிரமப்படுகிறான். (ஆகாரங்களால் உண்டாகும் தொல்லைகள், அசுத்தமான மலமூத்ரங்களால் தொல்லைகள், கிருமிகளால் தொல்லை). அந்த ஜீவன் ஏழு மாதம் கழிந்த பின்னர் (கர்ப்பத்தில்) ஞானம் அடைகிறான். இருந்தாலும் தனது துயரங்களை

நீக்கும் திறன் இல்லை. அவன் பிறந்தவுடன் இப்படிக் கிடைத்த ஞானத்தையும் இழந்து விடுகிறான். இதனால் தனது பால்யத்தில் பல துன்பங்களை அனுபவிக்கிறான். தனது வாலிபப் பருவத்தில் பலவிதமான மோகங்களால் பீடிக்கப்பட்டுத் தவிக்கிறான்! கஷ்டம்! என்று உபதேசித்தாய் அல்லவா?

8 பித்ரு ஸுர கணயாஜீ தார்மிக: ய: க்ருஹஸ்த:
ஸ ச நிபததி காலே தக்ஷிணாத் வோபகாமீ
மயி நிஹிதம அகாமம் கர்ம து உதக்பதார்த்தம்
கபிலதநு: இதி த்வம் தேவஹுத்யை ந்யகாதீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! பித்ருக்களையும், தேவர்களையும் பூஜித்துக் கொண்டும், தனது தர்மங்களைச் செய்பவனும் இப்படியாக உள்ள க்ருஹஸ்தன் (இல்லறத்தில் உள்ளவன்) இறந்த பின்னர் தெற்குத் திசையில் சென்று விடுகிறான். அவன் செய்த புண்ணிய பலன்கள் தீர்ந்தவுடன் இந்தப் பூமியில் வந்து மீண்டும் பிறக்கிறான். ஆனால் என்னிடம் சமர்ப்பணம் என்று செய்யப்பட்ட விருப்பம் இல்லாத கர்மம் உடையவன் வடக்காகச் செல்கிறான் ( அவன் மீண்டும் பிறப்பதில்லை) என்று நீ உபதேசித்தாய் அல்லவா?

9 இதி ஸுவிதித வேத்யாம் தேவ ஹே தேவஹுதிம்
க்ருதநுதிம் அனுக்ருஹ்ய த்வம் கத: யோகி ஸங்கை:
விமலமதி: அத அஸௌ பக்தி யோகேன முக்தா
த்வம் அபி ஜனஹிதார்த்தம் வர்த்தஸே ப்ராகுதீச்யாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! இப்படியாக அறிய வேண்டியவை அனைத்தையும் உன் தாய் தேவஹுதி நன்றாக அறிந்தாள். அவளுக்கு இப்படி அனுக்ரகம் செய்த பின்னர் நீ சாதுக்களுடன் சென்று விட்டாய். தெளிவான ஞானம் பெற்ற தேவஹுதி தன்னுடைய பக்தியோகத்தின் மூலம் மோட்சம் பெற்றாள். நீ மக்களின் நன்மைக்காக வடகிழக்குத் திசையில் உள்ளாய் அல்லவா?

10 பரம கிமு பஹுத்யா த்வத் பாதாம்போஜ பக்திம்
ஸகலபல விநேத்ரீம் ஸர்வகாமோப நேத்ரீம்

வதஸிகலு த்ருடம் த்வம் தத்விதூய ஆமயாந் மே
குருபவநபுரேச த்வயி உபாதத்ஸ்வ பக்திம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! குருவாயூரில் வசிப்பவனே! பரம்பொருளே! மேலும் மேலும் கூறுவதால் என்ன பயன்? உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பற்றுவதே, அதில் பக்தி வைப்பதே அனைத்து பயங்களையும் நீக்கும் என்றும், நமது விருப்பம் அனைத்தும் நிறைவேற்றும் என்றும் நீ உறுதியாகக் கூறுகிறாய் அல்லவா? என்னுடைய அனைத்து வ்யாதிகளையும் நீக்கி உன்னிடம் பக்தி கொண்டவனாக மாற்ற வேண்டும். இதற்கான அன்பை நீயே உருவாக்க வேண்டும்.
***

1 தக்ஷ: விரிஞ்ச தநய: மனோ: தநூஜாம்
லப்த்வா ப்ரஸூதிம் இஹ ஷோடச ச ஆப கன்யா;
தர்மே த்ரயோதச ததௌ பித்ருஷு ஸ்வதாம் ச
ஸ்வாஹாம் ஹவிர்புஜி ஸதீம் கிரிசே த்வதம்சே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! ப்ரும்மாவின் புத்திரரான தக்ஷப் ரஜாதிபதி என்பவர் மநுவுடைய மகளான ப்ரஸூதி என்பவளை மணந்தார். அவள் மூலமாக பதினாறு பெண்களைப் பெற்றார். அந்தப் பெண்களில் பதின்மூன்று பெண்களை தர்ம தேவதைக்கு மணம் முடித்தாள். (இந்தப் பெண்கள் - ச்ரத்தா, மைத்ரீ, தயா, சாந்தி, துஷ்டி, புஷ்டி, க்ரியா, உன்னதி, புத்தி, மேதா, திதிக்ஷா, ஹ்ரீ, மூர்த்தி ஆகியன). ஸ்வதா என்பவளை அக்னி பகவானுக்கும், ஸதீ என்பவளை (இவளே தாக்ஷாயணி ஆவாள்) உன் அம்சமான சிவனுக்கும் மணம் செய்து கொடுத்தார் அல்லவா?

2 மூர்த்திர்ஹி தர்மக்ருஹிணீ ஸுஷுவே பவந்தம்
நாராயணம் நரஸகம் மஹிதாநுபவம்
யஜ்ஜந்மநி ப்ரமுதிதா: க்ருத தூர்ய கோஷா:
புஷ்போத்கராந் ப்ரவவ்ருஷு: நுநுவு: ஸுரௌகா:

**பொருள் -** குருவாயூரப்பனே! தக்ஷப்ரஜாதிபதியின் மகளான மூர்த்தி என்பவள் தர்மதேவதை மூலமாக மஹிமை உடைய உன்னையும், உனது இரட்டையான நரன் என்ற

தோழனையும் பெற்றாள். (இவர்களே நரநாராயணர்கள் ஆவர்) இதனைக் கண்டு மகிழ்ந்த தேவர்கள் மங்கல இசையை மீட்டி, மலர்களைத் தூவி உன்னை வரவேற்று வணங்கினர்.

3 தைத்யம் ஸஹஸ்ரகவசம் கவசை: பரீதம்
ஸாஹஸ்ர வத்ஸர தப: ஸமராபிலவ்யை:
பர்யாய நிர்மித தப: ஸமரௌ பவந்தௌ
சிஷ்டைக கங்கடம் அமும் ந்யஹதாம் ஸலீலம்

**பொருள் -** குருவாயூரப்பனே! நரநாராயணர்களாக அவதரித்த நீ மாறி மாறி தவமும் யுத்தமும் ஆயிரம் வருடம் செய்தாய் (நரன் தவம் செய்யும்போது நாராயணன் யுத்தம் செய்வதும், நாராயணன் தவம் செய்யும்போது நரன் யுத்தம் செய்வதும்). இது எதற்காக? ஆயிரம் கவசங்கள் கொண்ட ஸஹஸ்ரகவசன் என்ற அரக்கனை அழிக்கவே ஆகும். நீ செய்த ஆயிரம் வருட தவத்தால் ஒவ்வொரு கவசமாக அவிழ்ந்தது. இறுதியில் ஒரு கவசம் மட்டும் இருப்பவனாக அந்த அரக்கனை மாற்றி, அவனை ஒரு விளையாட்டாகவே நீ கொன்றாய்.

4 அந்வாசரன் உபதிசந் அபி மோக்ஷ தர்மம்
த்வம் ப்ராத்ருமான் பதரிகாச்ரமம் அத்யவாத்ஸீ:
சக்ர: அத தே சம தபோ பலநிஸ்ஸஹாத்மா
திவ்யாங்கநா பரிவ்ருதம் ப்ரஜிகாய மாரம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது சகோதரனான நரனுடன், நீ மோட்ச தர்மத்தைக் கைக்கொண்டும் உபதேஸித்துக் கொண்டும் பதரிகாச்ரமத்தில் வாசம் செய்து வந்தாய். உனது தவ வலிமையையும் இந்த்ரிய கட்டுப்பாடும் கண்டு பொறாமை கொண்ட இந்திரன், தேவமங்கையர் சூழ உன்னிடம் மன்மதனை அனுப்பினான் (உனது தவத்தைக் கலைக்க).

5 காம: வஸந்த மலயாநில பந்துசாலீ
காந்தா கடாக்ஷ விசீகை: விசஸத் விலாஸை:
வித்யந் முஹுர்முஹு: அகம்பம் உதீக்ஷ்ய ச த்வாம்
பீத: த்வயா அத ஜகதே ம்ருது ஹாஸ பஜா

**பொருள் -** குருவாயூரப்பனே! மன்மதன் தனது உறவினர்களான வஸந்த ருது மற்றும் மலயமாருதம் (தென்றல்) ஆகியோருடன் உன்னிடம் வந்தான். தேவப் பெண்களின் நடன அசைவுகளையும் கடைக்கண் பார்வைகளையும் உன்மீது அம்புகள் போன்று பலமுறை செய்தான். நீ அசையவே இல்லை. இதைக் கண்டு மனதில் பயம் கொண்டான். அப்போது மன்மதனைப் பார்த்து நீ புன்னகையுடன் பின்வருமாறு கூறினாய்.

6 பீத்யா அலம் அங்கஜ வஸந்த ஸுராங்கநா: வ:
மன்மானஸம் த்விஹ ஜுஷத்வம் இதி ப்ருவாண;
த்வம் விஸ்மயேந பரித: ஸ்துவதாம் அத ஏஷாம்
ப்ராதர்சய: ஸ்வ பரிசாரக காதராக்ஷீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! (நாராயணனின் தவத்தைக் கலைக்க மன்மதன் முதலானோர், அவர் சபித்து விடுவாரோ என்று பயந்து நின்றனர்). நீ அவர்களை நோக்கி, மன்மதனே! வஸந்தமே! தேவப் பெண்களே! நீங்கள் அஞ்சவேண்டாம். என்னுடைய மனதில் இருந்து தோன்றும் இவர்களைக் கவனியுங்கள் என்றாய். இப்படிக் கூறிவிட்டு உன்னைச் சுற்றி உனக்குத் தொண்டு புரிய நிற்கும் அழகிய கண்கள் படைத்தப் பெண்களை நீ காண்பித்தாய்.

7 ஸம்மோஹநாய மிலிதா: மதனாதய: தே
த்வத் தாஸிகா பரிமலை: கில மோஹம் ஆபு:
தத்தாம் த்வயா ச ஜக்ருஹு: த்ரபயைவ ஸர்வ
ஸவர்வாஸி கர்வ சமநீம் புன: ஊர்வசீம் தாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனக்கு மயக்கத்தை ஏற்படுத்த வந்த மன்மதன் முதலானோர் உன்னுடைய பணிப்பெண்களிடம் இருந்து வீசிய நறுமணத்தின் மூலம் மயங்கி நின்றார்கள் அல்லவா? இது தவிர, நீ அவர்களுக்கு சுவர்க்கத்தில் உள்ளவர்கள் கர்வத்தை அடக்கும் விதமாக ஊர்வசி என்பவளை கொடுக்க, அவர்களும் அவளை மிகவும் வெட்கத்துடன் ஏற்றனர் அல்லவா?

8 த்ருஷ்ட்வா ஊர்வசீம் தவ கதாம் ச நிசம்ய சக்ர:

பர்யாகுல: அஜநி பவன் மஹிமாவமர்சாத்
ஏவம் ப்ரசாந்த ரமணீய தராவதாராத்
த்வத்த: அதிக: வரத க்ருஷ்ணதநு: த்வமேவ

**பொருள் -** குருவாயூரப்பனே! இந்திரன் ஊர்வசியை நோக்கியும், உனது லீலைகளைக் கேட்டும் உனது மஹிமையை உணர்ந்தான். தனது தாழ்மையான செயலை எண்ணி மனவருத்தம் கொண்டான். வரதனே! சாந்தமும் அமைதியும் அழகும் உடைய இந்த அவதாரத்தை விட மேலானது என்றால் நீ எடுத்த க்ருஷ்ணாவதாரம் ஆகும். (க்ருஷ்ணனை விட மேலான அவதாரம் இல்லை என்கிறார்)

9 தக்ஷஸ்து தாது: அதிவாலனயா ரஜோந்த:
நாத்யாத்ருத: த்வயி ச கஷ்டம் அசாந்தி: ஆஸீத்
யேந வ்யருந்த ஸ பவத்துநுமேவ ஸர்வம்
யஜ்ஞே ச வைரபிசுனே ஸ்வஸுதாம் வ்யமாநீத்

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரும்மாவின் குணங்களை அதிகமாகக் கொண்டிருந்த அவன் மகன் தக்ஷப்ரஜாதிபதி ரஜோ குணம் அதிகமாக விளங்கியதால் தனது அறிவை இழந்தான். அதனால் உன்மீது பக்தி செலுத்தாமல், அமைதி இல்லாமல் இருந்தான். கஷ்டம்! இதனால் உன்னுடைய மற்றோர் அம்சமான சிவனைத் த்வேஷம் செய்தான். அந்த வெறுப்பைத் தனது யாகத்தில் வெளிப்படுத்தினான். தனது மகளும் சிவனின் பத்தினியுமான தாக்ஷாயணியை அவமதித்தான்.

10 க்ருத்தேச மர்தித மக: ஸ து க்ருத்த சீர்ஷோ
தேவ ப்ரஸாதித ஹராதத ஸப்த ஜீவ:
த்வத் பூரித க்ரதுவர: புன; ஆப சாந்திம்
ஸ த்வம் ப்ரசாந்திகர பாஹி மருத்புரேச

**பொருள் -** குருவாயூரப்பனே! (தனது மனைவியையும் தன்னையும் அவமதித்த காரணத்தினால்) சிவன் கோபம் கொண்டார். தக்ஷனின் யாகத்தையும் அழித்து, அவன் தலையையும் சீவினார். அதன் பின்னர் தேவர்களால் சமாதானப்படுத்தப்பட்ட சிவன் மூலமாகவே மீண்டும் உயிர் பெற்றான். அதன் பின்னர் உன்னால் யாகம் மேற்கொண்டு

மன அமைதியை மீண்டும் பெற்றான். இப்படியாக மன அமைதியை அளிப்பவனே! என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 உத்தாநபாத ந்ருபதே: மநுநந்தனஸ்ய
ஜாயா பபூவ ஸுருசி: நிதராம பீஷ்டா
அந்யா ஸுநீதி: இதி பர்த்து: அநாத்ருதா ஸா
த்வாம் ஏவ நித்யம் அகதி: சரணம் கதா அபூத்

**பொருள் -** மநுவின் மகனான உத்தானபாதன் என்பவனுக்கு இரு மனைவிகள் - ஸுருசி மற்றும் ஸுநிதி. இவர்களில் ஸுருசி என்பவள் மன்னனுக்கு மிகவும் விருப்பமானவளாக இருந்தாள். ஸுநிதி என்பவள் அவனால் நிராகரிக்கப்பட்டாள். இதனால் புகலிடம் இல்லாத அவள், உன்னையே சரணம் என்று புகுந்தாள்.

2 அங்கே பிது: ஸுருசி புத்ரகம் உத்தமம் தம்
த்ருஷ்ட்வா த்ருவ: கில ஸுநீதி ஸுத: அதிரோக்ஷ்யந்
ஆசிக்ஷிபே கில சிசு: ஸுதராம் ஸுருச்யா
துஸ்ஸந்த்யஜா கலு பவத்விமுகை: அஸுயா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! (ஒரு நாள்) ஸுநீதியின் மகனான துருவன் என்பவன் தன்னுடைய தந்தை மடி மீது ஸுருசியின் மகனான உத்தமன் அமர்ந்திருந்ததைக் கண்டான். இதனால் தானும் அமர. ஆவல் கொண்டான். அப்போது குழந்தை என்றும் பார்க்காமல் அவனை ஸுருசி கீழே தள்ளினாள். உன்னிடம் பக்தி செலுத்தாதவர்கள் தங்கள் பொறாமை குணத்தை விட இயலாது.

3 த்வன்மோஹிதே பிதரி பசியதி தாரவச்யே
தூரம் துருக்தி நிஹத: ஸ கத: நிஜாம்பரம்
ஸா அபி ஸ்வகர்மகதி ஸந்தரணாய பும்ஸாம்
த்வத்பாதம் ஏவ சரணம் சிசவே சசம்ஸ

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது மாயையினால் மனைவிக்கு வசப்பட்டவனாக இருந்த உத்தானபாதன், தனது மனைவியின் செயலைத் தடுக்கவில்லை. அவனது கடும் சொற்களால் மனம் உடைந்த துருவன் தன் தாயிடம் சென்றான். அவள் அவனிடம், நமது தீய வினைப்பயன்களைத் தடுக்க பகவான் பாதங்களையே நாட வேண்டும் என்று உபதேசம் செய்தாள் அல்லவா?

4 ஆகர்ண்ய ஸ: அபி பவதர்சன நிச்சிதாத்மா
மாநீ நிரேத்ய நகராத் கில பஞ்சவர்ஷ:
ஸந்த்ருஷ்ட நாரத நிவேதித மந்த்ரமார்க:
த்வாம் ஆரராத தபஸா மது கானநாந்தே

**பொருள் -** குருவாயூரப்பனே! துருவனுக்கு ஐந்து வயதே நிரம்பியிருந்த போதிலும் தனக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்க முடியவில்லை. அதனால் தன் தாய் கூறியதுபோல் உன்னைத் த்யானிக்க முடிவு செய்து அந்த நாட்டில் இருந்து வெளியில் கிளம்பினான். நடு வழியில் அவன் நாரதரைக் கண்டான். அவரிடம் இருந்த மந்திரங்களை உபதேசமாகப் பெற்றான். பின்னர் யமுனையின் கரையில் உள்ள மதுவனம் என்ற காட்டிற்குள் சென்று உன்னைக் குறித்து தவம் இயற்றினான் அல்லவா? (நாரதர் உபதேசித்த மந்திரம் - ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்பதாகும்)

5 தாதே விஷண்ண ஹ்ருதயே நகரீம் கதேந
ஸ்ரீ நாரதேந பரிஸாந்த்வித சித்த வ்ருத்தெள
பால: த்வதர்பிதமநா: க்ரம வர்த்திதேந
நிந்யே கடோர தபஸா கில பஞ்சமாஸான்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! துருவனைக் காணாமலும் அவனை அவமதித்ததாலும் அவன் தந்தை மிகவும் மனவருத்தப்பட்டான். அவனுடைய துக்கத்தை நாரத முனிவர் நகரத்திற்குச் சென்று விளக்கினார். சிறுவனான துருவன் உனது மீது முழுவதுமாகத் தனது மனதினைத் திருப்பி, நாளுக்கு நாள் தவம் வளர்ந்த விதமாக, மிகவும் கடுமையான தவத்தை ஐந்து மாதம் மேற்கொண்டான் அல்லவா?

6 தாவத் தபோபல ந்ருச்வஸிதே திகந்தே

தேவார்த்தித: த்வம் உதயத் கருணார்த்ர சேதா:
த்வத்ரூப சித்ரஸ நிலீனமதே: புரஸ்தாத்
ஆவிர்ப்பூவித விபோ கருடாதிரூட:

**பொருள் -** குருவாயூரப்பனே! துருவனின் மூச்சை அடக்கியவண்ணம் செய்த தவத்தினால் அனைத்துத் திசைகளில் உள்ளவர்களால் மூச்சுவிட இயலவில்லை. அப்படி அவர்கள் திணறியபோது தேவர்கள் உன்னிடம் வந்து வேண்டி நின்றனர். அவர்கள் வேண்டுகோளிலும் துருவனின் தவத்திலும் நீ மனம் நெகிழ்ந்தாய். உனது ஆனந்தமான ரூபத்தைத் தனது உள்ளத்தில் தரித்திருந்த துருவன் முன்பாக நீ கருடன் மீது அமர்ந்தபடி தோன்றினாய் அல்லவா?

7 த்வத் தர்சன ப்ரமத பார தரங்கிதம் தம்
த்ருக்ப்யாம் நிமக்னமிவ ரூபரஸாயநே தே
துஷ்டூஷமாணம் அவகம்ய கபோலதேசே
ஸம்ஸ்புருஷ்ட வாநஸி தரேண ததா ஆதரேண

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தரிசனம் கிடைக்கப் பெற்ற துருவன் ஆனந்தத்தினால் மயங்கி நின்றான். உனது அமிர்தம் போன்ற உருவத்தைக் கண்ட அவன் கண்களால் அதில் மூழ்கினான். உன்னைத் துதிக்கவும் எண்ணினான். (ஆனால் அவனுக்கு எப்படித் துதிப்பது என்று புரியவில்லை) இதனை உணர்ந்த நீ உனது பாஞ்சஜன்யத்தால் (சங்கு) அவனது கன்னங்களை மெதுவாக அன்புடன் தொட்டாய் அல்லவா?

8 தாவத் விபோத விமலம் ப்ரணுவந்தம் ஏநம்
ஆபா ஷதா: த்வம் அவகம்ய ததீய பாவம்
ராஜ்யம் சிரம் ஸமனுபூய பஜஸ்வ பூய;
ஸர்வோத்தரம் த்ருவ பதம் விநிவ்ருத்தி ஹீநம்

**பொருள் -** குருவாயூரப்பனே! (வேதவடிவான உனது சங்கு அவனைத் தொட்ட காரணத்தினால்) துருவனுக்கு ஞானம் பிறந்து தனது மாசுகள் நீங்கப்பெற்று உன்னைத் துதித்தான். அவன் உள்ளம் அறிந்த நீ (அவன் காட்டிற்கு வரும்போது நாடாளும் அரசனாக வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தான்) அவனிடம், துருவனே! நீ

நன்றாக ராஜ்ஜியத்தை ஆள்வாயாக! அதன் பின்னர் மறுபிறவி என்பது எடுத்துத் திரும்பி வராமல் உள்ள துருவபதம் என்பதை நீ அடைவாயாக! என் கூறினாய் அல்லவா?

9 இத்யூசுஷி த்வயி கதே ந்ருப நந்தன: அஸென
ஆநந்திதாகில ஜன: நகரீம் உபேத:
ரேமே சிரம் பவதநுக்ரஹ பூர்ணகாம;
தாதே கதே ச வநமாத்ருத ராஜ்யபர:

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக அவனுக்கு நல்வார்த்தைகள் கூறியபின் நீ சென்றுவிட்டாய். அதன் பின்னர் துருவன் மகிழ்வுடன் தன்னை வரவேற்ற மக்களைக் கொண்டவனாக தனது நாட்டிற்குத் திரும்பினான். உனது க்ருபையால் அவனுக்கு விருப்பப்பட்டவை அனைத்தும் நிறைவேறின. அவன் தந்தை தவம் செய்ய காட்டிற்குப் புறப்பட்டார். அப்போது துருவன் அரசாட்சியை ஏற்று நீண்ட காலம் அனுபவித்தான்.

10 யக்ஷேஷண தேவ நிஹதே புன: உத்தமே அஸ்மிந்
யக்ஷை: ஸ யுத்த நிரத: விரத: மனூக்த்யா
சாந்த்யா ப்ரஸன்ன ஹ்ருதயாத் தனதாத் உபேதாத்
த்வத் பக்தி மேவ ஸுத்ருடாம் அவ்ருணோத் மஹாத்மா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு முறை காட்டிற்கு வேட்டையாடச் சென்ற துருவனின் சகோதரன் (இளைய தாயின் மகன்) உத்தமனை யக்ஷன் ஒருவன் கொன்று விட்டான். அப்போது இதனைக் கேள்விப்பட்ட துருவன் யக்ஷர்களுடன் போர் புரியத் தொடங்கினான். ஆனால் அப்போது மனு துருவனிடம் தோன்றி போரை நிறுத்துமாறு அறிவுரை செய்தவுடன் போரை நிறுத்தினான். இதனைக் கண்டு மனம் மகிழ்ந்த யக்ஷர்களின் அரசனான குபேரன் துருவனிடம் வந்தான். அவனிடம் துருவன் என்றும் நீங்காமல் உள்ள பகவத் பக்தியே வேண்டும் என்று கேட்டான்.

11 அந்தே பவத்புருஷநீத விமானயாத:
மாத்ராஸமம் த்ருவபதே முதித: அயம் ஆஸ்தே
ஏவம் ஸ்வருப்தயஜன பாலன லோலதீ: த்வம்
வாதாலயாதிப நிருத்தி மம ஆமயௌகான்

**பொருள் -** குருவாயூரின் அதிபதியே! குருவாயூரப்பா! தனது ஆட்சியின் முடிவில் உனது தூதர்களால் அழைத்து வரப்பட்ட விமானத்தில் ஏறிக்கொண்டு, தனது தாயுடன் துருவ மண்டலத்தில் என்றும் ஆனந்தமாக உள்ளான். இப்படியாக உனது அடியார்களைக் காக்கும் மனம் படைத்த நீ, என்னுடைய வியாதிகளை நீக்க வேண்டும்.

***

1 ஜாதஸ்ய த்ருவ குல ஏவ துங்ககீர்த்தே:
அங்கஸ்ய வ்யஜனி ஸுத: ஸ வேனநாமா
யத்தோஷ வ்யதிதமதி: ஸ ராஜவர்ய:
த்வத்பாதே விஹிதமனா வனம் கத: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பனே! துருவனின் குலத்தில் தோன்றியவனும், மிகுந்த புகழைப் பெற்றவனும் ஆகிய அங்கன் என்பவனுக்கு வேனன் என்ற பெயர் கொண்ட மகன் பிறந்தான். வேனனுடைய தீய நடத்தையைக் கண்டு மனம் நொந்துபோன அங்கன், உன் திருவடிகளில் மனம் செலுத்தப்பட்டவனாகக் காட்டிற்குச் சென்றான் அல்லவா?

2 பாப: அபி க்ஷிதிதல பாலனாய வேன:
பவுராத்யை: உபநிஹித: கடோர வீர்ய:
ஸர்வேப்ய: நிஜபலமேவ ஸம்ப்ரசம்ஸன்
பூசக்ரே தவ யஜனானி அயம் ந்யரௌத்ஸீத்

**பொருள் -** குருவாயூரப்பனே! மிகவும் கொடூரமான வீரம் உடையவனாகவும், பாவத்தை உடையவனாகவும் வேனன் இருந்தான். அப்படி இருந்தபோதிலும் நாட்டை ஆளும் நிலைக்காக, அந்நாட்டு மக்களால் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டான். அவன் அனைவரிடமும் தனது வீரதீரங்களைப் பற்றியே புகழ்ந்து பேசியவண்ணம் இருந்தான். மேலும் உலகில் உனக்காக நடைபெறும் யாகங்கள் போன்றவற்றை தடை செய்தான்.

3 ஸம்ப்ராப்தே ஹித கதனாய தாபஸௌகே
மத்த: அன்ய: புவனபதி: ந கச்சன இதி
த்வந்நிந்தா வசன பரோ முனீச்வரை: தை:
சாபாக்னௌ சலபதசாம் அனாயி வேன:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு முறை வேனனுக்கு நல்ல உபதேசங்களைக் கூற முனிவர்கள் கூட்டமாக வந்தனர். அவர்களிடம், என்னைத் தவிர இந்த உலகின் நாயகன் யாரும் இல்லை என்றான். இது தவிர உன்னையும் தூற்ற ஆரம்பித்தான். இதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அவனை நெருப்பில் இட்ட விட்டில்பூச்சி போன்று அழித்தனர்.

4 தந்நாசாத் கல ஜன பீருகை: முனீந்த்ரை:
தன்மாத்ரா சிரபரி ரக்ஷித ததங்கே
த்யக்தாகே பரிமதிதாத் ஊருதண்டாத்
தோர்தண்டே பரிமதிதே த்வம் ஆவிராஸீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! தங்கள் சாபத்தால் வேனன் இறந்ததும் அவன் நாட்டைச் சேர்ந்த மக்களை எண்ணிய முனிவர்கள் பயந்தனர். வேனனின் தாய் அவனது உடலைப் பல நாட்கள் அப்படியே வைத்திருந்தாள். அவனது பாவங்களை நீக்குமாறு அவள் முனிவர்களிடம் வேண்டினான். அவர்கள் அவனது தொடையைக் கடைந்தனர். இதனால் அவன் பாவங்கள் நீங்கின. அப்போது அவன் கைகளில் இருந்து நீ தோன்றினாய்.

5 விக்யாத: ப்ருது; இதி தாபஸோ பதிஷ்டை:
ஸூதாத்யை: பரிணுதபாவி பூரிவீர்ய:
வேனார்த்யா கபலித ஸம்பதம் தரித்ரீம்
ஆக்ராந்தம் நிஜ தனுஷா ஸமாம் அகர்ஷீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ருது என்று பெயரும் புகழும் அடைந்த நீ எப்படி விளங்கினாய்? முனிவர்கள் பலரும் ஸூதர்கள் என்னும் ஸ்துதி பாடல்கள் பாடுபவர்களைக் கொண்டு உனது எதிர்கால லீலைகளைப் பாடப் பெற்றவனாக இருந்தாய். வேனனது கொடிய செயல்களால் அனைத்து வளங்களையும் பூதேவி மறைத்து வைத்திருந்தாள் மேடு பள்ளங்களாக உள்ள பூமியை கண்டு கோபம் கொண்ட நீ, உனது வில்லினால் அந்தப் பூமியை சமதரையாக்கினாய் அல்லவா?

6 பூய: தாம் நிஜகுல முக்ய வதஸயுக்தை:

தேவாத்யை: ஸமுசித சாரு பாஜநேஷு
அன்னாதீனி அபிலஷிதானி யானி தானி
ஸ்வச்சந்தம் ஸுரபிதநூம் அதூதுஹ: த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் பூமியானது காமதேனு போல் உருவம் கொண்டது. (அந்த பசுவில் இருந்த பாலை எடுக்க - வளங்களை எடுக்க) நீ உனது குலத்தில் உள்ள முக்கியமானவர்களைக் கன்றுகளாக மாற்றி, அவர்களுக்கு உரிய பாத்திரங்களில் அன்னம் போன்று அவரவர்க்கு எது தேவையோ அதனைக் கறந்து அளித்தாய் அல்லவா?

7 ஆத்மாநம் யஜதி மகை: த்வயி த்ரிதாமந்
ஆரப்தே சததமே வாஜிமேத யாகே
ஸ்பர்த்தாலு: சதமக ஏத்ய நீசவேஷ
ஹ்ருத்வா அச்வம் தவத நயாத் பராஜித: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பனே! மூன்று மூர்த்திகளான ப்ரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் உருவமே (த்ரிதாமன்)! ப்ருதுவான நீ பல அச்வமேத யாகங்களை இயற்றினாய். அதில் உன்னையே ஆராதனை செய்யும்படியும் செய்தாய். இப்படியாக நீ நூறாவது அச்வமேத யாகம் செய்யத் தொடங்கும்போது இந்த்ரன் ஒரு கேவலமான வேடம் தரித்து (நீசவேஷ) அங்கு வந்தான். அவன் உன்னுடைய யாகக் குதிரையை அபகரித்தான். அப்போது உனது மகனால் அந்தக் குதிரை மீட்கப்பட்டபோது, இந்திரன் தோற்றான். இதனால் அவனை (ப்ருதுவின் மகனை) விஜிதாச்வன் என்று அழைத்தனர்.

8 தேவேந்த்ரம் முஹு: இதி வாஜிநம் ஹரந்தௌ
வந்ஹௌ தம் முனிவர மண்டலே ஜுஹுஷௌ
ருந்தாநே கமல பவே க்ரதோ: ஸமாப்தௌ
ஸாக்ஷாத் த்வம் மதுரிபும் ஐக்ஷதா: ஸ்வயம் ஸ்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! தோற்கடிக்கப்பட்டான் என்றாலும் இந்திரன் மீண்டும் மீண்டும் யாகசாலைக்கு வந்து குதிரையை அபகரிக்க முயன்றான். இதனைக் கண்ட முனிவர்கள் கோபம் கொண்டு இந்திரனை யாகத்தீயில் அவிர்பாகமாக அளிக்க முடிவு

செய்தனர். அதனை ப்ரும்மா வந்து தடுத்தான். அப்போது நீ உன்னையே எங்கும் நிறைந்துள்ள மஹா விஷ்ணுவாகக் கண்டாய் அல்லவா?

9 தத்தத்தம் வரம் உபலப்ய பக்திம் ஏகாம்
கங்காந்தே விஹிதபத: கதாபி தேவ
ஸ்த்ரஸ்த்தம் முநிநிவஹம் ஹதாநி சம்ஸன்
ஜக்ஷிக்ஷ்டா: ஸனகமுகாந் முனீன் புரஸ்தாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! பக்தியை மட்டுமே மஹாவிஷ்ணுவிடம் இருந்து வரமாகக் கேட்டாய். பின்னர் கங்கை, யமுனையின் சங்கமத்தில் வசித்து வந்தாய். ஒரு சமயம் அங்கு ஸத்ர யாகம் நடத்திய முனிவர்களுக்கு நீ பலவும் உபதேசம் செய்தாய். அப்போது அங்கு வந்த ஸனகாதி முனிவர்களை நீ பார்த்தாய் அல்லவா?

10 விஜ்ஞானம் ஸனகமுகோதிதம் ததான:
ஸ்வாத்மாநம் ஸ்வயம் அகம: வநாந்த ஸேவீ
தத் தாக்ருக் ப்ருது வபு: ஈச ஸத்வரம் மே
ரோகௌகம் ப்ரசமய வாதகேஹ வாஸின்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஸநத்குமாரரால் உபதேசம் செய்யப்பட்ட ஞானத்தை நீ கைக்கொண்டு காட்டிற்குள் சென்று விட்டாய். அங்கு நீ ப்ரஹ்மத்தை உணர்ந்தாய். இப்படியாக ப்ருகுவின் உருவம் எடுத்தவனே! குருவாயூரில் உள்ளவனே! ஈசனே! எனது வ்யாதிகளை நீ சீக்கிரமாக நீக்க வேண்டும்.

***

1 ப்ருதோ: து நப்தா ப்ருது தர்ம கர்மட:
ப்ராசீன பர்ஹி: யுவதௌ சதத்ருதௌ
ப்ரசேதஸோ நாம ஸுசேதஸ: ஸுதாந்
அஜுஜனத் த்வத் கருணாங் குராநிவ

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ருதுவின் தர்மத்தை நழுவாமல் கடைப்பிடித்தவனும், தனது கர்மங்களை சரிவரச் செய்தவனும், ப்ருதுவின் பேரனுடைய மகனுமான (ப்ருதுவின் கொள்ளுப்பேரன்) விளங்கியவன் ப்ராசீன பர்ஹிஸ் என்ற அரசன் ஆவான். அவன்

சதத்ருதி என்பவள் மூலமாக, உனது கருணையே முளைவிட்டது போல், மிகுந்த ஞானம் படைத்த ப்ரசேதஸர்கள் என்னும் பெயர் கொண்ட பத்து குழந்தைகளைப் பெற்றான் அல்லவா?

2 பிது: ஸிஸ்ருக்ஷா நிரதஸ்ய சாஸநாத்
பவத்த பஸ்யா நிரதா தசாபி தே
பயோநிதிம் பச்சிமம் ஏத்ய தத்தடே
மனோஹரம் ஸந்தத்ருசு: ஸரோவரம்

**பொருள் -** குருவாயூரப்பனே! (இந்த உலகில் பல ப்ரஜைகளை உண்டாக்க வேண்டும் என்று) ஸ்ருஷ்டியில் (பல யாகங்கள் மூலமாக ஸ்ருஷ்டி) ஈடுபட்டிருந்த தங்கள் தந்தையான ப்ராசீன பர்ஹிஸின் சொல்லைக் கேட்டு, உன்னைக் குறித்துத் தவம் இயற்ற ப்ரசேதஸர்கள் பத்து பேரும் முடிவு செய்தனர். இதற்காக அவர்கள் மேற்கில் உள்ள கடலை அடைந்து, அங்கு அதன் கரையில், கண்டவர் மனம் கவரும் வகையில் அழகுடன் காணப்பட்ட சிறந்த குளம் ஒன்றைப் பார்த்தனர்.

3 ததா பவத் தீர்த்தம் ஸமாகத:
பவ பவத் ஸேவக தர்சனாத்ருத:
ப்ரகாசம் ஆஸாத்ய பர: ப்ரசேதஸாம்
உபதிசத் பக்த தம: தவ ஸ்தவம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த நேரத்தில் உன்னுடைய தீர்த்தமான அந்த குளத்திற்கு சிவன் வந்தார். உன்னுடைய பக்தர்களில் மிகவும் உயர்ந்தவரான சிவபெருமான் ப்ரசேதஸர்கள் முன்னால் நின்று அவர்களுக்கு ருத்ரகீதம் உபதேசித்தார். (இங்கு குறிப்பிடப்பட்ட குளமானது குருவாயூரில் உள்ள நாராயண சரஸ் என்பதில் ஐயம் இல்லை. அதிலும் குறிப்பாக இதம் என்ற பதம் இங்கு என்ற பொருளில் உள்ளது. நாராயண பட்டத்ரி அமர்ந்து எழுதிய இடம் குருவாயூர் என்பதால், அந்தக் குளம் குருவாயூரின் குளமே ஆகும்.)

4 ஸ்தவம் ஜபந்த: தம் அமீ ஜலந்தரே
பவந்தம் ஆஸே விஷத அயுதம் ஸமா:

பவத் ஸுகாஸ்வாத ரஸாத் அமீஷு இயான்
பபூவ கால: த்ருவவத் ந சீக்ரதா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அவர்களும் அந்த ருத்ர கீதத்தை குளத்தின் நடுவே நின்று கொண்டு பதினாயிரம் வருடமக ஜபித்தபடி உன்னை வணங்கினர். உனது ஆனந்தத்தில் இவர்கள் மூழ்கியபடி ஜபம் செய்ததால், துருவனைப் போன்று சீக்கிரமாக உனது தரிசனம் கிட்டவில்லை. (ருத்ர கீதம் என்பது நாராயணனைக் குறித்ததாகும். இது பலவிதமாக நாராயணனை வர்ணனை செய்து அவன் தரிசனம் கிட்ட வேண்டும் என்பதாகும்.)

5 தபோபி: ஏஷாம் அதிமாத்ர வர்திபி:
ஸ யஜ்ஞ ஹிம்ஸா நிரதோபி பாவித:
பிதாபி தேஷாம் க்ருஹயாத் நாரத
ப்ரதர்சிதாத்மா பவத் ஆத்மதாம் யயௌ

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்சேதஸர்களின் தவ மகிமை மிகவும் அதிகமாக விருத்தி பெற்றது. இதனால் யாகங்களைக் கெடுத்தவனாக விளங்கிய அவர்களின் மூதாதையர்களில் ஒருவனான வேனன் புனிதத்தன்மை அடைந்தான் (அவர்களின் தவத்தால்). அவர்கள் தந்தையான ப்ராஸீன, பர்ஹிஸ், தனது வீட்டிற்கு வந்த நாரதமுனிவர் மூலம் ஆத்ம உபதேசம் பெற்று, உன்னுடன் ஐக்கியமானார்.

6 க்ருபா பலேநைவ புர: ப்ரசேதஸாம்
ப்ரகாசமாகா: பதகேந்த்ர வாஹன:
விராஜி சக்ராதி வராயுதம் சுபி:
புஜாபி: அஷ்டாபி: உதஞ்சிதத்யுதி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது கருணையுடன் கருடனை வாகனமாக உடையவனும், சக்கரம் முதலான பல ஆயுதங்களின் ஒளியால் நன்கு விளங்கும் எட்டுத் திருக்கரங்களுடன் எங்கும் ஒளி வீசுபவனும் ஆகிய நீ அவர்களுக்குக் காட்சி அளித்தாய் அல்லவா?

7 ப்ரஸேதசாம் தாவத் அயாசதாம் அபி
த்வம் ஏவ காருண்ய பராத் வரான் அதா:
பவத் விசிந்தாபி சிவாய தேஹிநாம்
பவது அஸெள ருத்ரநுதிச்ச காமதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! (நீ முன்னால் நின்றபோதும் கூட) ப்ரசேதஸர்கள் உன்னிடம் எதுவும் வரங்களாகக் கேட்கவில்லை. ஆனாலும் உனது கருணையால் அவர்களுக்கு நீ வரங்களை அளித்தாய். அந்த வரங்கள் என்ன? ப்ரசேதஸர்களான உங்களை நினைப்பவர்களுக்கு அனைத்து மங்களங்களும் கிடைக்கும் என்றும் ருத்ரகீதத்தைப் படிப்பவர்களுக்கு வேண்டுவன கிட்டும் என்றும் நீ வரம் அளித்தாய்.

8 அவாப்ய காந்தாம் தனயாம் மஹீருஹாம்
தயா ரமத்வம் தசலக்ஷ வத்ஸாம்
ஸுத: அஸ்து தக்ஷ: நநு தத்க்ஷணச்ச
மாம் ப்ரயாஸ்யத இதி ந்யகதோ முதைவ தாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! வனதேவதைகளாக உள்ள மரங்களின் மகளான வர்க்ஷீ என்பவளை மனைவியாக நீங்கள் அடைவீர்கள். அவளுடன் பத்து லட்சம் வருடம் இன்பமாக இருப்பீர்கள். அவள் மூலமாக தக்ஷன் என்பவன் பிறப்பான். அந்த நேரத்தில் நீங்கள் என்னை வந்து அடைவீர்கள் என்றும் அவர்களை நோக்கிக் கூறினாய்.

9 ததச்ச தே பூதலரோதின: தரூன்
க்ருதா தஹந்த: த்ருஹிணேந: வாரிதா:
த்ருமை: ச தத்தாம் தனயாம் அவாப்ய தாம்
த்வதுக்த காலம் ஸுகிந: அபிரேமிரே

**பொருள் -** குருவாயூரப்பனே! (தவம் முடிந்து குளத்தை விட்டு மேலே வந்த ப்ரசேதஸர்கள் ) எங்கும் மரங்களாக உள்ளதைப் பார்த்தனர். (நடக்கக் கூட இடம் இன்றி இருந்தது). இதனால் கோபம் கொண்ட அவர்கள் மரங்களை தீயினால் அழிக்கத் தொடங்கினார்கள். அப்போது அவர்கள் ப்ரும்மாவால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனைக் கண்டு மகிழ்வுற்ற

மரங்கள் தங்கள் பெண்ணை ப்ரசேதஸர்களுக்கு மணம் செய்து கொடுத்தன. நீ குறிப்பிட்ட காலம் வரையில் அவர்களும் சுகமாக வாழ்ந்தனர்.

10 அவாப்ய தக்ஷம் ச ஸுதம் க்ருதாத்வரா:
ப்ரசேதஸ: நாரத லப்த்யா தியா
அவாபு: ஆனந்தபதம் ததாவித:
த்வம் ஈச வாதாலயநாத பாஹிமாம்

**பொருள் -** குருவாயூரின் நாதனே! க்ருஷ்ணா! உனது வரத்தின்படி தக்ஷனைத் தங்கள் மகனாகப் பெற்றனர். பலவிதமான யாகங்களை இயற்றினர். நாரதர் மூலமாக கிடைக்கப்பெற்ற ஞான உபதேஸம் மூலமாக பெரும் ஆனந்தம் பெற்றனர். அந்த ஆனந்தம் நிலைத்து உள்ள இடமான பரமபதத்தை அடைந்தனர். இத்தனை பெருமை உடைய நீ என்னைக் காக்க வேண்டும்.

***

1 ப்ரயவ்ரதஸ்ய ப்ரிய புத்ர பூதாத்
ஆக்நீத்ர ராஜாத் உதித: ஹி நாபி:
த்வாம் த்ருஷ்டவான் இஷ்டதம் இஷ்டி மத்யே
தவைவ துஷ்ட்யை க்ருதயஜ்ஞ கர்மா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! (மநுவின் மகன் ப்ரியவ்ரதன் என்பவன். இவன் துருவனின் தந்தையான உத்தானபாதனின் அண்ணன் ஆவான்). ப்ரியவ்ரதனின் மகனான ஆக்னீத்ரன் என்பவனின் மகன் நாபி என்பவன் ஆவான். இவன் உன்னை மகிழ்விக்கவே பல யாகங்கள் இயற்றினான். அப்போது அந்த யாகங்கள் நடுவில் கேட்பதைத் தருகின்ற உன்னைக் கண்டான் அல்லவா?

2 அபிஷ்டுத: தத்ர முனீஸ்வரை: த்வம்
ராஜ்ஞ: ஸ்வதுல்யம் ஸுதம் அர்த்யமான:
ஸ்வயம் ஜனிஷ்யே அஹம் இதி ப்ருவாண:
திரோதிதா: பர்ஹிஷி விச்வ மூர்த்தே

**பொருள் -** குருவாயூரப்பனே! விச்வத்தின் உருவமே! யாகத்தில் தோன்றிய முனிவர்கள் உன்னைப் பலவாக ஸ்தோத்ரம் செய்தனர். அவர்கள் உன்னிடம், அரசனான நாபிக்கு உன்னை ஒத்தது போல் ஒரு மகன் வேண்டும் என்று யாசித்தனர். (அவன் போல் வேண்டும் என்றால் நிகரில்லாத அவன்தானே வரமுடியும்) ஆகையால் நீ அவர்களிடம், நான் அப்படியே பிறக்கிறேன் என்று கூறி அக்னியில் (பர்ஹிஷி) மறைந்தாய் (திரோதா) அல்லவா?

3 நாபி ப்ரயாயாம் அத மேருதேவ்யாம்
த்வம் அம்சத: அபூ: ரிஷபாபிதான:
அலோக ஸாமான்ய குண ப்ரபாவ
ப்ரபாவிதாசேஷ ஜனப்ரமோத:

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் நீ நாபியின் அன்பு மனைவியான மேருதேவி என்பவளிடம் - இந்த உலகில் உள்ள மக்களிடத்தில் காணப்படாத குணங்களுடனும், பெருமைகளுடனும், அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும்படியான உன்னுடைய அம்சமான ரிஷபன் என்ற பெயர் கொண்டு தோன்றினாய்.

4 த்வயி த்ரிலோகீப்ருதி ராஜ்யபாரம்
நிதாய நாபி: ஸஹ மேருதேவ்யா
தபோவனம் ப்ராப்ய பவந்நிஷேவீ
கத: கில ஆனந்தபதம் தே

**பொருள் -** குருவாயூரப்பா! மூன்று உலகங்களையும் தாங்கி நிற்கும் உன்னிடம் (ரிஷபன்) தனது ராஜ்யத்தினை நாபி ஒப்படைத்தான். அதன் பின்னர் தனது மனைவியான மேருதேவியுடன் தவம் செய்ய காட்டிற்குச் சென்றான். அங்கு உன்னையே ஆராதனை செய்து கொண்டு, அதன் பிறகு உரிய காலத்தில், ஆனந்தம் நிரம்பியுள்ள உனது இடமான பரமபதத்தை அடைந்தான்.

5 இந்த்ர: த்வதுத்கர்ஷ க்ருதாத் அமர்ஷாத்
த்வவர்ஷ ந அஸ்மின் அஜநாபவர்ஷே
யதா ததா த்வம் நிஜயோக சக்த்யா

ஸ்வவர்ஷம் ஏனத் வ்யததா: ஸுவர்ஷம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ரிஷபதேவரான உன்னுடைய மகிமையையும் புகழையும் கண்டு இந்திரன் பொறாமை கொண்டான். இதனால் அஜநாபம் என்ற இந்தப் பூமியில் மழை பெய்வதை நிறுத்தினான். அப்போது நீ உன்னுடைய யோக சக்தியின் வலிமையால் மழையைப் பொழிய வைத்தாய் அல்லவா?

6 ஜிதேந்த்ர தத்தாம் கமநீம் ஜயந்தீம்
அத உத்வஹன் ஆத்ம ரதாசயோபி
அஜீஜன: தத்ர சதம் தநூஜாத்
ஏஷாம் க்ஷிதீச: பரத: அக்ர ஜன்மா

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னால் வெல்லப்பட்ட இந்திரன் மனம் திருந்தி தனது மகளான ஜெயந்தியை ரிஷபதேவரான உனக்கு மணம் முடித்தான். அவளுடன் நீயும் இன்பமாக விளங்கினாய். அவள் மூலமாக நூறு குழந்தைகள் பிறந்தன. அவர்களில் மூத்தவனான பரதன் என்பவன் பூமிக்கே அதிபதியாக ஆனான் அல்லவோ? (அவன் பெயரால்தான் நம் நாடு பாரதநாடு என்று அழைக்கப்படுகிறது).

7 நவ அபவான் யோகிவரா: ந அன்யே
தவ அபாலயன் பாரதவர்ஷ கண்டான்
ஸௌகா த்வசீதிஸ்தவ சேஷ புத்ரா:
தபோபலாத் பூஸுர பூயமீயு:

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது நூறு மகன்களில் ஒன்பது மகன்கள் மிகச் சிறந்த தவ யோகிகளாக விளங்கினர். (அவர்கள் - கவி, ஹரி, அந்தரிக்ஷன், ப்ரபுத்தன், ஆவிர்ஹோத்ரன், த்ரமிடன், சமசன் மற்றும் காபாஜனன் ஆகியோர்) மேலும் ஒன்பது மகன்கள் பரதவர்ஷத்தினைச் சேர்ந்த ஒன்பது கண்டங்களை ஆண்டனர். (அவர்கள்- குசாவர்த்தனன், இளாவர்த்தன், ப்ரம்மாவர்த்தன், மலயன், கேது, பத்ரசேனன், இந்த்ர ஸ்ப்ருக், விதர்ப்பன் மற்றும் சீகடன்). மீதம் உள்ள (எண்பத்து இரண்டு) மகன்களும் தவ வலிமையால் ப்ராமணன் ஆனார்கள் அல்லவா?

8 உக்த்வா ஸுதேப்ய: அத முனீந்த்ர மத்யே
விரக்தி பக்த்யான்வித முக்திமார்க்கம்
ஸ்வயம் கத: பாரம ஹம்ஸ்ய வ்ருத்திம்
அதா ஜடோன்மத்த பிசாச சர்யாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! முனிவர்கள் கூடியுள்ள சபையில் உனது மகன்களுக்கு (ரிஷபரான நீ) வைராக்யமும் பக்தியும் நிறைந்த முக்தி மார்க்கத்தை உபதேசம் செய்தாய் அல்லவா? அதன் பின்னர் முனிவர்கள் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு பித்தன், மூடன் போல் உலவி வந்தாய் அல்லவா?

9 பராத்ம பூதோபி பரோபதேசம்
குர்வன் பவான் ஸர்வ நிரஸ்யமான:
விகாரஹீனோ விசசார க்ருத்ஸ்னாம்
மஹீம் அஹீனாத்ம ரஸாபி லீன:

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ அனைத்து ஆத்மாக்களின் ரூபமாக இருந்த போதிலும் (ரிஷப தேவராக) அனைவருக்கும் உபதேசம் செய்து வந்தாய். நீ பித்தன் போன்று திரிவதைக் கண்ட மக்கள் உன்னை அவமானப்படுத்தினாலும் நீ எந்தவிதமான மாற்றமும் அடையாமல் ஆனந்தமாகத் திரிந்து வந்தாய்.

10 சயுவ்ரதம் கோம்ருக காகசர்யாம்
சிரம் சரன் ஆப்ய பரம் ஸ்வரூபம்
தவாஹ்ருதாங்க: குடகாசலே த்வம்
தாபான் மம அபாகுரு வாதநாத

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ மலைப் பாம்பு போன்றும், (மலைப்பாம்பு வ்ரதம் என்றால் - அசையாமல் இருந்து தான் உள்ள இடம் தேடி வரும் உணவை உட்கொள்வது) காகம், பசு, மான் (கைகளால் உணவு உண்ணுதல் போன்றவை அல்லாமல்) போன்றும் வாழ்ந்தாய். இதன் பின்னர் பரம்பொருள் உருவம் பெற்றாய். அதன் பின்னர் குடகு மலையில் உண்டான காட்டுத் தீயினால் உடல் எரிந்து. நீ என்னுடைய வேதனைகளை நீக்க வேண்டும்.

***

1 மத்யோத்பவே புவ: இளாவ்ருத நாம்னி வர்ஷே
கவுரீ ப்ரதான வனிதா ஜனமாத்ர பாஜி
சர்வேண மந்த்ரநுதிபி: ஸமுபாஸ்யமாநம்
ஸங்கர்ஷணாத்மகம் அதீச்வர ஸம்ச்ரயே த்வாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த பூமியின் மத்தியில் இளாவ்ருதம் என்ற பெயர் கொண்ட பூகண்டம் உள்ளது. அங்கு பார்வதி மற்றும் பெண்களே உள்ளனர். (இது ஒரு சாபமாகும். அங்கு நுழையும் ஆண்கள் பெண்களாக மாறிவிடுவர்) அவ்விடத்தில் உள்ள பரமேஸ்வரனான சிவன் பல்வேறு மந்திரங்கள் கொண்டு உன்னை ஆராதித்து வருகிறார். ஸங்கர் ஷணனின் ரூபமான உன்னை நான் சரணம் என்று புகுகிறேன்.

2 பத்ராச்வ நாமக இளாவ்ருத பூர்வ வர்ஷே
பத்ரச்ரவோயி: ரிஷிபி: பரிணூயமானம்
கல்பாந்தகூட நிகமோத்தரண ப்ரவீணம்
த்யாயாமி தேவி ஹயசீர்ஷனும் பவந்தம்

**பொருள் -** (இது ஹயக்ரீவரைக் குறித்ததாக உள்ளதால் படிக்கும் யாவருக்கும் சிறந்த கல்வி வளம் கிடைக்கப்பெறும் என்பது அடியேனது எண்ணம்). தேவர்களின் தேவனே! குருவாயூரப்பனே! இளாவ்ருத வர்ஷத்தின் கிழக்கில் உள்ள மற்றொரு வர்ஷம் பத்ராகவம் என்பதாகும். இங்கு உள்ள பத்ரச்ரவஸர்கள் என்னும் முனிவர்களால் போற்றப்படுபவரும், கல்பத்தின் முடிவில் மது என்ற அசுரன் ப்ரும்மாவிடம் இருந்து அபகரித்துச் சென்ற வேதங்களை மீட்டுக் கொடுத்த வல்லவரும், ஹயக்ரீவமாக உருவம் உடையவரும் (ஹயம் என்றால் குதிரை, க்ரீவம் என்றால் கழுத்து, ஆக குதிரையின் முகம் உடையவர்) ஆகிய உன்னைத் த்யானம் செய்கிறேன்.

3 த்த்யாயாமி தக்ஷிணகதே ஹரிவர்ஷ வர்ஷே
ப்ரஹ்லாத முக்ய புருஷை: பரிஷேவ்யமாணம்
உத்துங்க சாந்த தவளாக்ருதிம் ஏக சுத்த
ஞானப்ரதம் நரஹரிம் பகவன் ப்ரபத்யே

**பொருள் -** (இது நரஸிம்ஹப் பெருமாளைக் குறித்து உள்ளதாகும்). பகவானே! குருவாயூரப்பனே! இளாவ்ருத வர்ஷத்திற்குத் தெற்கில் உள்ள வர்ஷம் ஹரிவர்ஷம் என்பதாகும். அங்கு ப்ராஹ்லாதனைத் தலைமையாகக் கொண்ட பலராலும் வணங்கப்படுபவரும், உயர்ந்தும், சாந்தமாகவும், வெண்மையாகவும் உள்ள உருவம் உடையவரும், உயர்ந்த ஞானத்தை அளிப்பவருமானவரும், நரஸிம்ஹனாகவும் உள்ள உன்னிடம் சரண் அடைகிறேன்.

4 வர்ஷே ப்ரதீசி லலிதாத்மனி கேதுமாலே
லீலா விசேஷ லலித ஸ்மித சோபநாங்கம்
லக்ஷ்ம்யா ப்ரஜாபதி ஸுதைச்ச நிஷேவ்யமாணம்
தஸ்யா: ப்ரியாய த்ருத காமதநும் பஜே த்வாம்

**பொருள் -** (இது மஹாலக்ஷ்மியைக் குறித்த ஸ்லோகம் ஆகும். இதனைப் படிப்பவர்களுக்கு நல்ல கணவனும் தம்பதிகள் அன்யோன்யமாகவும் இருப்பார்கள்). குருவாயூரப்பனே! இளாவ்ருத வர்ஷத்திற்கு மேற்கில் உள்ள வர்ஷம் கேதுமாலம் என்பதாகும். இங்கு தனது லீலைகளாலும், புன்னகையாலும், ஒளிவீசும் உடலுடைய மஹாலக்ஷ்மியாலும், ப்ரும்மாவின் புத்திரர்களாலும் வணங்கப்படுவது யார்? அத்தகைய மஹாலக்ஷ்மிக்காக மன்மதனின் உருவம் உடையவனான பரம்பொருளே! அத்தகைய உருவம் உடைய உன்னை த்யானிக்கிறேன்.

5 ரம்யே உதீசிகலு ரம்யக நாம்னி வர்ஷே
தத்வர்ஷநாத மனுவர்ய ஸபர்யமாணாம்
பக்தைக வத்ஸலம் அமத்ஸர ஹ்ருத்ஸு பாந்தம்
மத்ஸ்யாக்ருதிம் புவநநாத பஜே பவந்தம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! விச்வத்தின் நாதனே! இளாவ்ருத வர்ஷத்தின் வடக்கில் உள்ள வர்ஷம் ரம்யகம் என்பதாகும். பெயருக்கு ஏற்றாற்போல் அழகான இடமாகும். அந்த இடத்தில், அந்த வர்ஷத்தின் அதிபதியான மனுவால் வணங்கப்படுபவரும், அடியார்களிடம் எப்போதும் ப்ரியமாக உள்ளவரும் பொறாமை குணம் இல்லாதவர்கள் மனதில் ப்ரகாசமாக உள்ள வரும். மச்ச (மீன்) உருவம் உடையவரும் ஆகிய உன்னை வணங்குகிறேன்.

6 வர்ஷம் ஹிரண்மய ஸமாஹ்வயம் ஔத்தராஹம்
ஆஸீனம் அத்ரி த்ருதி கர்மட காமடாங்கம்
ஸம்ஸேவதே பித்ருகணே ப்ரவர: அர்யமா அயம்
தம் த்வாம் பஜாமி பகவன் பரசின் மயாத்மன்

**பொருள் -** ஞானமே உருவாக உள்ள பகவானே! குருவாயூரப்பா! இளாவ்ருத வர்ஷத்தின் வடக்கில் உள்ள வர்ஷம் ஹிரண்மயம் என்பதாகும். அங்கு உள்ள மந்தர மலையைத் தாங்குபவரும், ஆமையின் உருவம் உடையவரும் ஆகிய உன்னை - பித்ருக்களில் தலை சிறந்தவரான அர்யமா ஆராதனை செய்து வருகிறார். இப்படிப்பட்ட உன்னை நான் வணங்குகிறேன்.

7 கிம்ச உத்தரேஷு குருஷு ப்ரியயா தரண்யா
ஸம்ஸேவிதே: மஹித மந்த்ரநுதி ப்ரபேதை:
தம்ஷ்ட்ராக்ர க்ருஷ்ட கனப்ருஷ்ட கரிஷ்ட வர்ஷ்மா
த்வம் பரஹி விஜ்ஞநுத யஜ்ஞவராஹ மூர்த்தே

**பொருள் -** உயர்ந்த ஞானம் உடையவர்களால் துதிக்கப்படும் வராஹமூர்த்தியே! குருவாயூரப்பனே! இளாவ்ருத வர்ஷத்தின் வடக்கே உள்ள வர்ஷம் உத்தரகுரு என்பதாகும். அங்கு உனது ப்ரியமான துணைவியான பூதேவி உன்னை ஸ்லோகங்களாலும், மந்திரங்களாலும் ஆராதித்து வருகிறாள். அவளால் ஆராதிக்கப்படும். தித்திப் பற்கள் மேகத்தின் அடிப்பகுதியைத் தொடும் அளவிற்கு பெருத்த உடல் உடையவரும் ஆன நீ என்னைக் காக்க வேண்டும்.

8 யாம்யாம் திசம் பஜதி கிம்புருஷாக்ய வர்ஷே
ஸம்ஸேவித: ஹநுமதா த்ருட பக்தி பாஜா
ஸீதாபிராம பரமாத்புக ரூபசாலீ
ராமாத்மக: பரிலஸன் பரிபாஹி விஷ்ணோ

**பொருள் -** விஷ்ணுவே! குருவாயூரப்பனே! இளாவ்ருத வர்ஷத்திற்குத் தெற்கில் உள்ள வர்ஷம் கிம்புருஷம் என்பதாகும். அங்கு மாறாத பக்தியுள்ள ஆஞ்சநேயரால்

வணங்கப்படுபவரும், சீதையின் மனதிற்கு மிகவும் பிரியமான இனிய அழகோடு உள்ள அற்புதமான உருவம் உடையவரும், ஸ்ரீராமனாகவும் உள்ள நீ என்னை காக்க வேண்டும்.

9 ஸ்ரீநாரதேந ஸஹ பாரத கண்ட முக்யை:
த்வம் ஸாங்க்ய யோகநுதிபி: ஸமுபாஸ்யமான:
ஆகல்பகாலம் இஹ ஸாது ஜநாபிரக்ஷீ
நாராயண: நரஸக: பரிபாஹி பூமன்

**பொருள் -** குருவாயூரப்பனே! எங்கும் உள்ளவனே! நீ இந்தப் பாரத கண்டத்தில் உள்ள சிறந்த ஞானிகளுடன் நாரதரும் சேர்ந்து யோகத்தாலும், மந்திரங்களாலும் உபாஸிக்கப்படுகிறாய். இப்படிப்பட்ட நீ ப்ரளயகாலம் முடியும்வரை இந்த உலகில் உள்ள அனைவரையும் காப்பாற்றி வருகிறாய். நரனைத் தோழனாகவும் நாராயணன் என்று பெயர் கொண்டவனும் ஆகிய நீ (நரநாராயணன்) என்னைக் காக்க வேண்டும்.

10 ப்லாக்ஷே அர்க்கரூபம் அயி சால்மல இந்துரூபம்
த்வீபே பஜந்த குசநாமனி வன்ஹிரூபம்
க்ரௌஞ்சே அம்புரூபம் அத வாயுமயம் ச சாகே
த்வாம் ப்ரஹ்மரூபம் அயி புஷ்கரநாம்னி லோகா

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னை - பிலக்ஷத்வீபத்தில் உள்ளவர்கள் சூர்யனாகவும் (அர்க்கரூபம்), சால்மல த்வீபத்தில் சந்திரனாகவும் (இந்துரூபம்), குசத்வீபத்தில் அக்னியாகவும் (வன்ஹிரூபம்), கிரௌஞ்ச த்வீபத்தில் நீராகவும் (அம்புரூபம்), சாகத்வீபத்தில் வாயுவாகவும், புஷ்கரத்வீபத்தில் ப்ரஹ்மமாகவும் வணங்குகின்றனர்.

11 ஸர்வை: த்ருவாதிபி: ஊருப்ரகரைப் க்ரஹை: ச
புச்சாதிகேஷு அவயவேஷு அலிகல்ப்யமானை:
த்வம் சிம்சுமாரவபுஷா மஹதாம் உபாஸ்ய:
ஸந்த்யாஸு ருந்தி நரகம் மம ஸிந்து சாயின்

**பொருள் -** திருப்பாற்கடலில் பள்ளி கொண்டவனே! குருவாயூரப்பனே! வாள் உள்பட பல உடல் உறுப்புகளில் துருவ நட்சத்திரம் உள்பட பல நட்சத்திரங்களும், கிரகங்களும்

கொண்டு, முதலை வடிவமாக உள்ளன. முனிவர்கள் சந்த்யாகால வேளையில் த்யானிக்கின்றனர். இப்படிப்பட்ட எனது நரகத்திற்கு இணையான வ்யாதியை நீக்க வேண்டும். (சிம்சு மாரம் என்பது முதலை என்பதாகும். இந்த உருவில் பரம்பொருள் ஆகாயத்தில் உள்ளான். அவனது உடலில் சூரியன், நட்சத்திரங்கள் போன்றவை உள்ளன. இப்படிப்பட்ட உருவத்தை சாயங்கால வேளையில் த்யானித்தால் நரகவேதனை அண்டாது. தனது வ்யாதிகளை நரக வேதனையாக பட்டத்ரி கூறுகிறார்.)

12 பாதாள மூலபுவி சேஷதனும் பவந்தம்
லோலைக குண்டல வராஜி ஸஹஸ்ரசீர்ஷம்
நீலாம்பலம் த்ருதஹலம் புஜகாங்கனாபி:
ஜுஷ்டம் பஜே ஹரகதான் குருகேஹ நாத

**பொருள் -** குருவாயூரப்பனே! க்ருஷ்ணா! பாதாள லோகத்தின் அடிப்பகுதியில் ஆதிசேஷனாக உள்ளவனே; ஆயிரம் தலைகள் கொண்டவனே; ஒரு குண்டலத்தின் மூலம் அனைத்து தலைகளும் பிரகாசிக்கும்படி உள்ளவனே. நீல நிற ஆடை உடுத்தியவனே; நாகலோகத்தில் உள்ள பெண்களால் வணங்கப்படுபவனே! உன்னை நான் வணங்குகிறேன் நோய்களை நீக்குவாயாக.

***

1 அஜாமினோ நாம மஹீஸுர: புரா
சரன் விபோ தர்மபதான் க்ருஹாச்ரமீ
குரோ கிரா கானனம் ஏத்ய த்ருஷ்ட்வான்
ஸுத்ருஷ்டசீலாம் குலாடம் மதாகுலம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முன்பு ஒரு காலகட்டத்தில் அஜாமிளன் என்ற ப்ராமணன் க்ருஹஸ்தனாக இல்லற தர்மத்தைச் செவ்வனே கடைபிடித்து வாழ்ந்து வந்தான். மிகவும் தர்மவானாக இருந்தான். ஒரு நாள் தந்தையின் சொல்லிற்கு இணங்க காட்டிற்குச் சென்றான். அங்கு வெட்கமே இல்லாதவளும், பிறந்த குலத்தால் அறிவில்லாதவளும் ஆகிய ஓர் விபசாரியைக் கண்டான்.

2 ஸ்வத: ப்ரசாந்தோபி ததாஹ்ருதா சய;
ஸ்வதர்மம் உத்ஸ்ருஜ்ய தயா ஸமாரமன்
அதர்மகாரீ தசமீ பவன்புன;

ததௌ பவந்நாமயுதே ஸுதே ரதிம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இயல்பாகவே தனது புலன்களை அடக்கத் தெரிந்தவனாக இருந்தாலும், அந்தப் பெண்ணால் தனது மனம் கவரப் பட்டான். இதனால் தன்னுடைய இல்லற தர்மங்களை விட்டு அவளுடன் சிற்றின்பம் அனுபவிக்கத் தொடங்கினான். தனது பத்தாவது தசையை அடைந்த பின்னரும் தீய செயல்களையே செய்து வந்தான். இருந்தாலும் உன் பெயர் கொண்ட நாராயணன் என்னும் மகன் மீது மிகவும் ஆசையாக இருந்தான்.

3 ஸ ம்ருத்யுகாலே யமராஜ கிங்கரான்
பயங்கரான் த்ரீன் அபிலக்ஷயன் பியா
புரா மனாக் த்வத் ஸ்ம்ருதிவாஸனா பலாத்
ஜுஹாவ நாராயண நாமகம் ஸுதம்

**பொருள் -** குருவாயூரப்பனே! வயதான நிலையில் இறக்கின்ற நேரத்தில் அஜாமிளன் கிடந்தான். அப்போது செய்த தீயசெயல்களின் காரணத்தால் அவன் உயிரை எடுக்க வந்த மூன்று யமதூதர்களைக் கண்டு அஞ்சினான். அப்போது தனது மகளான நாராயணனை, நாராயணா என்று அழைத்தான். இப்படி அந்த மகனுக்கு பெயர் வைத்ததும், இப்போது இந்த நேரத்தில் அவனை அழைத்ததும் இளவயதில் உன்னைக் குறித்து சிறிது அறிந்ததால் அல்லவா?

4 துராசயஸ்யாபி ததா த்வ நிர்கத
த்வதீய நாமாக்ஷர மாத்ர வைபவாத்
புர: அபிபேது: பவதீய பார்ஷதா:
சதுர்புஜா: பீதபடா மனோஹரா:

**பொருள் -** குருவாயூரப்பனே! அஜாமிளன் தீய எண்ணங்கள் உடைய மனது படைத்தவன். இருப்பினும் இப்போது அவன் வாயில் இருந்து வெளிவந்த உன்னுடைய நாமமான நாராயணா என்ற அக்ஷரங்கள் காரணமாக உனது தூதர்கள் அங்கு வந்தனர். அவர்கள் பட்டு ஆடை அணிந்தும் காண்பதற்கு இனியவர்களாகவும், நான்கு கரங்களுடனும் இருந்தனர்.

5 அமும் ச ஸம்பாச்ய விகர்ஷதோ படான்
விமுஞ்சதே இதி ஆருருது: பலாத் அமீ
நிவாரிதா: தே ச பவஜ்ஜனை: ததா
ததீயபாபம் நிகிலம் ந்யவேதயன்

**பொருள் -** குருவாயூரப்பனே! அஜாமிளனை யமதூதர்கள் தங்கள் பாசக்கயிற்றால் கட்டி முரட்டுத் தனமாக இழுப்பதை உனது தூதர்கள் கண்டனர். அவர்கள் யமதூதர்களிடம், அவனை விட்டு வாருங்கள் என்றனர். யமதூதர்கள் மறுக்கவே, அவர்களை உனது தூதர்கள் பலாத்காரமாக தடுத்தனர். அப்போது யமனின் தூதர்கள் அஜாமிளன் செய்த பாவங்களை உனது தூதர்களிடம் வரிசையாகக் கூறினர்.

6 பவந்து பாபானி கதம் து நிஷ்க்ருதே
க்ருதேபி போ தண்டனம் அஸ்தி பண்டிதா:
ந நிஷ்க்ருதி: கிம் விதிதா பவாத்ருசாம்
இதி ப்ரபோ த்வத் புருஷா பபாஷிரே

**பொருள் -** ப்ரபுவே! குருவாயூரப்பனே! உன்னுடைய தூதர்கள் யமனின் தூதர்களை நோக்கி, தர்மம் அறிந்தவர்களே (பண்டிதா)! அவன் பாவம் செய்தது உண்மையாகவே இருக்கட்டும். ஆனால் அந்தப் பாவங்களுக்கான பரிகாரம் செய்த பின்னரும், தண்டனை எப்படி உண்டாகும்? நீங்கள் பாவங்களுக்கும் பரிகாரம் உண்டு என்பதை அறியவில்லையா? என்று கூறினர்.

7 ஸ்ருதி ஸ்ம்ருதிப்யாம் விஹிதா வ்ரதாதய:
புனந்தி பாபம் ந லுனந்தி வாஸனாம்
அனந்த ஸேவா து நிகருந்ததி த்வயீம்
இதி ப்ரபோ த்வத்புருஷா பபாஷிரே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது தூதர்கள், சாஸ்திரங்களில் கூறப்பட்ட விரதங்கள் பாவத்தை மட்டுமே நீக்க வல்லன. ஆனால் அவை எதுவும் பாவத்தைத் தூண்டும் எண்ணங்களை (வாஸனை) நீக்குவதில்லை. பகவானின் நாம சங்கீர்த்தனம்

மற்றும் அவன் தரிசனமே பாவம், பாவம் செய்யும் எண்ணம் ஆகிய இரண்டையும் நீக்க வல்லது என்றனர்.

8 அனேன போ ஜன்ம ஸஹஸ்ர கோடிபி:
க்ருதேஷு பாபேஷு அபி நிஷ்க்ருதி: க்ருதா
யத் அக்ரஹுத் நாம பயாகுல ஹரே
இதி ப்ரபோ த்வத்புருஷா பபாஷிரே

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தூதர்கள் மேலும் யமதூதர்களே! இவன் தனது ஆயிரம் கோடி ஜன்மங்களில் செய்த பாவங்கள் கூட இப்போது செய்த பரிகாரத்தால் நீக்கப்பட்டது. என்ன பரிகாரம்? மரண பயத்தில் கலங்கி எப்போது ஹரியின் திருநாமத்தை உச்சரித்தானோ அதுவே பரிகாரம் ஆகும் என்றனர்.

9 ந்ருணாம் அபுத்யாபி முகுந்த கீர்த்தனம்
தஹதி அகௌகான் மஹிமா அஸ்ய தாத்ருச:
யதா அக்னி: ஏதாம்ஸி யதா ஔஷதம் கதான்
இதி ப்ரபோ த்வத் புருஷா பபாஷிரே

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தூதர்கள், நெருப்பு விறகுகளை எப்படி எரிக்கின்றதோ, மருந்தானது வ்யாதிகளை எப்படி நீக்குகின்றதோ அதுபோல் - மனிதர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்கள் அனைத்தும் முகுந்தனின் நாமத்தைக் கூறினான். எரிந்து விடும். இந்த நாமத்தின் மஹிமை அது என்றனர்.

10 இதீரிதை: யாம்யபடை: அபாஸ்ருதே
பவத்படானாம் ச கணே திரோஹிதே
பவத் ஸ்ம்ருதிம் கஞ்சன காலமாசரன்
பவத்பதம் ப்ராபி பவத் படை: அஸௌ

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக உனது தூதர்கள் கூறியதும் யமதூதர்கள் மறைந்தனர். உனது தூதர்களும் மறைந்தனர். அதன் பின்னர் அஜாமிளன் சிறிது காலம்

உன்னைத் தனது மனதில் த்யானம் செய்தான். இறுதியில் உனது தூதர் படையால் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான் அல்லவா?

11 ஸ்வகிங்கரா வேதன சங்கித: யம:
த்வதங்க்ரி பக்தேஷு ந கம்யதாம் இதி
ஸ்வகீய ப்ருத்யான் அசிசிக்ஷத் உச்சகை:
ஸதோ வாதாலயநாத பாஹிமாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தனது தூதர்கள் தன்னிடம் நடந்தவற்றைக் கூறக்கேட்ட யமன் அச்சம் கொண்டான். உனது திருவடிகளைப் பற்றியவரையும் நாம சங்கீர்த்தனம் செய்பவர்களையும் என்றும் அணுகக்கூடாது என்று தனது தூதர்களுக்கு உத்தர விட்டான். இத்தகைய பெருமையுடைய நீ என்னைக் காக்க வேண்டும்.
***

1 ப்ராசேதஸ: து பகவந் அபர: ஹி தக்ஷ:
த்வத் ஸேவநம் வ்யதித ஸர்க விவ்ருத்திகாம:
ஆவிர்பபூவித ததா லஸதஷ்டபாஹு:
தஸ்மை வரம் ததித தாஞ்ச வநூம் அஸிக்னீம்

**பொருள் -** குருவாயூரப்பனே! பகவானே! ப்ரசேதஸர்களின் மகனான தக்ஷன் அல்லாமல் வேறு ஒரு தக்ஷன் என்பவன் தனது குலத்தை வ்ருத்தியடைய வைப்பதற்காக உன்னைக் குறித்து ஹம்ஸகுஹ்யம் என்ற மந்திரத்தால் ஆராதனை செய்தான். இதனால் மகிழ்வுற்ற நீ அவன் முன்பாக எட்டுக் கைகளுடன் தோன்றினாய். அவனுக்கு வரம் அளிக்கும் வகையாக அஸிக்னீ என்ற பெண்ணை மனைவியாக அளித்தாய் அல்லவா?

2 தஸ்ய ஆத்மஜா: து அயுதம் ஈச புன: ஸஹஸ்ரம்
ஸ்ரீநாரதஸ்ய வசஸா தவ மார்க்கம் ஆபு;
நைகத்ர வாஸம் ருஷயே ஸ முமோச சாபம்
பக்த உத்தம: துருஷி: அநுக்ரஹம் ஏவ மேநே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தக்ஷனுக்கு முதலில் பத்தாயிரம் புதல்வர்களும் பின்னர் ஆயிரம் புதல்வர்களும் தோன்றினர். (இந்தப் பதினாயிரம் பேரும் ஹர்யச்வர்கள்

என்று அழைக்கப்பட்டனர்) (இங்கு ஒரு சிறு குறிப்பு காண்போம். இவர்களை ஸ்ருஷ்டித் தொழிலில் ஈடுபடுமாறு தக்ஷன் பணித்தான். அவர்களும் அதற்காக குருவாயூரில் உள்ள நாராயணசரஸ் குளத்தின் அருகே வந்தனர். குளத்தில் மூழ்கி எழுந்தவுடன் அவர்கள் எண்ணம் மாறிவிட்டது. அவர்களுக்கு மோக்ஷ உபாயம் எது என்று ஆராயும் மனம் ஏற்பட்டது).

அப்போது அங்கு வந்த நாரத முனிவரின் உபதேசம் கேட்டு அவர்கள் மோட்ச வழியை அடைந்தனர். இதனைக் கேள்விபட்ட தக்ஷன் கோபம் கொண்டு நாரதரை நோக்கி, உனக்கு நிலையான இடம் இல்லாமல் போகும் என்று சபித்தான். பக்தர்களில் உத்தமரான நாரதரும் அந்தச் சாபத்தை நன்மை என்றே கொண்டார்.

3 ஷஷ்ட்யா ததோ துஹித்ருபி: ஸ்ருஜத: குலெளகான்
தெளஹித்ர ஸூனு: அத தஸ்ய ஸ விச்வரூப:
த்வத் ஸ்தோத்ர வர்மிதம் அஜாபயந் இந்த்ரம் ஆஜெள
தேவ த்வதீய மஹிமா கலு ஸர்வஜைத்ர:

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் தக்ஷன் அறுபது பெண்களைப் பெற்று அவர்கள் மூலம் தனது வம்சத்தைப் பெருக்கினான். (அந்தப் பெண்கள் அதிதி, திதி போன்றவர்கள் ஆவர். இவர்கள் மூலம் மீன், பாம்பு, பல்லி, பசு, எருமை ஆகிய மிருகங்கள் உண்டானது). தக்ஷனின் பெண்வழிப்பேரன் விச்வரூபன் என்பவன் ஆவான். (இவன் திதி என்பவளின் மகனான த்வஷ்டாவிற்கும் ரசனை என்பவளுக்கும் பிறந்தவன்). இவன் இந்திரனுக்கு உனது மந்திரமான நாராயண கவசம் என்பதை உபதேசித்து இந்திரனை தேவாஸுர யுத்தத்தில் ஜெயிக்க வைத்தான். ஸ்ரீ அப்பனே! உனது வல்லமை அனைத்தையும் வெல்லும் அல்லவா? (நாராயண கவசம் என்பது நமது எதிரிகளிடம் இருந்து நம்மைக் காப்பதாகும்).

4 ப்ராக் சூரஸேன விஷயே கில சித்ரகேது:
புத்ராக்ரஹீ ந்ருபதி: அங்கிரஸ: ப்ரபாவாத்
லப்த்வா ஏக புத்ரம் அத தத்ர ஹதே ஸபத்னீ
ஸங்கை: அமுஹ்யத் அவச: தவ மாயயா அஸெள

**பொருள் -** குருவாயூரப்பனே! முன்பு ஒரு காலத்தில் சூரஸேன நாட்டை சித்ரகேது என்பவன் ஆண்டு வந்தான். மிகவும் புகழ் பெற்ற அவன் தனக்கு ஒரு மகன் வேண்டும் என்று எண்ணம் கொண்டான். அவன் அங்கிரஸ முனிவரின் வலிமையால் ஒரு மகனைப் பெற்றான். ஆனால் அந்த மகன் அரசனின் மற்ற மனைவிகளால் (பொறாமை காரணமாக) கொல்லப்பட்டான். அதனால் உனது மாயையால் அந்த அரசன் மிகவும் துக்கத்தை அடைந்தான்.

5 தம் நாரத: து ஸமம் அங்கிரஸா தயாலு:
ஸம்ப்ராப்ய தாவத் உபதர்ச்ய ஸுதஸ்ய ஜீவம்
கஸ்ய அஸ்மி புத்ர இதி தஸ்ய கிரா விமோஹம்
த்யக்த்வா த்வதர்ச்சன விதௌ ந்ருபதிம் ந்யயுங்கத

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த நேரத்தில் மிகவும் இளகிய மனம் படைத்த நாரதர், அங்கிரஸ முனிவரோடு அங்கு வந்தார். அந்த அரசனிடம் தனது யோக பலத்தால் இறந்த குழந்தையின் ஜீவாத்மாவைக் காண்பித்தார். பின்னர் அந்த ஜீவாத்மா, நான் யாருடைய குழந்தை? என்று கேட்கும்படி செய்தார். இதன் மூலம் அரசனின் அஞ்ஞானத்தை நீக்கி உனது ஆராதனையில் திருப்பினார்.

6 ஸ்தோத்ரம் ச மந்த்ரம் அபி நாரதத: அத ஸப்த்வா
தோஷாய சேஷவபுஷோ நநு தே தபஸ்யன்
வித்யாதர அதிபதிதாம் ஸ ஹி ஸப்த ராத்ரே
லப்த்வாபி அயகுண்டமதி: அன்வபஜத் பவந்தம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் சித்ரகேது நாரத முனிவரால் ஸ்தோத்ரத்தையும் மந்திரத்தையும் அறியப் பெற்றான். (நாரதர் உபதேசித்த ஸ்தோத்ரம் - ஓம் நமஸ்துப்யம் பகவதே வாஸுதேவாய தீமஹி ப்ரத்யும்னா யானிருத்தாய நம: ஸங்கர்ஷணாய ச - என்பதாகும். இதன் **பொருள் -** பகவானே! வாஸுதேவனான உனக்கு வணக்கங்கள்; ப்ரத்யும்னன், அநிருத்தன், ஸங்கர்ஷணன், ஆகியோராகத் தோன்றிய உனக்கு நமஸ்காரம்). (நாரதர் உபதேசித்த மந்திரம் - பகவதே மஹா புருஷாய மஹானுபவாவாய மஹா விபூதிபதயே ஸகல ஸாத்வத பரிவ்ருட நிகர கரகமல குட்மலோபலாலித சரணாரவிந்த யுகள பரம பரமேஷ்டின்னமஸ்தே). இதன் மூலம்

சித்ரகேது, ஆதிசேஷ உருவமாக உள்ள உனது மகிழ்வுக்காக கடுமையான தவம் புரிந்தான். இதனால் ஏழே நாட்களில் (வெறும் தண்ணீர் மட்டுமே குடித்து) வித்யாகரர்களுக்குத் தலைவனாக உள்ள பதவி பெற்றான். அப்படி உயர்பதவி பெற்ற பின்னரும் தனது அறிவு மயங்காமல் உன்னை வணங்கி வந்தான்.

7 தஸ்மை ம்ருணால தவலேன ஸஹஸ் ர சீர்ஷ்ணா
ரூபேண பத்த நுதி ஸித்த: கணாவ்ருதேந
ப்ராதுர்பவன் அசிரத நுதுபி: ப்ரஸந்ந:
தத்வா ஆத்ம தத்வம் அநுக்ருஹ்ய திரோததாத

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது நீ தாமரைத் தண்டு போன்று வெண்மையான ஆயிரம் தலைகளுடன் கூடியதும். புகழ்பாடும் சித்தர்கள் கூட்டம் சுற்றி நிற்பதுமான ஆதிசேஷன் உருவம் கொண்டாய். அத்தோற்றத்துடன் விரைவாக அரசன் முன்பு தோன்றினாய். அவனது துதிகளைக் கண்டு மகிழ்வுற்ற நீ அவனுக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசித்தாய் அல்லவா?

8 த்வத் பக்த மௌலிரத ஸோபி ச லக்ஷலக்ஷம்
வர்ஷாணி ஹர்ஷுலமனா: புவனேஷு காமம்
ஸங்காபயன் குணகணம் தவ ஸுந்தரீபி:
ஸங்காதிரேக ரஹித: லலிதம் சசார

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய பக்தர்களில் உயர்ந்தவனான சித்ரகேது உனது தரிசனத்தாலும் உபதேசத்தாலும் நிறைந்த மனம் அடைந்தான். உனது திருக்கல்யாண குணங்களை வித்யாதர பெண்கள் மூலம் பாடல்களாகப் பாடச் செய்தான். மேலும் இன்ப துன்பங்களில் பற்றில்லாமல் இந்த உலகில் பல லட்ச ஆண்டு உலவி வந்தான்.

9 அத்யந்த ஸங்க விலயாய பவத் ப்ரணுந்ந:
நூனம் ஸ ரூப்ய கிரிம் ஆப்ய மஹத் ஸமாஜே
நிச்சங்கம் அங்கக்ருத வல்லபம் அங்கஜாரிம்
தம் சங்கரம் பரிஹஸன் உமயா அபிசேபே

**பொருள் -** குருவாயூரப்பனே! ஒரு முறை சித்ரகேது வெள்ளியாக உள்ள கயிலாய மலைக்குச் சென்றான். அங்கு முனிவர்கள் சூழ்ந்துள்ள சபையில், சிறிதும் தயக்கம் இல்லாமல் தனது மடியில் பார்வதியை அமர்த்தியிருந்தவரும், மன்மதனை எரித்தவரும் ஆகிய சிவனை பரிகாசம் செய்தான். இதனால் அவன் பார்வதியால் சபிக்கப்பட்டான். ( பார்வதி அவனை அரக்கனாகப் பிறப்பாய் என்று சபித்தாள். அவனும் வ்ருத்ரன் என்ற அரக்கனாகப் பிறந்தான்) இப்படி நிகழ்ந்தும் சித்ரகேதுவிற்கு உலகப்பற்று நீங்கவேண்டும் என்று நீ எண்ணியதால் ஆகும்.

10 நிஸ்ஸம்ப்ர மஸ்த்வயம் அயாசித சாபமோக்ஷ:
வ்ருத்தாஸுரத்வம் உபகம்ய ஸுரேந்த்ரயோதீ
பக்த்யா ஆத்ம தத்வ கதநை: ஸமரே விசித்ரம்
சத்ரோ: அபி ப்ரமம் உபாஸ்ய கத: பதம் தே

**பொருள் -** குருவாயூரப்பனே! இதனால் சித்ரகேது சிறிதும் மனம் தளரவில்லை. அவன் பார்வதியிடம் சாபவிமோசனமும் வேண்டி நிற்கவில்லை. வ்ருத்ரன் என்ற அரக்கனாகப் பிறந்த அவன், இந்திரனுடன் யுத்தம் புரிந்தான். (யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது) தனது பக்தியாலும் ஆத்ம தத்துவ உபதேசத்தாலும் அவன் இந்திரனின் அஞ்ஞானத்தை நீக்கினான். இறுதியாக உனது இடமான வைகுண்டத்தைப் பெற்றான். (இவை அனைத்தையும் ஆச்சர்யம் (விசித்ரம்) என்கிறார்).

11 த்வத் ஸேவனேன திதி: இந்த்ர வதோத்யதாபி
தாந் ப்ரத்யுத இந்த்ர ஸுஹ்ருதோ மருத: அபிலேபே
துஷ்டாசயேபி சுபதைவ பவந்நிஷேவா
தத்தாத்ருச: த்வம் மாம் பவனாலயேச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்திரனைக் கொல்வதற்காக ஒரு மகனைப் பெற திதி (கச்ய ப்ரஜாதிபதியின் மனைவி) முடிவு செய்தாள். ஆனால் உன்னை அவள் வணங்கியதால் அந்தக் குழந்தை மருந்துகளாக மாறின. ஆக தீய எண்ணங்கள் மனதில் இருந்தாலும் உன்னை வணங்கினால் அவை மங்களகரமாக மாறி விடுகின்றன. இத்தனை பெருமை உடைய நீ என்னைக் காப்பாயாக!

***

1 ஹிரண்யாக்ஷே போத்ரி ப்ரவரவபுஷா தேவ பவதா
ஹதே சோக க்ரோத க்லபித த்ருதி: ஏதஸ்ய: ஸஹஜ:
ஹிரண்ய ப்ராரம்ப: கசிபு: அமராராதி ஸதஸி
ப்ரதிக்ஞாம் ஆதேனே தவ கில வதார்த்தம் மது ரிபோ

**பொருள் -** மது என்ற அரக்கனை அழித்தவனே! குருவாயூரப்பனே! நீ பெரிய பன்றியாக அவதாரம் எடுத்தபோது உன்னால் இரண்யாக்ஷன் கொல்லப்பட்டான். அப்போது கவலை, கோபம் ஆகியவற்றை அடைந்து அத்துடன் தைரியத்தையும் இழந்தவனும் ஹிரண்யாக்ஷனின் சகோதரனும். ஹிரண்ய என்ற பதத்தை முதலில் உடையவனும் ஆகிய கசிபு என்பவன். உன்னைக் கொல்வதாக தேவர்களின் பகைவர்களான அசுரர் நிரம்பிய சபையில் சபதம் செய்தான் அல்லவா?

2 விதாதாரம் கோரம் ஸ கலு தபஸித்வா நசிரத:
புர: ஸாக்ஷாத் குர்வன் ஸுரநர ம்ருகாத்யை: அநிதநம்
வரம் லப்த்வா த்ருப்தோ ஜகதிஹ பவந் நாயகம் இதம்
பரிக்ஷுந்தந் இந்த்ராத் அஹரத திவம் த்வாம் அகணயந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த இரண்யகசிபு என்பவன் தனது கடுமையான தவத்தால் ப்ரும்மாவைத் தனக்கு முன்பாகத் தோன்றும்படி செய்தான். அவன் ப்ரும்மாவிடம் இருந்த தனக்கு தேவர்கள், மனிதர்கள், மற்றும் விலங்குகளால் மரணம் உண்டாகக்கூடாது என்று வரம் பெற்றான். இதனால் மிகுதியான கர்வம் அடைந்த அவன், உன்னை மதிக்காமல், உன்னை மதிக்கும் இந்த உலகத்தை துன்புறுத்தினான். மேலும் இந்திரனிடம் இருந்து தேவலோகத்தையும் கைப்பற்றினான்.

3 நிஹந்தும் த்வாம் பூயஸ்த்வ பதம் அவாப்தஸ்ய ச ரிபோ:
பஹிர் த்ருஷ்டே அந்தர்ததித ஹ்ருதயே ஸூக்ஷ்ம வபுஷா
நதன் உச்சை: தத்ராபி அகில புவனாந்தேச ம்ருகயந்
பியா யாதம் மத்வா ஸ கலு ஜிதகாசீ நிவவ்ருதே

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னை அழிப்பதற்காகவே உனது இருப்பிடமான வைகுண்டத்திற்கு வந்து உன்னைத் தேடினான். அவன் உன்னை வெளியில் தேடியபோது நீ அவனது மனதினுள் சூட்சும உருவம் எடுத்து மறைந்தாய். வைகுண்டத்தில் மட்டும் அல்லாது அனைத்து உலகங்களிலும் உன்னைத் தேடிய இரண்யகசிபு உரத்த சத்தத்தில் கர்ஜனை செய்து, நீ பயந்து ஓடிவிட்டாய் என்று முடிவு செய்து தனது இடத்திற்கு மகிழ்வுடன் திரும்பினான்.

4 தத: அஸ்ய ப்ரஹ்லாத: ஸமஜனி ஸுதோ கர்பவஸதௌ
முனே: வீணாபாணே: அதிகத பவத் பக்தி மஹிமா
ஸவை ஜாத்யா தைத்ய: சிசுரபி ஸமேத்ய த்வயி ரதிம்
கத: த்வத் பக்தானாம் வரத பரமோதா ஹரணதாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வரங்கள் அளிப்பவனே! இரண்யகசிபுவுக்கு ப்ரஹ்லாதன் என்னும் மகன் தோன்றினான். இவன் தனது தாயின் கர்ப்பத்தில் உள்ளபோதே உன்னுடைய பெருமைகளை உபதேசமாக அறிந்தான். யார் மூலமாக? வீணையை எப்போதும் கைகளில் உடையவரான நாரதர் மூலமாக ஆகும். அந்தச் சிறுவன் அசுரர் பிறப்பு எடுத்திருந்தாலும் உன் மீது மிகுந்த பக்தி உடையவனாக, பக்தர்களுக்கு ஓர் உதாரணமாக இருந்தான்.

5 ஸுராரீணாம் ஹாஸ்யம் தவ சரண தாஸ்யம் நிஜஸுதே
ஸ த்ருஷ்ட்வா துஷ்டாத்மா குருபி: அசிசிக்ஷத் சிரம் அமும்
குரு ப்ரோக்தம் ச அஸௌ இதம் இதம் அபராத்ய த்ருடமிதி
அபாகுர்வான் ஸர்வம் தவ சரண பக்தயைவ வவ்ருதே

**பொருள் -** குருவாயூரப்பனே! கெட்ட குணம் படைத்த அந்த இரண்யகசிபு, தேவர்களின் விரோதிகளான அசுரர்கள் பரிகாசம் செய்யும் உனது திருவடிகளின் மீது தன் மகன் கொண்ட பக்தியைக் கண்டு கோபம் கொண்டான். ப்ரஹ்லாதனின் மனதை மாற்றும் பாடங்களை கற்றுத்தர ஆசான்களுக்கு உத்தரவிட்டான். அத்தகைய ஆசான்கள் உபதேசித்த பாடங்கள் நிரந்தர பயன் அளிக்காதவை என்று முடிவு செய்த ப்ரஹ்லாதன், உனது திருவடியே சிறந்தது என்று தனது பக்தியை மேம்படுத்தினான்.

6 அதீதேஷுச்ரேஷ்டம் கிம் இதி பரிப்ருஷ்டேத தனயே
பவத் பக்திம் வர்யாம் அபி கதிதி ப்ர்யாகுலத்ருதி:
குருப்யோ ரோஷித்வா ஸஹஜமதிர: அஸ்ய இதி அபிவதன்
வதோ பாயான் அஸ்மின் வ்யதனுத பவத்பாத சரணே

**பொருள் -** குருவாயூரப்பனே! ஒரு நாள் இரண்யகசிபு, ப்ரஹ்லாதனிடம், நீ கற்றவற்றுள் சிறந்தது எது? என்று வினவினான். அதற்கு ப்ரஹ்லாதன் பகவானிடம் கொண்ட பக்தியே சிறந்து உள்ளது என்றான். இதனால் மனவருத்தம் உண்டான இரண்யன் ஆசான்களிடம் கோபம் கொண்டான். அவர்களிடம் இருந்த ப்ரஹ்லாதனின் இந்த பக்தி கடந்த ஜென்மம் மூலமாக வந்தது என்று உணர்ந்தான். உன்னைச் சரண் பற்றிய ப்ரஹ்லாதனைக் கொல்லவும் திட்டம் செய்தான்.

7 ஸ சூலை: ஆவித்த: ஸபஹுமதித: திக்கஜகணை:
மஹாஸர்பைர் தஷ்ட: அபி அனசன கராஹார விதுத:
கிரீந்த்ராவக்ஷிப்தோம் யஹஹ பரமாத்மந்நயி விபோ
த்வயி ந்யஸ்தாத்மத்வாத் கிமபி ந நிபீடாவபஜத்

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரமாத்மாவே! (ப்ரஹ்லாதனுக்கு என்ன நடந்தது?) சூலம் என்னும் ஆயுதத்தால் துன்புறத்தப்பட்டான்: யானைகளால் மிதிக்கப்பட்டான்; பெரிய நச்சுப் பாம்புகளால் தீண்டப்பட்டான்; நஞ்சு கலந்த உணவு அளிக்கப்பட்டான்; உயரமான மலையில் இருந்து கீழே தள்ளப்பட்டான். இத்தனை துன்பங்கள் இழைக்கப்பட்டவனாக இருப்பினும், உனது திருவடியில் மனதைத் திருப்பியதால் அவன் துன்பமே படவில்லை அல்லவா? என்ன ஆச்சர்யம்!

8 தத: சங்காவிஷ்ட: ஸ புன: அதிதுஷ்ட: அஸ்ய ஜநக:
குரூக்த்யா தத்கேஹே கில வருணபாசை: தம் அருணத்
குரோஸ்ச அஸாந்நித்யே ஸ புன: அனுகான் தைத்ய தநயாந்
பவத் பக்தே: தத்வம் பரமம் அபி விஜ்ஞாநம் அசிஷத்

**பொருள் -** குருவாயூரப்பா! இத்தனை நடந்த பிறகும் ப்ரஹ்லாதன் மாறாமல் இருப்பது கண்டு அவனால் தனக்கு ஏதேனும் நேர்ந்திடும் என்று சந்தேகம் கொண்டான். அதனால்

ஆசான்களின் சொல்லைக் கேட்ட அவன், ப்ரஹ்லாதனைத் தனது மாளிகையில் பாசக்கயிற்றால் கட்டிப்போட உத்தரவிட்டான். ஆனால் ஆசான்கள் இல்லாத நேரம் ப்ரஹ்லாதன் தன்னுடன் உள்ள அசுரர்களுக்கு உன்னிடம் உள்ள பக்தியின் தன்மையையும் ப்ரஹ்ம ஞானத்தையும் உபதேசம் செய்தான்.

9 பிதா ச் ருண்வன் பால ப்ரகரம் அகிலம் த்வத் ஸ்துதிபரம்
ருஷாந்த: ப்ராஹைநம் குலஹதக க: தே பலம் இதி
பலம் மே வைகுண்ட: தவச ஜகதாம் சாபிஸ பலம்
ஸ ஏவ த்ரைலோக்யம் ஸகலம் இதி தீர: அயம் அகதீத்

**பொருள் -** குருவாயூரப்பா! அசுரர் கூட்டத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் (ப்ரஹ்லாதனால்) உன்னை உபதேசிக்கத் தொடங்கினர் என்பதை இரண்யகசிபு கேள்விப்பட்டான். மிகுந்த கோபத்துடன் அவன் ப்ரஹ்லாதனிடம், அசுர குலத்தை அழிப்பவனே! உனக்கு பலமாக உள்ளவன் யார்? என்றான். அதற்குப் ப்ரஹ்லாதன் மிகவும் துணிவுடன், எனக்குப் பலமாக உள்ளவன் வைகுண்டநாதன் ஆகிய நாராயணன், உனக்கு பலமாக உள்ளவன் அவனே, மூன்று உலகிற்கும் அவனே அனைத்தும் என்றான் அல்லவா?

10 அரே க்வ அஸௌ க்வ அஸௌ ஸகல ஜகதாத்மா ஹரிரிதி
ப்ரபிந்தே ஸ்ம ஸ்தம்பம் சலித கரவாள: திதி ஸுத:
அத: பச்சாத் விஷ்ணோ ந ஹி வதிதும் ஈச: அஸ்மி ஸஹஸா
க்ருபாத்மந் விச்வாத்மந் பவநபுரவாஸிந் ம்ருடயமாம்

**பொருள் -** கருணை பொங்கும் மனம் உள்ளவனே! உலகின் நாயகனே! குருவாயூரில் உள்ளவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மிகுந்த கோபம் கொண்ட இரண்யகசிபு, அடேய் ப்ரஹ்லாதா! அனைத்து உலகிலும் உள்ளவன், அவனே ஆத்மா என்று நீ கூறும் அந்த ஹரி எங்கே? எங்கே அவன்? என்று உரக்கக் கூவினான். கைகளில் உருவிய கத்தியுடன் அங்கு உள்ள தூண் மீது பலமாக அடித்தான். அதன் பிறகு என்ன நடந்தது என்பதைக் கூற எனக்கு சக்தி இல்லை, அச்சமே உள்ளது.

***

1 ஸ்தம்பே கட்டயத ஹிரண்யகசிபோ:

கர்ணௌ ஸமாகூர்ணயந்
ஆகூர்ணத் ஜகதண்டகுண்ட குஹர:
கோர: தவ அபூத் ரவ:
சிருத்வா யம் கில தைத்ய ராஜஹ்ருதயே
பூர்வம் கதாபி அச்ருதம்
கம்ப: கச்சந ஸம்பபாத சலித: அபி
அம்போஜபூர் விஷ்டராத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தூணில் இரண்யகசிபு தனது கத்தியால் அடித்தான். உடனே அவன் காதுகளைக் கிழிப்பது போன்றும் அண்டங்கள் அனைத்தும் நடுங்குவது போன்றும் ஒரு பயங்கரமான கர்ஜனை உண்டானது. இதற்கு முன்பு இப்படி ஓர் ஓசையைக் கேட்காத அசுரர் தலைவனான இரண்யனின் மனதில் ஏற்பட்ட நடுக்கத்தைச் சொற்களால் கூற இயலாது. இந்த ஓசையைக் கேட்ட ப்ரும்மாவே தனது ஆசனத்தில் நழுவினார் அல்லவா?

2 தைத்யே திக்ஷு விஸ்ருஷ்ட
சக்ஷுக்ஷி மஹா ஸம்ரம்ப்பிணி ஸ்தம்பத:
ஸம்பூதம் ந ம்ருகாத்மகம் ந
மநுஜாகாராம் வபுஸ்தே விபோ
கிம் கிம் பீஷணம் ஏதத் அத்புதம் இதி
வ்யுத்ப்ராந்த சித்தே அஸுரே
விஸ்பூர்ஜத் தவலோக்ர ரோம விகஸத்
வர்ஷ்மா ஸமாஜ்ரும்பதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த ஓசை எங்கிருந்து வருகிறது என்று தனது கண்களை நான்கு திசைகளிலும் சுழற்றிப் பார்த்தான். அப்போது மிருக வடிவமோ மனித வடிவமோ அல்லாத உனது உருவம் அந்தத் தூணில் இருந்த வெளிவந்து. உன்னைக் கண்ட இரண்யன் அச்சத்துடன். என்ன இது! என்ன இது! பயங்கரமாகவும் வியப்பாகவும் உள்ளதே என்று தனது மனம் கலங்கி நின்றான். அடர்த்தியாகவும் வெண்மையாகவும் இருந்த பிடரி முடிகளால் ஒளி வீசும் உடலை உடையவனாக நீ மேலும் மேலும் வளர்ந்தாய் அல்லவா?

3 தப்த ஸ்வர்ண ஸ்வர்ண கூர்ணத்

அதிரூக்ஷ அக்ஷம் ஸடாகேஸர
ப்ரோத்கம்ப ப்ரநிகும்பித அம்பரம்
அஹோ ஜீயாத் தவேதம் வபு;
வ்யாத்த வ்யாப்த மஹாதரீஸக முகம்
கட்க உக்ர வல்கத் மஹா
ஜிஹ்வா நிர்கம த்ருச்யமான ஸுமஹா
தம்ஷ்ட்ராயுக உட்டாமரம்

பொருள்; குருவாயூரப்பனே! உனது கண்கள் உருக்கிய தங்கம் போல் ஒளியுடன் உடையதாகவும் சுழன்று விளங்குவதாகவும் பயங்கரமானதாகவும் இருந்தன; பிடரி மயிர்கள் அசைவதால் ஆகாயமே மறைக்கப்பட்டது; திறந்து காணப்பட்ட உனது வாய் பெரிய குகை போல் இருந்தது. நாக்கு கத்தி போன்று பயங்கரமாக நீண்டு இருந்தது; நாக்கு வெளியே வரும்போது தெரிந்த இரண்டு முன் பற்களும் பயங்கரமாக விளங்கின. ஸ்ரீ அப்பனே! இத்தனை வியப்புடன் கூடிய உன்னுடைய திருமேனி என்றும் சிறந்து இருப்பதாக!

4 உத்ஸர்பத் வலிபங்க பீஷண
ஹநும் ஹ்ரஸ்வ ஸ்தவீயஸ்தர
க்ரீவம் பீவர தோச்சத உத்கத நக
க்ரூராம்சு தூரோல்பணம்
வ்யோமோல்லங்கி கநாகநோபம
கனபரத்வான நிர்தாவித
ஸ்பர்த்தாலு ப்ரகரம் நமாமி பவதஸ்தம்
நாரஸிம்ஹம் வபு;

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ கர்ஜனை செய்யும்போது உன் கன்னத்தில் காணப்படும் சதைகளால் மோவாய்க்கட்டை பயங்கரமாக காட்சி தருகிறது. கழுத்து குட்டையாகவும் அகலமாகவும் உள்ளது; உருண்டையாக பருத்த ஆயிரம் கைகளில் இருந்து வெளியில் நீண்ட நகங்கள் பளீரென்று ஒளிவீசி பயங்கரமாக உள்ளன; மழை மேகங்களில் உள்ள கனமான இடி ஓசை போன்று எழும் கர்ஜனை; இதனால் விரட்டப்பட்ட அசுரர் கூட்டம் - இப்படியாக உள்ள உனது நரஸிம்ஹ உருவத்தை நான் வணங்குகிறேன்.

5 நூனம் விஷ்ணு: அயந் நிஹன்மி அமும்
இதி ப்ராம்யத் கதாபீஷணம்
தைத்யேந்தரம் ஸமுபாத்ரவந்தம் அத்ருதா
தோர்ப்யாம் ப்ருதுப்யாம் அமும்
வீர: நிர்கலித: அத கட்க பலகே
க்ருஹ்ணந்த விசித்ர ச்ரமாந்
வ்யாவ்ருண்வன் புன: ஆபபாத: புவந
க்ராஸ்யோத்யதம் த்வாம் அஹோ

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னைக் கண்ட இரண்யன், இவன் நிச்சயமாக விஷ்ணுதான், இவனைக் கொல்கிறேன் பார் என்று கத்தினான். உன்னருகில் ஓடிவந்த அவன் கைகளில் பார்ப்பவரை பயமுறுத்தும் வண்ணம் கதாயுதம் இருந்தது. அவனை நீ உனது பெரிய கரங்களால் பிடித்தாய். ஆனால் அவன் நழுவிவிட்டான். பின்னர் கத்தி மற்றும் கேடயம் ஆகியவற்றைத் தனது கைகளில் ஏந்தியபடி வித்தியாசமான தாக்குதல்களை வெளிக்காட்டினான். உலகையே உண்டு உமிழ்ந்த உன்னை நோக்கி மறுபடியும் தாக்க ஓடிவந்தான்.

6 ப்ராம்யந்தம் திதிஜாதமம் புனரபி
ப்ரோத்க்ருஹ்ய தோர்ப்யாம் ஜவாத்
த்வாரே அத ஊருயுகே நிபாத்ய நகரான்
வ்யுதகாய வக்ஷோ புவி
நிர்பிந்தன் அதிகர்ப நிர்பர
களத்ரத்காம்பு பத்தோத்ஸவம்
பாயம் பாயம் உனதரய: பஹுஜகத்
ஸம்ஹாரி ஸிம்ஹாரவான்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை நோக்கி வந்த அந்த அசுரனை மறுபடியும் உனது கைகளால் நீ பிடித்தாய். அவனைத் தூக்கிச் சென்று சபையின் வாயிற்படிகளில் அமர்ந்து உனது இரு தொடைகள் மீது படுக்க வைத்தாய். பின்னர் அவன் மார்பை உனது கை நகங்களால் கிழித்தாய். அப்போது வயிற்றில் இருந்து வெளியேறிய இரத்தத்தை உற்சாகம் தோன்றக் குடித்தாய். பின்னர் உலகமே நடுங்கும் வகையில் கர்ஜனை செய்தாய் அல்லவா?

7 த்யக்த்வா தம் ஹதம் ஆசு ரக்த லஹரீ
ஸிக்தோன்னமத் வர்ஷமணி
ப்ரத்யுத்பத்ய ஸமஸ்த தைத்ய படலீம் ச
ஆகாத்யமானே த்வயி
ப்ராம் யத் பூமி விகம்பிதாம்புதி குலம்
வ்யாலோல சைலோத்கரம்
ப்ரோத் ஸர்ப்பத்கசரம் சராசரம் அஹோ து;
ஸ்தாம் அவஸ்தாம் ததௌ

**பொருள் -** குருவாயூரப்பா! இரத்தக் குளத்தில் நனைந்து விளங்கிய அந்த அசுரனின் உடலை நீ தூக்கி எறிந்தாய். பின்னர் பாய்ந்து தாவி அங்கு இருந்த அசுரர்கள் அனைவரையும் நீ கடித்து உண்ணும்போது பூமி தாறுமாறாகச் சுழன்றது; சமுத்திரங்கள் கலங்கின; மலைகள் ஆட்டம் கண்டன; நட்சத்திரங்கள் கீழே விழுந்தன.

8 தாவத் மாம்ஸ வபா கரால வபுஷம் கோராந்த்ர மாலாதரம்
த்வாம் மத்யே ஸபம் இத்தரோஷம் உஷிதம் துர்வார குர்வாரவம்
அப்யேதும் ந சசாக கோபி புவனே தூரே ஸ்திதா பீரவ:
ஸர்வே சர்வ விரிஞ்ச வாஸவ முகா: ப்ரத்யேகம்: தோஷத:

**பொருள் -** குவாயூரப்பனே! பின்னர் நீ மாமிஸத்தாலும் இரத்தம் கொழுப்பு ஆகியவற்றாலும் பூசப்பட்ட உடலுடன், இரண்யன் குடலை மாலையாக அணிந்து மிகுந்த கோபத்துடன் அந்த மண்டபத்தின் நடுவில் நின்றாய். யாராலும் உன்னிடம் இருந்து எழுந்த உரத்த ஓசையை தடுக்க இயலவில்லை, உன்னருகில் வரவும் இந்த உலகில் யாருக்கும் துணிவு இல்லை. சிவன், ப்ரும்மா, இந்த்ரன் போன்றவர்கள் கூட உன்னருகில் வர பயந்து கொண்டு தள்ளி நின்று உன்னைத் துதித்தார்கள் அல்லவா?

9 பூயோபி அக்ஷத ரோஷதாம்னி பவதி
ப்ரஹ்மாஜ்ஞயா பாலகே
ப்ரஹ்லாதே பதயோ: நமதி அயபபயே
காருண்ய பாராகுல:
சாந்த: த்வம் கரம் அஸ்ய மூர்த்னி ஸமதா:
ஸ்தோத்ரை: அத உத்காயத:

தஸ்ய அகாமதியோபி தேனித வரம்
லோகாய ச அனுக்ரஹம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அனைவரும் துதித்தும் உன் சீற்றம் தணியவில்லை. கோபத்தின் இடமாகவே நீ விளங்கினாய். அப்போது ப்ரும்மாவின் சொல்லைக் கேட்டக் குழந்தையான ப்ரஹ்லாதன் சிறிதும் பயம் இல்லாமல் உனது திருவடிகளை வணங்கினான். நீ உடனே கருணையுடன் கோபம் நீங்கி அவன் தலைமீது உனது கைகளை வைத்தாய். உன்னைக் குறித்து பல துதிகளைக் கூறிக் கொண்டும், எதன் மீதும் பற்று இல்லாமல் நின்ற ப்ரஹ்லாதனுக்கு பக்தி வரம் அளித்து, இந்த உலகையும் நீ அநுக்ரஹம் செய்தாய் அல்லவா?

10 ஏவம் நாடித ரௌத்ர சேஷ்டித
விபோ ஸ்ரீதாபநீயாபித
ச்ருத்யந்த ஸ்புடகீத ஸர்வ
மஹிமந் அத்யந்த சுத்தாக்ருதே
தத்தாத்ருங் நிகிலோத்தரம் புநரஹோ
கஸ்த்வாம் பரோ லங்க்கயேத்
ப்ரஹ்லாத ப்ரிய ஹே மருத்புரபதே
ஸர்வாமயாத் பாஹிமாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரஹ்லாதனுக்குப் ப்ரியமானவனே! இப்படியாக பயம் விளைவிக்கும் லீலைகள் புரிந்தவனும், ந்ருஸிம்ஹாதாபநீயம் என்ற உபநிஷத்தில் பெருமைகள் நன்றாக விளக்கப்பட்டவனும், தூய்மையான உருவம் உடையவனும், எங்கும் நிறைந்தவனுமாக நீ உள்ளாய். உன்னை உனது பக்தர்களைத் தவிர யார்தான் மீற முடியும்? எனது நோய்களில் இருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.
***

1 இந்த்ரத்யும்ன: பாண்ட்ய கண்டாதிராஜ:
த்வத் பக்தாத்மா சந்தனாத்ரௌ கதாசித்
த்வத் ஸேவாயாம் மக்னதீ: ஆலுலோகே
நைவ: அகஸ்த்யம் ப்ராப்தம் ஆதித்ய சாமம்

**பொருள் -** குருவாயூரப்பனே! முன்பு ஒரு காலத்தில் பாண்டிய நாட்டின் அரசனாக இருந்த இந்த்ரத்யும்னன் என்பவன் உன்னிடம் மிகுந்த பக்தி உடையவனாக இருந்தான். உன்னை

த்யானிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். அப்படி உன்னைத் த்யானித்து அவன் தன்னை மறந்த நிலையில் இருந்தபோது, அவனிடம் விருந்தினராக இருக்க வேண்டும் என்று அங்கு வந்த அகத்திய முனிவரை அவன் காணவில்லை அல்லவா? (ஸ்ரீஅப்பனும் ஆம் என்று தலையசைத்தார்)

2 கும்போத்பூதி: ஸம்ப்ருத க்ரோத பார:
ஸ்தப்தாத்மா த்வம் ஹஸ்தி பூயம் பஜேதி
சப்த்வா அத ஏனம் ப்ரத்யகாத் ஸோபி லேபே
ஹஸ்தீந்த்ரத்வம் த்வத் ஸ்ம்ருதி வ்யக்தி தந்யம்

பொருள்; குருவாயூரப்பனே! இதனைக் கண்ட அகத்திய முனிவர். மிகவும் கோபம் கொண்டார். இதனால் அவர், உனது கர்வம் உடைய மனதால் என்னை அலட்சியப்படுத்திய அரசனே! நீ யானையாகப் பிறப்பாய் என்று அரசனைச் சபித்தார். அந்த அரசனும், யானையாகப் பிறந்தான். இருந்தாலும் உன்னையே அவன் த்யானம் செய்த காரணத்தினால் யானைகளில் சிறந்த யானையாக விளங்கினான் அல்லவா?

3 துக்தாம்போதே: மத்யபாஜி த்ரிகூடே
க்ரீடந் சைலே யூதப: அயம் வசாபி:
ஸர்வாந் ஜந்தூந் அதயவர்த்திஷ்ட சக்த்யா
த்வத் பக்தாநாம் குத்ர ந உத்கர்ஷ லாப:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பாற்கடலின் நடுவில் உள்ள த்ரிகூடம் என்ற மலையில் உள்ள யானைகளின் கூட்டத்திற்கு அரசனாக இவன் விளங்கினான். அனைத்து மிருகங்களையும் விட இவன் திறன் பெற்றிருந்தான். உன்னையே வணங்கும் பக்தர்களுக்கு எந்த இடத்தில்தான் மேன்மையும் புகழும் கிடைக்காமல் இருக்கும்?

4 ஸ்வேன ஸ்தேம்னா திவ்ய தேஹத்வ சக்த்யா
ஸோயம் கேதான் அப்ரஜானன் கதாசித்
சைலப்ராந்தே கர்மதாந்த: ஸரஸ்யாம்
யூதை: ஸார்த்தம் த்வத்ப்ரணுன்ன: அபிரேமே

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த கஜேந்திரன் தன்னுடைய உடல் பலத்தாலும், ஒளியுடைய உடலாலும் கிடைத்த அற்புதமான சக்தி காரணமாகத் துன்பம் என்பதே என்ன என்று அறியாதவனாகத் திரிந்தான். ஒருநாள் அந்த மலையில் வெயில் அதிகமாக இருந்தது. இதனால் சோர்வுற்ற யானைக் கூட்டம், உன்னுடைய தூண்டுதலால், அங்கு உள்ள ஒரு குளத்தில் இறங்கி விளையாடத் தொடங்கியது.

5 ஹூஹூ: தாவத் தேவலஸ்யாபி சாபாத்
க்ராஹீ பூத: தஜ்ஜலே வர்த்தமாந:
ஜக்ராஹ ஏனம் ஹஸ்திநம் பாததேசே
சாந்த்யர்த்தம் ஹி ச்ராந்தித: அஸி ஸ்வாகாநாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்தக் குளத்தில் ஹூ ஹூ என்ற கந்தர்வன், தேவலர் என்ற முனிவரின் சாபத்தால் முதலையாக இருந்தான். அவன் கஜேந்திரனின் காலைக் கவ்விக் கொண்டான். உன்னுடைய பக்தர்களை காப்பாற்றவும் அவர்களுக்கு நல்ல ஞானம் ஏற்படவும் அன்றோ நீ அவர்களுக்குத் துன்பத்தை அளிக்கிறாய்?

6 த்வத்ஸே வாயா வைபவாத் துர்நிரோதம்
யுத்யந்தம் தம் வத்ஸராணாம் ஸஹஸ்ரம்
ப்ராப்தே காலே த்வத் பதைகாக்ர்ய ஸித்த்யை
நக்ராக்ராந்தம் ஹஸ்திவர்யம் வ்யாதா: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய ஆராதனையின் காரணமாக ஆயிரம் ஆண்டு காலம் கஜேந்திரனும் அந்த முதலையும் சண்டை இட்டன. அந்த கஜேந்திரனின் கர்ம காலம் முடியும் வரை (ப்ராப்தே காலே), உனது வைகுண்ட பதவியை அவனுக்கு அளிப்பதற்காக, அவனை முதலை என்னும் துன்பத்தால் அடக்கினாய் அல்லவா?

7 ஆர்த்தி வ்யக்த ப்ராக்தன ஜ்ஞா ன பக்தி:
சுண்டோத் க்ஷிப்தை: புண்டரீகை: ஸமர்ச்சன்
பூர்வாப்யஸ்தம் நிர்விசேஷாத்ம நிஷ்ட்டம்
ஸ்தோத்ர ச்ரேஷ்டம் ஸ அன்வகாதீத் பராத்மந்

**பொருள் -** பரமாத்மாவே! குருவாயூரப்பனே! தனக்கு உண்டான மிகுதியான துன்பத்தின் காரணமாக அந்த கஜேந்திரனுக்குப் பூர்வ ஜென்ம ஞானமும் பக்தியும் பிறந்தன. உடனே தனது துதிக்கையால் எடுக்கப்பட்டத் தாமரை மலர்களைக் கொண்டு உன்னை அர்ச்சனை செய்தான். பின்னர் தான் முற்பிறவியில் கற்றுக் கொண்ட நிர்க்குண ப்ரஹ்ம ஸ்தோத்திரத்தைக் கூறத் தொடங்கினான்.

8 ச்ருத்வா ஸ்தோத்ரம் நிர்குணஸ்தம் ஸமஸ்தம்
ப்ரஹ்மேசாத்யை: ந அஹம் இதி அப்ரயாதே
ஸர்வாத்மா த்வம் பூரி காருண்ய வேகாத்
தார்க்ஷ்யாரூட: ப்ரேக்ஷித: அபூ: புரஸ்தாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! கஜேந்திரன் கூறிய ஸ்தோத்திரத்தைக் கேட்ட ப்ரும்மா, சிவன், முனிவர்கள் ஆகியோர், அந்த ஸ்தோத்திரத்தால் புகழப்படுவது தாங்கள் அல்ல என்று உணர்ந்து அங்கு வரவில்லை. உடனே அந்தர்யாமியான நீ, உனது கருடன் மீது ஏறிக்கொண்டு அங்கு வந்து கஜேந்திரனுக்கு காட்சி அளித்தாய் அல்லவா?

9 ஹஸ்தீந்த்ரம் தம் ஹஸ்த பத்மேன த்ருத்வா
சக்ரேண த்வம் நக்ரவர்யம் வ்யதாரீ:
கந்தர்வே அஸ்மின் முக்தசாபே ஸ ஹஸ்தீ
த்வத் ஸாரூப்யம் ப்ராப்ய தேதீப்யதே ஸ்ம

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் நீ உனது தாமரை போன்ற அழகிய கைகளால் அந்த கஜேந்திரனைப் பிடித்துக் கொண்டு, உனது சக்கர ஆயுதத்தால் அந்த முதலையை கிழித்தாய். உடனே அந்த முதலையும் தனது சாபம் நீங்கப் பெற்று கந்தர்வனாக மாறினான். கஜேந்திரனும் உன்னை அடைந்தான்.

10 ஏதத் வ்ருத்தம் த்வாம்ச மாம் ச ப்ரதே ய:
காயேத் ஸ: அயம் பூயஸே ச்ரேயஸே ஸ்யாத்
இதி உக்த்வா ஏனம் தேன ஸார்த்தம் கதஸ்த்வம்
திஷ்ண்யம் விஷ்ணோ பாஹி வாதாலயேச

**பொருள் -** விஷ்ணுவே! குருவாயூரப்பனே! இப்படிப்பட்ட இந்த கஜேந்திர மோட்ச சரிதத்தையும் என்னையும் யார் ஒருவர் அன்றாடம் காலை வேளையில் கூறுகிறாரோ, அவர் மிகவும் உயர்ந்த நன்மைகளைப் பெறுவார். என்று நீ கூறினாய். அத்துடன் அந்த கஜேந்திரனையும் உன்னுடன் அழைத்துக் கொண்டு நீ வைகுண்டம் சென்றாய், என்னைக் காப்பாற்றுவாயாக.

***

1 துர்வாஸா: ஸுர வநிதாப்த திவ்யமால்யம்
சக்ராய ஸ்வயம் உபதாய தத்ர பூய;
நாகேந்த்ர ப்ரதிம்ருதிதே சசாப சக்ரம்
கா க்ஷாந்தி: த்வதிதர தேவதாம்ச ஜாநாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! ஒரு சமயம் துர்வாச முனிவருக்கு தேவலோகப் பெண்ணான ஓர் அப்சரஸ் மூலமாக அம்பாளின் மாலை ஒன்று கிடைத்தது. அதனை அவர் தானாகவே இந்திரனிடம் கொடுத்தார். (அந்த மாலையை அவன் தனது யானையிடம் தந்தான்) அந்த மாலை இந்திரனின் யானையால் மிதிக்கப்பட்டது. அதனைக் கண்ட துர்வாசர் இந்திரனைச் சபித்தார். துர்வாசர் உன்னுடைய அம்சமாகப் பிறக்காமல் மற்ற தெய்வத்தின் அம்சமாகப் (சிவனின் அம்சமாக) பிறந்ததால் அவருக்குப் பொறுமை எப்படி இருக்கும்?

2 சாபேன ப்ரதித ஜரேத நிர்ஜரேந்த்ரே
தேவேஷ்வயி அஸுரஜிதேஷு நிஷ்ப்ரபேஷு
சர்வாத்யா: கமலஜம் ஏத்ய ஸர்வ தேவா
நிர்வாண ப்ரபவ ஸமம் பவந்தம் ஆபு;

**பொருள் -** மோட்சத்தை அளிப்பவனே! (நிர்வாணப்ரபவ) குருவாயூரப்பனே! துர்வாசரின் சாபம் காரணமாக தேவர்களின் அதிபதியான இந்திரன் தனது சக்தி குறைந்தவனாகவும், மூப்பு அடைந்தவனாகவும் மாறினான். தேவர்கள் அனைவரும் அசுரர்களால் தோற்கடிக்கப்பட்டு, ஒளி இழந்தனர். சிவன் முதலான அனைவரும் தாமரையில் இருந்து தோன்றிய ப்ரும்மாவைக் கண்டபின், அவனுடன் இணைந்து உன்னைக் காண வந்தனர் அல்லவா?

3 ப்ரஹ்மாத்யை ஸதுதமஹிமா சிரம் ததாநீம்
ப்ராதுஷ்யன் வரத புர: பரேண தாம்னா
ஹே தேவா திதிஜ குலை: விதாய ஸந்த்திம்
பியூஷம் பரிமதத இதி பர்யசாஸ்த்வம்

**பொருள் -** வரம் அளிப்பவனே! குருவாயூரப்பனே! ப்ரும்மா முதலான தேவர்கள் உன்னைக் குறித்த ஸ்தோத்ரங்களை பல காலம் சொல்லி வந்தபோது பெருமை கொண்ட நீ அப்போது அங்கு தோன்றினாய், தேவர்களிடம், தேவர்களே! அசுரர் கூட்டத்தையும் உங்களுடன் இணைத்துக் கொண்டு, திருப்பாற்கடலைக் கடையுங்கள் என்றாய் அல்லவா?

4 ஸந்தானம் க்ருதவதி தானவை: ஸுரௌகே
மந்தாநம் நயதி மதேன மந்தராத்ரிம்
ப்ரஷ்டே அஸ்மின் பதரமிவ உத்வஹன் ககேந்த்ர
ஸத்ய: த்வம் விநிஹிதவான் பய: பயாதௌ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தேவர்கள் அனைவரும் அசுரர்களிடம் சமாதானம் செய்து கொண்டனர். அந்த கர்வத்துடன், கடைவதற்கு உரிய மத்தாகிய மந்த்ரமலையைத் தூக்கி வரும்போது, பாரம் தாங்காமல் கீழே நழுவ விட்டனர். உடனே நீ உனது கருடன் மீது அமர்ந்து கொண்டு அந்த மலையை ஓர் இலந்தைக் கொட்டை போன்று எளிதாகக் கொண்டு வந்து கடலில் வைத்தாய் அல்லவா?

5 ஆதாய த்ருதம் அத வாஸுகிம் வரத்ராம்
பாதோதௌ விநிஹித ஸர்வ பீஜஜாலே
ப்ராரப்தே மதனவிதௌ ஸுராஸுரை: தை;
வ்யாஜாத் த்வம் புஜகமுகே அகரோ: ஸுராரீன்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் விரைவாக வாசுகீ என்ற நாகத்தைக் கயிறாக வைத்து, பலவிதமான மூலிகை விதைகளைப் பாற்கடலில் தூவினர். அதன் பின்னர் தேவர்களும் அசுரர்களும் கடையத் தொடங்கினர். அப்போது நீ தந்திரமாக அசுரர்களை வாசுகியின் வாய்ப் பக்கத்தில் நிற்கும்படி செய்தாய்.

6 க்ஷுப்தாத்ரௌ க்ஷுபித ஜலோதர ததாநீம்
துக்தாப்தௌ குருதர பாரத: நிமக்னே
தேவேஷு வ்யதித தமேஷு தத்ப்ரியைஷீ:
ப்ராணைஷீ: கமடதனும் கடோர ப்ருஷ்டாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக சுழன்று கொண்டிருந்த மலையானது, கடைவதால் கலங்கி நிற்கும் நீரை உடைய பாற்கடலில், தனது பாரம் தாங்காமல் மூழ்கத் தொடங்கியது. இதனால் தேவர்கள் மிகவும் மன வருத்தம் கொண்டனர். அவர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு நீ, கடினமான முதுகை உடைய ஆமையாக உருவம் எடுத்தாய்.

7 வஜ்ராதி ஸ்திரதர கர்ப்பரேண விஷ்ணோ
விஸ்தராத் பரிகத லக்ஷயோ ஜனேன
அம்பாதே: குஹரகதேன வர்ஹ்மணா த்வம்
நிமக்நம் க்ஷிதிதர நாதம் உந்நிநேத

**பொருள் -** குருவாயூரப்பனே! விஷ்ணுவே! இந்திரனின் வஜ்ராயுதத்தைவிட மிகவும் கடினமான முதுகு ஓட்டைக் கொண்டிருந்தாய். உனது உருவம் லக்ஷம் யோஜனை தூரம் வெகுவாகப் பரந்திருந்தது. இப்படிப்பட்ட உருவம் உடைய நீ கடலின் ஆழம் வரை சென்று அங்கு நீரில் மூழ்கியிருந்த மலையை உனது உடலால் மேலே கொண்டு வந்தாய் அல்லவா?

8 உந்மக்நே ஜடிதி ததா தராதரேந்த்ர
நிர்மேது: த்ருடம் இஹ ஸம்மதேன ஸர்வே
ஆவிச்ய த்விதய கணே அபி ஸர்ப்பராஜே
வைவச்யம் பரிசமயந் அவீவ்ருத: தாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உன்னால் மேலே கொண்டு வரப்பட்ட மலை நீரின் மேல் தோன்றியவுடன் அனைவரும் மிகவும் உற்சாகம் கொண்டு மீண்டும் கடலைக் கடையத் தொடங்கினர். அப்போது தேவர்கள், அசுரர்கள் வாசுகியின் நாகம்

ஆகியவர்களுக்குள் நீ புகுந்து அவர்கள் சோர்வை நீக்கினாய். மேலும் அவர்களுக்கு சக்தியையும் அளித்தாய்.

9 உத்தாம ப்ரமண ஜவோந்த மத்கிரீந்த்ர
ந்யஸ்தைக ஸ்திரதர ஹஸ்தபங்கஜம் த்வாம்
அப்ராந்தே விதிகிரிசாதய: ப்ரமோதாத்
உத்ப்ராந்தா நுநுவு: உபாத்த புஷ்பவர்ஷா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மிகவும் வேகமாகக் கடையப்பட்டதால் மந்த்ர மலையானது மேல் நோக்கி எழும்பியது. அதன் மீது (அது மேலே எழும்பாமல்) உனது தாமரை மலர் போன்ற அழகான மென்மையான கரங்களை நீ வைத்தாய். இப்படித் தோன்றும் உன்னைக் கண்டு அதிக மகிழ்வுடன் ஆகாயத்தில் இருந்த ப்ரும்மா, சிவன் போன்றோர் மலர்களைத் தூவினர்.

10 தைத்யௌகே புஜகமுகாநிலேந தப்தே
தேனைவ த்ரிதசகுலேபி கிஞ்சிதார்த்தே
காருண்யாத் தவ கில தேவ வாரிவாஹா:
ப்ராவர்ஷன் அமரகணான் ந தைத்ய ஸங்க்காந்

**பொருள் -** தேவர்களின் தேவனே! குருவாயூரப்பனே! வாசுகி என்ற நாகத்தின் வாயில் இருந்து தோன்றிய விஷக் காற்றினால் அசுரர் கூட்டம் தடுமாறியது. அப்போது வால்புறம் இருந்த தேவர்களும் சிறிது வேதனை அடைந்தனர். அந்த நேரம் உன்னுடைய கருணையால் தேவர்கள் மீது மழை பொழிந்தது. அந்த மழை அசுரர்கள் மீது பெய்யவில்லை.

11 உத்ப்ராம்யத் பஹு திமி நக்ர சக்ர வாலே
தத்ர அப்தௌ சிரமதிதேபி நிர்வகாரே
ஏக: த்வம் கரயுக க்ருஷ்ட ஸர்ப்பராஜ:
ஸம்ராஜந் பவன புரேச பாஹி ரோகாத்

**பொருள் -** குருவாயூரில் உள்ளவனே! க்ருஷ்ணா! ஸ்ரீ அப்பனே! கடலில் உள்ள திமிங்கலம், முதலை போன்றவை மிரண்டு ஓடுகின்றபடி வெகு நாட்களாகக் கடலைக் கடைந்த பின்னரும் எந்தவிதமான மாற்றமும் நிகழவில்லை. அதனால் நீ மட்டும் உனது இரு கைகளால் பாம்பை இழுத்துக் கடலைக் கடையத் தொடங்கினாய். என்னை வ்யாதிகளில் இருந்து காப்பாற்றுவாய்.

***

1 கரலம் தரலானலம் புரஸ்தாத்
ஜலதே: உத்விஜகாலே கால கூடம்
அமரஸ்துதிவாத மோத நிக்ந:
கிரிச: தத் நிபபௌ பவத் ப்ரியார்த்தம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது அந்தக் கடலில் இருந்து பெரிதாக எரிகின்ற நெருப்புடன் கூடிய காலகூடம் என்று அழைக்கப்படும் விஷம் வெளி வந்தது. இதனை நீக்குமாறு அனைவரும் சிவனை வேண்டினர். அவரும் அவர்கள் துதிகளில் மகிழ்ந்து, உன்னுடைய மகிழ்வுக்காக அந்த விஷத்தை முழுவதுமாக உட்கொண்டார் அல்லவா? (ஸ்ரீஅப்பன் ஆம் என்று தலையசைத்தான்.)

2 விமதத்ஸு ஸுராஸுரேஷு ஜாதா ஸுரபி:
தாம் ருஷிஷு ந்யதா: த்ரிதாமந்
ஹயரத்னம் அபூத் அத இபரத்னம்
த்யுதரு: அப்ஸரஸ்ஸ்ச ஸுரேஷு தானி

**பொருள் -** குருவாயூரப்பனே! ப்ரும்மா, சிவன், விஷ்ணு ஆகிய மூவரும் ஆக உள்ளவனே! கடலை மேலும் கடைந்தபோது அதில் இருந்து காமதேனு என்ற பசு தோன்றியது. அதனை நீ முனிவர்களிடம் அளித்தாய். பின்னர் மிகவும் சிறந்த குதிரையான உச்சைஸ்ரவானி தோன்றியது. அடுத்த சிறந்த யானையான ஐராவதம் தோன்றியது. தொடர்ந்து கற்பக விருட்சமும், தேவலோக அப்சரஸ்களும் தோன்றின. இவற்றை நீ தேவர்களுக்குக் கொடுத்தாய்.

3 ஜகதீச பவத்பரா ததாநீம்
கமநீயா கமலா பபூவ தேவீ

அமலாம் அவலோக்ய யாம் விலோல:
ஸகலோபி ஸ்ப்ருஹயாம் பபூவ லோக:

**பொருள் -** அனைத்து உலகிற்கும் தலைவனே! குருவாயூரப்பனே! அடுத்து மனம் வருந்திக் கொண்டிருந்த அனைத்து உலகங்களும் விரும்பும் வண்ணம் களங்கம் சிறிதும் இல்லாதவளான மஹாலக்ஷ்மி தோன்றினாள். மிகவும் அழகுடனும், உன்னிடமே தனது மனதை வைத்தவளுமான மஹாலக்ஷ்மி தோன்றினாள்.

4 த்வயி தத்தஹ்ருதே ததைவ தேவ்யை
த்ரிதசேந்த்ர: மணிபீடிகாம் வ்யதாரீத்
ஸகலோப ஹ்ருதாபிஹேச நீயை:
ருஷய: தாம் ச்ருதிகீர்ப்பி: அப்யஷிஞ்சன்

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னிடத்தில் தனது மனதை பறிகொடுத்தவளான மஹாலக்ஷ்மிக்கு, அவள் தோன்றியவுடனேயே, இந்திரன் ரத்னங்களால் செய்யப்பட்ட பீடம் ஒன்றை அளித்தான். பல புண்ணிய நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட நீரினால் முனிவர்கள் வேதம் ஓதியபடி அவளை நீராட்டினர்.

5 அபிஷேக ஜலாநுபாதி முக்த
த்வதபாங்கை: அவபூஷிதாங்க வல்லீம்
மணிகுண்டல பீதசேல ஹார ப்ரமுகை:
தாம் அமராதய: அந்வபூஷன்

**பொருள் -** குருவாயூரப்பனே! அபிஷேகம் செய்யப்பட்ட நீர் மட்டும் அல்லாது உன்னுடைய கடைக்கண் பார்வையும் அவள் மீது விழுந்தது. மிகவும் அழகான கொடி போன்ற மெல்லிய உடல் கொண்ட மஹா லக்ஷ்மியை தேவர்கள் -ரத்தினங்கள் பதித்த குண்டலங்கள், மாலைகள், மஞ்சள் ஆடை போன்றவற்றால் அலங்காரம் செய்தனர்.

6 வரணஸ்ரஜம் ஆத்த ப்ருங்க நாதாம்
தததீ ஸா குசகும்ப மந்தயாநா
பதசிஞ்ஜித மஞ்ஜு நூபுரா த்வாம்

கலித வ்ரீல விலாஸம் ஆஸஸாத

**பொருள் -** குருவாயூரப்பா! அப்படிப்பட்ட மஹாலக்ஷ்மி தனது கைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் படியான, ஸ்வயம்வர மாலையைக் கொண்டு வந்தாள். தனது கும்பம் போன்ற ஸ்தனங்களின் பாரத்தால் மெதுவாக நடந்து, தன் கால்களில் உள்ள சதங்கை சப்தமிடும்படி நடந்து, மிகுந்த நாணத்துடன் நீ உள்ள இடத்திற்கு வந்தாள்.

7 கிரிச த்ருஹிணாதி ஸர்வ தேவாந்
குணபாஜ: அபி அபிமுக்த தோஷலேசாந்
அவம்குச்ய ஸதா ஸர்வரம்யே
நிஹிதா த்வயி அநயாபி திவ்யமாலா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உத்தமமான குணங்கள் கொண்ட ப்ரும்மா, சிவன் முதலானோர் முற்றிலுமாக தோஷம் இல்லாதவர்கள் அல்லர் என்று உணர்ந்தாள். அனைவரும் விரும்பும் அனைத்துத் திருக்கல்யாண குணங்களும் பொருந்திய உன்னிடத்தில் அந்த மஹாலக்ஷ்மியால், அந்த உயர்ந்த மாலை அணிவிக்கப்பட்டது அல்லவா?

8 உரஸா தரஸா மமானித ஏனாம்
புவநாநாம் ஜனனீம் அனன்ய பாவாம்
த்வதுரோ விலஸத்ததீக்ஷண ஸ்ரீ
ப்ரிவ்ருஷ்ட்யா பரிபுஷ்டமாஸ விச்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அனைத்து உலகங்களுக்கும் தாய் போன்று விளங்குபவளும், உன்னைத் தவிர வேறு யார் மீதும் பற்று இல்லாதவளும் ஆகிய அந்த மஹாலக்ஷ்மியை உனது திருமார்பில் எடுத்து வைத்துக் கொண்டு அவளைப் பெருமைப்படுத்தினாய். உன்னுடைய மார்பில் அமர்ந்துள்ள அந்து ஸ்ரீதேவியால் இந்த உலகம் அவளது கடாட்சம் என்ற மழையில் நனைகிறது.

9 அதிமோஹன விப்ரமா ததாநீம்
மதயந்தீ கலு வாருணீ நிராகாத்
தமஸ: பதவீம் அதாஸ்த்வம் ஏநாம்

அதிஸம்மானனயா மஹாஸுரேப்ய:

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் பார்ப்பவர்கள் மனம் கவரும்படி செயல்களைச் செய்பவளும், போதையை உண்டாக்குபவளும் ஆகிய வாருணீதேவி (இவள் கண்களுக்கு அதிபதி தோன்றினாள்.) தாமஸ குணமான அறிவின்மைக்கு இருப்பிடமான இவளை நீ அசுரர்களுக்கு அளித்தாய்.

10 தருணாம்புத ஸுந்தர: ததா த்வம்
நநு தன்வந்திரி: உத்தித: அம்புராசே:
அம்ருதம் கலசே வஹந் கராப்யாம்
அகிலார்த்திம் ஹர மாருதாலயேச

**பொருள் -** குவாயூரப்பனே! அப்போது நீ மழைநீர் கொண்ட மேகம் போன்ற நிறம் உடையவனும், கைகளில் அமிர்தம் உள்ள குடந்தை ஏந்தியும் தன்வந்தரி பகவனாக வெளியில் வந்தாய். என்னுடைய அனைத்து நோய்களையும் நீயே நீக்க வேண்டும்.

***

1 உத்கச்சத: தவ கராத் அம்ருதம் ஹரத்ஸு
தைத்யேஷு தான் அசரணான் அநுநீய தேவான்
ஸத்ய: திரோததித தேவ பவத் ப்ரபாவாத்
உத்யத் ஸ்வ யூத்ய கலஹா திதிஜா பபூவு:

**பொருள் -** குருவாயூரப்பனே! பாற்கடலில் இருந்து தன்வந்த்ரியாக வெளியில் தோன்றிய உன் கைகளில் இருந்த அமிர்தத்தைக் கைப்பற்றி அசுரர்கள் எடுத்துச் சென்றனர். அப்போது தேவர்கள் புகலிடம் இல்லாமல் இருந்தனர். அவர்களை நீ சமாதானப்படுத்திவிட்டு உடனே மறைந்தாய். உனது மாயையால் தேவர்களும் அசுரர்களும் சண்டையிடத் தொடங்கினர்.

2 ச்யாமாம் ருசாபி வயஸாபி தனும் ததானீம்
ப்ராப்தோ அஸி துங்க குசமண்டல பங்குராம் த்வம்
பீயூஷ கும்பகலஹம் பரிமுச்ய ஸர்வே
த்ருஷ்ணாகுலா: ப்ரதியயு: த்வத் உரோஜ கும்பே

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் நீ ஒளியுடைய உருவத்துடனும், இளமையாக உள்ளதும், நீல நிறமாக உள்ளதும், பருத்த ஸ்தனங்களின் பாரத்தால் சற்றே முன்னோக்கி உள்ளதும் ஆகிய பெண் உருவத்துடன் வந்தாய் அல்லவா? உன்னை இப்படிக் கண்ட அசுரர்கள் அமிர்த கலசத்தை விட்டு விட்டு உன்னுடைய கும்பம் போன்ற ஸ்தனங்களில் ஆசை கொண்டு உன்னிடம் வந்தனர் அல்லவா?

3 கா த்வம் ம்ருகாஷி விபஜஸ்வ ஸுதாம் இமாம்
இதி ஆருட ராகவிவசாந் அபியாசத: அமூன்
விச்வஸ்யதே மயி கதம் குலடா அஸ்மி தைத்யா:
இதி ஆலபந்நபி ஸுவிச்வஸிதாந் அதாநீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னிடம் அசுரர்கள்- மானின் விழி போன்ற கண்களை உடையவளே! நீ யார்? இந்த அமிர்தத்தை நீ எங்களுக்குப் பங்கீட்டுத் தர வேண்டும் - என்றனர். உடனே நீ அவர்களிடம், நான் ஒரு நல்ல நடத்தை இல்லாதவள். என்னை எப்படி நீங்கள் நம்புகிறீர்கள்? என்று கேட்டாய். இதன் மூலம் அவர்களுக்கு உன் மீது உள்ள நம்பிக்கையை வளர்த்தாய்.

4 மோதாத் ஸுதாகலசம் ஏஷு ததத்ஸு ஸாத்வம்
துச்சேஷ்டிதம் மம ஸஹத்வம் இதி ப்ருவாணா
பங்க்தி ப்ரபேத விநிவேசித தேவ தைத்யா
லீலா விலாஸ கதிபி: ஸமதா: ஸுதாம் தாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! இதனைக் கேட்ட அசுரர்கள் மனம் மகிழ்ந்து உன்னிடம் அமிர்த கலசத்தை அளித்தனர். பெண் உருவம் கொண்ட நீ அவர்களிடம், நான் செய்வது குற்றம் என்றாலும் பொறுக்க வேண்டும் என்றாய். பின்னர் தேவர்களையும், அசுரர்களையும் தனித்தனி வரிசைகள் அமர வைத்தாய். பின்னர் உனது விளையாட்டைத் துவக்குவது போல் அமிர்தத்தை அளிக்கத் தொடங்கினாய்.

5 அஸ்மாஸு இயம் ப்ரணயினீ இதி அஸுரேஷுதேஷு
ஜோஷம் ஸ்திதேஷ்வத ஸமாப்ய ஸுதாம் ஸுரேஷு

த்வம் பக்தலோகவசக: நிஜரூபம் ஏத்ய
ஸ்வர்பானும் அர்த்த பரிபீத ஸுதம் வ்யலாவீ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது அசுரர்கள் உன்னைப் பற்றி என்ன நினைத்தனர்? இந்தப் பெண் நம்மிடம் மிகவும் அன்புடன் இருக்கிறாள் என்றே நினைத்தனர். அதனால் எதுவும் பேசாது அமர்ந்திருந்தனர். பக்தர்களைக் காப்பதில் குறியாக உள்ள நீ, உன்கையில் இருந்த அமிர்தம் முழுவதையும் தேவர்கள் வரிசையிலேயே முடித்து விட்டாய். (ஆனால் ராகு என்பவன் மட்டும் தேவர்கள் போல் வேடம் இட்டுக் கொண்டு அவர்கள் வரிசையில் அமர்ந்து அமிர்தம் அருந்தினான்.) இப்படியாக அமிர்தம் உண்ட ராகுவின் தலையை உனது உண்மையான உருவத்தை மீண்டும் எடுத்துக்கொண்டு, வெட்டினாய் அல்லவா?

6 த்வத்த: ஸுதாஹரண யோக்யபலம் பரேஷு தத்வா
கதே த்வயி ஸுரை: கலு தே வ்யக்ருஹ்ணந்
கோர: அத மூர்ச்சதி ரணே பலிதைத்ய மாயா
வ்யாமோஹிதே ஸுகரேண த்வம் இஹ ஆவிராஸீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னிடம் இருந்து பலவந்தமாக அமிர்த கலசத்தைப் பிடுங்கிய அசுரர்களுக்கு அவர்களுக்கான பலனை அளித்த பின்னர் (அந்தப் பலன் = அவர்களுக்கு அமிர்தம் கிட்டவில்லை) நீ மறைந்து விட்டாய். இதனால் கோபம் கொண்ட அசுரர்கள், தேவர்களுடன் சண்டையிடத் தொடங்கினர். அப்போது பலி என்னும் ஓர் அசுரனின் மிகுந்த மாயத்தன்மை வாய்ந்த யுத்தத்தால் தேவர்கள் மயங்கி விழுந்தனர். அப்போது நீ மீண்டும் வந்தாய்.

7 த்வம் காலநேமிம் அத மாலிமுகாந் ஜகந்த
சக்ரோ ஜகாந பல ஜம்ப வலாந் ஸபாகாந்
சுஷ்கார்த்ர துஷ்கரவதே நமுசௌ ச லூனே
பேதேன நாரத கிரா ந்யருணோ ரணம் த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பிறகு நீ மாலி, காலநேமி என்ற அசுரர்களைக் கொன்றாய். பாகாஸுரன், பலி, ஜம்பன், வலன் போன்றவர்களை இந்த்ரன்

கொன்றான். உலர்ந்து உள்ள பொருள் அல்லது நனைந்து உள்ள பொருள் ஆகியவற்றால் மரணம் கிடையாது என்று வரம் பெற்ற நமுசியை கடல் நுரை மூலம் கொன்றனர். அப்போது நீ நாரதனின் சொற்கள் மூலமாக போரை நிறுத்தினாய்.

8 யோஷா வபு: தனுஜ மோஹனம் ஆஹிதம் தே
ச்ருத்வா விலோகன குதூஹலவான் மஹேச:
பூதை: ஸமம் கிரிஜயா ச கத: பதம் தே
ஸதுத்வா அப்ரவீத் அபிமதம் த்வம் அதோ திரோதா:

**பொருள் -** குருவாயூரப்பனே! அசுரர்களை மயக்குவதற்காக நீ பெண் வேடம் தரித்தாய் என்று கேள்விப்பட்ட சிவன் அந்த வடிவத்தில் உன்னைக் காண ஆவல் கொண்டார். தனது பூதகணங்களை மற்றும் பார்வதியோடு உன்னுடைய இருப்பிடமான வைகுண்டத்தை அடைந்தார். உன்னை ஸ்தோத்திரம் செய்து தனது விருப்பத்தைக் கூறினார். உடனே நீ மறைந்து விட்டாய்.

9 ஆராமஸீமநி ச கந்துக காதலீலா
லோலாயமாந நயநாம் கமநீம் மநோஜ்ஞாம்
த்வாம் ஏவ வீக்ஷ்ய விகலத் விஸநாம் மநோபூ
வேகாத் அநங்கரிபு: அங்க ஸமாலி லிங்க

**பொருள் -** குருவாயூரப்பா! வைகுண்டத்தில் உள்ள தோட்டத்தில் ஒரு மூலையில் நீ பெண் உருவம் எடுத்து பந்து விளையடினாய். அந்த விளையாட்டினால் களைப்புற்ற கண்கள் அலை மோத, அழகிய பெண்ணாக இருந்த உனது மேலாடை காற்றினால் நழுவி விழுந்தது. இதனை பார்த்த, மன்மதனையே எரித்த சிவன், உன் மீது விருப்பம் கொண்டு உன்னைத் தழுவினார் அல்லவா?

10 பூயோபி வித்ருதவீதம் உபதாவ்ய தேவோ
வீர்ய ப்ரமோக்ஷ விகஸத் பரமார்த்த போத:
த்வந்மானித: தவ மஹத்வம் உவாச தேவ்யை
தத்தாத்ருச: த்வம் அவ வரத நிகேத நாத

**பொருள் -** வரமளிப்பவனே! குருவாயூரப்பனே! ஸ்ரீ பரமசிவனின் பிடியில் இருந்து விலகி ஓடினாய். உன்னைத் தொடர்ந்த சிவன் தனது வீர்யத்தை வழியெங்கும்-சிதறவிட்டார். உடனே மனத்தெளிவு அடைந்தார். உனது மகிமையை பார்வதிக்கு உரைத்தார். நீயும் அவரை மிகவும் மதித்துப் பாராட்டினாய். இத்தனை பெருமைகளை உடைய நீ என்னைக் காப்பற்ற வேண்டும்.

***

1 சக்ரேண ஸம்யதி ஹதோபி பலி: மஹாத்மா
சுக்ரேண ஜீவிததனு: க்ரது வர்த்திதோஷ்மா
விக்ராந்திமான் பயநிலீந ஸுராம் த்ரிலோகீம்
சக்ரே வசே ஸ தவ சக்ரமுகாந் அபீத:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பரந்த மனம் உடைய பலி என்ற அசுரன் இந்திரனால் கொல்லப்பட்ட போதும் (தசகம் 29 - ஸ்லோகம் 7) சுக்ராச்சாரியாரால் உயிர் பிழைத்தான். பின்னர் சுக்ராச்சாரியரால் செய்யப்பட்ட விஸ்வஜித் என்ற யாகம் மூலமாக மிகுந்த சக்தியையும் வலிமையையும் பெற்றான். அதனால் உன்னுடைய சக்கர ஆயுதத்திற்குக் கூடப் பயப்படாமல் அனைத்து உலகங்களையும் தன் வசமாக்கினான். தேவர்களை ஓடி ஒளிய வைத்தான்.

2 புத்ராத்தி தர்சன வசாத் அதிதி: விஷண்ணா
தம் காச்யபம் நிஜபதிம் சரணம் ப்ரபந்நா
த்வத் பூஜநம் தநுதிதம் ஹி பயோ வ்ரதாக்யம்
ஸா த்வாதசாஹம் அசரத் த்வயி பக்தி பூர்ணா

**பொருள் -** தனது புத்திரர்களான தேவர்கள் நிலையைக் கண்ட அவர்கள் தாயான அதிதி வருத்தம் கொண்டாள். (காச்யப முனிவருக்கும் திதிக்கும் பிறந்தவர்கள் அசுரர்கள்; அவருக்கும் அதிதிக்கும் பிறந்தவர்கள் தேவர்கள்.) தனது கணவரான காச்யப முனிவரின் பாதங்களில் விழுந்து சரணம் அடைந்தாள். அவரும் பயோவ்ரதம் என்னும் பெயர் கொண்ட உன்னுடைய பூஜையை அவருக்கு உபதேசித்தார். அவளும் அந்தப் பூஜையை மிகுந்த பக்தியுடன் பன்னிரண்டு நாட்கள் செய்தார்.

3 தஸ்ய அவதௌ த்வயி நிலீனமதே: அமுஷ்யா

ச்யாம: சதுர்புஜ வபு; ஸ்வயம் ஆவிராஸீ!
நம்ராம் ச தாம் இஹ பவத்தனய; பவேயம்
கோப்யம் மதீக்ஷணம் இதி ப்ரலபன் அயாஸீ:

பொருள்; குருவாயூரப்பனே! அத்தகைய விரதத்தின் இறுதியில் அதிதி உன் மீது தனது மனதை முழுவதுமாக செலுத்தியிருந்தாள். அப்போது நீ அவளுக்கு முன்பாக கறுத்த உனது திருமேனியுடன், நான்கு திருச்சக்கரங்களுடன் கூடிய உருவமாகத் தேன்றினாய். அவள் உன்னைக் கண்டதும் துதித்து நின்றாள். நீ அவளிடம், நான் உனக்கு மகனாகப் பிறக்கப் போகிறேன். இவ்விதமாக என்னை நீ இங்கு பார்த்த காட்சியை ரகசியமாக வைத்துக் கொள் என்று கூறி மறைந்தாய்.

4 த்வம் காச்யபே தபஸி ஸந்நிததத் ததானீம்
ப்ராப்த: அஸி கர்ப்பம் அதிதே: ப்ரணுத: விதாத்ரா
ப்ராஸுத ச ப்ரகட வைஷ்ணவ திவ்ய ரூபம்
ஸா த்வாதசீ ச்ரவண புண்யதினே பவந்தம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் காச்யப முனிவரின் தவ வலிமையால் உண்டான வீர்யத்தில் நீ புகுந்தாய். அதன் மூலம் அதிதியின் கர்ப்பகத்தில் புகுந்தாய். அப்போது ப்ரும்மதேவன் உன்னைத் துதித்தான். அதிதியானவள் - ஒளி வீசும்படியான சங்கு சக்ரம் கொண்ட திருமேனி உடைய உன்னை, துவாதசி திதியன்று, ச்ரவண நட்சத்திரத் தினத்தில் பெற்றாள்.

5 புண்யாச்ரமம் தம் அபிவர்ஷதி புஷ்பவர்ஷை
ஹர்ஷாகுலே ஸுரகுலே க்ருததூர்ய கோஷே
பத்வா அஞ்சலிம் ஜய ஜயேதி நுத: பித்ருப்யாம்
த்வம் தத் க்ஷணே படுதமம் வடுரூபம் ஆதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! (நீ பிறந்தால்) மிகுந்த புண்ணியம் அடைந்த காச்யபரின் ஆச்ரமத்தை அனைத்து திசைகளில் இருந்தும் மலர்கள் தூவி ஸ்தோத்ரம் செய்தனர். (யார்?) உனது பிறப்பால் மிகுந்த மகிழ்வுற்ற தேவர்கள் இப்படிச் செய்தனர்.

உனது தாய் தந்தை உன்னை வாழ்த்தினர். அந்த நொடியிலேயே நீ ப்ரஹ்மச்சாரியாக உனது உருவத்தை மாற்றிக் கொண்டாய்.

6 தாவத் ப்ரஜாபதிமுகை: உபனிய மௌஞ்ஜீ
தண்ட அஜின அக்ஷ வலயாதிபி: அர்ச்யமாந:
தேதீப்யமாந வபு: ஈச க்ருத அக்னிகார்ய:
த்வம் ப்ராஸ்திதா: பலிக்ருஹம் ப்ரக்ருத அச்வமேதம்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது உனது தந்தையான காச்யப ப்ரஜாதிபதி உனக்கு உபநயனம் (பூணூல் அணிவித்தல்) செய்து வைத்தார். நீ மவுஞ்சி என்னும் இடுப்பில் உள்ள கயிறு, பலாசதண்டம், க்ருஷ்ணாஜினம் என்னும் மான்தோல், ருத்ராக்ஷ மாலை ஆகியவற்றை அப்போது அணிந்தாய். (பாகவத்தில் கூறப்பட்டது - கச்யபர் இடுப்பில் உள்ள கயிறையும், ப்ரஹஸ்பதி பூணூலையும், பூதேவி மான் தோலையும், சந்திரன் பலாச தண்டமும், தாய் அதிதி கவுபீனத்தையும், ப்ரும்மா கமண்டலத்தையும், ஸரஸ்வதி ருத்ராக்ஷ மாலையையும், குபேரன் பிட்சை பாத்திரமும், பார்வதி பிட்சை அரிசியும் அளித்தனர்.) அதன் பின்னர் நீ உனது அக்னி ஹோமத்தைச் செய்தாய். தொடர்ந்து, மகாபலி நடத்தும் அச்வமேத யாகம் நடைபெறுகின்ற இடத்தை நோக்கி புறப்பட்டாள்.

7 காத்ரேண பாவி மஹிமோசித கௌரவம் ப்ராக்
வ்யா வ்ருண்வதா இவ தரணீம் சலயந் அயாஸீ:
சத்ரம் பரோஷ்மதிரணார்த்தம் இவ ஆததாந;
தண்டம் ச தானவ ஜனேஷு இவ ஸந்நிதாதும்

**பொருள் -** குருவாயூரப்பா! பின்னால் (சற்று நேரம் கழித்து) உனக்கு உண்டாகப் போகும் பெருத்த மகிமையை இப்போதே இந்தப் பூமி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உனது உடல் அசைவின் மூலம் பூமியை நடுங்கும்படி நடந்தாய். அரக்கர்களின் பெருமையை மறைப்பது போன்று உனது கைகளில் குடை இருந்தது. அசுரர்களை ஒடுக்குவதற்காக கையில் தண்டம் இருந்தது. இப்படியாக நீ சென்றாய்.

8 தாம் நர்மதோத்தரதடே ஹயமேதசாலாம்
ஆஸேதுஷி த்வயி ருசா தவ ருத்ததேத்ரை:

பாஸ்வாந் கிம் ஏஷ: தஹனோ நு ஸநத்குமாரோ
யோகீ நு கோ அயம் இதி சுக்ரமுகை: சசங்கே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நர்மதை ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டிருந்த அந்த அச்வமேதயாக சாலையை நீ அடைந்தாய். அப்போது உனது உடலில் இருந்து தோன்றிய ஒளி மிகவும் ப்ரகாசமாக இருந்தது. அந்த ஒளியால் தங்கள் கண்கள் கூசியதால் பார்வை தடுக்கப்பட்டு விளங்கிய சுக்ராச்சாரியார் போன்ற முனிவர்கள் உன்னைக் கண்டு, இந்தச் சிறுவன் யார்? சூரியனா, அக்னி தேவனா? முனிவரான ஸனத்குமாரரா? என்று சந்தேகம் கொண்டனர்.

9 ஆநீதம் ஆசு ப்ருகுபி: மஹஸா அபிபூதை:
த்வாம் ரம்யரூபம் அஸுர: புலகாவ்ருதாங்க:
பக்த்யா ஸமேத்ய ஸுக்ருத: பரிபூஜ்ய பாதௌ
தத்தோயம் அந்வத்ருத மூர்த்தநி தீர்த்த தீர்த்தம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய ஒளியைக் கண்டு திகைத்து நின்ற சுக்ராச்சாரியார் போன்றவர்கள் சுதாரித்துக் கொண்டு உன்னை வரவேற்றனர். மிகுந்த அழகிய உருவம் படைத்த உன்னைக் கண்டவுடன் மஹாபலிக்கு மெய் சிலிர்த்தது. அவன் விரைந்து உன்னிடம் வந்து உனது திருவடிகளை நீரில் கழுவினான். எந்தவித சுத்தமான நீரையும் புனிதமாக்கும் அந்த நீரை (உனது திருவடிகள் கழுவப்பட்ட நீர்) தனது தலைகளில் தெளித்துக் கொண்டான்.

10 ப்ரஹ்லாத வம்ச ஜதாய க்ரதுபி: த்வஜேஷு
விச்வாஸத: து ததிதம் திதிஜோபி லேபே
யத்தே பதாம்பு கிரீசஸ்ய சிரோ பிலால்யம்
ஸ த்வம் விபோ குருபுராலய பாலயேதா:

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரப்பா! உனது பாதங்கள் கழுவப்பட்ட நீரானது சிவனின் தலையில் வைத்து கொண்டாடும் அளவிற்கு உயர்ந்தது. (சிவனின் தலையில் உள்ள கங்கை விஷ்ணுவின் பாதங்களில் இருந்து தோன்றியது.) அத்தனை உயர்வான நீரை திதியின் மகனான அசுரன் தனது தலையில் தெளித்துக் கொள்ளும் வாய்ப்பு

கிடைத்தது என்றால் - அது அவன் ப்ரஹ்லாதனின் குலத்தில் தோன்றியதால் அல்லது யாகம் செய்தால் அல்லது ப்ராமணர்களை மதிப்பதால் ஆகும். இவ்வாறு அவனுக்கு அருள் புரியும் ஸ்ரீ அப்பனே! என்னையும் காக்க வேண்டும்.
***

1 ப்ரீத்யா தைத்ய: தவ தனுமஹ:
ப்ரக்ஷேஷணாத் ஸர்வதாபி
த்வாம் ஆராத்யந் அஜித ரசயந்
அஞ்ஜலிம் ஸஞ்ஜகாத
மத்த: கிம் தே ஸமலபிஷிதம்
விப்ரஸூனோ வத த்வம்
வ்யக்தம் பக்தம் பவனம் அவனீம்
வாபி ஸர்வம் பிரதாஸ்யே

**பொருள் -** குருவாயூரப்பா! யாராலும் வெல்லப்பட முடியாதவனே! உனது உடலில் இருந்து வெளிவந்த கம்பீரமான ஒளியைக் கொண்டு உன் மீது மிகுந்த அன்பு கொண்ட மகாபலி, உன்னை நோக்கி கைகளைக் கூப்பினான். அதன்பிறகு, உன்னிடம், ப்ராமணச் சிறுவனே! உனக்கு வேண்டியது என்ன? உணவா, வீடா, நிலமா அல்லது இவை அனைத்துமா - எது வேண்டும்? கேள், தருகிறேன் என்று கூறினான்.

2 தாம் அக்ஷீணாம் பலிகிரம் உபாகர்ண்ய
காருண்ய பூர்ண: அபி
அஸ்ய உத்ஸேகம் ச மயிதுமனா:
தைத்யவம்சம் ப்ரசம்ஸன்
பூமிம் பாதத்ரய பரிமிதாம்
ப்ரார்த்தயாம் ஆஸித த்வம்
ஸர்வம் தேஹீதி து நிகதிதே கஸ்ய
ஹாஸ்யம் நவாஸ்யாத்

**பொருள் -** குருவாயூரப்பனே! எந்தவிதமான செல்வக் குறையுமில்லாத மகாபலியின் வார்த்தைகளைக் கேட்ட நீ கருணையுடன் அமைதியாக நின்றாய். அவன் கர்வத்தை அடக்குவதற்கு எண்ணி அவனது குலத்தை உயர்வாகப் புகழ்ந்து பேசினாய். பின்னர் அவனிடம், என் கால்களில் மூன்று அடி அளவு மண் நிலம் வேண்டும் என்று நீ கேட்டாய்.

உனது சிறிய வடிவத்தைக் கண்டும், உனது கால்களின் அளவு கண்டும், உனது இந்த யாசகத்தை நினைத்தும் யார்தான் சிரிக்கமாட்டனர்?

3 விச்வேசம் மாம் த்ரிபதம் இஹ கிம்
யாசஸே பாலிச: த்வம்
ஸர்வாம் பூமிம் வ்ருணு கிம் அமுனா
இதி ஆலபத் த்வாம் ஸ த்ருப்யந்
யஸ்மாத் தர்பாத் த்ரிபத ப்ரிபூர்த்ய
க்ஷம: க்ஷேமவாதான்
பந்தம் ச அஸௌ அகமத்
சுததர்ஹோபி காடோபசாந்த்யை

**பொருள் -** குருவாயூரப்பா! இதனைக் கேட்ட மகாபலி உன்னிடம், நான் மூன்று உலகங்களுக்கும் தலைவனாக உள்ளவன். என்னிடம் வெறும் மூன்று அடிகளையா யாசிப்பது? இத்தனை சிறிய இடத்தினைப் பெற்று என்ன பயன்? நீ கேட்பது பேதைத்தனமாக உள்ளதே? என்று மிகுந்த கர்வத்துடன் கூறினான். இந்தக் கர்வத்தினால் மட்டுமே அவனால் அந்த மூன்றடிகளைத் தர இயலாமல் போனது; அதனால் பழிச் சொல்லுக்கு ஆளானான். இத்தகைய அவமானங்களை அவன் அடைய வேண்டியது இல்லாமல் இருந்த போதிலும், அவன் கர்வத்தால் அடைந்தான்.

4 பாதத்ரய்யா யதி ந முதித: விஷ்டபை
ந அபி துஷ்யேத்
இதி உக்தே அஸ்மின் வரத பவதே
தாது காமே அத தோயம்
தைத்யாசர்யத்: தவ கலு
பரீக்ஷார்த்தின: ப்ரோணாத்தம்
மா மா தேயம் ஹரி: அயமிதி
வ்யக்தமேவ ஆபபாஷே

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ மகாபலியிடம், அரசனே! மூன்று அடி நிலம் தரவில்லை என்றால், தான் யாசித்ததை பெறாமல் மகிழ்வு அற்றவனான ஒருவன் மூன்று உலகங்கள் கிடைத்தாலும் மகிழ்வு கொள்ள மாட்டான் என்றாய். உடனே மகாபலி நீ விரும்பியபடி

நிலத்தை அளிக்க தான நீருடன் தயாராக நின்றான். அப்போது அவன் குருவான சுக்ராச்சாரியார், உனது தூண்டுதல் காரணமாக, அரசனே! கொடுக்காதே! கொடுக்காதே! இவன் அந்த ஹரியே ஆவான் என்றார் அல்லவா?

5 யாசத்யேவம் யதி ஸ பகவான்
பூர்ணகாம: அஸ்மி ஸ: அஹம்
தாஸ்யாமி ஏவ ஸ்திரம் இதி வதந்
காவ்ய சப்தோபி தைத்ய:
விந்த்யாவல்யா நிஜதயிதயா
தத்தபாத்யாய துப்யம்
சித்ரம் சித்ரம் ஸகலம் அபி ஸ:
ப்ராப்பயத் தோய பூர்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! சுக்ராச்சாரியாரின் சொற்களைக் கேட்ட மகாபலி அவரிடம். (நீங்கள் கூறியபடி) அந்தப் பகவானே இங்கு வந்து என்னிடம் யாசிக்கிறான் என்றால் எனது விருப்பம் அனைத்தும் நிறைவேறியவனாகவே நான் உள்ளேன். எனவே நான் தானம் அளிக்கவே போகிறேன் என்றான். (உடனே சுக்ராச்சாரியார் அவனை, நீ உனது நாட்டை இழக்கப்போகிறாய் என்று சபித்தார். இதுவும் பகவான் எண்ணமே. இப்படிச் சபித்தால்தான் அவனிடம் இருந்து உலகங்களை கைபற்ற இயலும்). சுக்ராச்சாரியாரின் சாபத்தை ஏற்ற மகாபலி, தனது மனைவியான விந்தியாவளீ என்பவள் தானநீரை அவன் கைகளில் விட, அவனும் நீ கேட்டவற்றை தானமாக அளித்தான். (மகாபலியின் மனைவியுடைய பதிபக்தியை எண்ணி ஆச்சர்யம் என்கிறார்.)

6 நிஸ்ஸந்தேஹம் திதிகுலபதெள
த்வயி அஷோர்ப்பணம் தத்
வ்யாதன்வாநே முமுசு:
ருஷய: ஸாமரா: புஷ்ப வர்ஷம்
திவ்யம் ரூபம் தவ ச தத் இதம்
பச்யதாம் விச்வபாஜாம்
உச்சை: உச்சை: அவருதத்
அவதீக்ருத்ய விச்வாண்ட பாண்டம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! திதியின் குலத்தின் வழிவந்த மகாபலி சிறிதளவும் சந்தேகமே இல்லாமல் உன்னிடம் நீ கேட்டவற்றை அர்ப்பணம் என்று அளித்தான். அவனது இந்தச் செயலைக் கண்ட தேவர்கள், ரிஷிகள் அவன் மீது மலர்களைத் தூவினர். அப்போது இந்த உலகில் உள்ள அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது இந்த சிறிய உருவம் (இது வாமனனைக் குறித்துக் கூறியதாகவும், அல்லது குருவாயூரப்பனைப் பார்த்துக் கூறியதாகவும் கொள்ளலாம்.) அனைத்து அண்டங்களுக்கும் மேலே மேலே வளரத் தொடங்கியது.

7 த்வத் பாதாக்ரம் நிஜபதகதம்
புண்டரீ கோத்பவ அஸெள
குண்டீ தோயை: அஸிசத்
அபுநாத் யஜ்ஜலம் விச்வலோகான்
ஹர்ஷோத் கர்ஷாத் ஸுபஹு
நந்ருதே கேசரை: உத்ஸவே அஸ்மின்
பேரீம் நிக்நந் புவனம் அசரத்
ஜாம்பவாந் பக்திசாலீ

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படி நீ வளர்ந்தபோது உனது திருவடியானது (ஓர் அடி எடுத்து வைக்கும் போது) ப்ரும்மலோகமான ஸத்யலோகத்தை அடைகிறது. உடனே ப்ரும்மா தனது கமண்டலத்தில் உள்ள நீரினால் உனது திருவடியைக் கழுவினார். அந்த நீரானது இந்த பூமியை வளப்படுத்தியது. (அதுவே கங்கையாகும்). இதனைக் கண்ட தேவர்கள் நடனம் ஆடினர். உன்னிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த ஜாம்பவான் தனது வாத்தியத்தை முழங்கியபடி இந்த உலகத்தைச் சுற்றி வந்தான்.

8 தாவத் தைத்யா: து அவமதிம்
ருதே பாத்து: ஆரப்த யுத்தா:
தேவ: உபேதை: பவதனுசரை:
ஸங்கதா பங்கமாபந்
காலாத்மா அயம் வஸதி புரதோ
யத்வசாத் ப்ராக்ஜிதா: ஸ்ம:
கிம் வோ யுத்தை: இதி பலிகிரா
தே அத பாதாலமாபு;

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த நேரம் அசுரர்கள் தங்கள் அரசனான மகாபலியின் உத்தரவு இல்லாமல் உன்னைத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் உனது அடியார்களால் தடுக்கப்பட்டனர். மகாபலி அசுரர்களிடம், நாம் யாருடைய தயவால் முன்பு வெற்றியை அடைந்தோமோ, அந்த பகவானே இதோ நம் கண்முன்னே காலத்தை கடந்து நிற்கிறான். நாம் யுத்தம் செய்து என்ன பயன்? என்றான். இதனைக் கேட்ட அசுரர்கள் பாதாள லோகத்திற்கு ஓடிவிட்டனர்.

9 பாசை: பத்தம் பதக பதினா
தைத்யம் உச்சை: அவாதீ:
தார்த்தீயீகம் திச மம பதம்
கிந்த விச்வேச்வரோஸி
பாதம் மூர்த்னி ப்ரணய பகவந்
இதி அகம்பம் வதந்தம்
ப்ரஹ்லாத: தம் ஸ்வயம் உபகத:
மாநயந் அஸ்தவீத் த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது கருடனால் வருணன் என்ற பாசக்கயிற்றால் மகாபலி கட்டப்பட்டான் (அவனுக்கு கோபம் ஊட்டும் விதமாக). அதன் பின்னர் நீ அவனை நோக்கி, நீ இந்த உலகம் அனைத்திற்கும் அதிபதி என்றாயே! எனக்கு உரிய மூன்றாவது அடி நிலத்தைக் கொடு! என்றாய். அப்போது மகாபலி சிறிதும் பயமோ கோபமோ கொள்ளாமல், பகவானே! நாராயணா! எனது தலைமீது உள்ள மூன்றாவது அடியை வைத்துக் கொள் என்றான். இதனைப் பாராட்டியபடி ப்ரஹ்லாதன் அங்கு வந்து உன்னை துதித்தான்.

10 தர்ப்போசித்யை விஹிதம் அகிலம்
தைத்ய ஸித்த: அஸிபுண்யை:
லோக: தே அஸ்து த்ரிதிவ
விஜயீ வாஸவத்வஞ்ச பச்சாத்
மத்ஸாயுஜ்யம் பஜ ச புன: இதி
அன்வ க்ருஹ்ணா பலிம் தம்
விப்ரை: ஸந்தாநிதமகவர:

பாஹி வாதாலயேச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ மகாபலியை நோக்கி திதியின் குலத்தில் உதித்தவனே! உனது கர்வத்தை அடக்கவே நான் இப்படிச் செய்தேன். நீ செய்த புண்ணிய காரியங்களால் நீ நன்மை பெற்றவனாக உள்ளாய். சுவர்க்கத்திற்கும் மேலான லோகம் உனக்கு உண்டாகட்டும் ( அது ஸுதலம் எனப்படும் பாதாள கீழ்லோகம் ஆகும்). அதன் பின்னர் இந்திரப் பதவியும் நீ அடைவாய் இறுதியில் எனது மோட்ச ராஜ்ஜியமும் அடைவாய் என்றாய். இப்படியாக நீ என்னையும் காப்பாற்ற வேண்டும்.
***

1 புரா ஹயக்ரீவ மஹாஸுரேண
ஷஷ்டாந்தராந் தோத்யத காண்டகல்பே
நித்ரோன்முக ப்ரஹ்ம முகாத் ஹ்ருதேஷு
வேதேஷுஅதித்ஸ: கில மத்ஸ்ய ரூபம்

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு ஒரு காலத்தில் ஆறாவது மன்வந்த்ரமான சாக்ஷுஷ மன்வந்த்ரத்தின் போது, அதன் முடிவில் ப்ரளயம் உண்டானது. அந்தப் ப்ரளயத்தின் போது ப்ரும்மா நித்திரையில் இருந்தான். அந்த நேரம் ப்ரும்மாவின் முகத்தில் இருந்து ஹயக்ரீவன் என்னும் ஓர் அசுரன் தோன்றினான். அவன் வேதங்களை அபகரித்து மறைந்தான். அப்போது நீ மீன் உருவம் எடுத்து அவற்றை மீட்க முடிவு செய்தாய் அல்லவா?

2 ஸதய வ்ரதஸ்ய த்ரமிலாதி பர்த்து:
நதீ ஜலே தர்ப்பயத: ததாநீம்
கராஞ்ஜலௌ ஸஞ்ஜ்வலிதா க்ருதி:
த்வம் அத்ருச்யதா: கச்சந பால மீந:

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் தமிழ்நாட்டில் உள்ள க்ருதமாலை என்னும் நதியில் தர்ப்பணம் செய்து கொண்டிருந்த ஸத்யவ்ரதன் என்னும் அரசனின் கைகளில் நீ ஒளியுடைய சிறிய மீனாகத் தோன்றினாய் அல்லவா?

3 க்ஷிப்தம் ஜலே த்வதாம் சகிதம் விலோக்ய

நின்யே அம்புபாத்ரேண முனி: ஸ்வகேஹம்
ஸ்வல்பை: அஹோபி: கலசீம் ச கூபம்
வாபீம் ஸரச்ச ஆனசிஷே விபோ த்வம்

**பொருள் -** குருவாயூரப்பா! (உன்னை அரசன் மீண்டும் நீரில் விட்டான்) உடனே பயந்த உன்னைக் கண்டு அவன் இரக்கம் கொண்டான். உன்னைத் தனது தீர்த்த பாத்திரத்தில் வைத்து தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றான். மாயனே! சில நாட்களில் நீ அந்தப் பாத்திரத்தைவிட பெரிதாகவும், கிணற்றைவிடப் பெரிதாகவும், குளத்தை விடப் பெரிதாகவும், ஏரியைவிடப் பெரிதாகவும் வளர்ந்தாய்.

4 யோகப்ரபாவாத் பவதாக்ஞயைவ
நீத: தத: த்வம் முனினா பயோதிம்
ப்ருஷ்ட: அமுனா கல்பதித்ருக்ஷம் ஏனம்
ஸப்தாஹம் ஆஸ்வ இதி வதம் அயாஸீ:தி

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய உத்தரவுக்கு இணங்க அந்த அரசன் உன்னைக் கடலில் கொண்டு விட்டான். உனது அவதாரத்தைப் புரிந்து கொண்ட அந்த அரசன் ப்ரளயத்தைக் காண விரும்புவதாக உன்னிடம் கூறினான். அவனிடம் நீ பொறுமையாகக் காத்திருக்கும் படி கூறிவிட்டு, கடலில் மறைந்தாய்.

5 ப்ராப்தே த்வதுக்தே அஹநி வாரி தாரா
பரிப்லுதே பூமிதலே முனீந்த்ர:
ஸப்தரிஷிபி: ஸார்த்தம் அபார வாரிணி
உத்கூர்ணமாந: சரணம் யயௌ த்வாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! நீ கூறிய ப்ரளய நாளும் வந்தது. அப்போது பூமி முழுவதும் கனமாகப் பெய்த மழையினால் மூழ்கியது. அந்த நேரம் ஸத்யவ்ரதன் ஸப்தரிஷிகளோடு அந்த நீர்ச்சூழலில் உனது நினைவுடனே சுழன்று உன்னைச் சரணம் அடைந்தான்.

6 தராம் த்வத் ஆதேசகரீம் அவாப்தம்

நௌரூபிணீம் ஆருருஹு ததா தே
தத்கம்ப கம்ப்ரேஷு ச தேஷு பூய:
த்வம் அம்புதே: ஆவிரபூ மஹுயாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த நேரத்தில் உனது கட்டளைக்கு இணங்க பூதேவி ஒரு படகு போன்ற உருவம் எடுத்து வந்தாள். அதில் அவர்கள் (ஸத்யவ்ரதன் முதலானோர்) ஏறிக் கொண்டனர். அந்தப் படகானது கடுமையான வெள்ளத்தில் ஆடியபோது அவர்கள் பயந்தனர். அப்போது மிகப்பெரிய மீனாக நீ மீண்டும் தோன்றினாய்.

7 ஜஷாக்ருதிம் யோஜன லக்ஷதீர்க்காம்
ததானம் உச்சைஸ்தர தேஜஸம் த்வாம்
நிரீக்ஷ்ய துஷ்டா முநய: த்வதுக்த்யா
த்வத்துங்க ச்ருங்கே தரணிம் பபந்து:

**பொருள் -** குருவாயூரப்பா! லட்சம் யோஜனை நீளம் உள்ளதாகவும் ஒளிவடிவமாகவே இருந்த உன்னைக் கண்டு முனிவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். நீ கூறியதால் உன்னுடைய பெரிய கொம்பில் அந்தப் படகைக் கட்டினார்கள்.

8 ஆக்ருஷ்ட நௌக: முனிமண்டலாய
ப்ரதர்சயன் விச்வ ஜகத்விபாகாந்
ஸம்ஸ்தூயமான: ந்ருவரேண தேன
ஞானம் பரம் ச உபதிசந் அசாரீ:

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ அந்தப் படகை இழுத்துச் சென்றாய். அப்படிச் செல்லும்போது உலகத்தின் பல பாகங்களையும் அந்த முனிவர்களுக்குக் காண்பித்தாய். இதனைக் கண்ட ஸத்யவ்ரதன் உன்னைத் துதித்தான். அவனுக்கு ஞானத்தை உபதேசித்துக் கொண்டே நீ சென்றாய்.

9 கல்பாவதௌ ஸப்த முனீன் புரோவத்
ப்ரஸ்தாப்ய ஸத்யவ்ரத பூமிபம்தம்
வைவஸ்வதார்க்யம் மநும் ஆததான:

க்ரோதாத் ஹயக்ரீவம் அபித்ருத: அபூ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ப்ரளயம் முடிந்த பின்னர் ஸப்த ரிஷிகளை மீண்டும் அவர்களுக்கு உரிய ஸப்தரிஷி மண்டலத்தில் வைத்தாய். ஸத்ய வ்ரதனை அடுத்த கல்பத்தின் மனுவாகச் (வைவஸ் வதன்) செய்தாய் (இவனுடைய வழித் தோன்றல்களே இராமன் பிறந்த இக்ஷ்வாகு குலமாகும்). பின்னர் மிகுந்த கோபத்துடன் சென்று அசுரன் ஹயக்ரீவனைத் தாக்கினாய்.

10 ஸ்வதுங்க ச்ருங்க க்ஷத வக்ஷஸம் தம்
நிபாத்ய தைத்யம் நிகமாந்த க்ருஹீத்வா
விரிஞ்சயே ப்ரீதஹ்ருதே ததாந:
ப்ரபஞ்ஜ நாகாரபதே ப்ரபாயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பிரபஞ்சத்தின் காரணமே! உன்னுடைய பெரிய கொம்பு மூலம் அந்த அசுரனை கீழே தள்ளி சிறுவன் அவன் மார்பைப் பிளந்தாய். பின்னர் வேதங்களை மீட்டு ப்ரும்மாவிடம் அளித்து அவனை மகிழச் செய்தாய். என்னைக் காப்பாற்ற வேண்டும்.
***

1 வைவஸ்வதாக்ய மநுபுத்ர நபாக ஜாத
நாபாகநாமக நரேந்த்ர ஸுத: அம்பரீஷ:
ஸப்தார்ணவாவ்ருத மஹீதயித: அபி ரேமே
த்வத் ஸங்கிஷு த்வயி ச மக்ந மனா: ஸதைவே

**பொருள் -** குருவாயூரப்பனே! வைவஸ்வத மனுவின் மகன் நபாகன்; நபாகனின் மகன் நாபாகன்; நாபாகனின் மகன் அம்பரீஷ் ஆவான். ஏழு கடல்கள் சூழ்ந்து உள்ள பூமிக்கு அரசனாக அவன் இருந்தான். உன்னிடமும் உனது அடியார்களிடமும் மிகுந்த பக்தி வைத்திருந்தான்.

2 த்வத் ப்ரீதயே ஸகலமேவ விதந்வத: அஸ்ய
பக்த்யைவ தேவ நசிராத் அப்ருதா: ப்ராஸதம்
யேந அஸ்ய யாசநம் ருதேபி அபிரக்ஷணார்த்தம்

சக்ரம் பவாந் ப்ரவிததார ஸஹஸ்ரதாரம்

**பொருள் -** குருவாயூரப்பா! அம்பரீஷ் தனது எந்தச் செயலையுமே உனது மகிழ்வுக்காகச் செய்து வந்தான். இத்தகைய பக்தியை மெச்சிய நீ சீக்கிரமாவே அவனுக்கு அருள் புரிந்தாய். அவன் உன்னிடம் எதுவும் கேட்காமல் இருந்தபோது நீயாகவே, உனது ஆயுதமான, ஆயிரக்கணக்கான கூர்மையான முனைகள் உடைய சக்கரத்தை, அவனுக்குத் துணையாக அளித்தாய்.

3 ஸ த்வாதசீ வ்ரதம் அத: பவதர்ச்சநார்த்தம்
வர்ஷம் ததௌ மதுவநே யமுனோ பகுண்ட்டே
பத்ந்யா ஸமம் ஸுமனஸா மஹதீம விதந்வந்
பூஜாம் த்விஜேஷு விஸ்ருஜந் பசுஷஷ்டி கோடிம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த அம்பரீஷன் யமுனை நதியான கரையில் உள்ள மதுவனத்தில், நல்ல உள்ளம், கொண்ட தனது மனைவியுடன் இணைந்து மிகவும் பெரிய பூஜை செய்தான். அங்கு ப்ராமணர்களுக்கு அறுபது கோடி பசுக்களைத் தானமாக அளித்தான். தொடர்ந்து உன்னைப் பூஜிப்பதற்கு எண்ணி, ஒரு வருடம் த்வாதசி வ்ரதம் மேற்கொண்டனர்.

4 தத்ர: அத பாரணதினே பவதர்ச நாந்தே
துர்வாஸஸா அஸ்ய முனினா பவனம் ப்ரபேதே
போக்தும் வ்ருதச்ச ஸ ந்ருபணே பரார்த்திசீல:
மந்தம் ஜகாம யமுனாம் நியமான் விதாஸ்யன்

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் அந்த இடத்தில் பாரணை (உணவு உட்கொள்ளும் நேரம்) நாள் வந்தது. அன்று உன்னைத் துதித்து விரதத்தை முடித்தான். அந்தப் பூஜையின் முடிவில் துர்வாஸ முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். பிறருக்குத் துன்பம் கொடுத்து அதில் சுகம் காண்பதைத் தனது இயல்பாக உடையவர் துர்வாஸர். அரசன் அவரை பாரணைக்கு அழைத்தான். அப்போது அவர் தனது அன்றாடக் கடமைகளை முடிப்பதற்காக மெதுவாக நடந்து யமுனைக்குச் சென்றார்.

5 ராக்ஞாத பாரண முஹுர்த்த ஸமாப்தி கேதாத்
வானரவ பாரணம் அகாரி பவத் பரேண
ப்ராப்தோ முநி: தத் திவ்ய த்ருசா விஜாநந்
க்ஷிப்யந் க்ருதா உத்ருத ஜட: விததாந க்ருத்யாம்

பொருள்; குருவாயூரப்பா! பாரணை செய்வதற்கான நேரம் தவறிவிடும் என்பதால் வருத்தத்துடன் அம்பரீஷன் தண்ணீரை மட்டுமே குடித்து பாரணையை பூர்த்தியாக்கினான். அதன் பின்னர் அங்கு வந்த துர்வாஸர் தனது ஞான த்ருஷ்டியால் நடந்ததை உணர்ந்தார். அரசனை கடும் சொற்களால் கோபித்தார். தனது சடாமுடியை அவிழ்த்து விட்டு, ஒரு பூதத்தை உருவாக்கினார்.

6 க்ருத்யாம் ச தாம் அஸிதாராம் புவனம் தஹந்தீம்
அக்ரே அபிவீக்ஷ்ய ந்ருபதி: ந பதாத் ச கம்பே
த்வத் பக்தபாதம் அபி வீக்ஷ்ய ஸுதர்சனம் தே
க்ருத்யானலம் சலபயந் முனிம் அன்வதாவீத்

**பொருள் -** குருவாயூரப்பா! கைகளில் கத்தியை வைத்துக் கொண்டும், தனது பார்வையால் உலகத்தை எரிப்பதும் ஆகிய அந்த பூதத்தைக் கண்ட அம்பரீஷன் தான் நின்ற இடத்தை விட்டு பயந்து நகரவில்லை. உன்னுடைய சக்கர ஆயுதம் (சுதர்ஸனம்), உனது பக்தனுக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டு, நெருப்பு எப்படி விட்டில் பூச்சியை விழுங்குமோ அதுபோல் அந்த பூதத்தை அழித்தது. பின்னர் துர்வாஸ முனிவரை நோக்கி விரைந்தது.

7 தாவந் அசேஷ புவனேஷு பியா ஸ பச்யந்
விச்வத்ர சக்ரம் அபி தே கதவாந் விரிஞ்சம்
க: காலசக்ரம் அதிலங்கயதி இதி அபாஸ்த:
சர்வம் யயௌ ஸ ச பவந்தம் அவந்ததைவ

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது சக்கரத்திற்குப் பயந்து அனைத்து உலகங்களுக்கும் துர்வாஸர் ஓடினார். தான் சென்ற இடங்களில் எல்லாம் உனது ஆயுதத்தைக் கண்டார். ப்ரும்மாவிடம் சென்றார். ப்ரும்மாவோ, காலமாகிய சக்கரத்தை யாரால் அடக்க இயலும்? என்று கூறிவிட்டான். சிவனை சென்று அடைந்தார். அவரும் கூட உன்னை வணங்கத் தொடங்கினார்.

8 பூய: பவந் நிலையம் ஏத்ய முநிம் நமந்தம்
ப்ராசே பவாந் அஹம் ரூஷே நநு பக்ததாஸ:
ஜ்ஞானம் தபச்ச விநாயந்விதமேவ மாந்யம்
யாஹி அம்பரீஷ பதமேவ பஜேதி பூமந்

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரப்பா! துர்வாஸர் உனது இருப்பிடமான வைகுண்டத்தை அடைந்தார். உன்னை வணங்கி நின்ற துர்வாஸரிடம் நீ முனிவரே! நான் பக்தர்களின் அடிமை அல்லவோ? அறிவும் ஆராதனையும் அகங்காரமும் சிறிதும் இல்லாமல் இருந்தால் மட்டுமே மதிக்கத்தக்கது. நீ இங்கு இருந்து போய் அம்பரீஷனிடமே சரணம் அடைவாய் என்றாய்.

9 தாவத் ஸமேத்ய முனினா ஸ க்ருஹீத பாத:
ராஜா அபஸ்ருத்ய பவதஸ்த்ரம் அஸௌ அநௌஷீத்
சக்ரே கதேமுனி: அதாத் அகிலாசிஷ: அஸ்மை
த்வத் பக்திம் ஆகஸி க்ருதே அபி க்ருபாம் ச சம்ஸன்

**பொருள் -** குருவாயூரப்பனே! உடனே துர்வாஸர் விரைவாக ஓடி வந்து அம்பரீஷனின் கால்களைப் பிடித்தார். இத்தகைய பெருமையுடைய அம்பரீஷன் (அவனது பக்தியால் உண்டான பெருமை) உனது சக்ராயுதத்தைத் துதித்தான். அந்த ஆயுதமும் சமாதானம் ஏற்பட்டு மறைந்தது. துர்வாஸர் அம்பரீஷன் உன்னிடம் கொண்டிருந்த பக்தியைப் புகழ்ந்தார். அவனுக்குத் தீமை செய்த போதிலும் அவன் மன்னித்துக் கருணை காண்பித்த செயலைப் புகழ்ந்தார். அவனுக்கு அனைத்து ஆசிகளையும் வழங்கினார்.

10 ராஜா ப்ரதீக்ஷ்ய முனிம் ஏகஸமாம் அநாச்வாந்
ஸம்போஜ்ய ஸாது தம்ருஷிம் விஸ்ருஜன் ப்ரஸன்னம்
புக்த்வா ஸ்வயம் த்வயி தத: அபி த்ருடம் ரத: அபூத்
ஸாயுஜ்யம் ச ஸ மாம் பவநேச பாயா:

**பொருள் -** குருவாயூரப்பனே! அம்பரீஷன் துர்வாஸ முனிவரை எதிர்பார்த்து ஒரு வருட காலம், எந்த விதமான ஆகாரமும் உண்ணாமல் காத்திருந்தான். அவர் வந்ததும் அவர்

மகிழ்வுறும்படி அவருக்கு உணவு அளித்தான். அவர் சென்ற பிறகு அவன் பாரணை (உணவு உட்கொள்ளல்) செய்தான். உன்னிடம் முன்பு இருந்ததை விடப் பல மடங்கு அதிகமான பக்தி கொண்டான். இறுதியாக உனது இருப்பிடத்தை அடைந்தான் அல்லவா? இத்தனை மகிமை உள்ளவனே! என்னைக் காக்க வேண்டும்.

***

1 கீர்வாணை: அர்த்யமாந: தசமுகநிதநம்
கோஸலேஷு ருஷ்யச்ருங்கே
புத்ரீயாம் இஷ்டிம் இஷ்ட்வா தது஁ஷி தசரத
க்ஷ்மாப்ருதே பாயஸாக்ர்யம்
தத்புக்த்யா தத்புரந்த்ரீஷ்வபி திஸ்ருஷு
ஸமம் ஜாதகர்பாஸு ஜாத:
ராமஸ்த்வம் லக்ஷ்மணேன ஸ்வயம் அத
பரதனோபி சத்ருக்ந நாம்னா

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னைத் தேவர்கள் இராவணனை அழிக்கும்படி வேண்டி நின்றனர். கோஸல தேசத்தில் ருஷ்யச்ருங்கர் என்ற முனிவர் புத்ர காமேஷ்டி யாகத்தை செய்தார் (தசரதன் வேண்டுகோளுக்கு இணங்க). அங்கு உதித்த உன்னதமான பாயஸத்தை தசரதனிடம் கொடுத்தார். அதனை உட்கொண்ட தசரதனின் மனைவிகள் மூன்று பேரும் கர்ப்பம் உற்றனர். அங்கு இலக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் ஆகியோருடன் நீ இராமனாகப் பிறந்தாய் அல்லவா?

2 கோதண்டீ கௌசிகஸ்ய க்ரதுவரம்
அவதும் லக்ஷ்மணேந அநுயாத:
யாத: அபூ: தாத வாசர முநி கதிதமநு
த்வந்த்வ சாந்தாத்வ கேத:
ந்ரூணாம் த்ராணாய பாணை: முநிவசன
பலாத் தாடகாம் பாடயித்வா
லப்த்வா அஸ்மாத் அஸ்த்ர ஜாலம் முனிவநம்
அகம: தேவ ஸித்தாச்ரமாக்யம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தந்தையான தசரதனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு கோதண்டம் என்ற வில் ஏந்தியபடி, லட்சுமணன் உன்னைத் தொடர்ந்து வர, விச்வாமித்ர

முனிவரின் சிறப்பான யாகத்தை (அசுரர்களிடம் இருந்து) காப்பாற்றுவதற்காகச் சென்றாய் அல்லவா? வழியில் நடந்த களைப்பானது, விச்வாமித்திரர் உனக்கு உபதேசித்த பலா மற்றும் அதிபலா ஆகிய மந்த்ரங்கள் மூலம் தீர்ந்தது. மனிதர்களைக் காப்பதற்காக, விச்வாமித்திரரின் கட்டளைக்கு உட்பட்டு தாடகை என்ற அரக்கியை உனது அம்புகளால் வீழ்த்தினாய். இதனால் மகிழ்ந்த அந்த முனிவர் மூலமாக பலவிதமான அஸ்திரங்களை பெற்றாய். பின்னர் முனிவர்களின் இருப்பிடமான ஸித்தாச்ரமம் என்ற இடத்திற்குச் சென்றாய்.

3 மாரீசம் த்ராவயித்வா மகசிரஸிசரை:
அன்ய ரக்ஷாம்ஸி நிக்நந்
கல்யாம் குர்வந் அஹல்யாம் பதி பதிரஜஸா
ப்ராப்ய வைதேஹ கேஹம்
பிந்தான: சாந்த்ரசூடம் தநு: அவனிஸுதாம்
இந்தராமேவ லப்த்வா
ராஜ்யம் ப்ராதிஷ்டதா: த்வம் த்ரிபிரபி ச
ஸமம் ப்ராத்ருவீரை: ஸதாரை:

**பொருள் -** குருவாயூரப்பா! அங்கு நடந்த யாகத்தின் தொடக்கத்தில் உனது அம்புகளால் மாரீசன் என்ற அரக்கனை விரட்டினாய். அவனுடன் இருந்த அசுரர்களைக் கொன்றாய். நீ நடந்து சென்ற வழியில் அகல்யையை உனது பாத துளிகளால் புனிதம் ஆக்கினாய், அதன் பின்னர் விதேஹ ராஜனான ஜனகன் அரண்மனையை அடைந்தாய். அங்கு இருந்த சிவனுடைய வில்லை முறித்து பூமாதேவியின் மகளான ஸ்ரீமஹாலக்ஷ்மியாகிய சீதையை மனைவியாக அடைந்தாய். பின்னர் நீயும் உனது சகோதரர்களும் மனைவிகளுடன் கோசல நாட்டிற்குப் புறப்பட்டீர்கள் அல்லவா?

4 ஆருந்தானே ருஷா அந்தே ப்ருகு
குலதிலகே ஸங்க்ரமய்யஸ்வதேஜ:
யாதே யாதோஸி அயோத்மாம் ஸுகமிஹ
நிவஸந் காந்த்யா காந்தமூர்த்தே
சத்ருக்ணேன ஏகதா அதோ கதவதி
பரதே மாதுலஸ்ய அதிவாஸம்
தாதாரப்த: அபிஷேக: தவ கில

விஹத: கேகயா தீச புத்ர்யா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ செல்லும் போது உன்னைக் கோபத்துடன் ப்ருகு குலத்திற்குத் திலகம் என்று கூறப்படும் பரசுராமர் வழிமறித்தார். அப்போது உன்னுடைய ஒளியால் மயங்கி, தன்னுடைய ஒளியையும் உனக்கு அளித்துச் சென்றார். அதன் பின்னர் நீ அயோத்தி சென்றாய். பார்ப்பவர்கள் மனதைக் கவரும் அழகுடையவனே! அயோத்தியில் நீ சீதையுடன் சுகமாக வாழ்ந்து வந்தாய். ஒருமுறை உனது தம்பி பரதன சத்ருக்னனோடு சேர்ந்து தனது மாமனார் வீட்டிற்குச் சென்றான். அந்த நேரத்தில் உனது தந்தை உனக்கு மகுடம் சூட்டி பட்டாபிஷேகம் செய்ய முயன்ற முயற்சி, கைகேயியால் தடுக்கப்பட்டது அல்லவா?

5 தாதோக்த்யா யாதுகாம: வனம் அநுஜ
வதூஸம்யுத: சாபதார:
பௌரான் ஆருத்ய மார்கே குஹநிலயகத:
த்வம் ஜடாசீரதாரீ
நாவா ஸந்தீர்ய கங்காம் அதிபதவி புன:
த்வம் பாரத்வாஜம் ஆராத்
நத்வா தத்வாக்ய ஹோதோ: அதிஸுகம்
அவஸ: சித்ரகூடே கிரீந்த்ரே

பொருள்; குருவாயூரப்பா! உனது தந்தையின் கட்டளைக்கு ஏற்பவில்லை ஏந்தியபடி, உனது மனைவியுடனும், தம்பியுடனும் காட்டிற்குப் புறப்பட்ட தயாரானாய், உன்னுடன் காட்டிற்கு வர விரும்பிய உனது நாட்டு மக்களைத் தடுத்து நிறுத்தினாய். பின்னர் குகனின் இருப்பிடத்தை அடைந்தாய். அங்கு ஜடை, மரவுரி ஆகியவற்றை அணிந்தாய். பின்னர் படகில் கங்கையைக் கடந்து சென்றாய். வழியில் இருந்த பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று அவரை வணங்கி, அவருடைய சொல்லை மதித்து, சிறப்பான மலையாகிய சித்ரகூட மலையில் வசித்தாய்.

6 ச்ருத்வா புத்ரார்த்திகிந்நம் கலு பரத
முகாத் ஸ்வர்கயாதம் ஸ்வதாதம்
தப்த: தத்வா அம்பு தஸ்மை நிததித

பரதே பாதுகாம மேதினீம் ச
அத்ரிம் நத்வா அத இத்வா வனமதி
விபுலம் தண்டகம் சண்டகாயம்
ஹத்வா தைத்யம் விராதம் ஸுகதிம்
அகலய: சாருபோ: சாரபங்கீம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது தந்தை புத்திர சோகம் தாங்காமல் மரணம் அடைந்தார் என்ற செய்தியை பரதன் மூலமாகக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தாய். தந்தைக்குச் செய்ய வேண்டிய தர்ப்பணம் செய்தாய். பரதனிடம் உனது பாதுகைகளையும், இராஜ்ஜியத்தையும் அளித்தாய். பின்னர் அத்ரி முனிவரின் ஆசிரமம் சென்று வணங்கினாய். அதன் பிறகு, மிகவும் பெரியதான தண்டகாரண்யம் என்ற காட்டை அடைந்தாய். அங்கு வசித்து வந்த விராதன் என்ற பெயர் வடிவம் கொண்ட அசுரனை அழித்தாய். பின்னர் சரபங்க முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று, அவருக்கு மோட்சம் அளித்தாய்.

7 நத்வா அகஸ்த்யம் ஸமஸ்தாசரநிகர
ஸபத்ராக்ருதிம் தாபஸேப்ய:
ப்ரத்யச்ரௌஷீ: ப்ரியைஷீ ததது ச முநிநா
வைஷ்ணவே திவ்யசாபே
ப்ரஹ்மாஸ்த்ரே ச அபி தத்தே பதிபித்ரு
ஸுஹ்ருதம் வீக்ஷ்ய பூய: ஜடாயும்
மோதாத் கோதா தடாந்தே பரிரமஸி புரா
பஞ்சவட்யாம் வதூட்யா

**பொருள் -** குருவாயூரப்பனே! முனிவர்களின் நன்மைகளை முன்னிட்டு அனைத்து அசுரர்களையும் அழிப்பதாக உறுதி பூண்டாய். அகத்திய முனிவரைக் கண்டாய். அவர் மூலமாக விஷ்ணுவின் சிறந்த வில்லும், ப்ரஹ்மாஸ்திரமும் வழங்கப் பெற்றாய். அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் உனது தந்தையின் நண்பரான ஜடாயுவைப் பார்த்து மகிழ்ந்தாய். பின்னர் கோதாவரி நதியின் கரையில் உள்ள பஞ்சவடி என்ற இடத்தில் உனது மனைவியுடன் இன்பமாக வாழ்ந்தாய்.

8 ப்ராப்தாயா: சூர்ப்பணகயா மதன சலத்ருதே:

அர்த்தனை: நிஸ்ஸஹாத்மா
தாம் ஸௌமித்ரௌ விஸ்ருஜ்ய
ப்ரபலதமருஷா தேந நிர்லூந நாஸாம்
த்ருஷ்ட்வா ஏனாம் ருஷ்ட சித்தம் கரம்
அபிபதிதம் தூஷணம் ச த்ரிமூர்த்தம்
வ்யாஹிம்ஸீ: ஆசரானபி அயுத ஸமதிகாம்
தத்க்ஷணாத் அக்ஷதோஷ்மா

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னிடம் காமம் கொண்டு சூர்ப்பனகை என்ற அரக்கி உனக்கு அருகாமையில் வந்தாள். அவளுடைய வேண்டுகோளை ஏற்காமல் அவளை இலட்சுமணனிடம் அனுப்பினாய். மிகவும் கோபம் கொண்ட இலட்சுமணன் அவள் மூக்கை அறுக்க, அதனால் மிகுந்த சினம் கொண்டாள். அவளது நிலைமையைக் கண்டு பொறுக்காமல் கரன். தூஷணன், த்ரிசிரஸ் போன்றவர்களும் மேலும் பதினாயிரத்திற்கு மேற்பட்ட அசுரர்களும் உன்னை நோக்கி வந்தனர். அவர்களை உனது மங்காத வீரத்தால் அதே நேரத்தில் கொன்றாய்.

9 ஸோதர்யா ப்ரோக்த வார்த்தா விவச
தசமுகா திஷ்ட மாரீசமாயா
ஸாரங்கம் ஸார ஸாக்ஷ்யா ஸ்ப்ருஹிதம்
அநுகத: ப்ராவதீ: பாணாகாதம்
தந்மாயாக்ரந்த நிர்யாபித பவதநுஜாம்
ராவண; தாம் அஹார்ஷீத்
தேன ஆர்த்தோபி த்வம் அந்த: கிமபி
முதம் அதா: தத்வ தோபாய லாபாத்

பொருள்; குருவாயூரப்பனே! தனது சகோதரியான சூர்ப்பனகையின் சொற்களைக் கேட்ட இராவணன் கோபம் கொண்டான். அவனது தூண்டுதலால் மாரீசன் மாயமானாக வந்தான். தாமரை மலர் போன்ற அழகிய கண்களை உடைய சீதை அதனை விரும்பினாள். நீ அதனை தொடர்ந்து சென்று அம்புகளால் கொன்றாய். அப்போது அந்த மாரீசன் மாயக் குரல் எழுப்பினான். இதனைக் கேட்டு பயந்த சீதை உனது தம்பியான இலட்சுமணனை உன்னிடம் அனுப்பினாள். அப்போது அந்த சீதையை இராவணன்

அபகரித்தான். இதனால் நீ வெளியில் துன்பம் கொண்ட போதிலும், மனதில் இராவணனைக் கொல்ல உபாயம் கிடைத்தது என்று மகிழ்ந்தாய் அல்லவா?

10 பூய: தந்வீம் விசின்வந் அஹ்ருத
தசமுக: த்வத் வதூம் மத்வதேனே
இதி உக்த்வா யாதே ஜடாயௌ திவம் அத
ஸுஹ்ருத: ப்ராதனோ: ப்ரேத கார்யம்
க்ருண்ஹாநாம் தம் கபந்தம் ஜகநித சபரீம்
ப்ரேக்ஷ்ய பம்பாதடே த்வம்
ஸம்ப்ராப்த: வாதஸுநும் ப்ருசமுதிதமநா:
பாஹி வாதாலயேச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது மனைவியைத் தேடிச் செல்லும் வழியில் ஜடாயுவைக் கண்டாய். ஜடாயு உன்னிடம். இராவணன் என்னைத் தாக்கிவிட்டு உனது மனைவியை தூக்கிச் சென்றான் என்று கூறினார். அதன் பின்னர் அவர் இறந்தார். நண்பனான ஜடாயுவிற்கு வேண்டிய ஈமக்காரியங்களை நீ செய்தாய். வழியில் உன்னைப் பிடித்த கபந்தனை அழித்தாய். பம்பையின் நதிக்கரையில் சபரியைக் கண்டாய். அதன் பின்னர் அனுமனைச் சந்தித்தாய்; மிகவும் மகிழ்வு கொண்டாய். இத்தனை செயல்களைப் புரிந்தவனே! என்னைக் காக்க வேண்டும்.

***

1 நீத: ஸுக்ரீவமைத்ரீம் ததநு ஹனுமதா
துந்துபே: காயம் உச்சை:
க்ஷிப்த்வா அங்குஷ்டேந பூய: லுலுவித
யுகபத் பத்ரிணா ஸப்த ஸாலாந்
ஹத்வா ஸுக்ரீவ காதோத்யதம் அதுலபலம்
வாலிநம் வ்யாஜவ்ருத்யா
வர்ஷாவேலாம் அநைஷீ: விரஹதரலித:
த்வம் மதங்காச்ரமாந்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் அனுமன் மூலமாக சுக்ரீவனின் நட்பை நீ பெற்றாய். துந்துபி என்ற அசுரனின் உடலை உனது கால்கட்டை விரலால் மட்டுமே உயரமாகத் தூக்கி எறிந்து வெகுதூரம் சென்று விழும்படி செய்தாய். ஒரே

அம்பினால் ஏழு மரங்களை வீழ்த்தினாய். மிக அதிகமான வலிமை உடையவனும், சுக்ரீவனைக் கொல்ல எண்ணியவனும் ஆகிய வாலியைத் தந்திரமாகக் கொன்றாய். சீதையைப் பிரிந்த துக்கம் தாள முடியாமல் நீ மதங்க முனிவரின் ஆச்ரமத்தில் மழைக் காலத்தை கழித்தாய் அல்லவா?

2 ஸுக்ரீவேண அநுஜோக்த்யா ஸபயம் அபியதா
வ்யூஹிதாம் வாஹிநீம் தாம்
ருக்ஷாணாம் வீக்ஷ்ய திக்ஷு த்ருதம் அத
தயிதா மார்கணாய அவநம்ராம்
ஸந்தேசம் ச அங்குலீயம் பவந ஸுதகரே
ப்ராதிச: மோதசாலீ
மார்கே மார்கே மமார்கே கபிபிரபி: ததா
த்வத்ப்ரியா ஸப்ரயாஸை:

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் உனது தம்பி இலட்சுமணனின் சொற்களுக்கு இணங்க, அச்சத்துடன் உன்னிடம் சுக்ரீவன் வந்தான். அவனது படைகள் உனது துணைவியான சீதையைத் தேடுவதற்காக அணியாக நின்றன. இதனைக் கண்ட நீ மிகுந்த மகிழ்வு கொண்டாய். அதன் பின்னர், அனுமனின் கைகளில் உனது மோதிரத்தையும் செய்தியையும் அளித்தாய். உடனே, வானர வீரர்கள் அனைத்துத் திசைகளிலும் அனைத்து வழிகளிலும் உனது பிரியமான சீதையைத் தேடினர்.

3 த்வத் வார்த்தா கர்ணநோத்யத்கருதுரு
ஜவஸம்பாதி ஸம்பாதி வாக்ய
ப்ரோத்தீர்ணார்ணோதி: அந்தர் நகரி ஜனகஜாம்
வீக்ஷ்ய தத்வா அங்குலீயம்
ப்ரக்ஷுத்ய உத்யாநம் அக்ஷக்ஷபண சணரண:
ஸோடபந்த: தசாஸ்யம்
த்ருஷ்ட்வா ப்லுஷ்டவா ச லங்காம் ஜடிதி ஸ
ஹனுமான் மௌலிரத்நம் ததௌ தே

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது சரிதத்தைக் கேட்டவுடன் ஸம்பாதிக்கு சிறகுகள் முளைத்தன. அவர் சற்றே மேலே பறந்தார். அங்கிருந்து சீதையைக் கண்டார். அவருடைய

சொற்களைக் கேட்ட அனுமனும் கடலைத் தாண்டிச் சென்றான். அங்கு இருந்த இலங்கையின் நடுவில் ஜனகனின் மகளான சீதையைக் கண்டான். உனது மோதிரத்தைச் சீதையிடம் அளித்தான். அசோகவனத்தையே அழித்தான். தடுக்க வந்த அட்சய குமாரனைக் கொன்றான். பின்னர் (இந்திரஜித் தொடுத்த) ப்ரம்மாஸ்த்திரத்திற்குக் கட்டுப்பட்டான். இராவணனையும் கண்டான். இலங்கையை எரித்தான். பின்னர் விரைவாக உன்னிடம் வந்த (சீதை அளித்த) சூடாமணியைக் கொடுத்தான் அல்லவா?

4 த்வம் ஸுக்ரிவ அங்கதாதி ப்ரபல
கபிசமூ சக்ர விக்ராந்தபூமீ
சக்ர: அபிச்ரம்ய பாரே ஜலதி
நிசிசரேந்த்ரானுஜா ச்ரீயமாண:
தத்ப்ரோக்தாம் சத்ருவார்த்தாம் ரஹஸி
நிசமயந் ப்ரார்த்தநா பார்த்யரோஷ
ப்ராஸ்தாக்நேயாஸ்த்ர தேஜஸ்த்ரஸத்
உததிகிரா லப்தவாந் மத்ய மார்கம்

**பொருள் -** குருவாயூரப்பா! சுக்ரீவன், அங்கதன் போன்ற பலம் மிகுந்த வானர வீரர்களுடன் நீ, வானரக் கூட்டம் முழுவதுமாக ஆக்கிரமித்தபடி நின்ற இடத்திற்கு வந்தாய். அந்த சமுத்திரத்தின் கரையில் இராவணனின் தம்பியான விபீஷணன் உன்னிடம் தஞ்சம் புகுந்தான். அவன் உன்னிடம் எதிரிகளைப் பற்றி விரிவாகக் கூறினான். உன்னுடைய தாழ்மையான வேண்டுகோளை கேட்டும் சமுத்திரராஜன் அமைதியுடன் இருக்கவே நீ கோபம் கொண்டு ஆக்னேயாஸ்த்ரத்தை விடத் தயாரானாய். உடனே பயந்து போன சமுத்திரராஜன் உன்னிடம் வந்தான். அவன் கூறியபடி கடலின் நடுவே வழியை அமைத்தாய்.

5 கீசை: ஆசாந்தரோ பாஹ்ருத கிரிநிகரை:
ஸேதும் ஆதாப்ய யாத:
யதூநி ஆமர்த்ய தம்ஷ்டராநக சிகரி சிலா
ஸாலசஸ்த்ரை: ஸ்வஸைன்யை:
வ்யாகுர்வந் ஸாநுஜ: த்வம் ஸரமபுவி பரம்
விக்ரமம் சக்ரஜேத்ரா
வேகாந் நாகாஸ்த்ரபத்த: பதகபதி கருந்

மாருதை: மோசித: அபூ:

**பொருள் -** குருவாயூரப்பா! அனைத்து வானரங்களும் பல திசைகளில் இருந்தும் மலைகளைக் குவியல்களாகக் கொண்டு வந்தனர். அதனால் அணையைக் கட்டினாய். அதன் மூலம் இலங்கையை அடைந்தாய். அங்கு சென்று, பற்கள், நகங்கள், மலைகள், கற்கள் போன்றவற்றை மட்டுமே ஆயுதங்களாகக் கொண்டிருந்த உனது படைகளின் உதவியால் அசுரர்களை அழித்தாய். உனது தம்பியுடன் இணைந்து சிறந்த முறையில் போர் புரிந்தாய். அப்போது இந்திரஜித் கொடுத்த நாகாஸ்தி தரத்தால் கட்டப்பட்டாய். பின்னர் கருடனின் சிறகின் காற்று உன்மீது படவே மீண்டும் எழுந்தாய்.

6 ஸௌமித்ரி: து அத்ர சக்திப்ரஹ்ருதி
கலதஸு: வாத ஜாநீத சைல
க்ராணாத் ப்ராணாந் உபேத: வ்யக்ருணுத
குஸ்ருதிச்லாகிநம் மேகநாதம்
மாயா க்ஷோபேஷு வைபீஷண வசந
ஹ்ருத ஸ்தம்பந: கும்பகர்ணம்
ஸம்ப்ராப்தம் கம்பிதோர்வீதலம் அகில
சமூ பக்ஷிணம் வ்யக்ஷிணோ: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பா! சக்தி ஆயுதம் தாக்கியதால் இலட்சுமணன் மயக்கம் அடைந்து வீழ்ந்தான். உடனே அனுமனால் கொண்டு வரப்பட்ட ஸஞ்ஜீவினீ என்ற மலையில் உள்ள மூலிகையால் மயக்கம் தெளிந்தான். தனது மாய வித்தைகளால் கர்வம் கொண்டிருந்த இந்திரஜித்தை இலட்சுமணன் வீழ்த்தினான். நீ அந்தப் போரில் உண்டான மாயைகள் மூலம் கலக்கம் அடைந்தாய். ஆயினும் விபீஷணனின் வார்த்தைகள் மூலம் உனது மனக்கவலை நீங்கியது. அப்போது இந்தப் பூமியே அதிர்ந்து நடுக்கம் கொள்ளும்படியும், அனைத்துப் படைகளையும் உண்பவனும் ஆகிய கும்பகர்ணன் உன்னை நோக்கி வந்தபோது அவனைக் கொன்றாய்.

7 க்ருஹ்ணன் ஜம்பாரி ஸம்ப்ரேஷித
ரதகவசௌ ராவணேன அபியுத்யந்
ப்ரஹ்மாஸ்த்ரேண அஸ்ய பிந்தந் கலததிம்
அபலாம் அக்னிஸுத்தாம் ப்ரக்ருண்ஹந்

தேவச்ரேணீ வரோஜ் ஜீவித ஸமர ம்ருதை:
அக்ஷதை: ருக்ஷஸங்கை:
லங்காபர்த்ரா ச ஸாகம் நிஜ நகரமகா:
ஸப்ரிய; புஷ்பகேண

**பொருள் -** குருவாயூரப்பா! இந்திரன் உனக்குத் தேரையும் கவசத்தையும் அளித்தான். இவற்றை ஏற்ற நீ இராவணனுடன் யுத்தம் செய்தாய். அப்போது ப்ரம்மாஸ்திரம் மூலம் அவனது பத்துத் தலைகளையும் வெட்டினாய். அக்னிப் ப்ரவேசம் செய்த பரிசுத்தமான உனது மனைவியான சீதையை ஏற்றாய். தேவர்களின் உதவியால், உயிர் நீத்த அனைத்து வானரக் கூட்டமும் உயிர் பெற்றது. அவர்களுடனும், இலங்கையின் அதிபதியான விபீஷணனோடும், இலட்சுமணனோடும் புஷ்பக விமானம் ஏறிய நீ உனது நகரமான அயோத்திக்குச் சென்றாய்.

8 ப்ரீதோ திவ்ய அபிஷேகை: அயுதஸமதிகாந்
வத்ஸராந் பர்யரம்ஸீ:
மைதில்யாம் பாபவாசா சிவசிவ கில தாம்
கர்ப்பிணீம் அப்யஹாஸீ:
சத்ருக்னேன அர்தயித்வா லவண நிசிசரம்
ப்ரார்த்ய ஸுத்ரபாசம்
தாவத் வால்மீகி கேஹே க்ருவஸதி:
உபாஸுத ஸீதா ஸுதௌ தே

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னுடைய பட்டாபிஷேகம் மிகவும் திவ்யமாக நடந்தது. அதனால் மகிழ்வுற்ற நீ பல வருடம் சுகமாக வாழ்ந்தாய். சீதையைக் குறித்து படிப்பே இல்லாத ஒருவன் கூறிய பாவமான பேச்சைக் கேட்டு, கர்ப்பமாக இருந்த அவளைத் துறந்தாய். இது என்ன கஷ்டம் கஷ்டம் (சிவ சிவ) சத்ருக்னன், லவணன் என்ற அசுரனைக் கொன்றான். சம்பூகன் என்பவன் தகாத காரியம் செய்ய முயன்றபோது நீ அவனைக் கொன்றாய். வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் வசித்து வந்த சீதை இரண்டு மகன்களைப் பெற்றாள் அல்லவா?

9 வால்மீகே: த்வத்ஸுதோத்காபித மதுரக்ருதே:

ஆஜ்ஞயா யஜ்ஞவாடே
ஸீதாம் த்வயி ஆப்துகாமே க்ஷிதிம் அவிசத்
அஸௌ த்வம் ச காலார்த்தித: அபூ:
ஹேதா: ஸௌமித்ரிகாதீ ஸ்வயம் அத
ஸரயூ மக்ந நிச்சேஷ ப்ருத்யை:
ஸாகம் நாகம் ப்ரயாதோ நிஜபதமகமோ
தேவ வைகுண்ட மாத்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! யாகசாலைக்கு வந்த உனது இரண்டு மகன்களும், வால்மீகி முனிவரின் கட்டளையை ஏற்று இராமாயணத்தை மிகவும் இனிமையாகப் பாடினார்கள். நீ சீதையை ஏற்கச் சம்மதித்தாய். ஆனால் அப்போது சீதை இந்தப் பூமியின் உள்ளே சென்று மறைந்தாள். நீயும் யமனால் வைகுண்டம் செல்லும்படி வேண்டப்பட்டாய். ஒரு காரணத்திற்காக நீயே உனது தம்பியான இலட்சுமணனைத் துறந்து அவனுடைய இறப்பிற்குக் காரணமானாய். பின்னர் உனது சுற்றத்தாருடன் (அவர்கள் சரயு நதியில் மூழ்கினர்) உனது இடமான வைகுண்டம் சென்று அடைந்தாய்.

10 ஸ: அயம் மர்த்யாவதார; தவ கலு நியதம்
மர்த்ய சிக்ஷார்த்த மேவம்
விச்லேக்ஷார்த்தி: நிராகஸ்த்யஜநமபி பவேத்
காமதர்மாதி ஸக்த்யா
நோசேத் ஸ்வாத்மானுபூதே: க்வநு தவ மனஸ:
விக்ரியா சக்ரபாணே
ஸ த்வம் ஸத்வைகமூர்த்தே பவன புரபதே
வ்யாதுனு வ்யாதிதாபாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது இந்த மனித அவதாரம் பல படிப்பினைகளைக் கூறுவதற்கே ஆகும். அவையாவன - அன்பானவர்களைப் பிரிந்தால் துக்கம் உண்டாகும்: காமமும் தர்மமும் பற்று அதிகரித்தால் த்யாகத்தில் கொண்டு சேர்த்து விடும். சக்கரத்தைக் கைகளில் கொண்டவனே! பரிசுத்த ரூபனே! மாறுதல்கள் அற்றவனே! எனது வ்யாதிகளை நீ தீர்க்க வேண்டும்.

***

1 அத்ரே: புத்ரதயா புரா த்வம்
அநஸூயாயாம் ஹி தத்தாபிதோ

ஜாத: சிஷ்ய நிபந்த தந்த்ரித மநா:
ஸ்வஸ்த்தச் சரந் காந்தயா
த்ருஷ்டோ பக்ததமேந ஹேஹய
மஹீபாலேந தஸ்மை வராந்
அஷ்ட ஐச்வர்ய முகாந் ப்ரதாய
ததித ஸ்வேநைவ சாந்தே வதம்

**பொருள் -** குருவாயூரப்பனே! முன்பு ஒரு சமயம் அத்ரி முனிவருக்கும் அனஸூயா என்னும் அவர் மனைவிக்கும் தத்தர் என்னும் பெயர் கொண்டவனாகப் பிறந்தாய் அல்லவா? பல சீடர்கள் உன்னை அணுகவே, அவர்களின் தொடர்பு உன் த்யானத்திற்கு இடையூறாக உள்ளது என்று எண்ணி, உனது மனைவியுடன் பல இடங்களில் திரிந்தாய். சிறந்த பக்திமானாகிய ஹேஹய நாட்டு மன்னன் கார்த்தவீர்யார்ஜுனன் உன்னை வணங்கினான். உன்னிடம் இருந்து எட்டு வகையான செல்வங்களைப் பெற்றான். அவனை யமனால் கொல்ல முடியாது என்பதால், நீ மட்டுமே அவனைக் கொல்ல முடியும் என்று வரம் பெற்றான்.

2 ஸத்யம் கர்த்தும் அதார்ஜுநஸ்ய
ச வரம் தச்சக்தி மாத்ராநதம்
ப்ரஹ்மத்வேஷி ததாகிலம் ந்ருபகுலம்
ஹந்துஞ்ச பூமேர்பரம்
ஸஞ்ஜாதோ ஜமதக்னிதோ
ப்ருகுகுலே த்வம் ரேணுகாயாம் ஹரே
ராமோ நாம தத் ஆத்மஜேஷ்வவரஜ:
பித்ரோரதா: ஸம்மதம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது கைகளால்தான் கார்த்தவீர்யார்ஜுனனுக்கு மரணம் என்பதை உண்மை ஆக்குவதற்காகவும், அவனுக்குப் பயந்து ப்ராமணர்களைத் தூஷிக்கின்ற அரசர்கள் பூமிக்குப் பாரமாக உள்ளனர். என்றும் நீ எண்ணினாய். அந்த அரச குலங்களை அழிப்பதற்கும் நீ முடிவு செய்தாய். ப்ருகு முனிவரின் குலத்தில் உதித்த ஜமத்க்னி முனிவருக்கும் ரேணுகா தேவிக்கும், அவர்கள் கடைசி மகனாக நீ பிறந்தாய். பரசுராமன் என்று பெயர் கொண்டு, உன் பெற்றோர்களை மகிழ வைத்தாய்.

3 லம்தாம்நாய கணச்சதுர்தசவயா

கந்தர்வராஜே மநாக்
ஆஸக்தாம் கில மாதரம் ப்ரதி பிது:
க்ரோதாகுல: ஆஜ்ஞயா
தாதாஜ்ஞாதிகஸோதரை: ஸமம் இமாம்
சித்வாத சாந்தாத் பிது:
தேஷாம் ஜீவநயோகமாபித வரம்
மாதா ச தேதாத் வராந்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது பதினான்காவது வயதில் அனைத்து வேத பாடங்களையும் கற்றாய். ஒரு நாள் ஒரு கந்தர்வனிடம் உனது தாய் ரேணுகாதேவி சிறிது மனம் சஞ்சலம் கொண்டு விட்டாள். இதனால் உனது தந்தை கோபம் கொண்டார். உனது சகோதரர்களிடம் உனது தாயைக் கொன்று விடுமாறு உத்தரவிட்டார். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. உன்னிடம் அவர்களையும் தாயையும் கொன்றுவிடுமாறு உத்தர விட்டார். நீயும் அப்படியே செய்தாய். இதனால் மகிழ்வு கொண்ட உன் தந்தை உன்னை ஏதாவது வரம் கேட்கும்படி கூறினார். நீயும், கொல்லப்பட்ட அனைவரும் உயிர் பிழைக்க வேண்டும் என்று வரம் வேண்டவே, அவர்களும் பிழைத்தனர். உனது தாயார் மகிழ்வுடன் உனக்கு வரம் அளித்தாள் அல்லவா?

4 பித்ரா மாத்ருமுதே ஸ்தவாஹ்ருத
வியத்தேநோ: நிஜாதாச்ரமாத்
ப்ரஸ்தாயாத ப்ருகோர் கிரா
ஹிமகிராவாராத்ய கௌரீபதிம்
லப்த்வா தத்பரசும் தத் உக்த
தநுஜச்சேதீ மஹாஸ்த்ராதிகம்
ப்ராப்தோ மித்ரம் அதாக்ருத வ்ரணமுநிம்
ப்ராப்யாகம: ஸ்வாச்ரமம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தாயாரின் மகிழ்வுக்காக, உனது தந்தையால் மந்திரங்கள் மூலமாகக் காமதேனு (தேவலோகப் பசு) அந்த ஆசிரமத்திற்கு வரவழைக்கப்பட்டது. உனது பாட்டனார் கூறியபடி நீ இமயமலைக்குச் சென்று சிவனைக் குறித்துத் தவம் இயற்றினாய். அவரும் உன் முன்னால் தோன்றி பரசு என்னும் ஆயுதத்தை உனக்கு அளித்தார். அவர் கூறியபடி அசுரன் ஒருவனை அழித்தாய். மேலும் அங்கு இருந்த

அக்ருதவ்ரணர் என்ற முனிவரை நண்பராக அடைந்தாய். மீண்டும் உன் இருப்பிடம் வந்தாய்.

5 ஆகேடோப கத: அர்ஜுந: ஸுரகவீ
ஸம்ப்ராத ஸம்பத்கணை:
த்வத்பித்ரா பரிபூஜித: புரகதோ
துர்மந்த்ரி வாசா புந:
காம் க்ரேதும் ஸசிவம் ந்யயுங்க்த
குதியா தே நாபி ருந்தந் முநி
ப்ராணக்ஷேப ஸரோஷ கோஹத சமூ
சக்ரேண வத்ஸ: ஹ்ருத:

**பொருள் -** குருவாயூரப்பனே! ஒருநாள் கார்த்த வீர்யார்ஜுனன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். பின்னர் உன் ஆசிரமத்திற்கு வந்தான். உன் தந்தை காமதேனு மூலமாகக் கிடைத்தவற்றை அவனுக்கு அளித்தார். அவன் நாட்டிற்குத் திரும்பியவுடன், தனது மந்திரியின் தகாத உபதேசங்களால் காமதேனுவை விலைக்கு வாங்க விருப்பம் கொண்டான். அதற்காகத் தனது படைகளையும் மந்திரி ஒருவனையும் அனுப்பினான். உனது தந்தை சம்மதிக்காமல் போகவே மந்திரி உனது தந்தையை கொன்றான். இதனைக் கண்டு கோபம் கொண்ட காமதேனு அந்தப் படைகளைத் தாக்கி அழித்தது. இருப்பினும் காமதேனுவை அவன் கைப்பற்றினான்.

6 சுக்ரோஜ்ஜீவித தாதவாக்ய சலித
க்ரோதோ அத ஸக்யா ஸமம்
விப்ரத் த்யாத மஹோதரோப நிஹிதம்
சாபம் குடாரம் சராந்
ஆரூட: ஸஹவாஹயந்த்ருகரதம்
மாஹிஷ்மதீமாவிசந்
வாக்பிர்வத்ஸமதாசுஷி க்ஷிதிபதௌ
ஸம்ப்ராஸ்துதா: ஸங்கரம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தந்தையின் உயிரை சுக்ராச்சாரியார் மீட்டார். உனது தந்தையிடம் நடந்ததைக் கேட்டாய். உடனே சிவனிடம் ப்ரார்த்தனை செய்தாய்.

அப்போது தோன்றிய மஹோதரன் என்ற சிவதூதன் கொடுத்த கோடாரி, வில், அம்பு, குதிரை, தேர் ஆகியவற்றை ஏற்றாய். உனது நண்பரான அக்ருதவ்ரணருடன் மாஹிஷ்மதி என்ற நாட்டிற்குச் சென்றாய். காமதேனுவைத் திரும்பத் தரும்படி கேட்டாய். தர மறுத்ததால் யுத்தம் தொடங்கினாய்.

7 புத்ராணாம் அயுதேந ஸப்ததசபிச
அக்ஷௌஹிணீபி: மஹா
ஸோநாநீபி: அநேக மித்ர நிவஹைஹ:
வ்யாஜ்ரும்பிதாயோதன:
ஸத்யஸத்வக்க குடார பாண விதலந்
நிச்சேஷ ஸைந்யோத்கரோ
பீதி ப்ரத்ருத நஷ்ட சிஷ்டதநயஸ்
த்வாமாபதத்ஹேஹய:

**பொருள் -** குருவாயூரப்பா! கார்த்தவீர்யன் தனது பதினாயிரம் மகன்களுடனும், பதினேழு அக்ஷௌஹிணி படைகளுடனும், மிகப் பெரிய சேனாதிபதிகளுடனும். நண்பர்களுடனும் சேர்ந்து உன்னுடன் யுத்தம் செய்தான். ஒரே நேரத்தில் நீ உனது ஆயுதங்களால் அந்தச் சேனையை அழித்தாய். பலர் ஓடிவிட்டனர். பலர் இறந்தனர். மீதம் இருந்த மகன்களுடன் கார்த்தவீர்யன் உன்னிடம் யுத்தம் செய்தான் அல்லவா?

8 லீலாவாரித நர்மதாஜல
வலல்லங்கேச கர்வாபஹ
ஸ்ரீமத்பாஹு ஸஹஸ்ரம் உக்த
பஹுசஸ்த்ராஸ்த்ரம் நிருந்தந்நமும்
சக்ரே த்வய்யத வைஷ்ணவேபி விடலே
புத்த்வா ஹரிம் த்வாம் முதா
த்யாயந்தம் சித ஸர்வ தோஷம் அவதீ: ஸ:
அகத்பரம் தே பதம்

பொருள்; குருவாயூரப்பனே! ஒரு முறை கார்த்த வீர்யன் பொழுது போக்குவதற்காகத் தனது ஆயிரம் கைகளைக் கொண்டு நர்மதை ஆற்றின் ஓட்டத்தையே நிறுத்தினான். இதனால் இராவணனின் கர்வத்தை அவன் அடக்கினான். அவன் உன்மீது தனது ஆயிரம்

கைகளாலும் ஏவிய அஸ்திரங்களைத் தடுத்தாய். அவன் உன் மீது எறிந்த விஷ்ணு சக்ரமும் பயனில்லாமல் போனது. இதன்மூலம் நீ விஷ்ணு என்று அவன் உணர்ந்தான். உன்னைத் த்யானிக்கத் தொடங்கினான். இதன் மூலம் அவனைப் பீடித்திருந்தத் தோஷங்கள் நீங்கின. அவனை நீ வதம் செய்தவுடன் வைகுண்டம் அடைந்தான்.

9 பூய: அமர்ஷித ஹேஹய ஆத்மஜ கணை:
தாதே ஹதே ரேணுகாம்
ஆகநாநாம் ஹ்ருதயம் நிரீக்ஷ்ய பஹுசோ
கோராம் ப்ரதிஜ்ஞாம் வஹந்
த்யாநாநீத ரதாயுதஸ்த்வம் அக்ருதா
விப்ரத்ருஹ: க்ஷத்ரியாந்
திக்சக்ரேஷு குடாரயந் விசிகயந் நி:
க்ஷத்ரியாம் மேதிநீம்

**பொருள் -** குருவாயூரப்பனே! இதனால் கோபம் கொண்ட கார்த்தவீர்யனின் மகன்கள் உனது தந்தையைக் கொன்றனர். இதனால் உனது தாய் ரேணுகாதேவி இருப்பது ஒரு முறை மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள். அதனைக் கண்ட நீ மனம் பொறுக்காமல் இருப்பது ஒரு முறை க்ஷத்ரியர்களைக் கொல்வதாகச் சபதம் பூண்டாய். த்யானத்தின் மூலமாக தேரையும், வில் அம்புகளையும் பெற்றாய். எங்கும் உள்ள ப்ராமணர்களின் துவேஹிகளான க்ஷத்ரியர்களைக் கொன்றாய். இதனால் இந்தப் பூமியில் க்ஷத்ரியர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கினாய்.

10 தாதோஜ்ஜீவநக்ருந் ந்ருபாலககுலம்
த்ரிஸ்ஸப்தக்ருத்வோ ஜயந்
ஸந்தார்ப்யாத ஸமந்த பஞ்சக
மஹாரக்த ஹ்ரெதளக பித்ரூந்
யஜ்ஞே க்ஷ்மாமபி காச்யபாதிஷு
திசந் ஸால்வேந யுத்யந் புந:
க்ருஷ்ண: அமும் நிஹநிஷ்யதீதி
சமிதோ யுத்தாத் குமார: பவாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! உனது தந்தையின் உயிரை மீண்டும் மீட்டாய். இருப்பது ஒரு தலைமுறை க்ஷத்ரிய குலத்தை அழித்தாய். பின்னர் ஸமந்த பஞ்சகம் என்ற இடத்தில் பெரிய மடுவில் உனது பித்ருகளுக்குத் தர்ப்பணம் செய்தாய். பின்னர் யாகத்தில் காச்யபர் முதலான முனிவர்களுக்கு நிலங்களை அளித்தாய். ஸால்வன் என்ற மன்னனுடன் யுத்தம் செய்தாய். ஸனத்குமாரர் மூலமாக, ஸால்வனைக் க்ருஷ்ணன் கொல்லப்போகிறான் என்று உணர்ந்து அவனை விட்டாய்.

11 ந்யஸ்யாஸ்த்ராணி மஹேந்த்ர பூப்ருதி
தபஸ்தந்வந் புநர் மஜ்ஜிதாம்
கோகர்ணாவதி ஸாகரேண தரணீம்
த்ருஷ்ட்வார்த்தி தஸ்தாபஸை:
த்த்யாதேஷ்வாஸத்ருதா நலாஸ்த்ர
சகிதம் ஸிந்தும் ஸ்ருவக்ஷேபணாத்
உத்ஸார்யோத்த்ருத கேரள:
ப்ருகுபதே வாதேச ஸம்ரக்ஷ மாம்

**பொருள் -** ப்ருகு குலத்தவனே! குருவாயூரப்பனே! உனது அஸ்திரங்கள் அனைத்தையும் மஹேந்திர மலையில் வைத்துவிட்டுத் தவம் புரிந்தாய். அந்த நேரம் கோகர்ணம் என்ற பகுதி வரை உள்ள பூமி, நிலத்தில் மூழ்குவதாக உன்னிடம் முனிவர்கள் வேண்டினர். பின்னர் த்யானத்தின் மூலம் ஆக்நேயாஸ்த்ரத்தைத் தொடுத்தாய். இதனைக் கண்டு ஸமுத்திரராஜன் பயந்து நடுங்கினான். நீ ஸ்ருவம் என்ற பாத்திரத்தை எறிந்தாய். அந்தப் பாத்திரம் விழும் இடம் வரை உள்ள ஸமுத்திரத்தை பின்வாங்கச் செய்தாய். இதன் மூலம் கேரள நாட்டை மூழ்காமல் காத்தாய். என்னையும் காக்க வேண்டும்.

***

1 ஸாந்த்ரா நந்ததனோ ஹரே நநு புரா
தைவாஸுரே ஸங்கரே
த்வத்க்ருத்தா அபி கர்மசேஷ வசதோ
யே தே ந ஆதா கதிம்
தேஷாம் பூதலஜந்மநாம்
திதிபுவாம் பாரேண தூரார்திதா
பூமி: ப்ராப விரிஞ்சமாச்ரிதபதம்
தேவை: புரைவாகதை:

**பொருள் -** ஆனந்தமே வடிவமாக நிற்பவனே! குருவாயூரப்பா! முன்னர் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில், உனது அடியவர்களான தேவர்களைக் காப்பாற்ற, பல அசுரர்களை நீ கொன்றாய். அப்படி உன்னால் கொல்லப்பட்ட அசுரர்கள் மோட்சம் பெற்றனர். ஆனால் காலநேமி போன்ற அசுரர்களுக்கு பாவ புண்ணியங்கள் மீதம் இருந்தன. இதனால் அவர்கள் பூமியில் மீண்டும் பிறந்தனர். இவர்கள் போன்று அசுரர்களின் பாரம் தாங்காமல் பூதேவி வருந்தயபடி ப்ரும்மாவிடம் முறையிடச் சென்றாள். ஆனால் அதற்கு முன்பாகவே தேவர்கள் அங்கே இருந்தனர். (உன்னை வேண்டினர்).

2 ஹா ஹா துர்ஜநபூரி பாரமதிதாம்
பாதோ நிதௌ பாதுகாம்
ஏதாம் பாலய ஹந்த மே விவ சதாம்
ஸம்ப்ருச்ச தேவாநிமாம்
இத்யாதி ப்ரசுர ப்ரலாப விவசாம்
ஆலோக்ய தாதா மஹீம்
தேவாநாம் வதநாநி வீக்ஷ்ய பரிதோ
தத்யௌ பவந்தம் ஹரே

**பொருள் -** குருவாயூரப்பா! பூதேவி ப்ரும்மாவிடம், கஷ்டம்! கஷ்டம்! தீயவர்கள் பாரத்ததால் நான் துக்கப்படுகிறேன். இதனால் நான் துக்கம் என்ற கடலில் மூழ்குகிறேன். எனது இந்த அவல நிலையை நீங்கள் தேவர்களிடம் கேட்டு அறிந்து கொள்க! என்று கூறினாள். இதனைக் கேட்ட ப்ரும்மா அவள் நிலையையும், அங்கிருந்த தேவர்களையும் பார்த்தார், பின்னர் உன்னைத் த்யானிக்கத் தொடங்கினார்.

3 ஊசே ச அம்புஜ பூ: அமூந் அயி
ஸுரா: ஸத்யம் தரித்ரியா வச:
நத்வஸ்யா பவதாம் ச ரக்ஷண விதௌ
தசேஷா ஹி லக்ஷ்மீபதி:
ஸர்வே சர்வபுரஸ்ஸரா வயமிதோ
கத்வா பயோவாரிதிம்
நத்வா தம் ஸ்துமஹே ஜவாதிதி
யயு: ஸாகம் தவாகேதநம்

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ரும்மா அவர்களிடம், பூமிதேவி கூறியதை நான் உண்மை என்று ஞானப்பார்வை மூலம் அறிந்தேன். லட்சுமியின் நாயகனான ஹரி ஒருவன் மட்டுமே உங்களையும் பூமியையும் காக்க முடியும். சிவனையும் அழைத்துக் கொண்டு நாம் அனைவரும் விரைவாகத் திருப்பாற் கடல் செல்வோம். அங்கு அவனை வணங்குவோம் என்றார். பின்னர் அனைவருமாக உனது இடத்திற்கு வந்தனர் அல்லவா?

4 தே முக்தாநிலகாலி துக்தஜலதேஸ்
தீரம்கதா: ஸங்கதா:
யாவத் த்வத்பத சிந்தநைக மநஸஸ்
தாவத்ஸ பரதோஜ பூ:
த்வத்வாசம் ஹ்ருதயே நிசம்ய ஸகலாந்
ஆநந்தயந்ஊசிவாந்
ஆக்யாத: பரமாத்மநா ஸ்வயம்
அஹம் வாக்யம் ததாகர்ணயதாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! பின்னர் ப்ரும்மா. சிவன் முதலானோர் இணைந்து குளிர்வாகவும் மணம் வீசுவதாகவும் உள்ள காற்றைக் கொண்டுள்ள பாற்கடலை அடைந்தனர். அங்கு உன்னைத் த்யானித்தனர். அப்போது நீ ப்ரும்மாவுக்கு மாத்திரம் உனது உள்ளத்தில் தோன்றியதை அவர் உள்ளத்தில் தெரியச் செய்தாய். அவர் தேவர்களிடம் நீ கூறியதை கூறப் போவதாகக் கூறினார்.

5 ஜாநே தீந தசாமஹம் திவிஷதாம்
பூமேச்ச பீமைர் ந்ருபை:
தத்க்ஷேபாய பவாமி யாதவகுலே
ஸோஹம் ஸமக்ராத்மநா
தேவா வ்ருஷ்ணிகுலே பவந்து
கலயா தேவாங்க நாச்சாவநௌ
மத்ஸேவார்த்தம் இதி த்வதீயவசநம்
பாதோஜபூ: ஊசிவாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ கூறியதாக ப்ரும்மா கூறிய சொற்கள் அசுரர்களால் தேவர்களுக்கும் பூமிதேவிக்கும் உண்டாகிய துக்கத்தை நான் அறிவேன். இவர்களுடைய துயரங்களை நீக்குவதற்காக நான் யாதவகுலத்தில் என்னுடைய பரிபூர்ண உருவத்துடன் பிறப்பேன். தேவர்கள் வ்ருஷ்ணி குலத்தில் பிறப்பார்கள். தேவலோகப் பெண்கள் அவர்களுடன் பூமியில் பிறப்பார்கள்.

6 ச்ருத்வா கர்ணரஸாயனம் தவ வச:
ஸர்வேஷு நிர்வாபித
ஸ்வாந்தேஷ்வீச கதேஷு தாவக
க்ருபா பீயூஷ த்ருப்தாத்மஸு
விக்யாதே மதுராபுரே கில பவத்
ஸாந்நித்ய புண்யோத்தரே
தந்யாம் தேவக நந்தநாம் உதவஹத்
ராஜா ஸ சூராத்மஜ:

**பொருள் -** குருவாயூரப்பனே! காதுகளுக்கு இனிமை அளிப்பதான உனது சொற்களை (ப்ரும்மா மூலமாக) தேவர்கள் கேட்டனர். அவர்கள் மனதில் இருந்த சோகம் நீங்கியது. உனது கருணையால் மகிழ்வுடன் சென்றனர். உன்னுடைய சாந்நித்யத்தால் மிகவும் புண்ணியமாகவும் சிறப்புற்றும் விளங்கிய மதுராபுரியின் அரசனாக சூரஸேனன் என்பவன் இருந்தான். அவனுடைய மகன் தேவகனின் மகளான தேவகியை, வஸுதேவர் மணந்து கொண்டார் அல்லவா?

7 உத்வாஹாவஸிதௌ ததீய ஸஹஜ:
கம்ஸ: அத ஸம்மாநயந்
ஏதௌ ஸூததயா கத: பதி ரதே
வ்யோமோத்தயா த்வத்கிரா
அஸ்யாஸ்த்வாம் அதிதுஷ்டம் அஷ்டம
ஸுதோ ஹந்தேதி ஹந்தேரித:
ஸந்த்ராஸாத்ஸ து ஹந்துமந்திக
கதாம் தந்வீம் க்ருபாணீமதாத்

**பொருள் -** குருவாயூரப்பா! திருமணம் முடிந்த பின்னர் இருவரும் வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர். அவர்களைக் கவுரப்படுத்தும் வகையில், தேவகியின் சகோதரனான கம்ஸன்,

தானே அவர்கள் தேரை ஓட்டிச் சென்றான். அந்த நேரம் வானத்தில் ஓர் அசரீரி. மிகவும் கொடியவனான உன்னை இவர்களது எட்டாவது மகன் கொன்று விடுவான். என்று கேட்டது. இதனைக் கேட்ட கம்ஸன் பயத்துடனும், கோபத்துடனும் அருகில் இருந்த தேவகியைக் கொல்வதற்காகத் தனது கத்தியை எடுத்தான். கொடுமை!

8 க்ருஹ்ணானச் சிகுரேஷு தாம் கலமதி:
சௌரேச்சிரம் ஸாந்த்வநை:
நோ முஞ்சந் புனராத்மஜார்ப்பண கிரா
ப்ரீதோ அத யாதோ க்ருஹாந்
ஆத்யம் த்வத்ஸஹஜம் ததா அர்ப்பிதம்
அபி ஸ்நேஹேந நாஹந்நஸௌ
துஷ்டாநாம் அபி தேவ புஷ்டகருணா
த்ருஷ்டா ஹி தீரேகதா

**பொருள் -** குருவாயூரப்பனே! அறிவற்ற கம்ஸன் தேவகியின் கூந்தலைப் பற்றி இழுத்தான். வஸுதேவர் சமாதானம் கூற முயன்றும் அவன் விடவில்லை. வஸுதேவர், தனக்குப் பிறக்கும் குழந்தைகளை அவனிடமே தருவதாகக் கூறினார். இதற்கு இணங்கிக் கம்ஸன் அவளை விடுத்தான். இதன்படி தனக்குப் பிறந்த முதல் குழந்தையை, உனது சகோதரனை, கம்ஸனிடம் அளித்தார். ஆயினும் மனம் இரங்கி அவன் அந்தக் குழந்தையைக் கொல்லவில்லை. சில நேரங்களில் கொடியவர்களுக்கு கருணை தோன்றுவது வியப்பே!

9 தாவத்த்வந் மநஸைவ நாரதமுநி:
ப்ரோசே ஸ போஜேச்வரம்
யூயம் நந்வஸுரா: ஸுராச்ச யதவோ
ஜாநாஸி கிம் ந ப்ரபோ
மாயாவீ ஸ ஹரி: பவத் வதக்ருதே
பாவீ ஸுரப்பரார்த்தநாத்
இத்யாகர்ண்ய யதூநதூதுநதஸௌ
சௌரேச்ச ஸுநூந ஹந்

பொருள்; குருவாயூரப்பா! அந்த நேரம் உனது எண்ணத்தால் நாரதர் அங்கு வந்தார். அவர் கம்ஸனிடம், ப்ரபுவே! நீ அசுரர் அல்லவா? யாதவர்கள் தேவர்கள் அல்லவா?

மாயாவியான மஹாவிஷ்ணு உன்னைக் கொல்லவே யாதவக் குலத்தில் தோன்றப் போகிறான் என்றார். இதனைக் கேட்ட கம்ஸன் வஸுதேவரின் பிள்ளைகளைக் கொன்றான். யாதவர்களையும் விரட்டியடித்தான்.

10 ப்ராப்தே ஸப்தம கர்ப்பதாம் அஹிபதௌ
த்வத் ப்ரேரணாந்மாயயா
நீதே மாதவ ரோஹிணீம் த்வம் அபி போ:
ஸச்சித்ஸுகைகாத்மக:
நேவக்யா ஜடரம் விவிசித விபோ
ஸம்ஸ்தூயமாந: ஸுரை:
ஸ த்வம் க்ருஷ்ண விதூய ரோகபடலீம்
பக்திம் பராம் தேஹி மே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மாதவனே! தேவகியின் ஏழாவது கர்ப்பத்தில் ஆதிசேஷன் தோன்ற, உன் கட்டளைப்படி அந்த கர்ப்பத்தை யோகமாயை ரோஹிணியின் வயிற்றில் சேர்த்தாள். ஆனந்தமே வடிவமாக உள்ள நீ, தேவகியின் கர்ப்பத்தில் நுழைந்தாய். உன்னைத் தேவர்கள் துதித்தனர் அல்லவா? இப்படியான செயல்கள் புரிந்த நீ, எனது பிணிகளை நீக்கி, உன்னிடத்தில் மிகுந்த பக்தி உண்டாக்க வேண்டும்.
***

1 ஆனந்த ரூப பகவந் அயி தேவதாரே
ப்ராப்தே ப்ரதீப்த பவதங்க நிரீயமாணை:
காந்தி வ்ரஜைரிவ கநாகந மண்டலை: த்யாம்
ஆவ்ருண்வதீ விருருசே கில வர்ஷவேலா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஆனந்த வடிவவே! நீ பிறந்த நேரம் வந்தபோது வானம் முழுவதும் மழை மேகங்களால் மூடப்பட்டு இருந்தன. உன்னுடைய நீல நிறமான மேனியில் தோன்றிய நிறத்தைப் போன்றே அவை இருந்தன.

2 ஆசாஸு சீதலதராஸு பயோத தோயை:
ஆசாஸிதாப்தி விவசேஷு ச ஸஜ்ஜநேஷு
நைசாகர: உதயவிதௌ நிசி மத்யமாயாம்
க்லேசாபஹஸ்த்ரிஜகதாம் த்வம் இஹ ஆவிராஸீ:

பொருள்; க்ருஷ்ணா! குருவாயூரப்பனே! மழை பொழிந்து அனைத்து திசைகளிலும் நன்கு குளிர்ந்து இருந்தது. நல்லவர்கள் எண்ணம் அனைத்தும் கைகூடுவதால் அவர்கள் மகிழ்ந்தனர். இப்படிப்பட்ட நேரத்தில், நடு இரவில், சந்திரன் உதயமாகும்போது, இந்த உலகில் உள்ள துன்பங்களை நீக்குபவனாக நீ பூமியில் க்ருஷ்ணனாகத் தோன்றினாய் அல்லவா?

3 பால்ய ஸ்ப்ருசாபி வபுஷா தநுஷா விபூதி:
உத்யத் க்ரீட கடகாங்கத ஹரா பாஸா
சங்காரி வாரிஜ கதா பரிபாஸிதேந
மேகாஸிதேந பரிலேஸித ஸுதிகேஹே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ குழந்தையாக இருந்த போதிலும் பலவிதமான ஐச்வர்யங்களை உடையவனாக ஒளிவீசும் க்ரீடம், தங்க வளையல்கள், தோள்வளை ஹாரம் ஆகிய இவற்றால் ஒளியுடையதும், சங்கு, சக்கரம், தாமரை, கதை ஆகியவற்றால் விளங்குவதும் ஆகிய நீலமேக வண்ணனாக இருந்தாய் அல்லவா?

4 வக்ஷ: ஸ்த்தலீ ஸுகநிலீந விலாஸி லக்ஷ்மீ
மந்தாக்ஷ லக்ஷித கடாக்ஷ விமோக்ஷ பேதை:
தந்மந்திரஸ்ய கல கம்ஸ க்ருதாம் அலக்ஷ்மீம்
உந்மார்ஜயந்நிவ விரேஜித வாஸுதேவ

பொருள்; க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வாஸுதேவனே! உனது திருமார்பில் மிகவும் சுகமாக மஹாலக்ஷ்மி அமர்ந்திருந்தாள். அவளது கடைக்கண் பார்வை அந்த அறையின் மீது பட்டது. அந்த அறையில் இதுவரை கம்ஸனால் ஏற்பட்டிருந்த அவலக்ஷ்மியின் ஆதித்தம் அகன்றது. இப்படியாக நீ மங்களகரமாக இருந்தாய்.

5 சௌரிஸ்து தீரமுநி மண்டல சேதஸ: அபி
தூரஸ்த்திதம் வபுருதீக்ஷ்ய நிஜேக்ஷணாப்யாம்
ஆனந்தபாஷ்ப புலகோத்கம கத்கதார்த்ர:
துஷ்டாவ த்ருஷ்டி மகரந்த ரஸம் பவந்தம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மிகுந்த ஞானிகளான முனிவர்கள் மனதிற்குக் கூட எட்டாத உனது திருமேனியை வஸுதேவர் தன் கண்களால் கண்டார். கண்களில் ஆன்ந்தக் கண்ணீர் பெருகியது. மயிர்க்கூச்சல் அடைந்தார்; நெஞ்சம் தழுதழுத்தது. மிகுந்த அன்புடன் மகரந்தரஸம் போன்று இருந்த உன்னைத் துதித்தார்.

6 தேவ ப்ரஸீத பரபூருஷ தாபவல்லீ
நிர்லூ நிதாத்ர ஸமநேத்ர கலாவிலாஸிந்
கேதாந பாகுரு க்ருபாகுருபி: கடாக்ஷை:
இத்யாதி தேந முதிதேந சிரம் நுதோ ஆபூ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை வாஸுதேவர் எப்படித் துதித்தார் - தேவனே! பரம புருஷனே! வேதனைகளான கொடிகளை அறுக்கும் வாள் போன்றவனே! அனைவரையும் ஆள்பவனே! உனது லீலைகள் மூலம் பெருமை பெற்றவனே! கருணை பொங்கும் உனது கடைக்கண் பார்வை மூலம் என் துயரங்களை நீக்க வேண்டும் - என்று நீண்ட நேரம் துதித்தார்.

7 மாத்ரா ச நேத்ர ஸலிலாஸ்த்ருத காத்ரவல்யா
ஸ்தோத்ரை ரபிஷ்டுத குண: கருணாலயஸ்த்வம்
ப்ராசீநஜந்ம யுகலம் ப்ரதிபோத்ய தாப்யாம்
மாதுர்கிரா ததித மாநுஷ பால வேஷம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஆனந்தக் கண்ணீரால் நனைந்த கொடி போன்ற உனது தாய் தேவகி உன்னைத் துதித்தாள். நீ உனது தாய் தந்தைக்கு அவர்களின் முந்தைய இரண்டு பிறவிகளைப் பற்றிக் கூறினாய். கருணையே உருவான நீ, உனது தாய் உன்னை வேண்டியவுடன் மனிதக் குழந்தையாக உருவம் கொண்டாய். (முந்தைய பிறவிகள்: அதிதி + காச்யபர்: ப்ருச்நி + ஸுதபஸ்)

8 த்வத் ப்ரேரிதஸ்ததநு நந்த தநூஜயா தே
வ்யத்யாஸ மாரசயிதும் ஸ ஹி சூரஸூநு:
த்வாம் ஹஸ்தயோரதித சித்த விதார்யம் ஆர்யை:
அம்போருஹஸ்த கலஹம்ஸ கிசோர ரம்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் உன்னை நந்தகோபரின் இல்லத்தில் கொண்டு விடும்படி வஸுதேவரை பணித்தாய். இதனால் யோகிகளாலும் தங்கள் மனதில் பதிக்கப்பட வேண்டியவரான வஸுதேவர், தாமரை மலரில் உறங்கும் அன்னத்தின் குஞ்சு போன்று அழகுடன் இருந்த உன்னை தனது கைகளில் எடுத்துக் கொண்டார்.

9 ஜாதா ததா பசுபஸத்மநி யோகநித்ரா
நித்ரா விமுத்ரிதம் அதாக்ருத பௌரலோகம்
த்வத் ப்ரேரணாத் கிமிவ சித்ரமசேதநைர்யத்
த்வாரை: ஸ்வயம் வ்யகடி ஸங்கடிதை: ஸுகாடம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய கட்டளையின்படி யோகமாயை நந்தகோபர் வசித்த கிராமத்தில் அவதரித்தாள். அங்கு உள்ள அனைவரும் அவளால் தூங்க வைக்கப்பட்டனர். கம்சனின் சிறையில் நீ இருந்த அறையின் வாயிலில் இருந்து பூட்டுகள். கதவுகள் தாமாகவே திறந்ததாமே! என்ன வியப்பு!

10 சேஷேண பூரிபணவாரித வாரிணா அத
ஸ்வைரம் ப்ரதர்சிதபதோ மணிதீபிதேன
த்வாம் தாரயந் ஸ கலு தந்யதம: ப்ரதஸ்த்தே
ஸ: அயம் த்வம் ஈச மம நாசய ரோகவேகாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அளவற்ற புண்ணியம் செய்திருந்த வஸுதேவர் உன்னை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் (கோகுலத்திற்கு). அப்போது பெய்த மழையைக் குடைபோல் தனது படங்கள் மூலமாக ஆதிசேஷன் தடுத்தான். இரவு சூழ்ந்திருந்த அந்த வேளையில் தனது மாணிக்கம் மூலமாக பாதையைக் காண்பித்தான். உன்னுடன் தொடர்ந்து வந்தான். என்னுடைய பிணிகளை நீ நீக்க வேண்டும்.

***

1 பவந்தம் அயம் உத்வஹந் யதுகுல உத்வஹ: நிஸ்ஸரன்
ததர்ச ககநோச்சலஜ்ஜல பராம் கலிந்தாத்மஜாம்
அஹோ ஸலில ஸஞ்சய: ஸ புநரைந்த்ர ஜாலோதிதோ

ஜலௌக இவ தத்க்ஷணாத் ப்ரபதமேயதா மாயயௌ

**பொருள் -** குருவாயூரப்பனே! யது குலத்தில் உத்தமராக விளங்கிய வஸுதேவர் உன்னைத் தூக்கிக் கொண்டு வரும் வழியில், வானம் வரை உயரமாக எழுப்பும் அலைகளை உடைய யமுனை நதியைக் கண்டார். ஆயினும் அவர் அந்த நதியின் அருகில் சென்றதும் இந்திரஜாலம் போன்று, வெள்ள நீர் வடிந்து, அவர் கணுக்கால் அளவே வந்தது அல்லாவா? என்ன வியப்பு.

2 ப்ரஸுப்த பசுபாலிகாம் நிப்ருத மாருதத்பாலிகாம்
ஆபாவ்ருத கவாடிகாம் பசுபவாடிகாம் ஆவிசந்
பவந்தமய மர்ப்பயந் ப்ரஸவதல்பகே தத்பதாத்
வஹந் கபட கந்யகாம் ஸ்வபுரமாகதோ வேகத:

**பொருள் -** குருவாயூரப்பனே! வஸுதேவர் கோகுலத்திற்குச் சென்றபோது (உனது மாயை மூலம்) அனைவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். நந்தகோபர் வீட்டில் இருந்த மாயையான பெண் குழந்தை மெதுவாக அழுதது (வஸுதேவருக்கு வீட்டைக் காண்பிப்பது போல்). அந்த வீட்டின் கதவுகள் திறந்திருந்தன. நந்தகோபரின் வீட்டினுள் வஸுதேவர் சென்றார். யசோதையின் ப்ரஸவப் படுக்கையில் உன்னை வைத்தார். அந்தப் படுக்கையில் இருந்த மாயக் குழந்தையை எடுத்துக் கொண்டு தனது இருப்பிடத்திற்கு விரைவாக வந்தார்.

3 ததஸ்த்வ தநுஜாரவ க்ஷபித நித்ரவேக த்ரவத்
படோத்கர நிவேதித ப்ரஸவ வார்த்தயைவ ஆர்த்திமாந்
விமுக்த சிகுரோத்கர ஸ்த்வரித மாபதந் போஜராட்
அதுஷ்ட இவ த்ருஷ்டவாந் பகிநிகாரே கன்யகாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய சகோதரியான அந்தப் பெண் அழுவதைக் கேட்டு காவலர்கள் கண் விழித்தனர். குழந்தை பிறந்த விவரத்தைக் கம்சனிடம் சென்று கூறினர். இதனைக் கேட்ட கம்சன் மிகுந்த மன வருத்தம் கொண்டு, விரித்த தலையுடன் விரைவாக சிறைக்கு வந்தான். அந்தக் கொடியவன் தனது தங்கையிடம் ஒரு பெண் குழந்தை இருந்ததைக் கண்டு மனம் கலங்கி நின்றான்.

4 த்ருவம் கபடசாலிநோ மதுஹரஸ்ய மாயா பவேத்
அஸாவிதி கிசோரிகாம் பகிநிகா கராலிங்கிதாம்
த்விபோ நலிநி காந்தராதிவ ம்ருணாலிகாமாக்ஷிபந்
அயம் த்வத் அநுஜாமஜாம் உபல பட்டகே பிஷ்டவாந்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தக் குழந்தையைக் கண்ட கம்சன், இந்தக் குழந்தை மது என்ற அரக்கனை அழித்த ஹரியின் மாயையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தான். அந்தக் குழந்தையை, யானை ஒன்று குளத்தில் இருந்து தாமரை ஒன்றை வெகு அலட்சியமாகப் பறிப்பது போன்று, தேவகியிடம் இருந்து இழுத்தான். உன் தங்கையான, பிறப்பற்ற அந்தக் குழந்தையை மிகவும் வேகமாக அங்கு இருந்த பாறையில் அடித்தான்.

5 ததோ பவத் உபாஸகோ ஜடிதி ம்ருத்யுபாசாதிவ
ப்ரமுச்ய தரஸைவ ஸா ஸமதிரூட ரூபாந்தரா
அதஸ்தலம் அஜக்முஷீ விகஸந் அஷ்ட பாஹுஸ்புரந்
மஹாயுதமஹோ கதா கில விஹாயஸா வித்யுதே

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னையே துதிப்பவர்கள், உனது அடியார்கள் யமனின் பாசக்கயிற்றில் இருந்து எப்படி விடுபடுவார்கள் - அதுபோல் அந்த மாயை (பெண் குழந்தை) கம்ஸனின் கைகளில் இருந்து விடுபட்டு, மேலே ஏறினாள். வேறு உருவம் அடைந்து, எட்டுக் கைகளுடன் ஆயுதம் ஏந்தியவளாகத் தோன்றினாள்.

6 ந்ருசம்ஸதர கம்ஸ தே கிமு மயா விநிஷ்பிஷ்டயா
பபூவ பவ தந்தக: க்வசந சிந்த்யாம் தே ஹிதம்
இதி த்வத் அநுஜா விபோ கலம் உதீர்ய தம் ஜக்முஷீ
ம்ருத்கண பணாயிதா புவி ச மந்திராண்யே யுஷீ

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த மாயை கம்ஸனிடம், கொடியவனே! கம்ஸா! என்னை இப்படி அடித்துக் கொல்வதால் என்ன பயன்? உன்னைக் கொல்ல ஒருவன் வேறு இடத்தில் பிறந்துள்ளான். உனது நன்மையை இப்போதாவது தேடிக்கொள் என்றாள். பின்னர் அவள் தேவகணங்களால் துதிக்கப்பட்டவளாக, பூமியில் பல கோயில்களில் நின்றாள்.

7 ப்ரகே புந ரகாத்மஜா வசந மீரிதா பூபுஜா
ப்ரலம்ப பக பூதநா ப்ரமுக தாநவா மாநிந:
பவந்திதந காம்யயா ஜகதி பப்ரமுர் நிர்ப்பயா:
குமாரக விமாரக: கிமிவ துஷ்கரம் நிஷ்க்ருபை:

**பொருள் -** குருவாயூரப்பனே! மறுநாள் காலையில் யோகமாயை கூறியதைக் கம்ஸன் மற்றவர்களுக்குக் கூறினான். இதனைக் கேட்ட கர்வம் உடைய ப்ரலம்பன், பகன் மற்றும் பூதனை போன்ற அசுரர்கள் உன்னைக் கொல்வதற்காக, அந்த நாட்டில் இருந்த பல குழந்தைகளைக் கொன்று, பயம் இல்லாமல் திரிந்தனர். இரக்கம் என்பதே அறியாதவர்கள் என்ன கெடுதல்தான் செய்ய மாட்டார்?

8 தத: பசுப மந்திரே த்வயி முகுந்த நந்தப்ரியா
ப்ரஸுதி சயனே சயே ருததி கிஞ்சிதஞ்சத் பதே
விபித்ய வனிதா ஜனைஸ்தநய ஸம்பவே கோஷிதே
முதா கிமு வதாம்யஹோ ஸகலமாகுலம் கோகுலம்

**பொருள் -** குருவாயூரப்பா! முகுந்தா! நந்தகோபரின் வீட்டில், அவரது மனைவியான யசோதையின் ப்ரஸவப் படுக்கையில் படுத்திருந்த நீ உனது கால்களை சிறிது அசைத்து அழுதாய். இதனைக் கேட்டு யசோதை மற்றும் அங்குள்ள கோபிகைகள் கண் விழித்தனர் உன்னைக் கண்டதும் பிறந்த குழந்தையைப் பற்றிய செய்தியை ஊர் முழுவதும் உற்சாகமாகக் கூறித் திரிந்தனர். இதனைக் கேட்ட அந்தக் கோகுலம் முழுவதுமே ஆனந்தத்தில் திளைத்ததாமே! இதனை நான் எப்படி வர்ணிப்பது?

9 அஹோ கலு யசோதயா நவகலாய சேதாஹரம்
பவந்தமலமந்திகே ப்ரதமம் ஆபிபந்த்யாத்ருசா
புந: ஸ்தனபரம் நிஜம் ஸபதி பாயயந்த்யா முதா
மநோஹர தநுஸ்ப்ருசா ஜகதி புண்யவந்தோ ஜிதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! புதிதாக மலர்ந்துள்ள காயாம்பூ போன்று நீ படுக்கையில் கிடந்தாய். மனதைக் கவர்கின்ற உனது திருமேனியை நெருங்கிய யசோதை

கண்களால் உன்னைப் பருகினாள். தனது ஸ்தனங்களில் உனக்கு பால் ஊட்டினாள். உன்னுடைய அழகான மேனியை மெதுவாகத் தொட்டாள். இந்த உலகத்தில் இவள் செய்த புண்ணியத்தை யாரும் அடையவில்லை. அனைவரையும் விட புண்ணியத்தில் வெற்றி பெற்றாள்.

10 பவத்குசல காம்யயா ஸ கலு நந்தகோபஸ்ததா
ப்ரமோத பரஸங்குலோ த்விஜ குலாய கிம் ந அததாத்
ததைவ பசுபாலகா: கிமு ந மங்கலம் தேநிரே
ஜகத் த்ரிதய மங்கள த்வம் இஹ பாஹி மாம் ஆமயாத்

**பொருள் -** குருவாயூரப்பா! மிகுந்த ஆனந்தம் கொண்ட நந்தகோபர், உனது நலனுக்காக, ப்ராமணர்களுக்குப் பல தானங்கள் அளித்தார். அங்கு இருந்த யாதவர்கள் பலரும் அப்படியே மங்களமான செயல்களைச் செய்தனர். மூன்று உலகங்களுக்கும் மங்களங்கள் அளிப்பவனே! என்னுடைய பிணிகளைப் போக்க வேண்டும்.

1 ததநு நந்தம் அமந்தம் சுப ஆஸ்பதம்
ந்ருப புரீம் கரதாந க்ருதே கதம்
ஸமவலோக்ய ஜகாத பவத்பிதா
விதத கமஸ ஸஹாய ஜந உத்யம:

**பொருள் -** குருவாயூரப்பா! என்றும் மங்களம் குறையாது விளங்கும் நந்தகோபர், கம்ஸனுக்கு கப்பம் கட்டுவதற்காக மதுராவிற்குச் சென்றார். அங்கு உள்ள கம்சனுடைய அதிகாரிகளின் தீய முயற்சிகளை உனது தந்தை வஸுதேவர் அறிந்தார். இதனை நந்தகோபரிடம் கூறினார்.

2 அயி ஸகே தவ பாலக ஜன்ம மாம்
ஸுகயதேத்ய நிஜாத்மஜ ஜந்மவத்
இதி பவத்பித்ருதாம் வ்ரஜநாயகே
ஸமதிரோப்ய சசம்ஸ தம் ஆதராத்

**பொருள் -** குருவாயூரப்பனே! வஸுதேவர் நந்தகோபரிடம், நண்பரே! உங்களுக்குப் பிறந்த மகனை எனக்குப் பிறந்த மகனாகவே நினைக்கிறேன் என்றார். அவர் நந்தகோபரை உனது தந்தை என்று உயர்வாகக் கூறினார்.

3 இஹ ச ஸந்த்ய நிமித்த சதாநி தே கடக
ஸீம்நி ததோ லகு கம்யதாம்
இதி ச தத்வசஸா வ்ரஜநாயகோ பவத்
அபாயபியா த்ருதம் ஆயயெள

**பொருள் -** குருவாயூரப்பா! அவர் நந்தகோபரிடம், நண்பரே! இங்கு தீய சகுணங்கள் பல தோன்றுகின்றன. அதனால் நீங்கள் அதிகம் தாமதிக்காமல் விரைவாக கோகுலம் திரும்புங்கள் என்றார். இதனைக் கேட்ட நந்தகோபர், உனக்கு என்ன தீங்கு விளையுமோ என்று பயந்து மிகவும் விரைவாக கோகுலம் வந்தார்.

4 அவஸரே கலு தத்ர ச காசந வ்ரஜபதே
மதுர ஆக்ருதி: அங்கநா
தரல ஷட்பத லாலித குந்தலா கபட
போதக தே நிகடம் கதா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மாயனே! குழந்தாய்! அப்போது , வண்டுகள் வட்டமிடுகின்ற கூந்தலை உடையவளாக இருந்த ஓர் அழகிய பெண், உனது அருகில் வந்தாள் அல்லவா?

5 ஸபதி ஸா ஹ்ருதபாலக சேதநா நிசிசா
அந்வய ஜா கில பூதநா
வ்ரஜ வதூஷ்விஹ கா இயம் இதி க்ஷணம்
விம்ருசதீஷு பவந்தம் உபாததே

**பொருள் -** குருவாயூரப்பா! குழந்தைகள் உயிரைப் பறிப்பவளும், அரசர் குலத்தில் பிறந்தவளும் பூதனை என்பவளும் ஆகிய அவளைக் கண்ட ஆய்ச்சிமார்கள், இவள் யார்? என்று எண்ணினர். அப்போது பூதனை உன்னைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டாள் அல்லவா?

6 லலித பாவ விலாஸ ஹ்ருதாத்மபி:
யுவதிபி: ப்ரதிரோத்தும் அபாரிதா
ஸ்தனம் அஸௌ பவநாந்த நிஷேதுஷீ
ப்ரததுஷீ பவதே கபடாத்மனே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மாயவனே! கபடனே! தனது நடை உடை பாவங்கள் மூலமாக பூதனை ஆய்ச்சி பெண்களை மயக்கினாள். பின்னர் வீட்டில் அமர்ந்து, அவள் உனக்கு தன்னுடைய ஸ்தனங்களால் பால் ஊட்டத் தொடங்கினாள் அல்லவா?

7 ஸமதிருஹ்ய தத் அங்கம் அசங்கிதஸ்
த்வம் அத பாலகலோபந ரோஷித:
மஹத் இவ ஆம்ர பலம் குசமண்டலம்
ப்ரதிசுசூஷித துர்விஷ தூஷிதம்

**பொருள் -** குருவாயூரப்பா! பல குழந்தைகள் அவளால் கொல்லப்பட்டதால் அவள் மீது நீ மிகுந்த கோபம் கொண்டாய். சிறிதும் பயம் இன்றி அவளது உடலில் ஏறிய நீ, பெரிய மாம்பழம் போன்றதும் விஷம் தடவியதும் ஆகிய அவளது ஸ்தனங்களை உயிருடன் சேர்த்து உறிஞ்சினாய் அல்லவா?

8 அஸுபி: ஏவ ஸமம் தயதி த்வயி
ஸ்தநம் அஸௌ ஸ்தநிதோபம் நிஸ்வநா
நிரபதத் பயதாயி நிஜம் வபு;
ப்ரதிகதா ப்ரவிஸார்ய புஜாவுபௌ

**பொருள் -** குருவாயூரப்பனே! அவளுடைய ஸ்தனங்களைப் பருகும்போது அவள் உயிரையும் சேர்த்து இழுத்தாய். இதனால் அவள் இடி போன்ற பெருத்த கூச்சலுடன். தன் சுய உருவம் பெற்று, இரண்டு கைகளையும் விரித்தபடி பூமியில் விழுந்தாள் அல்லவா?

9 பயத கோஷண பீஷண விக்ரஹ ச்ரவண
தர்சந மோஹித வல்லவே

வ்ரஜபதே தத் உர: ஸ்த்தல கேலநம்
நநு பவந்தம் அக்ருஹ்ணத கோபிகா:

பொருள்; குருவாயூரப்பா! பூதனையின் அதிபயங்கர கூச்சலைக் கேட்டும், அவளது பெரிய உருவத்தைக் கண்டும் கோகுலத்தில் இருந்த பலரும் மயக்கமுற்று விழுந்தனர். பிணமாய்க் கிடந்த பூதனையின் மார்பில் விளையாடிக் கொண்டிருந்த உன்னை சில ஆய்ச்சி பெண்கள் ஓடி வந்து தூக்கினர் அல்லவா?

10 புவந மங்கல நாமபிரேவ தே யுவதிபிர்
பஹுதா க்ருதரக்ஷணா:
த்வம் அயி வாதநிகேதனநாத மாம்
அகயந் குரு தாவக ஸேவகம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உலகம் அனைத்திற்கும் அனைத்து மங்கலத்தையும் அளிக்கும் உனது பெயரைக் கூறியபடி, உனக்குப் பலவகையிலும் த்ருஷ்டி கழித்தனர். குருவாயூரின் நாதனே! எனது வ்யாதிகளை நீக்கி உனக்குப் பணி புரியும்படி செய்ய வேண்டும்.

1 வ்ரஜ ஈச்வர: சௌரிவச: நிசம்ய
ஸமாவ்ரஜந் அத்வநி பீத சேதா:
நிஷ்பிஷ்ட நிச்சேஷ தரும் நிரீக்ஷ்ய
கஞ்சித் பதார்த்தம் சரணம் கத: த்வாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வசுதேவர் தனக்குக் கூறியதைக் கேட்ட நந்தகோபர் வீடு திரும்பினார். வரும் வழி முழுவதும் அவர் மனம் கலக்கமுற்று இருந்தது. தனது வீட்டருகில் அங்கு உள்ள மரங்கள் அனைத்தையும் பொடியாக்கி ஓர் உருவம் விழுந்து கிடப்பதைக் கண்டு பயந்தார். உன்னைத் தனது மனதால் சரணம் அடைந்தார்.

2 நிசம்ய கோபீ வசநாந் உதந்தம் ஸர்வே
அபிகோபா: பய விஸ்மய அந்தா:
த்வத் பாதிதம் கோர பிசாச தேஹம் தேஹு:

விதூரே அத குடார க்ருத்தம்

**பொருள் -** குருவாயூரப்பா! நடந்த விவரங்களை கோபர்கள், ஆய்ச்சி பெண்கள் மூலம் அறிந்தனர். அவர்கள் அனைவரும் பயத்தாலும் வியப்பாலும், மரமாக நின்றனர். அதன் பின்னர் உன்னால் கொல்லப்பட்ட அந்த பயங்கரமான பிசாசின் உடலை, தங்கள் கோடரியால் துண்டு துண்டாக வெட்டினர். அவற்றை வெகுதூரம் கொண்டு சென்று எரித்தனர்.

3 த்வத் பீத பூத ஸ்தந தத் சரீராத் ஸமுச்சலந்
உச்சதர: ஹி தூம:
சங்காம் அதாந் ஆகரவ: கிமேஷ: கிம் சாந்தந:
கௌல் குலவ: அதவா இதி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னால் ஸ்தனங்கள் பருகப்பட்டிருந்தாலும். உடலின்மீது அமர்ந்ததாலும் பூதனையின் உடல் பாவங்கள் நீங்கப் பெற்றதாக இருந்தது. அதனை எரித்தபோது மிகுந்த வாசனையுடன் புகை உயரமாகக் கிளம்பியது. இதனைக் கண்ட கோபர்கள் - இது அகிற்கட்டையில் தோன்றியதா, சந்தனக்கட்டையில் தோன்றியதா என்று சந்தேகம் கொண்டனர்.

4 மத் அங்க ஸங்கஸ்ய பலம் ந தூரே
க்ஷணேந தாவத் பவதாம் அபி ஸ்யாத்
இத்யுல்லபந் வல்லவ தல்லஜேப்ய:
த்வம் பூதாநாம் ஆதநுதா: ஸுகந்தீம்

**பொருள் -** குருவாயூரப்பா! எனது உடலுடன் தொடர்பு உள்ளவர்களுக்கு அதற்கான பலன் வெகு நாட்களுக்குப் பிறகு அல்ல. இந்தப் பிறவியில் உடனே கிடைக்கும் என்று கோபர்களுக்கு உணர்த்துவது போன்று நீ பூதனையின் உடலை மணம் வீசச் செய்தாய் அல்லவா?

5 சித்ரம் பிசாச்யா ந ஹத: குமார சித்ரம்
புரா ஏவ அகதி சௌரிணா இதம்

இதி ப்ரசம்ஸந் கில கோப லோக:
பவத் முக ஆலோக ரஸே ந்யமாங்க்ஷீத்

**பொருள் -** குருவாயூரப்பா! இத்தனை பெரிய பிசாசு மூலம் இந்தக் குழந்தை உயிர் பிழைத்தது அதிசயமே! இப்படி ஓர் ஆபத்து உண்டாகும் என்று வஸுதேவர் கூறியதும் வியப்பே! - இது போன்று கூறிய கோபர்கள், உனது அழகான திருமுகத்தைக் கண்டு மெய்ம் மறந்தனர்.

6 திநே திநே அத ப்ரதிவ்ருத்த லக்ஷ்மீ:
அக்ஷீண மாங்கல்ய சத வ்ரஜ: அயம்
பவத் நிவாஸாத் அயி வாஸுதேவ ப்ரமோத
ஸாந்த்ர: பரித: விரேஜே

**பொருள் -** குருவாயூரப்பா! வாஸுதேவா! நீ வசித்த காரணத்தால் கோகுலம் முழுவதும் தினம் தினம் லக்ஷ்மியின் கடாட்சம் பெருகியது. மங்காத மங்களம் எங்கும் நிறைந்தது. ஆனந்தம் எங்கும் குறைவற்று இருந்தது.

7 க்ருஹேஷு தே கோமல ரூப ஹாஸ மித:
கதா ஸங்குலிதா: கமந்ய:
வ்ருத்தேஷு க்ருத்யேஷு பவந் நிரீக்ஷா
ஸமாகதா: ப்ரத்யஹம் அத்யநந்தந்

**பொருள் -** குருவாயூரப்பா! ஆய்ச்சி பெண்கள் தங்கள் வீடுகளில் வேலை செய்து கொண்டிருக்கும்போதும் உனது அழகான உருவத்தையும், புன்சிரிப்பையும் பற்றியே பேசிக்கொண்டு மகிழ்வுற்றனர். அன்றாடம் தங்கள் வீட்டு வேலைகளை முடித்த பின்னர் உன்னைக் கண்டு இன்பமே அடைவார்களாமே!

8 அஹோ குமார: மயி தத்த த்ருஷ்டி:
ஸ்மிதம் க்ருதம் மாம் ப்ரதி வத்ஸகேந
ஏஹி ஏஹி மாம் இதி உபஸார்ய பாணிம்
த்வயி ஈச கிம் கிம் ந க்ருதம் வதூபி:

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! அந்தக் குழந்தை என்னைப் பார்த்து, என்னைக் கண்டு சிரித்தது - என்று கோபிகைகள் மகிழ்ந்தனர். உன்னை நோக்கி, என்னிடம் வா! என்னிடம் வா! என்று கைகளை நீட்டினர். உன்னைக் கொஞ்சும்போது அன்பான செயல்கள் எதைத்தான் அவர்கள் செய்யாமல் இருந்தனர்?

9 பவத் வபு: ஸ்பர்சந கௌதுகேன கதாத்கரம்
கோப வதூ ஜநேந
நீத: த்வம் ஆதாம்ர ஸரோஜ மாலா வ்யாலம்பி
லோலம்ப துலாம் அவாஸீ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய அழகான உடலைத் தொடுவதிலும் மகிழ்வு கொண்ட கோபிகைகள், ஒருவருக்கொருவர் உன்னை மாற்றித் தூக்கிக் கொண்டனர். அப்போது நீ தாமரை மலர் மாலையில் ஒரு மலரை விட்டு மற்றொரு மலருக்கு தாவும் வண்டு போல் காணப்பட்டாய் அல்லவா?

10 நிபாயயந்தீ ஸ்தநம் அங்கம் த்வாம்
விலோகயந்தீ வதநம் ஹஸந்தீ
தசாம் யசோதா கதமாம் ந பேஜே ஸ: தாத்ருச:
பாஹி ஹரே கதாத் மாம்

**பொருள் -** குருவாயூரப்பனே! உன்னைத் தனது மடிமீது அமர்த்திக் கொண்டும், உனக்குப் பால் புகட்டிக் கொண்டும். உனது அழகான முகத்தைப் பார்த்துக் கொண்டும் யசோதை சிரித்தாள். அவள் அடைந்த ஆனந்த நிலைதான் என்னே? இப்படிப்பட்ட நீ எனது பிணிகளில் இருந்து காப்பாயாக!

1 கதா அபி ஜந்ம ருக்ஷ திதே தவ ப்ரபோ
நிமந்த்ரித ஜ்ஞாதி வதூ மஹீஸுரா
மஹா அநஸ: த்வாம் ஸவிதே நிதாய ஸா
மஹாநஸ ஆதௌ வவ்ருதே வ்ரஜ ஈச்வரீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ப்ரபோ! ஒரு நாள் உன்னுடைய பிறந்த தினம் வந்தது. அன்றைய தினம் திருஆயப்பாடியின் தலைவியான யசோதை, அதனைக் கொண்டாட, ப்ராமணர்கள், உறவினர்கள் முதலானோரை வீட்டிற்கு அழைத்தாள். உன்னை ஒரு பெரிய கட்டை வண்டியின் அடியில் தொட்டில் கட்டி படுக்க வைத்தாள். பின்னர் தனது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

2 தத: பவத் த்ராண நியுக்த பாலக
ப்ரபீதி ஸங்க்ரந்தந ஸங்குல ஆரவை;
விமிச்ரம் அச்ராவி பவத் ஸமீப:
பரிஸ்புடத் தாரு சடச்சடா ரவ:

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது உன்னைப் பார்த்துக் கொள்ள அருகில் அமர்ந்திருந்த சிறுவர்கள் மிகவும் பலமான சத்தம் எழுப்பினர். அதனுடன் மரங்கள் சடசட என முறிவது போன்ற ஓசையும் மிகவும் பலமாகக் கேட்டது.

3 தத: தத் ஆகர்ணந ஸம்ப்ரம ச்ரம
ப்ரகம்பி வக்ஷோஜ பரா: வ்ரஜ அங்கநா:
பவந்தம் அந்த: தத்ருசு: ஸமந்தத:
விநிஷ்பத் தாருண தாரு மத்யகம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அந்த சத்தத்தைக் கோபியர்கள் கேட்டனர். உடனே மிகுந்த அச்சத்துடன் தங்கள் ஸ்தனங்கள் அசைய அங்கு ஓட்டமாக வந்தனர். அங்கு நான்கு பக்கங்களிலும் கட்டைகள் சிதறிக் கிடந்தன. அவற்றின் நடுவில் உன்னைக் கண்டனர்.

4 சிசோ அஹோ கிம்கிம் அபூத் இதி த்ருதம்
ப்ரதாவ்ய நந்த பசுபா: ச பூஸுரா:
பவந்தம் ஆலோக்ய யசோதயா த்ருதம்
ஸமாச்வஸத் அச்ரு ஜல ஆர்தர லோசநா:

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது, ஆ! குழந்தைக்கு என்ன நடந்தது? என்ன நடந்தது என்று பதறியபடி நந்தகோபரும் ப்ராமணர்களும் தங்கள் கண்களில் நீர் வழிய உன்னிடம்

ஓடி வந்தனராமே! ஆயினும் நீ யசோதையின் கைகளில் அமைதியுடன் உள்ளதைக் கண்டு நிம்மதி கொண்டனர் அல்லவா?

5 க: க: நு சௌதஸ்குத: ஏஷ: விஸ்மய:
விசங்கடம் யத் சகடம் விபாடிதம்
ந காரணம் கிஞ்சித் இஹ இதி தே ஸ்திதா:
ஸ்வ நாஸிகா தத்த கரா: த்வத் ஈக்ஷகா:

**பொருள் -** குருவாயூரப்பா! அங்கு உள்ள அனைவரும், இது என்ன? எப்படி நடந்தது? இத்தனை பெரிய வண்டி எவ்வாறு உடைந்தது? எந்தக் காரணமும் தெரியவில்லையே என்று மூக்கில் விரலை வைத்து வியப்புற்றனர். உன்னையே அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

6 குமாரகஸ்ய அஸ்ய பயோதர அர்த்திந:
ப்ரோதநே லோல பத அம்புஜ ஆஹதம்
மயா மயா த்ருஷ்டம் அந: விபர்யகாத்
இதி ஈச தே பாலக பாலக: ஜகு:

**பொருள் -** ஈசனே, குருவாயூரப்பனே! அப்போது உன்னருகில் இருந்த சிறுவர்கள் அவர்களிடம் - பால் வேண்டும் என்பதுபோல் இந்தக் குழந்தை அழுதது, தனது தாமரை போன்ற அழகிய கால்களால் இந்த வண்டியை உதைத்தது. இதனால் வண்டி கீழே விழுந்தது. இப்படியே நாங்கள் கண்டோம் - என்று கூறினர்.

7 பியா ததா கிஞ்சித ஜானதாம் இதம்
குமாரகாணாம் அதி துர்கடம் வச:
பவத் ப்ரபாவ கவிதுரை: இதி ஈரிதம்
மநாக் இவ ஆசங்க்யத த்ருஷ்ட பூதனை:

**பொருள் -** குருவாயூரப்பா! சிறுவர்கள் கூறியதைக் கேட்ட கோபியர்கள். இந்தச் சிறுவர்கள் பயத்தால் பிதற்றுகின்றனர். இது பொருத்தமாக இல்லை என்றனர்.

அவர்களுக்கு உனது மகிமை புரியவில்லை. என்றாலும் நீ பூதனையைக் கொன்ற காட்சியைப் பார்த்த சிலர் அப்படி நடந்திருக்கலாமோ என்ற ஐயம் கொண்டனர்.

8 ப்ரவால தாம்ரம் கிம் இதம் பதம் சக்ஷதம்
ஸரோஜா ரம்யௌ நு கரௌ விராஜிதௌ
இதி ப்ரஸர்பத் கருணா தரங்கிதா:
த்வத் அங்கம் ஆபஸ்ப்ருசு: அங்கநா ஜநா:

**பொருள் -** குருவாயூரப்பா! ஆய்ச்சி பெண்கள், பவழம் போன்று சிவந்து அழகாக உள்ள இந்தப் பிஞ்சுக் கால்களில் ஏதேனும் காயம் உள்ளதா? என்று கூறினர். அப்படிக் கூறிக்கொண்டு, உனது திருமேனியை மெதுவாகத் தொட்டனர். பின்னர், இந்தப் பிஞ்சுக் கைகளுக்கு ஏதேனும் நேர்ந்ததா? என்றனர் அல்லவா?

9 அயே ஸுதம் தேஹி ஜகத் பதே: க்ருபா
தரங்க பாதாத் பரிபாதம் அத்ய மே
இதி ஸ்ம ஸங்க்ருஹ்ய பிதா த்வத் அங்ககம்
முஹு: முஹு: ச்லிஷ்யதி ஜாத கண்டக:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய தந்தை, யசோதை! உலகையே காத்து நிற்கும் ஹரி நமது குழந்தையைக் காப்பாற்றினான். என்னிடம் அந்தக் குழந்தையைக் கொடு என்று உன்னைத் தூக்கிக் கொண்டான். உன்னை மார்போடு அணைத்து, உனது சிறிய அழகான திருமேனியை ஆசையுடன் மீண்டும் மீண்டும் அணைத்துக் கொண்டு தழுதழுத்தார்.

10 அந; நிலீன: கில ஹந்தும் ஆகத:
ஸுர: அரி: ஏவம் பவதா விஹிம்ஸித:
ரஜ: அபி நோ த்ருஷ்டம் அமுஷ்யதத் கதம்
ஸ: சுத்த ஸத்வே த்வயி லீநாவந் த்ருவம்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக வண்டியின் உருவத்தில் வந்தவனும், தேவர்களின் எதிரியுமான அசுரன் உன்னைக் கொல்ல வந்தான். அவனை நீ கொன்றாய். ஆயினும்

அவனது உடல் பகுதிகள் கூட அங்கு இல்லை. அவன் முழுவதுமாக உன்னிடம் சேர்ந்தான் அல்லவா?

11 ப்ரபுஜிதை: தத்ர தத: த்வி ஜாதி பி:
விசேஷத: ஸம்பித மங்கள ஆசிஷ:
வ்ரஜம் நிஜை பால்யரஸை: விமோஹயந்
மருத்புர அதீச: ருஜாம் ஜஹீஹி மே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பின்னர் அங்கு இருந்த பிராமணர்களால் நீ நன்றாக ஆசீர்வதிக்கப் பட்டாய். இப்படியாக உனது சிறிய வயதிற்கு உரிய லீலைகளால் கோகுலத்தை மகிழச் செய்தாய். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளை நீக்க வேண்டும்.
***

1 த்வாம் ஏகதா குருமருத்புர நாத வோடும்
காட அதிரூட கரிமாணம் அபாரயந்தீ
மாதா நிதய சயநே கிம் இதம் பத இதி
த்யாயந்தீ அசேஷ்டத க்ருஹேஷு நிவிஷ்ட சங்கா

**பொருள் -** குருவாயூரப்பனே! ஒரு நாள் உன்னைத் தனது மடியில் வைத்திருந்த யசோதை நீ திடீரென மிகவும் கனமாக இருப்பதை உணர்ந்தாள். மனதில் கவலையுடன் படுக்கையில் படுக்க வைத்து, வீட்டு வேலைகள் செய்யத் தொடங்கினாள்.

2 தாவத் விதூரம் உபகர்ணித கோர கோஷ
வ்யாஜ்ரும்பி பாம்ஸு படலீ பரிபூரித ஆச:
வாத்யா வபு: ஸ: கில தைத்யவர: த்ரணாவர்த்த்
ஆக்ய: ஜஹார ஜந மாநஸ ஹாரிணம் த்வாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த நேரம் சற்று தொலைவில் மிகப் பெரிய ஓசை எழுந்தது. அனைத்துத் திசைகளிலும் மண் துகள்கள் பறந்து மறைந்தன. இப்படியாக வந்த த்ருணாவர்த்தன் என்ற அசுரன், அனைவரையும் கவர்ந்து, உன்னை கவர்ந்து சென்றான் அல்லவா?

3 உத்தாம பாம்ஸு திமிர ஆஹத த்ருஷ்டி பாதே
த்ரஷ்டும் கிம் அபி அகுசலே பசுபால லோகே
ஹா பாலகஸ்ய கிம் இதி த்வத் உபாந்தம் ஆப்தா
மாதா பவந்தம் அவிலோக்ய ப்ருசம் ருரோத

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் படர்ந்த புழுதியின் காரணமாக அனைத்து இடங்களிலும் இருள் சூழந்தது. அங்கு இருந்த இடையர்கள், பசுக்கள் ஆகியவர்களுக்கு எதுவும் தெரியவில்லை. அப்போது யசோதை, உன்னை நினைத்தவளாய். குழந்தைக்கு என்ன நேர்ந்ததோ? என்று கூறியபடி ஓடி வந்தாள். உன்னை அங்கு காணாமல் கதறி அழத் தொடங்கினாள்.

4 தாவத் ஸ: தாநவ வர: அபி ச தீனமூர்த்தி
பாவத்க பார பரிதாரண லூந வேக:
ஸங்கோசம் ஆப ததநு க்ஷத பாம்ஸு கோஷே
வ்யதாயத பவத் ஜநநீ நிநாத:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னைத் தூக்கிச் சென்ற அசுரன். உனது பாரம் தாங்காமல் வேகம் குறைந்தவனானான். அவனது உடலும் சுருங்கி அசைவின்றி இருந்தான். இதனால் காற்றின் வேகம் குறைந்தது. எனவே காற்றின் ஓசையும், புழுதியும் அடங்கின. ஆயினும் உனது தாயின் அழுகை ஒலித்தது.

5 ரோத உபகர்ணந வசாத் உபகம்ய கேஹம்
க்ரந்தத்ஸு நந்தமுக கோப குலேஷு தீந:
த்வாம் தாநவ: து அகில முக்தி கரம் முமுக்ஷு:
த்வயி அப்ரமுஞ்சதி பபாத வியத் ப்ரதேசாத்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது தாயின் அழுகைக் குரலைக் கேட்ட நந்தகோபரும் மற்றவர்களும் உனது வீட்டிற்கு ஓடி வந்தனர். காரணம் அறிந்த அவர்களும் அழுதனர். அப்போது தனது வலிமை இழந்த அசுரன் உன்னை விட்டுவிட எண்ணினான். ஆனால் அனைவருக்கும் முக்தி என்னும் விடுதலை அளிக்கும் நீ, அவனை விடவில்லை. ஆகவே உனது பாரம் தாங்காமல் உன்னுடன் சேர்ந்து அவனும் கீழே விழத் தொடங்கினான்.

6 ரோத ஆகுல: ததநு கோப கணா: பஹிஷ்ட
பாஷாண ப்ருஷ்ட புவி தேஹம் அதிஸ்த்தவிஷ்டம்
ப்ரைக்ஷந்த ஹந்த நிபதந்தம் அமுஷ்ய வக்ஷஸி
அக்ஷீணம் ஏவ ச பவந்தம் அவம் ஹஸந்தம்

**பொருள் -** குருவாயூரப்பா! அழுது கொண்டிருந்த ஆயர்கள் வீட்டை விட்டு வெளியே வந்தனர். அப்போது அவர்கள் ஒரு பாறை மீது அசுரனின் உடல் வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர். அவனது மார்பின் மீது நீ எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்ததைக் கண்டனர். இது என்ன வியப்பு!

7 க்ராவ ப்ரபாத பரிபிஷ்ட கரிஷ்ட தேஹ
ப்ரஷ்ட அஸு துஷ்ட தநுஜ உபரி த்ருஷ்ட ஹாஸம்
ஆக்நாநம் அம்புஜ கரேண பவந்தம் ஏத்ய
கோபா தது: கிரி வராத் இவ நீல ரத்நம்

**பொருள் -** குருவாயூரப்பா! பாறையின் மீது விழுந்ததால் அந்த அசுரனின் பெரிய உடலானது மிகவும் சிதைந்து காணப்பட்டது. உயிரற்ற அந்த உடலின் மீது அமர்ந்திருந்த நீ, உனது தாமரை போன்ற அழகிய கைகளால் அதனை தட்டிக் கொண்டும், சிரித்து மகிழ்ந்து கொண்டும் இருந்தாய் அல்லவா? உடனே உன் அருகில் வந்த ஆயர்கள். பெரிய மலையான அந்த உடலில் இருந்து நீல இரத்தினத்தினைப் போன்ற உன்னை எடுத்தனர்.

8 ஏகைகம் ஆசு பரிக்ருஹ்ய நிகாம நந்தந்
நந்தாதி கோப பரிரப்த விசும்பித அங்கம்
ஆதாது காம பரிசங்கித கோப நாரீ
ஹஸ்த அம்புஜ ப்ரதிதம் ப்ரணும: பவந்தம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இதனைக் கண்டு வியப்புடன் மகிழ்ந்த நந்தகோபரும் மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக உன்னைக் தூக்கி வைத்துக் கொண்டு மகிழ்ந்தனர். உன்னைக் கட்டி அணைத்து முத்தம் இட்டனர். அந்த நேரம் உன்னை ஆய்ச்சி பெண்கள் தூக்கிக் கொள்ள விரும்புவதை உணர்ந்த நீ, அவர்களது தாமரை மலர் போன்ற சிவந்த அழகிய கைகளுக்குத் தாவினாய். இத்தகைய உன்னைப் பணிக்கிறோம்.

9 பூய: அபி கிம் து க்ருணும்; ப்ரணத ஆர்த்தி ஹாரீ
கோவிந்த: ஏவ பரிபாலயதாத் ஸுதம் ந:
இத்யாதி மாதர பித்ரு ப்ரமுகை: ததாநீம்
ஸம்ப்ரார்த்தித: த்வத் அவநாய விபோ த்வம் ஏவ

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது உனது தாய், தந்தை மற்றும் ஆயர்கள் அனைவரும், தன்னுடைய அடியார்களின் துன்பத்தை நீக்கும் கோவிந்தனே எங்கள் குழந்தையைக் காக்க வேண்டும். இவ்வாறு அவனை வேண்டுவதைத் தவிர நாங்கள் என்ன செய்வது? என்று துதித்தனர். இப்படியாக உன்னைக் காப்பாற்றும்படி உன்னையே வேண்டுவது வியப்பு!

10 வாத ஆத்மகம் தநுஜம் ஏவம் அயி ப்ரதூந்வந்
வாத உத்பவாத் மம கதாந் கிமு நோ துநோஷி
கிம் வாகரோமி புந: அபி அநில ஆலய ஈச
நிச்சேஷ ரோக சமநம் முஹு: அர்த்தயே த்வாம்

**பொருள் -** ஈசனே! க்ருஷ்ணா, குருவாயூரப்பா! காற்றின் வடிவம் கொண்டு வந்த அசுரனை நீ இப்படியாக வதம் செய்தாய். வாதத்தின் மூலமாக வந்த எனது பிணியை நீ ஏன் நீக்கவில்லை? நான் என்ன செய்வது? எனது பிணிகள் அனைத்தையும் தீர்க்கும்படி உன்னை மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன்.

***

1 கூடம் வஸுதேவ கிரா கர்த்தும்
தே நிஷ்க்ரியஸ்ய ஸம்ஸ்காரந்
ஹ்ருத்கத ஹோர தத்வ: கர்க முநி:
த்வத் க்ருஹம் விபோ கதவாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே ஒருநாள் வஸுதேவரின் சொற்படி கர்க்கன் என்ற முனிவர். யாரும் அறியாதபடி, உனக்குப் பெயர் சூட்டுவதற்காக உனது வீட்டிற்கு வந்தார் அல்லவா?

2 நந்த: அத நந்தித ஆத்மா ப்ருந்திஷ்டம்
மாநயத் அமும் யமிநாம்
மந்த ஸ்மித ஆர்த்ரம் ஊசே த்வத்
ஸம்ஸ்காராந் விதாதும் உத்ஸுகதீ:

பொருள்; க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அவரைக் கண்ட நந்தகோபர் மிகவும் சந்தோஷம் கொண்டார். முனிவர்களில் பெருமை மிக்க அவரை நன்றாகப் போற்றி உபசரித்தார். பின்னர் அவரை நோக்கி உனக்கு வேண்டிய நாம கரணத்தைச் சூட்டும்படி பணிவுடன் கூறினார்.

3 யது வம்ச ஆசார்யத்வாத் ஸுநிப்ருதம்
இதம் ஆர்ய கார்யம் இதி கதயந்
கர்க: நிர்கத புலக: சக்ரே
தவ ஸாக்ரஜஸ்ய நாமாநி

**பொருள் -** குருவாயூரப்பா! நந்தகோபரிடம் கர்க்கன், நான் யதுகுலத்தின் ஆசார்யனாக உள்ளேன். அதனால் நாம கரணத்தை ரகசியமாகவே சூட்ட வேண்டும் என்று மெய்சிலிர்த்துக் கூறினார். பின்னர் உனக்கும் உன் மூத்தவனுக்கும் நாமகரணம் சூட்டினார்.

4 கதம் அஸ்ய நாம குர்வே ஸஹஸ்ர நாம்ந:
அநந்த நாம்ந: வா
இதி நூநம் கர்க முநி: சக்ரே
தவ நாம ரஹஸி விபோ

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! ஆயிரம் பெயர்களை மட்டும் அல்லாமல் எண்ண இயலாத அளவிற்குப் பெயர்கள் உடைய உனக்கு எந்தப் பெயர் வைப்பது என்று கர்க்கர் தனது மனதில் வியந்தார். அதனால்தான் ரகசியமாகப் பெயர் வைக்க வேண்டும் என்று கூறினார் அல்லவா?

5 க்ருஷி தாது ணகாராப்யாம் ஸத்தா
ஆநந்த ஆத்மதாம் கில அபிலபத்

ஜகத் அக கர்ஷித்வம் வா கதயத் ரிஷி:
க்ருஷ்ண நாம தே வ்யதநோத்

**பொருள் -** குருவாயூரப்பா! க்ருஷி என்ற வினைப் பகுதியும், ண என்ற எழுத்தும் சேர்த்தால் ஸத் ரூபமாகவும், ஆனந்த ரூபமாகவும் இருக்கும் தன்மையை அளிக்கும். இதனால் உனக்கு க்ருஷ்ணன் என்று பெயர் வைத்தார். மேலும் உலகத்தில் உள்ளவர்களின் பாவங்களை நீக்குபவன் என்ற பொருள் உள்ளது.

6 அந்யாந் ச நாம பேதாந் வ்யாகுர்வந்
அக்ரஜே ச ராம ஆதீந்
அதிமாநுஷ அநுபாவம் ந்யகதத்
த்வாம் அப்ரகாசயந் பித்ரே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த முனிவர் உனக்கு மேலும் பல பெயர்களைக் சூட்டினார். அதன் பின்னர் உன்னுடைய மூத்தவனுக்கு இராமன் என்ற பெயரையும் சூட்டினார். அதனைத் தொடர்ந்து தான் சூட்டிய பெயர்களுக்கான விளக்கங்களையும் கூறினார். பின்னர் உன்னுடைய உண்மையான ரூபத்தை அறிவிக்காமல், நீ மனிதர்களுக்கு உண்டான திறமை, பெருமைகளைக் கடந்து நிற்பாய் என்றார்.

7 ஸ்நிஹ்யதி ய: தவ புத்ரே முஹ்யதி ஸ:
ந மாயிகை: புந: சோகை:
த்ருஹ்யதி ய: ஸ து நச்யேத் இதி அவதத்
தே மஹத்வம் ரிஷி வர்ய:

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் அந்த முனிவர் உனது தந்தையிடம் உன்னுடைய மகன் மீது ஆசையும் ப்ரியமும் கொள்பவர்கள் எந்தவிதமான மாயை, துன்பங்கள் ஆகியவற்றில் இருந்தும் மீட்கப்படுவர். ஆனால் உனது மகனை தூஷிப்பவர்கள், வஞ்சிப்பவர்கள் அழிந்து விடுவர் என்றார்.

8 ஜேஷ்யதி பஹுதர தைத்யாந் நேஷ்யதி
நிஜபந்து லோகம் அமல பதம்

ச்ரோஷ்யதி ஸுவிமல கீர்த்தி: அஸ்ய
இதி பவத் விபூதிம் ரிஷி ஊசே

**பொருள் -** குருவாயூரப்பா! மேலும் அவர், இந்தக் குழந்தை பல அசுரர்களை அழித்துவிடும், தன்னை அடைந்தவர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் உயர்ந்த பதவியான மோட்சம் அளிக்கும். இப்படியாக இவனது குறையற்ற புகழை இந்த உலக மக்கள் கேட்பார்கள் என்றார்.

9 அமுநா ஏவ ஸர்வ துர்கம் தரிதாஸ்த்த
க்ருதா ஆஸ்தம் அத்ரதிஷ்டத்வம்
ஹரி: ஏவ இதி அநபிலபந் இதி
ஆதி த்வாம் அவர்ணயத் ஸ: முநி:

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த முனிவர் நந்த கோபரிடம், இவனால் அனைவரும் உங்கள் துயரங்கள் நீங்கப் பெறுவீர்கள். இவனையே முழுவதுமாக நம்புங்கள் என்றார். ஆயினும் நீதான் ஹரி என்று கூறவில்லை.

10 கர்கே அத நிர்கதே அஸ்மிந் நந்தித
நந்த ஆதி நந்த்யமாந: த்வாம்
மத் கதம் உத்கத கருணா:
நிர்கமய ஸ்ரீமருத் புர அதீச

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உன்னைப் புகழ்ந்த கர்க்க முனிவர் சென்றவுடன், மிகுந்த மகிழ்ச்சி அடைந்த நந்தகோபர் முதலானோர் வெகுவாக உன்னைக் கொண்டாடினார்கள். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளை நீக்க வேண்டும்.
***

1 அயி ஸபல முராரே பாணிஜாநு ப்ரசாரை:
கிமபி பவநபாகாந் பூஷயந்தௌ பவந்தௌ
சலித சரண குஞ்ஜௌ மஞ்ஜு மஞ்ஜுர சிஞ்ஜா
ச்ரவண குதுக பாஜௌ சேரது: சாரு வேகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பலராமனுடன் உள்ளவனே! நீயும் பலராமனும் சிறு குழந்தைகளாக, உங்கள் கைகளையும் முழங்கால்களையும் ஊன்றித் தவழ்ந்து தவழ்ந்து நந்தகோபரின் வீட்டின் அனைத்து இடங்களிலும் சென்றீர்கள். இப்படியாக அந்த வீடு அழகு பெற்றது. தாமரை போன்ற உனது கால்களில் கட்டப்பட்ட சலங்கைகள் நீ தவழ்ந்தபோது ஒலித்தன. அந்த ஒலியை மேலும் கேட்க விரும்பிய நீ மிகவும் விரைவாகத் தவழ்ந்தாய் அல்லவா?

2 ம்ருது ம்ருது விஹஸந்தௌ உந்மிஷத் தந்தவந்தௌ
வதந பதித தேசௌ த்ருச்ய பாத அப்ஜ தேசௌ
புஜ கலித கர அந்த வ்யாகலத் கங்கண அங்கௌ
மதிம் அஹரதம் உச்சை: பச்யதாம் விச்வ ந்ரூணாம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீங்கள் இருவரும் மெதுவாக மென்மையாகச் சிரித்தீர்கள். உங்கள் பற்கள் சிறிதாக அழகாக வெளியில் தெரிந்தன. உங்கள் தலைமுடி அழகாக உங்கள் முகங்களில் புரண்டன. பல ஆபரணங்களுடன் உங்கள் திருப்பாதங்கள் அழகாக காணப்பட்டன. புஜங்களில் அணிவிக்கப்பட்ட வளையல்கள் நழுவி மணிக்கட்டில் வந்து விழுந்து, அதற்கான அடையாளங்களும் ஏற்பட்டிருந்தன. இப்படியாக உன்னைக் கண்டவர்கள் மனதை கவர்ந்தீர்கள்.

3 அநுஸரதி ஜந ஒகே கௌதுக வ்யாகுல அசேஷ
கிமபி க்ருத நிநாதம் வ்யாஹஸந்தௌ த்ரவந்தௌ
வலித வதந பத்மம் ப்ருஷ்டத: தத்த த்ருஷ்டீ
கிமிவ ந விததாதே கௌதுகம் வாஸுதேவ

**பொருள் -** குருவாயூரப்பா! வாஸுதேவா! உன்னைக் காண வேண்டும் என்ற ஆவலுடன் மகிழ்ச்சி பொங்கும் கண்களை உடைய கோபர்கள் உன்னைத் தொடர்ந்து வந்தனர். அப்போது நீ உனக்கே உரிமையான சிரிப்பை உதிர்த்துவிட்டு வேகமாகத் தவழ்ந்தாய். தவழும்போது உனது தாமரை போன்ற முகத்தைத் திருப்பி அவர்களைப் பார்த்தாய். இதன் மூலம் நீ அவர்களுக்கு அளித்த ஆனந்தம் எத்தனை உயர்ந்தது?

4 த்ருத கதிஷு பதந்தௌ உத்திதௌ லிப்த பங்கௌ

திவி முநிபி: அபங்கை: ஸஸ்மிதம் வந்த்ய மாநௌ
த்ருதம் அத ஜநநீப்யாம் ஸாநுகம்பம் க்ருஹீதௌ
முஹு: அபி பரிரப்தௌ த்ராக் யுவாம் கம்பிதௌ ச

**பொருள் -** குருவாயூரப்பா! நீங்கள் இருவரும் மெதுவாக எழுந்து நடக்க ஆரம்பித்தீர்கள். அப்போது வேகமாக நடக்க முயற்சிக்கும்போது கீழே விழுந்தீர்கள். அதனால் கீழே உள்ள சேறு உங்கள் மீது படிந்தது. இப்படியாக உன்னைக் கண்டு ஆகாயத்தில் சஞ்சரிக்கும் முனிவர்கள் மகிழ்வுடன் வணங்கினர். பின்னர் உங்கள் தாய்மார்கள் விரைந்து வந்து உங்களைத் தூக்கி அணைத்துக் கொண்டு முத்தம் பொழிய ஆரம்பித்தனர்.

5 ஸ்நுத குச பரம் அங்கே தாரயந்தீ பவந்தம்
தரல மதி யசோதா ஸ்தந்யதா தந்ய தந்யா
கபட பசுப மத்யே முக்த ஹால அங்குரம் தே
தசந முகுள ஹ்ருத்யம் வீக்ஷ்ய வக்த்ரம் ஜஹர்ஷ

**பொருள் -** இடையனாக வேடம் கொண்டவனே! கபடனே! குருவாயூரப்பா! தானாகவே பால் சுரந்த பெரிய ஸ்தனங்கள் மூலமாக, உன்னைத் தனது மடியில் படுக்க வைத்து பால் ஊட்டிய யசோதை எத்தனை பேறு பெற்றவள்? இப்படியாக நீ பாலைப் பருகும்போது சிறிதாக முளைத்த மொட்டுப் போன்ற உனது பற்களையும், மயக்கும் புன்சிரிப்பையும் உடைய உனது திருமுகத்தைக் கண்ட யசோதை மிகவும் மகிழ்ந்தாள் அல்லவா?

6 தததநு சரண சாரீ தாரகை: ஸாகம் ஆராத்
நிலய ததிஷு கேலந் பால சாபல்ய சாலீ
பவந சுக விலாலாந் வத்ஸகாந் ச அநுதாவந்
கதம் அபி க்ருத ஹாஸை: கோபகை: வாரித: அபூ:

**பொருள் -** குருவாயூரப்பா! பின்னர் நீ நடக்கத் தொடங்கினாய். அப்போது ஆயர் சிறுவர்களுடன் சேர்ந்து அனைத்து வீடுகளுக்கும் சென்று உனக்கே உரித்தான சேட்டைகளைச் செய்தாய். அவர்கள் வீடுகளில் வளர்க்கப்பட்ட கிளி, பூனை. மாட்டுக்கன்று ஆகியவற்றை நீ துரத்திக் கொண்டு ஓடினாய். இதனைக் கண்டு மகிழ்ந்த கோபர்கள் சிரித்துக் கொண்டே உன் பின்னால் ஓடிவந்து உன்னைப் பிடித்தனர் அல்லவா?

7 ஹல தர ஸஹித: த்வம் யத்ர யத்ர உபயாத:
விவச பதித நேத்ரா: தத்ர தத்ர ஏவ கோப்ய:
விகலித க்ருஹ க்ருத்யா: விஸ்ம்ருத அபத்ய ப்ருத்யா:
முரஹர முஹு: அத்யந்த ஆகுலா: நித்யம் ஆஸந்

**பொருள் -** முரன் என்னும் அசுரனை அழித்தவனே! குருவாயூரப்பா! கலப்பையைக் கையில் கொண்டவனாகிய பலராமனுடன் நீ எந்த இடங்களுக்குச் சென்றாயோ, அங்கு உள்ள கோபிகைகள் தங்களது குழந்தைகளையும் கவனிக்காமல் வீட்டு வேலைகளையும் கவனிக்காமல், வேலை செய்பவர்களையும் மறந்து உன்னையே பார்த்து, அன்றாடம் ஆனந்தம் அடைந்தனர்.

8 ப்ரதிநவ நவநீதம் கோபிக: தத்தம் இச்சந்
கலபதம் உபகாயந் கோமலம் க்வ அபி ந்ருத்யந்
ஸதய யுவதி லோகை: அர்ப்பிதம் ஸர்பி: அச்நந்
க்வசந நவ விபக்வம் துக்தம் அபி ஆபிப: த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! கோபிகைகள் உனக்குக் கொடுக்கும் புதிய வெண்ணெயை மிகவும் விரும்பினாய். அதற்காக உனது மழலைக் குரலால் இனிமையாகப் பாடினாய்; அழகாக நடனம் ஆடினாய்; இதைக் கண்டு மகிழ்ந்த இளம்பெண்கள் உனக்கு அளித்த நெய்யை உண்டாய். அவர்கள் உனக்கு அளித்த காய்ச்சிய பாலைப் பருகினாய்.

9 மம கலு பலிகேஹே யாசநம் ஜாதம் ஆஸ்தாம்
இஹ புந: அபலாநாம் அக்ரத: ந ஏவ குர்வே
இதி விஹித மதி: கிம் தேவ ஸந்த்யஜ்ய யாச்ஞாம்
ததி க்ருதம் அஹா: த்வம் சாருணா சோரணேந

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன் மனதில் நான் முன்பு மகாபலியிடம் யாசித்து நின்றேன். (அது அவன் கர்வத்தை ஒடுக்க). ஆனால் கர்வம் இல்லாத இவர்களிடம்

யாசிக்க மாட்டேன் என்று நினைத்தாய் போலும். இதனால்தான் நீ தயிரையும் நெய்யையும் திருடி உண்டாயா?

10 தவ ததி க்ருத மோஷே கோஷ யோஷா ஜநாநாம்
அபஜத ஹ்ருதிரோஷ: ந அவகாசம் ந சோக:
ஹ்ருதயம் அபி முஷித்வா ஹர்ஷ ஸிந்தௌ ந்யதா: த்வம்
ஸ: மம சமய ரோகாந் வாத கேஹ அதிநாத

**பொருள் -** குருவாயூரப்பா! நீ இடையர்கள் வீட்டில் இருந்த தயிர், நெய் ஆகியவற்றைத் திருடினாய். இருந்த போதிலும் உன் மீது அங்கு இருந்த பெண்களுக்குக் கோபமோ வருத்தமோ உண்டாகவில்லை. என்ன காரணம்? நீ அவர்கள் உள்ளத்தையும் சேர்த்துத் திருடி விட்டாய். அதனால் அவர்கள் ஆனந்தமாக இருந்தனர். அல்லவா? இப்படிப்பட்ட நீ எனது பிணிகளையும் திருடமாட்டாயா?
***

1 அயிதேவ புரா கில த்வயி ஸ்வயம்
உத்தான சயே ஸ்தநந்தயே
பரி ஜ்ரும்பணதோ வ்யபாவ்ருதே
வதநே விச்வம் அசஷ்ட வல்லவீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தேவனே! ஒரு நாள் நீ உனது தாயின் ஸ்தனங்களில் இருந்து பாலைக் குடித்துவிட்டு, மல்லாந்து படுத்திருந்தாய். அப்போது நீ கொட்டாவி விட்டாய். உன்னுடைய வாய்க்குள் இந்த உலகம் முழுவதையும் யசோதை பார்த்தாள் அல்லவா?

2 புந: அபி அத பாலகை: ஸமம் த்வயி
லீலா நிரதே ஜகத் பதே
பல ஸஞ்சய வஞ்சந க்ருதா தவ மீருத்
போஜநம் ஊசு: அர்பகா:

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகின் பதியே! ஒரு நாள் உனது தோழர்களுடன் நீ விளையாடிக் கொண்டிருந்தாய். அந்த நேரம் அவர்கள் வைத்திருந்த பழங்களை, அவர்கள்

அறியாமல் உண்டாய். இதனால் கோபம் கொண்ட அவர்கள் நீ மண்ணைத் தின்று விட்டதாக உனது தாயிடம் பொய் கூறினார்கள் அல்லவா?

3 அயி தே ப்ரளய அவதெள விபோ
க்ஷிதி தோய ஆதி ஸமஸ்த பக்ஷிண:
ம்ருது பாசநத: ருஜா பவேத்
இதி பீதா ஜநநீ சுகோப ஸா

**பொருள் -** ப்ரளயத்தின் போது அனைத்தையும், உண்டு விழுங்குபவனே! குருவாயூரப்பா! மண்ணைத் தின்றதால் உனக்கு நோய் ஏற்படுமோ என்று யசோதை பயந்து உன்னைக் கோபித்தாள் அல்லவா?

4 அயி துர்விநய ஆத்மக த்வயா கிமு
ம்ருத்ஸா பத வத்ஸ பக்ஷிதா
இதி மாத்ரு கிரம் சிரம் விபோ விததாம் த்வம்
ப்ரதிஜஞ்நிஷே ஹஸந்

**பொருள் -** எங்கும் நிறைந்தவனே! குருவாயூரப்பா! உனது தாய் உன்னிடம் பொல்லாத பையனே! மண்ணைத் தின்றாயா? என்று கேட்டாள். ஆனால் அதற்கு நீ நீண்ட நேரம் சிரித்துக் கொண்டே நின்றாய். பின்னர் இல்லை, நான் தின்னவில்லை, அது பொய் என்றாய்.

5 அயி தே ஸகலை: விநிச்சிதே விமதி:
சேத் வதநம் விதார்யதாம்
இதி மாத்ரு விபத்ர்ஸித முகம் விகஸத்
பத்மநிபம் வ்யதாரய:

**பொருள் -** குருவாயூரப்பா! உடனே உனது தாய், நீ மண்ணைத் தின்றதாக அனைவரும் கூறுகின்றனர். நீ மட்டுமே இல்லை என்று சொல்கிறாய். அப்படி யென்றால் உனது வாயைத் திறந்து காட்டு என்றாள். நீயும் தாமரை மலர் போன்ற அழகாக சிவந்து உள்ள உனது வாயைத் திறந்தாய் அல்லவா?

6 அபி ம்ருத் லவ தர்சந உத்ஸுகாம்
ஜநநீம் தாம் பஹு தர்பயந் இவ
ப்ருதிவீம் நிகிலாம் ந கேவலம் புவநாநி
அபி அகிலாநி அதீத்ருச:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது வாயில் கொஞ்சம் மண் இருக்கும் என்று உனது தாய் நினைத்தாள். ஆனால் அவளது எதிர்பார்ப்பை நீ முற்றிலுமாக பூர்த்தி செய்ய வேண்டும் என்று எண்ணினாய். எனவே பூமியை மட்டும் அல்லாமல் அனைத்து உலகங்களையும் உனது வாயில் தெரியும்படி செய்தாயாமே?

7 குஹசித் வநம் அம்புதி: க்வசித் அப்ரம்
குஹசித் ரஸாதலம்
மநுஜா: தநுஜா: க்வசித் ஸுரா: தத்ருசே
கிம் ந ததா த்வத் ஆநநே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது வாய்க்குள் ஒரு பக்கமாக காடுகளையும் கடலையும் கண்டாள்; ஓர் இடத்தில் ஆகாயம் கண்டாள்; மேலும் பாதாள உலகங்களையும், மனிதர்களையும், தேவர்களையும், அசுரர்களையும் கண்டாள். அந்த வாய்க்குள் இல்லாதது என்று எதுவுமே இல்லை.

8 கலச அம்புதி சாயிநம் புந: பர வைகுண்ட
பத அதிவாஸிநம்
ஸ்வ புர: ச நிஜ அர்பக ஆத்மகம் கதிதா
த்வாம் ந ததர்ச ஸாமுகே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மேலும் அவள் நீ பாற்கடலில் பள்ளி கொண்டவனாக உள்ளத்தைக் கண்டாள்; பரமபதமான வைகுண்டத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டாள்; தன்னுடைய குழந்தையாகத் தென்படுவதையும் கண்டாள். இப்படியாக உன்னைப் பலவிதமாகக் கண்டாள் அல்லவா?

9 விகஸத் புவநே மக உதரே நநு பூவ

அபி ததாவித ஆநந:
அநயா ஸ்புடம் ஈக்ஷித: பவாந் அநவஸ்தாம்
ஜகதாம் பத ஆதநோத்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக உனது வாய்க்குள் அனைத்து உலகங்களையும் கண்டாள். அவை அனைத்தும் உனது முகத்தில் ப்ரகாசமாக இருந்தன. மேலும் உனது வாய்க்குள் மீண்டும் நீ நிற்பதாகவும் அந்த வாய் திறந்தும், அதற்குள் மீண்டும் நீ நிற்பதும் போன்றும், இப்படித் தொடர்ச்சியாக நீ தெரிந்தாய். நீ முடிவற்றவன் என்று உணர்த்தினாய் போலும்.

10 த்ருத தத்வ தியம் ததர க்ஷணம் ஜநநீம்
தாம் ப்ரணயேந மோஹயந்
ஸ்தநம் அம்பதி-இதி உபாஸஜந் பகவந்
அத்புத பால பாஹிமாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக உனது தாய் நல்ல ஞானம் அடைந்தாள். சற்று நேரம் அதே மயக்க நிலையில் இருந்த அவளை, நீ மீண்டும் தெளிய வைத்தாய். அதன் பின்னர் அம்மா! பசிக்கிறது! பால் தருகிறாயா? என்று எதுவும் அறியாதவன் போல் அவள் மடியில் அமர்ந்தாய். அற்புதமான குழந்தையே! என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 ஏகதா ததி விமாத காரிணீம் மாதரம்
ஸமுபஸேதிவாந் பவாந்
ஸ்தந்ய லோலுப தயா நிவாரயந் அங்கம்
ஏத்ய பபிவாந் பயோதரௌ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு நாள் உனது தாய் யசோதை தயிர் கடைந்து கொண்டிருந்தாள். அப்போது உனக்குப் பசித்த காரணத்தால் பால் குடிக்க வேண்டும் என்று எண்ணினாய். அவளிடம் சென்று தயிர் கடைவதை நிறுத்தி, அவள் மடியில் அமர்ந்து அவள் ஸ்தனங்களில் பால் அருந்தினாய் அல்லவா?

2 அர்த்த பீத குச குட்மலே த்வயி ஸ்நிக்த
ஹாஸ மதுர ஆநந அம்புஜே
துக்தம் ஈச தஹநே பரிஸ்ருதம் தர்த்தும்
ஆசு ஜநநீ ஜகாம தே

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! தாமரை மொட்டுகள் போன்று அழகான அவள் ஸ்தனங்களில் பாலைப் பருகினாய். அந்த மகிழ்வால் உனது முகம் தாமரை போன்று மலர்ந்து காணப்பட்டது. அந்த நேரம் அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி வழியத் தொடங்கவே, உனது தாய் விரைவாக (உனக்கும் பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு) உன்னைக் கீழே உட்கார வைத்துவிட்டு அடுப்படிக்குச் சென்றாள்.

3 ஸாமிபீத ரஸ பங்க ஸங்கத
க்ரோத பார பரிபூத சேதஸா
மந்த தண்டம் உபக்ருஹ்ய பாடிதம் ஹந்த
தேவ ததி பாஜநம் த்வயா

**பொருள் -** குருவாயூரப்பா! நீ பாலை முழுவதுமாகப் பருக இருந்தபோது உனக்கு முழுவதுமாக பால் கிடைக்காமல் தடைப்பட்டவுடன் குழந்தைகளுக்கே உரித்தான கோபம் கொண்டாய். உடனே அங்கு இருந்த மத்தை எடுத்து அங்கு இருந்த தயிர் பானையை உடைத்தாய் அல்லவா?

4 உச்சலத் த்வநிதம் உச்சகை: ததா
ஸந்நிசம்ய ஜநநீ ஸமாத்ருதா
த்வத் யச: விஸரவத் ததர்ச ஸா ஸத்ய:
ஏவததி விஸ்த்ருதம் க்ஷிதௌ

**பொருள் -** குருவாயூரப்பா! சத்தம் கேட்டவுடன் (உனக்கு ஆபத்து வந்து விட்டதோ என்று நினைத்து) மிகவும் விரைவாக யசோதை ஓடி வந்தாள். அங்கு வந்தவுடன், உனது புகழானது பரவி நிற்பது போல் தயிர் எங்கும் உள்ளதைக் கண்டாள்.

5 வேத மார்க பரிமார்கிதம் ருஷா த்வாம்
அவீக்ஷ்ய பரிமார்கயந்தீ அஸௌ
ஸந்ததர்ச ஸுக்ருதிந் உலூகலே

தீயமாந நவநீதம் ஓதவே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ வேதங்களால் தேடப்படுவன் அல்லவா? இப்படிப்பட்ட உன்னை பெரும் புண்ணியம் செய்திருந்த யசோதை தேடினாள். உன்னைக் காணாமல் கோபம் கொண்டாள். அப்போது ஓர் உரலின் மீது அமர்ந்து நீ பூனைக்கு வெண்ணெய் கொடுத்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

6 த்வாம் ப்ரக்ருஹ்ய பத பீதி பாவநா
பாஸுர ஆநந ஸரோஜம் ஆசுஸா
ரோஷ ரோஷித முகீ ஸகீ புரோ பந்தநாய
ரசநாம் உபாததே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அவளைக் கண்டவுடன் நீ பயந்தவனாக முகத்தை வைத்துக் கொண்டாய். அப்போது தாமரை போன்ற உனது முகம் மேலும் அழகானது. உன்னை யசோதை விரைவாக வந்து பிடித்தாள். கோபத்தால் அவள் முகம் சிவந்தது. அவளுடைய தோழிகளுக்கு முன்னால், உன்னை உரலில் கட்டி வைக்க எண்ணி கயிற்றை எடுத்தாளாமே! என்ன விபரீதம்!

7 பந்தும் இச்சதி யம் ஏவ ஸஜ்ஜந: தம்
பவந்தம் அயி பந்தும் இச்சதி
ஸா நியுஜ்ய ரசநா குணாந் பஹுந் த்வி
அங்குல ஊநம் அகிலம் கில ஐக்ஷத

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னை உனது அடியார்கள் தங்கள் உறவினனாகக் கொள்ள நினைக்கின்றனர். அப்படிப்பட்ட உன்னைக் கட்டிப்போட எண்ணிய யசோதை கயிறுகளை எடுத்தாள். எத்தனைக் கயிறுகளை ஒன்றாகச் சேர்த்தாலும் (உன்னைக் கட்ட முடியாதபடி) அவை இரண்டும் அங்குலம் குறைவாகவே இருந்தது.

8 விஸ்மித உத்ஸ்மித ஸகீ ஜந ஈக்ஷிதாம்
ஸ்விந்ந ஸந்ந வபுஷம் நிரீக்ஷ்யதாம்
நித்ய முக்த வபு: அபி அஹோ ஹரே பந்தம்

ஏவ க்ருபயா அந்வமந்யதா:

**பொருள் -** ஹரியே! குருவாயூரப்பா! யசோதையின் முயற்சிகளைக் கண்டு தோழிகள் சிரித்தனர். இதனால் மேலும் வியர்த்து சோர்ந்து போனாள். என்றும் யாராலும் கட்டுப்படுத்த முடியாதவன் நீ! ஆயினும் உனது தாயின் நிலை கண்டு கருணை கொண்ட நீ அவள் கட்டுவதற்கு இணங்கினாய்! என்ன வியப்பு!

9 ஸ்தீயதாம் சிரம் உலூகலே கல இதி
ஆகதா பவநம் ஏவ ஸா யதா
ப்ராக் உலூகல பில அந்தரே ததா ஸர்பி:
அர்பிதம் அதந் அவஸ்திதா:

**பொருள் -** குருவாயூரப்பனே! இப்படியாக உன்னை உரலில் கட்டிய யசோதை, சேட்டைப் பையனே! இப்படியே உரலுடன் நீ இரு என்று கூறிவிட்டுச் சென்றாள். ஆனால் நீயோ அந்த உரலின் குழியில் முன்பே வைக்கப்பட்ட நெய்யை எடுத்து உண்டாய் அல்லவா?

10 யதி அபாச ஸுகம: விபோ பவாந்
ஸம்யத: கிமு ஸபாசயா அநயா
ஏவம் ஆதி திவிஜை: அபிஷ்டுத:
வாத நாத பரிபாஹிமாம் கதாத்

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! பாசம் என்பதை அறுத்தவர்களால் மட்டுமே உன்னைக் கட்டுப்படுத்த முடியும். இப்படி இருக்க பாசம் நிறைந்த யசோதைக்கு எவ்வாறு கட்டுப்பட்டாய்? இப்படியாக தேவர்கள் உன்னைப் போற்றினர். அப்படிப்பட்ட நீ என்னைக் காக்க வேண்டும்.

***

1 முதா ஸுர ஓகை: த்வம் உதார ஸம்மதை:
உதீர்ய தாமோதர இதி அபிஷ்ருத:
ம்ருது உதர: ஸ்வைரம் உலூகலே லகந்
அதூரத: த்வௌ ககுபௌ உதைக்ஷதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னைக் கண்ட தேவர்கள் மிகுந்த ஆனந்தத்தால் உன்னை தாமோதரன் என்று அழைத்தனர். (தாமோதரன் = வயிற்றில் கட்டப்பட்டவன்). மிகவும் மென்மையான வயிற்றை உடைய நீ அந்த உரலின் மீது அமர்ந்து கொண்டு அங்கு இருந்த இரண்டு மருத மரங்களைப் பார்த்தாய் அல்லவா?

2 குபேர ஸூநு: நளகூபுர அபீத: பர:
மணிக்ரீவ: இதி ப்ரதாம் கத:
மஹேச ஸேவா அதிகத ச்ரியா உந்மதௌ
சிரம் கில த்வத் விமுக அவகேலதாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! குபேரனின் மகன்களான நளகூபரன் என்பவனும் மணிக்ரீவன் என்பவனும் சிவனை ஆராதித்து மிகுந்த செல்வங்கள் அடைந்தனர். இதனால் கர்வம் கொண்டனர். உன்னிடம் எந்த விதமான பக்தியும் செலுத்தாமல் அவர்கள் பொழுதைக் கழித்தனர். அல்லவா?

3 ஸுர ஆபகாயம் கில தௌ மத உத்கடௌ
ஸுராப காயத் பஹு யௌவத ஆவ்ருதௌ
விவாஸஸௌ கேளி பரௌ ஸ: நாரத:
பவத் பத ஏக ப்ரவண: நிரைக்ஷத

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் இருவரும் மயக்கவெறி அடைந்தவர்களாகவும், மதுவைக் குடித்து ஆடுபவர்களாகவும், பல பெண்கள் சூழ்ந்து நிற்பவர்களாகவும் இருந்தனர். ஒரு நாள் அவர்கள் இடுப்பில் துணியே இல்லாமல் கங்கையில் குளித்துக் கொண்டிருந்தனர். இதனை, உன்னையே எப்போதும் த்யானித்து வரும் நாரதர் கண்டார்.

4 பியா ப்ரிய ஆலோகம் உபாத்த வாஸஸம்
புர: நிரீக்ஷ்ய அபி மத அந்த சேதஸௌ
இமௌ பவத் பக்தி உபசாந்தி ஸித்தயே
முநி: ஜகௌ சாந்திம் ருதே குத: ஸுகம்

**பொருள் -** குருவாயூரப்பா! நாரதரைக் கண்ட அவர்கள் இருவரின் மனைவிகளும் பயந்து, தங்கள் ஆடைகளை உடுத்திக் கொண்டனர். இதனைக் கண்டும் அவர்கள் இருவரும் எந்த மாற்றமும் இன்றி இருந்தனர். இதனைக் கண்ட நாரதர், அவர்களுக்கு உன்னிடம் பக்தியும் சாந்தியும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, அவர்களைச் சபித்தார். மன அமைதி இன்றி எவ்வாறு இன்பம் கிடைக்கும்?

5 யுவாம் அவாப்தௌ ககுப ஆத்மதாம் சிரம்
ஹரிம் நிரீக்ஷ்ய அத பதம் ஸ்வம் ஆப்நுதம்
இதி ஈரிதௌ தௌ பவத் ஈக்ஷண ஸ்ப்ருஹாம்
கதௌ வ்ரஜ அந்தே ககுபௌ பபூவது:

**பொருள் -** குருவாயூரப்பா! நாரதர் அவர்களை நோக்கி, நீங்கள் இருவரும் நெடுங்காலம் மரங்களாகவே நின்று இருப்பீர்களாக. அதன் பின்னர் ஸ்ரீஹரி தரிசனம் கிடைத்த பின்னர் உங்கள் இடத்தை அடைவீர்கள் என்று சபித்தார். உடனே அவர்கள் இருவரும் உன்னைத் தரிசிக்கும் ஆர்வம் கொண்டு கோகுலத்திற்கு வந்து மரங்களாக நின்றனர்.

6 அதந்தரம் இந்த்ர த்ருயுகம் ததா விதம்
ஸமேயுஷா மந்த்ர காமிநா த்வயா
திராயுத உலூகலே ரோத நிர்துதௌ
சிராய ஜீர்ணௌ பரிபாதிதௌ தரூ

**பொருள் -** குருவாயூரப்பா! உரலில் கட்டுப்பட்ட நீ களைப்பு எதுவும் இல்லாமல் மெதுவாக நகர்ந்து சென்றாய். அந்த மரங்களுக்கு அருகில் சென்றாய். வெகு காலம் இருந்த காரணத்தினால் அவை உளுத்துப்போய் காணப்பட்டன. அந்த மரங்களுக்கு இடையில் உனது உரல் குறுக்காக மோதியது. இதனால் வலுவிழந்த அவை கீழே சாய்ந்தன.

7 அபாஜி சாகி த்விதயம் யதா த்வயா
ததா ஏவ தத் கர்ப தலாத் நிரேயுஷா
மஹா த்விஷா யக்ஷ யுகேந தத் க்ஷணாத்
அபாஜி கேவிந்த பவாந் அபி ஸ்தவை:

**பொருள் -** குருவாயூரப்பா! கோவிந்தா! அந்த இரண்டு மரங்களும் கீழே சாய்ந்த பின்னர் அவற்றின் நடுவில் இருந்து அழகான ஒளிமிக்க இரண்டு யக்ஷர்கள் வெளி வந்தனர். அவர்கள் உன்னைத் துதித்தனர். அல்லவா?

8 இஹ அந்ய பக்த: அபி ஸமேஷ்யதி க்ரமாத்
பவந்தம் ஏதௌ கலுருத்ர ஸே வகௌ
முநி ப்ரஸாதாத் பவத் அங்க்ரிம் ஆகதௌ
கதௌ வ்ருணா நௌ கலு பக்திம் உத்தமாம்

**பொருள் -** குருவாயூரப்பா! இந்தப் பூமியில் எந்தவித தேவதைகளை வணங்கும் பக்தர்களும் படிப்படியாக உன்னை வந்து அடைவார்கள் அல்லவா? இப்படியாக சிவனையே உபாஸித்து வந்த இவர்கள், நாரதரின் ஆசீர்வாதத்தால் உன்னையே சரணம் என்று அடைந்தனர். இதன் மூலம் உன்னிடம் உள்ள பக்தி நீங்காமல் இருக்க வேண்டும் என்று வரமாகப் பெற்றனர். அல்லவா?

9 தத: தரு உத்தாரண தாருண ஆரவ
ப்ரகம்பி ஸம்பாதிநி கோப மண்டலே
விலஜ்ஜித த்வத் ஜநநீ முக ஈக்ஷணா
வ்யமோக்ஷி நந்தேந பவாந் விமோக்ஷத:

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பிறகு மரங்கள் விழுந்த ஒலி கேட்ட ஆயர்கள் அங்கு விரைந்து வந்தனர். மிகுந்த அச்சத்தால் அவர்கள் நடுங்கினர். (உரலில் உன்னைக் கட்டியதால்) மிகுந்த வெட்கம் கொண்டிருந்த உனது தாயை நந்தகோபர் கண்டார். அனைவருக்கும் மோட்சம் என்னும் விடுதலை அளிக்கும் உன்னை உரலில் இருந்து விடுவித்தார் அல்லவா?

10 மஹு ருஹோர: மத்ய கத: கத அர்பக:
ஹரே: ப்ரபாவாத் அபரிக்ஷத: அதுநா
இதி ப்ருவாணை: கமித: க்ருஹம் பவாந்
மருத் புராதீச்வர பாஹிமாம் கதாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நந்தகோபர் அனைவரிடமும், இந்த இரண்டு பெரிய மரங்களின் இடையே புகுந்து சென்ற குழந்தை, ஸ்ரீஹரியின் அருளால் எந்தவிதமான ஆபத்தும் இன்றி உள்ளது. இது எத்தகைய வியப்பு! என்று கூறினார். அதன் பின்னர் உன்னைத் தனது வீட்டிற்குத் தூக்கிச் சென்றார். இப்படியாக பல அதிசயங்கள் புரிந்த நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.
***

1 பவத் ப்ரபாவ அவிதுரா: ஹி கோபா:
தரு ப்ரபாத் ஆதிகம் அத்ர கோஷ்டே
அஹேதும் உத்பாத கணம் விசங்க்ய
ப்ரயாதும் அந்யத்ர மந: விதேநு:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது சக்தியை அறியாத ஆயர்கள், மரம் விழுந்தது போன்ற செயல்கள் தீய சகுனங்களாகத் தென்படுகின்றன என முடிவு செய்தனர். அதனால் கோகுலத்தை விடுத்து வேறு ஓர் இடத்திற்குச் செல்ல முடிவு செய்தனர்.

2 தத்ர உபநந்த அபித கோபவர்ய:
ஜகௌ பவத் ப்ரேரணயா ஏவ நூரும்
இத: ப்ரதீச்யாம் விபிநம் மஹோஜ்ஜும்
ப்ருந்தாவநம் நாம விராஜநி இதி

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது அந்த ஆயர்களில் உபநந்தன் என்ற சிறந்தவன், நாம் இப்போது உள்ள இந்த கோகுலத்திற்கு மேற்கே ப்ருந்தாவனம் என்னும் அழகிய காடு உள்ளது என்றான். இவன் இப்படிக் கூறியது உன்னுடைய எண்ணமே அல்லவா?

3 ப்ருஹத் வநம் தத் கலு நந்த முக்ய:
விதாய கௌஷ்ட்டீநம் அத க்ஷணேந
த்வத் அந்வித த்வத் ஜநநீ நிவிஷ்ட
கரிஷ்ட யாந அநுகதா: விசேலு:

**பொருள் -** குருவாயூரப்பனே! அதன் பின்னர் நந்தகோபர் முதலானோர் இணைந்து, ப்ருஹத்வனம் என்ற பெயர் கொண்ட, அவர்கள் வசித்து வந்த கோகுலத்தை, சில மணி

நேரத்திலேயே ஒரு மாட்டுத் தொழுவமாக மாற்றினார்கள். உன்னைத் தூக்கிச் கொண்டு உனது தாய் ஒரு வண்டியில் அமர்ந்தாள். இதனால் பெருமை உடைய அந்த வண்டியை பின்பற்றி அனைவரும் ப்ருந்தாவனத்திற்குச் சென்றனர்.

4 அந: மநோஜ்ஞ த்வநி தேநு பாலீ
குர ப்ரணாத அந்தரத: வதூபி:
பவத் விநோத ஆலபித அக்ஷராணி
ப்ரபீய ந அஜ்ஞாயத மார்க தைர்க்யம்

**பொருள் -** குருவாயூரப்பா! வழி முழுவதும் வண்டிகளின் இனிமையான ஓசையும், மாடுகளின் குளம்புச் சத்தங்களும் கேட்டபடி அவர்கள் சென்றனர். மேலும் மழலை முற்றாத சொற்களால் நீ ஆயர்களுடன் இனிமையாகப் பேசுவதையும் கேட்டனர். இதனால் அவர்களுக்கு நடந்த களைப்பும் தூரமும் தெரியவில்லை.

5 நிரீக்ஷ்ய ப்ருந்தாவநம் ஈச நந்தத்
ப்ரஸூந குந்த ப்ரமுக த்ருமௌகம்
அமோததா: சாத்வல ஸாந்த்ர லக்ஷ்ம்யா
ஹரிந்மணீ குட்டித புஷ்ட சோபம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! (அந்த ப்ருந்தாவனம் எப்படி இருந்தது?) எங்கும் பூத்துக் குலுங்கியபடி மலர்கள்; குந்தம் போன்ற மலர்கள் நிறைந்த சோலைகள்; சோலைகளில் இரத்தினக் கற்கள் பதித்து வைத்தது போல் ஒளி வீசியபடி பசும்புற்கள் நிறைந்த தரை-இப்படியாக அழகு பொதிந்து விளங்கிய ப்ருந்தாவனத்தைக் கண்டு நீ மகிழ்ந்தாய் அல்லவா?

6 நவாக நிர்வ்யூட நிவாஸ பேதேஷு
அசேஷ கோபேஷு ஸுக ஆஸிதேஷு
வநச்ரியம் கோப கிசோரபாலீ
விமிச்ரித: பர்யக அலோகதா: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பா! அங்கு அவர்களால் சந்திரனின் பிரபை போன்று அழகான தனித்தனி வீடுகள் கட்டப்பட்டன. அவர்கள் சுகமாக வாசம் செய்யத் தொடங்கினர். நீ ஆயர் சிறுவர்களை உடன் அழைத்துக் கொண்டு ப்ருந்தாவனத்தில் அனைத்து இடங்களிலும் சுற்றி வந்தாய் அல்லவா?

7 அரால மார்க ஆகத நிர்மல அபாம்
மரால கூஜாக்ருத நர்ம லாபாம்
நிரந்தர ஸ்மேர ஸரோஜ வக்த்ராம்
களிந்த கந்யாம் ஸமலோகய: த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அன்னப் பறவைகளின் இனிமையான ஒலியே அவளது இனிமையான பேச்சு; மலர்ந்து உள்ள தாமரை மலர்களே அவளது புன்னகை உடைய முகம் - இப்படியாக வளைந்து வளைந்து ஓடுபவளும் தெளிவான நீரை உடையவளும் களிந்தன் என்பவனின் மகளுமான யமுனை நதியை கண்டு நீ மகிழ்ந்தாய் அல்லவா?

8 மயூர கேகா சத லோபநீயம்
மயூக மாலா சபலம் மணீநாம்
விரிஞ்ச லோக ஸ்ப்ருசம் உச்ச ச்ருங்கை:
கிரிஞ்ச கோவர்த்தநம் ஐக்ஷதா: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! மயில்களின் கோகோ என்னும் ஓசையால் அனைவரையும் ஈர்ப்பதும், ரத்தினக்கற்கள் வீசுகின்ற ஒளியால் பல நிறங்கள் உடையதும், உயர்ந்து உள்ளதால் அதன் உச்சி ப்ரும்மலோகத்தை எட்டுவதும் ஆகிய கோவர்த்தன மலையை நீ பார்த்தாய் அல்லவா?

9 ஸமம் தத: கோப குமாரகை: த்வாம்
ஸமந்த்த: யத்ர வந அந்தம ஆகா:
தத: தத: தாம் குடிலாம் அபச்ய:
களிந்த ஜாம் ராகவதீம் இவ ஏகாம்

பொருள்; குருவாயூரப்பா! நீ இடையர்களுடன் அந்தக் காட்டில் பல இடங்களிலும் சென்றாய். நீ எந்த இடத்திற்கெல்லாம் சென்றாயோ அந்த இடங்கள் அனைத்திற்கும், உன் மீது மிகுந்த காதல் உடையவளாக ஓடி வந்த யமுனையைக் கண்டாய் அல்லவா?

10 ததாவிதே அஸ்மின் விபிநே பசவ்யே
ஸமுத்ஸுக: வத்ஸகண ப்ரசாரே
சரந் ஸராம: அத குமாரகை: த்வம்
ஸமீர கேஹ அதிப பாஹி ரோகாத்

**பொருள் -** குருவாயூரப்பா! க்ருஷ்ணா! இப்படியாக பல சிறப்புகள் உடையதும். பசுக்களுக்கு இன்பம் அளிப்பதும் ஆக ப்ருந்தாவனம் இருந்தது. அங்கு நீ பசுக்களை மேய்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டாய். பலராமனுடனும் இடையர்களுடனும் சேர்ந்து நீ பல இடங்களில் பசு மேய்த்து வந்தாய். இப்படிப்பட்ட நீ என்னை பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 கதாசந வ்ரஜ சிசுபி: ஸமம் பவாந்
வந அசநே விஹித மதி: ப்ரகேதாம்
ஸமாவ்ருத: பஹுதர வத்ஸ மண்டலை:
ஸதேமநை: நிரகமத் ஈச ஜேமனை:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஈசனே! ஒரு நாள் உனது நண்பர்களுடன் சென்று வனத்தில் உணவு உண்ண ஆவல் கொண்டாய். அதற்காக ஒரு நாள் அதிகாலையில் பல மாடுகளுடன் கையில் சாதம். ஊறுகாய் போன்றவற்றை எடுத்துக் கொண்டு நீ புறப்பட்டாய் அல்லவா?

2 விநிர்யத: தவ சரண அம்புஜ த்வயாத்
உதஞ்சிதம் த்ரிபுவந பாவநம் ரஜ:
மஹர்ஷய புலக தரை: கலேவரை:
உதூஹிரே த்ருத பவத் ஈக்ஷண உத்ஸவா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ இவ்வாறு வெளியில் கிளம்பியபோது அங்கு உனது தாமரை போன்ற அழகிய திருவடிகளில் புழுதி கிளம்பியது. அது மூன்று உலகங்களையும் தூய்மையாக்க வல்லது அல்லவா? அதனை முனிவர்கள் தங்கள் உடலில் பூசிக்கொண்டு உன்னுடைய தரிசனத்தை ஒரு விழாவாகவே கொண்டாடினர் அல்லவா?

3 ப்ரசாரயதி அவிரல சாத்வலே தலே
பசூந் விபோ பவதி ஸமம் குமாரகை:
அகாஸுர: ந்யருணத் அகாய வர்த்தநீம்
பயாநக: ஸபதி சயாநக ஆக்ருதி:

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! நீ ஆயர்களோடு புற்கள் நிறைந்த தரைப்பகுதியில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தாய். அப்போது அகன் என்ற அசுரன் உனக்கு ஆபத்து விளைவிப்பதற்காக, பெரிய மலைப்பாம்பு போன்று உருவம் எடுத்துக் கொண்டு நீ செல்லும் வழியை மறித்துக் கிடந்தான் அல்லவா?

4 மஹா அசல ப்ரதிம தநோ: குஹா நிப
ப்ரஸாரித ப்ரதித முகஸ்ய காநநே
முக உதரம் விஹரண கௌதுகாத் கதா:
குமாரகா: கிம் அபி விதூரகே த்வயி

**பொருள் -** குருவாயூரப்பனே! காட்டிற்குள் சென்று உனது நண்பர்கள் விளையாட எண்ணினர். நீ சற்று தூரத்தில் இருந்தபோது, மலை போன்று உடலும் குகையாக வாயையும் உடைய அந்த அசுரனின் வாய்க்குள் சென்றனர். அல்லவா?

5 ப்ரமாதத: ப்ரவிசதி பந்நக உதரம்
க்வதத் தநௌ பசுப குலே ஸவத்ஸகே
விதந் இதம் த்வம் அபி விவேசித ப்ரபோ
ஸுஹ்ருத் ஜநம் விசரணம் ஆசுரக்ஷிதம்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக ஆயர்கள் எதுவும் அறியாமல் அந்தப் பாம்பின் வாயில் நுழைந்தனர். அங்கு அந்த பாம்பின் வயிற்றில் ஏற்பட்ட வெப்பத்தால் வேதனை

அடைந்தனர். இதனை அறிந்து கொண்ட நீ, வேறு யாரையும் தங்கள் உதவி என்று நினைக்காத உனது நண்பர்களைக் காப்பாற்ற அந்தப் பாம்பின் வாய்க்குள் நுழைந்தாய்.

6 கல உதரே விபுலித வர்ஷ்மணா த்வயா
மஹா உரகே லுடதி நிருத்த மாருதே
த்ருதம் பவாந் விதளித கண்ட மண்டல:
விமோசயந் பசுப பசூந் விநிர்யயௌ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தப் பாம்பின் வாய்க்குள் நுழைந்த நீ அதன் கழுத்தில் உனது உருவத்தைப் பெரியவனாக வளர்த்தாய். இதனால் அந்தப் பாம்பு மூச்சு விடமுடியாமல் திணறியது. அந்த வேதனையில் புரண்டது. நீ வேகமாக அதன் கழுத்தைப் பிளந்து கொண்டு, உனது தோழர்களையும், மாடுகளையும் அழைத்து கொண்டு வெளியில் வந்தாய்.

7 க்ஷணம் திவி த்வத் உபகமார்த்தம் ஆஸ்திதம்
மஹா அஸுர ப்ரபவம் அஹோ மஹ: மஹத்
விநிர்கதே த்வயி து நிலீநம் அஞ்ஜஸா
நப: தலே நந்ருது: அதோ ஜகு: ஸுரா:

**பொருள் -** உடனே அந்த அசுரனின் உடலில் இருந்து ஓர் ஒளி வெளிக்கிளம்பி வந்தது. நீ அந்தப் பாம்பின் உடலில் இருந்து வெளியே வருவதற்காகக் காத்து நின்றது. நீ வெளியில் வந்தவுடன் அது உன்னில் வந்து சேர்ந்தது. இதனைக் கண்டு தேவர்கள் ஆனந்தம் கொண்டு பாடி ஆடி மகிழ்ந்தனர்.

8 ஸ விஸ்மயை: கமலபவ ஆதிபி: ஸுரை:
அநுத்ருத: ததநு கத: குமாரகை:
திநே புந: தருண தசாம் உபேயுஷி
ஸ்வகை: பவாந் அதநுத போஜந உத்ஸவம்

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் உன்னைத் தொடர்ந்து (வான் வழியாக) ப்ரும்மா முதலானோர் வந்தனர். நீ உனது நண்பர்களுடன் இணைந்து, காட்டிற்குள்

சென்றாய். நடுப்பொழுது வந்ததும் அவர்களுடன் அமர்ந்து உணவு உண்பதை ஒரு விழாவாகவே செய்தாய்.

9 விஷாணிகாம் அபி முரளீம் நிதம்பகே
நிவேசயந் கபலதர: கர அம்புஜே
ப்ரஹாஸயந் கலவசநை: குமாரகாந்
புபோஜித த்ரிதச கணை: முதா நுத:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ உனது மாடு மேய்க்கும் குச்சியையும், புல்லாங்குழலையும் இடுப்பில் செருகி வைத்திருந்தாய். தாமரை போன்று சிவந்தும் அழகாயும் உள்ள உனது சிறிய கைகளில் உணவை வைத்துக் கொண்டு நின்றாய். உனது வசீகரமான பேச்சுகள் மூலம் நண்பர்களை மகிழ வைத்தாய். அப்படியே உணவையும் உண்டாய். இதனைக் கண்டு மகிழ்வுற்ற தேவர்கள் உன்னைத் துதித்தனர் அல்லவா?

10 ஸுக அசநம் து இஹ தவ கோபமண்டலே
மக அசநாத் ப்ரியம் இவ தேவ மண்டலே
இதி ஸ்துத: திரிதச வரை: ஜகத்பதே
மருத் புரீ நிலய கதாத் ப்ரபாஹிமாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உலகின் பதியே! அந்தத் தேவர்கள் உன்னை நோக்கி, பகவானே! இங்கு கோபர்களின் இடத்தில் அவர்கள் குழந்தைகளோடு அமர்ந்து உணவை உண்கிறாய். இந்த உணவு, தேவலோகத்தில் நடைபெறும் யாகங்களில் உனக்கு அளிக்கப்படும் அவிர்பாக உணவை விடச் சிறப்பாகவும் ப்ரியமாகவும் உள்ளது போலும் என்று கூறியபடி வணங்கினர். இப்படிப்பட்ட செயல்களை நிகழ்த்தும் நீ என்னை பிணிகளிடம் இருந்து காக்க வேண்டும்.

***

1 அந்ய அவதார நிகரேஷு அநிரீக்ஷிதம் நே
பூமா அதிரேகம் அபிவீக்ஷ்ய ததா அகமோக்ஷே
ப்ரஹ்மா பரீக்ஷிதுமநா: ஸ பரோக்ஷ பாவம்
நிந்யே அதவத்ஸக கணாந் ப்ரவிதத்ய மாயாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது மற்ற அவதாரங்களில் காணப்படாத உனது செல்வங்களை இந்த அவதாரத்தில் குறிப்பாக அகாஸுரன் வதத்தின் போது ப்ரும்மா கண்டான் என்றாலும் உன்னை மேலும் சோதிக்க எண்ணியபடி, தனது மாயை மூலம் மாடுகளின் கூட்டத்தை மறைத்தான்.

2 வத்ஸாந் அவீக்ஷ்ய விவசே பசுப உத்கரே தாந்
ஆநேது காம இவ தாத்ரு மத அநுவர்த்தீ
த்வம் ஸாமி புக்த கவல: கதவாம் ஸ்ததாநீம்
புக்தாம் ஸ்திரோதித ஸரோஜபவ: குமாராந்

**பொருள் -** குருவாயூரப்பா! தங்கள் மாடுகளைக் காணாமல் உனது நண்பர்களான ஆயர் சிறுவர்கள் மனவருத்தம் கொண்டனர். நீயும் ப்ரும்மாவின் திட்டத்திற்குத் துணை போவது போன்று, பாதி உண்ட சோற்றுக் கவளத்தோடு (மாடுகளைத் தேட) சென்றாய். அப்போது ப்ரும்மா அங்கே உண்டு கொண்டிருந்த சிறுவர்களையும் மறைத்தான்.

3 வத்ஸாயித: தததநு கோப கணாயித: த்வம்
சிக்ய ஆதி பாண்ட முரளீ கவல ஆதிரூப:
ப்ராக்வத் விஹ்ருத்ய விபிநேஷு சிராய ஸாயம்
த்வம் மாயயா அத பஹுதா ப்ரஜம் ஆயயாத

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் நீ உனது மாயை மூலம் ஆயர் சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் உருமாறினாய். இது தவிர அவர்கள் உறி முதலான பாத்திரங்களாகவும், புல்லாங்குழல்களாகவும், குச்சிகளாகவும் வடிவங்கள் எடுத்தாய். அத்துடன் காட்டில் எப்போதும் போல் விளையாடினாய். பின்னர் மாலை நேரமானதும் ப்ருந்தாவனம் திரும்பினாய் அல்லவா?

4 த்வாம் ஏவ சிக்ய கவல ஆதிமயம் ததாந:
பூய: த்வம் ஏவ பசு வத்ஸக பாலரூப:
கோ ரூபிணீபி: அபி கோப வதூ மயீபி:
ஆஸாதித: அஸி ஜநநீபி: அதி ப்ரஹர்ஷாத்

**பொருள் -** குருவாயூரப்பா! மாட்டுக் கன்றுகளாக, ஆயர் சிறுவர்களாக, சிறுவர்களின் பொருள்களாக ஆக இப்படி பலவிதமாக உன்னை நீயே உருவம் எடுத்துக் கொண்டாய். இப்படிச் சென்ற நீ அங்கிருந்த ஆய்ச்சிமார்களாலும், பசுக்களாலும் மிகவும் அன்புடன் வரவேற்கப்பட்டாய் அல்லவா?

5 ஜீவன் ஹி கஞ்சித் அபிமாந வசாத் ஸ்வகீயம்
மத்வா தநூஜ: இதி ராக பரம் வஹந்த்ய:
ஆத்மாநம் ஏவ து பவந்தம் அவாப்ய ஸூநும்
ப்ரீதிம் யயு: கியதீம் விநிதா: ச காவ:

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் ஏதோ ஒரு ஜீவனைத் தனது பிள்ளை என்று பெற்றெடுத்து அதன் மீது அன்பு வைக்கின்றனர். இப்படி இருக்கும்போது அங்கு இருந்த பசுக்களும், தாய்மார்களும் தங்கள் உயிராகவே நினைத்திருந்த உன்னைத் தங்கள் பிள்ளைகளாக (அவர்கள் அறியாமலேயே) அடைந்த போது அவர்கள் எவ்வாறு மிகழ்வுறாமல் இருந்திருப்பார்கள்.

6 ஏவம் ப்ரதிக்ஷண விஜ்ரும்பித ஹர்ஷ பார
நிச்சேஷ கோப கண லாலித பூரி மூர்த்திம்
த்வாம் அக்ரஜ: அபு புபுதே கில வத்ஸர அந்தே
ப்ரஹ்ம ஆத்மதோ: அபி மஹாந் யுவயோ: விசேஷ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக அனைத்து கோபிகைகளும், பல வடிவம் கொண்ட உன்னை. ஒவ்வொரு நிமிடத்திலும் ஆனந்தம் பொங்க வைத்தனர். நீ இவ்வாறு பல உருவம் கொண்டிருந்ததை உனது அண்ணனான பலராமன் கூட வருட முடிவில் தான் அறிந்தான் அல்லவா? நீங்கள் இருவருமே ஒரே ப்ரஹ்மத்தின் ஸ்வரூபங்கள் என்றாலும் உங்களுக்கு இடையே ஒரு வேறுபாடு இருந்தது அல்லவா?

7 வர்ஷா அவதௌ நவ புராதந வத்ஸ பாலாந்
த்ருஷ்ட்வா விவேக மஸ்ருணே த்ருஹிணே விமூடே
ப்ராதீத்ருச: ப்ரதிநவாந் மகுட அங்கத ஆதி
பூஷாம் சதுர்புஜ யுஜ: ஸஜல அம்புத ஆபாந்

**பொருள் -** குருவாயூரப்பா! வருடத்தின் முடிவில் ப்ரும்மா தான் ஒளித்து வைத்திருந்த கன்றுகள் மற்றும் சிறுவர்களுக்கும், புதிதாக உள்ள சிறுவர்கள் மற்றும் கன்றுகளுக்கும் எந்த விதமான வித்தியாசமும் காண இயலாமல் வியப்புற்று மயங்கி நின்றான். அப்போது நீ புதிய சிறுவர்கள் மற்றும் கன்றுகளை (ப்ரும்மா அறிந்து கொள்வதற்காக) நான்கு கரங்களுடனும், க்ரீடம் முதலான ஆபரணங்களுடனும், மழைநீர் கொண்ட கறுத்த மேகம் போன்றும் உனது ரூபமாகத் தோன்றச் செய்தாய் அல்லவா?

8 ப்ரதி ஏகம் ஏவ கமலா பரிலாலித அங்காந்
போகி இந்த்ர போக சயநாந் நயந அபிராமாந்
லீலா நிமீலித த்ருச: ஸநக ஆதியோகி
வ்யாஸேவிதாந் கமல பூ: பவத: ததர்ச

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய ஒவ்வோர் உருவத்தையும் மஹாலக்ஷ்மி சீராட்டி வணங்கினாள்.
ஒவ்வோர்! உருவமும் பாற்கடலில் ஆதிசேஷன் மீது சயனித்து காணப்பட்டது. ஒவ்வொன்றும் யோக நித்திரையில் கண்மூடி இருந்தது. ஒவ்வொன்றையும் ஸநகாதிகள் வணங்கித் துதித்தனர். இப்படியாக ப்ரும்மா உனது வடிவங்களை அவர்களில் கண்டான் அல்லவா?

9 நாராயண ஆக்ருதிம் அஸங்க்யதமாம் நிரீக்ஷ்ய
ஸர்வத்ர ஸேவகம் அபி ஸ்வம் அவேக்ஷ்ய தாதா
மாயா நிமக்ந ஹ்ருதய: விமுமோஹ யாவத்
ஏக: பபூவித ததா கபல அர்த்தபாணி:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக எண்ணற்ற நாராயண உருவங்களையும், ஒவ்வொரு நாராயணனுக்கும் தான் சேவகனாக நிற்பதையும் ப்ரும்மா கண்டு, மீண்டும் செய்வதறியாது மயங்கி நின்றான். அவன் மீது பரிதாபம் கொண்டு, அவன் மயக்கம் நீங்க, நீ தனியாக கையில் சோற்று உருண்டையுடன் முன்னர் எவ்வாறு இருந்தாயோ அப்படியே தோன்றினாய்.

10 நச்யந் மதே ததநு விச்வபதிம் முஹு: த்வாம்
நத்வா ச நூதவதி தாதரி தாம யாதே
போதை: ஸமம் ப்ரமுதிதை: ப்ரவிசந் நிகேதம்
வரதாலய அதிப விபோ பரிபாஹி ரோகாத்

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரின் அதிபதியே! குருவாயூரப்பா! அதன் பின்னர் ப்ரும்மா தனது கர்வத்தை அடக்கிக் கொண்டான். உன்னைப் பலமுறை வணங்கித் துதித்தான். பின்னர் தனது லோகத்திற்குச் சென்றான். நீயும் (பழைய) சிறுவர்கள். கன்றுகளுடன் உனது வீட்டிற்குச் சென்றாய்! இப்படிப்பட்ட நீ என்னை பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 அதீத்ய பால்யம் ஜகதாம் பதே த்வம்
உபேத்ய பௌகண்ட வய: மநோஜ்ஞும்
உபேக்ஷ்ய வத்ஸ அவநம் உத்ஸவேந
ப்ரவர்த்ததா: தோ கண பாலநாயாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உலகின் பதியே! நீ உனது ஐந்தாவது வயதைக் கடந்து, பௌகண்டம் என்னும் பருவத்தை அடைந்தாய் (6 முதல் 10 வயது). அப்போது கன்றுகளை மேய்ப்பதை விடுத்து, மாடுகளை மேய்த்து அவற்றைக் காக்கும் முயற்சியில் ஆவல் கொண்டாய்.

2 உபக்ரமஸ்ய அநுகுணா ஏவ ஸா இயம்
மருத் புராதீச தவ ப்ரவ்ருத்தி:
கோத்ரா பரித்ராணக்ருதே அவதீர்ண:
தத் ஏவ தேவ ஆரபதா: ததா யத்

**பொருள் -** குருவாயூரப்பனே! நீ இந்த கோத்ரத்தைக் காப்பதற்காகத் தோன்றினாய். (கோத்ரம் என்பதற்கு பூமி மற்றும் பசு என்று இரு பொருள் உண்டு.) உனது ஆறாவது வயதில் இந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாய். நீ இந்த வயதில் இதனைத் தொடங்குவது சரியே ஆகும்.

3 கதாபி ராமேண ஸமம் வந அந்தே
வந ச்ரியம் வீக்ஷ்ய சரந்ஸுகேந
ஸ்ரீதாம நாம்ந: ஸ்வ ஸகஸ்ய வாசா
மோதாத் அகா: தேநுக காநநம் த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு நாள் நீ பலராமனுடன் சேர்ந்து காட்டினுள் அதன் அழகைக் கண்டு ரசித்தபடியே சுற்றி வந்தாய். அந்த நேரத்தில் ஸ்ரீதாமன் என்னும் உன் நண்பன் கூறியதைக் கேட்டு, தேனுகன் என்ற அசுரன் வசித்து வந்த காட்டிற்குச் சென்றாய் அல்லவா?

4 உத்கால தாலீ நிவஹே த்வத் உக்த்யா
பலேந தூதே அத பலேந தோர்ப்யாம்
ம்ருது: கர: ச அப்யபதத் புரஸ்தாத்
பல உத்கர: தேநுக தாநவ: அபி

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய சொற்களைக் கேட்ட பலராமன் தனது இரண்டு கைகளாலும் அங்கு இருந்த பனைமரங்களை உலுக்கத் தொடங்கினான். இதனால் பழுத்த மென்மையான பழங்களும், பழுக்காத கடினமான பழங்களும் கீழே விழுந்தன. அவற்றின் ஓசையைக் கேட்ட தேனுகன் ஓடி வந்தான் அல்லவா?

5 ஸமுத்யத: தேநுக பாலநே அஹம்
கதம் வதம் தைநுகம் அத்ய குர்வே
இதி இவ மத்வா த்ருவம் அக்ரஜேந
ஸுர ஓக யோத்தாரம் அஜீகத: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! அப்போது நீ, நானே தேனுக கூட்டத்தை (பசுக்கள்) காப்பதற்காக உள்ளேன். பின் எப்படி நான் தேனுக வதம் ( தேனுகன் என்ற அசுரவதம்) செய்வது? என்று நினைத்தாய். இதனால் தானோ அந்த அசுரனை உனது அண்ணன் மூலம் வதம் செய்தாய்?

6 ததீய ப்ருத்யாந் அபி ஜம்புகத்வே ந

உபாகதா அக்ரஜ ஸம்யுத: த்வம்
ஜம்பூ பலாநி இவ ததா நிராஸ்த:
தாலேஷு கேலந் பகவந் நிராஸ்த:

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! அந்த சமயத்தில் தேனுகனின் அடியாட்கள் நரிகள் போன்று வேடம் பூண்டு உன்னிடம் வந்தனர். நீ எந்தவித களைப்பும் இன்றி, நாவற் பழங்களை எறிவது போல் அவர்களைப் பிடித்து பனை மரங்களின் மீது எறிந்தாய் அல்லவா?

7 விநிக்நதி த்வயி அத ஜம்புக ஓகம்
ஸ நாமதத்வாத் வருண: ததாநீம்:
பய ஆகுல: ஜம்புக நாமதேயம்
ச்ருதி ப்ரஸித்தம் வ்யதித இதி மன்யே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அந்த நரிக்கூட்டத்தை (ஜம்புகம்) அழிக்கத் தொடங்கினாய். இதனைக் கண்ட ஜம்புகன் என்னும் அதே பெயரையுடைய வருணதேவன் பயந்து விட்டான். இதனால் தன்னுடைய அந்தப் பெயர் வெளியில் தெரியாவண்ணம் மறைத்து வேதங்களில் மட்டுமே இருக்கும்படிச் செய்தான். என்று நான் நினைக்கிறேன் இது சரியா?

8 தவ அவதாரஸ்ய பலம் முராரே
ஸஞ்ஜாதம் அத்ய இதி ஸுரை: நுத: த்வம்
ஸத்யம் பலம் ஜாதம் இஹ இதி ஹாஸீ
பாலை: ஸமம் தால பலாநி அபுங்க்தா:

**பொருள் -** குருவாயூரப்பா! முராசுரனை அழித்தவனே! தேவர்கள் உன்னை வணங்கி, க்ருஷ்ணா! உனது அவதாரத்திற்கு உரிய பலன் இப்போதுதான் ஏற்பட்டது என்றனர். நீயும் அதனைக் கேட்டு கிண்டலாகச் சிரித்து, ஆம், எனக்கு இப்போதுதான் பலன் (பழம்) கிடைத்தது. என்றாய். இப்படிக் கூறியபடி உன் நண்பர்களுடன் பழங்களை உண்டாய்.

9 மது ஸ்ரவ ஸ்ருந்தி ப்ருஹந்தி தாநி
பலாநி மேத: பரப்ருந்தி புக்த்வா

த்ருப்தை ச த்ருப்தை: பவநம் பல ஓகம்
வஹத்பி: ஆகா: பாலகை: த்வம்

**பொருள் -** குருவாயூரப்பனே! மிகுந்த பழச்சாறும், இனிப்பாகவும், பெரிதாகவும் உள்ள அந்தப் பனம் பழங்களை உண்ட மனநிறைவும் மகிழ்வும் அடைந்தாய். உனது நண்பர்கள் அங்கு இருந்த பழங்களை தங்கள் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு புறப்பட்டவர்கள் அல்லவா?

10 ஹத: ஹத: தேநுக: இதி உபேத்ய
பலாநி அதத்பி: மதுராணி லோகை:
ஜயஇதி ஜீவஇதி நுத: விபோ த்வம்
ம்ருத்புராதீச்வர பாஹி ரோகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! ஆயர்கள் அனைவரும், தேனுகன் மடிந்தான்! மடிந்தான்! என்று கூறியபடி உன்னிடம் வந்தனர். நீ கொடுத்த சுவையான பழங்களை உண்டு மகிழ்ந்தனர். நீ எப்போதும் ஜெயத்துடன் வாழ வேண்டும் என்று உன்னை வாழ்த்தினர். இப்படிப்பட்ட நீ என்னை பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 தரல மதுக்ருத் வ்ருந்தே ப்ருந்தாவநே அத மநோஹரே
பசுப சிசுபி: ஸாகம் வத்ஸ அநுபாலந லோலுப:
ஹலதரஸக: தேவ ஸ்ரீமந் விசேரித தாரயந்
கவல முரளீ வேத்ரம் நேத்ர அபிராம தநு த்யுதி:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மஹாலக்ஷ்மியின் நாதனே! தேவனே! காண்பவர்கள் கண்களுக்கு இதமாக உள்ளது போன்ற ஒளி பொருந்திய மேனியைக் கொண்டிருந்தாய். கைகளில் கலப்பை வைத்திருந்த பலராமனுடனும் மற்ற இடையர்களுடனும் இணைந்து, நீ கன்றுக்குட்டிகளை மேய்க்க விருப்பம் கொண்டாய். இதனால், தேன் மணத்தை விரும்பியபடி எங்கும் பரந்து திரிந்த வண்டுக் கூட்டங்கள் நிறைந்த ப்ருந்தாவனத்தில் - கொம்பு வாத்தியம், புல்லாங்குழல், குச்சி ஆகியவற்றைக் கைகளில் கொண்டு சுற்றினாய் அல்லவா?

2 விஹித ஜகதீ ரக்ஷம் லக்ஷ்மீ கர அம்புஜ லாலிதம்
தததி சரண த்வந்த்வம் ப்ருந்தாவநே த்வயி பாவநே
கிமிவ ந பபௌ ஸம்பத் ஸம்பூரிதம் தரு வல்லரீ
ஸலில் தரணீ கோத்ர க்ஷேத்ர ஆதிகம் கமலா பதே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா மஹாலக்ஷ்மியின் நாயகனே! உனது பாதங்கள் அனைத்து உலகையும் காத்து நிற்பவை; மஹாலக்ஷ்மியால், அவளது தாமரை போன்ற சிவந்த அழகிய கைகளால் எப்போதும் வருடப்படுபவை ஆகும். இத்தகைய சிறப்பான உனது பாதங்கள் ப்ருந்தாவனத்தில் உள்ள மரம், செடி, குளங்கள், மண், மலை ஆகியவற்றின் மீது பட்டன. இதனால் அவை எதுதான் செழிப்பு அடையவில்லை?

3 விலஸத் உலபே காந்தார அந்தே ஸமீரண சீதலே
விபுல யமுநாதீரே கோவர்த்தந அசல மூர்த்தஸு
லலித முரளீ நாத: ஸஞ்சா ரயந் கலு வாத்ஸகம்
க்வசந திவஸே தைத்யம் வத்ஸ ஆக்ருதிம் த்வம் உதைக்ஷதா:

**பொருள் -** குருவாயரப்பா! எங்கும் பசுமையாக இருந்த புல் தரைகளிலும், யமுனை நதியில் இருந்து வீசும் குளிர்ந்த காற்று உள்ள கரைகளிலும், கோவர்த்தன மலையின் உச்சியிலும் நீ மிகவும் இனிமையாக உனது புல்லாங்குழலை ஊதிக் கொண்டு, மாடுகளை மேய்த்து வந்தாய். அப்போது ஒரு நாள் கன்று உருவில் வந்த அசுரன் ஒருவனைக் கண்டாய் அல்லவா?

4 ரபஸ விலஸத் புச்சம் விச்சாயத: அஸ்யதீ விலோகயந்
கிமயி வலித ஸ்கந்தம் ரந்த்ர ப்ரதீக்ஷம் க்ஷிதம்
தம் அத சரணே பிப்ரத் விப்ராமயந்முஹு: உச்சகை:
குஹசந மஹா வ்ருக்ஷே சிக்ஷேபித க்ஷத ஜீவிதம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த அசுரன் தனது வாலை வேகமாக ஆட்டிக் கொண்டும், தனது கழுத்தைத் திருப்பி பார்த்துக் கொண்டும் (உன்னை கொல்ல சரியான நேரம் பார்த்து) இருந்தான். அவனது தீய பார்வையைப் புரிந்து கொண்டாய். அவன் கால்களைப்

பிடித்துச் சுழற்றத் தொடங்கினாய். இதனால் அவன் உயிர் பிரிந்தது. அந்த உடலை ஒரு மரத்தின் மீது எறிந்தாய் அல்லவா?

5 நிபததி மஹா தைத்யே ஜாத்யா துராத்மநி தத்க்ஷணம்
நிபதந ஜவ க்ஷுண்ண க்ஷோணீ ருஹ க்ஷத காநநே
திவி பரிமிளத் வ்ருந்தா: வ்ருந்தாரகா: குஸுமம் உத்கரை:
சிரஸி பவத: ஹர்ஷாத் வர்ஷந்தி நாம ததா ஹரே

**பொருள் -** ஹரியே! குருவாயூரப்பா! பிறப்பிலேயே கொடியவனாகிய அந்த அசுரன் விழுந்த நேரத்தில் அங்கு இருந்த மரங்கள் அனைத்தும் நொறுங்கி விழுந்தன. இதனைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து, ஆகாயத்தில் இருந்து உன் தலை மீது மலர்களைத் தூவினார்கள்.

6 ஸுரபிலதமா மூர்த்தநி ஊர்த்வம் குத: குஸுமம் ஆவலி
நிபததி தவ இதி உக்த: பாலை: ஸஹேலம் உதைரய:
ஜடிதி தநுஜ க்ஷேபேண ஊர்த்வம் கத: தருமண்டலாத்
குஸுமம் நிகர: ஸ: அயம் நூநம் ஸமேதி சநை: இதி

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த மலர்களைக் கண்ட ஆயர் சிறுவர்கள், மணம் வீசும் இந்த மலர்கள் உன் தலை மீது எங்கிருந்து வந்து விழுகின்றன? என்று வியப்புடன் கேட்டனர். அதற்கு நீ அவர்களிடம், நான் அசுரனை எறிந்தபோது மரத்தில் இருந்த மலர்கள் உயரமாகப் பறந்து விட்டன. அவையே இப்போது வந்து விழுகின்றன என்று நினைக்கிறேன் என்று விளையாட்டாக கூறினாய் அல்லவா?

7 க்வசந திவஸே பூய: பூயஸ்தரே பருஷ ஆதபே
தபந தநயா பாத: பாதும் கதா: பவத் ஆதய:
சலித க்ருதம் ப்ரேக்ஷமாஸு: பகம் கலு விஸ்ம்ருதம்
க்ஷிதிகர கருத் சேதே கைலாஸ சைலம் இவ அபரம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு நாள் கடுமையான வெப்பம் நிலவியது. அன்று நீயும் உனது நண்பர்களும் தாகம் தீர்ப்பதற்காக யமுனை நதிக்குச் சென்றீர்கள். அப்போது,

முன்பு ஒரு முறை இந்திரன் வெட்ட மறந்து விடப்பட்ட கயிலாய மலை போன்று விளங்கிய (பெரிய வெண்மையான) கொக்கு ஒன்றைக் கண்டாய் அல்லவா?

8 பிபதி ஸலிலம் கோப வ்ராதே பவந்தம் அபித்ருத:
ஸ: கில நிகிலந் அக்நி ப்ரக்யம் புந: த்ருதம் உத்வமந்
தளயிதும் அகாத் த்ரோட்யா: கோட்யா ததா து பவாந் விபோ
கல ஜந பிதா சுஞ்சு: சஞ்சூ ப்ரக்ருஹ்ய ததார தம்

**பொருள் -** குருவாயூரப்பனே! எங்கும் உள்ளவனே! நீங்கள் தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும்போது பகன் என்ற அந்த கொக்கு அசுரன் உன்னை விழுங்கினான். உடனே நீ நெருப்பு போன்று மாறினாய். இதனால் உன்னை வெளியில் உமிழ்ந்தான். மீண்டும் தனது பெரிய அலகின் மூலமாக உன்னைக் குத்திக் கிழிக்க வந்தான். ஆனால் தீயவர்களை அழிப்பதில் வல்லவனாகிய நீ; அவனது இரண்டு அலகுகளையும் பிடித்து இழுத்துக் கிழித்து அவனைக் கொன்றாய் அல்லவா?

9 ஸபதி ஸஹஜாம் ஸந்த்ரஷ்டும் வா ம்ருதாம் கலு பூதநாம்
அநுஜம் அகம் அபி அக்ரே க்தவா ப்ரதீக்ஷிதும ஏவ வா
சமந நிலயம் யாதே தஸ்மிந் பகே ஸுமந: கணே
கிரதி ஸுமநா: வ்ருந்தம் ப்ருந்தாவநாத் க்ருஹம் ஜயதா:

**பொருள் -** குருவாயூரப்பா! பகாசுரன் என்ற அந்த அசுரன் உன்னால் முன்பே கொல்லப்பட்ட பூதனையின் சகோதரன் ஆவான். தன்னுடைய சகோதரியான பூதனையைக் காண்பதற்காகவோ அல்லது உன்னால் கொல்லப்படப் போகும் அகாசுரன் என்ற தனது தம்பியை வரவேற்பதற்காகவோ இவன் இப்போது யமலோகம் சென்றான். உன்மீது தேவர்கள் மலர்கள் தூவினர். நீயும் ப்ருந்தாவனத்தில் உள்ள உனது வீட்டிற்குச் சென்றாய் அல்லவா?

10 லலித முரளீ நாதம் தூராந் நிசம்ய வதூ ஜநை:
த்வரிதம் உபகம்ய ஆராத் ஆரூட மோதம் உதீக்ஷித:
ஜநித ஜநநீ நந்த ஆநந்த: ஸமீரண மந்திர
ப்ரதித வஸதே சௌரே தூரீ குருஷ்வ மம ஆமயாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ வெகு தூரத்தில் வரும்போதே உனது இனிமையான குழல் ஓசையைக் கேட்ட கோபியர்கள் விரைவாக உன்னிடம் வந்தனர். அனைவரும் மகிழ்ந்தனர். உனது தாய்க்கும் நந்தகோபருக்கும் நீ மகிழ்ச்சி அளித்தாய். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளை நீக்க வேண்டும்.
***

1 த்வத் ஸேவ: உத்க: ஸௌபரி: நாம பூர்வம்
காலிந்தீ அந்த: த்வாதச அப்தம் தபஸ்யந்
மீத வ்ராதே ஸ்நேஹவாந் போக லோலே
தார்க்ஷ்யம் ஸாக்ஷாத் ஐக்ஷத அக்ரே கதாசித்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முன்பு ஒரு காலத்தில் ஸௌபரி என்னும் ஒரு முனிவர் இருந்தார். அவர் உன்னைக் குறித்து காளிந்தீ என்ற குளத்தில் பன்னிரண்டு ஆண்டு கடுந்தவம் புரிந்தார். அந்தக் குளத்தில் இன்பமாக இருந்த சிறிய மீன்களுடன் நட்பாக இருந்தார். இப்படி இருக்கையில் ஒரு நாள் அவர் கருடனைக் கண்டார்.

2 த்வத் வாஹாம் தம் ஸக்ஷுதம் த்ருக்ஷ ஸூநும்
மீனம் கஞ்சித் ஜக்ஷதம் லக்ஷயந் ஸ:
தப்த: சித்தே சப்தவாந் அத்ர சேத் த்வம்
ஜந்தூத் போக்தா ஜீவிதம் ச அபி மோக்தா

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது உன்னுடைய வாகனமான அந்தக் கருடன் அந்தக் குளத்தில் உள்ள ஒரு மீனைக் கொத்தி தின்றது. இதைக் கண்ட ஸௌபரி முனிவர் கோபம் கொண்டார். கருடனை நோக்கி, நீ இங்கு ஏதாவது ஒரு உயிரைக் கொன்றால், நீ உன் உயிரை இழப்பாய் என்று சாபம் கொடுத்தார்.

3 தஸ்மிந் காலே காலிய: க்ஷ்வேல தர்பாத்
ஸர்ப அராதே: கல்பிதம் பாகம் அச்நந்
தேந க்ரோதாத் த்வத் பத அம்போஜ பாஜா
பக்ஷ க்ஷிப்த தத் துராபம் பய: அகாத்

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு முறை காளியன் என்ற ஒரு பெரிய நாகம், தன்னிடம் அதிகமாக விஷம் உள்ளது. என்று கர்வப்பட்டு, கருடனுக்காக வைக்கப்பட்டிருந்த உணவை உட்கொண்டது. அப்போது, உன்னுடைய திருவடிகளில் எப்போதும் பக்தி கொண்டவனான கருடன் அவன் மீது கோபம் கொண்டு, தன்னுடைய சிறகுகளால் அவனை அடித்தான். கருடனுக்குப் பயந்த காளியன், கருடன் வரமுடியாத இடமான (ஸௌபரியின் சாபத்தால்) காளிந்தி மடுவிற்கு வந்தான்.

4 கோரே தஸ்மின் ஸூரஜா நீர வாஸே
தீரே வ்ருக்ஷா: விக்ஷதா: க்ஷ்வேல வேகாத்
பக்ஷி வ்ரதா: பேது: அப்ரே பதந்த:
காருண்ய ஆர்த்ரம் த்வத் மந: தேந ஜாதம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தக் குளத்தில் இருந்த காளியனின் கொடிய விஷம் காரணமாக அங்கு கரையில் இருந்த அனைத்து மரங்களும் பொசுங்கின. அந்தக் குளத்தின் மீது ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் கூட இறந்தன. இதனை அறிந்த கருணை மிக்க உனது மனம் நெகிழ்ந்தது.

5 காலே தஸ்மின் ஏகதா ஸீர பாணிம்
முக்த்வா யாதே யாமுநம் காநந அந்தம்
த்வயி உத்தாம க்ரீஷ்ம பீஷ்ம ஊஷ்ம தப்தா:
கோ கோபாலா: வ்யாபிந் க்ஷ்வேல தேயாம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு நாள் நீ யமுனையின் கரைகளில் உள்ள காட்டிற்குச் சென்றாய். அன்று உன்னுடன் பலராமன் வரவில்லை. மிகுதியான வெயில் காரணமாக கடும் தாகம் ஏற்பட்டது. அதனால் உன்னுடன் வந்த பசுக்களும் ஆயர் சிறுவர்களும் விஷம் நிறைந்த அந்த மடுவின் நீரைக் குடித்தனர்.

6 நச்யத் ஜீவாந் விச்யுதாந் க்ஷ்மா தலே தாந்
விச்வாந் பச்யந் அச்யுத த்வம் தயா ஆர்த்ர:
ப்ராப்ய: உபாந்தம் ஜீவயாமாஸித த்ராக்

பீயூஷ அம்ப: வர்ஷிபி: ஸ்ரீகடாக்ஷை:

**பொருள் -** அடியார்களை நழுவ விடாத அச்சுதனே! குருவாயூரப்பா! அந்த நீரைக் குடித்ததால் அனைவரும் தரையில் உயிர் இழந்து வீழ்ந்தனர். அவர்களைக் கண்ட நீ, அவர்கள் அருகில் சென்று, அமிர்தம் போன்ற உனது கடைக்கண் பார்வையை அவர்கள் மீது செலுத்தி, அவர்கள் உயிரை மீட்டாய்.

7 கிம் கிம் ஜாத: ஹர்ஷ வர்ஷ அதிரேக:
ஸர்வ அங்கேஷு இதி உத்திதா கோப ஸங்கா:
த்ருஷ்ட்வா அக்ரே த்வாம் த்வத் க்ருதம் தத் விதந்த:
த்வாம் ஆலிங்கந் த்ருஷ்ட நாநா ப்ரபாவ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எழுந்த இடைச்சிறுவர்கள், என்ன நடந்தது? என்ன நடந்தது? எங்கள் உடலில் ஆனந்தம் பெருகி உள்ளதே என்று வியந்தனர். உன்னைக் கண்டனர். பலமுறை உனது செயல்களைக் கண்டிருந்த அவர்கள் இம்முறையும் உன்னால் ஏதோ அதிசயம் நடந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர். உன்னை நன்றாகத் தழுவிக் கொண்டனர் அல்லவா?

8 காவ: ச ஏவம் லப்த ஜீவா: க்ஷணேந
ஸ்பீத ஆநந்தா: த்வாம் ச த்ருஷ்ட்வா புரஸ்தாத்
த்ராக் ஆவவ்ரு: ஸர்வத: ஹர்ஷ பாஷ்பம்
வ்யாமுஞ்சந்த்ய: மந்தம் உத்யந் நிநாதா:

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக பசுக்களும் ஒரு நொடியில் உயிர் பிழைத்து எழுந்தன. அவையும் தங்கள் கண்களில் நீர் பெருக எதிரில் இருந்த உன்னைக் கண்டன. மெதுவாகக் குரல் எழுப்பியபடி உன்னைச் சுற்றிச் சூழ்ந்து நின்றன.

9 ரோமாஞ்ச: அயம் ஸர்வத: சரீரே
பூயஸீ அந்த: காசித் ஆநந்த மூர்ச்சா
ஆச்சர்ய: அயம் க்ஷ்வேல வேக: முகுந்த இதி

உக்த: கோபை: நந்தித: வந்தித: அபூ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தச் சிறுவர்கள் உன்னிடம், முகுந்தா! எங்கள் உடல் எங்கும் மெய் சிலிர்க்கிறது. எங்கள் மனதில் விளக்க முடியாத ஆனந்தம் பரவி நிற்கிறது. நாங்கள் உண்ட இந்த விஷத்தின் செயல் வித்தியாசமாக உள்ளது. என்று கூறியபடி உன்னை வணங்கினர். (அவர்கள் தங்கள் ஆனந்தம் விஷத்தால் உண்டாயிற்று என்று நினைத்தனர்.)

10 ஏவம் பக்தாந் முக்த ஜீவாந் அபி த்வம்
முக்த அபாங்கை: அஸ்த ரோகாத் தநோதி
தாத்ருக் பூத ஸ்பீத காருண்ய பூமா
ரோகாத் பாயா: வாயுகேஹ அதிநாத

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக உன்னை அடைந்த அடியார்கள், அவர் உயிர் இல்லாதவர்களாக இருந்தாலும் உனது அழகிய கருணை மிகுந்த கடைக்கண் பார்வையால் அவர்களைப் பிழைக்க வைத்து, நோய் என்பதே இல்லாமல் ஆக்கி விடுகின்றாய். அந்த அளவு காருண்யம் கொண்ட நீ எனது பிணிகளில் இருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 அதவாரிணி கோரதரம் பணிநம்
ப்ரதி வாரையிதும் க்ருத தீ: பகவந்
த்ருதம் ஆரித தீரக நீப தரும்
விஷ மாருத சோஷித பர்ணசயம்

**பொருள் -** பகவானே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த மடுவில் இருந்த கொடிய விஷம் கொண்ட அந்தப் பாம்பை அங்கிருந்து விரட்ட நீ எண்ணம் கொண்டாய். இதனால் அந்த மடுவின் கரையில் விஷக்காற்றால் வாடிய இலைகளுடன் இருந்த கடம்ப மரத்தின் மீது ஏறினாய் அல்லவா?

2 அதிருஹ்ய பத அம்புருஹேண ச தம்
நவ பல்லவ துல்ய மநோஜ்ஞ ருசா

ஹ்ரத வாரிணி தூரதரம் ந்யபத:
பரிகூர்ணித கோர தரங்க கணே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! புதியதாக தளிர் விட்ட இலை போன்ற அழகிய உனது சிறிய பாதங்களைப் பதித்து அந்த மரத்தின் மீது அமர்ந்தாய். அச்சம் விளைவிக்கும் சுழல்களும், பெரிய அலைகளும் கொண்ட அந்த மடுவின் நடுவில் நீ குதித்தாய் அல்லவா?

3 புவநத்ரய பார ப்ருத: பவத:
குரு பார விசும்பி விஜ்ரும்பி ஜலா
பரிமஜ்ஜயதி ஸ்ம தநு: சதகம்
தடிநீ ஜடிதி ஸ்புட கோஷவதீ

**பொருள் -** குருவாயூரப்பா! மூன்று உலகங்களின் பாரத்தையும் தாங்கி உள்ளதால் உனது பாரம் அதிகமாக இருந்தது. இதனால் நீ குதித்தவுடன் உனது சுமை தாங்காமல் அந்த மடு நடுங்கியது. அதனால் அலைகள் பெரிய ஓசையுடன் வெகுவாக உயரத்தில் எழும்பின. அவை நிலத்தின் நூறு வில் அளவு தூரம் வந்தது அல்லவா?

4 அத திக்ஷு விதிக்ஷு பரிக்ஷுபித
ப்ரமித உதர வாரி நிநாத பரை:
உதகாத் உதகாத் உரக அதிபதி:
த்வத் உபாந்தம் அசாந்த ருஷா அந்தமநா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தக் குளத்தில் இருந்த நீர் அனைத்து திசைகளிலும் கலங்கிய படி, சுழல்கள் அதிகரித்து அதனால் பெருத்த ஓசையும் உண்டானது. இந்த ஓசையைக் கேட்ட காளியன் மிகுந்த கோபம் கொண்டான். அறிவு மங்கியவனாக நீரில் இருந்து கிளம்பி உன்னிடம் வந்தான்.

5 பண ச்ருங்க ஸஹஸ்ர விநி: ஸ்ருமர
ஜ்வலத் அக்நி கண உக்ர விஷ அம்பு கரம்
புரத: பணிநம் ஸமலோக்யதா:
பஷு ச்ருங்கிணம் அஞ்ஜந சைலம் இவ

**பொருள் -** குருவாயூரப்பா! தனது ஆயிரம் தலைகளில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பையும் கொடிய விஷத்தையும் அவன் கொண்டிருந்தான். அவனது உடலானது பல சிகரங்களை உடைய ஒரு பெரிய மலைத் தொடர் போல இருந்தது. இப்படியாக உன் அருகில் வந்த காளியனை நீ கண்டாய் அல்லவா?

6 ஜ்வலத் அக்ஷி பரிக்ஷரத் உக்ர விஷ:
ச்வஸந் ஊஷ்ம பர: ஸ மஹாபுஜக:
பரிதச்ய பவந்தம் அநந்த பலம்
ஸமவேஷ்டயத் அஸ்புட் சேஷ்டம் அஹோ

**பொருள் -** குருவாயூரப்பா! காண்பவர்கள் கண்கள் கூசும்படி ஒளிவீசும் கண்களை உடையவனும், எரிக்கும்படியான மூச்சுக்காற்றை விடுபவனும் ஆகிய அந்த காளியன் உன்னைத் தீண்டினான். மிகுந்த வலிமை உடைய நீயோ சிறிதும் அசையாமல் இருந்தாய். அதனைக் கண்ட அவன் கோபத்துடன் தனது உடலால் உன்னைச் சுற்றினான்.

7 அவிலோக்ய பவந்தம் அத ஆகுலிதே
தட காமிநி பாலக தேநு கணே
வ்ரஜ கேஹ தலே அபி அநிமித்த சதம்
ஸமுதீக்ஷ்ய கதா யமுநாம் பசுபா:

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது கரையில் நின்றிருந்த உனது நண்பர்களான ஆயர் சிறுவர்கள் உன்னைக் காணாமல் வருத்தம் கொண்டனர். அதே நேரத்தில் ப்ருந்தா வனத்தில் பல கெட்ட சகுனங்கள் தோன்றியதால், உனக்கு ஆபத்து என்று எண்ணியபடி பல கோபர்கள் யமுனை நதியின் கரைக்கு விரைந்தனர்.

8 அகிலேஷு விபோ பவதீய தசாம்
அவலோக்ய ஜிஹாஸுஷு ஜீவ பரம்
பணி பந்தநம் ஆசு விமுச்ய ஜவாத்
உதகம்யத ஹாஸ ஜுஷா பவதா

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! நீ காளியனால் சுற்றப்பட்டு உள்ள நிலைமையைக் கண்டனர். இதனால் மிகுந்த துக்கம் கொண்ட அவர்கள் தங்கள் உயிரை விடத் தயாரானார்கள். அப்போது நீ அந்தப் பாம்பின் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு புன்னகை பூத்தபடியே வெளியில் வந்தாய் அல்லவா?

9 அதிருஹ்ய தத: பணி ராஜ பணாந்
நந்ருதே பவதா ம்ருது பாதருசா
கல சிஞ்ஜித நூபுர மஞ்ஜு மிலத்
கர கங்கண ஸங்குல ஸங்க்வணிதம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் உனது சிறிய குழந்தைக் கால்களைக் கொண்டு காளியனின் படங்கள் நிறைந்த தலை மீது ஏறி நின்று நடனம் ஆடினாய். அப்போது உன் கால்களில் இருந்த கொலுசுகளும், கைகளில் இருந்த கிண்கிணிகளும் இனிமையாக உனது நடனத்திற்கு ஏற்ப தாளம் போட்டன அல்லவா?

10 ஜஹ்ருஷு: பசுபா: துதுஷு: முநய:
வவ்ருஷு: குஸுமாநி ஸுர இந்த்ர கணா:
த்வயி ந்ருத்யதி மாருத கேஹபதே
பரிபாஹி ஸ: மாம் த்வம் அதாந்த கதாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ இப்படி நாட்டியம் ஆடுவதைக் கண்ட இடையர்கள் மகிழ்ந்தனர். தவ முனிவர்கள் ஆனந்தமாக ரசித்தனர். தேவர்கள் மலர்களைப் பொழிந்தனர். இப்படிப்பட்ட நீ என்னை, தீராத பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 ருசிர கம்பித குண்டல மண்டல
ஸீசிரம் ஈச நநர்த்தித பந்தகே
அமர தாடித துந்துபி ஸுந்தரம்
வியதி காயதி தைவத யௌவதே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! (உனது நாட்டியத்திற்கு ஏற்ப) வாகனத்தில் தேவலோகப் பெண்கள் இனிமையாகப் பாடினார்கள்; தேவர்கள் துந்துபி என்ற

வாத்தியத்தை முழங்கினர். நீ உனது இருகாதுகளில் அணிந்திருந்த குண்டலங்கள் மிகவும் அழகாக அசையும்படி வெகுநேரம் நடனம் ஆடினாய்.

2 நமதி யத் யத் அமுஷ்ய சிர: ஹரே
பரிவிஹாய தத் உந்நதம் உந்நதம்
பரிமதந் பத பங்க ருஹா சிரம்
வ்யஹரதா: கர தால மநோஹரம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஹரியே! ஆயிரம் தலைகள் உடைய அவனது தலைகளில் எவை உன்னை வணங்கிப் பணிந்தனவோ அவற்றை நீ விட்டு விட்டாய். உன்னைப் பணியாமல் மேலே எழுந்த தலைகளை உனது தாமரை போன்ற சிறிய பாதங்களால் மிதித்தபடியும். கைகளில் தாளம் போட்டுக் கொண்டும் தொடர்ந்து ஆடினாய்.

3 த்வத் அவபக்த விபுக்ந பணா கணே
கலித சோணித சோணித பாதஸி
பணி பதௌ அவஸீததி ஸந்நதா:
தத் அபலா தவ மாதவ பாதயோ:

**பொருள் -** குருவாயூரப்பனே! மாதவனே! நீ நடனம் ஆடும்போது மிதிபட்டதால் நசுங்கிய பல தலைகளை உடையவனும், தனது இரத்தத்தை அந்த மடு நிறைய நிரப்பியவனும், ஆகிய காளியன் சோர்ந்தான். அப்போது அவன் மனைவிகள் உனது கால்களில் விழுந்து வணங்கினர் அல்லவா?

4 அயி புரா ஏவ சிரயா பரிச்ருத
த்வத் அநுபாவ விலீந ஹ்ருத: ஹிதா:
முநிபி அபி அநவாப்ய பதை: ஸ்தவை:
நுநுவு: ஈச பவந்தம் அயந்த்ரிதம்

**பொருள் -** ஈசனே! குருவாயூரப்பா! காளியனின் மனைவிகள் உனது மகிமைகளை அறிந்தவர்களாக இருந்தனர். ஆகவே அவர்கள், முனிவர்கள் கூட உன்னை, அவ்வாறு துதிக்க இயலாதபடி, மிகவும் இயல்பாக, தடைகள் எதுவும் இன்றி உன்னைத் துதித்தனர்.

5 பணி வதூ கண பக்தி விலோகந
ப்ரவிகஸத் கருணா ஆகுல சேதஸா
பணி பதி: பவதா அச்யுத ஜீவித:
த்வயி ஸமர்ப்பித மூர்த்தி: அவா நமத்

**பொருள் -** அடியார்களை நழுவ விடாதவனே! குருவாயூரப்பா! அவர்கள் உன்னைத் துதித்ததைக் கண்டதும் அவர்கள் உனது மீது வைத்துள்ள பக்தியைக் கண்டு மனம் நெகிழ்ந்தாய். இதனால் காளியனுக்கு உயிரை அளித்தாய். அவன் தனது உடலை உனக்கே என்று ஒப்படைத்து உன் அடிக்கீழ் வணங்கினான் அல்லவா?

6 ரமணகம் வ்ரஜ வாரிதி மத்யகம்
பணி ரிபு: ந கரோதி விரோதிதாம்
இதி பவத் வசநாநி அதிமாநயந்
பணி பதி: நிரகாத் உரகை: ஸமம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ காளியனிடம், காவியா! நீ இந்த மடுவை விட்டு அகன்று கடலில் உள்ள ரமணகம் என்ற தீவிற்குச் செல்ல வேண்டும். கருடன் உன்னை அங்கு எதுவும் செய்ய மாட்டான் என்றாய். இதனை ஏற்ற காளியன் அங்கு இருந்த ஏராளமான பாம்புகளை அழைத்துக் கொண்டு சென்றான்.

7 பணி வதூ ஜந தத்த மணி வ்ரஜ
ஜ்வலித ஹார துகூல விபூஷித:
தடகதை: ப்ரமதா அச்ரு விமிச்ரிதை:
ஸமகதா: ஸ்வ ஜநை: திவஸ அவதெள

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! காளியனின் மனைவிகள் உனக்கு அளித்த இரத்தினக் கற்களாலும் ஒளி பொருந்திய மாலைகளாலும், பட்டு ஆடைகளாலும் நீ நன்றாக அலங்கரித்துக் காணப்பட்டாய். பின்னர் யமுனை நதியின் கரையில் ஆனந்தக் கண்ணீருடன் காத்திருந்த உனது சுற்றத்தாரிடம் சென்று சேர்ந்தாய் அல்லவா?

8 நிசி புந: தமஸா வ்ரஜ மந்திரம்
வ்ரஜிதும் அக்ஷம ஏவ ஜந உத்கரே
ஸ்வபிதி தத்ர பவத் சரண ஆச்ரயே
தவ க்ருசாநு: அருந்த ஸமந்தத:

**பொருள் -** குருவாயூரப்பா! இதற்குள் நன்றாக இருட்டி விட்டது. ஆகையால் உங்களால் அன்று இரவு ப்ருந்தாவனம் செல்ல இயலவில்லை. எனவே இடையர்கள் அனைவரும் உனது திருவடிகளையே துணையாகக் கொண்டு அங்கேயே படுத்து உறங்கினர். அப்போது திடீரென்று அனைத்துத் திசைகளிலும் பெரும் தீ சூழ்ந்து கொண்டது.

9 ப்ரபுதிதாந் அத பாலய பாலய இதி
உதயத் ஆர்த்த ரவாந் பசு பாலகாந்
அவிதும் ஆசு பபாத மஹாநலம்
கிம் இஹ சித்ரம் அயம் கலு தே முகம்

**பொருள் -** குருவாயூரப்பா! உடனே விழித்து எழுந்த ஆயர்கள் அனைவரும் காப்பாற்று காப்பாற்று என்று அலறினார்கள். அவர்களைக் காப்பதற்காக அங்கு உண்டான அந்த பெரும் காட்டுத்தீயை முழுவதுமாக நீ பருகிவிட்டாய் அல்லவா? இதில் வியப்பு என்ன வென்றால் அக்னி பிறந்ததே உனத வாயில்தான் அன்றோ?

10 சிகிநி வர்ணத ஏவ ஹி பீததா
பரிலஸதி அதுநா கிரியயா அபி அஸௌ
இதி நுத: பசுபை: முதிதை: விபோ
ஹர ஹரே துரிதை: ஸஹ மே கதாந்

**பொருள் -** ஹரியே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இதனைக் கண்ட ஆயர்கள், நெருப்பில் பீதம் என்பது (பீதம் என்றால் மஞ்சள் நிறம்) நிறத்தில் மட்டுமே இருந்தது. ஆனால் க்ருஷ்ணா! உன்னால் பீதம் என்பது (பீதம் என்பது குடித்தலையும் குறிக்கும்) செயல் பாட்டிலும் காணப்பட்டது என்று கூறினர். நீ எனது பிணிகளை மட்டும் அன்றி அவை தோன்றக் காரணமான பாவங்களையும் நீக்க வேண்டும்.

***

1 ராமஸக: க்வாபி திநே காமத
பகவந் கதோ பவாந் விபிநம்
ஸுநுபி: அபி கோபாநாம் தேநுபி:
அபி ஸம்வ்ருத: லஸத் வேஷ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பகவானே (காமத பகவந்) ஒருநாள் நீ பலராமனுடனும், இடையர் தோழர்களுடனும், பசுக்களுடனும் காட்டிற்குச் சென்றாய். அப்போது பல ஆபரணங்களை அணிந்து கொண்டு மிகவும் அழகாக இருந்தாய்.

2 ஸந்தர்சயந் பலாய ஸ்வைரம்
ப்ருந்தாவந ச்ரியம் விமலாம்
காண்டீரை: ஸஹ பாலை:
பாண்டீரகம் ஆகம: வடம் க்ரீடந்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்படிச் செல்லும்போது ப்ருந்தாவனத்தின் குறைவற்ற அழகினை பலராமனுக்குக் கூறிக்கொண்டே சென்றாய் அல்லவா? பின்னர் கையில் குச்சிகளை வைத்துக் கொண்டிருந்த உனது தோழர்களுடன் விளையாடினாய் அப்போது நீ பாண்டீரகம் என்னும் ஆலமரத்தின் அடியில் நின்றாய்.

3 தாவத் தாவக நிதந ஸ்ப்ருஹயாலு:
கோ மூர்த்தி: அதயாலு:
தைத்ய: ப்ரலம்ப நாமா ப்ரலம்ப
பாஹும் பவந்தம் ஆபேதே

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது ப்ரலம்பன் என்ற பெயர் உடைய அசுரன் அங்கு வந்தான். அவன் எப்படி இருந்தான்? அவன் இரக்கம் என்பதே இல்லாதவனாகவும், உன்னைக் கொல்வதற்கு மிகவும் ஆவல் உடையவனாகவும், முழங்கால் வரை தொங்கும் கைகளை உடையவனாகவும், ஆயர் சிறுவன் போல் வேடம் தரித்தும் இருந்தான்.

4 ஜாநந் அபி அவிஜாநந் இவ தேந

ஸமம் நிபத்த ஸௌ ஹார்த்த:
வட நிகடேபடு பசுப வ்யாபத்தம்
த்வந் த்வ யுத்தம் ஆரப்தா:

**பொருள் -** குருவாயூரப்பா! இடையனைப் போல் வேடம் தரித்து வந்த அசுரனை, அவன் அசுரன் என்று நீ அறிந்திருந்தும் அறியாதவன் போல் நடித்தாய். அவனுடன் நட்புடன் பழகினாய். அந்த மரத்தடியில் மிகவும் புத்திசாலிகளான ஆயர் சிறுவர்களுடன் மற்போர் விளையாட்டைத் துவக்கினாய்.

5 கோபாந் விபஜ்ய தந்வந் ஸங்க்கம்
பல பத்ரகம் பவத்கம் அபி
த்வத் பலபீதம் தைத்யம் த்வத்
பல கதம் அந்வ மந்யதா பகவந்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! நீ இடையர் சிறுவர்களை இரண்டு கோஷ்டிகளாகப் பிரித்தாய். ஒரு கோஷ்டிக்குப் பலராமனைத் தலைவன் என்றும், மற்றொரு கோஷ்டிக்கு நீ தலைவனாகவும் இருந்தாய். உனது பலத்தை முன்பே அறிந்திருந்ததால் பயந்த அசுரனை உனது கோஷ்டியில் இருக்க வைத்தாய்.

6 கல்பித விஜேத்ரு வஹநே ஸமரே
பர யூதகம் ஸ்வ தயித தரம்
ஸ்ரீதாமாநம் அதத்தா: பராஜித:
பக்த தாஸதாம் ப்ரதயந்

**பொருள் -** குருவாயூரப்பா! விளையாட்டில் தோற்றவர்கள், வென்றவர்களைத் தோளில் தூக்கிச் செல்ல வேண்டும் என்று நிபந்தனை விதித்தாய். அப்போது, ஸ்ரீதாமன் என்ற உனது ப்ரியமான தோழனிடம் நீ தோற்றாய். நீ பக்தர்களுக்கு அடிமையாக இருப்பதை வெளிப்படுத்தும்படி அவனை உனது தோள்களில் தூக்கிச் சென்றாய் அல்லவா?

7 ஏவம் பஹுஷு விபூமந் பாலேஷு
வஸத்ஸு வாஹ்ய மாநேஷு
ராம விஜித: ப்ரலம்ப: ஜஹார

தம் தூரத: பவத் பீத்யா

**பொருள் -** எங்கும் நிறைந்து உள்ளவனே (பூமந்) குருவாயூரப்பா! இப்படியாக இந்த விளையாட்டில் சிலர் சுமக்கப்பட்டவர்களாகவும், சிரல் சுமப்பவர்களாகவும் இருந்தனர். அப்போது ப்ரலம்பன் தோற்றுவிட்டான். அவன் பலராமனைக் தூக்கிக் கொண்டு நீண்ட தூரம் உனக்குப் பயந்து சென்று விட்டான் அல்லவா?

8 த்வத் தூரம் கமயந்தம் தம் த்ருஷ்ட்வா
ஹலிநி விஹித கரிம பரே
தைத்ய: ஸ்வரூபம் ஆகாத் யத்ரூபாத்
ஸ ஹி பல: அபி சகித: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் இருந்து நீண்ட தூரம் தூக்கிச் சென்ற ப்ரலம்பனை, அவன் தோளில் அமர்ந்திருந்த பலராமன் தனது எடையை அதிகரித்துக் கொண்டு அழுத்தினான். அவனைச் சுமக்க இயலாமல் தனது உண்மையான உருவத்தை ப்ரலம்பன் எடுத்தான். அந்தப் பெரிய உருவத்தைக் கண்டவுடன் பலராமன் சற்று பயம் கொண்டான் அல்லவா?

9 உச்சதயா தைத்ய தநோ: த்வத்
முகம் ஆலோக்ய தூரத: ராம:
விகதபய: த்ருட முஷ்ட்யா ப்ருச
துஷ்டம் ஸபதி பிஷ்டவாந் ஏநம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த அசுரனின் உடல் உயரமாக இருந்தது. இதனால் அவன் நீண்ட தூரத்தில் இருந்தாலும், அவன் தோளில் அமர்ந்திருந்த பலராமனால் உனது திருமுகத்தைப் பார்க்க முடிந்தது. உடனே பலராமனின் பயம் நீங்கியது. தன்னுடைய திடகாத்ரமான முட்டியால் அசுரனை வதம் செய்தான்.

10 ஹத்வா தாநவ வீரம் ப்ராப்தம்
பலம் ஆலிலிங்கித ப்ரேம்ணா
தாவத் மிலிதோ: யுவயோ: சிரஸி

க்ருதா புஷ்ப வ்ருஷ்டி: அமரகணை:

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ரலம்பனைக் கொன்று விட்டுத் திரும்பிய பலராமனை நீ மிகுந்த ஆசையுடன் தழுவிக் கொண்டாய். இப்படியாக நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி நிற்கும்போது உங்கள் தலைகளில் தேவர்கள் மலர் தூவினர்.

11 ஆலம்ப: புவநாநாம் ப்ராலம்பம்
நிதநம் ஏவம் ஆரசயந்
காலம் விஹாய ஸத்ய: லோலம்ப
ருசே ஹரே ஹரே: க்லேசாந்

**பொருள் -** ஹரியே! கருவண்டு போன்ற நிறம் உடையவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உலகத்திற்குப் புகலிடமாக உள்ள நீ இப்படியாக ப்ரலம்பாசுரனை அழித்தாய். இப்படிப்பட்ட நீ சிறிதும் காலம் தாழ்த்தாமல் விரைந்து என்னுடைய துயரங்களை நீக்க வேண்டும்.

***

1 த்வயி விஹரண லோலே பால ஜாலை: ப்ரலம்ப
ப்ரதமந ஸ விலம்பே தேநவ: ஸ்வைர சாரா:
த்ருண குதுக நிவிஷ்டா தூரதூரம் சரந்த்ய:
கிமபி விபிநம் ஐஷீக ஆக்யம் ஈஷாம் பபூவு:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ ப்ரலம்பாசுரனைக் கொன்றபோது, அதனை ஆயர் சிறுவர்கள் கண்டு மகிழ்வதற்காகச் சற்று தாமதம் செய்தாய். இதற்கிடையே உன்னுடைய பசுக்கள் தங்கள் விருப்பப்படி புல்லைத் தேடி சென்றன. இவ்விதமாகச் சென்றபோது அவை ஐஷீகம் என்ற காட்டை அடைந்தன.

2 அநதிகத நிதாக க்ரௌர்ய ப்ருந்தாவந அந்தாத்
பஹி: இதம் உபயாதா: காநநம் தேநவ: தா:
தவ விரஹ விஷண்ணா: ஊஷ்மல க்ரீஷ்ம தாப
ப்ரஸர விஸரத் அம்பஸி ஆகுலா: ஸ்தம்பம் ஆபு:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வெயிலின் வெப்பம் என்றால் என்ன என்பதை ப்ருந்தாவனத்தில் இருந்தபோது அந்தப் பசுக்கள் உணர்ந்திருக்கவில்லை. ஆனால் இப்போது இந்த காட்டை அடைந்த காரணத்தாலும், வெயிலின் கொடுமையாலும். உன்னைப் பிரிந்த மன வருத்தத்தாலும் அவை தாகம் கொண்டவையாக செயலற்று நின்றன.

3 ததநு ஸஹ ஸஹாயை: தூரம் அந்விஷ்ய சௌரே
கலித ஸரணி முஞ்ஜ அரண்ய ஸஞ்ஜாத கேதம்
பசு குலம் அபிவீக்ஷ்ய க்ஷிப்ரம் ஆநேதும் ஆராத்
த்வயி கதவதி ஹீ ஹீ ஸர்வத: அக்நி: ஜஜ்ரும்பே

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது நீ ஆயர் சிறுவர்களுடன் சேர்ந்து பசுக்களைத் தேடினாய் அல்லவா? சற்று நேரம் கழித்து முஞ்ஜிக் காட்டின் நடுவே அவை உள்ளதைக் கண்டாய். அவற்றை மீட்டு வர அவற்றின் அருகே சென்றபோது, நான்கு திசைகளிலும் நெருப்பு பற்றி எரியத் தொடங்கியது அல்லவா?

4 ஸகல ஹரிதி தீப்தே கோர பாங்கார பீமே
சிகிநி விஹத மார்க்கா: அர்த்த தக்தா இவ ஆர்த்தா:
அஹஹ புவந பந்தோ பாஹி பாஹி இதி ஸர்வே
சரணம் உபகதா: த்வாம் தாப ஹர்த்தாரம் ஏகம்

பொருள்; குருவாயூரப்பா! பெருத்த ஓசையுடன் அந்தத் தீயானது நான்கு திசைகளிலும் பரவி எரிந்தது. அதனால் ஆயர் சிறுவர்களின் பாதை தடைப்பட்டது. அனைவரும் உன்னை நோக்கி, க்ருஷ்ணா! உலகத்தின் பந்துவாக உள்ளவனே! காப்பாற்று! காப்பாற்று! என்று அனைத்துத் துன்பங்களையும் நீக்கும் உன்னிடம் சரணம் அடைந்தனர் அல்லவா?

5 அலம் அலம் அதி பீயா ஸர்வத: மீலயத்வம்
த்ருசம் இதி தவ வாசா மீலித அசேஷேஷு தேஷு
க்வநு தவ தஹந: அஸௌ ருத்ர முஞ்ஜாடவீ ஸா
ஸபதி வவ்ருதிரே தே ஹந்த பாண்டீர தேசே

**பொருள் -** குருவாயூரப்பா! உடனே நீ அவர்களை நோக்கி, பயப்பட வேண்டாம். பயந்தது போதும். உங்கள் கண்களைச் சற்று மூடிக் கொள்ளுங்கள். என்றாய், உனது சொற்களைக் கேட்ட அவர்களும் தங்கள் கண்களை மூடிக் கொண்டனர். பின்னர் கண்களைத் திறந்தபோது - என்ன வியப்பு! காட்டுத்தீ எங்கே, அந்த காடு எங்கே - எதுவும் இல்லை, அவர்கள் பாண்டீர மரத்தின் அடியில் நின்றிருந்தனர்.

6 ஜயஜய தவ மாயா கா இயம் ஈச இதி தேஷாம்
நுதிபி: உதித ஹாஸ: பத்த நாநா விலாஸ:
புந: அபி விபிந அந்தே ப்ராசர: பாடல ஆதி
ப்ரஸவ நிகர மாத்ர க்ராஹ்ய கர்ம அநுபாவே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஆயர் சிறுவர்கள் உன்னை நோக்கி, உனக்கு எப்போதும் வெற்றியே! என்னே உனது மாயை! ஈசனே என்று வணங்கினர். நீ அவர்கள் கூறியதைக் கேட்டு புன்னகையுடன் நின்றாய். அந்தக் காட்டில் பூத்திருந்த பாதிரி போன்ற மலர்களால் மட்டுமே அது கோடை காலம் என்று உணர முடிந்தது. (உனது மாயை மூலம் அந்த வெப்பத்தினை மறைத்தாய்) பின்னர் அவர்களுடன் அந்தக் காட்டில் மேலும் சுற்றித் திரிந்தாய்.

7 த்வயி விமுகம் இவ உச்சை: தாப பாரம் வஹந்தம்
தவ பஜந வத் அந்த: பங்கம் உச்சோஷயந்தம்
தவ புஜவத் உதஞ்சந் பூரி தேஜ: ப்ராவஹம்
தபஸ மயம் அநைஷீ: யாமுநேஷு ஸ்தலேஷு

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அந்த யமுனைக் கரையில் இருந்தபோது கோடைகாலம் எப்படி இருந்தது? உன்னிடம் பக்தி இல்லாதவர்களின் உள்ளத்தில் உண்டாகும் துன்பத்தின் வெப்பம் போன்றும். மனதில் உள்ள பாவம் என்றும் சேற்றைக் காயவைக்கும் தன்மை உடைய உனது ஸத்ஸங்கங்களின் வெப்பம் போன்றும், உன்னுடைய கைகளில் இருந்து வெளிப்படும் ஒளியைப் போன்றும் இருந்தது.

8 ததநு ஜலத ஜாலை: த்வத் வபு: துல்ய பாபி:
விகஸத் அமல வித்யுத பீத வாஸ: விலாஸை:
ஸகல புவந பாஜாம் ஹர்ஷதாம் வர்ஷ வேலாம்
க்ஷிதி த்ர குஹரேஷு ஸ்வைர வாஸீ வ்யநைஷீ:

**பொருள் -** குருவாயூரப்பா! ( அந்த கோடைக் காலத்தைத் தொடர்ந்து) பின்னர் உனது கரிய திருமேனி போன்று நிறத்தைக் கொண்டிருந்த மேகங்கள் காணப்பட்டன. அவை நீ உனது இடுப்பில் அணிந்துள்ள பொன்னாடை போன்று மின்னல்களைக் கொண்டிருந்தன. இவை ஒன்றுகூடி உலகினை மகிழ்விக்கும் மழைக் காலத்தை உண்டாக்கின. அப்போது நீ குகைகளில் அமர்ந்து மகிழ்ந்தாய்.

9 குஹர தல நிவிஷ்டம் த்வாம் கரிஷ்ட்டம் கிரி இந்த்ர:
சிகி குல நவ கேகா காகுபி: ஸ்தோத்ர காரீ
ஸ்புட குடஜ கதம்ப ஸ்தோம புஷ்ப அஞ்ஜலிம் ச
ப்ரவிதகத் அநுபேஜே தேவ கோவர்த்தந: அஸௌ

**பொருள் -** குருவாயூரப்பா! மலைகளில் சிறந்து விளங்கிய கோவர்த்தனம் என்ற மலையின் குகைகளில் நீ தங்கிக் கழிந்தாய். அந்த நேரத்தில், மழையின் காரணமாக மகிழ்ந்த மயில்கள், பெருமை மிகுந்த உன்னை, தங்கள் கேகா என்னும் ஒலியால் துதித்தன. மேலும் மல்லிகை, கதம்பம் போன்றவற்றால் நீ வணங்கப்பட்டாய்.

10 அத சரதம் உபேதாம் தாம் பவத் பக்த சேத:
விமல ஸலில பூராம் மாநயந் காநநேஷு
த்ருணம் அமல வந அந்தே சாரு ஸஞ்சாரயந் கா:
பவந புர பதே த்வம் தேஹி மே தேஹ ஸௌக்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் உன் அடியார்களின் மனம் தெளிவாக உள்ளது போன்ற நீருடன் கூடிய சரத்காலம் வந்தது. அப்போது அந்தக் காட்டின் அழகை நன்றாக அனுபவித்துக் கொண்டும், பசுக்களைப் புதிதாக வளர்ந்த புற்களை மேயவைத்தும் கழித்தாய். இப்படியாக லீலைகள் பல செய்த நீ எனக்கு உடல் ஆரோக்கியத்தை அளிப்பாயாக.

***

1 த்வத் வபு: நவ கலாய கோமலம்
ப்ரேம தோஹநம் அசேஷ மோஹநம்
ப்ரஹ்ம தத்வ பர சித் முதாத்மகம்
வீக்ஷ்ய ஸம்முமுஹு: அந்வஹம் ஸ்த்ரிய:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய திருமேனி புதிதாக மலர்ந்த காயாம்பூ போன்று அழகாக இருந்தது. அது அனைவரையும் மயக்கியது. உன்னிடத்தில் அன்பைப் பெருக்கியது. ஸத் சித் ஆனந்தம் ஆகிய மூன்று இணைந்தது போல் காணப்பட்டது. இப்படிப்பட்ட பரப்ரஹ்மமான உனது உருவத்தைக் கண்ட கோபஸ்திரீகள் ஒவ்வொரு நாளும் தங்கள் மனதை உன்னிடம் பறிகொடுத்தனர்.

2 மந்மத உந்மதித மாநஸா: க்ரமாத்
த்வத் விலோகந ரதா: தத: தத:
கோபிகா: தவ ந ஸேஹிரே ஹரே
காநந உபகதிம் அபி அஹ: முகே

**பொருள் -** குருவாயூரப்பா! ஹரியே! ஒவ்வொரு நாளும் மன்மதனால் தங்கள் மனம் கலைக்கப்பட்டவர்களாக ஆனார்கள் (கோபியர்கள்). இதனால் அவர்கள் எப்போதும் எங்கும் உன்னையே பார்த்துக் கொண்டிருக்க விரும்பினார்கள். இதனால் நீ காலை வேளைகளில் காட்டிற்குச் செல்வத்தையும் அவர்கள் விரும்பவில்லை அல்லவா?

3 நிர்கதே பவதி தத்த த்ருஷ்டய:
த்வத் கதேந மநஸா ம்ருக ஈக்ஷணா:
வேணு நாதம் உபகர்ண்ய தூரத:
த்வத் விலாஸ கதயா அபிரேமிரே

**பொருள் -** குருவாயூரப்பா! மான் போன்ற அழகிய விழிகளை உடைய கோபிகைகள், நீ காட்டிற்குச் சென்றதும், உன் மீது மனதை உடையவர்களாக, நீ சென்ற வழியையே பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது வெகு தூரத்தில் கேட்கும் உனது புல்லாங்குழலின் இனிமையான இசையைக் கேட்டவுடன், உனது லீலைகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்தனர்.

4 காநந அந்தம் இதவாந் பவாந அபி
ஸ்நிக்த பாதப தலே மநோரமே
வ்யத்யய ஆகலித பாதம் ஆஸ்தித:
ப்ரத்ய பூரயத வேணு நாலிகாம்

**பொருள் -** குருவாயூரப்பா! காட்டிற்குள் சென்ற நீ, குளிர்ந்த நிழல் உடைய ஒரு மரத்தின் அடியில் நின்றாய். அங்கு உனது கால்களை மாற்றி குறுக்காக வைத்துக் கொண்டு, இனிமையான புல்லாங்குழல் ஓசையை எழுப்பினாய் அல்லவா?

5 மார பாண துத கேசரீ குலம்
நிர்விகார பசு பக்ஷி மண்டலம்
த்ராவணம் ச த்ருஷதாம் அபி ப்ரபோ
தாவகம் வ்யஜநி வேணு கூஜிதம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய இனிமையான இசை, வானில் உள்ள தேலோகப் பெண்களையும் காமனின் பாணத்தால் துளைத்தது. பசுக்களும், பறவைகளும் அதனைக் கேட்டு அசையாமல் நின்றன. கற்களைக் கூட அந்த ஒலி கரைத்தது.

6 வேணு ரந்த்ர தரல அங்குலீ
தாள ஸஞ்சலித பாத பல்லவம்
தத் ஸ்திதம் தவ பரோக்ஷம் அபி அஹோ
ஸம்விசிந்த்ய முமுஹு: வ்ரஜ அங்கநா:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய அழகான விரல் நுனிகள் அந்தப் புல்லாங்குழலின் துளைகள் மீது அசைந்து விளையாடின. உனது அழகிய பாதங்கள் அந்தத் தளத்திற்கு ஏற்றாற்போல் மெதுவாக அசைந்தன. இத்தகைய காட்சியை அந்தக் கோபிகைகள் காணவில்லை. இருந்தாலும் தங்கள் மனக்கண்களால் இந்தக் காட்சியை எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டு மயங்கினர். என்ன வியப்பு!

7 நிர்விசங்க பவத் அங்க தர்சிநீ:
கேசரீ: கக ம்ருகாந் பசூந் அபி

த்வத் பத ப்ரணயி காநநம் ச தா:
தந்ய தந்யம் இதி நநு அமாநயந்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது எழில் பொங்கும் திருமேனியை இப்படியாக எந்தவித தடையும் இன்றி தேவலோகப் பெண்களும், பறவைகளும், பசுக்களும் கண்டனர். உனது பாதங்களை அந்தப் ப்ருந்தாவனம் அன்புடன் நட்பு கொண்டது. இப்படிப்பட்ட இவர்கள் அனைவரும் மிகவும் பாக்கியசாலிகள் என்று கோபிகைகள் எண்ணினர் அல்லவா?

8 ஆபிபேயம் அதர அம்ருதம் கதா
பேணு பக்த ரஸ சேஷம் ஏகதா
தூரத: பத க்ருதம் தூராசய இதி
ஆகுலா: முஹு: இமா: ஸமாமுஹந்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய புல்லாங்குழலானது உனது வாயில் உள்ள அமிர்தத்தை உண்டது. அந்தப் புல்லாங்குழல் உண்டது போக மீதம் உன் வாயில் உள்ள சொற்ப அமிர்தத்தையாவது நாங்கள் அனுபவிப்போமா? நாங்கள் வெகு தொலைவில் அல்லவா உள்ளோம்? இது என்ன பேராசை! என்று எண்ணி கோபிகைகள் மயக்கம் உற்றனர்.

9 ப்ரத்யஹம் ச புந: இத்தம் அங்கநா:
சித்த யோநி ஜநிதாத் அநுக்ரஹாத்
பத்த ராக விவசா: த்வயி ப்ரபோ
நித்யம் ஆபு; இஹ க்ருத்ய மூடதாம்

**பொருள் -** ப்ரபுவே! குருவாயூரப்பா! இப்படியாக அந்தக் கோபிகைகளுக்கு மன்மதன் கருணை புரிந்தான். இதனால் அவர்கள் உன் மீது மேலும் மேலும் காதல் கொண்டனர். அதனால் அன்றாடம் செய்ய வேண்டிய செயல்களையும் மறந்து நின்றனர். அல்லவா?

10 ராக: தாவத் ஜாயதே ஹி ஸ்வபாவாந்
மோக்ஷ உபாய: யத்நத: ஸ்யாத் ந வாஸ்யாத்
தாஸாம் து ஏகம் தத் த்வயம் லப்தம் ஆஸீத்

பாக்யம் பாக்யம் பாஹிமாம் மாருத ஈச

**பொருள் -** ஈசனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த உலகில் உள்ள அனைவருக்கும் காதல் என்பது இயற்கையாகவே உண்டாகிறது. மோட்ச உபாயம் என்பது சிலருக்கு முயற்சியினால் அமையும், அமையாமலும் போகலாம் ஆனால் கோபிகைகளுக்கு இரண்டும் ஒன்றாக அமைந்தது. (அவர்கள் க்ருஷ்ணன் மீது கொண்ட காதலே மோட்ச உபாயம் ஆனது). இது பெரும் பாக்கியம், பாக்கியம்! இப்படி அவர்களுக்கு அருளிய நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.
***

1 மதந ஆதுர சேதஸ: அந்வஹம்
பவத் அங்க்ரி த்வய தாஸ்ய காம்யயா
யமுநா தட ஸீம்நி ஸைகதீம்
தரல அக்ஷ்ய: கிரிஜாம் ஸமார்ச்சிசந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னால் நிலையற்று மருண்ட பார்வை பார்க்கின்ற கோபிகைகள். உன் மீது கொண்ட காமத்தால் மனம் சஞ்சலம் அடைந்தனர். உன்னுடைய பாதங்களில் சரணம் என்று புக விரும்பினார்கள். அதற்காக யமுனை நதிக்கரையில் அவர்கள் மணலால் பார்வதி உருவத்தை உருவாக்கி, அவளை வணங்கினர் அல்லவா?

2 தவ நாம கதா ரதா: ஸமம்
ஸுத்ருச: ப்ராத: உபாகதா: நதீம்
உபஹார கதை: அபூஜயந்
தயித: நந்த ஸுத: பவேத் இதி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மிகவும் அழகிய கண்களை உடைய கோபிகைகள் உன்னுடைய திருப்பெயர்கள் மீதும் உனது சரிதங்கள் மீதும் மிகவும் பற்று கொண்டிருந்தனர். இதனால் அன்றாடம் விடியற்காலைப் பொழுதில் அனைவரும் சேர்ந்து யமுனை ஆற்றுக்குச் சென்றனர். அங்கு உள்ள அந்த பார்வதியை பலவிதமான மலர்களால் பூஜித்து, நந்தகோபரின் மகனான க்ருஷ்ணனே எங்கள் கணவனாக அமைய வேண்டும் என்று வேண்டினர்.

3 இதி மாஸம் உபாஹித வ்ரதா:
தரல அக்ஷீ: அபிவீக்ஷ்ய தா பவாந்
கருணா ம்ருதுல: நதீ தடம்
ஸமயாஸீத் தத் அநுக்ரஹ இச்சயா

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக அந்தக் கோபிகைகள் ஒரு மாத காலம் விரதம் மேற்கொண்டனர். இதனால் உனக்கு அவர்கள் மீது கருணை உண்டானது. அவர்களுக்கு அருள் புரிய எண்ணிய நீ, அவர்கள் நீராடிக் கொண்டிருந்த யமுனை நதியின் கரைக்கு வந்தாய்.

4 நியம அவஸிதௌ நிஜ அம்பரம்
தட ஸீமநி அவமுச்ய தா: ததா
யமுநா ஜல கேலந ஆகுலா:
புரத: த்வாம் அவலோக்ய லஜ்ஜிதா:

**பொருள் -** குருவாயூரப்பா! தங்கள் நோன்பை முடித்த பின்னர் அந்தக் கோபிகைகள், தங்களுடைய ஆடைகளை நதியின் கரையில் வைத்தனர். அதன் பின்னர் அவர்கள் யமுனை நதியில் இறங்கி விளையாடி மகிழத் தொடங்கினர். அந்த நேரம் நீ அவர்கள் முன்னால் வந்தாய். உன்னைக் கண்டவுடன் வெட்கம் அடைந்தனர். அல்லவா?

5 த்ரபயா நமித ஆநநாஸு அதோ
வநிதாஸு அம்பர ஜாலம் அந்திகே
நிஹிதம் பரிக்ருஹ்ய பூருஹ:
விடபம் த்வம் தரஸா அத்ரூடவாந்

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் வெட்கத்தால் தலை குனிந்து நின்றனர். அப்போது நீ அவர்கள் கரையில் வைத்திருந்த ஆடைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு, மிகவும் வேகமாக அங்கிருந்த ஒரு மரத்தில் ஏறிக் கொண்டாய்.

6 இஹ தாவத் உபேத்ய நீயதாம்

வஸநம் வ: ஸுத்ருச: யதா யதம்
இதி நர்ம ம்ருது ஸ்மிதே த்வயி
ப்ருவதி வ்யாமுமுஹே வதூ ஜநை:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அவர்களிடம் மெதுவாகச் சிரித்துக்கொண்டே, அழகான கண்களைக் கொண்ட கோபிகைகளே! இங்கு வந்து உங்கள் உடைகளை எடுத்துச் செல்லுங்கள் என்றாய். இதனைக் கேட்ட அவர்கள் செய்வது அறியாது திகைத்து நின்றார்கள்.

7 அயி ஜீவ சிரம் கிசோர
ந: தவ தாஸீ: அவ சீகரோஷி கிம்
ப்ரதிச அம்பரம் அம்புஜ ஈக்ஷண இதி
உதித: த்வம் ஸ்மிதம் ஏவ தத்தவாந்

**பொருள் -** குருவாயூரப்பனே! அவர்கள் உன்னை நோக்கி, நந்தகோபரின் குழந்தையே! நீ நீண்ட நாள் நல்லபடியாக வாழ்வாய். உன்னுடைய அடிமைகள் நாங்கள். எங்களை ஏன் (இன்னும் ஏற்காமல்) மனம் பேதலிக்கச் செல்கிறாய்? எங்கள் உடைகளைத் தந்துவிட மாட்டாயா? என்றனர். ஆனால் நீ அவர்களுக்கு உனது புன்னகையை மட்டுமே கொடுத்தாய்.

8 அத்ருஹ்ய தடம் க்ருத அஞ்ஜலீ:
பரிசுத்தா: ஸ்வகதீ: நிரீக்ஷ்ய தா:
வஸநாநி அகிலாநி அநுக்ரஹம்
புந: ஏவம் கிரம் அபி அதா: முதா

**பொருள் -** குருவாயூரப்பா! இதனால் அவர்கள் மிகுந்த சுத்தமான மனதுடன், கூப்பிய கைகளைக் கொண்டு உனக்கு அஞ்சலி செய்தவர்களாகக் கரைக்கு வந்தனர். உடனே நீ அவர்கள் ஆடைகளைக் கொடுத்தாய். மேலும் அவர்களுக்கு நீ பின் வரும் சொற்களையும் கூறினாய்.

9 விதிதம் நநு வ: மநீஷிதம்

வதிதார: து இஹ மோக்யம் உத்தரம்
யமுநா புலிநே ஸசந்த்ரிகா:
க்ஷணதா இதி அபலா: த்வம் ஊசிவாந்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவர்களிடம், கோபிகைகளே! உங்கள் மனதில் உள்ள எண்ணம் முழுவதும் நான் அறிந்து கொண்டேன். அந்த எண்ணங்களுக்கான பதிலை உங்களுக்கு இன்னும் சிறிது காலம் கழித்து, யமுனை ஆற்றின் கரையில் உள்ள மணலில், நிலவுடன் இணைந்த ஓர் இரவு கூறும் என்றாய்.

10 உபகர்ண்ய பவந் முக ச்யுதம்
மது நிஷ்யந்தி வச: ம்ருகீ த்ருச:
ப்ரணயாத் அபி வீக்ஷ்ய வீக்ஷ்ய தே
வதந அப்ஜம் சநகை: க்ருஹம் கதா:

**பொருள் -** குருவாயூரப்பா! மான் போன்ற அழகான கண்களை உடைய அந்த கோபிகைகள், உனது இனிமையான சொற்களை கேட்டு மிகவும் மகிழ்ந்தனர். உனது அழகிய தாமரை போன்ற மலர்ந்த முகத்தை மீண்டும் மீண்டும் பார்த்தனர். அப்படியே பார்த்தபடி வீடுகளுக்குச் சென்றனர்.

11 இதி நநு அநுக்ருஹ்ய வல்லவீ:
விபிந அந்தேஷு புரா இவ ஸஞ்சரந்
கருணா சிசிர: ஹரே ஹர
த்வரயா மே ஸகல ஆமய ஆவலிம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஹரியே! இப்படியாக அவர்களுக்கு நீ அனுக்ரஹம் செய்தாய். பின்னர் காட்டிலேயே தொடர்ந்து சுற்றினாய். இத்தகைய கருணையுடன் கூடிய நீ, என்னுடைய அனைத்து பிணிகளையும் விரைவாக நீக்க வேண்டும்.
***

1 தத: ச ப்ருந்தாவனத: அதிதூரத:
வநம் கத: த்வம் கலு கோபகோ குலை:
ஹ்ருத் அந்தரே பக்ததர த்விஜ அங்கநா

கதம்பக அநுக்ரஹண ஆக்ரஹம் வஹந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு சமயம் நீ உன்னிடம் மிகுதியான பக்தியும் அன்பும் கொண்டிருந்த ப்ராமணர்களின் மனைவிகளுக்கு அருள் புரிய வேண்டும் என்று விரும்பினாய். உடனே நீ ஆயர் சிறுவர்களுடனும், பசுக் கூட்டத்துடனும் ப்ருந்தா வனத்தை விட்டுக் கிளம்பி, வெகு தூரத்தில் இருந்த ஒரு காட்டிற்குச் சென்றாய் அல்லவா?

2 தத: நிரீக்ஷ்ய அசரணே வந அந்தரே
கிகோர லோகம் க்ஷுதிதம் த்ருஷா ஆகுலம்
அதூரத: யக்ஞ பராந் த்விஜாந் ப்ரதி
வ்யஸர்ஜய: தீதிவி யாசநாய தாந்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தக் காட்டின் நடுவில் ஆயர் சிறுவர்களுக்கு உணவு எதுவும் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் பசியாலும் தாகம் கொண்டும் வாடினார்கள். அப்போது அங்கு யாகம் செய்து கொண்டிருந்த ப்ராமணர்களிடம் சென்று உணவு யாசிக்க நீ ஆயர் சிறுவர்களை அனுப்பினாய்.

3 கதேஷு அதோ தேஷு அபிதாய தே அபிதாம்
குமாரதேஷு ஓதந யாசிஷு ப்ரபோ
ச்ருதி ஸ்திரா: அபி அபிநிந்யு: அச்ருதிம்
ந கிஞ்சித் ஊசு: ச மஹீஸுர உத்தமா:

**பொருள் -** ப்ரபுவே! குருவாயூரப்பா! அந்தச் சிறுவர்கள் அந்தப் ப்ராமணர்களிடம் சென்று உன்னுடைய பெயர்களைக் கூறிக்கொண்டே உணவு யாசித்தனர். அப்போது வேத ஞானம் உள்ள ப்ராமணர்கள், அந்தச் சிறுவர்கள் அழைப்பது தங்கள் காதுகளில் விழுந்தும்கூட, கேட்காதது போல் எதுவும் கூறாமல் இருந்தனர்.

4 அநாதராத் கிந்ந திய: ஹி பாலகா:
ஸமாயயு: யுக்தம் இதம் ஹி யஜ்வஸு
சிராத் அபக்தா: கலு தே மஹீ ஸுரா:
கதம் ஹி பக்தம் த்வயி தை: ஸமர்ப்யதே

**பொருள் -** குருவாயூரப்பா! தங்களை அந்தப் ப்ராமணர்கள் கவனியாமல் இருந்ததால் ஆயர் சிறுவர்கள் மிகவும் வருந்தியபடி உன்னிடம் வந்தனர். யாகத்தை மட்டுமே செய்பவர்கள் இது போன்று செய்வது இயல்பே. அந்தப் ப்ராமணர்கள் வெகு காலம் உன்னிடம் பக்தி என்பதே இல்லாமல் இருந்தனர். அப்படிப்பட்டவர்களிடம் உணவை எதிர்பார்ப்பது எவ்வாறு பொருந்தும்?

5 நிவேதயத்வம் க்ருஹிணீ ஜநாய மாம்
திசேயு: அந்நம் கருணாகுலா இமா:
இதி ஸ்மித ஆர்த்ரம் பவதேரிதா கதா: தே
தாரகா: தார ஜநம் யயாசிரே

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தச் சிறுவர்களிடம், நீங்கள் அனைவரும் அந்தப் ப்ராமணர்களின் மனைவிகளிடம் சென்று, நான் வந்துள்ளதையும், நான் உணவு கேட்டதாகவும் கூறுங்கள். அவர்கள் கருணை உள்ளவர்கள். எனவே கண்டிப்பாக உணவு தருவார்கள். என்று புன்னகையுடன் கூறினாய். அவர்களும் ப்ராமணர்களுடைய மனைவிகளிடம் சென்று யாசித்தனர்.

6 க்ருஹீத நாம்நி த்வயி ஸம்ப்ரம் ஆகுலா:
சதுர்விதம் போஜ்ய ரஸம் ப்ரக்ருஹ்ய தா:
சிரம் த்ருத த்வத் பரவிலோகந ஆக்ரஹா:
ஸ்வகை நிருத்தா அபி தூர்ணம் ஆயயு:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னைக் காண்பதற்காக வெகு நாட்களாக அவர்களது மனைவிகள் எண்ணம் கொண்டிருந்தனர். இப்போது உனது பெயரையும் நீ வந்துள்ளதாக அறிந்ததையும் கேள்விப்பட்ட அவர்கள் மகிழ்ந்து பரபரப்பு அடைந்தனர். தங்கள் கணவன்மார்கள் தடுத்தபோதிலும், நான்கு வகையான உணவுகளை எடுத்துக் கொண்டு, உன்னிடம் விரைவாக வந்தனர் (நான்கு வகை உணவு: காத்யம் - கடித்து உண்பது: ஸோஷ்யம் - நாக்கில் உண்பது: லேஹியம் - வெண்ணெய் போன்றது; பேயம்- குடிப்பது).

7 விலோல பிஞ்ச்சம் சிகுரே கபோலயோ:
ஸமுல்லஸத் குண்டலம் ஆர்த்ரம் ஈக்ஷிதே
நிதாய பாஹும் ஸுஹ்ருத் அமஸ ஸீமநி
ஸ்திதம் பவந்தம் ஸமலோக யந்த தா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை அவர்கள் எப்படி பார்த்தனர்? தலையில் அழகான கொண்டையில் மயில் பீலி அசைந்து ஆடியது; இரண்டு காதுகளில் அணிந்திருந்த குண்டலங்கள் கன்னத்தில் இடித்து ஒளி வீசியது; உனது பார்வை மிகவும் கனிவாக இருந்தது; உனது ஒரு கையை உன் நண்பனின் தோள் மீது வைத்திருந்தாய். இப்படியாக மிகுந்த அழகுடன் உன்னைக் கண்டனர் அல்லவா?

8 ததா ச காசித் த்வத் உபாகம உத்யதா
க்ருஹீத ஹஸ்தா தயிதேந யஜ்வநா
ததா ஏவ ஸஞ்சிந்த்ய பவந்தம் அஞ்ஜஸா
விவேச கைவல்யம் அஹோ க்ருதிந் அஸௌ

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த நேரத்தில் ஒரு பெண் உன்னிடம் வர முயன்றாள். அப்போது அவள் கணவன் (ஒரு ப்ராமணன்) அவள் கையைப் பிடித்துத் தடுத்தான். உடனே அவள் உன்னைக் குறித்துத் த்யானித்தாள். அந்த நொடியில் அவள் உன்னிடம் கலந்து விட்டாள். (மோட்சம் பெற்றாள்) அல்லவா? என்ன புண்ணியம் செய்தவள்?

9 ஆதாய போஜ்யாநி அநுக்ருஹ்ய தா: புந:
த்வத் அங்க ஸங்க ஸ்ப்ருஹயா உஜ்ஜதீ: க்ருஹம்
விலோக்ய யக்ஞாய விஸர்ஜயந் இமா:
சகர்த்த பர்த்ரூந் அபி தாஸு அகர்ஹணான்

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் அளித்த உணவை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அருள் செய்தாய். அவர்கள் உனது திருமேனியின் மீது விருப்பம் கொண்டனர். அதனால் தங்கள் வீடுகளைத் துறந்து வந்தனர். ஆயினும் நீ அவர்களைத் திருப்பி அனுப்பினாய். அவர்கள் கணவன்மார்கள் அந்தப் பெண்களிடம் எந்தக் குற்றமும் காணாது இருக்கும்படி அருளினாய்.

10 நிரூப்ய தோஷம் நிஜம் அங்கநா ஜநே
விலோக்ய பக்திம் ச புந: விசாரிபி:
ப்ரபுத்த தத்வை: த்வம் அபிஷ்டுத: த்விஜை:
மருத்புர: அதீசு நிருந்தி மே கதாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்ப்ராமணர்கள் தாங்கள் செய்த தவறை உணர்ந்தனர். மேலும் தங்கள் மனைவிமார்கள் உன்னிடம் கொண்டிருந்த பக்தியையும் உணர்ந்தனர். உன்னைப் பற்றி நன்கு புரிந்து கொண்டு, தத்துவம் என்று உன்னை வணங்கினர். இப்படிப்பட்ட பெருமைகள் கொண்ட நீ எனது பிணிகளைத் தடுக்க வேண்டும்.

***

1 கதாசித் கோபாலாந் விஹித மக ஸம்பார விபவாந்
நிரீக்ஷ்ய த்வம் ஸௌரே மகவ மதம் உத்வம்ஸிது மநா:
விஜாநந் அபி ஏதாந் விநய ம்ருது நந்த ஆதி பசுபாந்
அப்ருச்ச: க: வா அயம் ஜநக பவதாம் உத்யம: இதி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு நாள் ப்ருந்தாவனத்தில் இருந்த அனைத்து கோபர்களும், இந்திரனைக் குறித்து நிகழ்த்தப்படும் யாகத்திற்குத் தேவையான பொருட்களை சேமித்துக் கொண்டிருந்தனர். அப்போது நீ இந்திரனுடைய கர்வத்தை அடக்க எண்ணினாய். ஆகவே எதுவும் அறியாதவன் போல் உனது தந்தையிடம் சென்று, இந்த ஏற்பாடுகள் எதற்காக? என்று கேட்டாய் அல்லவா?

2 பபாஷே நந்த: த்வாம் ஸுத நநு விதேய: மகவத:
மக: வர்ஷே வர்ஷே ஸுகயதி ஸ: வர்ஷேண ப்ருதிவீம்
ந்ருணாம் வர்ஷ ஆயத்தம் நிகிலம் உபஜீவ்யம் மஹி தலே
விசேஷாத் அஸ்மாகம் த்ருண ஸலில ஜீவ்யா: ஹி பசவ:

**பொருள் -** குருவாயூரப்பா! உடனே நந்தகோபர் உன்னிடம் க்ருஷ்ணா! இந்திரன் இந்த உலகின் ஆதாரமான மழையை அளித்து இன்பத்தைத் தருகிறான். உலகில் உள்ள அனைவரும் பிழைப்பதற்கு மழையே ஆதாரமாக உள்ளது. நமது பசுக்கள் நீராலும்

புல்லாலும் மட்டுமே வாழ்கின்றன அல்லவா? இதனால் நாம் ஒவ்வொரு ஆண்டும் இந்திரனுக்கு வேள்வி இயற்ற வேண்டும் என்று விளக்கினார்.

3 இதி ச்ருத்வா வாசம் பிது: அயி பவாந் ஆஹ ஸரஸம்
திக் ஏதந் ந: ஸத்யம் மகவ ஜநிதா வ்ருஷ்டி: இதி யத்
அத்ருஷ்டம் ஜீவாநாம் ஸ்ருஜதி கலு வ்ருஷ்டிம் ஸமுசிதாம்
மஹா அரண்யே வ்ருக்ஷா: கிம் பலிம் இந்த்ராய தததே

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய தந்தையின் சொல்லைக் கேட்டுக் கொண்டிருந்த நீ அவரிடம், நீங்கள் கூறுவதை ஏற்க முடியாது. இந்திரனால் மழை பொழிகிறது என்பது சரியல்ல. மண்ணில் உள்ள உயிர்களின் முன் ஜென்ம புண்ணியத்தால் மட்டுமே மழை பொழிகிறது. பெரிய காடுகளில் உள்ள மரங்கள் இந்திரனுக்கு வேள்வி நடத்தவா செய்கின்றன? என்று கூறினாய்.

4 இதம் தாவத் ஸத்யம் யத் இஹ பசவ: ந: குலதனம்
தத் ஆஜீவ்யாய அஸௌ பலி: அல பர்த்ரே ஸமுசித:
ஸுரேப்ய: அபி உத்க்ருஷ்டா: நநு தரணி தேவா: க்ஷிதிதலே
தத: தே அபி ஆராத்யா: இதி ஜகதித த்வம் நிஜ ஜநாந்

**பொருள் -** குருவாயூரப்பா! மேலும் நீ உனது தந்தையிடம், இந்தப் பசுக்கள் நமது குலத்திற்கு செல்வம் என்பது உண்மை. அவற்றுக்கு வேண்டிய புல் முதலியவற்றைக் கொடுத்து அவற்றின் பிழைப்பிற்குக் காரணமாக உள்ளது கோவர்த்தன மலையாகும். எனவே இந்த மலைக்கே வேள்வி இயற்ற வேண்டும். மேலும் இந்த உலகில் உள்ள வேதம் ஓதும் அந்தணர்கள் தேவர்களை விட உயர்ந்தவர்கள். ஆகவே அவர்களும் வணங்கத் தகுந்தவர்கள் என்றாய்.

5 பவத்வாசம் ச்ருத்வா பஹுமதி யுதா: தே அபி பசுபா:
த்விஜ இந்த்ராந் அர்ச்சந்த: பலிம் அதது: உர்சை: க்ஷிதிப்ருதே
வ்யது: ப்ராதக்ஷிண்யம் ஸுப்ருசம் அநமந் ஆதர யுதா:
த்வம் ஆத: சைல ஆத்மா பலிம் அகிலம் ஆபீர புரத:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய சொற்களை யாதவர்கள் மிகவும் மதித்தனர். அதனை ஒப்புக்கொண்டனர். வேள்வி இயற்றும் அந்தணர்களை வணங்கினர். கோவர்த்தன மலைக்கு பூஜைப் பொருட்களை அர்ப்பணித்தனர். மிகுந்த பக்தியுடன் அந்த மலையை வலம் வந்தனர். நீ அந்த மலையின் ஆத்மாகவாக மாறி அவர்கள் கொடுத்ததை மகிழ்ந்து ஏற்றாய் அல்லவா?

6 அவோச: ச ஏவம் தாந் கிம் இஹ விதிதம் மே நிகதிதம்
கிரி இந்த்ர: நநு ஏஷ: ஸ்வ பலிம் உபபுங்க்தே ஸ்வ வபுஷா
அயம் கோத்ர: கோத்ர த்விஷி ச குபிதே ரக்ஷிதும் அலம்
ஸமஸ்தாந் இதி உக்தா: ஜஹ்ருஷு: அகிலா கோகுல ஜுஷ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அவர்களிடம், இப்போது பாருங்கள். நான் கூறியது உண்மையாக உள்ளது அல்லவா? இந்த கோவர்த்தன மலை தனக்கு இட்ட பலியை உண்டுவிட்டது அல்லவா? மலைகளின் எதிரியான இந்திரன் இதனால் கோபம் அடைந்தாலும். நம்மை இந்த மலை நிச்சயம் காப்பாற்றும் என்றாய். இதனைக் கேட்ட ஆயர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி கொண்டனர்.

7 பரிப்ரீதா: யாதா: கலு பவத் உபேதா: வ்ரஜ ஜுஷ:
வ்ரஜம் யாவத் தாவந் நிஜ மக விபங்கம் நிசமயந்
பவந்தம் ஜாநந் அபி அதிக ரஜஸா ஆக்ரந்த ஹ்ருதய:
ந ஸேஹே தேவ இந்த்ர: த்வத் உபரசித ஆத்ம உந்நதி: அபி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக ஆயர்கள் அனைவரும் மகிழ்ந்து பின்னர் உன்னுடன் ப்ருந்தாவனத்திற்குச் சென்றனர். இதற்கிடையே தனக்கு உரிமையான வேள்வி தடைப்பட்டதை இந்திரன் அறிந்தான். உனது வலிமை என்ன என்று உணர்ந்திருந்தும். தனது இந்திர பதவி உன்னால் அளிக்கப்பட்டது என்பதை அறிந்திருந்தும் - ராஜஸ குணம் மிகவும் அதிகமான மனதை உடையவனாக, மிகவும் கோபம் கொண்டான்.

8 மநுஷ்யத்வம் யாத: மது பித் அபி தேவேஷ அவிநயம்
விதத்தே சேத் நஷ்ட: த்ரிதச ஸதஸாம் க: அபி மஹிமா
தத: ச த்வம் ஸிஷ்யே பசுப ஹதகஸ்ய ச்ரியம் இதி
ப்ரவ்ருத்த: த்வாம் ஜேதும் ஸ கில மகவா துர்மத நிதி:

**பொருள் -** குருவாயூரப்பா! இந்திரன். மிகுந்த கர்வத்துடன். மது என்ற அசுரனை அழித்த அந்த நாராயணன் மனித உருவம் எடுத்து, தேவர்களின் பெருமைகளை குறைத்து கூறுவானாகில், தேவர்கள் நிலை என்ன? ஆகவே அந்த இடையர்களின் பொருட்களையும், க்ருஷ்ணனின் பெருமைகளையும் அழித்து விடுகிறேன் என்று விபரீதமான எண்ணம் கொண்டான் அல்லவா?

9 த்வத் ஆவாஸம் ஹந்தும் ப்ரளய ஜலதாந் அம்புர புவி
ப்ரஹிண்வந் விப்ராண: குலிசம் அயம் அப்ர இப கமந:
ப்ரதஸ்தே அந்யை: அந்த: தஹந மருத் ஆத்யை: விஹஸிதோ
பவந் மாயா ந ஏவ த்ரி புவந பதே மோஹயதி கம்

**பொருள் -** மூன்று உலகிற்கும் நாயகனே க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய இருப்பிடத்தை அழிக்கும் எண்ணத்துடன், தனது வஜ்ராயுதம் எடுத்துக் கொண்டும், ஐராவதம் என்ற யானை மீது அமர்ந்தும் இந்திரன் புறப்பட்டான். ப்ரளய காலத்தில் மழையை விடாது பெய்கின்ற மேகக்கூட்டங்களை ஏவினான். இதனைக் கண்டு அக்னி, வாயு முதலான தேவதைகள் மனதிற்குள் பரிகாசம் செய்தன. இருப்பினும் அவன் தொடர்ந்தான். உன்னுடைய மாயைக்கு மயங்காதவர் உண்டோ?

10 ஸுர இந்த்ர: க்ருத்த: சேத் த்விஜ கருணயா சைல க்ருபயா அபி
அநாதங்க: அஸ்மாகம் நியத இதி விச்வாஸ்ய பசுபாந்
அஹோ கிம் ந ஆயாத: கிரி பித் இதி ஸஞ்சிந்த்ய நிவஸந்
மருத் கேஹ அதீச ப்ரணுத முர வைரிந் மம கதாந்

**பொருள் -** முரன் என்ற அரக்கனை அழித்த முராரியே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ ஆயர்களிடம், பயப்பட வேண்டாம்! இந்திரன் கோபம் கொண்டு வந்தாலும், வேதம் ஓதும் அந்தணர்கள் உள்ளதாலும், கோவர்த்தன மலையின் கருணை மூலமாகவும், நமக்கு நல்ல

பயனே ஏற்படும் என்றாய். தொடர்ந்து உனது மனதில், இந்திரன் ஏன் இன்னும் வரவில்லை? என்று சிந்தித்து, அவனுக்காகக் காத்து நின்றாய். இப்படிப்பட்ட நீ எனது நோய்களை நீக்க வேண்டும்.

***

1 தத்ருசிரே கில தத் க்ஷணம் அக்ஷத
ஸ்த நித ஜ்ரும்பித கம்பித திக்படா:
ஸுஷமயா பவத் அங்க துலாம் கதா:
வ்ரஜ பத உபரி வாரி தரா: த்வயா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது ப்ருந்தாவனத்தின் மீது மேகங்களில் இடைவிடாமல் இடி முழக்கங்கள் கேட்கத் தொடங்கின. அந்த இடியின் ஓசையைக் கேட்டு அனைத்துத் திசைகளும் நடுங்கின. உன்னுடைய அழகான திருமேனியின் நிறத்திற்கு ஒப்பான நிறம் கொண்ட மேகங்கள் பரவலாகச் சூழ்ந்தன. அவற்றை க் கண்டு நீ பெரிதும் மகிழ்ந்தாய் அல்லவா?

2 விபுல கரக மிச்ரை: தோய தாரா நிபாதை:
திசி திசி பசுபாநாம் மண்டலே தண்ட்யமாநே
குபித ஹரி க்ருதாந் ந: பாஹி பாஹி இதி தேஷாம்
வசநம் அஜித ச்ருண்வந் மா பபீத இதி அபாணீ.

**பொருள் -** யாராலும் வெற்றி கொள்ள இயலாதவனே! ஹரியே! குருவாயூரப்பா! அப்போது மிகப் பெரிய ஆலங்கட்டிகளுடன் ப்ருந்தாவனத்தில் மழை தாரை தாரையாகக் கொட்டியது. இதனால் அங்கு நிறைந்திருந்த ஆயர்கள் துன்பம் உற்றனர். உன்னிடம், ஹரியே! கோபம் கொண்ட இந்திரனிடம் இருந்து எங்களைக் காப்பாற்று என்று வேண்டினர். உடனே நீ அவர்களிடம் பயப்பட வேண்டாம்! என்று ஆறுதலாகக் கூறினாய்.

3 குல இஹ கலு கோத்ர: தைவதம் கோத்ர சத்ரோ:
விஹிதம் இஹ ஸ: ருந்த்யாத் க: நு வ: ஸம்சய: அஸ்மிந்
இதி ஸ ஹஸித வாதீ தேவ கோவர்த்தந அத்ரிம்
த்வரிதம் உதமூமூல: மூலத: பாலதோர்ப்யாம்

**பொருள் -** தேவனே! குருவாயூரப்பா நீ ஆயர்களிடம், நமது யாதவ குலத்திற்கு இந்த கோவர்த்தன மலைதான் தெய்வமாகும். அது நம்மை நம்முடைய எதிரியான இந்த்ரனிடமிருந்து நிச்சயம் காப்பாற்றும். இதில் உங்களுக்கு ஏன் சந்தேகம்? என்று கேட்டாய். இப்படிக் கூறிக்கொண்டே உனது சிறிய அழகிய கைகளால் அந்த கோவர்த்தன மலையை அடியோடு பிடுங்கி தூக்கினாய் அல்லவா?

4 ததநு கிரி வரஸ்ய ப்ரோத்ருதஸ்ய அஸ்ய தாவத்
ஸிகதில ம்ருது தேசே தூரத: வாரிதாபே
பரிகர பரிமிச்ராந் தேநு கோபாந் அதஸ்தாத்
உபநிததத் அதத்தா ஹஸ்த பத்மேந சைலம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அந்த கோவர்த்தன மலையை உயரத்தில் தூக்கியபோது, அதன் கீழ் உள்ள தரைப்பகுதியானது மிகுந்த மணல் கொண்டு மிருதுவாக இருந்தது. அதன் கீழ் நீர் வராமல் வெகு தூரத்தில் நின்று விட்டது. அதன் கீழ் யாதவ மக்கள் அனைவரையும் அவர்கள் வீட்டுப் பொருட்களுடனும், பசுக்களுடனும் நிற்கும்படி கூறினாய். உனது சிறிய தாமரை போன்ற கைகளால் அந்த மலையை (குடை போன்று) பிடித்துக் கொண்டாய்.

5 பவதி வித்ருத சைலே பாலிகாபி: வயஸ்யை:
அபி விஹித விலாஸம் கேலி லாப ஆதி லோலே
ஸவித மிலித தேநூ: ஏக ஹஸ்தேந கண்டூ
யதி ஸதி பசு பாலா: தோஷம் ஐசஷந்த ஸர்வே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ உனது ஒரு கையில் அந்த மலையை வைத்திருந்தாய். அருகில் நின்றிருந்த கோபிகைகளுடனும், உனது நண்பர்களுடனும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாய். உனது மற்றொரு கையால் அருகில் நின்று கொண்டிருந்த பசுக்களை தடவிக் கொண்டிருந்தாய். இதனைக் கண்ட ஆயர்கள் வியப்புடன் மகிழ்ந்தனர்.

6 அதி மஹாந் கிரி: ஏஷ து வாமகே
கர ஸரோருஹி தம் தரதே சிரம்

கிம் இதம் அத்புதம் அத்ரி பலம் நு இதி
த்வத் அவலோகிபி: ஆகதி கோபகை:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னைக் கண்ட ஆயர்கள். இந்த மலை இவ்வளவு பெரியதாக உள்ளது. நமது க்ருஷ்ணனோ மிகவும் குழந்தை ஆயிற்றே! அவன் தனது தாமரை போன்ற மென்மையான இடது கையினால் அதனை இத்தனை நேரம் தாங்கி நிற்கிறானே! அந்த மலை அதன் பலத்தை இவனுக்கு அளிக்கிறதோ? என்று அறியாமையால் கூறினார்கள் அல்லவா?

7 அஹஹ தார்ஷ்ட்யம் அமுஷ்ய வடேர கிரிம்
வ்யதித பாஹு: அஸௌ அவரோபயேத்
இதி ஹரி: த்வயி பக்த விகர்ஹண:
திவஸ ஸப்தகம் உக்ரம் அவர்ஷயத்

**பொருள் -** ஹரியே! குருவாயூரப்பா! நீ இப்படி நிற்பதைக் கண்ட இந்திரன் மிகவும் கோபத்துடன். இந்தச் சிறுவனுக்கு உள்ள துணிவுதான் என்னே என்ன கர்வம்? தனது கைகள் சோர்ந்து போனவுடன் அந்த மலையை கீழே இறக்கி விடுவான். என்று எண்ணினான். அத்துடன், மழையை மேலும் அதிகரித்து தொடர்ந்து ஏழு நாட்கள் பெய்யும்படி செய்தான்.

8 அசலதி த்வய தேவ பதாத் பதம்
கலித ஸர்வ ஜலே ச கந உத்தகேர
அபஹ்ருதே மருதா மருதாம் பதி:
த்வத் அபி சங்கித தீ: ஸமுபாத்ரவத்

**பொருள் -** தேவனே! குருவாயூரப்பா! நீ எங்கு நின்றாயோ அந்த இடத்தில் இருந்து சிறிதும் நகரவில்லை. மழையைக் கொட்டிய மேகங்கள் நீர் தீர்ந்து விட்ட நிலையில், காற்றின் மூலம் தள்ளிச் செல்லப்பட்டன. தேவர்களின் தலைவனான இந்திரன் உன்னைக் கண்டு பயந்தான். அங்கிருந்து மறைந்து ஓடிவிட்டான்.

9 சமம் உபேயுஷி வர்ஷ பரே ததா

பசுப தேநு குலே ச விநிர்கதே
புவி விபோ ஸமுபாஹித பூதர:
ப்ரமுதிதை: பசுபை: பரிரே பிஷே

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! அந்த அடைமழை ஓய்ந்தது. ஆயர்களும் பசுக்களும் அந்த மலைக் குடையை விட்டு, வெளியில் வந்தனர். நீயும் அந்த மலையை அதன் இடத்தில் மெதுவாக இறக்கி வைத்தாய். கோபர்கள் அனைவரும் மிகுந்த ஆனந்தத்துடன் உன்னைக் கட்டி அணைத்தனர். அல்லவா?

10 தரணிம் ஏவ புரா த்ருதவாந் அஸி
க்ஷிதி தர உத்தரணே தவ க: ச்ரம:
இதி நுத: த்ரிதசை: கமலா பதே
குரு புர ஆலய பாலய மாம் கதாத்

**பொருள் -** தாமரையாளின் பதியே! குருவாயூர் கோயிலில் உள்ளவனே! ஸ்ரீஅப்பனே! க்ருஷ்ணா! உன்னிடம் வந்த தேவர்கள். நீ முன்பு (வராக அவதாரம்) இந்த பூமியையே தூக்கி நின்றவன்; அப்படிப்பட்ட உனக்கு இந்த மலையை உயர்த்தியதில் என்ன சிரமம் ஏற்படக்கூடும்? என்று வியந்து துதித்தனர். இப்படிப்பட்ட நீ எனது நோய்களில் இருந்து என்னைக் காக்க வேண்டும்.

***

1 ஆலோக்ய சைல உத்தரண ஆதிரூபம்
ப்ரபாவம் உச்சை: தவ கோப லோகா:
விச்வ ஈச்வரம் த்வாம் அபிமத்ய விச்வே
நந்தம் பவந் ஜாதகம் அந்வப் ருச்சந்

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ருந்தாவனத்தில் இருந்த அனைத்து கோபர்களும் நீ மலையைத் தூக்கி நின்றது. மேலும் பலசெயல்களை நிகழ்த்தியது வியப்பை அளித்தன. அவர்கள் நீ சாதாரண மனிதன் அல்லன், அந்த ஸர்வேஸ்வரன் என்றே நினைத்தனர். ஆகவே அந்த சந்தேகம் பூர்த்தியாக உனது தந்தையிடம் உனது ஜாதகத்தைப் பற்றிக் கேட்டனர்.

2 கர்க உதித: நிர்கதித: நிஜாய
வர்க்காய: தாதேந தவ ப்ரபாவ:
பூர்வ அதிக: து அபி அநுராக: ஏஷாம்
ஐதிஷ்ட தாவத் பஹுமாந பார:

**பொருள் -** குருவாயூரப்பனே! உடனே அவர்களிடம் உனது தந்தை, தன்னிடம் முன்பு ஒரு நாள் கர்க்கர் என்ற முனிவர் கூறிய உனது பெருமைகளை எடுத்து உரைத்தார். அந்த நிமிடத்தில் இருந்து ஆயர்களுக்கு உன் மீது இருந்த அன்பும் பக்தியும் பல மடங்காக மாறியது.

3 தத: அவமாந உதித தத்வ போத:
ஸுர அதிராஜ: ஸஹ திவ்ய கவ்யா
உபேத்ய துஷ்டாவ ஸ நஷ்ட கர்வ:
ஸ்ப்ருஷ்ட்வா பத அப்ஜம் மணி மௌளிநா தே

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னால் இப்படி ஓர் அவமானம் அடைந்த இந்திரன், உன்னைப் பற்றி அறிந்து கொண்டான். தனது கர்வத்தை விட்டான். காமதேனுவையும் உடன் அழைத்துக் கொண்டு உன்னிடம் வந்தான். உனது தாமரை போன்ற சிவந்த அழகிய பாதங்களில் தனது க்ரீடத்தை தாழ்த்தி வணங்கினான்.

4 ஸ்நேஹ ஸ்நுதை: த்வாம் ஸுரபி: பயோபி:
கோவிந்த நாம அங்கிதம் அப்ய ஷிஞ்சத்
ஐராவத உபாஹ்ருத திவ்ய கங்கா
பாதோபி: இந்த்ர: அபி ச ஜாத ஹர்ஷ:

**பொருள் -** குருவாயூரப்பா! உன் மீது கொண்ட அன்பின் மிகுதியால், கோவிந்தன் என்ற பெயர் உடைய உனக்கு அந்தக் காமதேனு பால் அபிஷேகம் செய்தது. இதனைக் கண்ட இந்திரனும் மனம் மகிழ்ந்தான். தனது ஐராவதத்தின் மீது கொண்டு வரப்பட்ட கங்கை நதியின் நீரினால் உனக்கு அபிஷேகம் செய்தான்.

5 ஜகத் த்ரயீ ஈசே த்வயி கோகுல ஈசே

ததா அபிஷிக்தே ஸதி கோப வாட:
நாகே அபி வைகுண்ட பதே அபி அலப்யாம்
ச்ரியம் ப்ரபேதே பவத: ப்ரபாவாத்

**பொருள் -** குருவாயூரப்பா! மூன்று உலகிற்கும் அதிபதியான நீ கோகுலத்தின் நாயகனாக முடிசூடப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டாய். இதன் மூலம் கோகுலமானது, வைகுண்டம் மட்டும் அல்லாது பரம பதத்திற்கும் மேலான மேன்மை அடைந்தது.

6 கதா சித் அந்த: யமுநம் ப்ரபாதே
ஸ்தாயந் பிதா வாருண பூருஷேண
நீத: தம் ஆநேதும் அகா: புரீம் த்வாம்
தாம் வாருணீம் காரண மர்த்ய ரூப:

**பொருள் -** குருவாயூரப்பா! ஒருநாள் விடியற்காலைப் பொழுதிற்கு முன்பு உனது தந்தை நந்தகோபர் யமுனையில் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது வருணனின் தூதன் ஒருவன் அவனை வருண லோகத்திற்கு இழுத்து சென்று விட்டான். அப்போது மானுட உருவம் உடைய நீ உனது தந்தையை அழைத்து வர வருண லோகம் சென்றாய்.

7 ஸஸம்பரமம் தேந ஜல அதிபேந
ப்ரபூஜித: த்வம் ப்ரதிக்ருஹ்ய தாதம்
உபாகத: தத் க்ஷணம் ஆத்ம கேஹம்
பிதா அவதத் தத் சரிதம் நிஜேப்ய:

பொருள்; குருவாயூரப்பா! உன்னுடைய வருகையைக் கண்டு மகிழ்ந்த வருணதேவன் மிகுந்த ஆர்வத்துடன் உன்னை வரவேற்றுத் துதித்தான். நீ உடனே உனது தந்தையை அழைத்துக் கொண்டு உன்னுடைய வீட்டிற்குத் திரும்பினாய். உனது தந்தை இந்த நிகழ்ச்சியை தனது உறவினர்கள் அனைவருக்கும் கூறினார் அல்லவா?

8 ஹரிம் விநிச்சித்ய பவந்தம் ஏதாந்
பவத் பத ஆலோகந பத்த த்ருஷ்ணாந்
நிரீக்ஷ்ய விஷ்ணோ பரமம் பதம் தத்

துராபம் அந்யை: த்வம் அதீத்ருச: தாந்

**பொருள் -** குருவாயூரப்பா! விஷ்ணுவே! உன்னுடைய உறவினர்களும் நண்பர்களும் ஆகிய ஆயர்கள் நீ அந்த மஹாவிஷ்ணு என்று உறுதியாக முடிவு செய்தனர். உன்னிடம் உனது இருப்பிடமான வைகுண்டத்தைத் தங்களுக்குக் காண்பிக்கும்படி கேட்டனர். நீயும் அவர்களுக்கு, யாராலும் எளிதில் அடைய இல்லாத அந்த வைகுண்டத்தைக் காண்பித்தாய் அல்லவா?

9 ஸ்புரத் பர ஆநந்த ரஸ ப்ரவாஹ
ப்ரபூர்ண கைவல்ய மஹா பயோதெள
சிரம் நிமக்நா: கலு கோப ஸங்கா:
த்வயா ஏவ பூமந் புந: உத்த்ருதா: தே

**பொருள் -** குருவாயூரப்பா! பூர்ணமானவனே! இதனைக் கண்ட அந்த கோபர்கள் அனைவரும் பேரானந்தம் கொண்டவர்களாக, மோட்சம் என்ற பெருங்கடலில் மூழ்கி உள்ளவர்களாக அந்த வைகுண்டத்தை அனுபவித்தனர். பின்னர் நீ அவர்களை அந்த நிலையில் இருந்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தாய் அல்லவா?

10 கர பதரவத் ஏவம் தேவ குத்ர அவதாரே
நிஜ பதம் அநவாப்யம் தர்சிதம் பக்தி பாஜாம்
தத் இஹ பசுப ரூபீ த்வம் ஹி ஸாக்ஷாத் பர ஆத்மா
பவந புர நிவாஸிந் பாஹி மாம் ஆமயேப்ய:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடைய இருப்பிடமான வைகுண்டத்தை வேறு எந்த அவதாரத்திலும் நீ இப்படி உள்ளங்கை நெல்லிக்கனியாக உனது அடியார்களுக்குக் காண்பித்தது கிடையாது. இடைச் சிறுவனாக வந்த நீயல்லவா, இப்படிக் காண்பித்தாய்? இப்படிப்பட்ட நீ சாட்சாத் அந்த பரம்பொருளே! என்னுடைய பிணிகளை நீக்குவாயாக!

***

1 கோபீ ஜநாய கதிதம் நியம அவஸாநே
மார உத்ஸவம் த்வம் அத ஸாதயிதும் ப்ரவ்ருத்த:

ஸாந்த்ரேண சாந்த்ர மஹஸா சிசிரீக்ருத ஆசே
ப்ராபூரய: முரளிகாம் யமுநா வந அந்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ முன்பு ஒரு சமயம் கோபிகைகள் பார்வதியைக் குறித்த விரதத்தின் முடிவில் மன்மத உத்ஸவமான ராஸக்ரீடை நடத்துவதாக கோபிகைகளுக்கு வாக்களித்தாய் (தசகம் 60: ஸ்லோகம் 9). அதனை நிறைவேற்றும் பொருட்டு நீ நிலவின் ஒளியால் குளிர்ந்து இருந்த யமுனை நதியின் கரையில் உனது புல்லாங்குழலை இனிமையாக ஊதினாய்.

2 ஸம்மூர்ச்சநாபி: உதித ஸ்வர மண்டலாபி:
ஸம்மூர்ச்சயந்தம் அகிலம் புவந அந்தாரளம்
த்வத் வேணு நாதம் உபகர்ண்ய விபோ தருண்ய:
தத் தாத்ருசம் கமபி சித்த விமோஹம் ஆபு:

**பொருள் -** எங்கும் நிறைந்தவனே! குருவாயூரப்பா! உனது குழலில் இருந்து மிகவும் இனிமையான இசை எழுந்தது. அது ஏழு ஸ்வரங்களை இனிதே உடையதாகவும், ஏற்றத்தாழ்வுகள் இன்றி நேர்த்தியானதாகவும், உலகங்கள் அனைத்தையும் மயக்குவதாகவும் இருந்தது. உனது அந்த நாதத்தைக் கேட்ட கோபிகைகள் உவமை எதுவும் கூற முடியாத அளவிற்கு மனம் மயங்கி இன்பம் அடைந்தனர்.

3 தா கேஹ க்ருத்ய நிரதா: தநய ப்ரஸக்தா:
காந்த உபஸேவந பரா: ச ஸரோருஹ அக்ஷ்ய:
ஸர்வம் விஸ்ருஜ்ய முரளீ ரவ மோஹிதா: தே
காந்தார தேசம் அயி காந்த தநோ ஸமேதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அழகிய மனம் கவரும் திருமேனி உடையவனே! அந்த நேரத்தில் கோபிகைகளில் - சிலர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தனர்; சிலர் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்; சிலர் கணவன்மார்களுக்கு சேவை செய்து கொண்டிருந்தனர். தாமரை போன்ற அழகான கண்கள் உடைய அந்தப் பெண்கள் உன்னுடைய இனிமையான குழல் ஓசை கேட்டவுடன், நீ உள்ள இடத்திற்கு வீட்டு வேலைகளை அப்படியே விட்டு விட்டு வந்தனர்.

4 கா; சித் நிஜ அங்க பரிபூஷணம் ஆத தாநா:
வேணு ப்ரணாதம் உபகர்ண்ய க்ருதார்த்த பூஷா:
த்வாம் ஆகதா: நநு ததா ஏவ விபூஷிதாப்ய:
தா ஏவ ஸம்ருருசிரே தவ லோசநாய

**பொருள் -** குருவாயூரப்பா! மேலும் சில கோபிகைகள் தங்கள் உடலில் நகைகளை அணிந்து கொண்டிருக்கும் போது உனது குழலோசை கேட்டது. அந்த மகிழ்வில் பாதி செய்த அலங்காரத்துடன் அப்படியே வந்தனர். முழுவதுமாக அலங்காரம் செய்து கொண்டிருந்தவர்களை விட இவர்கள் உன்னை அதிகம் கவர்ந்தனர் அல்லவா?

5 ஹாரம் நிதம்பே புவி காசந தாரயந்தீ
காஞ்சீம் ச கண்ட புவி தேவ ஸமாகதா த்வாம்
ஹாரி த்வம் ஆத்ம ஜகநஸ்ய முகுந்த துப்யம்
வ்யக்தம் பபாஷ இவ முக்த முகீ விசேஷாத்

**பொருள் -** தேவனே! முகுந்தா! குருவாயூரப்பா! இவர்களில் ஒரு பெண் தனது இடுப்பில் மாலையையும், கழுத்தில் ஒட்டியாணத்தையும் (மாற்றி) அணிந்தவளாக உன்னிடம் ஓடி வந்தாள். அதன் மூலம் தனது இடுப்பானது அழகானது என்று உன்னிடம் உணர்த்தினாள் போலும்.

6 காசித் குசே புந: அஸஜ்ஜித கஞ்சுலீகா
வ்யாமோஹித: பரவதூபி: அலக்ஷ்யமாணா
த்வாம் ஆயயௌ நிருபம ப்ரணய அதிபார
ராஜ்ய அபிஷேக விதயே கலசீ தரா இவ

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்களில் ஒரு பெண் அவசரத்தில் தனது மேல் ஆடையை அணிய மறந்து விட்டாள். மற்றவர்களுக்கு அவள் இப்படி வந்தது தெரியவில்லை. அன்பு என்னும் உனது அந்த அரசாங்கத்தில் பட்டாபிஷேகம் செய்ய புனித நீர் கொண்டு வருவது போல் அவள் இரண்டு கலசங்கள் ஏந்தியவளாக வந்தாள் அல்லவா?

7 கா: சித் க்ருஹாத் கில நிரேதும் அபாரயந்த்ய:

த்வாம் ஏவ தேவ ஹ்ருதயே ஸுத்ருடம் விபாவ்ய
தேஹம் விதூய பரசித் ஸுக்ரூபம் ஏகம்
த்வாம் ஆவிசந் பரம் இமா: நநு தந்ய தந்யா:

**பொருள் -** தேவனே! குருவாயூரப்பா! சிலர் தங்கள் வீட்டிலிருந்து வெளியே வர முடியவில்லை. அவர்கள் தாங்கள் இருந்த இடத்தில் இருந்தே உன்னை ஆழமான அன்புடன் தங்கள் இதயத்தில் த்யானம் செய்தனர். இப்படியாக அவர்கள் தங்கள் உடலை விட்டவர்களாக, உனது உடலில் இரண்டறக் கலந்தார்கள் அல்லவா? இவர்கள் மிகுந்த புண்ணியம் செய்தவர்கள் அன்றோ!

8 ஜார ஆத்மநா ந பரம ஆத்மதயா ஸ்மரந்த்ய:
நார்ய: கதா: பரமஹம்ஸ கதிம் க்ஷணே ந
தம் த்வாம் ப்ரகாச பரம் ஆத்ம தநும் கதஞ்சித்
சித்தே வஹந் அம்ருதம் அச்ரமம் அச்நுவீய

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த கோபாஸ்திரீகள் உன்னை பரம்பொருள் என்றே நினைக்கவில்லை. தங்கள் கள்ளக் காதலனாக மட்டுமே நினைத்தனர். இதனால் அவர்கள் ஒரு நொடியில் பரம ஹம்ஸர்களான சந்நியாசிகள் அடையும் மோட்ச வழி பெற்றனர். கண்கூடாகக் காட்சி அளிக்கும் உனது ஸ்வரூபத்தை நான் (அவர்கள் போல்) என் மனதில் த்யானித்து, நிலை நிறுத்தி, எந்தவித சிக்கலும் இன்றி மோட்சம் பெறுவேன்.

9 அப்யா கதாபி அபித: வ்ரஜ ஸுந்தரீபி:
முக்த ஸ்மித ஆர்த்ர வதந: கருணா அவலோகீ
நிஸ்ஸீம காந்தி ஜலதி: த்வம் அவேக்ஷ்ய மாண:
விச்வ ஏக ஹ்ருத்ய ஹரமே பரம ஈச ரோகாந்

**பொருள் -** உலகின் அனைவருடைய உள்ளத்தில் இருக்கும் பரம்பொருளே! குருவாயூரப்பா! உன்னை நாடி வந்த கோபிகைகள் உன்னைச் சுற்றி நிற்பதால் இனிமையான புன்னகை உடையவனாகவும், கருணை ததும்பும் முகம் உள்ளவனாகவும், ஒளிவீசும் முகம் கொண்டவனாகவும் உன்னை அவர்கள் கண்டனர். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளை நீக்க வேண்டும்.

***

1 உபயதாநாம் ஸுத்ருசாம் குஸும்
ஆயுத பாண பாத விவ சாநாம்
அபிவாஞ்சிதம் விதாதும் க்ருத மதி:
அபி தா: ஜகாத வாமம் இவ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அழகான கண்களை உடைய அவர்கள். மன்மதனின் காம அம்புகளால் தாக்கப்பட்டு, அதனால் தங்கள் அறிவை இழந்து, உன்னருகில் வந்து நின்றனர். நீ அவர்கள் விருப்பங்களை நிறைவேற்ற எண்ணம் கொண்டிருந்தாய். இருந்தாலும் அதனை விரும்பாதவன் போல் அவர்களிடம் பேசினாய்.

2 ககந கம் முநி நிவஹம் ச்ராவயிதும்
ஜகித குல வதூ தர்மம்
தர்ம்யம் கலு தே வசநம் கர்ம து
நோ நிர்மலஸ்ய விச்வாஸ்யம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஆகாயத்தில் சஞ்ரிக்கும் முனிவர்களின் காதுகளில் விழும்படியாக, நீ கோபிகைகளிடம் உயர்ந்த குலப் பெண்களின் தர்மங்களைக் கூறினாய். இப்படி தர்மங்களை உரைத்த உனது சொற்களை எடுத்து நடக்க வேண்டுமே அல்லாது, குற்றமில்லாத உனது செயல்களை அல்ல.

3 ஆகர்ண்ய தே ப்ரதீபாம்
வாணீம் ஏணீ த்ருச: பரம் தீநா:
மா மா கருணா ஸிந்தோ பரித்யஜேத்
அதி சிரம் விலேபு: தா:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய இந்த முரணான அறிவுரைகளை கேட்ட மானின் விழிகள் போன்று அழகிய கண்கள் உடைய அந்த கோபிகைகள், கருணாமூர்த்தியே! எங்களை கைவிடாதே என்று கெஞ்சினர்.

4 தாஸாம் ருதிதை: லபிதை: கருணா

ஆகுலா மாநஸ: முராரே த்வம்
தாபி: ஸமம் ப்ரவ்ருத்த: யமுநா
புலிநேஷு காமம் அபிரந்தும்

**பொருள் -** குருவாயூரப்பா! முரன் என்னும் அசுரனை அழித்த முராரியே! இப்படியக அழுதும் புலம்பியும் நின்ற அவர்களைக் கண்டதும் உனது மனம் இரங்கியது. உடனே அவர்களுடன் யமுனையின் கரையில் உள்ள மணலில் விளையாடச் தொடங்கினாய். அல்லவா?

5 சந்த்ர கர ஸ்யந்த லஸத் ஸுந்தர
யமுநா தட அந்த வீதிஷு
கோபீ ஜந உத்தரீயை: ஆபாதித
ஸம்ஸ்தரே ந்யஷீத: த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது நிலவின் குளிர்ந்த ஒளியால் யமுனை ஆற்றின் கரை மிகவும் அழகாக இருந்தது. கோபிகைகள் தங்கள் மேலாடைகளை கீழே மணலில் விரித்து உனக்கு ஆசனம் போன்று அமைத்தனர். நீயும் அதில் அமர்ந்தாய் அல்லவா?

6 ஸுமதுர நர்ம ஆலபநை: கர
ஸங்க்ரஹணை: ச சும்பந உல்லாஸை:
காட ஆலிங்கந ஸங்கை: த்வம்
அங்கநா லோகம் ஆகுலீசக்ருஷே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அவர்களிடம் மிகவும் நளினமாகவும், நகைச்சுவையுடனும் பேசி மகிழ்ந்தாய். அவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டும், முத்தங்கள் இட்டுக் கொண்டும் கட்டித் தழுவிக் கொண்டும் இருந்தாய். இதன் மூலம் அவர்கள் மனதை உருக்கினாய்.

7 வாஸ: ஹரண திநே யத் வாஸ:
ஹரணம் ப்ரதிச்ருதம் தாஸாம்

தத் அபி விபோ ரஸ விவச: ஸ்வ
அந்தாநாம் காந்த ஸுப்ருவாம் அததா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! அழகிய புருவங்களை உடைய அந்தக் கோபிகைகளிடம் முன்பு ஒரு சமயம் அவர்கள் நீராடியபோது அவர்கள் ஆடையைக் கவர்ந்தபோது அவர்களுக்கு வாக்களித்தாய். அதனை நிறைவேற்றும் வண்ணமாக இப்போது அவர்கள் ஆடைகளை நீ களைந்தாய்.

8 கந்தலித கர்ம லேசம் குந்த ம்ருது
ஸ்மேர வக்த்ர பாதோஜம்
நந்த ஸுத த்வாம் த்ரி ஜகத் ஸுந்தரம்
உபகூஹ்ய நந்திதா பாலா:

**பொருள் -** நந்தகோபரின் மகனே! குருவாயூரப்பா! உனது உடலிலும் முகத்திலும் வேர்வைத் துளிகள் மொட்டுகளாக இருந்தன. முகமானது தாமரை போன்று அழகாக மலர்ந்து இருந்தது. நீ மூன்று உலகங்களிலும் உள்ளவர்களில் மிகவும் அழகனாகத் தோன்றினாய். இப்படிப்பட்ட உன்னை கோபிகைகள் இறுக்கமாகத் தழுவிக் கொண்டு பரமானந்தம் அடைந்தனர்.

9 விரஹேஷு அங்காரமய:
ச்ருங்காரமயி ச ஸங்கமே ஹி த்வம்
நிதராம் அங்காரமய: தத்ர புந:
ஸங்கமே அபி சித்ரம் இதம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ பிரிந்து உள்ள காலங்களில் மிகுந்த துன்பம் அளிக்கும் விரகத்தீ போன்றும், அருகில் உள்ளபோது ஆனந்தம் அளிப்பவனாகவும் உள்ளாய். இப்போது நீ கூடி இருந்தபோதும் காதல் தீயாக இருந்தாய் என்பது வியப்பே!

10 ராதா துங்க பயோதர ஸாது பரீரம்ப லோலுப ஆத்மாநம்
ஆராதயே பவந்தம் பவந புர அதீச சமய ஸகல கதாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ராதையின் பெரிய ஸ்தனங்களை தழுவிக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உடைய உன்னை நான் துதிக்கிறேன், என்னுடைய பிணிளை நீ தீர்க்க வேண்டும்.

***

1 ஸ்புரத் பர ஆநந்த ரஸ ஆதமகேந
த்வயா ஸமாஸாதித போக லீலா:
அஸீமம் ஆனந்த பரம் ப்ரபந்நா
மஹாந்தம் ஆபு: மதம் அம்புஜ அக்ஷய:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பரிபூர்ண ஆனந்தமயமாக உள்ள நீ அந்த கோபிகைகளுக்கு இன்பமான லீலைகளை அளித்தாய். இதனால் தாமரை போன்ற அழகிய மலர்ந்த கண்களை உடைய அவர்கள் மிகுந்த ஆனந்தம் அடைந்தனர். இதனால் அவர்கள் மனதில் ஓரளவு கர்வம் தோன்றியது அல்லவா?

2 நிலியதே அஸௌ மயி மயி அமாயம்
ரமா பதி: விச்வ மந: அபிராம:
இதி ஸ்ம ஸர்வா: கலித அபிமாநா:
நிரீக்ஷ்ய கோவிந்த திரோஹித: அபூ:

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தக் கோபிகைகள் தங்கள் மனதில் உலகில் சிறந்த அழகு உடையவனும், மஹாலக்ஷ்மியின் கணவனும் ஆகிய இவன் என் மீது அதிகம் அன்பு வைத்துள்ளான். என்ற ஒவ்வொருவரும் நினைத்தனர். இதனால் அவர்கள் கர்வம் மிகுந்தது. இதனை நீக்க எண்ணியவனாக நீ திடீரென மறைந்து விட்டாய்.

3 ராதா அபிதாம் தாவத் அஜாத கர்வாம்
அதிப்ரியாம் கோப வதூம் முராரே
பவாந் உபாதாய கத: விதூரம்
தயா ஸஹ ஸ்வைர விஹார காரீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முராரியே! அந்த நேரத்தில் ராதை என்னும் கோபிகை மட்டும் எந்த விதமான கர்வமும் இன்றி, உன் மீது உண்மையான அன்புடன்

இருந்தாள். (இதனை உணர்ந்த) நீ அவளை மட்டும் அழைத்துச் கொண்டு வெகுதூரம் சென்றாய். அங்கு அவளுடன் மட்டும் தனித்து விளையாடி மகிழ்ந்தாய் அல்லவா?

4 திரோஹிதே அத த்வயி ஜாத தாபா:
ஸமம் ஸமேதா: கமல ஆயுத அக்ஷ்ய:
வநே வநே த்வாம் பரிமார்கயந்த்ய:
விஷதாம் ஆபு: பகவந் அபாரம்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! நீ மறைந்து விட்டதும் தாமரை போன்ற கண்களை உடைய அந்தக் கோபிகைகள் துன்பம் அடைந்தனர். அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு உன்னைத் தேடத் தொடங்கினர். உன்னைக் காணாமல் கவலை அடைந்தனர்.

5 ஹா சூத ஹா சம்பக கர்ணிகார
ஹா மல்லிகே மாலதி பால வல்ய:
கிம் வீக்ஷித: நோ ஹ்ருதய ஏக சோர:
இதி ஆதி தா: த்வத் ப்ரவணா: விலேபு:

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் வரும் வழியில் தென்பட்ட ஒவ்வொன்றையும் கண்டு. மா மரமே! செண்பக மரமே! முருங்கை மரமே! மல்லிகைக் கொடியே! மாலதிக் கொடியே! தளிர் கொடியே! எங்கள் இதயத்தைக் கவர்ந்த கள்வன் எங்கு போனான்? நீங்கள் பார்த்தீர்களா? என்று கேட்டபடி உன்னை நினைத்து வருத்தம் உற்றனர்.

6 நிரீக்ஷித: அயம் ஸதி பங்கஜ அக்ஷ:
புர: மம இதி ஆகுலம் அலபந்தீ
த்வாம் பாவநா சக்ஷுஷி வீக்ஷ்ய காசித்
தாபம் ஸகீநாம் த்விகுணீ சகார

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த நேரத்தில் ஒரு கோபிகை மட்டும் உன்னைத் தன் ஞானக் கண்களில் கண்டாள். அவள் மற்றவர்களிடம், தோழிகளே! தாமரை போன்ற அழகிய கண்கள் உடையவனை நான் இப்போது கண்டேன் என்றாள். இதனைக் கேட்ட மற்றவர்களின் துன்பம் பல மடங்கு ஆகியது.

7 த்வத் ஆத்மிகா: தா யமுநா தட அந்தே
தவ அநுசக்ரு: கில சேஷ்டிதாநி
விசித்ய பூய அபி ததா ஏவ மாநாத்
த்வயா விமுக்தாம் தத்ருசு: ச ராதாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் தங்களை ஒப்படைத்தவர்களான அந்தக் கோபிகைகள் நீ இதுவரை செய்து வந்த லீலைகளை செய்து பார்த்து மகிழ்ந்தனர். பின்னர் மீண்டும் உன்னைத் தேடத் தொடங்கினர். அப்போது உன்னால் கர்வத்தின் காரணமாக கைவிடப்பட்ட ராதையைக் கண்டனர் அல்லவா?

8 தத: ஸமம் தா: விபிநே ஸமந்தாத்
தம: அவதார அவதி மார்க்யந்த்ய:
புந: விமிச்ரா யமுநா தட அந்தே
ப்ருசம் விலேபு: ச ஜகு: குணாந் தே

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் அனைவரும் ராதையுடன் சேர்ந்து கொண்டு நன்றாக இருட்டும் வரை அந்தக் காட்டில் உன்னைத் தேடினார்கள். மீண்டும் யமுனையில் கரையில் ஒன்று சேர்ந்தனர். உன்னைக் காணாமல் அழுதவர்களாக, உனது லீலைகளைப் புகழந்தவர்களாகப் பாடினர்.

9 ததா வ்யதா ஸங்குல மா நஸாநாம்
வ்ரஜ அங்கநாநாம் கருணா ஏக ஸிந்தோ
ஜகத் த்ரயீ மோஹந மோஹந ஆத்மா
த்வம் ப்ராதுராஸீ: அயி மந்த ஹாஸீ

**பொருள் -** குருவாயூரப்பா! கருணாமூர்த்தியே! இப்படியாக மிகுந்த துயரத்தில் மனம் வேதனையுற்று அவர்கள் இருந்தனர். அப்போது மூன்று உலகங்களையும் மயக்கும்படியான அற்புதமான அழகான நீ, அவர்கள் முன்பாக சிரித்தபடி நின்றாய் அல்லவா?

10 ஸந்திக்த ஸந்தர்சநம் ஆத்ம காந்தம்
த்வாம் வீக்ஷ்ய தந்வ்ய: ஸஹஸா ததாநீம்
கிம் கிம் நநசக்ரு: ப்ரமதா அதிபாராத்
ஸ: த்வம் கதாத் பாலய மாருத ஈச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அவர்கள் மீண்டும் உன்னைக் காண்போமா என்ற ஐயத்துடன் இருந்தனர். அப்படி அவர்கள் நினைத்திருக்கும்போது, நீ மீண்டும் தோன்றினாய். உன்னைக் கண்ட ஆனந்தத்தில் அவர்கள் விரைந்து என்ன என்ன செய்யவில்லை? இப்படிப்பட்ட நீ என்னை பிணிகளில் இருந்து காப்பாற்று.
***

1 தவ விலோகநாத் (க்ருஷ்ணா) கோபிகா ஜநா:
ப்ரமத ஸங்குலா: (க்ருஷ்ணா) பங்கஜ ஈக்ஷணா:
அம்ருத தாரயா (க்ருஷ்ணா) ஸம்ப்லுதா: இவ
ஸ்திமிததாம் தது: (க்ருஷ்ணா) தவத் புர: கதா:

**பொருள் -** (இந்த தசகத்தில் உள்ள அனைத்து ஸ்லோகங்களிலும் அடைப்புக்குறிக்குள் க்ருஷ்ணா என்ற பதம் உள்ளது. நாராயணபட்டத்ரி தமது மூலத்தில் இப்படி எழுதவில்லை. இருந்தாலும் பாகவதத்தை ஒட்டி இந்த முறையில் பாடம் செய்யப்படுகிறது). க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தாமரை போன்ற மலர்ந்த அழகான கண்களை உடையவனே! மீண்டும் உன்னைக் கண்ட கோபிகைகள் மிகவும் மகிழ்ந்தனர். ஆனந்தக் கண்ணீர் பெருக. அமிர்தத்தால் குளித்ததுபோல் பேரானந்தத்தில் மூழ்கினர். உனது முன்னால் என்ன செய்வது என்று அறியாது அப்படியே அசைவில்லாமல் நின்றனர் அல்லவா?

2 ததநு காசந(க்ருஷ்ணா) த்வத் கர அம்புஜம்
ஸபதி க்ருஹ்ணதீ (க்ருஷ்ணா) நிர்விசங்கிதம்
கந பயோதரே (க்ருஷ்ணா) ஸம்விதாய ஸா
புலக ஸம்வ்ருதா(க்ருஷ்ணா) தஸ்துஷீ சிரம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! சற்று நேரம் கழிந்தது. அப்போது ஒரு கோபிகை சிறிதும் தயக்கம் இல்லாமல் உனது தாமரை மலர் போன்று சிவந்த அழகிய கைகளை

பிடித்துக் கொண்டாள். அதனை மெல்ல எடுத்து தனது பெரிய ஸ்தனங்களின் மீது வைத்துக்கொண்டாள். உடல் எங்கும் சிலிர்க்கத் தன்னை மறந்து நின்றாள் அல்லவா?

3 தவ விபோ அபரா(க்ருஷ்ணா) கோமலம் புஜம்
நிஜ கல அந்தரே (க்ருஷ்ணா) பர்ய வேஷ்டயத்
கல ஸமுத்கதம் (க்ருஷ்ணா) ப்ராண மாருதம்
ப்ரதி நிருந்ததீவ (க்ருஷ்ணா) அதி ஹர்ஷுலா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் நிறைந்தவனே! மற்றொரு கோபிகை உனது மலர் போன்ற மென்மையான புஜங்களை எடுத்து தனது கழுத்தில் சுற்றிக் கொண்டாள். தன் கழுத்தில் இருந்து வெளியே கிளம்பும் மூச்சை நிறுத்த எண்ணினாள் போல இருந்தது.

4 அபகத த்ரபா(க்ருஷ்ணா) காபி காமிநீ
தவ முக அம்புஜாத் (க்ருஷ்ணா) பூக சர்விதம்
ப்ரதி க்ருஹய்ய தத் (க்ருஷ்ணா) வக்த்ர பங்கஜே
நிதததீ கதா(க்ருஷ்ணா) பூர்ண காமதாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மற்றொரு கோபிகை, உனது தாமரை மொட்டு போன்ற வாயில் நீ மென்று கொண்டிருந்த வெற்றிலையை எடுத்தாள். அதனை அப்படியே தனது வாயில் போட்டுக் கொண்டாள். தனது விருப்பம் அனைத்தும் நிறைவேறி விட்டதாக மகிழ்ந்தாள் அல்லவா?

5 விகருணோ வநே (க்ருஷ்ணா) ஸம்விஹாய மாம்
அபகத: அஸிகா(க்ருஷ்ணா) த்வாம் இஹ ஸ்ப்ருசேத்
இதி ஸரோஷயா(க்ருஷ்ணா) தாவத் ஏகயா
ஸஜல லோசநம்(க்ருஷ்ணா) வீக்ஷித: பவாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மற்றும் ஒரு கோபிகை உன்னிடம், எங்களை இந்தக் காட்டில் சிறிதும் இரக்கம் என்பதே இல்லாமல் தனியாகத் தவிக்க விட்டுப்

போனாயே! உன்னை யார் தொடுவார்கள்? என்று கண்ணீர் மல்க மிகுந்த கோபத்துடன் கூறினாள்.

6 இதி முதா ஆகுலை; (க்ருஷ்ணா) வல்லவீ ஜநை;
ஸமம் உபாகத:(க்ருஷ்ணா) யாமுநே தடே
ம்ருது குச அம்பரை: (க்ருஷ்ணா) கல்பித ஆஸநே
குஸ்ருண பாஸுரே (க்ருஷ்ணா) பர்ய சோபதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக பல கோபிகைகள் பலவிதமாக ஆனந்தம் அடைந்தனர். நீ அனைவருடனும் யமுனை நதியின் கரைக்கு வந்தாய். மென்மையான, குங்குமம், மஞ்சள் படிந்த தங்கள் மேல் ஆடைகளால் நீ அமர்வதற்கான இருக்கை ஒன்று செய்தனர். அந்த இருக்கையில் நீ அழகாக விளங்கினாய் அல்லவா?

7 கதி விதா க்ருபா (க்ருஷ்ணா) கே அபி ஸர்வத:
த்ருத தய: உதயா (க்ருஷ்ணா) கேசித் ஆச்ரிதே
கதிசித் ஈத்ருசா(க்ருஷ்ணா) மாத்ரு சேஷு அபி இதி
அபிஹித: பவாந் (க்ருஷ்ணா) வல்லவீ ஜநை:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அவர்கள் உன்னிடம், க்ருஷ்ணா! கருணை என்பது பலவிதமாக உள்ளதே! சிலர் தங்களை அண்டியவர்களிடம் மிகுந்த இரக்கம் கொண்டு கருணையுடன் உள்ளனர். வேறு சிலரோ, நாங்கள் உன்னிடம் சரணம் என்று புகுந்தது போல் புகுந்தாலும் உன்னைப் போன்று இரக்கம் காட்ட மறுக்கின்றனரே! என்று கூறினார்கள்.

8 அயி குமாரிகா (க்ருஷ்ணா) ந ஏவ சங்க்யதாம்
கடினதா மயி (க்ருஷ்ணா) ப்ரேம காதரே
மயி து சேதஸ: (க்ருஷ்ணா) வ: அநுவ்ருத்தயே
க்ருதம் இதம் மயா (க்ருஷ்ணா) இதி ஊசிவாந் பவாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அவர்களிடம் சமாதானமாக, அன்பான பெண்களே! என்னிடம் உங்கள் அன்பு குறைந்து விடுமோ என்று எண்ணி அஞ்சுபவன் நான், ஆகவே என்னுடைய மனம் கல்லானது. கடினமானது என்று எண்ண வேண்டாம். உங்களுக்கு என்னிடம் உள்ள அன்பும் பக்தியும் பல மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று எண்ணினேன் அதனால் மறைந்தேன் என்றாய்.

9 அயி நிசம்யதாம் (க்ருஷ்ணா) ஜீவ வல்லபா:
ப்ரியதம: ஜந: (க்ருஷ்ணா) ந ஈத்ருச: மம
தத் இஹ ரம்யதாம் (க்ருஷ்ணா) ரம்ய யாமிநீஷு
அநுபரோதம் இதி (க்ருஷ்ணா) ஆலப: விபோ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா நீ அவர்களிடம் எனது உயிரை விட எனக்குப் ப்ரியமானவர்களே! இந்த உலகில் உங்களை விட எனக்குப் பிடித்தமானவர்கள் யாரும் கிடையாது. எனவே இன்று இரவு முழுவதும் இங்கு நீங்கள் மகிழ்வுடன் என்னுடன் விளையாடி மகிழலாம் என்றாய்.

10, இதி கிரா அதிகம் (க்ருஷ்ணா) மோத மேதுரை:
வ்ரஜ வதூ ஜநை: (க்ருஷ்ணா) ஸாகம் ஆரமந்
கலித கௌதுக: (க்ருஷ்ணா) ராஸ கேலநே
குரு புரீபதே (க்ருஷ்ணா) பாஹி மாம் கதாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ இப்படிக் கூறியவுடன் அந்த வ்ரஜ பூமியின் பெண்கள் மிகவும் மகிழ்ந்தனர். அவர்களுடன் சேர்ந்து நீ இனிமையாக ராஸக்ரீடையில் மகிழ்ந்தாய். இப்படிப்பட்ட நீ என்னை பிணிகளில் இருந்து காக்க வேண்டும்.

***

1 கேச பாத த்ருத பிஞ்சிகா விததி
ஸஞ்சலந் மகர குண்டலம்
ஹார ஜால வநமாலிகா லலிதம்
அங்கராக கந ஸௌரபம்
பீத சேல த்ருத காஞ்சி காஞ்சிதம்
உதஞ்சத் அம்சுமணி நூபுரம்
ராஸ கேளி பரிபூஷிதம் தவ

ஹரி ரூபம் ஈச கலயாமஹே

**பொருள் -** ஈசனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அந்த ராஸக்ரீடை நிகழ்வுக்காக நன்கு அலங்கரித்துக் காணப்பட்டாய். உனது தலையில் இருந்த கொண்டையில் மயில் பீலிகள் அழகாக சொருகப்பட்டிருந்தன. காதுகளில் மகர குண்டலங்கள் அழகாக அசைந்தன. உனது திருமார்பில் பூசப்பட்டிருந்த சந்தனம் நறுமணம் வீசியது. உனது இடுப்பில் அழகான பட்டுப் பீதாம் பரமும், அதன் மேல் ஒட்டியாணமும் காணப்பட்டது. உன்னுடைய அழகிய கால்களில் இரத்தினக் கற்கள் பதித்த தண்டைகள் ஒளி வீசின. இப்படிப்பட்ட எழில் பொங்கும் உனது அழகை, உருவத்தை நான் த்யானம் செய்கிறேன்.

2 தாவத் ஏவ க்ருத மண்டநே கலித
கஞ்சுலீக குசமண்டலே
கண்ட லோல மணி குண்டலே யுவதி
மண்டலே அத பரிமண்டலே
அந்தரா ஸகல ஸுந்தரீ யுகளம்
இந்திரா ரமண ஸஞ்சரஞ்
மஞ்ஜுலாம் ததநு ராஸகேளிம அயி
கஞ்ஜ நாப ஸமுபாததா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மஹாலக்ஷ்மியின் நாயகனே! அந்த நேரத்தில் கோபிகைகள் தங்களை நன்றாக அலங்காரம் செய்து கொண்டனர். தங்கள் ஸ்தனங்களில் ரவிக்கை அணிந்தும், காதுகளில் அணிந்த குண்டலங்கள் கன்னங்களில் வந்து ஆடும்படியாகவும் இருந்தனர். உன்னைச் சுற்றி அவர்கள் நின்றனர். அப்போது இரு கோபிகைகள் நடுவில் ஒரு க்ருஷ்ணன் என்று பலவாக நீ உருவெடுத்தாய். இப்படியாக நீ ராஸக்ரீடை என்னும் அந்த நாட்டியத்தைத் தொடங்கினாய்.

3 வாஸுதேவ தவ பாஸமாநம் இஹ
ராஸகேளி ரஸ ஸௌரபம்
தூரத: அபி கலு நாரத ஆகதிதம்
ஆகல்ய்ய குதுக ஆகுலா
வேஷ பூஷண விலாஸ பேசல
விலாஸிநீ சத ஸமாவ்ருதா
நாகத: யுகபத் ஆகதா வியதி வேகத:

அத ஸுர மண்டலீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வாஸுதேவா! இதனைக் கண்ட நாரதர், க்ருஷ்ணனின் ராஸக்ரீடையால் யமுனையின் கரை ப்ரகாசமாக உள்ளது என்றார். நாரதர் இப்படிக் கூறியதைக் கேட்டதேவர்கள் மகிழ்ந்தனர். அவர்கள் அனைவரும் பலவிதமான ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு, தங்கள் தேவலோகப் பெண்களுடன் ஆகாய மார்க்கமாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

4 வேணு நாத க்ருத தாந தாந கல
காந ராக கதி யோஜநா
லோபநீய ம்ருது பாத பாது க்ருது
தால மேளந மநோஹரம்
பாணி ஸங்க்வணித கங்கணம் ச முஹு
அம்ஸ லம்பித கர அம்புஜம்
ச்ரோணி பிம்ப சலத் அம்பரம் பஜத
ரதஸ கேளி ரஸ டம்பரம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இனிமையான புல்லாங்குழலின் ஒலியுடன் இணைந்தால் பாட்டின் ராகங்கள் இனிமையாக இருந்தன. அழகான மென்மையான பாதங்கள் அனைத்தும் ஒன்றாக வைத்து ஆடுவதால் தாளம் இனிமையாக இருந்தது. பெண்கள் கைகளில் அணிந்திருந்த வளையல் ஒலிகள் சுகமாக இசைத்தன. தாமரை போன்ற கைகளை அடிக்கடி தோளில் வைப்பதும் இறக்குவதுமாக நாட்டியம் காணப்பட்டது. இடுப்பில் உள்ள ஆடைகள் தானாகவே அழகாக அசைந்தன. இப்படி காண்பதற்கு இன்பம் விளைவிக்கும் ராஸக்ரீடையை நீங்கள் த்யானம் செய்து மகிழுங்கள். (என்று பட்டத்ரி நம்மிடம் கூறுகிறார்.)

5 ச்ரத்தயா விரசிதா நுகாந க்ருத
தார தார மதுர ஸ்வரே
நர்த்தநே அத லலித அங்கஹார லுலித
அங்கஹார மணி பூஷணே
ஸம்மதேந க்ருத புஷ்ப வர்ஷம் அலம்
உந்மிஷத் திவிஷதாம் குலம்
சிந்மயே த்வயி நிலீயமாநம் இவ
ஸம்முமோஹ ஸவதூகுலம்

**பொருள் -** க்ருஷ்ணா குருவாயூரப்பா! அந்த நாட்டியத்திற்கு ஏற்ப பின்பாட்டு மிகவும் இனிமையாகப் பாடப்பட்டது. இதனால் இனிமையான ஸ்வரங்கள் ஒலித்தன. நடனம் ஆடும்போது உண்டாகும் அசைவினால் முத்து மாலைகள், ரத்ன ஆபரணங்கள் அசைந்தன. இதனைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்த தேவர்கள் தங்கள் மனைவிமார்களுடன் இணைந்து அந்த இடத்தின் மீது மலர்களைத் தூவினர். அவர்கள் கூட்டம் முழுவதும் உன் மீது அப்படியே ஒன்றி விட்டது.

6 ஸ்விந்ந ஸந்ந தநு வல்லரீ ததநு
காபி நாம பசுப அங்கநா
காந்தம் அம்ஸம் அவலம்பதே ஸ்ம
ப்ருச தாந்தி பார முகுல ஈக்ஷணா
காசித் ஆசலித குந்தலா நவ
படீர ஸார நவ ஸௌரபம்
வஞ்சநேந தவ ஸஞ்சுசும்ப புஜம்
அஞ்சித உரு புலக அங்குரம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த நேரம் ஒரு கோபிகை மிகவும் வியர்த்துக் களைப்படைந்தாள். அதனால் தனது அழகிய கண்களை மூடிக்கொண்டு, தனது கொடி போன்ற உடலுடன் உனது இனிய திருமேனி மீது சாய்ந்தாள். மேலும் ஒரு பெண் தனது கூந்தல் முழுவதும் அவிந்தவளாக, சந்தனம் மணம் வீசும் உனது கைகளை எடுத்து, அதனை முகர்ந்தாள். அதனால் மேலும் ஆனந்தம் அடைந்து அந்தக் கைகளை நன்றாக முத்தம் இட்டாள்.

7 காபி கண்ட புவி ஸந்நிதாய நிஜ
கண்டம் ஆகுலித குண்டலம்
புண்ய பூர நிதி: அந்வ வாய தவ
பூக: சர்வித ரஸாம்ருதம்
இந்திரா விஹ்ருதி மந்திரம் புவந
ஸுந்தரம் ஹி நடந அந்தரே
த்வாம் அவாப்ய தது: அங்கநா கிமு
ந ஸம்மத உந்மத தசாந்தரம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தக் கோபிகைகளில் ஒருத்தி, குண்டலங்கள் அசைகின்ற உனது அழகிய கன்னத்தின் மீது தனது கன்னத்தைப் பதிய வைத்துக்கொண்டாள். எத்தகைய புண்ணியம் செய்தவள் அவள்! மேலும் அவள், நீ வாயில் மென்று கொண்டிருந்த வெற்றிலைச் சாற்றை அமிர்தம் என்று பருகினாள் அல்லவா? மஹாலக்ஷ்மி விளையாடும் இடமாகவும், மூன்று உலகங்களிலும் மிகவும் அழகானதும் ஆகிய உனது திருமேனியில் சாய்ந்து, அதன் மூலம் அந்த கோபிகைகள் அடைந்த பேரானந்தம் என்னே! அவர்கள் இதன் மூலம் எந்த இன்பத்தை அனுபவிக்கவில்லை?

8 காநம் ஈச விரதம் க்ரமேண கில
வாத்ய மேளநம் உபாரதம்
ப்ரஹ்ம ஸம்மத ரஸ ஆகுலா:
ஸதஸி கேவலம் நந்ருது: அங்கநா:
ந அவிதந் அபி ச நீவிகாம் கிமபி
குந்தலீம் அபி ச கஞ்சுலீம்
ஜ்யோதிஷாம் அபி கதம்பகம்
திவி விலம்பிதம் கிம் அபரம் ப்ருவே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஈசனே! இனிமையான பாட்டுக்கள், வாத்திய ஒலிகள் ஆகியவை படிப்படியாகக் குறைந்து ஓய்ந்தன. அப்போது அந்தப் பெண்கள் மிகுந்த பரவச நிலையில், பேரானந்தநிலையில் இருந்தனர். அத்துடன் ஆடிக்கொண்டிருந்தனர். அந்த நிலையில் தங்கள் கூந்தல், ரவிக்கை, உடை முதலானவை அவிழ்ந்து விழுந்ததைக் கூட உணரவில்லை. இப்படி ஓர் அற்புதமான நிலையைக் கண்டு வானில் உள்ள நட்சத்திரங்கள் அப்படியே திகைத்து நின்று விட்டதாகத் தோன்றியது. நான் வேறு எப்படி வர்ணிப்பது?

9 மோத ஸீமநி புவநம் விலாப்ய
விஹ்ருதிம் ஸமாப்ய ச தத: விபோ
கேளி ஸம்ம்ருதித நிர்மல அங்க
நவ கர்ம லேச ஸுபக ஆத்மநாம்
மந்மத அஸஹந சேதஸாம் பசுப
யோஷிதாம் ஸுக்ருத சோதித:
தாவத் ஆகலித மூர்த்தி

மார வீர பரம உத்ஸவாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! இந்த ராஸக்ரீடை மூலமாக உலகம் முழுவதும் பேரானந்தத்தில் மூழ்கும்படிச்செய்து விட்டு இந்த விளையாட்டை முடித்தாய். அந்தப் பெண்களின் மாசற்ற உடலில் உள்ள அவயங்கள் எங்கும் வியர்வை முத்து முத்தாக இருந்தது. இதனால் அவர்கள் மேலும் அழகாக விளங்கினார்கள். அவர்களால் மேலும் காதலைப் பொறுக்க முடியாமல் உனது மனதைக் கவர்ந்தனர். அவர்களின் தூய்மையான மனதாலும், புண்ணியத்தாலும், எத்தனை கோபிகைகள் இருந்தனரோ, அத்தனை க்ருஷ்ணனாக நீ பல உருவம் எடுத்தாய். அப்படி எடுத்து அந்த மன்மத நிகழ்வை நடத்தினாய் அல்லவா?

10 கேளி பேத பரிலோலிதாபி:
அதிலாலிதாபி: அபலா ஆலிபி:
ஸ்வைரம் ஈச நநு ஸூரஜா பயஸி
சாரு நாம விஹ்ருதிம் வ்யதா:
காநநே அபி ச விஸாரி சீதள
கிசோர மாருத மநோஹரே
ஸூர ஸௌரபமயே விலேஸித
விலாஸிநீ சத விமோஹதம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் நீ அவர்களுடன் பலவிதமான இன்ப லீலைகளில் ஈடுபட்டாய். இதனால் அவர்கள் மிகவும் சோர்ந்தனர். அதன் பின்னர் அவர்களுடன் இணைந்து நீ யமுனை நதியில் ஜலக்ரீடை செய்தாய். அல்லவா? அந்த நேரம் குளிர்ந்த காற்று இதமாக வீசியது. அந்தக் காற்றில் மலர்களின் நறுமணம் இதமாகப் பரவியது. இதனால் அந்த நதிக்கரை மிகவும் அழகுடன் விளங்கியது. இந்த நிலையில் நீ அந்தப் பெண்களை மேலும் மயக்கும்படி செய்தாயாமே!

11 காமிநீ: இதி ஹி யாமிநீஷு
கலு காமநீயக நிதே பவாந்
பூர்ண ஸம்மத ரஸ அர்ணவம் கம்
அபி யோகி கம்யம் அநுபாவயந்
ப்ரஹ்ம சங்கர முகாந் அபி இஹ
பசுப அங்கநாஸு பஹுமாநயந்

பக்த லோக கமநீய ரூப கமநீய
க்ருஷ்ண பரிபாஹி மாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பகவானே! அழகானவனே! யோகிகளால் மட்டுமே அடையக்கூடிய பரமானந்த நிலையை நீ இப்படியாக அந்தக் கோபிகைகளுக்குக் கொடுத்து, அவர்களை மகிழ்ச்சி என்னும் கடலில் மூழ்கச் செய்தாய். இதனால்தானே அந்தக் கோபிகைகளை சிவனும் ப்ரும்மாவும் போற்றுகின்றனர். உன்னுடைய ஆத்மார்த்தமான பக்தர்களால் மட்டுமே இப்படி உன்னை அனுபவிக்க இயலும். அப்படிப்பட்ட க்ருஷ்ணா! பகவானே! என்று பிணிகளை நீக்கி என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 இதி த்வயி ரஸ ஆகுலம் ரமித வல்லபே வல்லவா:
கதா அபி புரம் அம்பிகா கமிது: அம்பிகா காநநே
ஸமேத்ய பவதா ஸமம் நிசி நிவேஷ்ய திவ்ய உத்ஸவம்
ஸுகம் ஸுஷுபு அக்ரஸீத் வ்ரஜபம் உக்ர நாக: ததா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக நீ ராஸக்ரீடை மூலம் கோபிகைகளுக்குப் பரமானந்தத்தை அளித்தாய். ஒரு நாள் அம்பிகா என்ற வனத்தில் இருந்த சிவன் கோயிலுக்கு ஆயர்கள் அனைவரும் சென்றனர். அங்கு நடந்த உத்சவத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அங்கு அன்று இரவு தங்கினர். அப்போது ஒரு பெரிய மலைப்பாம்பு நந்தகோபரை விழுங்கியது அல்லவா?

2 ஸமுந்முகம் அத உல்முகை: அபிஹதே அபி தஸ்மிந் பலாத்
அமுஞ்சதி பவத் பதே ந்யபதி பாஹி பாஹி இதி தை:
ததா கலு பதா பவாந் ஸமுகபகம்ய பஸ்பர்ச தம்
பபௌ ஸ ச நிஜாம் தநும் ஸமுபஸாத்ய வைத்யா தரீம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இதனைக் கண்ட ஆயர்கள் கொள்ளிக் கட்டைகள் கொண்டு அந்தப் பாம்பை அடித்தனர். ஆயினும் அது நந்தகோபரை விடவில்லை. உடனே அவர்கள் உனது கால்களில் விழுந்து, காப்பாற்று காப்பாற்று என்று கூறினர். நீ விரைவாக வந்து அந்தப் பாம்பின் உடலை உனது அழகான கால்களால் தொட்டாய்

அல்லவா? உடனே அந்தப் பாம்பு தனது சாபம் நீங்கப் பெற்று தனது முந்தைய வித்யாதர உருவத்தை மீண்டும் பெற்றதாமே!

3 ஸுதர்சந தர ப்ரபோ நனு ஸுதர்சந
ஆக்ய: அஸ்மி அஹம்
முநீந் க்வசித் உபாஹஸம் த
இஹ மாம் வ்யது: வாஹஸம்
பவத் பத ஸமர்பணாத் அமலதாம்
கத: அஸ்மி இதி அஸௌ
ஸ்துவந் நிஜ பதம் யயௌ
வ்ரஜ பதம் ச கோபா: முதா

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த வித்யாதரன் உன்னிடம், க்ருஷ்ணா! சுதர்சன சக்கரத்தைக் கைகளில் உள்ளவனே! ப்ரபுவோ! எனது பெயர் சுதர்சனன் என்பது ஒரு முறை நான் சில முனிவர்களைப் பார்த்துக் கேலி செய்தேன். அவர்கள் என்னை மலைப்பாம்பாக மாறும்படி சபித்தனர். ஆனால் இன்று உனது தூய்மையான பாதம் பட்டதால் எனது சாபம் நீங்கி தூய்மையாக ஆனேன். என்றான். பின்னர் தனது இடத்திற்குச் சென்றான். ஆயர்களும் வ்ரஜ பூமிக்குத் திரும்பினர்.

4கதா அபி கலு ஸீரிணா விஹரதி த்வயி ஸ்த்ரீ ஜநை:
ஜஹார தநத அநுக: ஸ கில சங்கசூட: அபலா:
அதித்ருதம் அநுத்ருத: தம் அத முக்த நாரீ ஜநம்
ருரோஜித சிரோமணிம் ஹல ப்ருதே ச தஸ்ய அதத:

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு நாள் நீ பலராமனோடும் ஆயர் பெண்களுடனும் விளையாடிக் கொண்டிருந்தாய். அப்போது, குபேரனின் வேலையாட்களில் ஒருவனான சங்கசூடன் என்பவன் அந்தப் பெண்களைத் தூக்கிச் சென்றான். நீ உடனே அவனைத் தூரத்திச் சென்று, அவனைக் கொன்றாய். அவன் தலையில் இருந்து உயர்ந்த ரத்தினக் கல்லை பலராமனுக்குப் பரிசாக அளித்தாய் அல்லவா?

5 திநேஷு ச ஸுஹ்ருத் ஜநை: ஸஹ வநேஷு லீலா பரம்

மநோபவ மநோஹரம் ரஸித வேணு நாத அம்ருதம்
பவந்தம் அமரீ த்ருசாம் அம்ருத பாரணா தாயிநம்
விசிந்த்ய கிமு ந ஆலபந் விரஹ தாபிதா: கோபிகா:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ பகல் நேரம் முழுவதும் உனது நண்பர்களுடன் காட்டில் விளையாடி மகிழ்ந்தாய். மன்மதனைப் போல் அனைவரையும் உனது அழகால் ஈர்த்தாய். இனிமையான புல்லாங்குழல் ஓசையை எழுப்பினாய். உன்னைக் கண்ட பெண்கள் அமிர்தம் பருகியதாகவே உணர்ந்தனர். அந்தப் பெண்கள் உனது பிரிவைத் தாங்க முடியாமல் விரகதாபத்தில் துடித்தனர். உன்னை நினைத்து எதைத்தான் அவர்கள் கூறவில்லை?

6 போஜ ராஜ ப்ருதக: து அத கச்சித்
கஷ்ட துஷ்ட பத த்ருஷ்டி அரிஷ்ட:
நிஷ்டுர ஆக்ருதி: அபஷ்டு நிநாத:
திஷ்டதே ஸ்ம பவதே வ்ருஷரூபி

**பொருள் -** குருவாயூரப்பா! போஜ அரசனான கம்சனின் பணியாட்களில் ஒருவன் அரிஷ்டன் என்பவன் ஆவான். அவன் மிகவும் கொடியவன் ஆவான். ஒரு முறை அவன் காளை மாடு போன்ற பயங்கரமான உருவம் கொண்டு, பலமாகக் கத்திக் கொண்டு. உன் எதிரில் வந்து நின்றானாமே!

7 சாக்வர: அத ஜகதீ த்ருதி ஹாரீ
மூர்த்திம் ஏவ: ப்ருஹதீம் ப்ரததாந:
பங்க்திம் ஆசு பரிகூர்ண்ய பசூநாம்
சந்தஸாம் நிதிம் அவாப பவந்தம்

**பொருள் -** குருவாயூரப்பா! காளை உருவமாக வந்த அவன் மக்களின் தைரியத்தை அபகரித்தான். தனது உருவத்தைப் பெரிதாக வளர்த்தான். இதன் மூலம் பசுக்கள் அனைத்தையும் விரட்டினான். அதன் பின்னர் வேதமயமான உன்னை நோக்கி விரைவாக ஓடி வந்தானாமே!

8 துங்க ச்ருங்க முகம் ஆசு அபியந்தம்
ஸங்க்ருஹ்ய ரபஸாத் அபியம் தம்
பத்ரரூபம் அபி தைத்யம் அபத்ரம்
மர்தயந் அமதய: ஸுர லோகம்

**பொருள் -** குவாயூரப்பா! அவனது முகத்தில் நீளமான கொம்புகள் இருந்தன. அவன் எந்த அச்சமும் இல்லாமல் உன்னை நோக்கி ஓடி வந்தான். நல்ல காளை உருவம் கொண்டிருந்த போதிலும் உள்ளத்தில் தீய எண்ணம் கொண்ட அந்த அசுரனை நீ விரைந்து பிடித்துக் கொன்றாய். இதனைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர்.

9 சித்ரம் அத பகவந் வ்ருஷ காதாத்
ஸுஸ்திரா அஜநி வ்ருஷ ஸ்திதி: உர்வ்யாம்
வர்ததே ச வ்ருஷ சேதஸி பூயாந்
மேத இதி அபிநுத: அஸி ஸுரை: த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தேவர்கள் உன்னை நோக்கி, பகவானே! நீ இன்று காளை வடிவம் கொண்டு இந்த அசுரனை அழித்தாய். இதனால் இந்த உலகில் தர்மம் வேர் ஊன்றியது. இதனால் தேவேந்தின் மிகுந்த மன மகிழ்ச்சி அடைந்தான், என்று துதித்தனர் அல்லவா? (இங்கு வ்ருஷ என்பது காளை, தர்மம், இந்திரன் என்று மூன்று பொருள்களில் உள்ளது).

10 ஔக்ஷகாணி பரிதாவத தூரம்
வீக்ஷ்யதாம் அயம் இஹ உக்ஷ விபேதீ
இத்தம் ஆத்த ஹஸிதை: ஸஹ கோபை:
கோஹக: த்வம் அவ வாத புர ஈச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஈசனே! இதனைக் கண்ட ஆயர்கள், காளை மாடுகளே! இங்கு உங்களைக் கொல்பவன் உள்ளான். ஆகவே தூரமாக ஓடி விடுங்கள் என்று கிண்டலாகக் கூறினார்கள் அல்லவா? பின்னர் நீ அவர்களுடன் வீட்டிற்குச் சென்றாய். குருவாயூரில் உள்ள ஈசனே! என்னைக் காப்பாற்று வாயாக!
***

1 யத்நேஷு ஸர்வேஷு அபி ந அவகேசீ
கேசீ ஸ: போஜ ஈசி து: இஷ்ட பந்து:
த்வம் ஸிந்து ஜா அவாப்ய: இதி இவ மத்வா
ஸம்ப்ராப்தவாந் ஸிந்துஜ வாஜி ரூப:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! போஜ அரசனான கம்சனின் நண்பனாக உள்ளவனும், எடுத்த காரியங்களை இடையூறு எதுவும் இன்றி முடிப்பவனும் ஆகிய கேசி என்பவன் உன்னைப் பற்றி என்ன நினைத்தான்? நீ ஸிந்துவில் (ஸிந்து = கடல்) பிறந்தவளால் (ஸிந்துவில் பிறந்தவள் = கடலில் பிறந்தவள் = மஹாலக்ஷ்மி) எளிதில் அடையக்கூடியவன் என்று நினைத்தான். ஆகவே அவன் ஸிந்துஜ வடிவில் (ஸிந்துஜ = ஸிந்து நாட்டில் தோன்றிய குதிரை) உன்னை அழிக்க வந்தானாமே!

2 கந்தர்வதாம் ஏஷ: கத: அபிரூஷை:
நாதை: ஸமுத்வேஜித ஸர்வ லோக:
பவந் விலோக அவதி கோப வாடீம்
ப்ரமர்த்ய பாப: புந: ஆபதத் த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! மிகுந்த பாவியாகிய கேசி உயர்ந்த குதிரை வடிவம் கொண்டான். (குதிரை என்பதற்கு கந்தர்வன் என்ற பொருள் உண்டு). அப்படி இருந்தாலும் (கந்தவர்களுக்கு உரிய குணங்கள் எதுவும் இன்றி) தனது அச்சம் விளைவிக்கும் ஓசைகளால் அவன் மக்களை பயம் கொள்ளச் செய்தான். உன்னை அவன் காணும்வரை கோகுலத்தில் உள்ள மக்களைத் துன்புறுத்தினான் அல்லவா?

3 தார்க்ஷ்ய அர்ப்பித அங்க்ரே: தவ தார்க்ஷ்ய ஏஷ
சிசேஷப வக்ஷ: புவி நாம பாதம்
ப்ருகோ: பத ஆகாத கதாம் நிசம்ய
ஸ்வநே அபி சக்யம் தத் இதி இவ மோஹாத்

**பொருள் -** குருவாயூரப்பா! குதிரை வடிவம் கொண்ட இந்த அசுரன் (தார்க்ஷ்யந்), உன்னைப் ப்ருகு முனிவர் தனது கால்களால் உதைத்ததை எண்ணி, தானும் அதே போல்

உதைக்க இயலும் என்று சிந்தித்தான். பின்னர் கருடனின் (தார்க்ஷ்ய) மார்பின் மீது பாதங்கள் பதித்த உன்னை உனது மார்பில் தனது கால்களால் உதைத்தானாமே!

4 ப்ரவஞ்சயந் அஸ்ய குர அஞ்சலம் த்ராக்
அமும் ச விக்ஷேபித தூர தூரம்
ஸ: மூர்ச்சித: அபி ஹி அதி மூர்ச்சிதேந
க்ரோத ஊஷ்மணா காதிதும் ஆத்ருத: த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அவன் உன்னை உதைத்தபோது நீ அவனது குளம்புகள் உன்மீது படாதபடி சாமர்த்தியமாக விலகினாய். அதே நேரம் அவனை உனது கால்களால் உதைத்து அவன் வெகு தூரம் சென்று விழுமாறு செய்தாய். அவன் தூரத்தில் விழுந்து மயக்கம் உற்றான். இருந்தாலும் எழுந்த அவன் மிகுந்த கோபத்துடன் உன்னை விழுங்க வேகமாக ஓடி வந்தானாமே!

5 த்வம் வாஹ தண்டே க்ருத தீ: ச பாஹ
தண்டம் ந்யதா: தஸ்ய முகே ததாநீம்
தத் வ்ருத்தி ருத்த ச்வஸந: கத அஸ:
ஸப்தோபவந் அபி அயம் ஐக்யம் ஆகாத்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அந்தக் குதிரையைத் தண்டிப்பதில் (பாஹ தண்டே) மிகுந்த உறுதி கொண்டாய். ஆகையால் அவனது வாயில் தடி போன்று உனது கையை (பாஹ தண்டம்) நுழைத்தாய் அல்லவா? இதனால் அவனது சுவாசம் தடைப்பட்டது. அவன் மூச்சுத்திணறி, குதிரையாக இருந்தபோதிலும் உன்னுடன் ஐக்கியமாகி மோட்சம் பெற்றான்.

6 ஆலம்ப மாத்ரேண பசோ: ஸுராணாம்
ப்ரஸாதகே நூத் ந இவ அச்வ மேதே
க்ருதே த்வயா ஹர்ஷ வசாத் ஸுர இந்த்ரா:
த்வாம் துஷ்டுவு: கேசவ நாமதேயம்

**பொருள் -** குருவாயூரப்பா! மந்திரங்கள் அல்லது பகவதை போன்றவை கொண்டு இயற்றும் யாகங்களே தேவர்களுக்கு மகிழ்வு அளிக்கும். ஆனால் நீயோ இது எதுவும் இல்லாமலே குதிரையை அழித்து அச்வமேத யாகம் இயற்றினாய். இதனைக் கண்டு மகிழ்ந்த தேவர்கள். உனக்கு (கேசி என்பவனை அழித்தவன் என்று பொருள் வருமாறு) கேசவன் என்று பெயர் வைத்தனர்.

7 கம்ஸாய தே சௌரி ஸுத: த்வம் உக்த்வா
தம் தத் வத உத்கம் ப்ரதிருத்ய வாசா
ப்ராப்தேந கேசி க்ஷபண அவஸாநே
ஸ்ரீநாரதேந த்வம் அபிஷ்டுத: அபூ:

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது நாரத முனிவர் கம்சனிடம் சென்று நீ வசுதேவரின் மகன் என்று கூறினார். உடனே அவனும் கோபம் கொண்டு வசுதேவரைக் கொல்லத் தயாராகப் புறப்பட்டான். ஆயினும் நாரதர் அவனை நல்வார்த்தை கூறித் தடுத்தார். அந்த நேரம் கேசி வதம் முடிந்தது. நாரதரும் உன்னை வந்து துதித்தார் அல்லவா?

8 கதாபி கோபை: ஸஹ காநந அந்தே
நிலாய க்ரீடந லோலுபம் த்வாம்
மய ஆத்மஜ: ப்ராப துரந்த மாய:
வ்யோம அபித: வ்யோம சர உபரோதீ

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு முறை நீ ஆயர் சிறுவர்களுடன் காட்டில் ஒளிந்து விளையாடும் விளையாட்டை அனுபவித்துக் கொண்டிருந்தாய். அப்போது தேவர்களைத் துன்புறுத்துவதில் வல்லவனும், மயன் என்ற அசுரனின் மகனும் ஆகிய வ்யோமன் என்ற அசுரன் அங்கு வந்தான் அல்லவா?

9 ஸ சோர பாலாயித வல்லவேஷு
சோராயித: கோப சிசூந் பசூந் ச
குஹாஸு க்ருத்வா பிததே சிலாபி:
த்வயா ச புத்வா பரிமர்தித: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த ஆயர் சிறுவர்கள் திருடர்களாக ஒரு பிரிவும், காவலர்களாக ஒரு பிரிவும் ஆகப் பிரிந்து விளையாடினர். அவர்களில் திருடர் பிரிவில் ஒருவனாக, தந்திரமான முறையில், அந்த அசுரன் நுழைந்தான். அப்போது மிகவும் வஞ்சகமாக ஆயர் சிறுவர்களையும், பசுக்களையும் ஒரு பெரிய குகையில் அடைத்து, அதன் வாயிலை ஒரு பெரிய கல்லைக் கொண்டு மூடியும் விட்டான் அல்லவா? இதனை அறிந்த நீ உடன் அங்கு சென்று அவனைக் கொன்றாயாமே!

10 ஏவம் விதை: ச அத்புத கேளி பேதை:
ஆநந்த மூர்ச்சாம் அதுலாம் வ்ரஜஸ்ய
பதே பதே நூதநயந் அஸீமாம்
பர ஆத்ம ரூபிந் பவந ஈச பாயா:

**பொருள் -** பரமாத்ம ஸ்வரூபமே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக உனது பலவிதமான அற்புத விளையாட்டுக்கள் மூலம் வ்ரஜ பூமியில் இருந்த ஆயர்களுக்கு மிகுந்த ஆனந்தத்தை அளித்தாய். மேலும் எல்லையில்லாத பல லீலைகளாலும், புதிது புதிதான லீலைகளாலும் அவர்களை நீ மயக்கினாய். இப்படிப்பட்ட நீ என்னைக் காக்க வேண்டும்.

***

1 கம்ஸ: அதி நரா கிரா வ்ரஜ வாஸிநம் த்வாம்
ஆகர்ண்ய தீர்ண ஹ்ருதய ஸ ஹி காந்திநேயம்
ஆஹுய கார்முக மக சலத: பவந்தம்
ஆநேதும் ஏநம் அஹிநோத் அஹிநாத சாயிந்

**பொருள் -** ஆதிசேஷன் மீது சயனித்தவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ வ்ரஜ பூமியில் உள்ளதாக நாரதர் கம்ஸனிடம் கூறினார். இதனைக் கேட்ட கம்ஸன் மனம் கலங்கினான். அச்சம் கொண்டான். உடனே அவன், காந்தினி என்பவரின் மகனான அக்ரூரன் என்பவனை அழைத்தான். தனுர்யாகம் என்ற பெயரில் தனது அரண்மனைக்கு அழைத்துவர அவனை உன்னிடம் அனுப்பினான்.

2 அக்ரூர: ஏஷ பவத் அங்க்ரி பர: சிராய
த்வத் தர்சந அக்ஷம மநா: க்ஷிதி பால பீத்யா

தஸ்ய ஆஜ்ஞயா ஏவ புந: ஈக்ஷிதும் உதயத: த்வாம்
ஆநந்த பாரம் அதிபூரிதரம் பபார

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த அக்ரூரர் உன்னைக் கண்டு உன் தரிசனம் பெற வேண்டும் என்று பல நாட்களாக எண்ணம் கொண்டிருந்தார். ஆயினும் கம்ஸனிடம் இருந்த பயத்தால் அவர் உன்னைக் காண வரத் துணியவில்லை. இப்போது கம்ஸானே வ்ரஜ பூமிக்குச் செல்லும்படி கட்டளை இட்டான். இதனால் உன்னைக் காணும் வாய்ப்பு தானாகவே கிட்டியதை எண்ணி அக்ரூரரின் மனம் பெரும் ஆனந்தம் அடைந்தது.

3 ஸோயம் ரதேந ஸுக்ருதோ பவத: நிவாஸம்
கச்சந் மநோரத கணாம் த்வயி தார்ய மாணாந்
ஆஸ்வாதயந் முஹு: அபாய பயேந தைவம்
ஸம்ப்ரார்த்தயந் பதி ந கிஞ்சித் அபி வ்யஜாநாத்

**பொருள் -** குருவாயூரப்பா! மிகுந்த புண்ணியம் செய்திருந்த அந்த அக்ரூரர் தனது தேரில் ஏறி நீ வாசம் செய்யும் இடமான வ்ரஜ பூமிக்கு விரைந்தார். அவர் உன்னிடம் அனுபவிக்க வேண்டும் என்று மனதில் வைத்திருந்த தனது விருப்பங்களை வழி முழுவதும் எண்ணிக் களித்தார். அந்த விருப்பங்கள் நிறைவேறாது போய்விடுமோ என்று பயந்து தெய்வத்தை வேண்டிக் கொண்டார். இதனால் தனது பாதையில் இருந்த எதையுமே அவர் உணரவில்லை.

4 த்ரக்ஷ்யாமி வேத சத கீத கதிம் புமாம்ஸம்
ஸ்ப்ரக்ஷ்யாமி கிம் ஸ்வித் அபி நாம பரிஷ்வஜேயம்
கிம் வக்ஷ்யதே ஸ: கலு மாம் க்வநு வீக்ஷித: ஸ்யாத்
இத்தம் நிநாய ஸ பவத் மயம் ஏவ மார்க்கம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வேதங்கள் நூற்றுக்கணக்கான ஸ்லோகங்கள் மூலம் அவனைப் புகழ்கின்றன. அவை கூறும் வழிகள் மூலம் அடைய வேண்டிய அவனை நான் பார்க்க இயலுமா? தொட இயலுமா? அணைத்துக் கொள்ள முடியுமா? என்னிடம் அவன் பேசுவானா? அவன் எங்கு இருப்பான்? என்று தனது மனதில் அக்ரூர் சிந்தித்தார். அந்த வழி முழுவதும் நீ உள்ளதாகவே எண்ணி வந்தாராமே!

5 பூய: க்ரமாத் அபிவிசந் பவத் அங்க்ரி பூதம்
ப்ருந்தாவநம் ஹர விரிஞ்ச ஸுர அபிவந்த்யம்
ஆநந்த மக்ந இவ லக்ந இவ ப்ரமோஹே
கிம் கிம் தசாந்தரம் அவாப ந பங்கஜ அக்ஷ

**பொருள் -** குருவாயூரப்பா! தாமரை போன்ற அழகான கண்களை உடையவனே அந்தப் ப்ருந்தாவனம் உனது கால் அடிகள் பட்டதால் மிகவும் புண்ணியமான பூமியானது. (இதனால்) சிவன், ப்ரும்மா ஆகியோர் வணங்கும் இடமாக ஆனது இப்படிப்பட்ட ப்ருந்தாவனத்திற்கு அக்ரூரர் வந்தார். அவர் அங்கு நுழைந்தவுடன் ஆனந்தக் கடலில் மூழ்கியவராகவும். மெய்ம் மறந்து உள்ள நிலையினை அடைந்தவராகவும் ஆனார். இப்படியாக அவர் அனுபவித்த இன்பங்கள் எத்தனை எத்தனை?

6 பச்யந் அவந்தத பவத் விஹ்ருதி ஸ்தலாநி
பாம்ஸுஷு அவேஷ்டத பவத் சரண அங்கிதேஷு
கிம் ப்ரூமஹே பஹு ஜநா: ஹி ததா அபி ஜாதா
ஏவம் து பக்தி தரலா விரலா: பர ஆத்மந்

**பொருள் -** குருவாயூரப்பா! பரம் பொருளே! அக்ரூரர் நீ விளையாடிய இடங்களைக் கண்டு வணங்கினார். உனது கால் அடிகள் பதிந்திருந்த அந்த பூமியில் விழுந்து புரண்டார். அவரது நிலையை நான் எப்படிக் கூறுவேன்? உனது காலத்தில் பல பக்தர்கள் பிறந்திருந்த போதிலும், அக்ரூரர் அளவிற்குப் பக்திப் பரவசம் பெற்றவர்கள் சிலரே!

7ஸாயம் ஸ கோப பவநாநி பவத் சரித்ர
கீத அம்ருத ப்ரஸ்ருத கர்ண ரஸாயநாநி
பச்யந் ப்ரமோத ஸரிதா இவ கில ஊஹ்யமாந:
கச்சந் பவத் பவந ஸந்நிதம் அந்வயாஸீத்

**பொருள் -** குருவாயூரப்பா! அக்ரூரர் ப்ருந்தாவனம் வந்து சேர்ந்த வேளை மாலை வேளையாகும். அப்போது அனைத்து கோபர்களின் வீடுகளில் இருந்தும் உனது லீலைகளைப் பற்றிய இனிமையான பாடல்கள் ஒலித்தன. அவை காதுகளுக்கு மிகுந்த

இன்பம் அளிப்பதாக இருந்தன. அந்த வீடுகளைப் பார்த்துக் கொண்டே அக்ரூரர் சென்றார். அந்த கானம் என்னும் வெள்ளத்தில் அடித்து அழைத்து வரப்பட்டவராக உனது வீட்டின் வாயிலில் வந்து நின்றாராமே!

8 தாவத் ததர்ச பசு தோஹ விலோக லோலம்
பக்த உத்தம ஆகதிம் இவ ப்ரதி பாலயந்தம்
பூமந் பவந்தம் அயம் அக்ரஜவந்தம் அந்த:
ப்ரஹ்ம அநுபூதி ரஸ ஸிந்தும் இவ உத்வமந்தம்

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! அக்ரூரர் வந்த நேரத்தில் நீ பசுக்கள் பால் கறப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாய். உனது அண்ணனான பலராமன் அருகில் இருந்தான். நீ உனது சிறந்த பக்தன் ஒருவன் வரப்போகிறான் என மிகவும் ஆவலுடன் காணப்பட்டாய். இதனால் உனது உள்ளம் ஆனந்தம் நிரம்பி அது வெளி வருவது போல் காட்சி அளித்தாய். இப்படியாக உன்னை அக்ரூரர் கண்டார் அல்லவா?

9 ஸாயந்தந ஆப்லவ விசேஷ விவிக்த காத்ரௌ
த்வௌ பீத நீல ருசிர அம்பர லோபநீயௌ
நாதி ப்ரபஞ்ச த்ருத பூஷண சாரு வேஷௌ
மந்த ஸ்மித ஆர்த்ர வதநௌ ஸ: யுவாம் ததர்ச

**பொருள் -** குருவாயூரப்பா! மாலை வேளையாக இருந்ததால் நீயும் உனது அண்ணனும் குளித்து விட்டு மிகவும் சுத்தமாக நின்றீர்கள். நீ மஞ்சள் பட்டும், உனது அண்ணன் நீலப்பட்டும் அணிந்திருந்தீர்கள். உங்கள் உடலில் சிறிது மட்டுமே ஆபரணங்கள் இருந்ததால் மிகவும் அழகாகவே இருந்தீர்கள். இருவரின் முகத்திலும் புன்னகை அரும்பியது. இப்படியாக உன்னை அக்ரூரர் கண்டாராமே!

10 தூராத் ரதாத் ஸமவருஹ்ய நமந்தம் ஏநம்
உத்தாப்ய பக்த குல மௌலிம் அத உபகூஹந்
ஹர்ஷாத் மித அக்ஷர கிரா குசல அநுயோகீ
பாணிம் ப்ரக்ருஹ்ய ஸபல: அத க்ருஹாத் நிநேய

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது தூரத்தில் தனது தேரில் இருந்து அக்ரூரர் இறங்கி உன்னிடம் வந்து வணங்கினார். பக்தர்களில் உயர்ந்தவரான அவரை நீ தூக்கி எழுப்பி மிகுந்த அன்புடன் அணைத்துக் கொண்டாய். இருவரின் உள்ளமும் மகிழ்ந்ததால் சொற்கள் வரவில்லை. குறைந்த சொற்கள் மட்டுமே கொண்டு அவரை நீ நலம் விசாரித்தாய். பின்னர் நீயும் பலராமனும் சேர்ந்து அவரது கைகளைப் பிடித்து உங்கள் வீட்டிற்குள் அழைத்துச் சென்றீர்கள் அல்லவா?

11 நந்தேந ஸாகம் அமித ஆதரம் அர்சயித்வா
தம் யாதவம் தத் உதிதாம் நிசமய்ய வார்த்தாம்
கோபேஷு பூபதி நிதேச கதாம் நிவேத்ய
நாநா கதாபி இஹ தேந நிசாம் அநைஷீ:

**பொருள் -** குருவாயூரப்பா! யாதவ குலத்தில் பிறந்தவரான அந்த அக்ரூரரை நந்தகோபர் உட்பட நீங்கள் அனைவரும் வெகுவாக கௌரவம் செய்தீர்கள். பின்னர் அவர் கம்சனிடம் இருந்த உங்களுக்கு வந்த அழைப்பைக் கூறினார். அதன் பின்னர் உன் வீட்டில் அன்று இரவு முழுவதும் அக்ரூரருடன் பலவிதமான கதைகளைப் பேசிக் கழித்தாயாமே!

12 சந்த்ரா க்ருஹே கிம் உத சந்த்ரபகா க்ருஹே நு
ராதா க்ருஹே நு பவநே கிமு மைத்ரவிந்தே
தூர்த: விலம்பத இதி ப்ரமதாபி உச்சை:
ஆசங்கித: நிசி மருத் புரநாத பாயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! (நீ அன்று இரவு வராதது கண்டு) கோபிகைகள், இந்தக் க்ருஷ்ணன் ஏன் வரவில்லை? அவன் சந்திராவின் வீட்டிலோ, சந்த்ரபகா வீட்டிலோ, ராதாவின் வீட்டிலோ அல்லது மித்திர விந்தையின் வீட்டிலோ தங்கி விட்டான் போல் உள்ளதே! என்று சந்தேகம் கொண்டனர். இப்படியாக பல லீலைகள் புரிந்த நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 நிசமய்ய தவ அத யாந வார்த்தாம்
ப்ருசம் ஆர்த்தா: பசுபால பாலிகா: தா:
கிம் இதம் கிம் இதம் கதம் நு இதி இமா:

ஸமவேதா: பரிதேவிதாநி அகுர்வந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ மதுரா நகரத்திற்குச் செல்லப் போவதை கோபிகைகள் அறிந்தனர். அவர்கள் மிகவும் வருத்தம் கொண்டனர். அனைவரும், இது எப்படி நடந்தது? ஏன் இப்படி நடந்தது? என்று புலம்பினர்.

2 கருணா நிதி: ஏஷ: நந்த ஸுநு:
கதம் அஸ்மாந் விஸ்ருஜேத் அநந்ய நாதா:
பத ந: கிமு தைவம் ஏவம் ஆஸீத்
இதி தா: த்வதம் கத மாநஸா விலேபு:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் இத்தனை நாட்கள் தங்கள் மனதை பறிகொடுத்திருந்த அந்த கோபிகைகள், நந்தகோபரின் இந்த மகன் மிகவும் கருணை உள்ளவன் ஆயிற்றே! நமக்கு அவனைத் தவிரக் காப்பாற்றும் தெய்வம் வேறு எதுவும் இல்லையே? அவன் எப்படி நம்மைக் கை நழுவ இயலும்? நமது விதி என்று கூற வேண்டும் என்று பலவாகப் புலம்பினார்.

3 சரம ப்ரஹரே ப்ரதிஷ்டமாந:
ஸஹ பித்ரா நிஜ மித்ரா மண்டலை: ச
ப்ரதிதாப பரம் நிதம்பி நீநாம்
சமயிஷ்டயந் வ்யமுச: ஸகாயம் ஏகம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அன்று இரவு கடைசி ஜாமத்தில் உனது தந்தையுடனும் நண்பர்களுடனும் புறப்படத் தயாரானாய். அந்த நேரம் உன்னையே நினைத்து வருந்திய கோபிகைகளின் துயரத்தை நீக்க விரும்பினாய். அவர்களிடம் உனது தோழன் ஒருவனை அனுப்பினாய் அல்லவா?

4 அசிராத் உபயாமி ஸந்நிதம் வோ
பவிதா ஸாது மயா ஏவ ஸங்கம ஸ்ரீ:
அம்ருதா அம்புநிதௌ நிமஜ்ஜயிஷ்யே
த்ருதம் இதி ஆச்வஸிதா: வதூ: அகார்ஷீ:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அந்த கோபிகைகளிடம் (உனது நண்பன் மூலமாக), நான் வெகு சீக்கிரமாகத் திரும்பி வருவேன். அப்போது என்னுடைன் கூடி நிற்கும் உயர்ந்த செல்வங்களும் இன்பமும் உங்களுக்குக் கிடைக்கும். உங்களை அந்த இன்பத்தில் நான் விரைவில் வந்து ஆழ்த்துகிறேன் என்று ஆறுதலாகக் கூறினாய்.

5 ஸவிஷாத பரம் ஸயாஞ்சம் உச்சை:
அதிதூரம் வநிதாபி: ஈக்ஷ்யமாண:
ம்ருது தத் திசி பாதயந் அபாங்காந்
ஸபல: அக்ரூர ரதேந நிர்கத: அபூ:

**பொருள் -** அந்த கோபிகைகள் நெஞ்சம் கனத்தது. அப்படிப்பட்ட கனமான இதயத்துடன் உன்னிடம், க்ருஷ்ணா! நீ சீக்கிரமாக திரும்பி வந்துவிட வேண்டும், சரியா? என்று கூறினர். தங்கள் தலையை நிமிர்த்தி நிமிர்த்தி உன்னைப் பார்த்தனர். நீயும் அவர்கள் இருந்த திசையில் உனது கடைக்கண் பார்வையைச் செலுத்தினாய். பின்னர் பலராமனுடன் அக்ரூரரின் தேரில் ஏறிப் புறப்பட்டாய்.

6 அநஸா பஹுலேந வல்லவாநாம்
மநஸா ச அநுகத: அத வல்லபாநாம்
வநம் ஆர்த்த ம்ருகம் விஷண்ண வ்ருக்ஷம்
ஸமதீத: யமுநா தடீம் அயாஸீ:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ செல்லும்போது உன் பின்னால் பல ஆயர்களின் வண்டிகளும், கோபிகைகளின் இனிமையான மனங்களும் பின்பற்றின. உன்னுடைய இந்த பிரிவு தாங்காமல் ப்ருந்தாவனத்தில் இருந்த விலங்குகளும், மரங்களும் கலங்கின. இவற்றைக் கடந்து யமுனை நதியின் கரையை அடைந்தாய்.

7 நியமாய நிமஜ்ய வாரிணி த்வாம்
அபிவீக்ஷ்ய அத ரதே அபி காந்திநேய:
விவச: அஜநி கிம் நு இதம் விபோ: தே
நநு சித்ரம் து அவலோகநம் ஸமந்தாத்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது தனது கடன்களை கழிப்பதற்காக அக்ரூரா யமுனை நதியில் மூழ்கினார். அந்த நதியின் உள்ளே உன்னைக் கண்டார். மிகுந்த வியப்புடன் வெளியே வந்தார். நீ தேரிலும் நிற்பதைக் கண்டார். எங்கும் நிறைந்து உள்ள நீ இப்படிக் காட்சி அளிப்பது வியப்பு அல்ல.

8 புந: ஏஷ: நிமஜ்ஜய புண்யசாலீ
புருஷம் த்வாம் பரமம் புஜங்க போகே
அரி கம்பு கதா அம்புஜை: ஸ்புரந்தம்
ஸுர ஸித்த ஓக பரீதம் ஆலுலோகே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! புண்ணியம் செய்தவரான அக்ரூரர் மீண்டும் நீரில் மூழ்கினார். அப்போது உன்னை சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றை உடைய நான்கு கரங்களுடனும், தேவர்கள் கூட்டம் சூழ நின்றவனாகவும், ஸ்ரீமந் நாராயணனாக (பரம புருஷனாக) ஆதிசேஷன் மீது உள்ளவனாகக் கண்டாராமே!

9 ஸததா பரமாத்ம ஸௌக்ய ஸிந்தௌ
விநிமக்ந: ப்ரணுவந் ப்ரகார பேதை:
அவிலோக்ய புந: ச ஹர்ஷ ஸிந்தோ
அநுவ்ருத்யா புலக ஆவ்ருத: யயௌ த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! இதனைக் கண்ட அக்ரூரர் பேரானந்தக் கடலில் மூழ்கினார். உன்னைப் பலவாகத் துதித்தார். உனது இப்படிப்பட்ட தரிசனம் மறைந்த பிறகும் அவரது ஆனந்தம் நிலைத்து நின்றது. அந்த ஆனந்தத்துடனே மயிர் கூச்சல் எடுத்தவராக உன்னிடம் வந்தார் அல்லவா?

10 கிமு சீதளிமா மஹாந் ஜலே யத்
புலக: அஸௌ இதி சோதிதேந தேந
அதிஹர்ஷ நிருத்தரேண ஸார்த்தம்
ரதவாஸீ பவந ஈச பாஹி மாம் த்வம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஈசனே நீ அவரை நோக்கி, என்ன ஆக்ரூரரே! யமுனையின் நீர் மிகவும் குளிர்ந்து இருந்ததா என்ன? உங்கள் உடல் முழுவதும் மயிர்க்கூச்சல் காணப்படுகிறதே என்று அன்புடன் கேட்டாய். அவர் மகிழ்வின் காரணமாக வார்த்தைகள் கூறாமல் நின்றார். நீ அவருடன் தேரில் அமர்ந்தாய். குருவாயூரப்பா! என்னை நீயே காப்பாற்ற வேண்டும்.

***

1 ஸம்ப்ராப்த மதுராம் திந அர்த்த
விசமே தத்ர அந்தரஸ்மிந் வஸந்
ஆராமே விஹித அசந: ஸகி ஜநை:
யாத: புரீம் ஈக்ஷிதும்
ப்ராப: ராஜ பதம் சிர ச்ருதி த்ருத
வ்யாலோக கௌதூஹல
ஸ்த்ரீ பும்ஸ உத்யத் அகண்ய புண்ய நிகளை:
ஆக்ருஷ்யமாண: நு கிம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ நடுப்பகலில் மதுரா நகரத்தை அடைந்தாய். அந்த நகரத்தில் இருந்த ஒரு தோட்டத்தில் அமர்ந்து உணவு உட்கொண்டாய். அதன் பின்னர் உனது நண்பர்களுடன் சேர்ந்து நகரத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினாய். அந்த நகரத்தில் இருந்த பல ஆண்களும் பெண்களும் உன்னைப் பற்றியும் உனது பெருமைகளைப் பற்றியும் கேள்விப்பட்டு, உன்னைக் காண பல நாட்களாகக் காத்திருந்தனர். அவர்கள் முன்வினைப் பயனால் அவர்களுக்கு உண்டான புண்ணியம் என்ற சங்கிலிதான் உன்னைக் கட்டி இழுத்து அந்த நகரத்தின் வீதிகளுக்குக் கொண்டு வந்ததா?

2 த்வத் பாத த்யுதி வத் ஸராக ஸுபகா:
த்வந் மூர்த்திவத யோஷித:
ஸம்ப்ராப்தா விலஸத் பயோதர ருச:
லோலா பவத் த்ருஷ்டிவத்
ஹாரிண்யை: த்வத் உர: ஸ்தலீ வத்
அயி தே மந்த ஸ்மித ப்ரௌடிவத்
நைர்மல்ய உல்லஸிதா: கச ஓக ருசிவத்

ராஜத் கலாப ஆச்ரிதா:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னைக் காண பல பெண்கள் அங்கு வந்தனர். அவர்கள் எப்படி இருந்தனர். உனது பாதங்கள் போல் சிவந்த நிறமாகவும், உனது திருமேனி போன்ற ஸ்தனங்கள் கொண்டும்; உனது கண்களைப் போல் அங்கும் இங்கும் ஓடுபவர்களாகவும் உனது மார்புகளைப் போன்று அழகான ஆபரணங்கள் அணிந்தவர்களாகவும், உனது புன்னகை போல் வெண்மையான தூய மனம் உடையவர்களாகவும், உனது தலையில் விளங்கும் மயில் பீலி போன்று அவர்கள் கூந்தலில் ஆபரணம் அணிந்தவர்களாகவும் இருந்தனர்.

3 தாஸாம் ஆகலயந் அபாங்க வலநை:
மோஹம் ப்ரஹர்ஷ அத்புத
வ்யாலோலேஷு ஜநேஷு தத்ர ரஜகம்
கஞ்சித் படீம் ப்ரார்த்தயந்
க: தே தாஸ்யதி ராஜகீய வஸநம்
யாஹ இதி தேந உதித:
ஸத்ய: தஸ்ய கரேண சீர்ஷம் அஹ்ருதா:
ஸ: அபி ஆப புண்யாம் கதிம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ உனது மயக்கும் கடைக்கண் பார்வை மூலம் அந்தப் பெண்ணை மகிழ வைத்தாய். உன்னைக் கண்ட அனைவரும் மிகுந்த மகிழ்வும் பேரானந்தமும் அடைந்தனர். அப்போது அந்த வழியாக அரண்மனை வண்ணான் ஒருவன் வந்தான். அவனிடம் நீ ஓர் உடையைக் கேட்டாய். அவனோ, இது அரசனின் உடைகள். இதை உனக்கு யார் கொடுப்பார்கள். உடனே நகர்ந்து செல் என்று விரட்டினான். இதனால் கோபம் கொண்ட நீ அவனது தலையைக் கொய்தாய். ஆயினும் உனது கரம் அவன் மீது பட்டதால் அவன் மோட்சம் பெற்றான் அல்லவா?

4 பூய: வாயகம் ஏகம் ஆயத மதிம்
தோஷேண வேஷ உசிதம்
தாச்வாம்ஸம் ஸ்வ பதம் நிநேத
ஸுக்ருதம் கோ வேத ஜீவ ஆத்மநாம்
மாலாபி: ஸ்தபகை: ஸ்தவை: அபி

புந: மாலாக்ருதா மாநித:
பக்திம் தேந வ்ருதாம் திதேசித பராம்
லக்ஷ்மீம் ச லக்ஷ்மி பதே

**பொருள் -** மஹாலக்ஷ்மியின் கணவனே! குருவாயூரப்பா! அப்போது மதியூகம் படைத்த தையல்காரன் ஒருவன் உனக்கு ஏற்றதுபோல் ஓர் ஆடையை மிகுந்த மன மகிழ்ச்சியுடன் அளித்தான். அவனுக்கு, நீ மகிழ்ந்து உனது வைகுண்டத்தை அளித்தாய் அல்லவா? ஒரு ஜீவன் செய்த புண்ணியத்தை யாரால் அறிய இயலும்? அதன் பின்னர் மலர்கள் தொடுப்பவன் ஒருவன் உன்னை மாலைகளாலும் மலர்களாலும் துதித்து வணங்கினான். அவனது செயல் கண்டு மகிழ்ந்த நீ அவனுக்கு சிறந்த பக்தியையும் மிகுந்த செல்வத்தையும் அளித்தாயாமே?

5 குப்ஜாம் அப்ஜ விலோசநாம் பதி புந:
த்ருஷ்ட்வா அங்காராகே தயா
தத்தே ஸாது கில அங்க ராகம் அததா:
தஸ்ய: மஹாந்தம் ஹ்ருதி
சித்தஸ்தாம் ருஜுதாம் அத ப்ரதயிதும்
காத்ரே அபி தஸ்யா: ஸ்புடம்
க்ருஹ்ணந் மஞ்ஜு கரேண தாம் உதநய:
தாவத் ஜகத் ஸுந்தரீம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் தாமரை மலர் போன்று மிகவும் அழகாக விளங்கிய கண்களை உடைய ஒரு கூன் விழுந்த பெண் உனக்குச் சந்தனத்தைப் பூசினாள். அதற்குப் பதிலாக நீ அவளது மனதில் உனது எழிலான திருமேனி மீது உள்ள ஆசையை அதிமாகக் கொடுத்தாய். அவளது உள்ளத்தில் இருந்த நேர்மையை அவளது உடலிலும் அளிக்க எண்ணம் கொண்டு, அவளது கையை உனது கைகளால் மெதுவாகப் பிடித்து, அவளது கூனை நிமிர்த்தினாய். அவள் அப்போது உலகில் சிறந்த அழகியாக மாறினாள் அல்லவா?

6 தாவத் நிச்சித வைபவா: தவ விபோ ந
அத்யந்த பாபா ஜநா:
யத்கிஞ்சித் ததே ஸ்ம சக்தி அநுகுணம்

தாம்பூல மால்ய ஆதிகம்
க்ருஹ்ணாந: குஸுமஆதி கிஞ்சந ததா
மார்க்கே நிபத்த அஞ்ஜலி:
ந அதிஷ்டம் பத ஹா யத: அத்ய
விபுலாம் ஆர்த்திம் வ்ரஜாமி ப்ரபோ

**பொருள் -** எங்கும் நிறைந்தவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் பாவங்கள் அதிகம் செய்யாத அந்த நகரத்து மக்கள் உனது பெருமையை உணர்ந்தனர். தங்களால் இயன்ற வரை வெற்றிலை, மாலை, சிறு பரிசுகள் ஆகியவற்றை உனக்கு அளித்தனர். நீ அப்படி வரும் பாதையில் நான் மலர்களோ அல்லது வேறு எந்தப் பொருளும் கொடுக்கவோ இல்லையே! அதனால் அல்லவா இப்போது நான் இந்தப் பிறவி பெற்றுத் துன்பம் அனுபவிக்கிறேன்.

7 ஏஷ்யாமீ இதி விமுக்தய: அபி பகவந்
ஆலேப தார்த்யா தயா
தூராத் கதரயா நிரீக்ஷித கதி:
த்வம் ப்ராவிச: கோபுரம்
ஆகோஷ அநுமித த்வத் ஆகம
மஹா ஹர்ஷ உல்லலத் தேவகீ
வக்ஷோஜ ப்ரகலத் பய: ரஸ மிஷாத்
த்வத் கீர்த்தி அந்த: கதா

**பொருள் -** குருவாயூரப்பா! உனக்கு சந்தனம் பூசிய அந்தக் கூனியிடம், நான் பிறகு வருகிறேன் என்று கூறிச் சென்று விட்டாய். அவள் உன்னை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் நீ வெகு தூரம் செல்லும்வரை நின்று பார்த்தாள். அப்போது நீ கோபுர (கோட்டை) வாயிலுக்குள் நுழைந்தாய். அந்த நேரம் ஏற்பட்ட பெரும் ஆரவாரத்தைக் கேட்ட உனது தாய் தேவகி நீ வந்து விட்டதை யூகித்தாள். அவனது ஸ்தனங்களில் இருந்து தாய்ப்பால் தானாகவே சுரந்தது. இப்படியாகத் தாய்ப்பால் சுரந்தது என்பது, உனது புகழ் நகரத்தில் பரவியது போன்று இருந்தது அல்லவா?

8 ஆவிஷ்ட: நகரீம் மஹா உத்ஸவவதீம்
கோதண்ட சாலாம் வ்ரஜந்

மாதுர்யேண து தேஜஸா நு புருஷை:
தூரேண தத்த அந்தர:
ஸ்ரக்பி: பூஷிதம் அர்ச்சிதம் வர தநு:
மா மா இதி வாதாத் புர:
ப்ராக்ருஹ்ணா: ஸம்ரோபய:
கில ஸமாக்ராக்ஷீ: அபாங்க்ஷீ: அபி

**பொருள் -** குருவாயூரப்பா! மிகுந்த விழாக்கோலம் பூண்டிருந்த நகரத்திற்குள் நுழைந்த நீ, வில் வைத்திருந்த இடத்திற்குச் சென்றாய். அங்கு நின்ற காவலர்கள் உனது அழகையும் கம்பீரமான ஒளியையும் கண்டு உனக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்கள் அல்லவா? அப்போது காவலர்கள், தொடாதே வேண்டாம் என்று கூறிக் கொண்டிருக்கும்போதே நீ மலர்கள் இடப்பட்டிருந்த அந்த வில்லை எடுத்து வளைத்து அம்பைத் தொடுத்து, உடைத்தும் விட்டாயாமே!

9 ச்வ: கம்ஸ க்ஷபண உத்ஸவஸ்ய புரத:
ப்ராரம்ப தூர்ய உபம:
சாப த்வம்ஸ மஹா த்வநி:
தவ விபோ தேவாந் அரோமாஞ்சயத்
கம்ஸஸ்ய அபி ச வேபது: தத் உதித:
கோதண்ட கண்ட த்வயீ
சண்ட அப்யாதஹத ரக்ஷி பூருஷ ரவை:
உத்கூலித: அபூத் த்வயா

**பொருள் -** குருவாயூரப்பா! நீ வில்லை முறித்தபோது எழுந்த சத்தம் எப்படி இருந்தது - மறுநாள் நடக்கவிருக்கும் கம்ஸ வதத்திற்கு முன்பு ஒலிக்கப்படும் தூர்யம் என்னும் வாத்திய இசைக்கு ஒப்பாக இருந்தது. அந்த ஒலியால் தேவர்களும் நடுங்கினர். அதனைக் கேட்ட கம்ஸனுக்குப் பயம் பிறந்தது. நீ அந்த வில்லை எடுத்து காவலர்களை அடித்தவுடன் அவர்கள் அலறினார்கள். இதனைக் கேட்ட கம்ஸனின் அச்சம் மேலும் அதிகமாகியது.

10 சிஷ்டை: துஷ்ட ஜநை: ச த்ருஷ்ட

மஹிமா ப்ரீத்யா ச பீத்யா தத:
ஸம்பச்யந் புரஸம்பதம் ப்ரவிசரந்
ஸாயம் கத: வாடிகாம்
ஸ்ரீதாம்நா ஸஹ ராதிகா விரஹஜம்
கேதம் வதந் ப்ரஸ்வபந்
ஆநந்தந் அவதார கார்ய கடநாத்
வாத ஈச ஸம்ரக்ஷ மாம்

**பொருள் -** ஈசனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை நல்லவர்கள் அன்பாலும், தீயவர்கள் அச்சத்தாலும் அறிந்து கொண்டனர். நீ நகரத்தின் அழகைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தாய். பின்னர் அங்கு இருந்த நந்தவனம் ஒன்றில் இருந்தாய். அங்கு ஸ்ரீதாமன் என்ற நண்பனிடம் ராதையின் பிரிவால் நீ வாடுவதை உணர்த்தினாய், பின்னர் சிறிது நேரம் உறங்கினாய். உனது அவதாரத்தின் காரண நேரம் நெருங்குவதை எண்ணி ஆனந்தம் அடைந்தாய். இப்படிப்பட்ட நீ என்னைக் காக்க வேண்டும்.

***

1 ப்ராத ஸந்த்ரஸ்த போஜ க்ஷிதி பதி
வசஸா ப்ரஸ்துதே மல்ல தூர்யே
ஸங்க்கே ராஜ்ஞாம் ச மஞ்சாந் அபி யயுஷி
கதே நந்த கோபே அபி ஹர்ம்யம்
கம்ஸே ஸௌத அதிரூடே த்வம்
அபி ஸஹபல: ஸாநுக சாரு வேஷ:
ரங்க த்வாரம் கத: அபூ: குபித
குவாலயா பீட நாக அவலீடம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அடுத்த நாள் காலை வேளையில் மிகவும் பயந்து இருந்த போஜ அரசனான கம்ஸன் உத்தரவினால் தூர்யம் என்ற வாத்தியம் ஒலிக்கப்பட்டது. இது மல்யுத்தப் போட்டி துவங்குவதற்கான அடையாளம் ஆகும். அனைத்து அரசர்களும் தங்களுக்கு இடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தனர். நந்தகோபர் மேல் தளத்தில் அமர்ந்தார். கம்ஸன் மாளிகையின் மேல் மாடத்தில் அமர்ந்தான். அப்போது நீயும் பலராமனும் மிகவும் அழகான உடைகள் அணிந்துகொண்டு, ஆயர் தோழர்கள் புடை சூழ, ரங்க ஸ்தானம் என்ற போட்டி நடக்கும் இடத்தின் வாயிலை அடைந்தாய். அங்கு (உன்னைக் கொல்ல) குவாலய பீடம் என்ற யானை வழியை மறித்து நின்றதாமே!

2 பாபிஷ்ட அபேஹி மார்காத் த்ருதம்
இதி வசஸா நிஷ்டுர க்ருத்த புத்தே
அம்பஷ்டஸ்ய ப்ரணோதாத் அதிக
ஜவ ஜுஷா ஹஸ்திதா க்ருஹ்யமாணா:
கேளீ முக்த: அத கோபீ குச கலச சிர
ஸ்பர்திநம் கும்பம் அஸ்ய
வ்யாஹத்ய ஆலீயதா: த்வம் சரண
புவி புந: நிர்கத: வல்கு ஹாஸி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அந்த யானைப் பாகனிடம், அடேய் பாவி! இந்த வழியை விட்டு நகர்ந்து நில் என்று கோபத்துடன் கூறினாய். இதனால் அம்பஷ்டன் என்னும் அந்த யானைப் பாகனுக்கு சினம் வந்தது. அவனது கட்டளையால் அந்த யானை உன் அருகில் வந்து உன்னை தனது தும்பிக்கையால் வளைத்தது. நீயோ மிகவும் சுலபமாக அதன் பிடியில் இருந்து நழுவினாய். கோபிகைகளின் ஸ்தனங்களுடன் வெகு நாட்களாகவே போட்டியிட்ட அந்த யானையின் தலையில் இருபுறத்தில் உள்ள முண்டுகளை நீ ஓங்கி அடித்தாய். பின்னர் அதன் கால்களுக்கு இடையே ஓடிப்போய் மறைந்து கொண்டாய். அதன் பின்னர் பரிகாசமாகச் சிரித்தபடி வெளியில் வந்தாய்.

3 ஹஸ்த ப்ராப்ய: அபி அகம்ய: ஜடிதி
முநி ஜநஸ்ய இவ தாவந் கஜேந்த்ரம்
க்ரீடந் ஆபாத்ய பூமௌ புந: அபிபதத்
தஸ்ய தந்தம் ஸஜீவம்
மூலாத் உந்மூல்ய தத் மூலக மஹித மஹா
மௌக்திகாந் ஆத்ம மித்ரே
ப்ராதா: த்வம் ஹாரம் ஏபி: லலித விரசிதம்
ராதிகாயை திச இதி

**பொருள் -** குருவாயூரப்பா! நீ முனிவர்களின் கைகளுக்கு எட்டும் தூரத்தில் இருந்தாலும் அகப்படுவதில்லை. அதேபோல் அந்த யானையின் அருகில் நின்ற போதிலும் அதன் பிடியில் சிக்கவில்லை. அப்போது நீ விளையாட்டாகத் தரையின் மீது விழுந்தாய். உடனே உன்னை நோக்கி அந்த யானை ஓடி வந்தது. அப்போது அதன் தந்தங்களைப் பிடித்து

அவற்றை அடியோடு பிடுங்கினாய். அவற்றின் அடியில் காணப்பட்ட பெரிய முத்துகளை எடுத்து, இவற்றை அழகான மாலை யாக்கி ராதைக்குக் கொடு என்று உன் நண்பனிடம் கூறினாய் அல்லவா?

4 க்ருஷ்ணாநம் தந்தம் அம்ஸே யுதம்
அத ஹலிநா ரங்கம் அங்க ஆவிசந்தம்
த்வாம் மங்கல்ய அங்க பங்கீ ரபஸ
ஹ்ருத மந: லோசநா வீக்ஷ்ய லோகா:
ஹம் ஹோ தந்ய: நு நந்த: நஹி நஹி
பசு பால அங்கநா: நோ யசோதா
நோ நோ தந்ய: ஈக்ஷணா: ஸ்ம: த்ரி ஜகதி
வயம் ஏவ இதி ஸர்வே சசம்ஸு:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் அந்த தந்தங்களை உங்கள் தோள்களில் பதித்து நீயும் பலராமனும் அந்த மல்யுத்த அரங்கிற்குள் நுழைந்தீர்கள். அங்கு இருந்த மக்கள், உனது மங்களகரமான திருமேனியால் தங்கள் மனதும் கண்களும் கவரப்பட்டவர்கள் ஆனார்கள். அவர்கள், ஆஹா! இந்த மூன்று உலகங்களிலும் மிகுந்த புண்ணியசாலி நந்தகோபரே! இல்லை! இல்லை! கோபிகைகளே ஆவர்! இல்லை இல்லை! யசோதையே ஆவாள்! இல்லை இல்லை! இக்காட்சியைக் காணக் கண் படைக்கப்பட்ட நாம் அல்லவோ பாக்கியம் பெற்றவர்கள் என்று வியந்தனர்.

5 பூர்ணம் ப்ரஹ்ம ஏவ ஸாக்ஷாத் நிரவதி
பரம ஆநந்த ஸாந்த்ர ப்ரகாசம்
கோபேஷு த்வம் வ்யலாஸீ: ந கலு
பஹு ஜநை: தாவத் ஆவேதித: அபூ:
த்ருஷ்ட்வா அத த்வாம் ததா இதம்
ப்ரதமம் உபகதே புண்ய காலே ஜந ஓகா:
பூர்ண ஆனந்தா: விபாபா: ஸரஸம்
அபிஜகு: த்வத் க்ருதாநி ஸ்ம்ருதாநி

**பொருள் -** குருவாயூரப்பா! நீ பரிபூர்ணமாக எங்கும் உள்ளவன்: பரப்ரஹ்மமமாகவே உள்ளவன்: எல்லைகள் இல்லாத பரமானந்த வடிவமானவன்: ப்ரகாசமானவன் இத்தகைய நீ கோபர்களின் கண்களுக்குத் தெரியும்படி அவர்கள் நடுவிலேயே வாழ்ந்தாய். அப்போது உன்னை இப்படியாக அவர்கள் அறியவில்லை. ஆயினும் தங்கள் புண்ணிய காலம் பலிக்கும் நேரம் வந்தபோது உன்னை இப்படியாகக் (மேலே கூறியபடி) காண முடிந்தது. அந்த நேரத்தில் அவர்கள் பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்றவர்களாகவும், மனம் முழுவதும் ஆனந்தம் உடையவர்களாகவும் மாறினார்கள். உடனே உனது லீலைகளைப் பாடல்களாகப் பாடினர்.

6 சாணூர: மல்ல வீர: ததநு ந்ருப கிரா
முஷ்டிக: முஷ்டி சாலீ
த்வாம் ராமம் ச அபிபேதே ஜட ஜடிதி மித:
முஷ்டி பாத அதிரூக்ஷம்
உத்பாத ஆபாதந ஆகர்ஷண விவித
ரணாநி ஆஸதாம் தத்ர சித்ரம்
ம்ருத்யோ: ப்ராக் ஏவ மல்ல ப்ரபு;
அகமத் அயம் பூரிச: பந்த மோக்ஷாந்

**பொருள் -** ப்ரபுவே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்போது கம்ஸனின் ஆணைக்கு இணங்க சாணூரன் என்பவன் உன்னுடன் மல்யுத்தம் செய்தான். முட்டிப் போரில் தேர்ந்தவனான முஷ்டிகன் என்பவன் பலராமனுடன் மோதினான். உங்கள் முட்டிகள் மோதியபோது எழுந்த சட சட என்ற சத்தம் அச்சம் விளைவித்தது. மேலே தூக்கி எறிவதும். கீழே தள்ளுவதும், கையைப் பிடித்து வேகமாக இழுப்பதும் ஆகிய பல முறைகளில் மல்யுத்தம் நடைபெற்றது. சாணூரன் என்ற அந்த மல்லன் இறப்பதற்கு முன்னால் பலமுறை பந்தமும் (உனக்கு கட்டுப்படுதலும்) மோட்சமும் அடைந்தான் அல்லவா?

7 ஹா திக்கஷ்டம் குமாரௌ ஸீலலித
வபுஷௌ மல்ல வீரௌ கடோரௌ
ந த்ரக்ஷ்யாம: வ்ரஜாம: த்வரிதம் இதி
ஜநே பாஷமாணே ததாநீம்

சாணூரம் தம் கர உத்ப்ராமண விகலத்
அஸூம் போதயாம் ஆஸித உர்வ்யாம்
பிஷ்ட: அபூத் முஷ்டிக: அபி த்ருதம் அத
ஹலிநா நஷ்ட சிஷ்டை: ததாவே

**பொருள் -** குருவாயூரப்பா! அங்கு இருந்த மக்கள், ஆஹா! இது என்ன கொடுமை! அந்தச் சிறுவர்கள் மிகவும் மென்மையான உடலுடன் உள்ளனரே. அந்த மல்லர்கள் கொடியவர்கள் ஆயிற்றே. நாம் இந்தப் போட்டியைக் காண்பதை விட இங்கிருந்து போய் விடலாம். என்று கூறிக்கொண்டனர். அந்த நேரத்தில் நீ சாணூரனைக் கைகளால் பிடித்துச் சுழற்றினாய். அவன் உயிர் பிரியும் தறுவாயில் அவனைத் தரையில் ஓங்கி அடித்தாய். அதே போல் பலராமனும் முஷ்டிகனை அழித்தான். மற்ற மல்லர்கள் அஞ்சி ஓடி விட்டனராமே!

8 கம்ஸ: ஸர்வார்ய தூர்யம் கல மதி:
அவிதந் கார்யம் ஆர்யார் பித்ரூ ஸ்தாந்
ஆஹந்தும் வ்யாப்த மூர்த்தே: தவ ச
ஸமசிஷத் தூரம் உத்ஸாரணாய
ருஷ்ட: துஷ்டஉக்திபி: த்வம் கருட இவ
கிரிம் மஞ்சம் அஞ்சந் உதஞ்சத்
கட்க வ்யாவல்க துஸ்ஸங்க்ரஹம் அபி ச
ஹடாத் ப்ராக்ரஹீ: ஔக்ர ஸேநீம்

**பொருள் -** குருவாயூரப்பா! இதனைக் கண்ட கொடுமையான கம்ஸன், தூர்ய வாத்தியத்தை நிறுத்தும்படி கூறினான். என்ன செய்வது என்று புரியாமல், வணங்க வேண்டியவர்களான உக்ரசேனன், நந்தகோபர், வஸுதேர் ஆகியோர்களைக் கொல்லும்படி உத்தரவிட்டான். உன்னை வெகுதூரம் விரட்டும்படி உத்தரவிட்டான். அவனது இத்தகைய கொடுமையான கட்டளைகளால் நீ மிகுந்த கோபம் கொண்டாய். உடனே கருடன் வேகமாகப் பறந்து பாய்வது போல் அவன் அமர்ந்திருந்த இருக்கை மீது பாய்ந்தாயாமே! அவன் தனது வாளை வீசியபடி உன்னால் அவனைப் பிடிக்க முடியாமல் தடுக்க முயற்சித்தான். ஆயினும் நீ அவனைப் பிடித்தாய் அல்லவா?

9 ஸத்ய: நிஷ்பிஷ்ட ஸந்திம் புவி நர பதிம்

ஆபாத்ய தஸ்ய உபரிஷ்டாத்
த்வயி ஆபாத்யே ததா ஏவ த்வத் உபரி
பதிதா நாகிநாம் புஷ்ப வ்ருஷ்டி:
கிம் கிம் ப்ரூம: ததாநீம் ஸததம் அபி
பியா த்வத் கத ஆத்மா ஸ: பேஜே
ஸாயுஜ்யம் த்வத் வத உத்தா பரம வாம்
இயம் வாஸநா கால நேமே:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ பிடித்ததால் கம்ஸனின் மூட்டுகள் உடைந்தன. அவனைத் தரையில் தள்ளினாய். அவன் மீது விழுந்தாய். அப்போது மகிழ்ந்த தேவர்கள் உன் மீது மலர்கள் தூவி வணங்கினர். பரப்ரஹ்மா! நான் என்ன சொல்வது? உன்னிடம் இருந்த பயம் காரணமாக அவன் உன்னையே எண்ணியவனாக இருந்தான். இதனால் உன்னுடன் அவன் ஐக்யமானான். அவன் உன்னுடன் சேர்வதற்கான பாக்கியம் என்ன? முன் ஜென்மத்தில் அவன் காலநேமியாக இருந்து உன்னால் கொல்லப்பட்டான். இதனால் அவனுக்கு இந்தப் பிறவியிலும் புண்ணியம் கிடைத்தது.

10 தத் ப்ராத்ரூந் அஷ்ட பிஷ்ட்வா த்ருதம்
அத பிதரௌ ஸந்தமந் உக்ரஸேநம்
க்ருத்வா ராஜாநம் உச்சை: யதுகுலம்
அகிலம் மோதயந் காமதாநை:
பக்தாநாம் உத்தமம் ச உத்தவம் அமர குரோ:
ஆப்த நீதிம் ஸகாயம்
லப்த்வா துஷ்ட: நகர்யாம் பவநபுர
பதே ருந்தி மே ஸர்வ ரோகாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பின்னர் நீ கம்ஸனின் எட்டு தம்பிகளையும் அழித்தாய். உனது பெற்றோர்களான வஸுதேவரையும், தேவகியையும் கண்டு வணங்கினாய். உக்கிரஸேனருக்கு மீண்டும் அரச பதவியை அளித்தாய். யதுகுலத்தில் பிறந்த அனைவருக்கும் அனைத்தும் கொடுத்தாய். உனது பக்தர்களில் சிறந்தவனும், தேவகுருவான ப்ருகஸ்பதியிடம் பயின்றவனும் ஆகிய உத்தவரை உனது நண்பராகக் கொண்டாய். இப்படியாக நீ மதுராவில் மகிழ்வுடன் வசிக்கத் தொடங்கினாய். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளைத் தீர்க்க வேண்டும்.

***

1 கத்வா ஸாந்தீபநிம் அத சதுஷ்ஷஷ்டி

மாத்ரை: அஹோபி:

ஸர்வஜ்ஞ: த்வம் ஸஹ முஸலிநா
ஸர்வ வித்யா க்ருஹீத்வா
புத்ரம் நஷ்டம் யம நிலயநாத்
ஆஹ்ருதம் தக்ஷிணார்த்தம்
தத்வா தஸ்மை நிஜ புரம் அகா:
நாதயந் பாஞ்சஜன்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ அனைத்தும் அறிந்தவன் (ஸர்வஜ்ஞன்) ஆக இருந்தாலும். பலராமனுடன் சேர்ந்து ஸாந்தீபநி என்ற முனிவரிடம் கல்வி கற்கச் சென்றாய். அனைத்து வித்யைகளையும் அறுபத்து நான்கு நாட்களிலேயே கற்றுக்கொண்டாய். முன்பு ஒரு நாள் இறந்து போய் விட்டிருந்த அவரது மகனின் உயிரை யமலோகத்திற்குச் சென்று, அங்கிருந்து மீட்டுக் கொடுத்தாய். அதனை உனது குரு தட்சணையாகச் செலுத்தினாய். பின்னர் பாஞ்ச ஜன்யம் என்னும் உனது சங்கை ஊதிக்கொண்டே மதுராவிற்குத் திரும்பினாய்.

2 ஸ்ம்ருத்வா ஸமருத்வா பசுப ஸுத்ருச:

ப்ரேம பார ப்ரணுந்நா:

காருண்யேந த்வம் அபி விவச:

ப்ராஹிணோ: உத்தவம் தம்
கிஞ்ச அமுஷ்மை பரம ஸுஹ்ருதே
பக்த வர்யாய தாஸாம்
பக்தி உத்ரேகம் ஸகல புவநே
துர்லபம் தர்சயிஷ்யந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன் மீது கொண்டிருந்த ப்ரேம பக்தியால் கோபிகைகள் உருகுவார்களே என்று நினைத்து நினைத்து நீ உன் நிலையை இழந்தாய். அவர்களது பக்தியைப் போன்று இந்த உலகத்தில் யாரும் பக்தியுடன் இருக்க இயலாது. இத்தனை உன்னுடைய சிறந்த பக்தனும் நண்பனும் ஆகிய உத்தவருக்கு நீ உணர்த்த எண்ணம் கொண்டாய். எனவே அவரை ப்ருந்தாவனத்திற்குத் தூதனாக அனுப்பினாய்.

3 த்வந் மஹாத்மய ப்ரதிம பிசுநம்
கோகுலம் ப்ராப்ய ஸாயம்
த்வத் வார்த்தாபி: பஹு ஸ:
ரமயாமாஸ நந்தம் யசோதாம்
ப்ராத: த்ருஷ்ட்வா மணி மய
ரதம் சங்கிதா: பங்கஜ அக்ஷ்ய:
ச்ருத்வா ப்ராப்தம் பவத் அநுசரம்
த்யக்த கார்யா: ஸமீயு:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த உத்தவர். உனது பெருமைகளை உலகிற்கு வெளிப்படுத்தும் தன்மைகள் உடைய ப்ருந்தாவனத்திற்கு மாலை நேரத்தில் வந்தார். உன்னைப் பற்றிப் புகழ்ந்து கூறி நந்தகோபரையும் யசோதையையும் மகிழ்வு கொள்ளச் செய்தார். மறுநாள் காலை, கோபிகைகள் நந்தகோபரின் வீட்டு வாயிலில் நின்ற (உத்தவரின்) தேரைக் கண்டு ஐயம் கொண்டனர். உன்னிடம் இருந்து தூதர் வந்துள்ளதாகக் கேள்விப்பட்டனர். தங்கள் வீட்டு வேலைகளையெல்லாம் அப்படியே விட்டு, உத்தவரைக் காண விரைந்து வந்தனராமே!

4 த்ருஷ்ட்வா ச ஏநம் த்வத் உபம் லஸத்
வேஷ பூஷா அபிராமம்
ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா தவ விலஸிதாந்
உச்சகை: தாநி தாநி
ருத்த ஆலாபா: கதம் அபி புந:
கத்கதாம் வாசம் ஊக:
சௌஜந்ய ஆதீந் நிஜ பர பிதாம்
அபி அலம் விஸ்மர ந்த்ய:

**பொருள் -** குருவாயூரப்பா! உனது ஆடை அணிகலன்களைப் போலவே உத்தவரும் உடைகள் அணிந்திருந்தார். அவரைக் கண்டதும் உனது லீலைகளை எண்ணி எண்ணி பேச முடியாமல் நின்றனர். இதனால் உத்தவர் தங்கள் விருந்தினர். என்பதை மறந்து, அவருக்கு செய்ய வேண்டிய மரியாதைகளை மறந்தனர். பின்னர் தங்கள் குரல் உடைந்து போன நிலையில் பின்வருமாறு கூறினார்கள்.

5 ஸ்ரீமந் கிம் த்வம் பித்ரு ஜந
க்ருதே ப்ரேஷித: நிர்தயேந
க்வ அஸௌ காந்த: நகர ஸுத்ருசாம்
ஹா ஹரே நாத பாயா:
ஆச்லேஷாணாம் அம்ருத வபுஷ:
ஹந்த தே சும்பநாநாம்
உத்மாதாநாம் குஹக வசஸாம்
விஸ்மரேத் காந்த கா வா

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த கோபிகைகள் உத்தவரிடம். ஸ்ரீமானே! எங்கள் மீது சிறிதும் இரக்கம் இல்லாத அந்தக் க்ருஷ்ணன், தனது பெற்றோர்களிடம் உங்களைத் தூது அனுப்பினானா? நகரத்துப் பெண்கள் பக்கம் சாய்ந்து விட்ட அவன் எங்கே உள்ளான்? ஹரி! நாதா! எங்களைக் காப்பாற்ற வேண்டும். சுந்தர மானவனே! அமிர்தம் போன்ற இனிய திருமேனியை உடைய உனது அரவணைப்பையும், நீ அளித்த முத்தங்களையும் கபடமான சொற்களையும் யாரால் மறக்க இயலும்? என்று புலம்பினர்.

6 ராஸக்ரீடா லுலித லுலிதம்
விச்லதத் கேச பாசம்
மந்த உத்பிந்ந ச்ரம ஜலகணம்
லோப நீயம் த்வத் அங்கம்
காருண்ய ஆப்தே ஸக்ருத் அபி
ஸமாலிங்கிதும் தர்சய இதி
ப்ரேம உந்மாதாத் புவன அதந
த்வத் ப்ரியா த்வாம் விலேபு:

**பொருள் -** குருவாயூரப்பா! அவர்கள் உன்னை நினைத்து, கருணைக் கடலே! க்ருஷ்ணா! ராஸ க்ரீடையின் போது உனது அழகான திருமேனி களைப் புற்றது: தலை மயிர்கள் கட்டவிழ்ந்தன; களைப்பு மிகுதியால் வியர்வை தோன்றின; இப்படிப்பட்ட உனது திருமேனி எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. இப்படிப் பட்ட திருமேனியை நாங்கள் மீண்டும் அணைத்துக் கொள்ள ஒரு முறையாவது நீ வரவேண்டும் என்று உன்மீது உண்டான காதலின் காரணமாகப் பலவாறு புலம்பினர் அல்லவா?

7 ஏவம் ப்ராயை: விவச வசநை: ஆகுலா கோபிகா: நா:
த்வத் ஸந்தேசை: ப்ரக்ருதிம் அநயத் ஸ: அத விஜ்ஞாந கர்பை:
பூய: தாபி முதித மதிபி: த்வத் மயீபி: வதூபி:
தத் தத் வார்த்தா ஸரஸம் அநயத் காநிசித் வாஸராணி

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக கோபிகைகள் உன்னையே நினைந்து, தங்கள் நிலையை மறந்து உத்தவரிடம் மிகுந்த மன வருத்தத்துடன் பேசினார்கள். உத்தவர் அவர்களிடம் உன்னுடைய செய்திகளைக் கூறி அவர்களை சமாதானப்படுத்தினார். அவர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட கோபிகைகள் மிகவும் மகிழ்ந்து இயல்பு நிலைக்கு வந்தனர். உத்தவர் ப்ருந்தாவனத்தின் உனது லீலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டே சில நாட்கள் இன்பமுடன் இருந்தாராமே!

8 த்வத் ப்ரோத்காநை: ஸஹிதம்
அநிசம் ஸர்வத: கேஹ க்ருத்யம்
த்வத் வார்த்தா ஏவ ப்ரஸரதி மித:
ஸா ஏவ ச உத்ஸ்வாப லாபா:
சேஷ்டா: ப்ராய: த்வத் அநுக்ருதய:
த்வத் மயம் ஸர்வம் ஏவம்
த்ருஷ்ட்வா தத்ர வ்யமுஹத்
அதிகம் விஸ்மயாத் உத்தவ: அயம்

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ருந்தாவனத்தின் அனைத்து வீடுகளிலும் கோபர்கள் வீட்டு வேலைகள் செய்யும்போது கூட உனது லீலைகள் பற்றிய பாடல்களையே பாடினர். உன்னைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் உறங்கும்போது கனவில் கூட சிந்தனையே உள்ளது அவர்கள் ஒவ்வொரு செய்கையும் உன்னைச் சுற்றியே உள்ளது. இப்படியாக ப்ருந்தாவனம் முழுவதும் உனது மயமாகவே உள்ளதைக் கண்ட உத்தவர் மிகவும் மனம் மகிழ்வு கொண்டனார்.

9 ராதாயா மே ப்ரியதமம் இதம்
மத் ப்ரியா ஏவம் ப்ரவீதி
த்வத் கிம் மௌநம் கலயஸி

ஸகே மாநிநீ மத் ப்ரியா ஏவ
இதி ஆதி ஏவ ப்ரவததி ஸகி
த்வத் ப்ரிய: நிர்ஜநே மாம்
இத்தம் வாதை: அரமயத் அயம்
த்வத் ப்ரியாம் உத்பல அக்ஷீம்

**பொருள் -** குருவாயூரப்பா! உத்தவர் உனது உற்ற தோழியான ராதையைக் கண்டார். அவளிடம், க்ருஷ்ணனின் அன்பானவளே! க்ருஷ்ணன் என்னுடன் பேசும்போது - உத்தவா! இவை என் ராதைக்கு மிகவும் பிடிக்கும்; நீ என் ராதையைப் போல் பேசுகிறாயே! நீ ஏன் என் ராதையைப் போல் கோபம் கொண்டு மவுனமாக உள்ளாய் - என்று கூறுவான் என்று கூறி அவளை மகிழ்வித்தார்.

10 ஏஷ்யாமி த்ராக் அநுப கமநம்
கேவலம் கார்ய பாராத்
விச்லேஷ அபி ஸ்மரண த்ருடதா
ஸம்பவாத் மா அஸ்து கேத:
ப்ரஹ்ம ஆனந்தே மிலதி ந
சிராத் ஸங்கம: வா வியோக:
துல்ய: வ: ஸ்யாத் இதி தவ
கிரா ஸ: அகரோந் நிர்வ்யதா: தா:

**பொருள் -** குருவாயூரப்பா! பின்னர் அவர் அந்த கோபிகைகளிடம் உனது தூது செய்தியைக் கூறினார் - நான் மீண்டும் விரைவில் அங்கு வந்துவிடுவேன். எனக்கு இங்கு பல செயல்கள் நிகழ்த்த வேண்டியுள்ளதால் இப்போது வர இயலவில்லை. நாம் பிரிந்து இருந்தாலும் என்னைப் பற்றிய நினைவு உள்ளதால் வருத்தம் அடையாதீர்கள். விரைவில் ஆனந்தம் கொள்வீர்கள். அந்த நேரத்தில் உங்களுக்கு சேருவதோ பிரிவதோ ஒன்றாகவே இருக்கும் - என்று கூறினார். இப்படியாக அவர்கள் மன வருத்தத்தை நீக்கினார்.

11 ஏவம் பக்தி: ஸகல புவநே
ந ஈக்ஷிதா ந ச்ருதா வா
கிம் சாஸ்த்ர ஓகை: கிம் இஹ
தபஸா கோபிகாப்ய: நம: அஸ்து

இதி ஆனந்த ஆகுலம் உபகதம்
கோகுலாத் உத்தவம் தம்
த்ருஷ்ட்வா ஹ்ருஷ்ட: குரு
புர பதே பாஹிமாம் ஆமய ஓகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உத்தவர் தனது மனதில் இப்படிப்பட்ட ஒரு தீவிரமான பக்தியையும் அன்பையும் நான் வேறு எங்கும் கண்டதில்லை. சாத்திரங்களைக் கற்பதால் என்ன பயன் உள்ளது? தவம் இயற்றுவதால் என்ன பயன் உள்ளது? (இவர்களை வணங்கினால் போதுமே என்று எண்ணி) கோபிகைகளுக்கு என் பணிவான வணக்கங்கள் என்று நினைத்தார். மிகுந்த ஆனந்தத்துடன் உன்னிடம் வந்தார். நீயும் அவரைக் கண்டு (கோபிகைகளைக் கண்டது போல்) மகிழ்ந்தாய் அல்லவா? இப்படிப்பட்ட நீ, கூட்டமாக வரும் பிணிகளில் இருந்து காப்பாற்று.
***

1 ஸைரந்த்ர்யா: ததநு சிரம் ஸ்மர ஆதுராயா:
யாத: அபூ: ஸுலலிதம் உத்தவேந ஸார்த்தம்
ஆவாஸம் த்வத் உபகம உத்ஸவம் ஸதா ஏவ
த்யாயந்த்யா: ப்ரதிதிந வாஸ ஸஜ்ஜிகாயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு முறை நீ ஸைரந்த்ரி என்பவளைப் பார்த்துப் பேசினாய். அது முதலவாக அவள் எப்போதும் உன்னையே த்யானம் செய்து கொண்டிருந்தாள். உன்மீது காதல் கொண்ட அவள் உனது சேர்க்கையால் உண்டாகும் இன்பத்தையே எண்ணியிருந்தாள். நீ வருவாய் என்று அன்றாடம் தன்னையும் தன் வீட்டையும் அலங்கரித்தாள். இப்படியிருக்கும்போது. ஒருநாள் நீ உத்தவரோடு அவள் வீட்டிற்குச் சென்றாயாமே!

2 உபகதே த்வயி பூர்ண மநோரதாம்
ப்ரமத ஸம்ப்ரம கம்ப்ர பயோதராம்
விவித மாநநம் ஆதததீம் முதா
ரஹஸி தாம் ரமயாஞ் சக்ருஷே ஸுகம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவள் வீட்டிற்கு வந்தவுடன் தன்னுடைய விருப்பம் நிறைவேறியதால் பெரிதும் மகிழ்ந்தாள். மிகவும் பரபரப்புடன், தனது ஸ்தனங்கள் அசைய

அவள் உனக்கு வேண்டிய பல மரியாதைகளைச் செய்தாள். நீ அவளுடன் தனிமையில் இருந்து, அவளைச் சுகமாக இருக்கும்படி செய்தாய் அல்லவா?

3 ப்ருஷ்டா வரம் புந: அஸௌ அவ்ருணோத் வராகீ
பூய: த்வயா ஸுரதம் ஏவ நிசா அந்தரேஷு
ஸாயுஜ்யம் அஸ்து இதி வதேத் புத ஏவ காமம்
ஸாமீப்யம் அஸ்து அநிசம் இதி அபி ந அப்ரவீத் கிம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவளிடம் வேறு ஏதாவது வரம் கேட்குமாறு கூறினாய். ஆனால் உன்னைத் தவிர வேறு ஒன்றையுமே அறியாத பேதைப்பெண் உன்னுடன் மேலும் சில இரவுகளில் இன்பமாக இருப்பதையே வரமாகக் கேட்டாள். மிகுந்த ஞானம் உடையவர்கள் மட்டுமே மோட்சம் கேட்டார்கள். அருகில் எப்போதும் இருக்க வேண்டும் என்று அவள் ஏன் கேட்கவில்லை? (உனது மாயையோ?)

4 தத: பவாந் தேந நிசாஸு காஸுசித்
ம்ருகீ த்ருசம் தாம் நிப்ருதம் விநோதயந்
அதாத் உபச்லோக: இதி ச்ருதம் ஸுதம்
ஸ: நாரதாத் ஸாத்வத் தந்த்ர வித்பபௌ

**பொருள் -** குருவாயூரப்பா! அவள் கேட்டுக்கொண்ட படி, மான் போன்ற கண்களை உடைய அவளுடன் நீ சில இரவுகள் தங்கி அவளை இன்பமடையச் செய்தாய். அவள் மூலமாக உபச்லோகன் என்ற மகன் பிறந்தான். அவன் நாரதர் மூலமாக உயர்ந்த பாஞ்சராத்ர ஆகமத்தைக் கற்றுக் கொண்டானாமே!

5 அக்ரூர மந்திரம் இத: அத பல உத்தவாப்யாம்
அப்யர்ச்சித: பஹு நுத: முதிதேந தேந
ஏநம் விஸ்ருஜ்ய விபிந ஆகத பாண்டவேய
வ்ருத்தம் விவேதித ததா த்ருதராஷ்ட்ர சேஷ்டாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் நீ உத்தவரோடும் பலராமனோடும் அக்ரூரரின் வீட்டிற்குச் சென்றாய். உன்னைக் கண்டதும் பெரிதும் மகிழ்ந்த அக்ரூரர் உன்னைப்

பலவாறாகப் போற்றி வணங்கினார். நீ அக்ரூரரை பாண்டவர்களிடம் அனுப்பி, அவர்கள் காட்டில் இருந்து திரும்பி வந்த செய்தியையும், திருதராஷ்டிரன் அவர்களுக்கு இழைத்த தீமைகளையும் தெரிந்து கொண்டாய்.

6 விகாதாத் ஜாமாது: பரம ஸுஹ்ருத: போஜ ந்ருபதே:
ஜராஸந்தே ருந்ததி அநவதி ருஷா அந்தே அத மதுராம்
ரத ஆத்யை: த்யோ லப்தை: கதிபய பல: த்வம் பல யுத:
த்ரயோ விம்சதி அக்ஷௌஹிணி தத் உபநீதம் ஸமஹ்ருதா:

**பொருள் -** ஜராஸந்தனின் மாப்பிள்ளையும் சிறந்த நண்பனுமான கம்ஸனை நீ கொன்றதால், உன்மீது ஜராஸந்தன் மிகவும் கோபம் கொண்டான். தனது படையுடன் மதுராவைத் தாக்கினான். நீ விண்ணுலகில் இருந்து உனக்குக் கிடைத்த தேர் மற்றும் ஆயுதங்களுடன் பலராமனுடன் சேர்ந்து ஜராஸந்தனின் இருபத்து மூன்று அக்ஷௌணி படைகளை அழித்தாய். (அக்ஷௌணி- 2,870 யானை, 2,870 தேர், 65,610 குதிரைகள், 1,09,350 வீரர்கள்)

7 பத்தம் பலாதத பலேந பலோத்தரம் த்வம்
பூய: பல உத்யம ரஸேந முமோசித ஏநம்
நிச்சேஷ திக் ஜய ஸமாஹ்ருத விச்வ ஸைந்யாத்
க: அந்ய: தத: ஹி பல பௌருஷவாத் ததாநீம்

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் பலராமன் வலிமை மிக்க அந்த ஜராசந்தனை வென்று அவனைக் கட்டிப்போட்டான். ஆனால் நீயோ, அவன் மீண்டும் தனது முழு ஆதரவுப் படைப்புகளைத் திரட்டிக் கொண்டு வருவதை விரும்பினாய். எனவே அவனது கட்டினை அவிழ்த்து விட்டாய். அனைத்து திசைகளுக்கும் சென்று அங்குள்ள அரசர்களை வென்றுள்ளதால் அவனது படை மிகவும் பெரியது. இத்தனை பெரிய படைபலம் உள்ள அரசர்கள் அப்போது அவனைத் தவிர வேறு யாரும் இல்லை.

8 பக்ந: ஸ லக்ந ஹ்ருதய: அபி ந்ருபை: ப்ரணுந்ந:
யுத்தம் த்வயா வ்யதித ஷோடச க்ருத்வ ஏவம்
அக்ஷௌஹிணீ: சிவ சிவ அஸ்ய ஜகந்த விஷ்ணோ

ஸம்பூய ஸைநிகவதி த்ரிசதம் ததாநீம்

**பொருள் -** குருவாயூரப்பா! விஷ்ணுவே! அந்த ஜராசந்தன் உன்னிடம் தோற்றதால் மிகுந்த வெட்கம் அடைந்து இருந்தான். ஆயினும் மற்ற அரசர்கள் அவனைத் தூண்டினர். இதனால் அவன் உன்னுடன் பதினாறு முறை போர் செய்தானாமே! கடவுளே! கடவுளே! அந்தப் போர்கள் எல்லவாற்றிலும் நீ அவனது முந்நூற்று தொண்ணூற்றொரு அக்ஷௌஹிணிப் படைகளை அழித்தாய் அல்லவா?

9 அஷ்டாதசே அஸ்ய ஸமரே ஸமுபேயுஷி த்வம்
த்ருஷ்ட்வா புர: அத யவநம் யவந த்ரி கோட்யா
த்வஷ்ட்ரா விதாப்ய புரம் ஆசு பயோதி மத்யே
தத்ர அதயோக பலத: ஸ்வ ஜநாத் அநைஷீ:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் ஜராசந்தன் பதினெட்டாவது முறையாக போருக்கு வந்தான். அப்போது அவனது மூன்று கோடி யவனர்களுடன் அவர்கள் தலைவனான காலயவனனைக் கண்டாய். நீ உடனே விச்வகர்மனை அழைத்து, கடலுக்கு அடியில் ஒரு நகரத்தை உருவாக்கினாய். உனது நாட்டில் உள்ள அனைவரையும் உன்னுடைய யோகத்தின் மூலமாக அந்த நகரத்தில் சென்று சேர்த்தாய்.

10 பத்ப்யாம் த்வம் பத்ம மாலீ சகித
இவ புராந் நிர்க்கத: தாவமாந:
ம்லேச்ச ஈசேந அநுயாத: வத ஸுக்ருத
விஹீநேந சைலே ந்யலைஷீ:
ஸுப்தேந அங்க்ரி ஆஹதேந த்ருதம்
அத முசுகுந்தேந பஸ்மீக்ருதே அஸ்மிந்
பூபாய அஸ்மை குஹா அந்த: ஸுலலித
வபுஷா தஸ்திஷே பக்தி பாஜே

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் தாமரை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை உடைய நீ, ஜராசந்தனுக்கு அஞ்சி ஓடுவது போல் மதுராவை விட்டு வெளியில் ஓடினாய். உன் கையால் கொல்லப்படும் அளவிற்குக்கூடப் புண்ணியம் செய்யாத அந்த

யவனர் தலைவன் (மிலேச்ச அரசன்) உன்னைத் தொடர, நீ ஒரு மலைக்குகைக்குள் சென்று ஒளிந்து கொண்டாய். அந்தக் குகைக்குள் வந்த அவன், அங்கு உறங்கிக் கொண்டிருந்த முசுகுந்தன் என்பவனை (நீ என்று நினைத்து) காலால் உதைத்து எழுப்பினான். அந்த முசுகுந்தனின் வரத்தின் காரணமாக, அவன் விழித்துப் பார்த்ததும் எதிரே இருந்த மிலேச்ச அரசன் எரிந்து சாம்பலானான். அந்த நேரத்தில் சிறந்த விஷ்ணு பக்தனான அந்த முசுகுந்தனுக்கு நீ அழகான திருமேனியுடன் காட்சியளித்தாயாமே.

11 ஐக்ஷ்வாக: அஹம் வ்ரக்த: அஸ்மி அகில
ந்ருப ஸுகே த்வத் ப்ரஸாத ஏக காங்க்ஷு
ஹா தேவ இதி ஸ்துவந்தம் வர விததிஷு தம்
நிஸ்ப்ருஹம் வீக்ஷ்ய ஹ்ருஷ்யந்
முக்தே: துல்யாம் ச பக்திம்துத ஸகல
மலாம் போக்ஷம் அபி ஆசு தத்வா
கார்யம் ஹிம்ஸா விசுத்யை தப இதி
ச ததா ப்ராத்த லோக ப்ரதீத்யை:

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த முசுகுந்தன் உன்னிடம், நான் இக்ஷ்வாகு வம்சத்து அரசன் ஆவேன். எனக்கு அரச போகங்களில் விருப்பமோ நாட்டமோ இல்லை. உன்னுடைய அனுக்ரகத்தை மட்டுமே வேண்டியுள்ளேன் என்று கூறி வணங்கினான். உன்னிடம் வரம் எதுவும் கேட்கவும் அவன் விரும்பவில்லை. அதனைக் கண்டு நீ மகிழ்ந்து அவனுக்கு மோட்சத்திற்கு ஒப்பான பக்தியை அளித்தாய். அவன் விரைந்து மோட்சம் பெறும் ஞானத்தை அளித்தாய். பல காலமாக அவன் வேட்டை மூலமாக செய்த கொலைகள் காரணமாக உண்டான பாவம் தொலைய தவம் செய்யுமாறும் கூறினாய்.

12 ததநு மதுராம் கத்வா ஹத்வா சமூம் யவந ஆஹ்ருதாம்
மகத பதிநா மார்க்கே ஸைந்யை: புரா இவ நிவாரித:
சரம விஜயம் தர்பாய அஸ்மை ப்ரதாய பலாயித:
ஜலதி நகரீம் யாத: வாத ஆலய ஈச்வர பாஹிமாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ பின்னர் மதுராவிற்குச் சென்று அங்கு கால யவனனின் படைகளை அழித்தாய். நீ செல்லும் வழியில் உன்னைத் தனது படைகளுடன்

ஜராசந்தன் தடுத்தான். அவனுக்கு கர்வம் மேலும் வளர, அவன் இறுதியாக ஒரு முறை வெற்றி பெறுவதுபோல் மாயையை உண்டாக்கினாய். (எப்படி?) நீ ஓடிச்சென்று கடலின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த துவாரகைக்குச் சென்றுவிட்டாய். இப்படிப்பட்ட நீயே என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 த்ரிதச வர்த்தகி வர்த்தித கௌசலம்
த்ரிதச தத்த ஸமஸ்த விபூதிமத்
ஜலதி மத்த்ய கதம் த்வம் அபூஷய:
நவபுரம் வபு: அஞ்சித ரோசிஷா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தப் புதிய நகரம் கடலின் நடுவில் அமைந்தது ஆகும். அதனை தேவலோகச் சிற்பியான விச்வகர்மன் உருவாக்கினான். தேவர்கள் வழங்கிய செல்வத்திரள் அங்கு இருந்தன. அத்தகைய துவாரகை நகரத்தை நீ உனது திருமேனியின் அழகால் மேலும் அழகுபடுத்தினாய்.

2 ததுஷி ரேவத பூப்ருதி ரேவதீம்
ஹல ப்ருதே தநயாம் விதி சாஸநாத்
மஹிதம் உத்ஸவ கோஷம் அபூபுஷ:
ஸமுதிதை: முதிதை: ஸஹ யாதவை:

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ரும்மா தனக்கு இட்ட கட்டளையின்படி ரேவதன் என்ற அரசன் தனது மகளான ரேவதியைப் பலராமனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அப்போது நீயும் யாதவர்களும் ஒன்றாக கூடி நின்று அந்த கல்யாணத்தை உத்ஸவமாகவே கொண்டாடினீர்கள் அல்லவா?

3 அத விதர்ப்ப ஸுதாம் கலு ருக்மிணீம்
ப்ரணயீம் த்வயி தேவ ஸஹோதர:
ஸ்வயம் அதித்ஸத சேதி மஹீபுஜே
ஸ்வ தமஸா தம் அஸாதும் உபாச்ரயந்

**பொருள் -** குருவாயூரப்பா! விதர்ப்ப தேசத்தின் அரசன் மகளான ருக்மிணி என்பவள் உன் மீது மிகுந்த காதல் கொண்டிருந்தாள். அவளுடைய சகோதரனான ருக்மி என்பவன் தனது தீய குணங்களால், மிகவும் துஷ்டனான சேதி நாட்டு மன்னன் சிசுபாலனிடம் நட்பு கொண்டிருந்தான். சிசுபாலனுக்கு ருக்மிணியைத் திருமணம் செய்யவும் விருப்பம் கொண்டாள்.

4 சிர த்ருத ப்ரணயா த்வயி பாலிகா
ஸபதி காங்க்ஷித பங்க ஸமாகுலா
தவ நிவேதயிதும் த்விஜம் ஆதிசத்
ஸ்வ கதநம் கதநங்க விநிர்மிதம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தப் பெண் உன் மீது பல நாட்களாகக் காதல் கொண்டிருந்தாள். தனது காதலுக்கு (அண்ணன் மூலம்) தடை உண்டாவதைக் கண்டு மனம் வருந்தினாள். கருணை என்பதே இல்லாத, காமன் தனக்கு உண்டாக்கிய துன்பத்தை உனக்குத் தெரிவிக்க விருப்பம் கொண்டாள். எனவே ஓர் அந்தணனை உன்னிடம் தூதுவனாக அனுப்பினாள்.

5 த்விஜ ஸுத: அபி ச தூர்ணம் உபாயயௌ
தவ புரம் ஹி துராச துராஸதம்
முதல் அவாப ச ஸாதர பூஜித:
ஸ பவதா பவ தாப ஹ்ருதா ஸ்வயம்

**பொருள் -** குருவாயூரப்பா ! தீய எண்ணம் உடையவர்களால் நெருங்க முடியாத உனது நகரத்திற்குள் அந்தப் ப்ராமணன் வந்து சேர்ந்தான் பிறவிப் பயன் காரணமாக உண்டாகும் துன்பங்களை நீக்கும் நீ, அவனை மிகழ்வுடன் வரவேற்றாய் அல்லவா?

6 ஸ ச பவந்தம் அவோசத குண்டிநே
ந்ருப ஸுதா கலு ராஜதி ருக்மிணீ
த்வயி ஸமுத்ஸுகயா நிஜ தீரதா
ரஹிதயா ஹி தயா ப்ரஹித: அஸ்மி அஹம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தப் ப்ராமணன் உன்னிடம் குண்டினபுரம் என்ற நாட்டில் அழகான இளவரசியாக ருக்மிணி என்பவள் உள்ளாள் அல்லவா? அந்தப் பெண் உன் மீது காதல் கொண்டுள்ளாள். உன்னிடம் வெளிப்படுத்த துணிவு இல்லாத காரணத்தால், என்னைத் தூதுவனாக இப்போது அனுப்பினாள் என்றான்.

7 தவ ஹ்ருதா அஸ்மி புரா ஏவ குணை: அஹம்
ஹரதி மாம் கில சேதி ந்ருப: அதுநா
அயி க்ருபா ஆலய பாலய மாம் இதி
ப்ரஜகதே ஜகத் ஏக பதே தயா

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த அந்தணன் உன்னிடம் மேலும் அவள் உன்னிடம் இவ்வாறு கூறச்சொன்னாள் - கருணாமூர்த்தியே! க்ருஷ்ணா உலகின் நாதனே! உன்னைப் பற்றிய விவரங்களையும் உனது திருக்கல்யாண குணங்களையும் நான் கேள்விப் பட்டேன். அதனால் வெகுவாகக் கவரப்பட்டேன். ஆனால் இப்போதோ என்னை சிசுபாலன் மணந்து கொள்ளப் போகிறான். என்னை நீதான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினானாமே!

8 அசரணாம் யதி மாம் த்வம் உபேக்ஷஸே
ஸபதி ஜீவிதம் ஏவ ஜஹாமி அஹம்
இதி கிரா ஸுதநோ: அதநோத் ப்ருசம்
ஸுஹ்ருதயம் ஹ்ருதயம் தவ காதரம்

**பொருள் -** குருவாயூரப்பா! அவன் மேலும் உன்னிடம் (ருக்மிணி கூறியதாக) நான் இப்போது என்னைக் காப்பாற்ற யாரும் இல்லாமல் உள்ளேன். நீ என்னை கைவிட்டால் எனது உயிரை மாய்த்துக் கொள்ளவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறினான். இதனைக் கேட்டு உனது மனம் துன்பம் கொண்டதாமே!

9 அகதய: த்வம் அத ஏந அயே ஸகே
தத் அதிகா மம மந்மத வேதநா
ந்ருப ஸமக்ஷம் உபேத்ய ஹராமி அஹம்
தத் அயி தாம் தயிதாம் அஸித ஈக்ஷணாம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவனிடம் நண்பனே! என்னுடைய காதல் வேதனை ருக்மிணியை விட அதிகமாக உள்ளது. நான் கூடிய விரைவில் அங்கு வந்து, அத்தனை அரசர்கள் முன்னிலையிலும், அந்தக் கறுத்த விழி படைத்த பெண்ணைக் கைப்பிடிப்பேன், என்றாய் அல்லவா?

10 ப்ரமுதிதேந ச தேந ஸமம் ததா
ரத கத: லகு குண்டிநம் ஏயிவாந்
குரு மருத் புர நாயக மே பவாந்
விதநுதாம் தநுதாம் நிகில ஆபதாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தப் ப்ராமணன் மிகவும் மகிழ்ந்தான். நீ அவனுடன் தேரில் ஏறிக்கொண்டு குண்டினபுரம் சென்றாய். இப்படிப்பட்ட நீ, என்னை எனது தடைகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 பல ஸமேத பல அநுகத: பவாந்
புரம் அகாஹத பீஷ்மக மாநித:
த்விஜ ஸுதம் த்வத் உபாகம வாதிநம்
த்ருத ரஸா தாஸா ப்ரணநாமஸா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னைப் பின் தொடர்ந்து பலராமன் தனது படைகளுடன் வந்தான். நீ குண்டினபுரத்தை அடைந்தபோது பீஷ்மக அரசன் உன்னை வரவேற்றான் (பீஷ்மகன் ருக்மிணியின் தந்தை). உன்னிடம் தூதனாக வந்த அந்தணன் ருக்மிணியிடம் உன்னுடைய வருகையைக் கூறினான். அவள் மிகவும் மகிழ்ந்து அவனைத் துதித்தாள்.

2 புவந காந்தம் அவேக்ஷ்ய பவத் வபு:
ந்ருப ஸுதஸ்ய நிசம்ய ச சேஷ்டிதம்
விபுல கேத ஜுஷாம் புர வாஸிநாம்
ஸருதிதை: உதிதை: அகமந் நிசா

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த நகரத்து மக்கள் உனது அழகான திருமேனியைப் பார்த்து வியந்தனர். இப்படிப்பட்ட உன்னை விடுத்து ருக்மிணியைச் சிசுபாலனுக்குத் திருமணம் செய்து கொடுக்க எண்ணும் ருக்மியின் செயலைக் கேட்டு வருத்தம் கொண்டனர். இப்படியாக அந்த இரவு கழிந்தது.

3 ததநு வந்திதுத் இந்து முகீ சிவாம்
விஹித மங்கள பூஷண பாஸுரா
நிரகமத் பவத் அர்ப்பித ஜீவிதா
ஸ்வபுரத: புரதந: ஸபட ஆவ்ருதா

**பொருள் -** குருவாயூரப்பா! மறுநாள் காலை விடிந்தது. அப்போது உன்னிடம் தனது உயிரையே வைத்திருந்தவளும், சந்திரன் போன்று அழகான முகம் உடையவளும் ஆகிய ருக்மிணி, தனது காவலர்கள் சூழ, அனைத்து மங்கலங்களையும் அளிக்கும் பார்வதியின் கோயிலுக்குச் சென்றாள்.

4 குல வதூபி: உபேத்ய குமாரிகா
கிரி ஸுதாம் பரி பூஜ்ய ச ஸாதரம்
முஹு: அயாசத தத் பத பங்கஜே
நிபதிதா பதிதாம் தவ கேவலம்.

**பொருள் -** குருவாயூரப்பா! குமரியான அந்த ருக்மிணி குலப்பெண்களுடன் இணைந்து. பார்வதியை வணங்கினாள். அவள் பாதங்களில் பலமுறை விழுந்து வணங்கினாள். நீயே தனக்குக் கணவனாக அமைய வேண்டும் என்று வேண்டினாளாமே!

5 ஸமவலோக குதூஹல ஸங்குலே
ந்ருப குலே நிப்ருதம் த்வயி ச ஸ்திதே
ந்ருப ஸுதா நிரகாத் கிரிஜா ஆலயாத்
ஸுருசிரம் ருசிரம் ஜித திக் முகா

**பொருள் -** குருவாயூரப்பா! கோயிலில் இருந்து வெளியே வரப்போகும் ருக்மிணியைக் காண மிகவும் ஆவலுடன் மகிழ்வுடன் அரசர்கள் கூட்டமாக நின்றிருந்தனர். நீ அந்தக் கூட்டத்தில் சேராமல் தனியாக நின்றிருந்தாய். அந்த நேரத்தில் ருக்மிணி தனது உடலில்

உள்ள ஒளியால் அனைத்து திசைகளும் ப்ரகாசிக்கும்படியாக கோயிலில் இருந்து வெளியில் வந்தாள்.

6புவந மோஹந ரூப ருசா ததா
விவசித அகில ராஜ கதம்பயா
த்வம் அபி தேவ கடாக்ஷ விமோக்ஷணை:
ப்ரமதயா மதயாஞ் சக்ருஷே மநாக்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த உலகையே மயங்க வைக்கும் அழகான உடலை உடையவளாக ருக்மிணி இருந்தாள். அவள் தனது பார்வையை அந்த அரசர்கள் மீது பதித்தாள். இதனால் அனைவரும் பரவசம் அடைந்தனர். நீயும் அந்த ருக்மிணியின் கடைக்கண் பார்வையால் மிகுந்த மயக்கம் அடைந்தாயாமே!

7 க்வநு கமிஷ்யஸி சந்த்ர முக இதி தாம்
ஸரஸம் ஏத்ய கரேண ஹரந் க்ஷணாத்
ஸமதிரோப்ய ரதம் த்வம் அபாஹ்ருதா
புவிததா: விதத: நிநத: த்விஷாம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவள் அருகில் சென்று, சந்திரனைப் போன்ற அழகிய முகம் படைத்தவளே! எங்கு செல்கிறாய்? என்று அன்புடன் கேட்டாய். விரைந்து கைகளைப் பிடித்தாய். ஒரு நொடிப் பொழுதில் அவளைத் தூக்கி உனது தேரில் அமர வைத்தாய். பின்னர் அங்கிருந்து விரைவாகச் சென்று விட்டாய். இதனால் எழுந்த பகை அரசர்களின் கூச்சல் உலகம் எங்கும் கேட்டது.

8 க்வ நு கத: பசுபால: இதி க்ருதா
க்ருத ரணா: யதுபி: ச ஜிதா: ந்ருபா:
ந து பவாந் உத்சால்யத் தை: அஹோ
பிசுநகை: சுநகை: இவ கேஸரீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த அரசர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, எங்கே அந்த இடையன்? என்று கேட்டுக்கொண்டே யாதவர்களுடன் மோதினர். ஆனால்

தோற்கடிக்கப்பட்டனர். நாய்கள் கூட்டத்தைக் கண்டு கம்பீரமாக நிற்கும் சிங்கம் போன்று நீ அவர்களைப் பார்த்து அசையாமல் நின்றாயாமே!

9 ததநு ருக்மிணம் ஆகத ஆஹவே
வதம் உபேக்ஷ்ய நிபத்ய விரூபயந்
ஹ்ருத மதம் பரிமுச்ய பல உக்திபி:
புரம் அயா: ரமயா ஸஹ காந்த்யா

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் உன்னுடன் ருக்மி யுத்தம் செய்ய வந்தான். நீ அவனைக் கட்டி வைத்து அவனது முகத்தை அழகில்லாமல் செய்தாய். அதன் பின்னர் பலராமன் கூறியதால் அவனை விடுவித்தாய். அதன் பின்னர் மஹாலக்ஷ்மியான ருக்மிணியை அழைத்துக் கொண்டு துவாரகைக்கு விரைந்தாயாமே!

10 நவ ஸமாகம லஜ்ஜித மாநஸாம்
ப்ரணய கௌதுக ஜ்ரும்பித மந்மதாம்
அர மய: கலு நாத யதா ஸுகம்
ரஹஸி தாம் ஹஸித அம்சு லஸந் முகீம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த ருக்மிணியின் முகமும் மனதும் உன்னைப் போன்றவனின் புதிய சேர்க்கையால் நாணம் கொண்டன. உன் மீது கொண்ட அன்பாலும் மகிழ்வாலும், காமம் மேலும் வளர்ந்தது. இதனால் அவள் முகத்தில் எழிலான புன்னகை அரும்பியது. நீ அவளைத் தனிமையில் இன்பமாக இருக்கும்படி செய்தாயாமே!

11 விவித நர்மபி: ஏவம் அஹ: நிசம்
ப்ரமதம் ஆகலயந் புந: ஏகதா
ருஜு மதே: கில வக்ர கிரா பவாந்
வர தநோ: அதநோத் அதிலோலதாம்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக நீ இரவும் பகலும் உனது வேடிக்கை நிறைந்த காதல் வார்த்தைகளால் ருக்மிணியை மகிழ வைத்தாய். இப்படியிருக்கும்போது ஒரு நாள் நீ கள்ளம் கபடம் அறியாத அழகான ருக்மிணியை, உனது கபடமான வார்த்தையால்

நடுங்க வைத்தாய் அல்லவா? (அந்த வரிகள் பாகவதத்தில் - ருக்மிணி. நீ அரசு இல்லாத என்னை ஏன் திருமணம் செய்தாய். வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ளலாமே - என்பதாகும்.)

12 தத் அதிகை: அத லாலத கௌசலை:
ப்ரணயிநீம் அதிகம் ஸுகயந் இமாம்
அயி முகுந்த பவத் சரிதாநி ந:
ப்ரகத தாம் கத தாந்திம் அபாகுரு

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முகுந்தா! அதன் பின்னர் ருக்மிணியை முன்பைவிட அதிகமாகக் கொண்டாடிப் பேசி அவளை மகிழ்வு கொள்ளச் செய்தாய். இப்படியாக உனது அற்புதமான சரிதங்களையும் லீலைகளையும் கூறும் எங்களுக்கு. எங்கள் நோய்களால் உண்டாகும் துன்பத்தை விலக்க வேண்டும்.

1 ஸத்ராஜித: த்வம் அத லுப்தவத் அர்க்க லப்தம்
திவ்யம் ஸ்யமந்தகமணிம் பகவந் அயாசீ:
தத் காரணம் பஹுவிதம் மம பாதி நூநம்
தஸ்ய ஆத்மஜாம் த்வயி ரதாம் ச லத: விவோடும்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பகவானே! ஸத்ராஜித் என்ற ஒரு யாதவனுக்கு. அவன் சூரியனைக் குறித்து இயற்றிய தவத்தின் மூலமாக, ஸ்யமந்தகம் என்ற தெய்வீக சக்தி உடைய ஓர் இரத்தினக் கல் கிடைத்தது. நீ அந்த கல்லை அவனிடம் பேராசை உள்ளதுபோல் யாசித்தாயாமே! நீ அப்படிக் கேட்டதற்குக் காரணம் எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் அவனுடைய மகளும் உன்மீது காதல் கொண்டிருந்தவளுமான சத்யபாமா என்பவளை திருமணம் செய்து கொள்ளுவதற்கு அல்லவா?

2 அதத்தம் தம் துப்யம் மணி வரம் அநேந அல்ப மநஸா
ப்ரஸேந: தத் ப்ராதா கள புவி வஹந் ப்ராப ம்ருகாயம்
அஹந் ஏநம் ஸிம்ஹ: மணி மஹஸி மாம்ஸ ப்ரம வசாத்
கபி: இந்த்ர: தம ஹத்வா மணிம் அபி ச பாலாய ததிவாந்

**பொருள் -** குருவாயூரப்பா! ஆனால் குறுகிய மனம் உள்ள அந்த ஸத்ராஜித் அந்த மணியை உன்னிடம் தரவில்லை. ஒரு முறை அவன் தம்பியான ப்ரஸேனன் என்பவன் அந்த மணியைத் தனது கழுத்தில் அணிந்து கொண்டு வேட்டைக்குச் சென்றான். அங்கு ஒரு சிங்கம் அந்த மணியைக் கண்டது அது ஒரு மாமிசத்துண்டு என்று நினைத்து ப்ரஸேனனைக் கொன்றது. அதன் பின்னர் குரங்குகளின் தலைவனான ஜாம்பவான் அந்தச் சிங்கத்தைக் கொன்றான். அதனிடமிருந்த மணியைப் பறித்துத் தனது குழந்தையிடம் கொடுத்தானாமே!

3 சசம்ஸுஃ: ஸத்ராஜித் கிரம் அநு ஜநா: த்வாம் மணி ஹரம்
ஜநாநாம் பீயூஷம் பவதி குணிநாம் தோஷ கணிகா
தத: ஸர்வஜ்ஞ: அபி ஸ்வ ஜந ஸஹித: மார்கண பர:
ப்ரஸேநம் தம் த்ருஷ்ட்வா ஹரிம் அபிகத அபூ: கபி குஹாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் ஸத்ராஜித் சொற்களைக் கேட்ட யாவரும் நீதான். அந்த மணியைத் திருடிவிட்டாய் என்று பேசத் தொடங்கினார்கள். நல்லவர்களைப் பற்றிய சிறு தோஷம் அனைவருக்கும் அமிர்தம் உண்டது போல் ஆகிறது போலும். நீ அனைத்தையும் உணர்ந்திருந்தாய். இருந்தபோதிலும் உனது உறவினர்களுடன் அந்த மணியைத் தேடிச் சென்றாய். அப்போது வழியில் சிங்கத்தால் கொல்லப்பட்ட ப்ரஸேனன் உடலையும், ஜாம்பவானால் கொல்லப்பட்ட சிங்கத்தின் உடலையும் கண்டாய். அதன் பின்னர் ஜாம்பவானின் குகையை அடைந்தாயாமே!

4 பவந்தம் அவிதர்கயந் அதிவயா ஸ்வயம் ஜாம்வாந்
முகுந்த சரணம் ஹி மாம் க இஹ ரோத்தும் இதி ஆலபந்
விபோ ரகுபதே ஹரே ஜயஜய இதி அலம் முஷ்டிபி:
சிரம் ஸ்தவ ஸமர்ச்சனம் வ்யதித பக்த சூடாமணி:

**பொருள் -** குருவாயூரப்பா! வயதில் முதிர்ந்தவனும் சிறந்தவனும் ஆகிய அந்த ஜாம்பவான் உன்னை யார் என்று அறியவில்லை. அவன் உன்னிடம், முகுந்தனையே சரணம் என்று புகுந்து என்னை வெல்பவர்கள் யார்? ப்ரபோ! இரமா! இராம பத்ரா! ஹரி! ஜய ஜய! என்று கூறிக்கொண்டே உன்னைத் தனது முட்டிகளால் குத்தினானாமே! இப்படியாகவே

உனக்கு அவன் அர்ச்சனை செய்தான் (அவனை பக்த சூடாமணி என்று பட்டத்ரி கூறுவதைக் காண்க.)

5 பத்வா அத தேந தத்தாம் நவ ரமணீம்
வர மணீம் ச பரிக்ருஹணந்
அநுக்ருஹ்ணந் அமும் ஆகா: ஸபதி ச
ஸத்ராஜிதே மணிம் ப்ராதா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அதன் பின்னர் உன்னை யார்? என்று ஜாம்பவான் உணர்ந்தான். தன்னுடைய பெண்ணான ஜாம்பவதியையும். ஸ்யமந்தகமணியையும் உன்னிடம் கொடுத்தான். நீ உடனே அவனுக்கு ஆசி வழங்கினாய். அதன் பின்னர் அந்த மணியை ஸத்ராஜித்திடம் கொடுத்தாய்.

6 தததநு ஸ கலு வ்ரீடா லோல: விலோல விலாசநாம்
துஹிதரம் அஹோ தீமாந் பாமாம் கிரா ஏவ பர அர்ப்பிதாம்
அதித மணிநா துப்யம் லப்யம் ஸமேத்ய பவாந் அபி
ப்ரமுதித மநா: தஸ்ய ஏவ அதாந் மணிம் கஹந ஆசய:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இதனால் ஸத்ராஜித் மிகுந்த நாணம் கொண்டு அவமானப்பட்டு நின்றான். வேறு ஒருவருக்குத்தான் மணம் செய்து கொடுப்பேன் என்று எண்ணியிருந்த தனது மகள் சத்யபாமாவை ஸயமந்தக மணியுடன் சேர்த்து உனக்குக் கொடுத்தான். நீ அந்த இரத்தினத்துடன் வந்த பொன் போன்ற சத்யபாமாவை மட்டும் ஏற்றுக்கொண்டு, இரத்தினத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்தாய் அல்லவா?

7 வ்ரீடா ஆகுலாம் ரமயதி த்வயி ஸத்யபாமாம்
கௌந்தேய தாஹ கதயா அதகுரூந் ப்ரயாதே
ஹீ காந்திநேய க்ருத வாம கிரா நிபாத்ய
ஸத்ராஜிதம் சததநு: மணிம் ஆஜஹார

**பொருள் -** குருவாயூரப்பா! நீ நாணம் மிகுந்த ஸத்யபாமாவை மேலும் இன்புற்றிருக்கச் செய்து வந்தாய். அப்படிப்பட்ட ஒரு நாளில் உனது அத்தையின் (குந்தி) மகன்கள்

(பாண்டவர்கள்) தீயில் வெந்து மாண்டனர் என்று செய்தி வந்தது. உடனே நீ ஹஸ்தினாபுரத்திற்கு விரைந்தாய். அப்போது அக்ரூரர், க்ருதவர்மன் முதலானோர் கூறியதைக் கேட்டு சததந்வா (இவன் ஸத்யபாமாவை மணக்கத் திட்டமிட்டவன்) என்ற யாதவன் ஸத்ராஜித்தைக் கொன்று விட்டு அந்தச் ஸ்யமந்தக மணியை அபகரித்துச் சென்றானாமே!

8 சோகாத் குரூந் உபகதாம் அவலோக்ய காந்தாம்
ஹத்வா த்ருதம் சததநும் ஸமஹர்ஷய: த்வம்
ரத்நே ஸசங்க இவ மைதில கேஹம் ஏத்ய
ராம: கதாம் ஸமசிசிக்ஷத தார்த்தராஷ்ட்ரம்

**பொருள் -** குருவாயூரப்பா! தனது தந்தை இறந்தவுடன் மிகவும் மனவருத்தப்பட்டு உன்னைத் தேடி உனது மனைவி ஸத்யபாமா குரு நாட்டிற்கு வந்தாளாமே! நீ விரைந்து சென்று சததந்வாவைக் கொன்று அவளை மகிழ வைத்தாய். ஸ்யமந்தக மணி யாரிடம் உள்ளது என்ற சந்தேகம் மிகவும் கொண்ட பலராமன், மிதிலை நகரத்திற்குச் சென்று அங்கு துரியோதனனுக்குக் கதாயுதப் பயிற்சி அளித்தான் அல்லவா?

9 அக்ரூர ஏஷ பகவந் பவத் இச்சயா ஏவ
ஸத்ராஜித: குசரிதஸ்ய யுயோஜ ஹிம்ஸாம்
அக்ரூரத: மணீம் அநாஹ்ருதவாந் புந: த்வம்
தஸ்ய ஏவ பூதிம் உபதாதும் அதி ப்ருவந்தி

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! அக்ரூரர் உனது எண்ணத்தின் விளைவாகவே துர்நடத்தை உள்ள ஸத்ராஜித்தை அழிக்க இப்படி செய்தார். அவருக்கு செல்வத்தை அளிக்க வேண்டும் என்ற நீ நினைத்த காரணத்தினால்தான் அவரிடம் இருந்த ஸ்யமந்தக மணியை நீ வாங்கிக் கொள்ளவில்லை - இப்படியாக அனைவரும் கூறுகிறார்கள்.

10 பக்த: த்வயி ஸ்திரதர: ஸ ஹி காந்திநேய:
தஸ்ய ஏவ காபத மதி: கதம் ஈச ஜாதா
விஜ்ஞாநவாந் ப்ரசமவாந் அஹம் இதி உதீர்ணம்
கர்வம் த்ருவம் சமயிதும் பவதா க்ருதா ஏவ

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! அந்த அக்ரூரர் உன் மீது மிகவும் ஆழ்ந்த பக்தியையும் பணிவையும் உடையவர் அல்லவோ? அவருடைய மனதில் ஸத்ராஜித்தைக் கொல்லும் தீய எண்ணம் எப்படி உண்டானது? அவருக்கு மனதில் நான் அனைத்தும் அறிந்தவன்: அமைதியானவன் என்ற கர்வம் இருந்தது. அதனை அடக்கவே நீ இப்படி செய்திருக்க வேண்டும் என்பது உறுதி.

11 யாதம் பயேநே க்ருதவர்ம யுதம் புந: தம்
ஆஹூய தத் விநிஹிதம் ச மணிம் ப்ரகாச்ய
தத்ர ஏவ ஸுவ்ரத தரே விநிதாய துஷ்யந்
பாமா குச அந்தரசய: பவந ஈச பாயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! க்ருதவர்மனுடன் பயந்து ஓடிய அக்ரூரரை நீ அழைத்தாய். அவரிடம் சததந்வா ஸ்யமந்தக மணியைக் கொடுத்து வைத்திருந்தான் என்று அனைவரிடமும் கூறினாய். சிறந்த விரதங்கள் உடையவரான அக்ரூரரிடம் அந்த மணியை அளித்தாய். பின்னர் ஸத்யபாமாவுடன் இன்பமாக இருந்தாய் அல்லவா? இப்படிப்பட்ட நீ என்னைக் காப்பாயாக!

***

1 ஸ்நிக்தாம் முக்தாம் ஸததம் அபி தாம் ஸாலயந் ஸத்யபாமாம்
யாத: பூய: ஸஹ கலு தயா யாஜ்ஞஸேநீ விவாஹம்
பார்த்த ப்ரீத்யை புந: அபி மநாக் அஸ்தித: ஹஸ்தி புர்யாம்
சக்ர ப்ரஸ்தம் புரம் அபி விபோ ஸம்விதா ஆகத: அபூ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் நிறைந்தவனே! உன்னிடம் மிகுந்த காதலும் அழகும் உடையவளான ஸத்யபாமாவை நீ மகிழச் செய்தாய். அவளை உடன் அழைத்துக் கொண்டு திரௌபதியின் திருமணத்திற்குச் சென்றாய். பின்னர் பாண்டவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, ஹஸ்தினாபுரத்தில் சில நாட்கள் தங்கினாய். அதன் பின்னர் இந்திரப்ரஸ்தம் என்ற ஓர் அழகான நகரத்தை பாண்டவர்களுக்காக உருவாக்கிக் கொடுத்து விட்டு துவாரகை திரும்பினாயாமே!

2 பத்ராம் பத்ராம் பவத் அவரஜாம் கௌரவேண அர்த்யமாநாம்

த்வத் வாசா தாம் அஹ்ருத குஹநா மஸ்கரீ சக்ர ஸூநு:
தத்ர க்ருத்தம் பலம் அநுநயந் ப்ரத்யகா: தேந ஸார்த்தம்
சக்ர ப்ரஸ்தம் ப்ரிய ஸக முதே ஸத்யபாமா ஸஹாய:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய தங்கையும், மிகுந்த அழகானவளும் ஆகிய சுபத்ரை மேல் துரியோதனன் விருப்பம் கொண்டான். ஆனால் உனது ஆலோசனைப்படி அர்ஜுனன் ஒரு துறவி போன்ற வேடம் பூண்டு வந்து அவளைக் கவர்ந்து சென்றான். இதனால் பலராமனுக்கு மிகுந்த கோபம் உண்டாகவே, அவனை நீ சமாதானம் செய்தாய். பின்னர் உனது நண்பனான அர்ஜுனன் கேட்டுக் கொண்டபடி பலராமனோடும், ஸ்த்யபாமாவோடும் ஹஸ்தினாபுரம் சென்றாய் அல்லவா?

3 தத்ர க்ரீடந் அபி ச யமுநா கூல த்ருஷ்டாம் க்ருஹீத்வா
தாம் காளிந்தீம் நகரம் அகம: காண்டவ ப்ரீணித் அக்னி:
ப்ராத்ரு த்ரஸ்தாம் ப்ரணய விவசாம் தேவ பைத்ருஷ்வஸேயீம்
ராஜ்ஞாம் மத்யே ஸபதி ஜஹிஷே மித்ரவிந்தாம் அவந்தீம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஹஸ்தினாபுரத்தில் நீ பாண்டவர்களுடன் விளையாடி மகிழ்ந்தாய். பின்னர் காண்டவ வனத்தை அக்னி தேவனுக்கு இரையாக அளித்தாய். யமுனையின் கரையில் காளிந்தி என்பவளைக் கண்டு அவளை உனது மனைவியாக்கிக் கொண்டு துவாரகை திரும்பினாய். அவந்தி நாட்டின் அரசன் மகளும், உனது அத்தை மகளும் ஆகிய மித்ரவிந்தை என்பவள் உன் மீது காதல் கொண்டிருந்தாள். இருப்பினும் தனது சகோதரர்களுக்குப் பயந்து தனது எண்ணத்தை வெளிக்காட்டாமல் இருந்தாள். இதனால் துன்பமுற்று இருந்த அவளை, பல அரசர்கள் வீற்றிருந்த சபையில் இருந்து கவர்ந்து சென்றாயாமே!

4 ஸத்யாம் கத்வா புந: உதவஹ: நக்நஜித் நந்தநாம் தாம்
பத்வா ஸப்த அபி ச வ்ருஷ வரான் ஸப்த மூர்த்தி: நிமேஷாத்
பத்ராம் நாம ப்ரதது: அத தே தேவ ஸந்தர்த்தந ஆத்யா:
தத் ஸோதர்யா வரத பவத: ஸா அபி பைத்ருஷ்வ ஸேயீ

**பொருள் -** வரம் அளிப்பவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ ஒரு முறை கோஸலை நாட்டிற்குச் சென்றாய். அங்கு நக்னஜித் என்ற அரசன் தனது மகளான ஸத்யாவை மணக்க பந்தயமாக ஏழு எருதுகளை அடக்க வேண்டும் என்று போட்டி வைத்தான். நீ உனது உருவத்தை ஏழு உருவங்களாக எடுத்துக் கொண்டு விரைவாக அந்த ஏழு எருதுகளை அடக்கினாய். பின்னர் அவர் மகளை மணம் முடித்தாய். கேகய நாட்டின் ஸந்தர்த்தனன் என்பவன் தனது சகோதரியான பத்ரா என்பவளை உனக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவளும் உனக்கு ஓர் அத்தை மகள் அல்லவோ?

5 பார்த்த ஆத்யை: அபி அக்ருத லவநம் தோய மாத்ரம அபி லக்ஷ்யம்
லக்ஷம் சித்வா சபரம் அவ்ருதா லக்ஷணாம் மத்ர கந்யாம்
அஷ்டௌ ஏவம் தவ ஸம்பவந் வல்லபா: தத்ர மத்யே
சுச்ரோத த்வம் ஸுரபதி கிரா பௌம துச்சேஷ்டிதாந்

**பொருள் -** குருவாயூரப்பா! மந்திர நாட்டின் அரசன் மீன் இலக்கு ஒன்றின் பிம்பத்தை நீரில் பார்த்து அம்பு எய்து அறுக்க வேண்டும் என்றும், அந்தப் போட்டியில் வெல்பவர்களுக்கே தனது மகளான லக்ஷ்மணை என்றும் அறிவித்தான். அந்த இலக்கு அர்ஜுனனால் கூட எட்ட இயலாது இருந்தது. நீ அதனை அறுத்து அவளை மணம் முடித்தாய். இப்படியாக நீ எட்டு மனைவிகளைக் கொண்டிருந்தாய். அப்போது உன்னிடம் இந்திரன், நரகாசுரன் என்பவனின் கொடுமைகளைக் கூறினானாமே!

6 ஸ்ம்ருத ஆயாதம் பக்ஷி ப்ரவரம் அதிரூட: த்வம் அகம:
வஹந் அங்கே பாமா உபவநம் இவ அராதி பவநம்
விபிந்தன் துர்க்காணி த்ருடித ப்ருதநா சோணித ரஸை:
புரம் தாவத் ப்ராக்ஜ்யோதிஷம் அகுருதா: சோணித புரம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ உடனே கருடனை நினைத்தாய். பறவைகளின் அரசனான கருடன் உடனே வந்தான். அதன் மீது ஏறி அமர்ந்தாய். ஸத்யபாமாவை உனது மடியின் மீது உட்கார வைத்துக் கொண்டாய். ஏதோ ஒரு நந்தவனம் செல்வதுபோல் உற்சாகத்துடன் நரகாசுரன் இருப்பிடம் சென்றாய். அங்கு இருந்த அவனது கோட்டைகளை உடைத்தாய். அவனது படைகளை அழித்தாய். அந்தப் படைவீரர்களின்

இரத்தத்தால் ஜ்யோதிஷம் என்ற பெயர் கொண்ட அந்த நகரம், சோணிதபுரம் (இரத்தம் நிறைந்த புரம்) என்றான தாமே!

7 முர: த்வாம் பஞ்ச ஆஸ்ய: ஜலதிவந மத்யாத் உதபதத்
ஸ: சக்ரே சக்ரேண ப்ரதலித சிரா: மங்க்ஷு பவதா
சது: தந்தை: தந்தாவல பதிபி: இந்தாந ஸமரம்
ரதாங்கேந சித்வா நரகம் அகரோ: தீர்ண நரகம்

**பொருள் -** குருவாயூரப்பா! (அந்த நரகாசுரனுக்கு உதவுவதற்காக) ஐந்து தலைகளை உடைய முரன் என்ற அசுரன் கடலின் நடுவில் இருந்து கிளம்பி உன்னைத் தாக்கினான். உனது சக்ராயுதம் கொண்டு அவன் தலைகளை அறுத்தாய். பின்னர் போர் செய்வதில் மிகுந்த விருப்பம் உடைய நரகன் என்பவன், தனது நான்கு தந்தங்களை உடைய யானைப் படையுடன் உன்னை எதிர்த்தான். நீண்ட நேர போருக்குப் பிறகு ஸுதர்ஸனம் என்ற உனது சக்கரத்தால் அவன் தலையை அறுத்தாய். அவனை தீர்ண நரகனான (மோட்சம் அடைந்த நரகன்) மாற்றினாயாமே!

8 ஸ்துத: பூம்யா ராஜ்யம் ஸபதி பக தத்தே அஸ்ய தநயே
கஜம்ச ஏகம் தத்வா ப்ரஜிகயித நாகாந் நிஜ புரம்
கலேந ஆபத்தாநாம் ஸ்வ கத மநஸாம் ஷோடச புந:
ஸஹஸ்ராணி ஸ்த்ரீணாம் அபி ச தந ராசிம் ச விபுலம்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது நரகனின் தாயான பூதேவி உன்னைத் துதித்தாள். நீ மகிழ்ந்து நரகனின் மகனான பகதத்தன் என்பவனிடம் நாட்டையும், ஒரு யானையையும் அளித்தாய். பின்னர் மற்ற யானைகள் அனைத்தையும், மிகுந்த செல்வங்களையும், உன்மீது மனதை உடையவர்களும், நரகனால் சிறை பட்டிருந்தவர்களும் ஆகிய பதினாயிரம் பெண்களையும் துவாரகைக்குக் கொண்டு சேர்த்தாய்.

9 பௌம அபாஹ்ருத குண்டலம்
தத் அதிதே: தாதும் ப்ரயாத: திவம்
சக்ர ஆத்யை: மஹித: ஸமம் தயிதயா
த்யு ஸ்த்ரீஷு தத்தஹ்ரியா

ஹ்ருத்வா கல்பதரும் ருஷா அபிபதிதம்
ஜித்வா இந்த்ரம் அப்யாகம:
தத் து ஸ்ரீமத தோஷ ஈத்ருச இதி வ்யாக்
யாதும் ஏவ அக்ருதா:

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு ஒரு முறை அதிதியிடம் இருந்து நரகாசுரனால் கவர்ந்து செல்லப்பட்ட குண்டலங்களை மீண்டும் அவளிடமே கொடுக்க நீ விரும்பினாய். ஆகவே, தேவலோகப் பெண்களே வெட்கப்படும் அளவிற்கு அழகுடைய ஸத்ய பாமாவுடன் இந்திரலோகம் சென்றாய். உன்னைக் கண்ட இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் துதித்தனர். அங்கிருந்த கற்பக மரம் தனக்கு வேண்டும் என்று ஸத்யபாமா கேட்டதனால் அதனை நீ எடுக்க முயன்றாய். அப்போது இந்திரன் உன்னைத் தடுத்தான். அவனை வென்று நீ துவாரகை திரும்பினாய். செல்வத்தால் உண்டாகும் கர்வம் எத்தகைய இழிவானது என்று உலகிற்கு உணர்த்தவே நீ இந்திரனிடம் நாடகம் ஆடினாய் அல்லவா?

10 கல்ப த்ரும் ஸத்யபாமா பவந புவி ஸ்ருஜந்
த்வி அஷ்ட ஸாஹஸ்ர யோஷா:
ஸ்வீக்ருத்ய ப்ரத்யகாரம் விஹித பஹு
வபு: லீலயந் கேளி பேதை:
ஆச்சர்யாத் நாரத ஆலோகித விவித கதி:
தத்ர தத்ர அபி கேஹே
பூய: ஸர்வாஸு குர்வந் தச தச
தநயாந் பாஹி வாத ஆலய ஈச:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தக் கற்பக மரத்தை ஸத்யபாமாவின் வீட்டின் பின்புறத்தில் நட்டு வைத்தாய். பின்னர் (நரகனிடம் இருந்து மீட்ட) பதினாயிரம் பெண்களையும் திருமணம் செய்து கொண்டாய். அவர்களைக் தனித்தனியாக வசிக்க வைத்து, நீயும் அத்தனை வடிவங்கள் எடுத்து அவர்களை மகிழ வைத்தாயாமே! எப்படி ஒரே க்ருஷ்ணன் இத்தனை பேரை மணக்க இயலும் என்று நாரதர் வியந்து உன்னைக் காண வந்தார். அவர் உன்னை ஒவ்வொரு வீட்டிலும் அந்தந்த வீட்டில் கடமைகளைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டு வியந்தாராமே! ஒவ்வொரு மனைவிக்கும் நீ பத்துப் பிள்ளைகள் அளித்தாய். இப்படிப்பட்ட நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.

***

1 ப்ரத்யும்ந: ரௌக்மிணேய: ஸ கலு தவ
கலா சம்பரேண ஆஹ்ருத: தம்
ஹத்வா ரத்யா ஸஹ ஆப்த: நிஜ புரம்
அஹாத் ருக்மி கந்யாம் ச தந்யாம்
தத் புத்ர: அத அநிருத்த: குண நிதி:
அவஹத் ரோசநாம் ருக்மி பௌத்ரீம்
தத்ர உத்வாஹே கத: த்வம் நியவதி
முஸலிநா ருக்மீ அலி த்யூத வைராத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது அம்சமாகவே ருக்மணிக்கு ப்ரத்யும்னன் பிறந்தான். அவன் சம்பாசுரனால் கவர்ந்து கொல்லப்பட்டான். ஆனால் அவனோ சம்பாசுரனைக் கொன்று ரதிதேவியுடன் துவாரகை வந்தான். பின்னர் மிகுந்த புண்ணியம் செய்தவளும் ருக்மியின் மகளும் ஆகிய ருக்மவதியை மணந்தான். (ருக்மவதி அவன் மாமன் மகள்). ப்ரத்யும்னனுக்கு மிகச்சிறந்த மகனாக அநிருத்தன் பிறந்தான். அவன் ருக்மணியின் பேத்தியான (ருக்மணியின் பிள்ளையின் பெண்) ரோசனையை மணந்தான். அநிருத்தனின் கல்யாணத்திற்கு நீ சென்றாயாமே! அங்கு சூதாட்டத்தில் எழுந்த சண்டையில் பலராமன் ருக்மியைக் கொன்றான் அல்லவா?

2 பாணஸ்ய ஸா பலி ஸுதஸ்ய ஸஹஸ்ர பாஹோ:
மாஹேச்வரஸ்ய மஹிதா துஹிதா கில உஷா
த்வத் பௌத்ரம் ஏநம் அநிருத்தம் அத்ருஷ்ட பூர்வம்
ஸ்வப்நே அநுபூய பகவந் விரஹ ஆதுரா அபூத்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! பாணாசுரன் என்பவன் மஹாபலியின் பேரனும் சிறந்த சிவ பக்தனும், ஆயிரம் கைகளை உடையவனும் ஆவான். அவனுக்கு உஷா என்ற பெண் இருந்தாள். அவள் உனது பேரனான அநிருத்தனை நேரில் காணாமலே, கனவில் மட்டும் கண்டு, அவன் நினைவில் வாடித் தவித்தாளாமே!

3 யோகிநீ அதீவ குசலா கலு சித்ரலேகா
தஸ்யா: ஸகீ விலிகதீ தருணாந் அசேஷாந்
தத்ர அநிருத்தம் உஷயா விதிதம் நிசாயாம்
ஆநேஷ்ட யோக பலத: பவத: நிகேதாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த உஷாவிற்கு சித்ரலேகா என்ற தோழி இருந்தாள். அவள் யோக சக்தியையும் நுட்பமான திறமைகளையும் கொண்டிருந்தாள். பல இளைஞர்களின் படங்களை வரைந்து உஷாவிற்குக் காண்பித்தாள். அப்படி வரையும்போது அவள் வரைந்திருந்த அநிருத்தனைக் கண்ட உஷா, சித்ரலேகாவிடம் விவரத்தைக் கூறினாள். உடனே சித்ரலேகா தனது யோகத்தின் மூலம் உனது மாளிகையில் இருந்த அநிருத்தனைக் கவர்ந்து சென்றாளாமே!

4 கந்யா புரே தயிதயா ஸுகம் ஆரமந்தம்
ச ஏநம் கதஞ்சந பபந்துஷி சர்வ பந்தௌ
ஸ்ரீநாரத உக்த தத உதந்த துரந்த ரோஷை:
த்வம் தஸ்ய சோணிதபுரம் யதுபி: ந்யருந்தா:

**பொருள் -** குருவாயூரப்பா! அநிருத்தன் உஷாவுடன் அவளது அந்தப்புரத்தில் இன்பமாக இருந்தபோது, சிவபக்தனான பாணாசுரன் என்பவன் அவனைக் கட்டிப்போட்டு சிறை வைத்தான். இதனை நீ நாரதர் மூலமாக அறிந்தாய். உடனே நீ யாதவர்களுடன் கிளம்பி சோணிதபுரம் சென்று அந்த நகரை அழிக்கத் தொடங்கினாய்.

5 புரீ பால: சைல ப்ரிய துஹித்ரு நாத: அஸ்ய பகவாந்
ஸமம் பூத வ்ராதை: யது பலம் அசங்கம் நிருருதே
மஹா ப்ராண: பாண: ஜடிதி யுயுதாநேந யுயுதே
குஹ: ப்ரத்யும்நேந த்வம் அபி புர ஹந்த்ரா ஜகடிஷே

**பொருள் -** குருவாயூரப்பா! ஆனால் அந்தப் பாணாசுரன் நகரத்தைக் காப்பவரும், பார்வதியின் கணவனும் ஆகிய சிவன், உனது யாதவர் படையை விரட்ட ஆரம்பித்தார். அந்தப் போரில், பாணாசுரன் ஸாத்யகியுடனும், முருகன் ப்ரத்யும்னனோடும், சிவன் உன்னோடும் சண்டையிட்டனர் அல்லவா?

6 நிருத்த அசேஷ அஸ்த்ரே முமுஷி தவ அஸ்த்ரேண கிரிசே
த்ருதா பூதா பீதா: ப்ரமத குல வீரா: ப்ரமயிதா:

பராஸ் கந்தத் ஸகந்த: குஸும சர பாணை: ச ஸசிவ:
ஸ: கும்பாண்ட: பாண்டம் நவம் இவ பலேந ஆசு பிபிதே

**பொருள் -** குருவாயூரப்பா! பரமசிவன் உன்மீது எய்த அனைத்து அஸ்திரங்களையும் நீ சுலபமாக உனது அஸ்திரங்களால் தடுத்தாய். மேலும் சிவனையும் மயக்கமுற்று விழும்படி செய்தாய். இதனைக் கண்ட பூதகணங்கள் பயந்து ஓடிவிட்டன. பூதகணங்களின் தலைமை சேனாதிபதிகள் மிகவும் துன்பம் அடைந்தனர். தனது மன்மத பாணங்கள் மூலம் முருகனைப் ப்ரத்யும்னன் புறமுதுகு காண்பித்து ஓட வைத்தான். பாணாசுரனின் மந்திரியான கும்பாண்டன் என்பவனை ஒரு பாண்டத்தை உடைப்பது போல் பலராமன் கொன்றான்.

7 சாபாநாம் பஞ்ச சத்யா ப்ரஸபம்
உபகதே சிந்ந சாபே அத பாணே
வ்யர்த்தே யாதே ஸமேத: ஜ்வர பதி:
அசநை: அஜ்வரி த்வத் ஜ்வரேண
ஜ்ஞாநீ ஸ்துத்வா அத தத்வா தவ சரித
ஜுஷாம் விஜவரம் ஸ ஜ்வர: அகாத்
ப்ராய: அந்த: ஜ்ஞாநவந்த: அபி ச பஹு
தமஸா ரௌத்ர சேஷ்டா ஹி ரௌத்ரா:

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் பாணாசுரன் ஐந்நூறு விற்களோடு உன்னுடன் போர் புரிய வந்தான். அவனுடைய விற்கள் அனைத்தும் முறிந்தவுடன், அவன் ஓடிவிட்டான். அப்போது சைவ ஜ்வரத்தின் தலைவன் உன்னை எதிர்த்தான். ஆனால் அவன் உனது வைணவ ஜ்வரத்தினால் விரட்டியடிக்கப்பட்டான். மிகுந்த ஞானம் உடைய அவன் ஓடும்போது, க்ருஷ்ணா! உனது மகிமைகளைக் கூறுபவர்களுக்கு ஜ்வரத்தின் வேதனைகளே இருக்காது என்று வரம் கொடுத்தனர். சிவனைக் சார்ந்தவர்கள் மிகுந்த ஞானம் உள்ளவர்களாக இருந்தாலும் தங்கள் தமோ குணம் காரணமாக கொடுமையான செயல்களையே செய்பவர்கள் போல் உள்ளதே!

8 பாணம் நாநா ஆயுத உக்ரம் புந:
அதிபதிதம் தர்ப தோஷாத் விதந்வந்

நிர்லூந அசேஷ தோஷாம் ஸபதி
புபுதுஷா சங்கரேண உபகீத:
தத் வாசா சிஷ்ட பாஹு த்விதயம்
உபயதோ நிர்பயம் தத் ப்ரியம் தம்
முக்த்வா தத் தத்த மாந: நிஜ புரம்
அகம: ஸாநிருத்த: ஸஹோஷ:

**பொருள் -** குருவாயூரப்பா! மறுபடியும் பலவகையான கொடிய ஆயுதங்கள் ஏந்தியவனாகவும் கர்வம் உடையவனாகவும் பாணாசுரன் உன்னுடன் போர் புரிய வந்தான். நீ அவனது ஆயிரம் கைகளையும் வெட்டி எறிந்தாய். இதன் மூலம் அவனது பாவங்களும் தொலைந்தன. தனது பக்தனின் தோஷங்கள் யாவும் நீங்கியதை உணர்ந்த சிவன் உன்னை வணங்கினார். அவர் வேண்டுகோளுக்கு இணங்க, பாணாசுரன் உன்னை வணங்க இரண்டு கைகளை மட்டும் உடையவனாகச் செய்தாய். அவனை விடுதலை செய்தாய். அவன் உனக்கு பல மரியாதைகள் செய்தான். பின்னர் நீ அநிருத்தனோடும், உஷாவோடும் துவாரகை சென்றாய்.

9 முஹு: தாவத் சக்ரம் வருணாம் அஜய: நந்த ஹரணே
யமம் பால ஆநீதௌ தவ தஹந பாநே அநில ஸகம்
விதிம் வத்ஸ ஸ்தேயே கிரிசம் இஹ பாணஸ்ய ஸமரே
விபோ விச்வ உத்கர்ஷீ தத் அயம் அவதார: ஜயதிதே

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரப்பா! நீ இந்திரனை பலமுறை வென்றாய்; நந்தகோபரை வருணன் கவர்ந்து சென்றபோது அவனை அடக்கினாய்; ஸாந்தீபநி முனிவரின் மகனை மீட்டபோது யமனை வென்றாய்; காட்டில் உண்டான நெருப்பை உண்டபோது அக்னி தேவனை வென்றாய்; ப்ரும்மா கன்றுகளையும் சிறுவர்களையும் மறைத்தபோது அவனை வென்றாய்; இப்போது பாணாசுர யுத்தத்தில் பரமசிவனையும் வென்றாய் - க்ருஷ்ணா! பகவானே! குருவாயூரப்பா! இதனால்தான் உனது இந்த க்ருஷ்ணாவதாரம் மற்ற அவதாரங்களிலும் மேன்மை உடையதாக உள்ளது.

10 த்விஜ ருஷா க்ருகலாஸ வபு: த்ரம்
ந்ருக ந்ருபம் த்ரிதவ ஆலயம் ஆபயந்

நிஜ ஜநே த்விஜ பக்திம் அநுத்தமாம்
உபதிசந் பவந ஈச்வர பாஹிமாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ந்ருகன் என்ற அரசன் ஓர் அந்தணனின் சாபத்தால் ஓணானாக அலைந்தான் நீ அவனது சாபத்தை நீக்கி பெருமை அளித்தாய். இதன் மூலம் அனைவருக்கும் அந்தணர்களிடம் பக்தி இருக்க வேண்டும் என்று உணர்த்தினாய். இப்படிப்பட்ட நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.
***

1 ராமே அத கோகுல கதே ப்ரமதா ப்ரஸக்தே
ஹூத அநுபேத யமுநா தமநே மத அந்தே
ஸ்வைரம் ஸமாரமதி ஸேவக வாத மூட:
தூதம் ந்யயுங்க்த தவ பௌண்ட்ரக வாஸுதேவ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு முறை பலராமனுக்கு கோகுலத்தில் ஆயர் பெண்களிடம் களிப்புடன் இருக்கத் தோன்றியது. இதனால் மயக்கத்துடன் இருந்தார். தான் அழைத்தபோது தன்னிடம் வர மறுத்த யமுனை நதியை தனது கலப்பையால் அடக்கினானாமே! அந்த நாட்களில் பவுண்ட்ரக வாசுதேவன் என்பவன் தனது வேலைக்காரர்கள் பேச்சில் மயங்கி, உன்னிடம் ஒரு தூதனை அனுப்பினான்.

2 நாராயண: அஹம் அவதீர்ண: இஹ அஸ்மி பூமௌ
தத்ஸே கில த்வம் அபி மாமக லக்ஷணாநி
உத்ஸ்ருஜ்ய தாநி சரணம் வ்ரஜ மாம் இதி த்வாம்
தூத: ஜகாத ஸகலை: ஹஸித: ஸபாயாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த தூதன் உன்னிடம் வந்த பவுண்ட்ரகன் கூறியதாக பின்வருமாறு சொன்னான் - நாராயணனாகிய நான் இந்தப் பூமியில் பவுண்ட்ரக வாசுதேவனாக அவதாரம் செய்துள்ளேன் நீயும் உன்னை நாராயணனின் அவதாரம் என்று கூறிக்கொண்டு என்னுடைய குறிகளை அணிந்துள்ளாய். அவற்றை துறந்து விட்டு என்னிடம் சரண் புகுந்து விடு என்பதாகும். இதனைக் கேட்ட சபையில் உள்ள அனைவரும் சிரித்தனர்.

3 தூதே அத யாதவதி யாதவ ஸைநிகை: த்வம்

யாத: ததர்சித வபு: கில பௌண்ட்ரகீயம்
தாபேந வக்ஷஸி க்ருத அங்கம் அநல்ப மூல்ய
ஸ்ரீ கௌஸ்துப மகர குண்டல பீத சேலம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தத் தூதன் சென்ற பின்னர் நீ உனது யாதவ படைகளுடன் பவுண்ட்ரகனின் இடத்தை அடைந்தாய். ஸ்ரீவத்ஸம் என்ற மச்சம் போல் போலியாகத் தனது மார்பில் சூடு வைத்தத் தழும்பு ஏறியும், கவுஸ்துபம் என்று மார்பில் போலியான ஒரு ரத்தினத்தை வைத்துக் கொண்டும், காதுகளில் மகர குண்டலங்களோடும், இடுப்பில் மஞ்சள் பட்டுடனும் இப்படியாக இருந்த அவனை நீ கண்டாயாமே!

4 கால அயஸம் நிஜ ஸுதர்சநம் அஸ்யத: அஸ்ய
கால அநல உத்கர கிரேண ஸுதர்சநேந
சீர்ஷம் சகர்தித மமர்தித ச அஸ்ய ஸேநாம்
தத் மித்ர காசிப சிர: சகர்த்த காச்யாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அவன் கருமையான இரும்பினால் செய்த சக்கரம் ஒன்றை சுதர்ஸனம் என்று உன் மீது தொடுத்தான். ஆனால் உனது உண்மையான சுதர்ஸனமோ தீப்பிழம்புகளைக் கக்கியபடி சென்று அவன் தலையை அறுத்தது. அவனது படைகளையும் நீ அழித்தாய். அவனுக்கு உதவிய அவன் நண்பனான காசி மன்னனின் தலையை அறுத்து, அந்தத் தலை, காசியில் விழும்படி செய்தாய்.

5 ஜாட்யேந பாலக கிரா அபி கில அஹம் ஏவ
ஸ்ரீவாஸுதேவ இதிரூட மதி: சிரம் ஸ:
ஸாயுஜ்யம் ஏவ பவத் ஐக்ய தியா கத அபூத்
க: நாம கஸ்ய ஸுக்ருதம் கதம் இதி அவேயாத்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தப் பவுண்ட்ரகன் தனது அறியாமையால் சிறு பிள்ளைத்தனமாக, தானே வாசுதேவன் என்று எண்ணி வந்தான் அல்லவா? உன்னுடன் இப்படியாக சிந்தனையில் ஒன்றியதால் அவன் மோட்சம் பெற்றான். உன்னிடம் ஐக்கியமானான். யார் யாருடைய புண்ணியத்தை எப்படி உணர முடியும்?

6 காசீ ஈஸ்வரஸ்ய தநய: அத ஸுதக்ஷிண ஆக்ய:
கர்வம் ப்ரபூஜ்ய பவதே விஹித அபிசார
க்ருத்யா அநலம் கம் அபி பாண ரண அதிபீதை:
பூதை: கதஞ்சந வ்ருதை: ஸமம் அப்யமுஞ்சத்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னால் கொல்லப்பட்ட காசி மன்னனின் மகன் ஸுதட்சிணன் என்பவன் ஆவான். அவன் சிவனை வணங்கி உன்னைக் கொல்ல அபிசார மந்திரம் கூறினான். பாணாசுரப் போரில் உன்னிடம் பயந்து ஓடிய பூத கணங்களை அபிசார தேவதையாக உன்னிடம் அனுப்பினான்.

7 தால ப்ரமாண சரணாம் அகிலம் தஹந்தீம்
க்ருத்யாம் விலோக்ய சகிதை: கதித: அபி பௌரை:
த்யூத உத்ஸவே கிம் அபிநோ சலித: விபோ த்வம்
பார்ச்வஸ்தம் ஆசு விஸஸர்ஜித கால சக்ரம்

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரப்பா! அந்த அபிசார தேவதை பனைமரம் அளவிற்கு உயரமான கால்களை உடையதாகவும், அனைத்தையும் எரிப்பது போன்றும் இருந்தது. அதனைக் கண்டு அஞ்சிய மக்கள் உன்னிடம் வந்து இந்தச் செய்தியைக் கூறினார்கள். பகடை விளையாடிக் கொண்டிருந்த நீ இதனைக் கேட்டு சிறிதும் நகரவில்லை. உனது ஸுதர்ஸன சக்கரத்தை மட்டுமே விடுத்தாய்.

8 அப்யாபததி அமித தாம்நி பவந் மஹா அஸ்த்ரே
ஹா ஹா இதி வித்ருதவதீ கலு கோர க்ருத்யா
ரோஷாத் ஸுதக்ஷிணம் அதிக்ஷண சேஷ்டிதம் தம்
புப்லோஷ சக்ரம் அபி காசி புரீம் அதாக்ஷீத்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய ஸுதர்சன சக்கரம் மிகுந்த ஒளியை வீசியபடி வந்தது. அதனால் துரத்தப்பட்ட அபிசார தேவதை ஹா ஹா என்று கதறியபடி தன்னை ஏவிய அந்த ஸுதட்சிணனையே அழித்தது. உனது சக்ரம் காசி நகரத்தையே அழித்தது.

9 ஸ கலு விவித: ரக்ஷ: காதே க்ருத உபக்ருதி: புரா

தவ து கலயா ம்ருத்யும் ப்ராப்தும் ததா கலதாம் கத:
நாக ஸசிவ: தேச க்லேசம் ஸ்ருஜந் நகர அந்திகே
ஜடிதி ஹலிநா யுத்யந் அத்தா பபாத தல ஆஹத:

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு ஒரு சமயம் (த்ரேதா யுகத்தில்) நீ இராமாவதாரம் கொண்டபோது அசுரர்களை அழிப்பதற்கு விவிதன் என்பவன் உதவினான். அவன் நீ க்ருஷ்ணாவதாரம் எடுக்கும்போது உனது கைகளால் சாகடிக்கப்பட வேண்டும் என்று விரும்பினான். இதனால் மிகுந்த தீயச் செயல்களைச் செய்தான். மேலும் நரகாசுரனின் மந்திரியாக அந்த நாட்டிற்குப் பல தீமைகளைச் செய்தான். துவாரகை அருகில் போர் செய்து வந்தபோது பலராமன் அவனுடன் போர் புரிந்து தனது கைகளால் அடித்துக் கொன்றாராமே!

10 ஸாம்பம் கௌரவ்ய புத்ரீ ஹரண நியமிதம்
ஸாந்த்வநா அர்த்தீ குரூணாம்
யாத: தத் வாக்ய ரோஷ உத்த்ருத
கரி நகர: மோசயாமாஸ ராம:
தே காத்யா: பாண்டவேயை: இதி யது
ப்ருதநாம் ந அமுச: த்வம் ததாநீம்
தம் த்வாம் துர்போத லீலம் பவந புரபதே
தாப சாந்த்யை நிஷேவே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஸாம்பன் (ஜாம்பதியின் மகன்) என்பவன் துரியோதனின் மகளான லட்சணையைக் கவர்ந்து சென்றான். எனவே அவன் கவுரவர்களால் சிறை வைக்கப்பட்டான். அவனை மீட்டு வர பலராமன் சென்றான். ஆனால் அவர்கள் கூறிய சொற்களைக் கேட்டு கோபம் கொண்ட பலராமன், தனது கலப்பையால் ஹஸ்தினாபுரத்தையே பெயர்த்து, ஸாம்பனை மீட்டாராமே! நீ பலராமனுடன் யாதவர்களை அனுப்பவில்லை. காரணம், கவுரவர்கள், பாண்டவர்கள் கைகளால் மடிய வேண்டியவர்கள் என்று நீ அறிந்தாய். இப்படிப்பட்ட லீலைகள் செய்தவனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எனக்குத் துன்பம் நீங்கி அமைதி விளைய வேண்டுகிறேன்.

***

1 க்வசித் அத தபந உபராக காலே
புரி நிததத் க்ருதவர்ம காமஸூநூ
யதுகுல மஹிளா ஆவ்ருத: ஸுதீர்த்தம்
ஸமுபகத: அஸி ஸமந்த பஞ்சக ஆக்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு சமயம் நீ சூரிய க்ரஹணம் அன்று க்ருதவர்மனையும் அநிருத்தனையும் துவாரகை நகரத்திற்குக் காவலாக வைத்து விட்டு, ஸமந்த பஞ்சகம் என்ற இடத்திற்கு, யாதவர்கள் அனைவரும் தங்கள் வீட்டுப் பெண்கள் உட்பட உன்னைத் தொடரச் சென்றாயாமே!

2 பஹுதர ஜநதா ஹிதாய தத்ர த்வம் அபி
புநந் விநிமஜ்ய தீர்த்த தோயம்
த்விஜ கண பரிமுக்த வித்த ராசி:
ஸமமிலதா: குரு பாண்டவ ஆதி மித்ரை:

**பொருள் -** குருவாயூரப்பா! அனைத்து மனிதர்களின் நலனுக்காக அங்கு இருந்த புண்ணிய நீரில் நீ நீராடினாய். இதன் மூலம் அந்த நீரை மேலும் தூய்மைப்படுத்தினாய். அங்கு இருந்த அந்தணர்களுக்குத் தானம் பல கொடுத்தாய். பின்னர் (அங்கு வந்திருந்த) கவுரவர்களுடனும், பாண்டவர்களுடனும் பேசி மகிழ்ந்தாய்.

3 தவ கலு தயிதா ஜநை: ஸமேதா
த்ருபத ஸுதா த்வயி காட பக்தி பாரா
தத் உதித பவத் ஆஹ்ருதி ப்ரகாரை:
அதி முமுதே ஸமம் அந்ய பாமிநீபி:

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது உன் மீது ஆழ்ந்த பக்தி உடைய திரௌபதி உனது மனைவிகளுடன் பேசி மகிழ்ந்தாளாமே! உனது மனைவிகள் அவளிடம் நீ அவர்களை எப்படிக் கவர்ந்து வந்து மணந்தாய் என்று கூறி மகிழ்வுற்றனர். இதனைக் கேட்டத் திரௌபதியும் மற்ற பெண்களும் மகிழ்ந்தனர்.

4 தததநு ச பகவந் நிரீக்ஷ்ய கோபாந்

அதி குதுகாத் உபகம்ய மாநயித்வா
சிரதா விரஹ ஆதுர அங்க ரேகா:
பசுப வதூ: ஸரஸம் த்வம் அந்வயாஸீ

**பொருள் -** குருவாயூரப்பா! பகவானே! அதன் பின்னர் நீ நந்தகோபர் முதலான ஆயர்களைக் கண்டு அவர்களுடன் பேசி மகிழ்ந்தாய். உனது நெடுநாளைய பிரிவினால் கோபிகைகள் மிகவும் இளைத்திருந்தனர். நீ மிகவும் அன்புடன் அவர்கள் பின்னே சென்றாயாமே!

5 ஸபதி ச பவத் ஈக்ஷண உத்ஸவேந
ப்ரமுதித மாந ஹ்ருதாம் நிதம்பிநீ நாம்
அதிரஸ பரிமுக்த கஞ்சுலீகே
பரிசப ஹ்ருத்யதரே குசே ந்யலைஷீ:

**பொருள் -** குருவாயூரப்பா! கோபிகைகள் உன்னைக் கண்டவுடன் தங்கள் மனதில் இதுநாள் வரை கொண்டிருந்த கர்வத்தினை விட்டு மிகவும் மகிழ்வு கொண்டனர். அவர்களது மார்புக் கச்சைகள் தாமாகவே மகிழ்ச்சியால் அவிழ்ந்தன. முன்பு உனக்கு உண்டாகிய பழக்கம் காரணமாக இன்பம் விளைவிக்கும் அவர்கள் ஸ்தனங்களில் நீ ஒன்றிவிட்டாயாமே!

6 ரிபு ஜந கலஹை: புந: புந: மே
ஸமுபகதை: இயதீ விலம்பநா அபூத்
இதி க்ருத பரிரம்பணே த்வயி த்ராக்
அதி விவசா கலு ராதிகா நிலில்யே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அங்கு இருந்த ராதையை நோக்கி, பல பகைவர்களுடன் அடிக்கடி யுத்தம் செய்ய நேரிட்டது. இதனால் நான் வருவதில் தாமதம் ஆகிவிட்டது. என்று கூறி அவளை அணைத்துக் கொண்டாய். அவளும் மிகுந்த மகிழ்வு உண்டாகி உன்னிடம் ஒடுங்கினாளாமே!

7 அபகத விரஹ வ்யதா: ததா தா
ரஹஸி விதாய ததாத தத்வ போதம்

பரம ஸுக சித் ஆத்மக: அஹம் ஆத்மா இதி
உதயது வ: ஸ்புடம் என சேதஸி இதி

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவர்களுடன் தனிமையில் இருந்து அவர்கள் உன்னைப் பிரிந்ததன் காரணமாக உண்டான துன்பத்தை நீக்கினாய். பின்னர் அவர்களிடம், நான் பரம ஆனந்தத்தின் வடிவம் ஞானத்தின் வடிவம்; இப்படியாக உள்ள பரம்பொருள் (பரமாத்மா) என்று நீங்கள் உங்கள் மனதில் உணர்ந்து கொள்ளுங்கள் என்று உன்னைப் பற்றிய உயர்ந்த ஞானத்தை உபதேசித்தாய்.

8 ஸுக ரஸ பரிமிச்ரித: வியோக:
கிம் அபி புரா பவத் உத்தவ உபதேசை:
ஸமபவத் அமுத: பரம் து தாஸாம்
பரம ஸுக ஐக்யம் அயீ பவத் விசிந்தா

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு உத்தவர் வந்திருந்தபோது அவர் கூறிய உபதேசங்கள் மூலம் கோபிகைகளுக்கு உண்டான துன்பம் சிறிது மறைந்திருந்தது. இப்போது நீ கூறியதைக் கேட்டவுடன் அவர்கள் வருத்தம் நீங்கி மனம் முழுவதும் ஆனந்தமே நிரம்பியிருந்தது.

9 முனி வர நிவஹை: தவ அத பித்ரா
துரித சமாய சுபாநி ப்ருச்யமானை:
த்வயி ஸதி கிம் இதம் சுபாந்த்ரை: இதி
உரு ஹஸிதை: அபி யாஜித: ததா அஸௌ

**பொருள் -** குருவாயூரப்பா! உனது தந்தையான வசுதேவர் அங்கிருந்த முனிவர்களிடம் பாவம் தொலைந்து புண்ணியம் உண்டாகும் நற்செயல்களை உபதேசிக்குமாறு கூறினார். அவர்கள் சிரித்துக் கொண்டே, (உன்னைப் பார்த்து), நீ அருகில் உள்ளபோது நற்செயல்கள், கர்மங்கள் என்று ஏதாவது அவசியமா? என்றனர். ஆனாலும் வசுதேவரிடம் யாகம் ஒன்றைச் செய்யும்படிக் கூறினர்.

10 ஸுமஹதி யஜநே விதாயமாநே

ப்ரமுதித மித்ர ஜநே ஸஹ ஏவ கோபா:
யது ஜந மஹிதா: த்ரி மாஸ மாத்ரம்
பவத் அநுஷங்க ரஸம் புரா இவ பேஜு:

**பொருள் -** குருவாயூரப்பா! முனிவர்கள் கூறியபடி ஒரு பெரிய யாகம் வசுதேவரால் நடத்தப்பட்டது. பல நண்பர்களும் யாதவர்களும் கலந்து கொண்டு பெருமை அளித்தனர். இப்படியாக உன்னுடன் ஆயர்கள் மூன்று மாத காலம் இருந்தனர். முன்பு போலவே அவர்கள் மிகுதியான சுகம் பெற்றனர்.

11 வ்யபகம ஸமயே ஸமேத்ய ராதாம்
த்ருடம் உபகூஹ்ய நிரீக்ஷ்ய வீத: கேதாம்
ப்ரமுதித ஹ்ருதய: புரம் ப்ரயாத:
பவந புர ஈச்வர பாஹி மாம் கதேப்ய:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ மீண்டும் புறப்படத் தயாரானாய். அப்போது ராதையிடம் சென்று அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாய். இதனால் நீ பிரியப் போகிறாய் என்று துன்பம் அற்றவளாக அவள் இருந்தாள். இதனைக் கண்டு மகிழ்வுற்ற நீ துவாரகைக்கு திரும்பினாய். இப்படிப்பட்ட நீ எனது பிணிகளில் இருந்து காப்பாயாக!
***

1 ததா: மகத பூப்ருதா சிர நிரோத ஸங்க்லேசிதம்
சத அஷ்டக யுத அயுத விதயம் ஈச பூப்ருதாம்
அநாத சரணாயதே கம் அபி பூருஷம் ப்ராஹிணோத்
அயாசத ஸ மாகத க்ஷபணம் ஏவ கிம் பூயஸா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மகத நாட்டின் மன்னனான ஜராஸந்தன் என்பவன் இருபதினாயிரத்து எண்ணூறு அரசர்களைத் தனது சிறையில் அடைத்து வைத்திருந்தான். அந்த அரசர்கள் பெரிதும் வருந்தினர். பின்னர் ஆதரவு இல்லாதவர்களுக்குப் புகலிடமாக விளங்கும் உன்னிடம் ஒரு தூதுவனை அனுப்பினர். இங்கு மேலும் கூறவேண்டியது என்ன? அவன் உன்னிடம் ஜராசந்தனை அழிக்கும்படி வேண்டினான்.

2 யியாஸு: அபிமாகதம் தததநு நாரத உதீரிதாத்

யுதிஷ்டிர மக உத்யமாத் உபய கார்ய பர்யாகுல:
விருத்த ஜயிந்: அத்வராத் உபயஸித்தி: இதி உத்தவே
சசம்ஸுஷி நிஜை: ஸமம் புரம் இயேத யௌதிஷ்டிரீம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ ஜராஸந்தனுடன் யுத்தம் புரியக் கிளம்பினாய். அப்போது அங்கு வந்த நாரதர் உன்னிடம், தர்மர் ராஜஸூயயாகம் செய்யப்போவதைக் கூறினார். ஒரே நேரத்தில் இரண்டு அலுவல்கள் வந்ததை எண்ணி நீ வருத்தம் கொண்டாய் (எங்கு செல்வது என்று). இதனை உணர்ந்த உத்தவர் உன்னிடம், ராஜஸூய யாகம் என்பது பகைவர்களை வென்றபின் நடத்தப்பட வேண்டியது. ஆக இரண்டும் ஒன்றாகக் கைகூடுவது உறுதி என்றார். உடனே நீ உனது சேனைகளுடன் இந்த்ரப்ரஸ்தம் சென்றாய்.

3 அசேஷ தயிதா யுதே த்வயி ஸமாகதே தர்மஜ:
விஜித்ய ஸஹஜை: மஹீம் பவத் அபாங்க ஸம்வர்த்திதை:
ச்ரியம் நிருபமாம் வஹந் அஹ பக்த தாஸாயிதம்
பவந்தம் அபி மாகதே ப்ரஹிதவாந் ஸபீம அர்ஜுநம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது மனைவியர்களை அழைத்துக் கொண்டு நீ இந்த்ரப்ரஸ்தம் வந்து சேர்ந்தாய். உனது அருள் பார்வை மூலம் தர்மர் தனது தம்பிகளுடன் சேர்ந்து பல தேசங்களை வென்றார். ஒப்புமை இல்லாத செல்வங்களையும் பெற்றார். பக்தர்களின் அடிமையான உன்னை பீமனோடும் அர்ஜுனனோடும் ஜராஸந்தனுடன் போர் புரிய அனுப்பினாராமே!

4 கிரிவ்ரஜ புரம் கதா: ததநு தேவ யூயம் த்ரய:
யயாச ஸமர உத்ஸவம் த்விஜ மிஷேண தம் மாகதம்
அபூர்ண ஸுக்ருதம் து அமும் பவநஜேந ஸங்க்ராமயந்
நிரீக்ஷ்ய ஸஹ ஜிஷ்ணுநா த்வம் அபி ராஜ யுத்வா ஸ்தித:

**பொருள் -** குருவாயூரப்பா! நீங்கள் மூவரும் அந்தணர்கள் போல் வேடம் பூண்டு மகத நாட்டின் தலைநகரமான கிரிவ்ரஜம் என்ற நகரத்தை அடைந்தீர்களாமே! அங்கு ஜராஸந்தனிடம் மற்போர் புரிய விண்ணப்பித்தீர்கள். புண்ணிய, செயல்கள் அதிகம்

இல்லாத அந்த ஜராஸந்தனைப் பீமனுடன் மல்யுத்தம் செய்ய வைத்தாய். நீயும் அர்ஜுனனும் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களாமே!

5 அசாந்த ஸமர உத்ததம் விடப் பாடநா ஸம்ஜ்ஞயா
நிபாத்ய ஜரஸ: ஸுதம் பவநஜேந நிஷ்பாடிதம்
விமுச்ய ந்ருபதீந் முதா ஸமநுக்ருஹ்ய பக்திம் பராம்
திதேசித கத ஸ்ப்ருஹாந் அபி ச தர்ம குப்த்யை புவ;

**பொருள் -** குருவாயூரப்பா! முடிவு என்பதே இல்லாத அந்த யுத்தத்தில் ஜராஸந்தன் கர்வத்துடன் நின்றான். அப்போது நீ மரக்குச்சி ஒன்றை எடுத்து இரண்டாகப் பிளந்து பீமனுக்கு ஒரு குறிப்புக் கொடுத்தாய். இதனைப் புரிந்து கொண்ட பீமன், ஜராஸந்தனை இரண்டாகப் பிளந்துக் கொன்றான். நீ ஜராஸந்தனால் சிறை வைக்கப்பட்டிருந்த அரசர்களை விடுவித்தாய். உன்னிடம் ஆழ்ந்த பக்தியையும் அவர்களுக்கு வழங்கினாய். இதனால் அவர்கள் உலக விஷயங்களில் பற்று நீங்கியவர்களாக ஆனார்கள். அவர்களை தர்ம நெறியில் ஆட்சி செய்யும்படி கூறினாயாமே!

6 ப்ரசக்ருஷி யுதிஷ்டிரே ததநு ராஜஸூய அத்வரம்
ப்ரஸந்த ப்ருதகீ பவத் ஸகல ராஜக வ்யாகுலம்
த்வம் அபி அயி ஜகத் பதே த்விஜ பத அவநேஜ ஆதிகம்
சகர்த்த கிமு சத்யதே ந்ருப வரஸ்ய பாக்ய உந்நதி:

**பொருள் -** குருவாயூரப்பா! அதன் பின்னர் தர்மர் மிகவும் மகிழ்ந்து, தனது கட்டுப்பாட்டில் உள்ள அரசர்கள் நிறைந்திருக்க ராஜஸூய யாகம் செய்தார். அப்போது அங்கு வந்த அந்தணர்களின் கால்களைக் கழுவுதல், பட்டாடையால் துடைத்து விடுதல் போன்றவற்றை நீ செய்தாயாமே! எங்கும் உள்ளவனே! தர்மரின் பெருமை எத்தன்மையது அன்றோ!

7 தத: ஸவந கர்மணி ப்ரவரம் அக்ர பூஜா விதிம்
விசார்ய ஸஹதேவ வாக் அநுகத: ஸ தர்ம ஆத்மஜ:
வ்யதத்த பவதே முதா ஸதஸி விச்வ பூத ஆத்மநே
ததா ஸஸுர மாநுஷம் புவநம் ஏவ த்ருப்திம் ததௌ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ராஜஸூயயாகத்திற்கு வந்திருப்பவர்களில் மிகவும் சிறந்தவர் யாரோ அவருக்கு பூஜை செய்து மரியாதை தருவது வழக்கம் ஆகும். உடனே சகாதேவன் எழுந்து, நமது கடவுளாக இருக்கும் க்ருஷ்ணனையே பூஜிக்கலாம். என்று தர்மரிடம் கூறினான். இதனைக் கேட்டு மகிழ்ந்த தர்மர், அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ள உனக்குப் பூஜை செய்தாராமே! இதனைக் கண்ட மனிதர்களும் தேவர்களும் மனம் நிறைவு அடைந்தனர்.

8 தத: ஸபதி சேதிப: முநி ந்ருபேஷூ திஷ்டத்ஸூ அஹோ
ஸபாஜயதி கோ ஜட: பசுப துர்துரூடம் வடும்
இதி த்வயி ஸ துர்வச: விததிம் உத்வமந் ஆஸநாத்
உதாபதத் உதாயுத: ஸம்பதந் அமும் பாண்டவா:

**பொருள் -** குருவாயூரப்பா! அனைத்து அரசர்களும் முனிவர்களும் உன்னைப் பூஜிப்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தனர். அப்போது சேதி நாட்டு அரசனான சிசுபாலன் என்பவன் எழுந்து, (இவ்வளவு அரசர்களும் முனிவர்களும் இங்கு உள்ளபோது) இடையர்களில் ஒருவனான இந்தச் சிறுவனுக்குப் பூஜையை செய்வது யார்? என்று கூறினான். கைகளில் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு எழுந்தான். அவனைப் பாண்டவர்கள் கோபத்துடன் எதிர்த்தனர்.

9 நிவார்ய நிஜ பக்ஷகாந் அபிமுகஸ்ய வித்வேஷிண:
த்வம் ஏவ ஜஹ்ருஷே சிர: தநுஜ தாரிணா ஸ்வ அரிணா
ஜநு: த்ரிதய லப்தயா ஸதத சிந்தயா சுத்ததீ:
த்வயா ஸ பரம் ஏகதாம் அத்ருத யோகிநாம் துர்லபாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது நண்பர்களை நீ தடுத்தாய். அசுரர்களை அழிப்பதில் வல்லதான உனது ஸூதர்சன சக்கரத்தின் மூலம் சிசுபாலனின் தலையை அறுத்தாய். அவன் முந்தைய மூன்று பிறவிகளிலும் இடைவிடாமல் உன்னுடன் பகைமை பாராட்டியும் அதனால் உன்மீது சிந்தனை கொண்டவனாகவும் இருந்தான் (சிசுபாலன் என்பவன் துவார பாலகர்களில் ஒருவன் - தசகம் 11 காண்க) இதனால் அவன் தூய்மை பெற்று, யோகிகள் அடையக் கூடியதான மோட்சத்தை அடைந்தான்.

10 தத: ஸுமஹிதே த்வயா க்ரதுவரே நிரூடே ஜந:
யயௌ ஜயதி தர்மஜ: ஜயதி க்ருஷ்ண: இதி ஆலபந்
கல: ஸ து ஸுயோதந: துதமநா: ஸபத்ந ச்ரியா
மய அர்ப்பித ஸபா முகே ஸ்தல ஜல ப்ரமாத் அப்ரமீத்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக நீ அந்த பெருமை வாய்ந்த யாகத்தை நிறைவேற்றினாய். அங்கு இருந்த அனைவரும் தர்மன் வாழ்க! க்ருஷ்ணன் வாழ்க! என்று கூவினார்கள். இதனைக் கண்டும், பாண்டவர்களின் செழிப்பைக் கண்டும் துரியோதனன் மனம் கொதித்தான். மயனால் கட்டப்பட்ட அந்த மாளிகையில் இருந்த தரையை பார்த்து நீர் என்றும், நீரைப் பார்த்து தரை என்றும் தவறாக நினைத்துக் தடுமாறினானாமே!

11 ததா ஹஸிதம் உத்திதம் த்ருபத நந்தநா பீமயோ:
அபாங்க கலயா விபோ கிமபி தாவத் உஜ்ஜ்ரும்பயந்
தரா பர நிராக்ருதௌ ஸபதி நாம பீஜம் வபந்
ஜநார்த்தந மருத் புரீ நிலய பாஹி மாம் ஆமயாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஜனார்த்தனா! துரியோதனன் இதுபோன்று தடுமாறியதைக் கண்ட பீமனும் திரௌபதியும் மெதுவாகச் சிரித்தனர். உனது கடைக்கண் பார்வை மூலம் அவர்கள் சிரிப்பை ஒலி மிகுந்ததாக (துரியோதன் காதுகளில் ஒலிக்கும்படி) செய்தாய். இதன் மூலம் இந்தப் பூமியின் பாரத்தைக் குறைக்க நீ விதை விதைத்தாய் அல்லவா? என்னை பிணிகளில் இருந்து காப்பாற்றுவாயாக!

***

1 ஸால்வ: பைஷ்மீ விவாஹே யது குல
விஜித: சந்த்ர சூடாத் விமாநம்
விந்தந் ஸௌபம் ஸ மாயீ த்வயி வஸதி
குரூத் த்வத் புரீம் அப்யபாங்க்ஷீத்
ப்ரத்யும்ந: தம் நிருந்தந் நிகில யது படை:
ந்யச்ரஹீத் உக்ர வீர்யம்
தஸ்ய அமாத்யம் த்யுமந்தம் வயஜநி ச ஸமர:
ஸப்தவிம்சதி அஹ அந்த:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ருக்மிணி கல்யாணத்தின்போது உனது யாதவ படைகளிடம் ஸால்வன் தோல்வியடைந்தான். (அதனால் சினம் கொண்டு) சிவனை வழிபட்டு ஸௌபம் என்று அழைக்கப்படும் ஆகாய விமானத்தைப் பெற்றான். நீ ராஜஸூய யாகத்திற்காக ஹஸ்தினாபுரம் சென்றிருந்த போது, அந்தச் ஸால்வன் துவாரகையை தாக்கி பெரும் சேதம் உண்டாக்கினான். அவனைப் ப்ரத்யும்னன் தடுத்துப் போரிட்டான். ஸால்வனின் அமைச்சனான த்யுமான் என்பவனைக் கொன்றான். இப்படியாக அந்த யுத்தம் இருபத்து ஏழு நாட்கள் நடைபெற்றது.

2 தாவத் த்வம் ராமசாலீ த்வரிதம் உபகத:
கண்டித ப்ராய ஸைந்யம்
ஸௌப ஈசம் தம் ந்யருந்தா: ஸ ச கில
கதயா சார்ங்க அப்ரம் சயத் தே
மாயா தாதம் வ்யஹிம்ஸீத் அபி தவ புரத:
தத் த்வயா அ க்ஷண அர்த்தம்
ந அஜ்ஞாயி இதி ஆஹு: ஏகே தத் இதம்
அவமதம் வ்யாஸ: ஏவ ந்யஷேதீத்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ பலராமனுடன் விரைந்து துவாரகைக்கு வந்தாய். ஸால்வனின் படைகளை விரட்டியடித்து அவனைத் தடுத்தாய். அவன் தனது கதாயுதத்தின் மூலம் உனது கைகளில் இருந்த சார்ங்கம் என்னும் வில்லை வீழ்த்தினானாமே! பின்னர் உனது தந்தையைப் போல ஒருவரை மாயமாக உருவாக்கி அவரைக் (அந்த மாய உருவத்தை) கொன்றான். அவன் உண்மையாகவே உனது தந்தையைக் கொன்றான், அவன் செய்தது மாயை என்பதை நீ சிலநொடிகள் உணரவில்லை என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் இதனை வ்யாஸர் மறுத்தள்ளாரே!

3 க்ஷிப்த்வா ஸௌபம் கதா சூர்ணிதம் உதக நிதௌ
மங்க்ஷு ஸால்வே அபி சக்ரேண
உத்க்ருத்தே தந்தவக்த்ர: ப்ரஸபம் அபிபதந்
அப்யமுஞ்சத் அதாம் தே
கௌமோதக்யா ஹத: அஸௌ அபி ஸுக்ருத நிதி:
சைத்யவத் ப்ராபத் ஐக்யம்
ஸர்வேஷாம் ஏஷ பூர்வம் த்வயி த்ருத மநஸாம்

மோக்ஷணார்த்த: அவதார:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஸால்வனின் ஸௌபம் என்ற ஆகாய விமானத்தை உனது கதை ஆயுதத்தினால் தூளாக்கினாய். துகள்களைக் கடலில் எறிந்தாய். அவனுடைய கழுத்தையும் உனது சக்கரத்தால் அறுத்தாய். அப்போது தந்தவக்கிரன் என்பவன் உன்மீது கதாயுதத்தை சுழற்றி அடித்தான். நீ உடனே கவுமோதகீ என்று அழைக்கப்படும் உனது கதையால் அவனைக் கொன்றாய். அவனும் சிசுபாலன் போல் உன்னுடைய மோட்சத்தை அடைந்தான் (இவனும் துவார பாலகர்களில் ஒருவன், தசகம் 11 காண்க). கடந்த பிறவிகளில் உன்னிடம் ஈடுபாடு கொண்டிருந்தவர்களை மோட்சத்தின் மூலம் கரையேற்றுவதே உனது க்ருஷ்ணாவதாரம் அல்லவா?

4 த்வயி ஆயாதே அத் ஜாதே கில குரு
ஸதஸி த்யூதகே ஸம்யதாயா;
க்ரந்தந்த்யா யாஜ்ஞ ஸேந்யா: ஸ கருணம்
அக்ருதா: சேல மாலாம் அநந்தாம்
அந்த அந்த ப்ராப்த சர்வ அம்சஜ முநி
சகித த்ரௌபதீ சிந்தித: அத
ப்ராப்த: சாக அந்தம் அச்நந் முநி கணம்
அக்ருதா: த்ருப்திமந்தம் வந அந்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ ஹஸ்தினாபுரத்தில் இருந்து துவாரகை கிளம்பியதும் அங்கு கவுரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே சூதாட்டம் நடந்தது. அதில் நான் பணயப் பொருளாக வைக்கப்பட்டு இழக்கப்படவும் நேர்ந்தது என்று திரௌபதி அழுதாள். நீ அவளுடைய சேலையை உனது கருணை போன்று அளவில்லாமல் வளரச் செய்தாய். முன்பு ஒரு சமயம் பாண்டவர்கள் வனவாசம் செய்த காலத்தில், அவர்கள் உணவு வேளை முடிந்த பின்னர் அவர்களிடம் விருந்தினராக பரமசிவனின் அவதாரமான துர்வாசர் வந்தார். (உணவு இல்லாமல் பயந்த) திரௌபதி உன்னைத் துதித்தாள். உடனே நீ அங்கு வந்து பாத்திரத்தில் இருந்த கீரையை உட்கொண்டு துர்வாஸருக்கும் அவரது சீடர்களுக்கும் உண்டான பசியை நீக்கினாய்.

5 யுத்த உத்யோகே அத மந்த்ரே மிலதி ஸதி

வ்ருத: பல்குநேந த்வம் ஏக:
கௌரவ்யே தத்த ஸைந்ய: கரி புரம் அகம:
தாத்ய க்ருத் பாண்டவார்த்தம்
பீஷ்ம த்ரோண ஆதி மாந்யே தவ கலு
வசநே திக்க்ருதே கௌரவேண
வ்யா வ்ருண்வந் விச்வரூபம் முநி
ஸதஸி புரீம் க்ஷோபயித்வா கத: அபூ:

**பொருள் -** குருவாயூரப்பா! பின்னர் யுத்தம் என்று முடிவு செய்யப்பட்டது. அப்போது அர்ஜுனன் உன்னை மட்டும் தங்களுக்குத் துணையாக இருக்கும்படி வேண்டினான். உனது படைகளைத் தனக்கு அளிக்கும் படி துரியோதனன் கேட்டான். நீயும் அவர்கள் கேட்டபடி அளித்தாய். அதன் பின்னர் பாண்டவர்களின் தூதனாக ஹஸ்தினாபுரம் சென்றாய். உனது தூது வார்த்தைகளை பீஷ்மர், துரோணர் உள்ளிட்ட பலரும், முனிவர்களும் ஆமோதித்தனர். ஆனால் துரியோதனன் அவற்றை அலட்சியம் செய்தான். இதனால் கோபம் கொண்ட நீ முனிவர்கள் நிறைந்த அந்தச் சபையில் உனது விசுவரூபத்தைக் காண்பித்து அவர்கள் கலங்கும்படி செய்தாய். பின்னர் பாண்டவர்களிடம் திரும்பி வந்தாய்.

6 ஜிஷ்ணோ: த்வம் க்ருஷ்ண ஸூத: கலு ஸமர
முகே பந்து காதே தயாளும்
கிந்நம் தம் வீக்ஷ்ய வீரம் கிம் இதம் அயி
ஸகே நித்ய ஏக: அயம் ஆத்மா
க: வத்ய: க: அத்ர ஹந்தா தத் இஹ வதபியம்
ப்ரோஜ்ய மயி அர்ப்பித ஆத்மா
தர்ம்யம் யுத்தம் சர இதி ப்ரக்ருதிம்
அநயதா தர்சயந் விச்வ ரூபம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்தப் போரில் நீ அர்ஜுனனின் தேரில் சாரதியாக அமர்ந்தாய். போர் தொடங்கும் நிலையில் தனது எதிரில் நின்றிருந்த தனது உறவினர்களை எதிர்த்துப் போரிடவேண்டும் என்பதை எண்ணி அர்ஜுனன் அஞ்சி கலங்கி நின்றான். இதனால் நீ அவனிடம், நண்பனே! இது என்ன ஒரு சிந்தனை? ஆத்மா என்பது அழிவில்லாமல் உள்ளது. உலகில் கொல்பவன் யார்? கொல்லப்படுவன் யார்? (யாரும் இல்லை). ஆகையால் நீ கொல்லப் போவதால் உண்டாகும் பயத்தை (பாவம்

காரணமாக பயம்) விடுத்து, என்னிடம் உனது மனதை முழுவதுமாக சரணம் என்று அர்ப்பணம் செய்வாயாக! பின்னர் தர்மவழியில் போர் புரிவாய்! என்று கீதோபதேசம் செய்தாயாமே! உனது விசுவரூபத்தையும் அவனுக்குக் காண்பித்தாய். அவன் தனது இயல்பான குணங்களை அடைந்தான்.

7 பக்த உத்தம்ஸே அத பீஷ்மே தவ தரணி
பர க்ஷேப க்ருத் ஏக ஸக்தே
நித்யம் நித்யம் விபிந்ததி அவநி ப்ருத்
அயுதம் ப்ராப்த ஸாதே ச பார்த்தே
நிச்சஸ்த்ரத்வ ப்ரதிஜ்ஞாம் விஜஹத்
அரிவரம் தாரயந் க்ரோத சாலீ இவ
ஆதாவந் ப்ராஞ்ஜலிம் தம் நத சிரஸம்
அதோ வீக்ஷ்ய மோதாத் அபாகா:

**பொருள் -** குருவாயூரப்பா! உனது பக்தர்களுள் மிகவும் உத்தமரான பீஷ்மர், பூமியின் பாரத்தைக் குறைப்பதான உனது உள்நோக்கம் ஒன்றையே தனது சிந்தனையாகக் கொண்டு அன்றாடம் யுத்தத்தில் பதினாயிரம் பேரைக் கொன்று வந்தார். இதனைக் கண்ட அர்ஜுனன் சோர்வுற்றான். உடனே ஆயுதம் தொடுவதில்லை என்ற நீ செய்த சபதத்தையும் மறந்து, உனது சிறந்த ஆயுதமான சக்கரத்தைக் கையால் சுழற்றியபடி பீஷ்மரை நோக்கி ஓடினாயாமே? உன்னைக் கண்டு மகிழ்ந்த பீஷ்மர் கைகூப்பி தலை வணங்கி நின்றார். நீயும் மகிழ்வுற்று திரும்பிச் சென்றாயாமே!

8 யுத்தே த்ரோணஸ்ய ஹஸ்தி ஸ்திர ரண
பகதத்த ஈரி தம் வைஷ்ணவ அஸ்த்ரம்
வக்ஷஸி ஆதத்த சக்ர ஸ்தகித ரவி
மஹா: ப்ரார்த்தயத் ஸிந்து ராஜம்
நாகாஸ்த்ரே கர்ண முக்தே க்ஷிதிம் அவநம்
அயந் கேவலம் க்ருத்த மௌலிம்
தத்ரே தத்ர அபி பார்த்தம் கிம் இவ ந ஹி
பவாந் பாண்டவாநாம் அகார்ஷீத்

**பொருள் -** குருவாயூரப்பா! அர்ஜுனன் துரோணருடன் மோதியபோது பகதத்தன் யானைமீது அமர்ந்து கொண்டு உன்மீது நாராயண அஸ்திரத்தைத் தொடுத்தானாமே!

உனது மார்பினால் அதனைத் தாங்கி நிறுத்தினாய். உனது சக்கரத்தின் மூலமாக சூரியனை மறையும்படி ஒரு மாயையை உண்டாக்கி, ஸிந்து ராஜனான ஜயத்ரதனை வீழ்த்தினாய். கர்ணன், அர்ஜுனன் மீது நாகாஸ்திரத்தைச் செலுத்தியபோது, நீ தேரை சற்று கீழே அழுத்தி அர்ஜுனனின் க்ரீடத்தை மட்டும் அந்த அஸ்திரம் தாக்கும்படி செய்தாயாமே! நீ பாண்டவர்களுக்கு என்ன நன்மைகள்தான் செய்யவில்லை!

9 யுத்த ஆதௌ தீர்த்த காமீ ஸ கலு ஹல
தர: நைமிச க்ஷேத்ரம் ருச்சந்
அப்ரத்யுத்தாயி ஸூத க்ஷய க்ருத் அத
ஸூதம் தத் பதே கல்பயித்வா
யஜ்ஞ: க்நம் பல்வலம் பர்வணி பரிதலயந்
ஸ்நாந தீர்த்த: ரண அந்தே
ஸம்ப்ராப்த: பீம துர்யோதந ரணம்
அசமம் வீக்ஷ்ய யாத: புரீம் தே

**பொருள் -** குருவாயூரப்பா! யுத்தம் தொடங்கிய காலத்திலேயே பலராமன் நைமிசாரண்யம் சென்று விட்டான். இவன் வருவதை உணர்ந்தும் ஆசனத்தில் இருந்து எழுந்து மரியாதை செய்யாத ஸூதபவுராணி கரைக் கொன்றான். அவரது இடத்தில் அவரது மகனை அமர்த்தினான். அங்கு இருந்த பல்லவன் என்ற அரசன் முனிவர்களை வேள்வி செய்ய விடாமல் தடுத்தான். அவனை பலராமன் அழித்தான். பிறகு பல்வேறு புண்ணிய நீர்களில் நீராடி, யுத்தம் முடியும் நேரத்தில் குருக்ஷேத்ரத்திற்கு வந்தான். அவன் வந்த நேரம் பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதைப்போர் நடந்தது. இதனைக் கண்ட பலராமன் துவாரகைக்குச் சென்று விட்டான்.

10 ஸம்ஸூப்த த்ரௌபதயே க்ஷபண ஹததியம்
த்ரௌணிம் ஏத்ய த்வத் உக்த்யா
தந் முக்தம் ப்ராஹ்மம் அஸ்த்ரம் ஸமஹ்ருத
விஜய: மௌலி ரக்நம் ச ஜஹ்ரே
உச்சித்யை பாண்டவாநாம் புந: அபி ச விசதி
உத்தரா கர்ப்பம் அஸ்த்ரே
ரக்ஷந் அங்குஷ்ட மாத்ர: கில ஜடரம் அகா:

சக்ர பாணி: விபோ த்வம்

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! (துரோணரின் மகனான) அசுவத்தாமன் தீய எண்ணம் கொண்டவனாக, திரௌபதியின் பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்தபோது அவர்களைக் கொன்றான். மேலும் ப்ரம்மாஸ்திரத்தையும் தொடுத்தான். உனது கட்டளைப்படி அர்ஜுனன் அந்த அஸ்திரத்தைத் தடுத்து நிறுத்தினான். மேலும் அசுவத்தாமன் தலையில் இருந்த இரத்தினக் கல்லையும் கவர்ந்தான். அதன் பின்னர் அசுவத்தாமன் பாண்டவர்களின் வம்சத்தை அழிக்க ஏவிய அஸ்திரம் உத்தரையின் கர்ப்பத்தில் பாய்ந்தது. நீ உடனே கட்டைவிரல் அளவுள்ளவனாக மாறி, ஸுதர்சன சக்கரம் உடையவனாக, உத்தரையின் கர்ப்பத்தில் நுழைந்தாயாமே!

11 தர்ம ஓகம் தர்ம ஸுநோ: அபிததத்
அகிலம் சந்தம்ருத்யு: ஸ பீஷ்ம
த்வாம் பச்யந் பக்தி பூம்நா ஏவ ஹி ஸபதி
யயௌ நிஷ்கல ப்ரஹ்ம பூயம்
ஸம்யாஜ்ய அத அச்வமேதை: த்ரிபி:
அதிமஹிதை: தர்மஜம் பூர்ண காமம்
ஸம்ப்ராப்த: த்வாரகாம் த்வம் பவந
புர பதே பாஹிமாம் ஸர்வ ரோகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தான் விருப்பம் கொண்ட நேரத்தில் மரணம் அடையும்படியான வரம் பெற்றிருந்த பீஷ்மர், தர்மனுக்குப் பலவிதமான நல்லறங்களைப் போதித்தார். உன்னிடம் உள்ள பக்தி மிகுதியாக, உன்னைப் பார்த்துக்கொண்டே மோட்சம் பெற்றாராமே! அதன் பின்னர், தனது விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறியவராக இருந்த தர்மனுக்காக மூன்று அச்வமேத யாகங்களைச் செய்தாயாமே! இறுதியாக துவாரகைக்குச் சென்றாய். இப்படிப்பட்ட நீ என்னை அனைத்து பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.
***

1 குசேல நாமா பவத: ஸதீர்த்யதாம்
கத: ஸ ஸாந்தீபநி மந்திரே த்விஜ:
த்வத் ஏக ராகேண தநாதி நிஸ்ப்ருஹ:

திநாதி நிந்யே ப்ரசமீ க்ருஹ ஆச்ரமீ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஸாந்தீபனி முனிவரின் ஆஸ்மரத்தில் உன்னுடன் குசேலன் என்று ஒருவன் படித்தான். அவன் மிகவும் அமைதியானவன்; நல்ல இல்லறத்தில் உள்ளவன்; உன்னிடம் மாறாத அன்பும் பக்தியும் கொண்டிருந்தான். இதனால் இந்த உலகில் உள்ள பொரு ட்கள் மீது பற்றுதல் இல்லாமலே இருந்தான்.

2 ஸமாந சீலா அபி ததீய வல்லபா
ததா ஏவ நோ சித்த ஜயம் ஸமேயுஷீ
கதாசித் ஊசே பத வ்ருத்தி லப்தயே
ரமா பதி: கிம் ந ஸகா நிஷேவ்யதே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மனைவியும் அவனுக்கு நிகரான குணங்களையும் அமைதியையும் பக்தியையும் உடையவளாகவே இருந் தாள். இருந்தாலும் தனது மனதை அவளால் அடக்க இயலவில்லை. ஒருநாள் அவள் குசேலனிடம், மஹாலக்ஷ்மியின் கணவனான அந்தக் க்ருஷ்ணன் உங்கள் நண்பனாயிற்றே! நமது குடும்பம் நடத்தத் தேவையான செல்வத்தை அவரிடம் இருந்து பெற இயலாதா? என்று கேட்டாள்.

3 இதி ஈரித: அயம் ப்ரியயா க்ஷுத் ஆர்த்தயா
ஜுகுப்ஸமாந: அபி தநே மத ஆவஹே
ததா த்வத் ஆலோகந கௌதகாத் யயௌ
வஹந் பட அந்தே ப்ருதுகாந உபாயநம்

**பொருள் -** குருவாயூரப்பா! தனது மனைவி பசியால் வருந்திய காரணத்தால் மட்டுமே கூறுகிறாள் என்பதை குசேலன் உணர்ந்தான். மிகுந்த செல்வம் என்பது கர்வத்தை வளர்க்கும் என்பதையும் அறிந்து செல்வத்தின் மீது வெறுப்புடன் இருந்தான். இருந்தாலும் நீண்ட நாளைக்குப் பின்னர் உன்னைச் சந்திக்கும் வாய்ப்பிற்காக மகிழ்ந்தான். தனது துணியின் முடிப்பில் சிறிது அவல் எடுத்துக் கொண்டு துவாரகைக்கு கிளம்பினானாமே!

4 கத: அயம் ஆச்சர்யமயீம் பவத் புரீம்
க்ருஹேஷு சைப்யா: பவநம் ஸமேயிவாந்

ப்ரவிச்ய வைகுண்டம் இவ ஆப நிர்வ்ருதிம்
தவ அதிஸம பாவநயா து கிம் புந:

**பொருள் -** குருவாயூரப்பா! உனது வியக்கத்தக்கதான துவாரகையை குசேலன் அடைந்தான். அதில் உள்ள பல உயர்ந்த வீடுகளுக்கு நடுவில் இருந்த ருக்மணியின் வீட்டை அடைந்தான். அப்போது அவன் வைகுண்டத்திற்குள் நுழைந்தது போன்று மிகுந்த ஆனந்தம் அடைந்தான். மேலும் நீ மிகவும் சிறப்புடன் அவனை வரவேற்றாய். இதனால் அவன் மேலும் ஆனந்தம் அடைந்தான் என்பதைக் கூறவேண்டுமா?

5 ப்ரபூஜிதம் தம் ப்ரியயா ச வீஜிதம்
கரே க்ருஹீத்வா அகதய: புரா க்ருதம்
யத் இந்தநார்த்தம் குரு தார சோதிதை:
அபர்து வர்ஷம் தத் அமர்ஷி காநநே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவனை மிகவும் அன்புடன் வரவேற்றாய். உனது ருக்மிணி விசிறி வீசி அவனை உபசரித்தாள். நீ அவனிடம், குசேலா! ஒரு முறை நமது குருவின் மனைவி நம்மை காட்டிற்கு விறகு வெட்ட அனுப்பினாள். அப்போது பெய்த பெரும் மழையில் நாம் அகப்பட்டுக் கொண்டோம் அல்லவா? என்று பழங் கதைகளைப் பேசி மகிழ்ந்தாய்.

6 த்ரபா ஜுஷ: அஸ்மாத் ப்ருதுகம் பலாத் அத
ப்ரக்ருஹ்ய முஷ்டௌ ஸக்ருத் ஆசிதே த்வயா
க்ருதம் க்ருதம் நநு இயதா இதி ஸம்ப்ரமாத்
ரமா கில உபேத்ய கரம் ருரோத தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தான் கொண்டு வந்த அவலை வெட்கத்தால் குசேலன் மறைத்து வைத்தான். நீ அதனைப் பறித்து ஒரு பிடி உண்டாயாமே! (நீ மேலும் ஒரு பிடி எடுத்து உண்ண முயற்சித்தபோது) ருக்மிணி ஓடிவந்து, போதும்! இத்தனை கொடுத்தது போதும் என்று உனது கைகளை பிடித்து நிறுத்தினாள் அல்லவா? (இதன் உட்கருத்து - இரண்டாவது பிடியை க்ருஷ்ணன் தின்றால் மேலும் குசேலனுக்குப் பொருட்

செல்வம் அளிக்க வேண்டும் அதற்கான பொருள் லக்ஷ்மியிடமே இல்லை என்பதாகும். முதல் பிடியிலேயே க்ருஷ்ணனின் பக்தியால் அவ்வளவும் கொடுத்தாள்.)

7 பக்தேஷு பக்தேந ஸ மாநித: த்வயா
புரீம் வஸந் ஏக நிசாம் மஹா ஸுகம்
பத அபரேத்யு: த்ரவிணம் விநா யயௌ
விசித்ர ரூப: தவ கலு அநுக்ரஹ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இப்படியாக பக்தர்களில் உயர்ந்த குசேலனை நீ பெருமைப்படுத்தினாய். அன்று இரவு முழுவதும் உனது துவாரகை மாளிகையில் அவன் இன்பமாக இருந்தான். மறுநாள் உன்னிடம் இருந்து எந்தப் பொருளும் கேட்காமலேயே சென்று விட்டான். உனது அருள் வழங்கும் முறையே வியப்பானதுதானே!

8 யதி ஹி அயாசிஷ்யம் அதாஸ்யத் அச்யுத:
வதாமி பார்யாம் கிம் இதி வ்ரஜந் அஸௌ
த்வத் உக்தி லீலா ஸ்மித மக்ந தீ: புந:
க்ரமாத் அபச்யந் மணி தீப்ரம் ஆலயம்

**பொருள் -** குருவாயூரப்பா! திரும்பி வரும் வழியில் அவன் மனதில், நாள் கிளம்பும்போது க்ருஷ்ணனிடம் ஏதேனும் யாசித்திருந்தால் கண்டிப்பாகக் கொடுத்திருப்பதான். இப்போது மனைவிக்கு என்ன பதில் கூறுவது? என்று நினைத்தான். ஆயினும் உடனே உனது கனிவான பேச்சிலும், வசீகரிக்கும் சிரிப்பிலும் மனம் திரும்பியவனாக நடந்தான். தனது வீட்டை நெருங்கும்போது இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டு ஒளி வீசிய மாளிகையைக் கண்டானாமே!

9 கிம் மார்க்க விப்ரம்ச இதி ப்ரமந் க்ஷணம்
க்ருஹம் ப்ரவிஷ்ட: ஸ ததர்ச வல்லபாம்
ஸகீ ப்ரீதாம் மணி ஹேம பூஷிதாம்
புபோத ச த்வத் கருணாம் மஹா அத்புதாம்

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த மாளிகையைக் கண்ட குசேலன் தான் வழி தவறி வேறு வீட்டிற்கு வந்து விட்டோமோ என்று திகைத்தான்! தனது வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு தன் மனைவி தங்க நகைகளையும், இரத்தினக் கற்களையும், ஆபரணங்களாக அணிந்திருப்பதையும், தோழிகள் புடைசூழ உள்ளதையும் கண்டான். இவை அனைத்தும் உனது அற்புதமான கருணையின் விளைவே என்று உணர்ந்தானாம்.

10 ஸ ரத்ந சாலாஸு வஸந் அபி ஸ்வயம்
ஸமுந்நமத் பக்தி பர: அம்ருதம் யயௌ
த்வம் ஏவம் ஆபூரித பக்த வாஞ்சித:
மருத் புர அதீச ஹரஸ்வ மே கதாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ரத்னங்கள் பல உள்ள அந்த மாளிகையில் குசேலன் வாழ்ந்து வந்தாலும் உன்னிடம் மாறாத அன்பும் பக்தியும் கொண்டிருந்தான். இதனால் அவன் அமிர்தமான மோட்சத்தை அடைந்தான். இப்படியாக உனது பக்தனான குசேலனின் விருப்பங்களை நிறைவேற்றிய நீ, எனது பிணிகளைத் தீர்க்க வேண்டும்.

1 ப்ராக் ஏவ ஆசார்ய புத்ர ஆஹ்ருதி நிசமநயா
ஸ்வீய ஷட் ஸூநு வீக்ஷாம்
காங்க்ஷந்த்யா மாது: உக்த்யா ஸுதல புவி
பலிம் ப்ராப்ய தேந அர்ச்சித: த்வம்
தாது: சாபாத் ஹிரண்ய அந்வித கசிபு
பவாந் சௌரிஜாந் கம்ஸ பக்நாந்
ஆநீய ஏநாந் ப்ரதர்ச்ய ஸ்வ பதம்
அநயதா: பூர்வ புத்ராந் மரீசே:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ உனது குருவான ஸாந்தீபனி முனிவரின் குழந்தையை மீட்டு வந்து கொடுத்ததை தேவகி கேள்விப்பட்டாள் (தசகம் 76, சுலோகம் 1), அதைப்போன்று, கம்சனால் கொல்லப்பட்ட தனது குழந்தைகளையும், அழைத்து வரும்படி உன்னிடம் வேண்டினாள். நீயும் ஸுதல (பாதாளலோகம்) லோகத்தில் இருந்த மகாபலியிடம் சென்றாய். அவன் உன்னை வரவேற்று மகிழ்ந்தான். அந்த ஆறு பிள்ளைகளும் ஒரு சாபம் காரணமாக முதலில் ஹிரண்யகசிபுவிற்குப் பிறந்தனர். பின்னர்

அவர்கள் வசுதேவருக்குப் பிறந்தனர். அப்போது கம்சனால் கொல்லப் பட்டனர். அவர்களை ஸுதல லோகத்தில் இருந்து அழைத்து வந்து தேவகியிடம் காண்பித்து, அவர்களை வைகுண்டம் அனுப்பினாய்.

2 ச்ருத தேவ இதி ச்ருதம் த்விஜ இந்த்ரம்
பஹுலாச்வம் ந்ருபதிம் ச பக்தி பூர்ணம்
யுகபத் த்வம் அநுக்ரஹீது காம:
மிதிலாம் ப்ராபித தாபஸை: ஸமேத:

**பொருள் -** குருவாயூரப்பா! மிதிலை நகரத்தில் ச்ருததேவன் என்ற அந்தணன் உனது சிறந்த பக்தனாக வாழ்ந்தான். அது போன்று பஹுலாச்வன் என்ற அரசனும் இப்படியே வாழ்ந்தான். அவர்கள் இருவருக்கும் நீ ஒரே நேரத்தில் கருணை மழை பொழிய விரும்பினாய். ஆகவே முனிவர்கள் புடைசூழ நீ மிதிலைக்குச் சென்றாயாமே!

3 கச்சந் த்வி மூர்த்தி: உபயோ: யுகபந் நிகேதம்
ஏகேந பூரி விபவை: விஹித உபசார:
அந்யேந தத் திந ப்ருதை: ச பல ஓதந ஆத்யை:
துல்யம் ப்ரஸேதித ததாத ச முக்திம் ஆப்யாம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ இரண்டு உருவங்கள் எடுத்தவனாக ஒரே நேரத்தில் இருவர் வீடுகளுக்கும் சென்றாயாமே! அரசன் உன்னை மிகுந்த செல்வத்தால் வரவேற்றான். ஆனால் அந்தணனோ அன்று அவன் சம்பாதித்த பழம், உணவைக் கொண்டு வரவேற்றான். நீ அவர்கள் இருவர் வர÷ வற்பிலும் ஒன்றுபோல் மகிழ்வுற்றாய், இருவருக்கும் மோட்சம் அளித்தாய்.

4 பூய: அத த்வாரவத்யாம் த்விஜ தநய ம்ருதிம்
தத் ப்ரலாபாந் அபி த்வம்
க: வா தைவம் நிருந்த்யாத் இதி கில கதயந்
விச்வ வோடா அபி அஸோடா:
ஜிஷ்ணோ: கர்வம் விநேதும் த்வயி மநுஜ
தியா குண்டிதாம் ச அஸ்ய புத்திம்

தத்வ ஆரூடாம் விதாதும் பரமதம
பத ப்ரேக்ஷணந இதி மந்யே

**பொருள் -** குருவாயூரப்பா! துவாரகையில் வாழ்ந்து வந்த ஓர் அந்தணனின் குழந்தைகள் பிறந்தவுடன் இறந்தன. அவன் மிகவும் வருத்தத்துடன், புலம்பித் தீர்த்தான். நீ அவனிடம் தலைவிதியை யார்தான் மாற்ற இயலும்? என்று உலகையே தாங்குபவனாக இருப்பினும், இப்படிக் கூறினாய். நீ இப்படி இருந்ததற்குக் காரணம் - அர்ஜுனன் கொண்டிருந்த கர்வத்தை அடக்கவும், உன்னை அவன் சாதாரண மனிதன் என்று எண்ணியிருந்த எண்ணத்தை நீக்கவும், வைகுண்ட லோகத்தைக் காண்பித்து அவனுக்கு ஞானம் உண்டாக்கவும் என்றே நான் நினைக்கிறேன்.

5 நஷ்டா: அஷ்ட அஸ்ய புத்ரா: புந:
அபி தவ து உபேக்ஷயா கஷ்ட வாத:
ஸ்பஷ்ட: ஜாத: ஜநாநாம் அத தத்
அவஸரே த்வாரகாம் ஆப பார்த்த:
மைத்ர்யா தத்ர உக்ஷித: அஸௌ நவம
ஸூத ம்ருதௌ விப்ர வர்ய ப்ரரோதம்
க்ருத்வா சக்ரே ப்ரதிஜ்ஞாம் அநுபஹ்ருத
ஸூத: ஸந்நிவேக்ஷ்யே க்ருசாநும்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக அந்தப் ப்ராமணனின் எட்டுப் பிள்ளைகள் பிறந்தவுடன் இறந்தன. துவாரகை மக்கள் அனைவரும், நீ இதனைக் கவனிக்கவில்லை. ஆகவே இப்படி நடக்கிறது என்று உன்னைக் குறித்துத் தவறாகப் பேசினார்களாமே! அந்த நேரம் அர்ஜுனன் துவாரகைக்கு வந்து உன் நண்பன் என்ற முறையில் தங்கினான். அந்த நேரத்தில் ப்ராமணனின் ஒன்பதாவது பிள்ளையும் பிறந்து இறந்தது. இதனைக் கண்ட அர்ஜுனன், அந்தப் ப்ராமணனின், அடுத்து உனக்குப் பிறக்கும் குழந்தை இறந்து விட்டால் உடனே மீட்டுத் தருகிறேன். தவறினால் நான் தீக்குளிப்பேன் என்று சபதம் செய்தான்.

6 மாநீ ஸ த்வாம் அப்ருஷ்ட்வா த்விஜ நில கத:
பாண ஜாலை : மஹா அஸ்த்ரை:

ருந்த்தாந: ஸுதி கெஹம் புந: அபி
ஸஹஸா த்ருஷ்ட நஷ்டே குமாரே
யாம்யாம் ஐந்த்ரீம் ததா அந்யா: ஸுர வர நகரீ:
வித்யயா ஆஸாத்ய ஸத்ய:
மோக உத்யோக: பதிஷ்யந் ஹ்ருத புஜி பவதா
ஸஸ்மிதம் வாரித: அபூத்

**பொருள் -** குருவாயூரப்பா! தன்னிடம் உதவி கேட்பவர்களுக்கு உதவி செய்வது என்பதால் கர்வம் கொண்டிருந்த அர்ஜுனன் உன்னிடம் சொல்லாம லேயே அந்தப் ப்ராமணன் வீட்டிற்குச் சென்றான். குழந்தை பிறக்கும் அறை முழுவதையும் தனது அம்புகளால் கோட்டை போல் கட்டி மறைத்தான். அப்போது ஒரு பிள்ளை பிறந்தது. ஆனால் உடனே காணாமற் போயிற்று. (இதுவரை உடலாவது இருந்தது, இப்போது அதுவும் இல்லை). இதனைக் கண்ட அர்ஜுனன் யமலோகம், இந்த்ரலோகம் முதலான லோகங்களுக்குத் தனது யோகத்தின் மூலம் சென்று குழந்தையைத் தேடினான். ஆனால் தனது முயற்சி தோல்வி அடைந்ததால் மனம் உடைந்து, தான் செய்த சபதத்தின்படி தீயில் விழத் தயாராக நின்றான். உடனே ஒரு புன்முறுவலோடு நீ தடுத்தாயாமே!

7 ஸார்த்தம் தேந ப்ரதீசீம் திசம் அதிஜவிநா
ஸ்யந்தநேந அபியாத:
லோகாலோகம் வ்யதீத: திமிர பரம் அதோ
சக்ர தாம்நா நிருந்தந்
சக்ர அம்சு க்லிஷ்ட த்ருஷ்டிம் ஸ்திதம்
அத விஜயம் பச்ய பச்ய இதி வாராம்
பாரே த்வம் ப்ராததர்ச: கிம் அபி ஹி
தமஸாம் தூரதூரம் பதம் தே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அர்ஜுனனுடன் தேரில் ஏறிக்கொண்டு மேற்குத் திசையில் விரைந்தாய். அங்கு வெகுதூரம் கடந்து லேகாலோக மலையைக் கடந்தாய். அங்கு எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. உனது சக்கரத்தை முன்னே செலுத்த அது ஒளி வீசியபடி சென்றது. அதனைப் பி ன்தொடர்ந்து சென்ற நீ அர்ஜுனனிடம், அதோ பார்! வைகுண்டத்தைப் பார் என்று விளக்க இயலாத உனது வைகுண்டத்தைக் காண்பித்தாயாமே!

8 தத்ர ஆஸீநம் புஜங்க அதிப சயந
தலே திவ்ய பூஷ ஆயுத ஆத்யை:
ஆவீதம் பீத சேலம் ப்ரதி நவ ஜலத
ச்யாமலம் ஸ்ரீமத் அங்கம்
மூர்த்திநாம் ஈசிதாரம் பரம் இஹ
திஸ்ருணாம் ஏகம் அர்த்தம் ச்ருதீநாம்
த்வாம் ஏவ த்வம் பர ஆத்மந் ப்ரியஸக
ஸஹித: நேமித க்ஷேம ரூபம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த வைகுண்டத்தில் நீயே திவ்யமான காட்சி அளித்தாய். ஆதிசேஷன் மீது சயனித்தவனாக, எழிலுடைய பல ஆபரணங்கள் அணிந்தவனாக, ஆயுதங்களை உடையவனாக, மஞ்சள் பட்டு உடுத்தியவனாக, நீர் கொண்ட மழை மேகம்போல் நீல நிறம் உடையவனாக, திருமார்பில் மஹாலக்ஷ்மி உடையவனாக, மூன்று மூர்த்திகளும் ஒருங்கே உள்ளவனாக, வேதங்கள் அனைத்தும் விளக்கும் பொரு ளாக, மங்கலங்கள் அளிக்கும் இனிய உருவம் உடையவனாக நீ இருந்தாய். இப்படிப்பட்ட அந்த நாராயண ரூபத்தை நீயும் உனது நண்பனான அர்ஜுனனும் வணங்கினீர்களாமே!

9 யுவாம் மாம் ஏவ த்வௌ அதிக விவ்ருத
அந்தர் ஹித தயா
விபிந்நௌ ஸந்த்ரஷ்டும் ஸ்வயம் அஹம்
அஹார்ஷம் த்விஜ ஸுதாந்
நயேதம் த்ராக் ஏதாந் இதி கலு
விதீர்ணாந் புந: அமூந்
த்விஜாய ஆதாய அதா: ப்ரணுத மஹிமா
பாண்டு ஜநுஷா

**பொருள் -** குருவாயூரப்பா! அங்கு இருந்த நாராயணனாகிய நீ, நான் வெளியில் தெரிகின்ற செல்வமாகிய பரமாத்மாவாகவும், மறைந்த செல்வமான ஜீவாத்மாகவும் பிறந்தேன். இப்படி எனது அவதாரமாக உள்ள உங்கள் இருவரையும் காண விருப்பம் கொண்டேன். எனவே அந்த ப்ராமணனின் குழந்தைகளை இங்கு கொண்டு வந்தேன்.

இனி நீங்கள் அவர்களை அழைத்துப் போகலாம் என்றாய். அப்போது அர்ஜுனன் உன்னைப் புகழ்ந்தான். பின்னர் அந்தப் ப்ராமணின் குழந்தைகளை நீ அவனிடம் அளித்தாய்.

10 ஏவம் நாநா விஹாரை: ஜகத் அபிரமயந்
வ்ருஷ்ணி வம்சம் ப்ரபுஷ்ணந்
ஈஜாந: யஜ்ஞ பேதை: அதுல விஹ்ருதிபி:
ப்ரீணயந் ஏ நேத்ரா:
பூபார க்ஷேப தம்பாத் பத கமல ஜுஷாம்
மோக்ஷணாய அவதீர்ண:
பூர்ணம் ப்ரஹ்ம ஏவ ஸாக்ஷாத் யதுஷு
மநுஜதா ரூஷித: த்வம் வ்யலாஸீ:

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக நீ பலவிதமான லீலைகள் மூலம் உலகத்தை மகிழ வைத்தாய். பல வகையான யாகங்களைச் செய்தாய். உனது பல லீலைகள் மூலம் மான் போன்ற விழி படைத்த பெண்களை மயக்கினாய். பூமியின் சுமையை குறைப்பது என்ற உறுதி கொண்டு உன்னைத் தொழுதவர்களுக்கும், சரணம் புகுந்தவர்களுக்கும் மோட்சம் அளித்தாய். இதற்காகவே யாதவ குலத்தில் பிறந்து, பரம்பொருளாகிய நீ மனித வடிவில் மறைந்து நின்றாய்.

11 ப்ராயேண த்வாரவத்யாம் அவ்ருதத்
அயி ததா நாரத: த்வத் ரஸ ஆர்த்ர:
தஸ்மாத் லேபே கதாசித் கலு ஸுக்ருத
விதி: த்வத் பிதா தத்வ போதம்
பக்தாநாம் அக்ர யாயீ ஸ ச கலு
மதிமாந் உத்தவ த்வத்த ஏவ
ப்ராப்த: விஜ்ஞாந ஸாரம் ஸ கில ஜந
ஹிதாய அதுநா ஆஸ்தே பதர்யாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது லீலைகளை அனுபவிக்க எண்ணி நாரதர் பெரும்பாலான நாட்களை துவாரகையிலேயே கழித்தார். அப்படி ஒரு நாள் மிகுந்த புண்ணியவானான உனது தந்தை வசுதேவர், நாரதரிடம் இருந்து பல ஞான

உபதேசங்களைப் பெற்றார். பக்தர்களில் சிறந்தவரும், அறிவு நிரம்பியவரும் ஆகிய உத்தவர் உன்னிடம் இருந்தே நேரடியாக ஞானம் பெற்றார். உனது கட்டளைப்படி உத்தவர் இன்னமும் பத்ரியில் மக்களின் நலனுக்காகத் தவம் புரிகிறார்.

12 ஸ: அயம் க்ருஷ்ண அவதார ஜயதி தவ
விபோ யத்ர ஸௌஹார்த்த பீதி
ஸ்நேஹ த்வேஷ அநுராக ப்ரப்ருதிபி:
அதுலை: ஆச்ரமை: யோக பேதை:
ஆர்த்திம் தீர்த்வா ஸமஸ்தாம் அம்ருத பதம்
அரு: ஸர்வத: ஸர்வலோகா:
ஸ த்வம் விச்வ ஆர்த்தி சாந்த்யை பவந
புர பதே பக்தி பூர்த்யை ச பூயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது இந்த கிருஷ்ணாவதாரம் அனைத்து அவதாரங்களையும் விட சிறப்பானது. என்ன காரணம்? இந்த அவதாரத்தில் யோக மார்க்கம் போன்ற கடினமான வழிகளில் மோட்சம் அடையாமல், எளிய வழிகளான அன்பு (வசுதேவர்), பயம் (கம்சன்), பகைமை( சிசுபாலன்), நட்பு (பாண்டவர்கள்), காமம் (கோபிகைகள்) முதலானவை மூலம் பலரும் மோட்சம் பெற்றனர். இப்படிப்பட்ட க்ரு ஷ்ணனாகிய நீயே இந்த உலகின் துன்பங்கள் நீங்கவும், பக்தி என்பது வளரவும் அருள் புரிய வேண்டும்.

***

1 ரமா ஜாதே ஜாநே யத் இஹ தவ பக்தேஷு விபவோ
ந ஸத்ய : ஸம்பத்ய: தத் இஹ மத க்ருத்வாத் அசமிநாம்
ப்ரசாந்திம் க்ருத்வா ஏவ ப்ரதிசஸி தத: காமம் அகிலம்
ப்ரசாந்தேஷு க்ஷிப்ரம் ந கலு பவதீயே ச்யுதி கதா

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மஹாலக்ஷ்மியின் தலைவனே! இந்த உலகில் உனது பக்தர்களுக்குச் செல்வம் என்பது விரைவாகச் சேர்வது கிடையாது. அப்படிச் சேர்ந்தால் அது பக்திக்குத் தடையாக உள்ள கர்வத்தை உண்டாக்கி விடும் என்றே நான் கருதுகிறேன். அமைதி இழந்து தவிப் பவர்களுக்குத் தேவையான அமைதியை அளிக்கிறாய். பின்னர், அமைதி அடைந்தவுடன் அவர்கள் விருப்பம் அனைத்தையும்

நிறைவேற்றுகிறாய். நீ உனது பக்தர்களை நழுவ விடுதல் என்ற பேச்சுக்கே இடம் இல்லை அல்லவா?

2 ஸத்ய: ப்ரஸாத ருஷிதாந் விதி சங்கர ஆதீந்
கேசித் விபோ நிஜ குண அநுகுணம் பஜந்த:
ப்ரஷ்டா பவந்தி பத கஷ்டம் அதீர்க த்ருஷ்ட்யா
ஸ்பஷ்டம் வ்ருகாஸுர உதாஹரணம் கில அஸ்மிந்

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ரும்மாவும் சிவனும் வெகு சீக்கிரம் மகிழ்வு, கோபம் அடைபவர்கள் ஆவர். இவர்களை தங்கள் குணத்திற்கு ஏற்ப மக்கள் வணங்குவார்கள். ஆனால் நீண்ட காலத்தைப் பற்றி யோசிக்காமல் வணங்குவதால் ஒரு நிலையில் வீழ்ச்சி அடைகின்றனர். வ்ருகாசுரனின் சரிதம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு அல்லவா?

3 சகுநிஜ: ஸ து நாரத மேகதா
த்வரித தோஷம் அப்ருச்ச ததீச்வரம்
ஸ ச திதேச கிரீசம் உபாஸிதும்
ந து பவந்தம் அபந்தும் அஸாதுஷு

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு முறை சகுனியின் மகனான வ்ருகன் என்பவன் நாரதரிடம் சென்றான். அவரிடம் விரைவாக வரம் அளிக்கக்கூடிய கடவுள் யார் என்று கேட்டான். நாரதர் அவனிடம் சிவனை உபாஸனை செய்யும்படி கூறினார். அவர் அசுரர்களுக்கும் தீய எண்ணம் படைத்தவர்களுக்கும் உறவினன் அல்லாத உன்னைச் சொல்லவில்லை.

4 தப: தப்த்வா கோரம் ஸ கலு குபித: ஸப்தம் திநே
சிர: ச்சித்வா ஸத்ய: புர ஹரம் உப ஸ்தாப்ய புரத:
அதிக்ஷுத்ரம் ரௌத்ரம் சிரஸி கர தாநேந நிதநம்
ஜகத் நாதாத் வவ்ரே பவதி விமுகாநாம் க்வ சுபதீ:

**பொருள் -** குருவாயூரப்பா! வ்ருகாசுரன் மிகவும் கடுமையான தவம் புரியத் தொடங்கினான். ஏழு நாட்கள் கழிந்தன. அவனுக்கு மிகவும் கோபம் வந் தது (சிவன் அதுவரை வரவில்லை என்பதால்). உடனே தனது தலையை அறுக்க முடிவு செய்தான். அப்போது சிவன் அவன் முன்பாகத் ÷ தான்றினார். வ்ருகாசுரன் சிவனிடம் நான் யார்

தலைமீது கை வைக்கின்றேனோ அவர்கள் உடனே இறந்துவிட வேண்டும் என்று மிகவும் கொடுமை யான வரத்தை வேண்டினானாமே! உன்னிடம் பக்தி செலுத்தாதவர்களுக்கு நல்ல அறிவு என்பது எப்படி இருக்க முடியும்?

5 மோக்தாரம் பந்த முக்த: ஹரிண பதி:
இவ ப்ராத்ரவத் ஸ: அத ருத்ரம்
தைத்யாத் பீத்யா ஸ்ம தேவ: திசி திசி
வலதோ ப்ருஷ்டத: தத்த த்ருஷ்டி:
தூஷ்ணீகே ஸர்வ லோகே தவ பதம்
அதிரோக்ஷ்யந்தம் உத்வீக்ஷ்ய சர்வம்
தூராத் ஏவ அக்ரத: த்வம் படு வடு
வபுஷா தஸ்திஷே தாநவாய

**பொருள் -** குருவாயூரப்பா! கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிங்கம் தனது கூண்டினைத் திறந்து விடுதலை செய்பவன் மீது பாய்வது போல், தனக்கு வரம் கொடுத்த சிவனையே (தனது வரத்தைத் சோதித்துப் பார்க்க) துரத்திக் கொண்டு ஓடினான். சிவன் அவனுக்காகப் பயந்து பின்புறம் திரு ம்பிப் பார்த்துக் கொண்டு அனைத்துத் திசைகளிலும் ஓடினார். இதனைக் கண்டு உலகம் முழுதும் எதுவும் செய்ய இயலாத நிலையில் அமைதி காத்தது. இதனால் வேதங்களுக்கு இருப்பிடமான வைகுண்டத்தை அடைய சிவன் முடிவு செய்தார். இதனை உணர்ந்த நீ ஓர் அந்தணன் போல் ÷ வடம் பூண்டு வ்ருகாசுரன் முன்பு நின்றாய்.

6 பத்ரம் தே சாகுநேய ப்ரமஸி கிம் அதுநா
த்வம் பிசாசஸ்ய வாசா
ஸந்தேஹ: சேத் மத் உக்தௌ தவ கிமு ந
கரோஷி அங்குலீம் அங்க மௌலௌ
இத்தம் த்வத் வாக்ய மூட: சிரஸி க்ருத
கர: ஸ: அபதத் சிந்ந பாதம்
ப்ரம்ச: ஹி ஏவம் பர உபாஸிது: அபி ச கதி:
சூலிந: அபி த்வம் ஏவ

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அவனிடம் சகுனியின் மகனே! நலமாக உள்ளாயா? ஒரு பிசாசு கூறியது என்று ஏன் இப்படி ஓடுகிறாய்? நான் சொல்வதில் நம்பிக்கை பிறக்கவில்லை என்றால் உனது தலைமீது கையை வைத்துப்பார் என்று தந்திரமாகக் கூறினாய். உனது வார்த்தையைக் கேட்ட அந்த முட்டாள் அசுரன் அப்படியே செய்தான். உடனே வேர் இற்ற மரம் போன்று கீழே விழுந்தான். மற்ற வரதேவதைகளை வழிபட்டால் இதுதான் முடிவு போலும். சூலம் ஏந்திய சிவனுக்கும் நீதானே அடைக்கலம் ஆனாய்.

7 ப்ருகும் கில ஸரஸ்வதீ நிகட வாஸிந: தாபஸா:
த்ரிமூர்த்திஷு ஸமாதிசந் அதிக ஸத்வதாம் வேதிதும்
அயம் புந: அநாதராத் உதித ருத்த ரோஷேவிதௌ
ஹரே அபி ச ஜிஹிம் ஸிஷௌ கிரிஜயா த்ருதே த்வாம் அகாத்

**பொருள் -** குருவாயூரப்பா! ஒரு முறை சரஸ்வதி நதியின் கரையில் தவம் இயற்றிக் கொண்டிருந்த முனிவர்கள், மும்மூர்த்திகளில் ஸத்வ குணம் உடையவர் யார் என்று அறிய எண்ணினர். இதற்காக ப்ருகு முனிவரை அனுப்பினர். அவர் முதலில் ப்ரும்மாவின் இருப்பிடம் சென்று வணங்காமல் நின்றார். இதனைக் கண்ட ப்ரும்மா கோபம் கொண்டு, பிறகு கோபம் தணிந்தான். அதன் பின்னர் அவர் சிவலோகம் சென்றார். இவரைக் கண்ட சி வன் விரைந்து வந்து கட்டித் தழுவி வரவேற்க வந்தார். உடனே ப்ருகு முனிவர். நீ ஆசாரமாக இல்லாதவன், என்னைத் தொடாதே, என்றார். உடனே உன்னைக் கொல்ல முயன்ற சிவனைப் பார்வதி தடுத்தாள். பின்னர் ப்ருகு உனது இருப்பிடம் வந்தாராமே!

8 ஸுப்தம் ரமா அங்க புவி பங்கஜ லோசநம் த்வாம்
விப்ரே விநிக்நதி பதேந முகா உத்தித: த்வம்
ஸர்வம் க்ஷமஸ்வ முநி வர்ய பவேந் ஸதா மே
த்வத் பாத சிஹ்நம் இஹ பூஷண இதி அவாதீ:

**பொருள் -** குருவாயூரப்பா! தாமரை போன்ற அழகிய கண்கள் கொண்ட நீ, மஹாலக்ஷ்மியின் மடியில் தலை வைத்து சயனித்திருந்தாய், இதனைக் கண்ட ப்ருகு முனிவர் தனது காலால் உனது மார்பில் உதைத்தார். உடனே நீ எழுந்து அவரை

மகிழ்வுடன் வரவேற்று, ப்ருகு முனிவரே! எனது குற்றத்தை மன்னிக்க வேண்டும் உங்கள் காலின் சுவடு என்றும் என் மார்பில் விளங்கும் என்றாய்.

9 நிச்சித்ய தே ச ஸுத்ருடம் த்வயி பத்த பாவா:
ஸாரஸ்வதா முநி வரா: ததிரே விமோக்ஷம்
த்வாம் ஏவம் அச்யுத புந: ச்யுதி தோஷ ஹீநம்
ஸத்வ உச்சய ஏத தநும் ஏவ வயம் பஜாம:

**பொருள் -** குருவாயூரப்பா! ப்ருகு முனிவர் ஸரஸ்வதி நதிக்கரையில் உள்ள முனிவர்களிடம் நடந்ததைக் கூறினார். அவர்கள் நீயே ஸத்வகுணம் உள்ளவன் என்று முடிவு செய்து உன்மீது மிகுந்த பக்தி கொண்டு, மோட்சம் பெற்றனர். அடியார்களைக் கைவிடாதவனே! அச்சுதனே! ஸத்வ குணமே உனது உருவமாக உடையவனே! உன்னையே நாங்கள் துதிக்கின்றோம்.

10 ஜகத் ஸ்ருஷ்டி ஆதௌ த்வாம்
நிகம நிவஹை: வந்திபி: இவ
ஸ்துதம் விஷ்ணோ ஸத் சித்
பரம ரஸ நிர்த்வைத உபுஷம்
பர ஆத்மாநம் பூமந் பசுப
வநிதா பாக்ய நிவஹம்
பரீதாப ச்ராந்த்யை பவந
புர வாஸிந் பரிபஜே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! நீ உலகத்தை உருவாக்க ஆரம்பித்த சமயம், துதிபாடும் கூட்டம் போல் உபநிஷத்துக்கள் துதித்தன. நீ சச்சி தானந்த ரூபமாகவும், அத்வைத வடிவமாகவும் அனைத்திற்கும் ஆத்மாவாகவும் உள்ளாய். கோபிகைகள் அனைவரும் செய்த புண்ணியங்கள் ஒரு வடிவம் பெற்றதுபோல் உள்ளவனே! எனது துன்பங்கள் அனைத்தும் விலக உன்னை வணங்குகிறேன்.
***

1 வ்ருக ப்ருகு முநி மோஹிநீ அம்பரீஷ ஆதி வ்ருத்தேஷு
அயி தவ ஹி மஹத்வம் ஸர்வ சர்வ ஆதி ஜைத்ரம்
ஸ்திதம் இஹ பரம ஆத்மந் நிஷ்கல அர்வாக் அபிந்நம்

கிம் அபி யத் அவபாதம் தத்தி ரூபம் தவ ஏவ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பரமாத்மா! உனது பெருமை என்பது வ்ருகாசுரன். ப்ருகு முனிவர், மோஹிநீ, அம்பரீஷன் ஆகியோரின் சரிதங்கள் மூலம் வெளிப்படுகிறது. உனது இந்த மேன்மை சிவன் முதலானவர்களின் மேன்மையை வெல்லக் கூடியது என்று உணர முடிகிறது. தொடக்கத்தில் முழுமுதலாக, எந்தவிதமான மாறுபாடுகளும் அடையாமல், விளக்க இயலாமல் எந்த ஒன்று இருந்ததோ, அதுவே உனது ரூபமாகும்.

2 மூர்த்தி த்ரய ஈச்வர ஸதாசிவ பஞ்சகம் யத்
ப்ராஹு: பராத்ம வபு: ஏவ ஸதாசிவ: அஸ்மிந்
தத்ர ஈச்வர: து ஸ விகுண்ட பத: த்வம் ஏவ
த்ரித்வம் புந: பஜஸி ஸத்ய பதே த்ரி பாகே

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் பலரும் ப்ரும்மா, விஷ்ணு, சிவன், ஈச்வரன், ஸதாசிவன் என்று ஐந்து மூர்த்திகள் உள்ளதாகக் கூறுகின்றனர். ஸதாசிவம் என்று அனைத்திற்கும் ஆத்மாவாக நீயே உள்ளாய். ஈச்வரன் என்பதும் வைகுண்டத்தில் வாசம் செய்யும் நீயே ஆவாய். மூன்று லோகங்களாக உள்ள ஸத்யலோகம் வைகுண்டம், சிவலோகம் ஆகியவற்றில் விளங்கும் ப்ரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரும் நீயே ஆவாய்.

3 தத்ர அபி ஸாத்விக தநும் தவ விஷ்ணும் ஆஹு:
தாதா து ஸத்வ விரள: ரஜஸா ஏவ பூர்ண:
ஸத்வ உத்கட த்வம் அபி ச அஸ்தி தம: விகார
சேஷ்டா ஆதிகம் ச தவ சங்கர நாம்நி மூர்த்தௌ

**பொருள் -** குருவாயூரப்பா! மூன்று மூர்த்திகளில் ஸத்வ குணம் மட்டுமே உள்ள உன்னை விஷ்ணு என்பார்கள். ஸத்வ குணம் குறைவாகவும் ரஜோ குணம் அதிகமாகவும் உள்ள மூர்த்தியை ப்ரும்மா என்கின்றனர். ஸத்வ குணம் அதிகமாக இருந்து தமோ குணமும் இருக்கும் மூர்த்தியை சிவன் என்று கூறுகின்றனர்.

4 தம் ச த்ரி மூர்த்தி அதிகதிகம் பர பூருஷம் த்வாம்

சர்வ ஆத்மநா அபி கலு ஸர்வ மயத்வ ஹேதோ:
சம்ஸந்தி உபாஸந விதௌ தத் அபி ஸ்வத: து
த்வத்ரூபம் இதி அதித்ருடம் பஹுந: ப்ரமாணம்

**பொருள் -** குருவாயூரப்பா! மூன்று மூர்த்திகளைவிட மேலானவனாக, பரம்பொருளாக, அனைத்திற்கும் அந்தர்யாமியாக, அனைத்துமே நீயாக உள்ளதால், உபாஸனை விதிகளின்படி உன்னைப் பரமேஸ்வரன் என்று கூறுகிறார்கள். இருந்தாலும் அதுவும் உனது வடிவமே என்பதற்கும் பல ஆதாரங்கள் உள்ளன.

5 ஸ்ரீ சங்கர: அபி பகவாந் ஸகலேஷு தாவத்
த்வாம் ஏவ மாநயதி ய: ந ஹி பக்ஷபாதீ
த்வந் நிஷ்டம் ஏவ ஸ: ஹி நாம ஸஹஸ்ரக ஆதி
வ்யாக்யத் பவத் ஸ்துதி பர: ச கதிம் கத: அந்தே

**பொருள் -** குருவாயூரப்பா! (இதனை உணர்ந்த காரணத்தால்தான்) ஆதி சங்கரர் மற்ற தெய்வங்களை விட உன்னையே போற்றினார். அவர் நடுநிலைமை இன்றி பேசுபவர் அல்லர், இதனால்தான் ஸஹஸ்ரநாமம், பகவத்கீதை முதலானவற்றுக்கு விளக்க உரை எழுதினார். இறுதிவரை உன்னையே வணங்கி மோட்சம் பெற்றார்.

6 மூர்த்தி த்ரய அதிகம் உவாச ச மந்த்ர சாஸ்த்ரஸ்ய
ஆதௌ கலாய ஸூக்ஷமம் ஸகல ஈச்வரம் த்வாம்
த்யாநம் ச நிஷ்கலம் அஸௌ ப்ரணவே கலு உக்த்வா
த்வாம் ஏவ தத்ர ஸகலம் நிஜகாத அந்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மேலும் காயாம்பூ போன்ற நிறம் உடையவனும், அனைத்திற்கும் ஈச்வரனாகவும் (சர்வேஸ்வரன்) உள்ள உன்னை, ஆதிசங்கரர் மந்திர சாஸ்திரத்தின் தொடக்கத்தில், ப்ரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை விட மேலானவன் என்றார். மேலும் ப்ரணவ மந்திரத்தின் முழுமுதற் கடவுள், த்யானத்தின் சாதனமாக உன்னையே கூறினார். வேறு எந்த தெய்வத்தையும் கூறவில்லையே!

7 ஸமஸ்த ஸாரே ச புராண ஸங்க்ரஹே

விஸம்சயம் த்வந் மஹிமா ஏவ வர்ண்யதே
த்ரி மூர்த்தி யுக் ஸத்ய பத த்ரி பாகத:
பரம் பதம் தே கதிதம் ந சூலிந:

**பொருள் -** குருவாயூரப்பா! அனைத்துப் புராணங்களின் சாரத்தையும் கூறுகின்ற புராண ஸங்க்ரஹம் என்ற நூலில் உனது பெருமையே பேசப்பட்டுள்ளது. மூன்று மூர்த்திகள் உள்ள ஸத்ய லோகத்தைக் காட்டிலும், உனது வைகுண்டமே மேலானது என்று கூறப்பட்டுள்ளது. சூலம் ஏந்திய சிவனின் லோகம் கூறப்படவில்லை.

8 யத் ப்ராஹ்ம கல்ப: இஹ பாகவத த்விதீய
ஸ்கந்த உதிதம் வபு: அநாவ்ருதம் ஈச தாத்ரே
தஸ்ய ஏவ நாம ஹரி சர்வ முகம் ஜகாத
ஸ்ரீமாதவ: சிவ பர: அபி புராண ஸாரே

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! தற்போது இயங்கிக் கொண்டுள்ள, ப்ரஹ்ம கல்பம் என்ற காலக்கட்டத்தின் தொடக்கத்தில், ப்ரும்மாவுக்கு நீ உனது திருமேனியைக் காண்பித்தாய். இந்த நிகழ்ச்சி ஸ்ரீமத் பாகவதத்தின் இரண்டாவது ஸ்கந்தத்தில் கூறப்பட்டது. ஸ்ரீமத்வாச்சாரியார் என்பவர் சிவன் அடியாராக இருந்தபோதிலும் தான் எழுதிய புராண ஸாரம் என்ற நூலில், நீ ப்ரும்மாவுக்குக் காண்பித்த அந்தத் திருமேனியே ஹரி, சிவன் என்று கூறுகிறார்.

9 யே ஸ்வ ப்ரக்ருதி அநுகுணா: கிரிசம் பஜந்தே
தேஷாம் பலம் ஹி த்ருடயா ஏவ ததீய பக்த்யா
வ்யாஸ: ஹி தேந க்ருதவாந் அதிகாரி ஹேதோ:
ஸகாந்த ஆதிகேஷு தவ ஹாநி வச: அர்த்தவாதை:

**பொருள் -** குருவாயூரப்பா! தங்கள் வினைப்பயன் காரணமாக சிவனை உபாஸிப்பவர்களுக்கு உண்டாகும் பயன் என்பது, சிவனிடம் அவர்கள் கொண்டுள்ள பக்தியால் விளைகிறது. இதனால்தான் வ்யாஸ முனிவர் ஸகந்தபுரணத்தில் சிவனை உயர்வாகவும், அர்த்தவாதமாக உன்னைத் தாழ்த்தியும் கூறினார். (அர்த்தவாதம் என்பது புகழ்வதற்காக ஒன்றை உயர்த்திக் கூறி மற்றதைத் தாழ்த்திக் கூறுவது ஆகும்).

10 பூத அர்த்த கீர்த்தி: அநுவாத வ்ருத்த வாதெள
த்ரேதா அர்த்தவாத கதய: கலு ரோசந அர்த்தா:
ஸ்காந்த ஆதிகேஷு பஹவ: அத்ர விருத்த வாதா:
த்வத் தாமஸத்வ பரிபூத் உபசிக்ஷண ஆத்யா:

**பொருள் -** குருவாயூரப்பா! அர்த்தவாதம் என்பது மூன்று வகையாக உள்ளது. முன்பு நடந்ததைக் கூறுவது (பூத அர்த்த கீர்த்தி). ஒரு முறைக் கூறியதை மேலும் விளக்கமாகக் கூறுவது(அநுவாதம்), முரணான பொருள் கூறுவது (வ்ருத்த வாதம்) என்பதாகும். இவை மூன்றும் கூறப்படும் விவரங்களில் உள்ள பொருளின் தன்மையை சுவாரஸ்யப்படுத்தவே உள்ளன அல்லவா? ஆகவே ஸ்காந்தம் போன்றவற்றில் உனக்குக் கூறப்பட்ட தாமஸ குணம், தோல்வி முதலியவை வ்ருத்த வாதங்கள் ஆகும்.

11 யத் கிஞ்சித் அபி அவிதுஷா அபி விபோ மயா உக்தம்
தத் மந்த்ர சாஸ்த்ர வசந ஆதி அபித்ருஷ்டம் ஏவ
வ்யாஸ உக்தி ஸாரமய பாகவத உபகீத
க்லேசாந் விதூய குரு பக்தி பரம்பர ஆத்மந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! எனக்குப் போதிய அறிவும் ஞானமும் இல்லை என்றாலும், நான் கூறிய அனைத்தும், மந்த்ரஸாஸ்ரத்தில் உள்ளன. வ்யாஸ முனிவர் இயற்றிய, புராணங்களின் சாரமாக உள்ள ஸ்ரீமத் பாகவதம் உன்னையே துதிக்கின்றது. இத்தகைய சிறப்பும், பெருமையும், மேன்மையும் உடைய நீ எனது துயர்களை நீக்கி என்னுடைய பக்தியை மேலும் வளர்க்க வேண்டும்.

***

1 ஸ்ரீ க்ருஷ்ண த்வத் பத உபாஸநம்
அபயதமம் பத்த மித்யா அர்த்த த்ருஷ்டே
மர்த்யஸ்ய ஆர்த்தஸ்ய மந்யே வ்யபஸரதி
பயம் யேந ஸர்வ ஆத்மநா ஏவ
யத்தாவத் த்வத் ப்ரணீதாந் இஹ பஜந
விதீந் ஆஸ்தித: மோஹ மார்க்கே
தாவந் அபி ஆவ்ருத அக்ஷ: ஸ்கலதி ந
குஹசித் தேவ தேவ அகில ஆத்மந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தேவர்களின் தேவனே! அனைத்து உயிர்களின் ஆத்மாவாக உள்ளவனே! உலகில் உள்ள பெய்யானவற்றின் மேல் மிகுதியாக அக்கறை செலுத்தி ஆசை வைத்து, அதன் காரணமாகவே மரணம் என்னும் பயத்தை அடையும் எந்த ஒரு மனிதனுக்கும் உனது பாதங்கள் கதியாகும். அவை பயத்தை நீக்க வல்லது என்று நான் நினைக்கிறேன். நீ உபதேசித்த பக்தி மார்க்கத்தை நிச்சயம் பின்பற்ற வேண்டும். அப்படி யார் ஒருவன் பின்பற்றுகிறானோ, அவன் தவறான பாதையில் சென்றாலும் தடுக்கி விழுவதில்லை அல்லவா?

2 பூமந் காயேந வாச முஹு அபி மநஸா
த்வத் பல ப்ரேரித ஆத்மா
யத் யத் குர்வே ஸமஸ்தம் தத் இஹ
பரதரே த்வயி அஸௌ அர்ப்பயாமி
ஜாத்யா அபி இஹ ச்வ பாக: த்வயி நிஹித
மந: கர்ம வாக் இந்த்ரிய அர்த்த
ப்ராண: விச்வம் புநீதே ந து விமுக மநா:
த்வத் பதாத் விப்ர அவர்ய:

**பொருள் -** எங்கும் உள்ளவனே! குருவாயூரப்பா! உனது சக்தியால் எனது மனம் செயல்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட நான் எனது உடல், வாக்கு, மனம் ஆகியவற்றால் செய்யும் அனைத்துச் செயல்களையுமே உன்னிடம் அர்ப்பணம் செய்கிறேன். ஒருவன் பிறப்பால் மிகவும் தாழ்ந்த சண்டாளனாக இருந்தாலும் உன்னிடம் தன் மனம் வாக்கு, புலன்கள், ப்ராணன் முதலியவற்றை அர்ப்பணம் செய்தால் அவன் (தன்னை மட்டும் அல்லாது) உலகத்தையே பரிசுத்தம் செய்கிறான். ஆனால் உனது திருவடிகளின்மீது பக்தி இல்லாதவன் உயர்ந்த ப்ராமண குலத்தில் பிறந்தாலும், உலகத்தையே சுத்தமாக்க முடியாது அல்லவா?

3 பீதி: நாம த்விதீயாத் பவதி நநு
மந: கல்பிதம் ச த்விதீயம்
தேந ஐக்ய அப்யாஸ சீல: ஹ்ருதயம்
இஹ யதாசக்தி புத்யா நிருந்த்யாத்

மாயா வித்தே து தஸ்மிந் புந: அபி ந
ததா பாதி மாயா அதிநாதம்
தத் த்வாம் பக்த்யா மஹத்யா ஸததம்
அநுபஜந் ஈச பீதிம் விஜஹ்யாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! மக்களுக்குப் பயம் என்பதே வேறு ஒரு பொருளால் (தன்னைவிட வேறுபட்ட இரண்டாவது ஒரு பொருள்.) மட்டுமே உண்டாகிறது அல்லவா! அப்படி பயம் விளைவிக்கும் அந்தப் பொருள் மனதில் உண்டாகும் கற்பனையால் ஏற்பட்டதே ஆகும். (பயம் என்பது காரியப் பொருள், இரண்டாவது பொருள் என்பது காரணப் பொருள்). நான் எனது மனதை ஒருநிலைப்படுத்தி காரியப்பொருளும் காரணப்பொருளும் ஒன்றே என்பதை அறிந்து கொள்வேன். ஆனால் அந்த மனம் மாயையினால் மீண்டும் சூழப்படும்போது தெளிவு நிலை மறைந்து ப்ரகாசம் குறைந்துவிடும். எனவே மாயையின் தேவனாக உள்ள உனது பக்தியின் மூலமாக எனது பயத்தை நான் வேரோடு அழிப்பேன்.

4 பக்தே: உத்பத்தி வ்ருத்தீ தவ சரண
ஜுஷாம் ஸங்கமேந ஏவ பும்ஸாம்
ஆஸாத்யே புண்ய பாஜாம் ச்ரிய:
இவ ஜகதி ஸ்ரீமதாம் ஸங்கமேந
தத் ஸங்க: தேவ பூயாந் மம கலு
ஸததம் தத் முகாத் உந்மிஷத்பி
த்வத் மஹாத்ம்ய ப்ரகாரை: பவதி
ச ஸுத்ருடா பக்தி: உத்தூத பாபா

**பொருள் -** குருவாயூரப்பா! உலகில் உள்ளவர்களுக்குச் செல்வம் படைத்தவர்களின் நட்பு மூலமாக மேலும் செல்வம் வளர்கிறது. இதே போன்று உனது திருவடிகளைச் சரணம் என்று அடைந்தவர்களுக்கு மிகுதியான பக்தி பெருகுகின்றது. க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அப்படிப்பட்ட அடியார்களின் தொடர்பு எனக்கு எப்போதும் உண்டாக்க வேண்டும். அவர்கள் தங்கள் நாக்கின் மூலமாக எப்போதும் உனது பெருமைகளைப் பற்றியே பேசுகின்றனர். இதன் மூலமாக அனைத்துப் பாவங்களையும் நீங்க வல்ல பக்தி உண்டாகும் அன்றோ!

5 ச்ரேய: மார்க்கேஷு பக்தெள அதிக
பஹுமதி: ஜந்ம கர்மாணி பூய:
காயந் ஷேமாணி நாமாநி அபிதத்
உபயத: ப்ரத்ருதம் ப்ரத்ருத ஆத்மா
உத்யத் ஹாஸ: கதாசித் குஹசித்
அபி ருதந் க்வ அபி கர்ஜந் ப்ரகாயந்
உந்மாதீ இவ ப்ரந்ருத்யந் அபிகுரு
கருணாம் லோக பாஹ்யம் சரேயம்

**பொருள் -** குருவாயூரப்பா! மோட்சத்தை அளிக்கக் கூடிய வழிகளில் பக்தி மார்க்கத்தில் எனக்கு விருப்பம் அதிகமாக இருக்க வேண்டும். நன்மைகளை அள்ளி வழங்கக்கூடிய உனது அவதாரங்களையும், லீலைகளையும், திருநாமங்களையும் எப்போதும் நான் கூறிக்கொண்டு இருக்க வேண்டும். அதன் விளைவாக நான் எனது மனம் உருகி சிரித்தபடியும், உனது பெயர்களை உரக்கக் கூறியபடியும், பித்துப் பிடித்தவன் போல் ஆடிக்கொண்டும், உன்னை நினைத்து அழுது கொண்டும் இருப்பேன். இப்படியாக பற்று இல்லாமல் நான் இருக்க நீயே அருள் புரிய வேண்டும்.

6 பூதாநி ஏதாநி பூத ஆத்மகம் அபி
ஸகலம் பக்ஷி மத்ஸ்யாந் ம்ருக ஆதீந்
மர்த்யாந் மித்ராணி சத்ரூந் அபி யமித
மதி: த்வந்மயாநி ஆநமாநி
த்வத் ஸேவாயாம் ஹி ஸித்யேந் மம
தவ க்ருபயா பக்தி தார்ட்யம் விராக:
த்வத் தத்வஸ்ய அவபோத: அபி ச
புவந பதே யத்ந பேதம் விநா ஏவ

**பொருள் -** உலகத்தின் நாதனே! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! பஞ்ச பூதங்களையும் (நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) அவை மூலம் உண்டான உலகங்களையும், பறவை இனங்களையும், மீன் இனங்களையும், விலங்கினங்களையும், மனிதர்களையும், நண்பர்களையும், விரோதிகளையும் உனது உருவம் என்றே தீர்மானித்து அவை அனைத்தையும் நான் வணங்கும்படி செய்ய வேண்டும். உனக்குப் புரியும் தொண்டு

மூலமாக உனது அருள் கிடைக்கப் பெறுகிறது. அந்த அருளால் மிகச் சிறந்த பக்தியும், பற்றில்லாத குணமும், உன்னைக் குறித்த ஞானமும் உண்டாகிறது. இல்லையா?

7 நோ முஹ்யந் க்ஷுத் த்ருட் ஆத்யை: பவ
ஸரணி பவை: த்வத் நிலீந ஆசயத்வாத்
சிந்தா ஸாதத்ய சாலீ நிமிஷ லவம்
அபி த்வத் பதாத் அப்ரகம்ப:
இஷ்ட அநிஷ்டேஷு துஷ்டி வ்யஸந
விரஹித: மாயிகத்வ அவபோதாத்
ஜ்யோத் ஸ்நாபி: த்வந் நக இந்தோ:
அதிக சிசிரிதேந ஆத்மநா ஸஞ்சரேயம்

**பொருள் -** குருவாயூரப்பா! எனது மனதை உன்னிடம் ஒன்றச் செய்து விட்டேன். உலக வாழ்க்கையின்போது உண்டாகும் பசி, தாகம் போன்றவற்றால் நான் மயங்காதவனாகவும், எப்போதும் உன்னைக் குறித்து த்யானம் செய்பவனாகவும், உனது திருவடிகளில் இருந்து சிறிதும் விலகாமல் உள்ளவனாகவும், நான் இருக்க வேண்டும். மேலும், எனக்கு விருப்பமான பொருளால் உண்டாகும் மகிழ்வும், விருப்பம் இல்லாத பொருளால் உண்டாகும் துன்பமும் மாயையால் நிகழ்கின்றன. என்பதை உணர்ந்தவனாக மகிழ்வும் துன்பமும் அற்றவனாக இருக்க வேண்டும். உனது திருவடிகளில் சந்திரன் போன்று (குளிர்ச்சியாகவும் அழகாகவும்) உள்ள நகங்கள் வீசும் ஒளியின் மூலமாக நான் குளிர்ந்த மனதுடன் உலவ வேண்டும்.

8 பூதேஷு ஏஷு த்வத் ஐக்ய ஸ்ம்ருதி
ஸமதிகதௌ ந அதிகார: அதுநா சேத்
த்வத் ப்ரேம த்வத்க மைத்ரீ ஜட மதீஷு
க்ருபா த்விட்ஸு பூயாத் உபேஷா
அர்ச்சாயாம் வா ஸமர்ச்ச: குதுகம் உரு
தர ச்ரத்தயா வர்த்ததாம் மே
த்வத் ஸம்ஸேவீ ததா அபித்ருதம்
உபலபதே பக்த லோக உத்தம த்வம்

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் வாழும் அனைத்தும் உயிர்களிலும் நீ அந்தர்யாமியாக உள்ளாய் என்று அறியும் ஞானத்தைப் பெற எனக்குத் தகுதி இப்போது இல்லை என்றால் - உன்னிடம் பக்தியும் உனது அடியர்களிடம் மிகுந்த அன்பும், ஞானம் இல்லாதவர்களிடம் கருணையும், விரோதிகளைப் புறக்கணிக்கும் திறனும் ஏற்பட வேண்டும். அதற்கும் தகுதி இல்லை என்றால் உனது திருவுருவத்தை வழிபடும் ஆசையும், மிகுந்த பற்றும் உண்டாக வேண்டும். இப்படியாக உன்னை வழிபடக் கூடியவன் பக்தர்களில் மிகவும் சிறந்தவனாக உள்ளான் இல்லையா?

9 ஆவ்ருத்ய த்வத் ஸ்வரூபம் க்ஷிதி ஜல
மருத் ஆதி ஆத்மநா விக்ஷிபந்தீ
ஜீவாந் பூயிஷ்ட கர்ம ஆவலி விவச
கதீந் து: க்க ஜாவே க்ஷிபந்தீ
த்வத் மாயா மா அபிபூந் மாம் அயி புவந
பதே கல்பதே தத் ப்ரசாந்த்யை
த்வத் பாதே பக்தி: ஏவ இதி அவதத்
அயி விபோ ஸித்த யோகீ ப்ரபுத்த:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னால் ஏற்படுத்தப்பட்ட மாயை உனது உண்மையான உருவத்தை மறைத்து நிலம், நீர், காற்று, போன்று பலவாகக் காட்டுகிறது; கர்மவினை காரணமாக அடையப்பட்டதும் கட்டுப்படுத்த முடியாததும் ஆகிய உடலைப் பெற்ற ஜீவாத்மாவை துன்பம் என்றும் கொடியவலையில் சிக்க வைக்கிறது. இப்படிப்பட்ட மாயை என்னை ஆளாமல் இருக்க வேண்டும். ப்ரபுத்தர் என்ற சித்தர். உனது திருவடிகளில் கொள்ளும் பக்தி ஒன்றே அந்த மாயையை அழிக்க வல்லது என்று கூறினார் அல்லவா?

10 து காநி: ஆலோக்ய ஜந்துஷு அலம்
உதித விவேக: அஹம் ஆசார்ய வர்யாத்
லப்த்வா த்வத்ரூப தத்வம் குண சரித கதா
ஆதி உத்பவந் பக்தி பூமா
மாயாம் ஏநாம் தரித்வா பரம ஸுகமயே
த்வத் பதே மோதிதாஹே
தஸ்ய அயம் பூர்வ ரங்க: பவந புர பதே
நாசய அசேஷ ரோகாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஜீவர்களிடம் உண்டாகும் துன்பங்களைக் கண்டு எனக்கு ஞானம் ஏற்பட வேண்டும். அதனால் ஒரு சிறந்த குருவை நான் அடைந்து, அவர் மூலமாக உனது உண்மையான ஸ்வரூப ஞானம் அடைவேன். உனது திருக்கல்யாண குணங்களைக் குறித்து எப்போதும் பாடிக்கொண்டு, அதன் காரணமாக எனது பக்தி பெருகி நிற்கும். மாயை என்பதை வென்று பரமானந்தம் அளிக்கும் உனது திருவடிகளைப் பற்றி பெரு மகிழ்வு கொள்ள வேண்டும். மாயையை வெல்ல இதுவே சரியான தொடக்கம் ஆகும். எனது நோய்களை நீக்க வேண்டும்.

***

1 வேதை: ஸர்வாணி கர்மாணி அபல
பரதயா வர்ணிதாநி இதி புத்வா
தாநி த்வயி ஆர்ப்பிதாநி ஏவ ஹி
ஸமநுசரந் யாநி நைஷ்கர்ம்யம் ஈச
மாபூத் வேதை: நிஷித்தே குஹசித்
அபி மந: கர்ம வாசாம் ப்ரவ்ருத்தி:
துர்வர்ஜம் சேத் அவாப்தம் தத் அபி
கலு பவதி அர்ப்பயே சித் ப்ரகாசே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! வேதங்களில் கூறப்பட்ட கர்மங்கள் அனைத்துமே அந்தக் கர்மங்களைச் செய்வதன் மூலம் உண்டாகும் பயன்களின் மீது விருப்பம் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனை உணர்ந்து அந்தக் கர்மங்களை உன்னிடம் ஒப்படைத்தவனாக, அதன் பலனை எதிர்பாராமல், அவை மூலம் உண்டாகும் ஞானத்தை மட்டும் நான் அடைவேனாக, வேதங்கள் செய்யக்கூடாதவை என்று தடுத்துள்ள கர்மங்களைச் செய்ய எனது மனம், உடல், வாக்கு ஆகியவை உடன்படாது. அதனையும் மீறி அவை அக்கர்மங்களைச் செய்யும் என்றால் அந்தக் கர்மங்களையும் உன்னிடம் உனது ஒளி வீசும் ஞான ஸ்வரூபத்திடம் அர்ப்பணம் செய்து விடுவேன்.

2 ய: து அந்ய: கர்மயோக: தவ பஜ நமய:
தத்ர ச அபீஷ்ட மூர்த்திம்
ஹ்ருத்யாம் ஸத்வ ஏக ரூபாம் த்ருஷதி
ஹ்ருதி ம்ருதி க்வ அபி வா பாவயித்வா

புஷ்பை: கந்தை: நிவேத்யை: அபி ச
வீரசிதை: சக்தித: பக்தி பூதை:
நித்யம் வர்யாம் ஸபர்யாம் விததத் அயி
விபோ த்வத் ப்ரஸாதம் பஜேயம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை உபாஸிக்க பூஜை செய்வது என்பது ஒரு வகையான கர்மயோகம் ஆகும். அப்படி பூஜிக்க அழகாகவும், தூய்மையானதாகவும் ஒரு மூர்த்தியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த மூர்த்தியானது கல், மண் ஆகியவற்றால் அமைத்தும் அல்லது மனதிலேயே அமைத்தும் இருக்கலாம். அந்த மூர்த்தியை த்யானம் செய்ய வேண்டும். பின்னர் தனது சக்திக்கு உட்பட்டு ஈட்டப்பட்ட செல்வம் மூலமாகவும், பக்தியினால் தூய்மை செய்யப்பட்டதாகவும் உள்ள மலர்கள், சந்தனம் ஆகியவற்றால் அன்றாடம் சிறந்த பூஜையைச் செய்ய வேண்டும். இப்படியாக உனது அருளை நான் பெறுவேன்.

3 ஸ்த்ரீ சூத்ரா: த்வத் ஆதி ச்ரவண விரஹிதா
ஆஸதாம் தே தயா அர்ஹா:
த்வத் பாத ஆஸந்ந யாதாந் த்விஜ குல
ஜநுஷ: ஹந்த கோசாமி அசாந்தாந்
வ்ருத்யர்த்தம் தே யஜந்த: பஹு கதிதம்
அபி த்வாம் அநாகர்ணயந்த:
த்ருப்தா வித்யா ஆபிஜாத்யை: கிமு
ந விதத்தே தாத்ருசம் மா க்ருதா மாம்

**பொருள் -** குருவாயூரப்பா! பெண்கள், சூத்திரர்கள் ஆகியோரில் சிலர் அவர்கள் அறியாமையாலும் வினைப்பயனாலும் உனது கதை, பெயர் முதலியவற்றின் மீது ப்ரியம் இல்லாமல் உள்ளனர். எனவே உனது கருணைக்கு அவர்கள் எப்போதும் உரியவர்கள்; நான் அவர்களைக் குறித்துக் கூறப்போவதில்லை. ஆனால் உனது திருவடிகளை உணர்ந்து விளங்கும் ப்ராமணர்கள், அரசர்கள், வைசியர்கள் ஆகியோர் மன அமைதி இன்றி உள்ளனரே! அவர்களைக் குறித்து நான் வருத்தம் அடைகிறேன். தங்கள் பிழைப்பிற்காக அவர்கள் யாகம் செய்கின்றனர். பலர் கூறியும் உனது பெருமைகளைக் கேட்பதில்லை. இவர்கள் தங்கள் படிப்பால் கர்வம் கொண்டவர்கள் ஆவர். அவர்கள்

இதைவிட வேறு எதையும் செய்யத் துணிவார்கள். நீ என்னை அவர்களில் ஒருவனாக மாற்றி விடாதே!

4 பாப: அயம் க்ருஷ்ண ராம இதி அபிலபதி
நிஜம் கூஹிதும் துச்சரித்ரம்
நிர்லஜ்ஜஸ்ய அஸ்ய வாசா பஹு தர
கதநீயாநிமே விக்நிதாநி
ப்ராதா மே வந்த்ய சீல: பஜதி கில ஸதா
விஷ்ணும் இத்தம் புதாந்தே
நிந்தந்தி உச்சை: ஹஸந்தி த்வயி நிஹித மதீம்:
தாத்ருசம் மாக்ருதா மாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது உண்மையான பக்தர்களைக் கண்ட சில மனிதர்கள். இவன் தனது கெட்ட நடத்தையை மறைக்க இப்படி க்ருஷ்ணா, இராமா என்று பஜனை செய்கிறான். என்று கூறுகின்றனர். அவர்கள் மேலும், வெட்கம் இல்லாத இவர்கள் கூறுவதால் எனது முயற்சிகள் தடைபடுகின்றன. வீணாக பொழுதுபோக்கும் எனது சகோதரன் விஷ்ணுவை வணங்குவதாகக் கூறி வருகிறான் என்று கூறுகின்றனர். பரிகாசமும் செய்கின்றனர். இப்படிப்பட்டவர்களுள் என்னை நீ சேர்த்துவிடாதே!

5 ச்வேத ச்சாயம் க்ருதே த்வாம் முநி வர
வபுஷம் ப்ரீணயந்தே தபோபி:
த்ரேதாயாம் ஸ்ருக் ஸ்ருவ ஆதி அங்கிதம்
அருணதநும் யஜ்ஞரூபம் யஜந்தே
ஸேவந்தே தந்த்ர மார்கை: விலஸத்
அரிகதம் த்வாபரே ச்யாமள அங்கம்
நீலம் ஸங்கீர்த்தந ஆத்யை: இஹ கலி
ஸமயே மாநுஷா: த்வாம் பஜந்தே

**பொருள் -** குருவாயூரப்பா! க்ருதயுகத்தில் உன்னை வெண்மை நிறம் உடைய ப்ரம்மச்சாரி வடிவில் துதிக்கின்றனர். த்ரேதா யுகத்தில், ஸ்ருக் ஸ்ருவம் என்னும் யாகப் பொருட்களைத் தரித்து சிவப்பு நிறமாக உள்ள யஜ்ஞ புருஷனாக வழிபடுகின்றனர். துவாபரயுகத்தில் சக்கரத்தையும் கதாயுதத்தையும் ஏந்திய ச்யாமள நிறத்தவனாக உன்னை தந்திரங்கள்

மூலம் வணங்குகின்றனர். கலியுகத்தில் நீலநிறமாக உன்னை உனது திருநாமங்களைக் கூறியபடி பஜனை மூலம் துதிக்கின்றனர்.

6 ஸோயம் காலேய கால: ஜயதி முரரிபோ
யத்ர ஸங்கீர்த்தந ஆத்யை:
நிர்யத்நை: ஏவ மார்கை: அகிலத ந
சிராத் த்வத் ப்ரஸாதம் பஜந்தே
ஜாதா: த்ரேதா க்ருத ஆதௌ அபி ஹி
கில கலௌ ஸம்பவம் காமயந்தே
தைவாத் தத்ர ஏவ ஜாதாந் விஷய விஷரஸை:
மா விபோ வஞ்சய அஸ்மாந்

**பொருள் -** குருவாயூரப்பா! முரன் என்ற அசுரனை அழித்த ப்ரபுவே! இப்படியாக (உனது நாம சங்கீர்த்தனத்தால்) கலியுகம் மிகவும் மேன்மையுடன் உள்ளது. மிகவும் எளிய முறையில், உனது நாம சங்கீர்த்தனத்தை மட்டுமே செய்து, மக்கள் உனது அருளை எளிதாகப் பெற இயல்கிறது. எனவே க்ருதயுகத்திலும், த்ரேதாயுகத்திலும் பிறந்த மனிதர்கள் மீண்டும் கலியுகத்தில் பிறக்க நினைக்கின்றனர் அல்லவா? நாங்கள் செய்த புண்ணியத்தினால் கலியுகத்தில் பிறந்துள்ளோம். எங்களை சிற்றின்பம் என்னும் அமிர்த வடிவில் உள்ள விஷத்தில் ஆழ்த்தி விடாதே!

7 பக்தா: தாவத் கலௌ ஸ்யு: த்ரமில
புவி தத: பூரிச: தத்ர ச உச்சை:
காவேரீம் தாம்ரபர்ணீம் அநு கில க்ருத
மாலாம் ச புண்யாம் ப்ரதீசீம்
ஹா மாம் அபி ஏதத் அந்தர்பவம் அபி ச
விபோ கிஞ்சித் அஞ்சத் ரஸம் த்வயி
ஆசா பாசை: நிபத்ய ப்ரமய ந பகவந்
பூரய த்வந் நிவேஷாம்

**பொருள் -** பகவானே! குருவாயூரப்பா! இந்தக் கலியுகத்தில் உனது பக்தர்கள் மிகவும் அதிகமாகவே உள்ளனர். திராவிட நாட்டில் அதிகமாக உள்ளனர். மேலும் குறிப்பாக காவிரி, தாமிரபரணி ஆகிய நதிகளின் கரைகளிலும், மேற்குத் திசையில் பாயும் நதிகளின்

கரைகளிலும் பக்தர்கள் அதிகமாக உள்ளனர். இப்படிப்பட்ட இடத்தில் நான் பிறந்துள்ளேன். உன்னிடம் சிறிதாவது பக்தி உடையவனாக என்னை நீ மாற்ற வேண்டும். என்னை ஆசை மற்றும் பாசங்கள் என்னும் கயிறு கொண்டு இறுக்கமாகக் கட்டி விடாதே. எனக்கு உன்னிடம் உள்ள பக்தி என்றும் நிறைவாக இருக்க வேண்டும்.

8 த்ருஷ்ட்வா தர்ம த்ருஹம் தம் கலிம்
அபகருணம் ப்ராக் மஹீ க்ஷித் பரீக்ஷித்
ஹந்தும் வ்யாக்ருஷ்ட கட்க: அபிந
விநிஹிதவாந் ஸார வேதீ குண அம்ம்சாத்
த்வத் ஸேவா ஆதி ஆக ஸித்தயேத்
அஸத் இஹ ந ததா த்வத் பரே ச ஏஷ பீரு:
யத் து ப்ராக் ஏவ ரோக ஆதிபி:
அபஹரதே தத்ர ஹா சிக்ஷய ஏநம்

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு ஒரு காலத்தில் கலிபுருஷன், தர்ம தேவதையை மிகவும் கொடுமைப்படுத்துவதை பரீட்சத்து என்ற அரசன் கண்டான். அவன் உடனே தனது வாளை உருவி கலிபுருஷனைக் கொல்ல முயன்றான். ஆனால் அந்த கலிபுருஷனின் நல்ல குணங்களைக் கண்ட அரசன் அவனைக் கொல்லாமல் விட்டான். இந்தக் கலியுகத்தில் உனது ஆராதனையும், தரிசனமும் கூடிய விரைவில் பலன் அளிக்கிறது. அதே நேரம் பாவங்கள் விரைவாக தீய பலனை அளிப்பதில்லை. கலிபுருஷன் உனது பக்தர்களைக் கண்டு அஞ்சியவனாக உள்ளான். எனவே மக்கள் உன்னை வணங்கி உனது அடிமை ஆவதற்கு முன்னரே அவர்களை நோய்கள் முதலானவற்றால் வருத்துகிறான். இதனால் மக்களைத் தடுக்கிறான். ஆகவே நீ அவனைத் தண்டிப்பாயாக!

9 கங்கா கீதா ச காயத்ரீ அபி ச துளஸிகா
கோபிகா சந்தனம் தத்
ஸாளக்ராம அபி பூஜா பரபுருஷ
ததா ஏகாதசீ நாமவர்ணா:
ஏதாநி அஷ்ட அபி அயத்நாந் அயி
கலி ஸமயே த்வத் ப்ரஸாத ப்ரவ்ருத்தயா
க்ஷிப்ரம் முக்தி ப்ரதாநீ இதி அபிதது:
ருஷய: தேஷுமாம் ஸஜ்ஜயேதா:

**பொருள் -** குருவாயூரப்பா! பரமபுருஷா! இந்தக் கலிகாலத்தில் பெரும் முயற்சி இல்லாமலேயே உனது அருளைப் பெற்றுத் தந்து, மோட்சமும் அளிப்பவை என்று எட்டு அம்சங்களை முனிவர்கள் கூறுகின்றனர். அவையாவன-கங்கை, பகவத்கீதை, காயத்ரி மந்திரம், துளஸி, கோபிசந்தனம், சாளக்கிராம ஆராதனை, ஏகாதசி விரதம் நாம சங்கீர்த்தனம் என்பவை ஆகும். எனக்கு இவற்றின் மீது ஈடுபாட்டை அளிப்பாயாக!

10 தேவ ருஷீணாம் பித்ருணாம் அபி ந புந:
ருணீ கிங்கர: வாஸ பூமந்
ய: அஸௌ ஸர்வாத்மநா த்வாம் சரணம்
உபகத: ஸர்வ க்ருத்யாநி ஹித்வா
தஸ்ய உத்பந்நம் விகர்ம அபி அகிலம்
அபநுதஸ்ய இவ சித்த ஸ்தித: த்வம்
தத் மே பாப உத்த தாபாந் பவந புர பதே
ருத்தி பக்திம் ப்ரணீயா:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அனைத்து செயல்களையும் விடுத்து, உன்னையே சரணம் என்று புகுந்தவன் - தேவர்களுக்கோ, முனிவர்களுக்கோ, பித்ருக்களுக்கோ அடிமையாக, கடன்பட்டவனாக, வேலைக்காரனாக இருப்பதில்லை. நீ எப்போதும் அவன் மனதில் அமர்ந்து, அவனது தீயச் செயல்களால் உண்டாகும் பாவங்களையும், அவற்றால் உண்டாகும் துன்பங்களையும் நீக்க வேண்டும். உன்னிடத்தில் ஆழ்ந்த பக்தியையும் உண்டாக்க வேண்டும்.

***

1 பந்து ஸ்நேஹம் விஜஹ்யாம் தவ ஹி
கருணயா த்வயி உபாவேசித ஆத்மா
ஸர்வம் த்யக்த்வா சரேயம் ஸகலம்
அபி ஜகத் வீக்ஷ்ய மாயா விலாஸம்
நாநாத்வாத் ப்ராந்தி ஜந்யாத் ஸதி கலு
குண தோஷ அவயோதே விதி: வா
வ்யாஸேத: வா கதம் தௌ த்வயி
நிஹித மதே: வீத வைஷம்ய புத்தே:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது அளவு கடந்த கருணை மூலமாக நான் எனது உறவினர்கள் மீது வைத்துள்ள பாசத்தை துறந்து விடுவேனாக! உன்னிடம் மட்டுமே எனது மனதை முழுமையாகச் செலுத்தியவனாக, இந்த உலகம் முழுவதுமே உனது விளையாட்டு என்று அறிந்தவனாக, அனைத்தையும் விலக்கி வாழ்பவனாக சுதந்திரமாக எங்கும் நான் செல்வேன். நல்லது, கெட்டது என்று பிரித்து அறியும் ஞானம் உள்ளவருக்கு மட்டுமே பிடிப்பும் விலக்கும் உண்டாகின்றது. உன்னிடம் தனது மனதை முழுமையாக அர்ப்பணித்த மனிதன் தீய அறிவு என்பதே இல்லாதவனாக மாறுகிறான். பின்னர் பிடிப்பும் விலக்கும் எப்படி உண்டாகும்?

2 க்ஷுத் த்ருஷ்ணா லோபமாத்ரே ஸதத
க்ருத திய: ஜந்தவ: ஸந்தி அநந்தா:
தேப்ய: விஜ்ஞானவத்வாத் புருஷ: இஹ
வர: தத் ஜநி: துர்லபா ஏவ
தத்ர அபி ஆத்மா ஆத்மந: ஸ்யாத் ஸுஹ்ருத்
அபி ச ரிபு: ய: த்வயி ந்யஸ்த சேதா:
தாப உச்சித்தே: உபாயம் ஸ்மரதி ஸ ஹி
ஸுஹ்ருத் ஸ்வாத்ம வைரீ தத: அந்ய:

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் தங்களது பசி மற்றும் தாகம் ஆகியவற்றைத் தீர்த்துக் கொள்வதில் மட்டுமே மனதை உடைய விலங்குகள் பல உள்ளன. ஆனால் ஆராய்ந்து பார்க்கின்ற அறிவுள்ளதால், மனிதன் அவற்றை விட மேலானவனாக உள்ளான். இப்படிப் பட்ட மனிதப்பிறவி கிடைப்பது என்பது மிகவும் அரியது ஆகும். மனிதன் என்பவன் தனக்குத்தானே நண்பனாகவும் எதிரியாகவும் உள்ளான். உன்னிடம் தனது மனதை அர்ப்பணம் செய்தவனாக, அதன் மூலம் தனது துன்பங்களை நீக்கும் வழியை ஆராய்பவன் தனக்குத்தானே நண்பனாக உள்ளான். இப்படி இல்லாதவன் தனக்குத் தானே எதிரி அல்லவா?

3 த்வத் காருண்யே ப்ரவ்ருத்தே க: இவ நஹி
குரு லோக வ்ருத்தே விபூமந்

ஸர்வ ஆக்ராந்தா அபி பூமி: ந ஹி சலதி
தத: ஸத் க்ஷமாம் சிக்ஷயேயம்
க்ருஹ்ணீயாம் ஈச தத்தத் விஷய பரிசயே
அபி அப்ரஸக்திம் ஸமீராத்
வ்யாப்தத்வம் ச ஆத்மந: மே கதந குரு
வசாத் பாது நிர்லே பதா ச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது அருள் இருந்துவிட்டால் இந்த உலகில் உள்ளவற்றில் எந்தப் பொருள்தான் குருவாக இருக்க முடியாது? உலகில் உள்ளவை அனைத்தையும் தாங்கி நிற்கும் பூமியானது அசையாமல் உள்ளதே! இந்தப் பூமி மூலமாக நான் பொறுமை என்பதை அறிகிறேன். காற்று வீசும்போது அனைத்து பொருட்களின் மீதும் தொடர்பு ஏற்பட்டாலும். ஒட்டுதல் என்பது இல்லை. இதன் மூலம் பற்று என்பது இல்லாத தன்மையை அறிகிறேன். ஜீவாத்மா பற்றுதல் இல்லாமல் எங்கும் நிறைந்துள்ளது என்பதை ஆகாயம் என்ற குரு மூலம் உணர்கிறேன்.

4 ஸ்வச்ச: ஸ்யாம் பாவந: அஹம் மதுர உதகவத்
வஹ்நிவந் மா ஸம க்ருஹ்ணாம்
ஸர்வ: அந்நீந: அபி தோஷம் தருஷுதாம்
இவ மாம் ஸர்வ பூதேஷு அவேயாம்
புஷ்டி: நஷ்டி: கலாநாம் சசிந: இவ தநோ:
ந ஆத்மந: அஸ்தி இதி வித்யாம்
தோய ஆதி வ்யஸ்த மார்தாண்டவத் அபி
ச தநுஷு ஏகதாம் த்வத் ப்ரஸாதாத்

**பொருள் -** குருவாயூரப்பா! நான் தண்ணீரைப் போன்று தெளிவாகவும், தூய்மையாகவும், (அனைவருக்கும்) இனிமையாகவும் இருக்க வேண்டும். நெருப்பைப் போல் அனைத்தும் உண்பவனாகவும், இருந்தாலும் பாவம் அற்றவனாகவும் மாற வேண்டும். மரத்தில் எப்படி நெருப்பு மறைவாக உள்ளதோ அதுபோல் எனது ஆத்மா மறைவாக பல உடல்களிலும் உள்ளது என்று ஞானம் பெறுவேன். தேய்வதும் வளர்வதும் சந்திரனின் பிறைகளுக்கு மட்டும் உண்டாவது போல், எழுச்சியும் வீழ்ச்சியும் இந்த உடலுக்கு மட்டுமே, ஆத்மாவிற்கு அல்ல என்பதை உணர்வேன். சூரியன் ஒன்று என்றாலும் வெவ்வேறு

தண்ணீரில் பலவாகத் தோன்றுவது போல் பல உடல்களில் இருந்தாலும் ஆத்மா ஒன்று என நான் உணர வேண்டும்.

5 ஸ்நேஹாத் வ்யாத அஸ்த புத்ர வ்யஸந
ம்ருத கபோதாயித: மாஸ்ம பூவம்
ப்ராப்தம் ப்ராச்நந் ஸஹேய க்ஷுதம் அபி
சயுவத் ஸிந்துவத் ஸ்யாம் அகாத:
மா பப்தம் யோஷித் ஆதௌ சிகிநி சலபவத்
ப்ருங்கவத் ஸாரபாகீ
பூயாஸம் கிந்து தத்வத் தந சயந வசாந்
மா அஹம் ஈச ப்ரேணசம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஈசனே! வேடன் ஒருவன் புறாவின் குஞ்சைக் கொன்றான். இதனால் புத்திரசோகம் தாங்காமல் தாய்புறா தனது உயிரை விட்டது. அதனைப் போன்று நான் இருக்கக்கூடாது (பாசத்திற்கு அடிமை ஆகக்கூடாது). மலைப்பாம்பு போன்று தானாகவே வலியக் கிடைக்கும் உணவை உண்டு எனது பசியைப் போக்குவேனாக, கடலைப் போன்று ஆழமாகவும், கம்பீரமாகவும் இருப்பேனாக, வெட்டுக்கிளி தானாகவே சென்று தீயில் விழுவது போல், பெண்களின் சுகத்திற்காக நான் விழாமல் இருப்பேனா. தேனீ எப்படி மலர்களில் உள்ள தேனை மட்டும் எடுக்கிறதோ அதுபோல் நான் பொருள்களின் சாரத்தை உணரவேண்டும். ஆயினும் தேனீ சேர்த்து வைக்கும் பொருள்போல் (தேன்) நான் பொருளைச் சேர்த்து வைத்து அழியக்கூடாது.

6 மா பத்யாஸம் தருண்யா கஜ இவ வசயா ந
ஆர்ஜயேயம்தந ஓகம்
ஹர்த்தா ந்யஸ்தம் ஹி மாத்வீ ஹர இவ
ம்ருகவந் மா முஹம் க்ராம்ய கீதை:
நா அத்யாஸஜ்ஜேய போஜ்யே ஜஷ:
இவ படிசே பிங்களாவத் நிராச:
ஸுப்யாம் பர்தவ்ய யோகாத் குரர இவ விபோ
ஸாமி ஷ: அந்யை: ந ஹந்யை

**பொருள் -** குருவாயூரப்பா! பெண் யானையைக் கண்டதும் ஆண் யானை தன் வசம் இழந்து விடுவது போல், நான் பெண்ணாசையில் கட்டுப்படாமல் இருக்க வேண்டும். தேனீ எப்படித் தனது செல்வமான தேனைச் சேர்த்து வைத்துக் கொள்கிறதோ, அதுபோல் நான் பொருளைச் சேமித்து வைக்காமல் இருக்கவேண்டும். காரணம் அந்த பொருளை மற்றவர் எளிதில் கவர்ந்து விடஇயலும், இசையில் மயங்கும் விலங்குகள் போல் நான், பகவத் தொடர்பு இல்லாத இசையில் மயங்கக்கூடாது. உணவின் மீது உள்ள ஆசையால் மீன் தூண்டிலில் சிக்குவது போல் நான் உணவின் ருசியில் அதிக விருப்பம் கொள்ளக்கூடாது. பிங்களை என்ற வேசியைப் போன்று நான் பற்றுதல் இன்றி உறங்க வேண்டும். (அவள் ஒருநாள் திடீரென ஞானம் பெற்று, த்யானம் கைகூடி பற்றுதல்களை விட்டாள்). குரரம் என்ற பறவை மாமிஸத் துண்டைக் காப்பாற்ற பெரு முயற்சி எடுப்பதுபோல், நான் பொருளைச் சேர்த்து காப்பாற்றும் துன்பம் அடையாமல் இருப்பேன்.

7 வர்த்தேய த்யக்த மாந: ஸுகம் அதி
சிசுவந் நிஸ்ஸஹாய: சரேயம்
கந்யாயா ஏகசேஷ: வலய இவ விபோ
வர்ஜித அந்யோந்ய கோஷ:
த்வத் சித்த: ந அவ புத்யை பரம் இஷு
க்ருத் இவ க்ஷ்மா ப்ருத் ஆயாந கோஷம்
கேஹேஷு அந்ய ப்ரணீதேஷு அஹி:
இவ நிவஸாநி உந்திரோ: மந்திரேஷு

**பொருள் -** குருவாயூரப்பா! சிறிய குழந்தை எப்படி பற்றுதல், கர்வம் இல்லாமல் உள்ளதோ அதுபோல் நான் ஆனந்தமாக இருப்பேனாக, ஒரு வளையல் மட்டுமே அணிந்த பெண்ணின் கைகளில் எப்படி ஓசை இல்லாமல் உள்ளதோ, அதுபோல் நான் தனிமையில், வீண் பேச்சுக்களைத் தவிர்த்து இருப்பேனாக, அம்புகளைத் தயாரிப்பவன் அரசன் வரும் ஊர்வல ஓசையைக் கேட்காமல், தனது செயலில் கண்ணாக இருப்பதுபோல், நான் உன்னிடம் மட்டுமே மனதை உடையவனாக, வேறு எதனையும் நினைக்காதவனாக இருப்பேன். எலிகளின் பொந்துகளில் பாம்பு வாழ்வதுபோல், (எனக்கென்று வீடு வைத்துக் கொள்ளாமல்) பிறர் வீடுகளில் வாழ்ந்து வருவேனாக.

8 த்வயி ஏவ த்வத் க்ருதம் த்வம் க்ஷபயஸி
ஜகத் இதி ஊர்ண நாபாத் ப்ரதீயாம்
த்வத் சிந்தா த்வத் ஸ்வரூபம் குருத இதி
த்ருடம் சிக்ஷயே பேசகாராத்
விட் பஸ்ம ஆத்மா ச தேஹ: பவதி குரு
வர: ய: விவேகம் விரக்திம்
தத்தே ஸஞ்சிந்த்ய மாந: மம து பஹு
ருஜா பீடித: அயம் விசேஷாத்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ உருவாக்கிய உலகத்தை உன்னிடத்தில் ஒன்றி இருக்கும்படி செய்கிறாய் என்பதை, நூலை தன்னுள்ளே இழுத்துக் கொள்ளும் சிலந்தி மூலமாக அறிகிறேன். உன்னையே எப்போதும் த்யானிக்கும் மனம், உனது ஸ்வரூபமாகவே மாறி விடுகிறது என்பதை குளவியின் மூலமாக அறிய வேண்டும் (புழுவைக் குளவி கொட்டி கொட்டி அந்தப் புழு குளவியாக மாறுகிறது). இந்த உடல் ஒருநாள் மலம் போன்று இழிந்ததாகவோ அல்லது சாம்பலாகவோ மாறப்போகிறது. இந்த உடலே எனக்கு ஒரு குரு - எப்படி? உடலைப் பற்றிச் சிந்திக்கும்போது ஞானமும் பற்றின்மையும் ஏற்படுகிறது. குறிப்பாக எனது உடல் பல பிணிகளால் பீடிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அதிகமான ஞானத்தையும் பற்றின்மையையும் எனக்கு அளிக்கிறது.

9 ஹீஹீ மே தேஹ மோஹம் த்யஜ பவந
புர அதீச யத் ப்ரேம ஹேதோ:
கேஹே வித்தே கலத்ர ஆதிஷு ச விவிசிதா:
த்வத் பதம் விஸ்மரந்தி
ஸ: அயம் வஹ்நே: சுந: வா பரம் இஹ பரத:
ஸாம்ப்ரதம் ச அக்ஷி கர்ண
த்வக் ஜிஹ்வா ஆத்யா: விகர்ஷந் அவசம் அத
இத: க: அபி ந த்வத் பத அப்ஜே

**பொருள் -** குருவாயூரப்பா! எனது உடலின் மீது எனக்கு உள்ள மயக்கத்தை அகற்றுவாய். இந்த உடல் மீது உள்ள விருப்பத்தினால் அன்றோ மக்கள் தங்கள் வீட்டின் மேலும், செல்வத்தின் மீதும், மனைவி மற்றும் உறவினர்கள் மீதும் தங்கள் வசமிழக்கின்றனர்?

அதனால் உனது திருவடிகளை மறந்தும் விடுகின்றனர். இந்த உடல் உயிரை விட்ட பின்னர், நெருப்பு அல்லது நாய்களுக்குச் சொந்தம் ஆகின்றது அல்லவா? உயிருடன் உள்ளபோதும் கூட இந்த உடலைக் கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐம்புலன்களும் தங்கள் வசப்படுத்தி இழுக்கின்றன. அவற்றில் ஒரு புலனாவது உனது திருவடிகளின் அருகில் உடலைக் கொண்டு செல்வதில்லையே! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்!

10 துர்வார: தேஹ மோஹ: யதி புந: அதுநா
தர்ஹி நிச்சேஷ ரோகாந்
ஹ்ருத்வா பக்திம் த்ரடிஷ்டாம் குரு தவ பத
பங்கேருஹே பங்கஜ அக்ஷ
நூநம் நாநா பவ அந்தே ஸமதிகதம் அமும்
முக்தி தம் விப்ர தேஹம்
க்ஷுத்ரே ஹா ஹந்த மா மா க்ஷிப விஷய
ரஸே பாஹி மாம் மாருத ஈச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! தாமரை போன்று அழகான கண்களை உடையவனே! இந்த உடலின் மீது கொண்ட ஆசையை நீக்க இயலவில்லை என்றால், நீ உடனே உடலில் உள்ள அனைத்து வியாதிகளையும், நீக்கி உன் திருவடிகளின் மீது ஆழ்ந்த பக்தியை உண்டாக்க வேண்டும். இந்த உயர்ந்த ப்ராமணப் பிறவி என்பது பல பிறவிகளுக்குப் பின்னர் அடையப்பட்டது. இது மோட்சம் பெற்றுத்தர வல்ல பிறவியாகும். ஆகவே இந்தப் பிறவியை அற்பமான சுகத்தில் ஈடுபடும்படியாக நீ தள்ளிவிடாதே! என்னைக் காப்பாற்றுவாயாக!

***

1 சுத்தா நிஷ்காம தர்மை: ப்ரவர குரு
கிரா தத் ஸ்வரூபம் பரம் தே
சுத்தம் தேஹ இந்த்ரிய ஆதி வ்யபகதம்
அகில வ்யாப்தம் ஆவேதயந்தே
நாநாத்வ ஸ்தௌல்ய கார்ச்ய ஆதி து குணஜ வபு:
ஸங்கத: அத்யாஸிதம் தே
வஹ்நே: தாரு ப்ரபேதேஷு இவ மஹத்
அணுதா தீப்ததா சாந்ததா ஆதி

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒரு சிறந்த குருவின் மூலமாக கர்மங்களை அறிந்தவர்களும், எந்தப் பலனையும் விரும்பாது செய்பவர்களும் உனது உருவத்தை எப்படி அறிகின்றனர்? உனது ஸ்வரூபம் என்பது உடல் புலன்கள் ஆகியவற்றிலும் மாறுப்பட்டது; மிகவும் தூய்மையானது எங்கும் நிறைந்துள்ளது என்று உணர்கின்றனர். நெருப்பு பலவிதமான கட்டைகளில் எரியும்போது பெரியதாக, சிறியதாக, ப்ரகாசம் அதிகமாக, மெதுவாக எரிவதாக இப்படிப் பலவாறு உள்ளது அல்லவா? இதே போன்று ப்ரஹ்மம் ஆகிய நீ (ப்ரஹ்மம் என்பது நான்முகன் அல்ல: ஸ்ரீமந் நாராயணன் ஆவான்) உடலின் தொடர்பு காரணமாக பெரியவனாகவும் சிறியவனாகவும் உள்ளாய்.

2 ஆசார்ய ஆக்ய அதரஸ்த அரணி
ஸமநுமிலத் சிஷ்யரூப உத்தர அரணி
ஆவேத உத்பாஸிதேந ஸ்புடதர
பரிபோத அக்நிநா தஹ்யமாநே
கர்ம ஆலீ வாஸநா தத் க்ருத தநு
புவந ப்ராந்தி காந்தார பூரே
தாஹ்ய அபாவேந வித்யா சிகிநி ச
விரதே த்வந்மீ கலு அவஸ்தா

**பொருள் -** குருவாயூரப்பா! குரு என்பவர் கீழ் உள்ள அரணிக்கட்டை ஆவார். அந்த அரணிக்கட்டை மீது சிஷ்யன் என்ற மேல் அரணிக்கட்டை உராயும்போது ஞானம் என்ற நெருப்பு உண்டாகிறது. அந்த நெருப்பானது கர்மங்கள், கர்மங்கள் மீது உள்ள பற்றுதல், அவற்றின் விளைவான உடல், உலகம் ஆகிய காடுகளை அழிக்கிறது. எரித்து முடித்த பின்னர், எரிப்பதற்கு வேறு பொருட்கள் இல்லாத காரணத்தினால் அமைதியாகிறது. அப்போது உள்ள நிலையே உனது ஸ்வரூபம் அன்றோ?

3 ஏவம் த்வத் ப்ராப்தித: அந்ய: ந ஹி
கலு நிகில கிலேச ஹாநே: உமாய:
ந ஏகாந்த ஆத்யந்திகா: தே க்ருஷிவத்
அகத ஷாட்குண்ய ஷட்கர்ம யோகா:
துர்வைகல்யை: அகல்யா அபி நிகம
பதா: தத் பலாநி அபி அவாப்தா:
மத்தா: த்வாம் விஸ்மரந்த: ப்ரஸஜதி

பதநே யாந்தி அநந்தாந் விஷாதாந்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியாக உலகில் உண்டாகும் பல்வேறு துன்பங்களை நீக்கிக் கொள்வதற்கு உன்னை அடைவது தவிர வேறு வழி கிடையாது. ஆயுர்வேத வைத்திய முறையில் கூறப்பட்ட மருந்துகளும், நீதி நூல்களில் காணப்படும் ஆறு விதமான நெறிமுறைகளும், தர்ம அறநெறி நூல்கள் கூறுகின்ற ஆறு செயல்களும் (கர்மங்களும்), வேதங்கள் கூறுகின்ற எட்டு வகையான யோகங்களும் கூட துன்பங்களை வேரோடு அழிக்கவோ அல்லது மீண்டும் வராமல் தடுக்கவோ திறன் படைத்தவை அல்ல. அவையாவும் விவசாயம் எவ்வாறு கடினமான முயற்சிக்குப் பின் பலன் அளிக்கிறதோ, அது போன்றவை ஆகும். வேதங்களில் உள்ள (துயர் நீக்கும்) வழிகள், நமக்கு எளிதில் கிடைக்க இயலாத பொருள்கள், காலம் ஆகியவற்றால் செய்ய இயலாதவை ஆகும். அப்படியும் அந்த வேத வழிகளைப் பின்பற்றும், சிலர், அதன் பயனாக சுவர்க்கம் புகுந்து, கர்வம் கொண்டும், உன்னையே மறந்து விடுகின்றனர். இதனால் சுவர்க்க பலன் முடிந்து மீண்டும் பூமிக்குத் திரும்பும் போது, மிகுந்த துன்பம் அடைகின்றனர். (ஆறு கர்மம் = யஜநம், யாஜநம், அத்யயநம், அத்யாபனம், தானம், ப்ரதிக்ரஹம்)

4 த்வத் லோகாத் அந்ய லோக: க்வநு பய
ரஹித: யத் ப்ரார்த்த த்வய அந்தே
த்வத் பீத: ஸத்ய லோகே அபி ந
ஸுக வஸதி: பத்மபூ: பத்மநாப
ஏவம் பாவே து அதர்ம ஆர்ஜித பஹு
தமஸாம் கா கதா நாரகாணாம்
தத் மே த்வம் ச்சிந்தி பந்தம் வரத
க்ருபண பந்தோ க்ருபா பூர ஸிந்த்தோ

**பொருள் -** பத்மநாபா! குருவாயூரப்பா! உனது வைகுண்ட லோகம் தவிர நிலையான வாழ்விற்கு அச்சம் விளைவிக்காத இடம் வேறு எங்கு உள்ளது? தனது ஆயுட்காலமான இரண்டு கோடி ஆண்டு முடித்த ப்ரும்மா, தனது ஸத்திய லோகத்தில் பயம் இல்லாமல் வாழ இயலவில்லையே (ப்ரும்மாவின் கதியே இப்படி என்றால்) தர்மம் அல்லாத வழிகளில், பாவம் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, நரகத்தில் விழுந்தவர்களின்

நிலைமையைப் பற்றி நான் எப்படிக் கூறுவேன் வரதனே! துயரம் அடைந்தவர்களுக்குப் புகலிடமே! கருணைக் கடலே! எனது பந்தம் அனைத்தையும் நீக்கி அருள்வாயாக!

5 யாதார்த்யாத் த்வத்மயஸ்ய ஏவ ஹி மம ந
விபோ வஸ்துத: பந்த மோக்ஷெள
மாயா வித்யா தநுப்யாம் தவ து விரசிதெள
ஸ்வப்ந போத உபமௌ தெள
பத்தே ஜுவத் விமுக்திம் கதவதி
ச பிதா தாவதீ தாவத் ஏக:
புங்க்தே தேஹ த்ரும ஸ்த: விஷய பல
ரஸாந் ந அபர: நிர்வ்யத ஆத்மா

**பொருள் -** குருவாயூரப்பா! உனது அம்சமாகவே திகழும் ஜீவாத்மாவில் (இதனை த்வம் அஸி என்று கூறுவர்-நானே ப்ரஹ்மம் என்று பொருள்) ஒருவனான எனக்கு பந்தம் அல்லது மோக்ஷம் என்பது கிடையாது. அவை உனது மாயையாலும் ஞானத்தாலும் உருவாக்கப்பட்டவை அன்றோ! அவை கனவு நிலைக்கும், விழித்திருக்கும் நிலைக்கும் ஒப்பானவை, உலகில் பற்றுடன் வாழும் மனிதனுக்கும், பற்று நீங்கி வாழும் மனிதர்களுக்கும் உள்ள வேறுபாடும் அதே அளவுதான். இந்த உடல் மரம் போன்றது. அதில் அமர்ந்துகொண்டு ஒருவன்(ஜீவாத்மா) இன்ப துன்பங்கள் என்னும் பழங்களை உண்கிறான். அதே மரத்தில் உள்ள மற்றொருவன் (பரமாத்மா) இவன் உண்பதைப் பார்த்துக் கொண்டு, தான் உண்ணாமல் உள்ளான் (இது சாந்தோக்ய உபநிஷத்தில் வருவது).

6 ஜீவத் முக்தத்வம் ஏவம் விதம் இதி
வசஸா கிம் பலம் தூரதூரே
தத் நாம அசுத்த புத்தே: ந லகு
மநஸ: சோதநம் பக்தித: அந்யத்
தத் மே விஷ்ணோ க்ருஷீஷ்டா: த்வயி
க்ருத ஸகல ப்ரார்பணம் பக்தி பாரம்
யேந ஸ்யாம் மங்க்ஷு கிஞ்சித் குரு வசந
மிலத் த்வத் ப்ரபோத: த்வத் ஆத்மா

**பொருள் -** குருவாயூரப்பா! விஷ்ணுவே! உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது (தனது பற்றற்ற தன்மையால்) விடுதலை பெற்ற (ஜீவமுக்தன்) மனிதனின் நிலை இப்படியானது என்று கூறுவதால் என்ன நன்மை உள்ளது? மனதில் சிறிதும் தூய்மை என்பதே இல்லாதவர்களுக்கு இந்த ஜீவமுக்த நிலை என்பது வெகுதூரத்தில் அல்லவா உள்ளது. ஆயினும் அந்த மனதை சுத்தம் செய்வதற்கு உனது பக்தியை விடச் சிறந்த வழி என்று வேறு எதுவும் கிடையாது. எனவே உன்னிடம் அனைத்தையும் அர்ப்பணம் செய்யும் பக்தியை எனக்கு நீ அளிப்பாயாக! அந்த பக்தியையும், குரு செய்யும் சிறு உபதேசங்களையும் கொண்டு நான் ப்ரஹ்மத்தைக் குறித்து ஞானம் ஏற்பட்டவனாக, விரைவில் ப்ரஹ்மமாகவும் ஆகிவிடுவேன் (உயிர் பிரிந்த நிலையில் ஆத்மா ப்ரஹ்மத்துடன் கலந்து ப்ரஹ்ம ஸ்வரூபம் பெறுகிறது என்று ப்ரஹ்ம சூத்திரம் கூறுகிறது. இவர் அதனைக் கூறுகிறார்).

7 சப்த ப்ரஹ்மணி அபி இஹ ப்ரயதித
மநஸ: த்வாம் ந ஜா நந்தி கேசித்
கஷ்டம் வந்த்ய ச்ரமா: தே சிரதரம்
இஹ காம் பிப்ரதே நிஷ்ப்ரஸூதிம்
யஸ்யாம் விச்வ அபிராமா: ஸகல
மல ஹரா: திவ்ய லீலா அவதார:
ஸத் சித் ஸாந்த்ரம் ச ரூபம் தவ ந
நிகதிதம் தாம் ந வாசம் ப்ரியாஸம்

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் உள்ள சிலர் வேதங்களைப் பெரிதும் முயன்று, முழு மனதுடன் கற்று அந்த வேதங்களில் மனதைச் செலுத்தியவர்களாக உள்ளனர். இருந்தாலும் அவர்கள் உன்னை அறிவதில்லை. அவர்கள் இப்படியாக மிகவும் சிரமத்துடன் வேதங்களைச் சுமக்கின்றனர். இது கன்று போட இயலாத மலட்டுப் பசுவைப் போல பராமரிப்பது போல் அல்லவா உள்ளது. அனைவரது மனதையும் சுலபமாகக் கவர்ந்து இழுப்பதும், பாவங்களை நீக்க வல்லதும், உனது லீலைகளை மிகவும் தெளிவாக விளக்குவதும், அவதார சரிதங்களைக் கூறுவதும், ஸச்சிதானந்த மயமாக உள்ளதும் ஆகிய உனது உயர்ந்த திருமேனியைப் பற்றி வர்ணிக்காத எந்த வார்த்தையையும் நான் கற்கக்கூடாது இப்படியாக நீ அருள்வாயாக.

8 யோ யாவாந் யாத்ருச: வா த்வம் இதி கிம்
அபி ந ஏவ அவகச்சாமி பூமந்
ஏவம் ச அநந்ய பாவ: த்வத் அநுபஜநம்
ஏவ ஆத்ரியே சைத்ய வைரிந்
த்வத் லிங்காநாம் த்வத் அங்க்ரி ப்ரியஜந
ஸதஸாம் தர்சந ஸ்பர்சந ஆதி:
பூயாத் மே த்வத் ப்ரபூஜா நதி துதி குண கர்ம
அநுகீர்த்தி ஆதர: அபி

**பொருள் -** குருவாயூரப்பா! பூரணமானவனே! சிசுபாலன் விரோதியே! க்ருஷ்ணா! நீ எப்படிப்பட்ட ஸ்வரூபம் உடையவன், உனது பெருமைகள், மகிமைகள் என்ன, உனது நெறிமுறைகள் என்ன, இப்படியாக எதனையும் நான் அறியவில்லை. இருப்பினும் வேறு எங்கும் மனதைச் செலுத்தாமல் உன்னையே த்யானிக்கிறேன். அதனை மட்டுமே விரும்புகிறேன். உனது விக்ரகங்களிலும், திருவடிகளிலும் பக்தி செலுத்தும் அடியார்களைக் கண்டவுடன் அவர்களை வணங்குவது, அவர்ளுடன் சேர்வது ஆகியவை எனக்குக் கைகூட வேண்டும், மேலும், உன்னை எப்போதும் வணங்குவது, பூஜை செய்வது, துதிப்பது, திருக்கல்யாண குணங்களைக் கூறுவது ஆகியவை எனக்கு உண்டாக்க வேண்டும்.

9 யத் யத் லப்யேத தத்தத் தவ ஸமுபஹ்ருதம்
தேவ தாஸ: அஸ்மி தே அஹம்
த்வத் கேஹ உந்மார்ஜந ஆத்யம் பவது
மம முஹு: கர்ம நிர்மாயம் ஏவ
ஸுர்ய அக்நி ப்ராஹ்மண ஆத்ம ஆதிஷு
லஸித சதுர்பாஹும் ஆராதயே த்வாம்
த்வத் ப்ரேம ஆர்த்ரத்வரூப: மம ஸததம்
அபிஷ்யந்ததாம் பக்தி யோக:

**பொருள் -** குருவாயூரப்பா! எனக்குக் கிடைக்கும் எந்தப் பொருளையும் நான் உன்னிடமே அர்ப்பணம் என்று தந்து விடுவேனாக, நான் என்றும் உனது அடிமையாகவே உள்ளேன். உனது திருக்கோயிலைச் சுத்தம் செய்வது போன்ற தூய பணிகள் எனக்கு உண்டாக

வேண்டும். மேலும், சூரியன், நெருப்பு, ப்ராமணன், இதயம் ஆகியவற்றில் நான்கு கைகளுடன் கூடிய உனது திருமேனியைக் கண்டு வணங்குவேன். உன்மீது நான் கொண்டுள்ள அன்பு மழையால், எனது உள்ளம் மிகவும் நெகிழ்ந்து, உன் பக்தியோகம் மேலும் தழைக்க வேண்டும்.

10 ஐக்யம் தே தாந ஹோம வ்ரத நியம தப:
ஸாங்க்ய யோகை: துராபம்
த்வத் ஸங்கேன ஏவ கோப்ய: கில
ஸுக்ருதி தமா: ப்ராபு: ஆநந்த ஸாந்த்ராம்
பக்தேஷு அநயேஷு பூயஸ்ஸு அபி
பஹுமநுஷே பக்திம் ஏவத்வம் ஆஸாம்
தத்மே த்வத் பக்திம் ஏவ த்ரயே ஹர
கதாந் க்ருஷ்ணா வாத ஆலய ஈச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னுடன் ஒன்றாவதான மோட்சம் என்பது தானம், ஹோமம், வ்ரதம், கர்மாக்கள், தவம், ஞானம், யோகம் போன்றவற்றின் மூலம் பெறுவது மிகவும் கடினமான ஒன்றாகும். ஆயினும் அதனைக் கோபிகைகள் (மிகவும் எளிதாகப்) பெற்றனர். உனது சேர்க்கையின் மூலமே அவர்கள் மோட்சம் பெற்றனர். உனது பக்தர்களாக பலர் இருந்தாலும் நீ அந்தக் கோபிகைகளையே உயர்வாகவும், அவர்கள் பக்தியை உயர்வாகவும் கொண்டாய் அல்லவா? எனவே அவர்கள் போன்ற பக்தியை திடமாக எனக்கு அளிக்க வேண்டும். எனது பிணிகளை நீக்க வேண்டும்.

***

1 ஆதௌ ஹைரண்யகர்பீம் தநும் அவிகல
ஜீவ ஆத்மிகாம் ஆஸ்தித: த்வம்
ஜீவத்வம் ப்ராப்ய மாயா குண கண
கசித: வர்த்தஸே விச்வ யோநே
தத்ர உத்வ்ருத்தேந ஸத்வேந குண
யுகளம் பக்தி பாவாம் கதேந
ச்சித்வா ஸத்வம் ச ஹித்வா புந:
அநுபஹித: வர்த்திதாஹே த்வம் ஏவ

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உலகின் காரணப்பொருளே! ப்ரளயத்தின் பின்னர் உலகைப் படைக்க எண்ணியபோது, அனைத்து ஜீவன்களின் வடிவமான ஹிரண்யகர்ப்ப உடலை எடுத்தாய். பின்னர் தனியான ஜீவன்களின் உருவமாக மாறினாய். அதன் பின்னர் மாயையின் கூட்டத்துடன் கலந்தாய். (மாயையின் கூட்டம் என்பது - மஹத், அகங்காரம், பஞ்ச பூதங்கள், கர்ம இந்த்ரியங்கள், ஞான இந்த்ரியங்கள், ப்ராணன்கள்). உனது அந்த உருவில் ஒரு ஜீவனாகிய நான், பக்தி வளர்ச்சியடைந்து, ஸத்வ குணம் மேலோங்கி நின்று, அதனால் ரஜோ மற்றும் தாமஸ குணங்களை அழிப்பேன். பின்னர் ஸத்வ குணத்தையும் விட்டு, குணங்களால் மறைக்கப்படாத உனது ஸ்வரூபமாக நான் மாறுவேன் (ஒன்றி விடுவேன்).

2 ஸத்வ உந்மேஷாத் கதாசித் கலு விஷய
ரஸே தோஷ போதே அபி பூமந்
பூய: அபி ஏஷ: ப்ரவ்ருத்தி: ஸதமஸி ரஜஸி
ப்ரோத்ததே துர்நிவாரா
சித்தம் தாவத் குணா: ச க்ரதிதம்
இஹ மித: தாநி ஸர்வாணி ரோத்தும்
துர்யே த்வயி ஏக பக்தி: சரணம் இதி பவாந்
ஹம்ஸரூபி ந்யாகாதீத்

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் நிறைந்துள்ளவனே! ஸத்வ குணம் சில சமயங்களில் அதிகமாவதால், சிற்றின்ப உலக விவரங்களில் குறைகள் உண்டு என்ற அறிய முடிகிறது. இருந்தாலும் மீண்டும் ரஜோ குணமும் தாமஸ குணமும் தலை தூக்குவதால் மீண்டும் அந்த விவரங்களில் நாட்டம் அதிகரிக்கின்றது. அதனைத் தடுக்க இயலவில்லை. அந்த நேரத்தில் மனமும், விவரங்களும், குணங்களும் கலந்து விடுகின்றன. மூன்று குணங்களையும் அடக்குவதற்கான நான்காவது மார்க்கமான ஏகாந்த பக்தியை பின்பற்றுமாறும், அதுவே உன்னை அடைய கதி என்றும் நீ அன்னப் பறவையாக வந்து ஸநகர் முதலியவர்களிடம் கூறினாயாமே!

3 ஸந்தி ஸ்ரேயாம்ஸி பூயாம்ஸி அபி
ருதி பிதயா கர்மிணாம் நிர்மிதாநி
க்ஷுத்ர ஆநந்தா: ச ஸாந்தா பஹுவித கதய:

க்ருஷ்ண தேப்ய: பவேயு:
த்வம் ச ஆசக்யாத ஸக்கயே நநு மஹிததமாம்
ச்ரேயஸாம் பக்திம் ஏகாம்
த்வத் பக்தி ஆநந்த துல்ய: கலு விஷய
ஜுஷாம் ஸம்மத: கேந வா ஸ்யாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! கர்மங்களைக் (கடமைகளை) செய்வதற்கு, அவற்றை செய்பவர்களுக்கு, அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நன்மைகள் பெறுவதற்கு பல வழிகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் அவை மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் குறைந்த இன்பம் தருவதாகவும், நிலையற்ற பல பதவிகளை அளிப்பதாகவும், முடிவுள்ளவை ஆகவும் உள்ளன. நீ உனது உற்ற நண்பனான உத்தவரிடம். மற்ற அனைத்து வழிகளிலும், சிறந்த நன்மை பெற என்னிடம் பக்தி கொள்வதே சிறந்தது. என்றாய். அற்பமான விஷயங்களில் சுகம் காணும் மனிதர்களுக்கு உனது பக்தி மூலம் கிடைக்கும் பேரானந்தத்திற்கு ஈடாக எதுதான் கிடைக்கும்?

4 த்வத் பக்த்யா துஷ்ட புத்தே: ஸுகம் இஹ சரத:
விச்யுத ஆசஸ்ய ச ஆசா:
ஸர்வா ஸ்யு: ஸௌக்யமய்ய: ஸலில
குஹரகஸ்ய இவ தோய ஏகமய்ய:
ஸ: அயம் கலு இந்த்ர லோகம் கமலஜ
பவநம் யோக ஸித்தீ: ச ஹ்ருத்யா:
ந ஆகாங்க்ஷதி ஏதத் ஆஸ்தாம் ஸ்வயம் அநுபதிதே
மோக்ஷ ஸௌக்யே அபி அநீஹ:

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் மாறாத ஆழ்ந்த பக்தி உடையவன் எந்தவிதமான பற்றும் இல்லாமல் மிகுந்த மிகழ்வுடன் உள்ளான். நீரின் நடுவே உள்ளவனுக்கு பார்க்கும் இடம் அனைத்தும் நீராக உள்ளது போல, உனது பக்தி உடையவனுக்கு அனைத்து திசைகளும் இன்பம் அளிக்கின்றன. அப்படிப்பட்டவன் இந்த்ரனின் ஸ்வர்க்கத்தையோ, ப்ரும்மாவின் ஸத்ய லோகத்தையோ, யோகிகள் விரும்பும் யோக சித்திகளையோ நாடுவதில்லை. ஏன் மோட்சம் தானாகவே கிடைத்தாலும் அதனைக் கூட ஏற்பதில்லை.

5 த்வத் பக்த: பாத்யமாந: அபி ச விஷய ரஸை:

இந்த்ரிய அசாந்தி ஹேதோ:

பக்த்யா ஏவ ஆக்ரம்யமாணை: புந: அபி கலுதை:

துர்பலை: ந அபிஜய்ய:

ஸப்த அர்ச்சி: தீபித அர்ச்சி: தஹதி கில
யதா பூரி தாரு ப்ரபஞ்சம்
த்வத் பக்தி ஓகே ததா ஏவ ப்ரதஹதி துரிதம்
துர்மத: க்வ இந்த்ரியாணாம்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னுடைய பக்தன் தனது இந்த்ரியங்கள் வசப்படாமல் உள்ளதால் சிற்றின்பங்கள் நுகர்ந்து துன்பம் அடைகிறான். ஆயினும் ஒரு நிலையில் பக்தியின் வேகத்தால் இந்திரியங்கள் வெல்லப்பட்டு, மீண்டும் அந்த சிற்றின்பங்கள் அவனை நெருங்குவதில்லை. எளிதாக எரிகின்ற நெருப்பானது எப்படி விறகுகளை தன் வசம் இழுத்து எரிகின்றதோ, அதுபோல் உன்னிடம் வைத்த பக்தியானது பாவங்கள் அனைத்தையுமே அழிக்கிறது. அதன் பின்னர் இந்த்ரியங்கள் ஆதிக்கம் எப்படி இருக்க முடியும்?

6 சித்த ஆர்த்ரீபாவம் உச்சை: வபுஷி
ச புலகம் ஹர்ஷ பாஷ்பம் ஹித்வா
சித்தம் கத்யேத் கதம் வா கிமு பஹு
தபஸா வித்யயா வீத பக்தே:
த்வத் காதா ஆஸ்வாத ஸித்த அஞ்ஜந ஸதத
மரீம்ருஜ்யமாந: அயம் ஆத்மா
சக்ஷுர்வத் தத்வ ஸூக்ஷ்மம் பஜதி ந து ததா
அப்யஸ்தயா தர்க்க கோட்யா

**பொருள் -** குருவாயூரப்பா! மனம் எப்போதும் தூய்மையுடனும் ஆனந்தத்துடனும் இருப்பது (உன்னைப் பற்றிக் கூறும்போது) உடல் சிலிர்ப்பது. ஆனந்தக் கண்ணீர் பெருகுவது இது போன்று இல்லையென்றால் மனத்தூய்மை எப்படி கிடைக்கும்? பக்தி என்பது இல்லை என்றால் தவமும், ஞானமும் இருந்து என்ன பயன்? ஸித்தியின் மூலம் கிடைத்த மையைக் கண்களில் பூசுவதால் தீர்க்கமான பார்வையைக் கண் பெறுகிறது. அதுபோல் உனது சரிதங்களைக் கேட்டு கேட்டு மனம் (ஆத்மா) தூய்மை பெற்று

உண்மையான ஞானம் பெறுகிறது. அந்த ஞானம் மிகுந்த நுண்ணிய பயிற்சிகள் மூலம் கிட்டுவதில்லை.

7 த்யாநம் தே சீலயேயம் ஸம தநு ஸுக
பத்த ஆஸந: நாஸிகா அக்ர
ந்யஸ்த அக்ஷ: பூரக ஆத்யை: ஜித பவந பத:
சித்த பத்மம் து அவாஞ்சம்
ஊர்த்வ அக்ரம் பாவயித்வா ரவி விது சிகிந:
ஸம்விசிந்த்ய உபரிஷ்டாத்
தத்ரஸ்தம் பாவயே த்வாம் ஸஜல ஜல தர
ச்யாமளம் கோமள அங்கம்

**பொருள் -** குருவாயூரப்பா! நான் உனது த்யான நிலையை அறிய வேண்டும். அதற்கு உடலை நேராக வைத்து, பத்மாஸனத்தில் அமர்ந்து, பார்வையை இரு புருவங்களின் மத்தியில் நிலை நிறுத்துவேன். பூரகம் மூலமாக ப்ராண வாயு வழியை வென்று விடுவேன். கீழ் நோக்கி உள்ள இதயத்தாமரை மேல்நோக்கி உள்ளதாகக் கண்டு, அதன் மேல் சூரிய மண்டலம், சந்த்ர மண்டலம், அக்னி மண்டலம் உள்ளதாகக் கொள்வேன். அந்த அக்னி மண்டலத்தின் நடுவில் நீர் கொண்ட நீலமேகம் போன்று அழகிய நிறம் உடைய உனது திருமேனியைத் தியானம் செய்வேன்.

8 ஆநீல ச்லக்ஷ்ண கேசம் ஜ்வலித மகர
ஸத் குண்டலம் மந்த ஹாஸ
ஸ்யந்த ஆர்த்ரம் கௌஸ்துப ஸ்ரீ பரிகத
வநமாலா உரு ஹார அபிராமம்
ஸ்ரீவத்ஸ அங்கம் ஸுபாஹும் ம்ருது லஸத்
உதரம் காஞ்சந ச்யாய சேலம்
சாரு ஸ்நிக்த ஊரும் அம்போருஹ லலித
பதம் பாவயே அஹம் பவந்தம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஒளி வீசும் கறுத்த தலைமுடி; காதில் ஒளிவீசும் அழகிய மகர குண்டலங்கள்; அழகிய உதடுகளில் கனிவான புன்னகை: கவுஸ்துபம் என்ற நீலமணியால் மேலும் ஒளிவீசும் வைஜயந்தி என்ற மாலை; பெரிய முத்து மாலைகள்; ஸ்ரீவத்ஸம் என்ற அழகிய மச்சம்; நீண்டு விளங்கும் அழகிய கைகள்; மெலிதான

ம்ருதுவான வயிறு: தங்கம் போன்ற பட்டு ஆடை: உருண்டு திரண்ட அழகிய கால்தொடைகள்; தாமரை போன்று சிவந்தும் அழகாகவும் மலர்ந்தும் உள்ள திருப்பாதங்கள்- இப்படிப்பட்ட உனது உருவத்தை நான் என்றும் த்யானிப்பேன்.

9 ஸர்வ அங்கேஷு அங்க ரங்கத் குதுகம்
இதி முஹு: தாரயந் ஈச சித்தம்
தத்ர அபி ஏகத்ரயுஞ்ஜே வதந ஸரஸிஜே
ஸுந்தரே மந்த ஹாஸே
தத்ர ஆலீநம் தம் து சேத: பரம ஸுக
சித் அத்வைத ரூபே: விதந்வந்
அந்யத் நோ சிந்தயேயம் முஹு: இதி
ஸமுபாரூட யோக: பவேயம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது த்யானத்தின் மீது மிகவும் விருப்பம் உடைய என் மனதை ஒவ்வோர் உறுப்பின் மீதும் நிலை நிறுத்துவேன். அத்தகைய உறுப்புகளில் மிகவும் அழகானதும், புன்னகையுடன் கூடியதான தாமரை போன்ற முகத்தின் மீது சிந்தனையை ஒன்றி நிறுத்துவேன். அப்படி நிலை நிறுத்திய மனதை, ஸச்சிதானந்த வடிவமானதும், ஈடு எதுவும் இல்லாததும் ஆகிய ப்ரஹ்மமாகிய உன்மீது செலுத்தி வேறு எதையும் நினைக்காமல் இருப்பேன். இப்படியாக நான் த்யானத்தில் மேன்மேலும் உயர்வேன்.

10 இத்தம் த்வத் த்யாந யோகே ஸதி புந: அணிமா
ஆதி அஷ்ட ஸம் ஸித்தய: தா:
தூர க்ருதி ஆதய: அபி ஹி அஹ மஹ
மிகயா ஸம்பதேயு: முராரே
த்வத் ஸம்ப்ராப்தௌ விலம்ப ஆவாஹம்
அகிலம் இதம் ந ஆத்ரியே காமயே அஹம்
த்வாம் ஏவ ஆநந்த பூர்ணம் பவநபுரபதே
பாஹிமாம் ஸர்வ தாபாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முரன் என்ற அசுரனை அழித்தவனே! இப்படியாக த்யானத்தில் ஈடுபட்ட என்னிடத்தில் அணிமா முதலான அஷ்டமா சித்திகளும், தூரத்தில் பேசுவதைக் கேட்கும்திறன், தூரத்தில் உள்ளவற்றைப் பார்க்கும் திறன் ஆகிய ஸித்திகள் நான் முந்தி நீ முந்தி என்று ஓடி வரும், ஆனால் இவை உன்னை அடைவதை தடுக்கும் என்பதால் நான் அவற்றை விரும்பமாட்டேன். ஆனந்தமே உருவமாக உள்ள உன்னை மட்டும் விரும்பி நிற்பேன். எனது துயர்களை நீயே களைந்து என்னைக் காக்க வேண்டும்.

***

1 த்வம் ஹி ப்ரஹ்ம ஏவ ஸாக்ஷாத் பரம் உரு
மஹிமந் அக்ஷராணாம் அகார:
தார: மந்த்ரேஷு ராஜ்ஞாம் மநு: அஸி
முநிஷு த்வம் ப்ருகு: நாரத: அபி
ப்ரஹ்லாத: தாநவாநாம் பசுஷு ச ஸுரபி:
பக்ஷிணாம் வைநதேய:
நாகாநாம் அஸி அநந்த: ஸுர ஸரித் அபி ச
ஸ்ரோதஸாம் விச்வமூர்த்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! விச்வ மூர்த்தியே! நீயே பரப்ரஹ்மம்! எழுத்துக்களில் நீ அகரம் என்னும் முதல் எழுத்து; மந்திரங்களுள் நீ ஓம்காரம் அரசர்களில் நீ மனு: முனிவர்ளில் நீ ப்ருகு மற்றும் நாரதன்: அசுரர்களில் நீ ப்ரஹ்லாதன்; பசுக்களில் நீ காமதேனு; பறவைகளில் நீ கருடன்; பாம்புகளில் நீ ஆதிசேஷன்; நதிகளில் நீ கங்கை - இப்படியாக அல்லவா உள்ளாய்.

2 ப்ரஹ்மண்யாநாம் பலி: த்வம் க்ரதுஷுச
ஜப யஜ்ஞ: அஸி வீரேஷு பார்த்த:
பக்தாநாம் உத்தவ: த்வம் பலம் அஸி
பலிநாம் தாம தேஜஸ்விநாம் த்வம்
ந அஸ்தி அந்த: த்வத் விபூதே: விகஸத்
அதிசயம் வஸ்து ஸர்வம் த்வம் ஏவ
த்வம் ஜீவ: த்வம் ப்ரதாநம் யத் இஹ பவத்
ருதே தத் ந கிஞ்சித் ப்ரபஞ்சே

**பொருள் -** குருவாயூரப்பா! அந்தணர்களை வணங்குபவர்களில் நீ மகாபலி; யாகங்களில் நீ ஜபவேள்வி; வீரர்களில் நீ அர்ஜுனன்; பக்தர்களில் நீ உத்தவர் என்ற உள்ளாய். நீயே பலம் உடையவர்களுக்கு அவர்கள் பலமாகவும் தேஜஸ் உடையவர்களுக்கு அவர்கள் தேஜஸாக உள்ளாய். இப்படியான உனது பெருமைக்கு ஓர் எல்லை என்பதே கிடையாது. இந்த உலகில் விலை மதிப்புள்ள சிறந்த பொருள்கள் அனைத்தும் நீயே ஆவாய். ஜீவனும் நீயே: ப்ரக்ருதியான காரணமும் நீயே. இந்த உலகில் நீ இல்லாத பொருள் என்று எதுவும் கிடையாது.

3 தர்மம் வர்ண ஆச்ரமாணாம் ச்ருதி பத
விஹிதம் த்வத் பரத்வேந பக்த்யா
குர்வந்த: அந்த: விராகே விகஸதி சநகை:
ஸந்த்யஜந்த: லபந்தே
ஸத்தா ஸ்பூர்த்தி ப்ரியத்வ ஆத்மகம் அகில
பதார்த்தேஷு பிந்நேஷு அபிந்நம்
நிர்மூலம் விச்வமூலம் பரமம் அஹம் இதி த்வத்
விபோதம் விசுத்தம்

**பொருள் -** குருவாயூரப்பா! நான்கு வகையான வர்ணாச்ரமங்களுக்கு உரிய நெறிகளை வேதங்கள் கூறுகின்றன. அவற்றை உனது பக்தர்கள் உன்னிடம் ஆழ்ந்த பக்தியுடன் உனக்கே அர்ப்பணம் செய்கின்றனர். இதனால் அவர்களுக்கு பற்றற்ற நிலை ஏற்படும்போது அந்தக் கர்மங்களை படிப்படியாகத் துறந்து பரம் பொருளான உன்னை நெருங்குகின்றனர். அப்படிப்பட்ட பரம்பொருளான நீ ஸச்சிதானந்த ரூபமாக உள்ளாய். பலவாகத் தோன்றும் பொருள்களில் நீ பலவாக இருப்பதில்லை (ஒன்றாகவே உள்ளாய்). உனக்கு என்று எந்த ஒரு காரணமும் (ஒரு பொருளை உண்டாக்கும் பொருளே காரணம் எனப்படும்) இல்லை. நீயே அனைத்துப் பொருள்களுக்கும் காரணமாக உள்ளாய். இப்படியாக உள்ள உனது ஸ்வரூபத்தை நானே பரம்பொருள் என்று அந்த பக்தர்கள் உனது ஸ்வரூபத்தையே அடைகின்றனர்.

4 ஜ்ஞாநம் கர்ம அபி பக்தி: த்ரிதயம் இஹ
பவத் ப்ராபகம் தத்ர தாவந்
நிர்விண்ணாநாம் அசேஷே விஷய இஹ பவேத்
ஜ்ஞாந யோகே அதிகார:

ஸக்தாநாம் கர்மயோக: த்வயி ஹி விநிஹித:
யேது ந அத்யந்த ஸக்தா:
ந அபி அத்யந்தம் விரக்தா: த்வயி ச த்ருத
ரஸா: பக்தி யோக: ஹி அமீஷாம்

**பொருள் -** குருவாயூரப்பா! இந்த உலகில் உள்ள மனிதர்களுக்கு, ஞானம், கர்மம், பக்தி ஆகிய மூன்றும் உன்னை அடையச் செய்யும் வழிகள் ஆகும். இந்த உலகில் உள்ள சிற்றின்பங்களைத் துறந்து அவற்றில் வெறுப்பு உடையவர்களுக்கு மட்டும் ஞானயோகம் ஏற்புடையது. பற்று நீங்காமல் உள்ளவர்களுக்கு உன்னை அடைய கர்மயோகமே சிறந்தது. சிற்றின்பங்களில் பற்றும், பற்று இல்லாத நிலையும் கொண்டு, உன்னிடம் அன்பு மாத்திரமே உள்ளவர்களுக்கு பக்தியோகமே சிறப்பானது.

5 ஜ்ஞாநம் தத் பக்ததாம் வா லகு ஸுக்ருத
வசாந் மர்த்ய லோகே ல பந்தே
தஸ்மாத் தத்ர ஏவ ஜந்ம ஸ்ப்ருஹயதி
பகவந் நாகக: நாரக: வா
ஆவிஷ்டம் மாம் து தைவாத் பவ ஜலநிதி
போதாயிதே மர்த்தய தேஹே
த்வம் க்ருத்வா கர்ண தாரம் குரு மநு
குண வாதாயித: தாரயேதா:

**பொருள் -** குருவாயூரப்பா! பகவானே! மனிதர்கள் தங்கள் முற்பிறவியில் செய்த புண்ணியத்தில் பலனாக ஞானத்தையோ பக்தியையோ மிகவும் எளிதாகப் பெற்று விடுகின்றனர். இதனால்தான் சுவர்க்கம் சென்றவனும், நரகம் புகுந்தவனும் மீண்டும் இந்த உலகில் மனிதனாகப் பிறக்க விரும்புகிறான். சம்ஸாரம் என்னும் இந்த மனித வாழ்க்கையான பெரும் கடலைக் கடக்க உதவும் ஓடமாக இந்த உடல் உள்ளது. அதில் உனது கருணையால் ஓடத்தைச் செலுத்துபவனாக ஒரு குரு அமைகிறார். நீ காற்றாக மாறி ஓடமாகிய என்னைக் கரையில் சேர்த்துவிடு.

6 அவ்யக்தம் மார்க்கயந்த: ச்ருதிபி:
அபி நயை: கேவல ஜ்ஞாந லுப்தா:
க்லிச்யந்தே அதீவ ஸித்திம் பஹுதர

ஜநுஷாம் அந்த ஏவ ஆப்நுவந்தி
தூரஸ்த: கர்மயோக: அபி ச பரம பலே
நநு அயம் பக்தியோக:
து ஆமூலாத் ஏவ ஹ்ருத்ய: த்வரிதம்
அயி பகவத் ப்ராபக: வர்த்ததாம் மே

**பொருள் -** குருவாயூரப்பா! ஞானத்தை மட்டுமே பெற விரும்புகின்ற மனிதர்கள் உபநிஷத்துக்களிலும், சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ள, புலன்களுக்கு அறிய இயலாத ப்ரஹ்மத்தை ஆராய்ந்து கஷ்டப்படுகின்றனர். அவர்கள் பல பிறவிகள் எடுத்து இறுதியாகவே மோட்சம் பெறுகின்றனர். கர்மயோகம் கூட மோட்சத்திற்கு வெகு தூரமாகவே உள்ளது. ஆனால் பக்தியோகம் மட்டுமே தொடக்கத்தில் இருந்தே மனிதற்கு இன்பமாகவும், உன்னை எளிதில் அடையச் செய்வதாகவும் உள்ளது. அத்தகைய பக்தி எனக்கு வளரவேண்டும்.

7 ஜ்ஞாநாய ஏவ அதியத்நம் முநி: அபவததே
ப்ரஹ்ம தத்வம் து ச்ருண்வந்
காடம் த்வத் தாப பக்திம் சரணம் அயதி ய:
தஸ்ய முக்தி: கர அக்ரே
த்வத் த்யாநே அபி இஹ துல்யா புந:
அஸுகரதா சித்த சாஞ்சல்யஹேதோ:
அப்யாஸாத் ஆசு சச்யம் தத் அபி வசயிதும்
த்வத் க்ருபா சாருதாப்யாம்

**பொருள் -** குருவாயூரப்பா! ஞானம் அடைவதை மட்டுமே செய்யும் முயற்சிகளை வ்யாஸர் பலமாகக் கண்டிக்கிறார். யார் ஒருவன் ப்ரஹ்மத்தினைப் பற்றிக் கேட்டு அறிந்தவனாக, உனது திருவடிகளில் உறுதியான பக்தியுடன் சரணம் என்று புகுந்தவனாக உள்ளானோ, அவனுக்கு மோட்சம் என்பது கைகளில் எட்டும் தூரத்தில் உள்ளது. பக்தியோகத்திலும் மனம் எளிதில் கட்டுப் பாட்டில் வராமல் அலைவதால், இதுவும் ஞானயோகம் போன்று சற்று கடினமானது. இருந்தாலும் பயிற்சியின் மூலமாகவும், உனது கருணையாலும், உனது திருமேனியின் அழகாலும் மனதை அடக்க இயலும்.

8 நிர்விண்ண கர்ம மார்க்கே கலு விஷமதமே
த்வத் கதா ஆதெள ச காடம்
ஜாத ச்ரத்த: அபி காமாந் அயி புவந
பதே ந ஏவ சக்நோமி ஹாதும்
தத் பூய: நிச்சயேந த்வயி நிஹித மநா:
தோஷ புத்யா பஜந்தாந்
புஷ்ணீயாம் பக்திம் ஏவ த்வயி ஹ்ருதய
கதே மங்ஷு நங்க்ஷ்யந்தி ஸங்கா:

**பொருள் -** குருவாயூரப்பா! உலகின் நாயகனே! மிகவும் கடுமையான கர்மங்கள் உடைய வழியை நான் வெறுத்துள்ளேன். உனது சரிதங்கள் மீது உறுதியான பக்தியைக் கொண்டுள்ளேன். இருப்பினும் ஆசைகளை அடியோடு தொலைப்பதற்கு உரிய ஆற்றல் என்னிடம் இல்லை. அதனால் மீண்டும் மீண்டும் உன்னிடம் எனது மனதை நிலைநிறுத்தி, அந்த ஆசைகளை குற்றம் எதுவும் இல்லாமல் அனுபவித்து, பக்தியை மேலும் வளர்ப்பேன். இதன் மூலம் நீ எனது இதயத்தில் வந்த பின்னர், அந்த ஆசைகளுக்கும், பற்றுகளுக்கும் இடம் இல்லாமல் நாசமாகப் போகின்றன அல்லவா?

9 க: சித் க்லேச ஆர்ஜித அர்த்த க்ஷய
விமல மதி: நுத்யமாந: ஜந ஓகை:
ப்ராக் ஏவம் ப்ராஹ விப்ர: ந கலு மம ஜந:
கால கர்ம க்ரஹா வா
சேத: மே துக்க ஹேது: தத் இஹ குண
கணம் பாவயத் ஸர்வ காரீ இதி
உக்த்வா சாந்த: கத: த்வாம் மம ச குரு
விபோ தாத்ருசீம் சித்த சாந்திம்

**பொருள் -** குருவாயூரப்பா! முன்பு ஒரு காலத்தில் ஓர் அந்தணன் பெரிதும் கடினப்பட்டு செல்வங்களைச் சேமித்தான். ஆனால் அவை அழிந்தன. இதனால் அவனுக்கு பற்றற்ற தன்மையும் மனமும் உண்டானது. மக்கள் அவனை கபட சன்யாஸி என்று துன்பம் செய்தனர். ஆயினும் அவன், எனது இந்தத் துன்பத்திற்குக் காரணம் இந்த மக்களோ, நேரமோ, எனது கர்மமோ, கிரக நிலையோ அல்ல. எனது மனமே காரணம் ஆகும். ஆத்மாவிடம் குணங்களை புகுத்தி இந்த மனமே அனைத்தையும் செய்கிறது என்றான்.

அவன் இப்படியாக அமைதியடைந்து உன்னை அடைந்தான் எனக்கும் அவன் அடைந்த மன அமைதியை அளிப்பாயாக!

10 ஜல: ப்ராக் உர்வசீம் ப்ரதி அதிவிவச மநா:
ஸேவமாந: சிரம் தாம்
காடம் நிர்வித்ய பூய: யுவதி ஸுகம் இதம்
க்ஷுத்ரம் ஏவ இதி காயந்
த்வத் பக்திம் ப்ராப்ய பூர்ண: ஸுகதரம்
அசரத் தத்வத் உத்தூய ஸங்கம்
பக்த உத்தம்ஸம் க்ரியா: மாம் புவந புர
பதே ஹந்தமே ருந்தி ரோகாந்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! முன்பு ஒரு காலகட்டத்தில் ஜலன் என்ற புரூரவஸ் என்னும் மன்னன் வாழ்ந்தான். அவன் ஊர்வசியிடம் தனது மனதைப் பறிகொடுத்தான். அவளுடன் பல காலம் இன்பமாக வாழ்ந்து வந்தான். இறுதியில் பெண்கள் மூலம் கிட்டும் சுகம் அற்பமானது என்று தெளிவுற்றான். அதன் பின்னர் உன்னிடம் ஆழ்ந்த பக்தி கொண்டான். தனது விருப்பம் நிறைவேறியதால் இன்பம் கொண்டு ஆனந்தமாக வாழ்ந்தான். இப்படியாக எனக்கும் பற்றுகளை விலக்கி, பக்தர்களில் சிறந்தவனாக என்னை மாற்றி, எனது பிணிகளைத் தடுத்து காக்க வேண்டும்.
***

1 த்ரைகுண்யாத் பிந்ந ரூபம் பவதி ஹி
புவநே ஹீந மத்யே உத்தமம் யத்
ஜ்ஞாநம் ச்ரத்தா ச கர்த்தா வஸதி: அபி ச
ஸுகம் கர்ம ச ஆஹார பேதா:
த்வத் க்ஷேத்ர த்வத் நிவேஷ ஆதி து யத் இஹ
புந: த்வத் பரம் தத் து ஸர்வம்
ப்ராஹு: நைகுண்ய நிஷ்டம் தத் அநுபஜநத:
மங்க்ஷு ஸித்த: பவேயம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த உலகில் உள்ள ஞானம், நம்பிக்கை (ச்ரத்தை), செய்பவன் (கர்த்தா), இருப்பிடம், இன்பம், செயல், உணவு போன்ற பல

வகையானவையும் மூன்று குணங்களால் உண்டாகின்றன. அதனால் அவற்றுள் சில உயர்ந்தவை யாகவும் சில தாழ்ந்தவையாகவும், சில நடுத்தரமாகவும் உள்ளன. ஆயினும் உனது கோயிலையும் உன்னையும் உன்னிடம் முழுமையாக அர்ப்பணம் செய்யப்பட்ட மனதுடன் வணங்குவது என்ற செயல் இந்த மூன்று குணங்களால் உண்டாக்கப்படாதவை என்று கூறுகின்றனர். (ஆகவே இதற்கு ஏற்றத்தாழ்வு இல்லை). ஆகவே இச்செயல் மூலம் நான் மோட்சம் பெறுவேன்.

2 த்வயி ஏவ சித்த: ஸுகமயி விசரந்
ஸர்வ சேஷ்டா: த்வதர்த்தம்
த்வத் பக்தை: ஸேவ்யமாநாந் அபி சரிதசராந்
ஆச்ரயந் புண்ய தேசாந்
தஸ்யௌ விப்ரே ம்ருக ஆதிஷு அபி
ச ஸம மதி: முச்யமாந அவமாந
ஸ்பர்த்தா அஸூயா ஆதி தோஷ: ஸததம்
அகில பூதேஷு ஸம்பூஜயே த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! எனது மனதை உன்னிடம் நான் அர்ப்பணம் செய்ய வேண்டும் சுகமாக அனைத்து இடங்களுக்கும் செல்ல வேண்டும் (பல கோயில்களுக்கு). உன் பக்தர்கள் இப்போது செல்லும் கோயில்கள். முன்பு சென்ற கோயில்கள் ஆகியவற்றிக்குச் செல்ல வேண்டும். மேலும் தீய மனிதர்களிடமும், ப்ராமணர்களிடமும், விலங்குகளிடமும் சமமான புத்தி கொள்ள வேண்டும். மானம், அவமானம், பொறாமை, த்வேஷம் முதலானவை நீங்கியவனாக மாற வேண்டும். அனைத்து உயிர்களிலும் உன்னையே கண்டு வணங்க வேண்டும்.

3 த்வத் பாவ: யாவத் ஏஷு ஸ்புரதி ந விசதம்
தாவத் ஏவம் ஹி உபாஸ்திம்
குர்வந் ஐகாத்ம்ய போதே ஜடிதி விகஸதி
த்வந்மய: அஹம் சரேயம்
த்வத் தர்மஸ்ய அஸ்ய தாவத் கிம் அபி
ந பகவந் ப்ரஸதுதஸ்ய ப்ரணாச
தஸ்மாத் ஸர்வாத்மநா ஏவ ப்ரதிச ம
விபோ பக்தி மார்க்கம் மநோஜ்ஞம்

**பொருள் -** குருவாயூரப்பா! பகவானே! அனைத்து உயிர்களிலும் நீயே உள்ளாய் என்ற சிந்தனை எனக்கு உண்டாகும்வரை நான் இப்படியே உன்னை வணங்குகிக் கொண்டிருப்பேன். பின்னர் எங்கும் உள்ள ஆத்மாக்கள் ஒன்று என்ற ஞானம் தோன்றியவுடன், நானே நீ; நீயே நான் என்று மாறிவிடுவேன். இப்படியான பாகவதநெறிக்கு அழிவில்லை. எனவே அனைத்து வழிகளிலும் உள்ளம் கவரக்கூடிய பக்தியை நீ எனக்கு அளிப்பாய்.

4 தம்ச ஏநம் பக்தியோகம் த்ரடயிதும்
அயிமே ஸாத்யம் ஆரோக்யம் ஆயு:
திஷ்ட்யா தத்ர அபி ஸேவ்யம் தவ சரணம்
அஹோ போஷஜாய ஏவ துக்தம்
மார்க்கண்டேய: ஹி பூர்வம் கணக நிகதித
த்வாதச அப்த ஆயு: உச்சை:
ஸேவித்வா வத்ஸரம் த்வாம் தவ பட
நிவஹை: த்ரா வயாமாஸ ம்ருத்யும்

**பொருள் -** குருவாயூரப்பா! உன்னிடம் கொண்ட பக்தியோகம் என்பது திடமாக வளர வேண்டுமானால் எனக்கு உடலில் ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும் தேவையாக உள்ளது. அதனைப் பெறவும் உனது திருவடியையே நாடவேண்டும் என்பது பாலே மருந்தாக உள்ளது போன்று வியப்பே! முன்பு ஒரு காலத்தில் மார்க்கண்டேயன் என்பவனுக்கு ஆயுட்காலம் பன்னிரண்டு வருடம் மட்டுமே என்று ஜோதிடர்கள் கணித்தனர். அவன் உன்னை ஓர் ஆண்டு முழுவதும் துதித்தான். அதன் விளைவாக அவன் உனது தூதர்களின் துணை கொண்டு யமனை விரட்டினான் அல்லவா?

5 மார்க்கண்டேய: சிர: ஆயு: ஸ கலு
புந: அபி த்வத்பர: புஷ்ப பத்ரா
தீரே நிந்யே தபஸ்யந் அதுல ஸுக
ரதி: ஷட் து மந்வந்தராணி
தேவேந்தர: ஸப்தம: தம ஸுர யுவதி
மருந் மந்மதை: மோஹயிஷ்யந்
யோக ஊஷ்ம ப்லுஷ்யமாணை: ந

து புந: அசகத் த்வத் ஜநம் நிர்ஜயேத் க:

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த மார்க்கண்டேயன் நீண்ட ஆயுள் பெற்றவனாக, உன்னையே வணங்கி வந்தான். ஈடு இல்லாத ஆனந்தம் அடைய எண்ணியவனாய், புஷ்பபத்ரா என்ற நதிக்கரையில் தவம் செய்து ஆறு மன்வந்த்ரம் இன்பம் பெற்றான். ஆனால் ஏழாவது மன்வந்த்ரத்தின் போது இந்திரன் தேவேலாகப் பெண்கள், மன்மதன், தென்றல் காற்று ஆகியவற்றின் உதவியுடன் அவன் தவத்தைக் கலைத்து அவனை மயக்க முயன்றான். ஆனால் அவனது தவத்தின் தீயானது வந்தவர்களை எரித்தது. இப்படியாக உனது பக்தர்களை யாரால் வெல்ல இயலும்?

6 ப்ரீத்யா நாராயண ஆக்ய: த்வம் அத
நர ஸக: ப்ரா ப்தவாந் அஸ்ய பார்ச்வம்
துஷ்ட்யா தோஷ்டூயமாந: ஸ து
விவிதவரை: லோபித: ந அநுமேநே
த்ரஷ்டும் மாயாம் த்வதீயம் கில புந:
அவ்ருணோத் பக்தி த்ருப்த அந்தராத்மா
மாயா துக்க அநபிஜ்ஞ: தத் அபி
ம்ருகயதே நூநம் ஆச்சர்ய ஹேதோ:

**பொருள் -** குருவாயூரப்பா! நீ நராநாராயணனாக அவதரித்தபோது நீயும் உனது தோழனான நரனும் மார்க்கண்டேயனிடம் சென்றீர்கள். அவன் மிகவும் மகிழ்ந்தவனாய் உன்னைப் பலவாகத் துதித்தான். அப்போது நீ அவனுக்குப் பல வரங்கள் அளிக்கப் போவதாக ஆசை மூட்டினாய். ஆனால் அவன் அவற்றை விரும்பவில்லை. ஆயினும் அவன் உனது மாயை என்றால் என்ன என்று காண விரும்பினான். மாயையால் உண்டாகும் துன்பங்களை அறியாத காரணத்தால், அதனால் உண்டாகும் துன்பத்தை அறிய வேண்டியே இப்படிக் கேட்டான் அல்லவா?

7 யாதே த்வயி ஆசு வாத ஆகுல ஜலத
கலத் தோய பூர்ண அதி கூர்ணத்
ஸப்தார்ணோ ராசி மக்நே ஜகதி ஸ
து ஜலே ஸம்ப்ரமந் வர்ஷ கோடீ:

தீந: ப்ரைக்ஷிஷ்ட தூரே வட தள
சயநம் கஞ்சித் ஆச்சர்ய பாலம்
த்வாம் ஏவ ச்யாமள அங்கம் வதந
ஸரஸிஜ ந்யஸ்த பாத அங்குலீகம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீ அப்படியே வரம் அளித்துவிட்டு மறைந்தாய். நீ சென்றதும் பலத்த காற்றுடன் சூழ்ந்த மேகங்கள் மழையைக் கொட்டத் தொடங்கின. இதனால் ஏழு கடல்களும் பொங்கி எழுந்து இந்த உலகம் எங்கும் நீர்மயமாக ஆனது. மார்க்கண்டேயன் மட்டும் அந்த நீரில் பல கோடி ஆண்டு தனியாக வருந்தியபடி இருந்தான். அப்போது அவனுக்குக் கிடைத்த காட்சி - நீ ஓர் அற்புதமான சிறு குழந்தையாக ஆலிலை மேல் படுத்துக் கிடந்தாய். நீல நிறமான உடல் கொண்டும், தாமரை மலர் போன்ற அழகிய முகத்தில் காலின் கட்டை விரலை வைத்துக் கிடந்தாய். இதனைக் கண்டான் அல்லவா?

8 த்ருஷ்ட்வா த்வாம் ஹ்ருஷ்ட ரோமா
த்வரிதம் உபகத: ஸ்ப்ரஷ்டுகாம: முநீந்த்ர:
ச்வாஸேந அந்த: நிவிஷ்ட: புந: இஹ
ஸகலம் த்ருஷ்டவாந் விஷ்டப ஓகம்
பூய: அபி ச்வாஸ வாதை: பஹி:
அநுபதித: வீக்ஷித: த்வத் கடாக்ஷை:
மோதாத் ஆச்லேஷ்டு காம: த்வயி
பிஹித தநௌ ஸ்வ ஆச்ரமே ப்ராக்வத் ஆஸீத்

**பொருள் -** குருவாயூரப்பா! இப்படியான உனது தரிசனத்தால் மார்க்கண்டேயன் மெய் சிலிர்த்தான். உனது அழகிய உடலைத் தொட எண்ணியவனாக உன் அருகில் வந்தான். உனது மூச்சுக்காற்று மூலமாக உன்னுள் இழுக்கப்பட்டு உள்ளே சென்று விட்டான். குழந்தையான உனது உடலில் அவன் உலகம் அனைத்தையும் கண்டான். மீண்டும் உனது மூச்சு மூலம் வெளியில் வந்தான். உனது கருணை பொங்கும் பார்வை மூலம் அவனைக் கண்டாய். அவன் மிகவும் மகிழ்ந்து உன்னை ஆரத்தழுவிக் கொள்ள விருப்பம் கொண்டபோது, நீ மறைந்து விட்டாய். அந்த நேரம் தனது ஆச்ரமத்தில் அவன் மீண்டும் இருந்தான்.

9 கௌர்யா ஸார்த்தம் தத் அக்ரே புரபித்
அத கத: த்வத் ப்ரிய ப்ரேக்ஷணார்த்தீ
ஸித்தாந் ஏவ அஸ்ய தத்வா ஸ்வயம்
அஜராம்ருத்யுத ஆதீந் கத: அபூத்
ஏவம் த்வத் ஸேவயா ஏவ ஸ்மர ரிபு:
அபி ஸம்ப்ரீயதே யேந தஸ்மாந்
மூர்த்தி த்ரஸி ஆத்மக: த்வம் நநு ஸகல
நியந்தா இதி ஸவ்யக்தம் ஆஸீத்

**பொருள் -** குருவாயூரப்பா! அப்போது சிவன் உனது பக்தனைக் காண விரும்பி, பார்வதியுடன் இணைந்து மார்க்கண்டேயன் முன்பாக வந்தார். தனது தவத்தின் மூலமாக மார்க்கண்டேயனுக்கு முதுமையும் மரணமும் இல்லாமல் இருந்தது. ஆயினும் சிவன் அதனை ஒரு வரமாக அளித்துவிட்டுச் சென்றார். இப்படியாக உனது பக்தர்களை கண்டு சிவன் பெரிதும் மகிழ்கிறார். இதன் காரணமாகவே, நீ மூன்று மூர்த்திகளின் வடிவம் என்பதும் நீயே அனைத்தும் என்றும் உணரலாம் அல்லவா?

10 த்ரி அம்சே அஸ்மிந் ஸத்யலோகே விதி
ஹரி புரபிந் மந்த்ராணி ஊர்த்வம்
தேதேப்ய: அபி ஊர்த்வம் து மாயா விக்ருதி
விரஹித: பாதி வைகுண்ட லோக:
தத்ர த்வம் காரண அம்பஸி அபி
பசுப குலே சுத்த ஸத்வ ஏகரூபீ
ஸத் சித் ப்ரஹ்ம அத்வய ஆத்மா பவந
புர பதே பாஹிமாம் ஸர்வ ரோகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! ஸத்யலோகம் என்பது ப்ரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் ஆகிய மூன்றையும் உடையது. அவை ஒன்றின் மேல் ஒன்றாக உள்ளன. அவை மூன்றுக்கும் மேலே உள்ளதும். மாயை என்பது தீண்டாமல் உள்ளதும் ஆகிய இடமே உனது வைகுண்டம் ஆகும். நீ வைகுண்டத்திலும், ப்ரளய கால நீரிலும், க்ருஷ்ணாவதார காலத்தில் கோகுலத்திலுமாக உள்ளாய். ஸச்சிதானந்த ரூபமாகவும், பரப்ரஹ்மமாகவும் உள்ளாய். இப்படியான நீயே எனது பிணிகளை நீக்க வேண்டும்.

***

1 யஸ்மிந் ஏதத் விபாதம் யத: இதம்
அபவத் யேந ச இதம் ய ஏதத்
யோ அஸ்மாத் உத்தீர்ண ரூப: கலு
ஸகலம் இதம் பாஸிதம் யஸ்ய பாஸா
ய: வாசாம் தூர தூரே புந: அபி
மநஸாம் யஸ்ய தேவா முநீந்த்ரா:
நோ வித்யு: தத்வ ரூபம் கிமு புந:
அபரே க்ருஷ்ண தஸ்மை நமஸ்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இந்த உலகம் உன்னிடம் இருந்து தோன்றியே விளங்குகின்றது; உன்னாலேயே ப்ரகாசம் பெறுகின்றது. உன்னிடமே சென்று ஒடுங்குகின்றது; நீயே இந்த உலகமாகத் தோன்றுகின்றாய்; உலகில் உள்ள அனைத்தும் நீயே ஆக உள்ளாய். உனது ஒளியால் உலகம் ப்ரகாசம் அடைகின்றது. நீ சொல்லுக்கும் மனதிற்கும் எட்டாத தூரமாக உள்ளாய். உனது உண்மையான ஸ்வரூபத்தைத் தேவர்களும் முனிவர்களும் கூட அறியவில்லை. மற்றவர்கள் எப்படி அறிய இயலும்? இப்படிப்பட்ட க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனக்கு என் வணக்கங்கள்.

2 ஜந்ம அதோ கர்ம நாம ஸ்புடம் இஹ
குண தோஷ ஆதிகம் வா ந யஸ்மிந்
லோகாநாம் ஊதயே ய: ஸ்வயம்
அநுபஜதே தாநி மாயா அநுஸாரீ
பிப்ரத் சக்தீ: அரூப: அபி ச
பஹுதர ரூபா: விபாதி அத்புத ஆத்மா
தஸ்மை கைவல்ய தாம்நே பர ரஸ
பரிபூர்ணாய விஷ்ணோ நமஸ்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனக்கு பிறப்பு, கர்மம், முக்குணங்கள் (ஸத்வ, ரஜோ, தாமஸ்), குற்றங்கள் (தோஷம்), பெயர் பேதங்கள் ஆகிய எதுவும் கிடையாது. ஆனால் இந்த உலகைக் காக்க எண்ணி மாயையை அனுசரித்து அதனால் இவையனைத்தையும் நீயாகவே ஏற்றுக் கொள்கிறாய் அல்லவா? பல சக்திகளைக் கொண்டு பலவிதமான அவதாரங்களை உடையவனாகப் ப்ரகாசிக்கின்றாய். ஆனால்

உண்மையில் உனக்கு உருவம் இல்லை. நீயே மோட்சத்தையும், பேரானந்தத்தையும் அளிப்பவன். இப்படிப்பட்ட விஷ்ணுவே! உனக்கு என் வணக்கங்கள்.

3 தோ திர்யஞ்சம் ந மர்த்யம் ந ச
ஸுரம் அஸுரம் நஸ்த்ரியம் நோ புமாம்ஸம்
ந த்ரவ்யம் கர்ம ஜாதிம் குணம் அபி
ஸத் அஸத் வா அபி தே ரூபம் ஆஹு:
சிஷ்டம் யத் ஸ்யாத் நிஷேத ஸதி
நிகம சதை: லக்ஷணா வ்ருத்தித: தத்
க்ருச்ரேண ஆவேத்யமாநம் பரம
ஸுகமயம் பாதி தஸ்மை நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பா! ஞானிகள் உனது உருவத்தை எப்படிக் கூறுகிறார்கள் - உனது உருவம் விலங்கு, பறவை அல்ல; மனிதன் அல்ல; தேவர்கள் அல்ல; அசுரன் அல்ல; பெண் அல்ல; ஆண் அல்ல; பொருள் அல்ல; செயல் அல்ல; ஜாதி, குணம் அல்ல; உள்ளதாகவும் அல்ல; இல்லாததாகவும் அல்ல என்று தள்ளப்பட்டவுடன், எஞ்சி நிற்கும் ஒரு பொருள் மட்டுமே உள்ளது. அந்தப் பொருள் பரமானந்தம் அளிப்பதாகவும், ப்ரகாசத்துடன் உள்ளதாகவும் இருக்கிறது. இப்படியாக அல்லவா நூற்றுக்கணக்கான வேத வரிகளின் மூலம் உனது உருவம் புலப்படுகிறது. அத்தகைய உருவம் உடைய உனக்கு வணக்கம்.

4 மாயாயாம் பிம் பித: த்வம் ஸ்ருஜஸி
மஹத் அஹங்கார தந்மாத்ர பேதை:
பூத க்ராம இந்த்ரிய ஆத்யை: அபி ஸகல
ஜகத் ஸ்வப்ந ஸங்கல்ப கல்பம்
பூய: ஸம்ஹ்ருத்ய ஸர்வம் கமட இவ
பதாநி ஆத்மநா கால சக்த்யா
கம்பீரே ஜாயமாநே தமஸி விதிமிர:
பாஸி தஸ்மை நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பா! நீ மாயையின் பிம்பமாகத் தோன்றுகிறாய். மஹத், அஹங்காரம், தன்மாத்திரை, பஞ்சபூதங்கள், பத்து இந்த்ரியங்கள் ஆகியவற்றைக் கொண்டு கனவிற்கும் நிஜத்திற்கும் ஒப்பான உலகத்தையும் உலகில் உள்ள

அனைத்தையும் உருவாக்குகின்றாய். ஆனை*(ஆமை) தன் ஓட்டின் உள்ளே கால்களை இழுத்துக் கொள்வது போன்று, அனைத்து உலகங்களையும் (ப்ரளயத்தின் போது) காலம் என்று சக்தி கொண்டு உன்னுள் இழுத்துக் கொள்கிறாய். இதனால் எங்கும் ஆழமான இருள் நிறையும்போது, அந்த இருளால் பீடிக்கப்படாமல், தானாகவே ஒளி வீசுகிறாய். அப்படிப்பட்ட உனக்கு வணக்கம்.

5 சப்த ப்ரஹ்ம இதி கர்ம இதி அணு:
இதி பகவந் கால இதி ஆலபந்தி
த்வாம் ஏகம் விச்வ ஹேதும்
ஸகலமயதயா ஸர்வதா கல்ப்யமாநம்
வேத அந்தை: யத் து கீதம் புருஷ
பரசித் ஆத்மா அபிதம் தததது தத்வம்
ப்ரேக்ஷா மாத்ரேண மூல ப்ரக்ருதி விக்ருதி
க்ருத் க்ருஷ்ண தஸ்மை நமஸ்தே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னை உலகிற்கு காரணமான சப்தப்ரஹ்மம் என்றும், கர்மா என்றும், அணு என்றும், காலம் என்றும் கூறுகின்றனர். நீ அனைத்துமாக உள்ளதால் இப்படியாகக் கூறுகின்றனர். வேதங்கள் உன்னைப் புருஷன் என்றும், பரம் என்றும் சித் என்றும், ஆத்மா என்றும் கூறுகின்றன. இப்படிப் பட்ட தத்துவமான நீ உனது பார்வை மூலமே மாயையை வழி நடத்துகிறாய். இதன் மூலமே மூலப்ரக்ருதியும் அதன் மாற்றங்களும் உண்டாகின்றன. இப்படிப்பட்ட உனக்கு என் வணக்கம்.

6 ஸத்வேந அஸத்தயா வா ந ச கலு
ஸதஸத் வேந நிர்வாச்ய ரூபா
தத்தே யா அஸௌ அவித்யா குண பணி
மதிவத் விச்வ த்ருச்ய அவபாஸம்
வித்யாத்வம் ஸா ஏவ யாதா ச்ருதி வசந
லவை: யத் க்ருபா ஸ்யந்த லாபே
ஸம்ஸார அரண்ய ஸத்ய: த்ருடந
பரசுதாம் ஏதி தஸ்மை நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பா! அவித்யா என்பது ஸத் (உள்ளது) என்றோ, அஸத் (இல்லாதது) என்றோ கூறமுடியாத நிலை அல்லது மனக்குழப்பம் ஆகும் அத்தகைய

மாயை, கயிறானது பாம்பு என்ற எண்ணம் உண்டாக்குவது போன்று, இந்த உலகில் உள்ள பல பொருட்களையும் தோன்ற வைக்கிறது. (உண்மை எது பொய் எது என்று உணரமுடியாத நிலை). ஆனால் உனது அருள் பார்வை கிடைக்கப் பெற்றால், அந்த அவித்யை என்பது வித்யையாக மாறி விடுகிறது. அப்போது அது ஸம்ஸாரம் என்ற பெரும் காட்டை அழிக்கும் கோடரியாக மாறுகிறது. இப்படிப்பட்ட உனக்கு வணக்கம்.

7 பூஷாஸு ஸ்வர்ணவத் வா ஜகதி கட
சராவ ஆதிகே ம்ருத்திகாவத்
தத்வே ஸஞ்சிந்த்யமாநே ஸ்புரதி தத்
அதுநா அபி அத்விதீயம் வபு: தே
ஸ்வப்ந த்ரஷ்டு: ப்ரபோதே திமிரலய
விதௌ ஜீர்ண ரஜ்ஜோ: ச யத்வத்
வித்யா லாபே ததா ஏவ ஸ்புடம் அபி
விகஸேத் க்ருஷ்ண தஸ்மை நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பா! க்ருஷ்ணா! நன்றாக ஆலோசித்துச் சிந்தித்தால் உனது ஈடு இணையில்லாத ஸ்வரூபமே உலகில் உள்ள அனைத்திற்கும் காரணமாக உள்ளது. இது நகைகளுக்குத் தங்கம் உள்ளது போன்றும், பானை முதலானவற்றில் மண் உள்ளது போன்றும் இருக்கிறது. கனவில் கண்ட பொருள்கள் விழித்துக் கொண்டவுடன் மறைவது போன்று, இருளில் கயிறு பாம்பாகத் தோன்றி வெளிச்சம் வந்தவுடன் கயிறாக உள்ளதோ அது போன்று, ஞானம் உண்டான பின் உனது ஸ்வரூபம் தெளிவாகப் புலப்படுகிறது. இப்படிப்பட்ட உனக்கு என் வணக்கம்.

8 யத் பீத்யா உதேதி ஸூர்ய: தஹதி ச
தஹந: வாதி வாயு: ததா அந்யே
யத் பீதா: பத்மஜ ஆத்யா: புந: உசித
பலீந் ஆஹரந்தே அநுகாலம்
யேந ஏவ ஆரோ பிதா: ப்ராங்
நிஜபதம் அபி தே ச்யாவிதார: ச பச்சாத்
தஸ்மை விச்வம் நியந்தரே வயம்
அபி பவதே க்ருஷ்ண குர்ம: ப்ராணாமம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உன்னிடம் பயந்து கொண்டு சூரியன் சரியாக உதிக்கிறான்; நெருப்பு எரிக்கின்றது; காற்று வீசுகிறது; ப்ரும்மா முதலான தேவர்கள் வணக்கம் செய்கின்றனர்; உனக்கு உரிய பலிபாகத்தை அளிக்கின்றனர். தேவர்களை நீ படைப்பின் தொடக்கத்தில் முன்னே நிறுத்தினாய். ப்ரளயம் உண்டானபோது கீழே இறங்குகிறாய். அனைத்து உலகங்களையும் ஆட்சி செய்கிறாய். இப்படியான உன்னை நாங்கள் வணங்குகிறோம்.

9 த்ரைலோக்யம் பாவயந்தம் த்ரிகுணமயம்
இதம் த்ரி அக்ஷரஸ்ய ஏக வாச்யம்
த்ரி ஈசாநாம் ஐக்யரூபம் த்ரிபி: அபி
நிகமை: கீயமாந ஸ்வரூபம்
திஸ்ர: அவஸ்தா: விதந்தம் த்ரியுக ஜநி
ஜுஷம் த்ரி க்ரம ஆக்ராந்த விச்வம்
த்ரைகால்யே பேத ஹீநம் த்ரிபி: அஹம்
அநிசம் யோக பேதை: பஜே த்வாம்

**பொருள் -** குருவாயூரப்பா! நீயே மூன்று குணங்களின் மாறுபாடுகளுடன் கூடிய மூன்று உலகங்களையும் படைக்கிறாய். நீயே அ-உ-ம என்ற எழுத்துக்களால் ஆன ப்ரணவத்தின் பொருளாக உள்ளாய். மூன்று மூர்த்திகளின் சேர்க்கையான பொருள் நீயே. மூன்று வேதங்கள் புகழ்ந்து உன்னையே துதிக்கின்றன. மூன்று நிலைகளான விழிப்பு, கனவு, உறக்கம், அறிந்தவன் நீயே, மூன்று யுகங்களிலும் (த்ரேதா, துவாபர, கலி) நீயே தோன்றுகிறாய். மூன்று அடிகளால் மூன்று உலகையும் அளந்தாய். மூன்று காலங்களிலும் (கடந்த, நிகழ், எதிர்) மாறாமல் உள்ளாய். இப்படிப்பட்ட உன்னை நான் மூன்று யோகங்களால் (கர்ம, ஞான, பக்தி) வழிபடுகிறேன்.

10 ஸத்யம் சுத்தம் விபுத்தம் ஜயதி
தவ வபு: நித்ய முக்தம் நிரீஹம்
நிர்த்வந்த்வம் நிர்விகாரம் நிகில
குண கண வ்யஞ்ஜந ஆதாரபூதம்
நிர்மூலம் நிர்மலம் தத் நிரவதி

மஹிமா உல்லாஸி நிர்லீநம் அந்த:
நிஸ்ஸங்காநாம் முநீநாம் நிருபம
பரம ஆநந்த ஸாந்த்ர ப்ரகாசம்

**பொருள் -** குருவாயூரப்பா! உனது திருமேனி ஸத்யமாக உள்ளது; அறிவுடன் உள்ளது; வெற்றியுடன் உள்ளது; பந்தபாசம் அற்றது; விருப்பம் அற்றது; மாற்றம் அடையாதது; ஒப்புமை இல்லாதது; நற்குணங்களின் ஆதாரமாக உள்ளது; தான் தோன்றுவதற்கு வேறு எதனையும் காரணமாகக் கொண்டு இல்லாதது; களங்கம் அற்றது; பெருமைகள் எல்லையற்று உள்ளது; பற்று இல்லாத முனிவர்களின் மனதில் உள்ளது; எல்லையில்லாத பரமானந்தம் உடையது- இப்படிப்பட்ட சிறப்புகள் உடையது.

11 துர்வார த்வாதச ஆரம் த்ரி சத
பரிமிலத் ஷஷ்டி பர்வ அபிவீதம்
ஸம்ப்ராம்யத் க்ரூர வேகம் க்ஷணம்
அநு ஜகத் ஆச்சித்ய ஸந்தௌ அமாநம்
சக்ரம் தே காலரூபம் வ்யதயது ந
து மாம் த்வத் பத ஏக அவலம்பம்
விஷ்ணோ காருண்ய ஸிந்தோ பவந
புரே பதே பாஹி ஸர்வ ஆமய ஓகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! விஷ்ணுவே! கருணைக்கடலே! உனது காலம் என்ற சக்கரம் பன்னிரண்டு ஆரங்களும் (மாதம்), முந்நூற்று அறுபது முனைகளையும் (நாட்கள்) உடையது. அது மிகவும் வேகமாக ஓடிக் கொண்டே இருக்கிறது. யாராலும் நிறுத்த இயலாத வேகம் உடையது. ஒவ்வொரு நொடியும் அது உலகத்தைத் தன்னுடன் வேகமாகப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடுகிறது. அப்படி ஓடும் அந்தச் சக்கரம், உனது திருவடிகளை வலுவாகப் பிடித்திருக்கும் என்னைத் துன்புறுத்த வேண்டாம். என்னை எனது பிணிகளில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

***

1 விஷ்ணோ: வீர்யாணி க: வா
கதயது தரணே: க: ச ரேணூந் மிமீதே
யஸ்ய ஏவ அங்க்ரி த்ரயேண த்ரி ஜகத்
அபிமதம் மோததே பூர்ண ஸம்பத்
ய: அஸௌ விச்வாநி தத்தே ப்ரியம்

இஹ பரமம் தாம தஸ்ய அபியாயாம்
த்வத் பக்தா: யத்ர மாத்யந்தி அம்ருத
ரஸ மரந்தஸ்ய யத்ர ப்ரவாஹ:

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எந்த ஒரு பகவானின் மூன்று அடிகளால் இந்த மூன்று உலகங்களும் அளக்கப்பட்டதோ, அதனால் இந்த உலகம் செல்வம் பல அடைந்து மகிழ்வுற்றதோ, எந்த பகவான் உலகம் முழுவதையும் தாங்கி நிற்கின்றானோ, அந்த பகவானான மஹாவிஷ்ணுவின் பெருமைகளை யார்தான் பட்டியல் இடமுடியும்? உலகில் உள்ள மண் தூள்களை எண்ண இயலுமா? (இதுவும் அதுபோல்தான்) விஷ்ணுவுக்கு மிகவும் ப்ரியமானதும், அனைத்து பக்தர்களும் இன்பம் அடையும் இடமானதும், மோட்சம் என்ற மலரின் தேன் பெருக்கெடுத்து ஓடும் இடமானதும் ஆகிய வைகுண்டத்தை இந்த உலகிலேயே நான் அடைய வேண்டும்.

2 ஆத்யாய அசேஷ கர்த்ரே ப்ரதி
நிமிஷ நவீநாய பர்த்ரே விபூதே:
பக்த ஆத்மா விஷ்ணவே ய: ப்ரதிசதி
ஹவி ஆதீநி யஜ்ஞ அர்ச்சந ஆதௌ
க்ருஷ்ண ஆத்யம் ஜந்ம ய: வா மஹத
இஹமஹத: வர்ணயேத் ஸ: அயம் ஏவ
ப்ரீத: பூர்ண: யசோபி: த்வரிதம்
அபிஸரேத் ப்ராப்யம் அந்தே பதம் தே

**பொருள் -** குருவாயூரப்பா! எல்லாவற்றிக்கும் முதன்மையான ஆதியாக உள்ளவனும், அனைத்தையும் படைப்பவனும், தனது பக்தர்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் வேறு வேறு விதமாக புதிதாகத் தோன்று பவனும், மிகுந்த செல்வங்களுக்கு அதிபதியும் ஆகிய மஹாவிஷ்ணுவான உனக்கு - எந்த ஒரு பக்தன் தான் இயற்றும் வேள்வியிலும் பூஜையிலும் அவிர்பாகத்தை பக்தியுடன் அளிக்கின்றானோ, க்ருஷ்ணாவதாரம் போன்ற அவதாரங்களைப் புகழ்ந்து பாடுகின்றானோ, அவன் இந்த உலகில் பெரும் ஆனந்தம் அடைகிறான். அனைவராலும் புகழப்படுகிறான். இப்படியாக வாழ்ந்து இறுதியில் சென்று அடைய வேண்டிய உனது வைகுண்டத்தை அடைகிறான்.

3 ஹே ஸ்தோதார: கவிஇந்த்ரா: தம்
இஹ கலு யதா சேதயத்வே ததா ஏவ
வ்யக்தம் வேதஸ்ய ஸாரம் ப்ரணுவத
ஜநந உபாத்த லீலா கதாபி:
ஜாநந்த: ச அஸ்ய நாமாநி அகில
ஸுக காரணி இதி ஸங்கீர்தயத்வம்
ஹே விஷ்ணோ கீர்த்தந ஆத்யை:
தவ கலு மஹத: தத்வ போதம் பஜேயம்

**பொருள் -** பகவானைத் துதிக்கும் கவிஞர்களே! வேதங்களால் காட்டப்படும் அந்த மஹாவிஷ்ணுவை நீங்கள் எப்படித் த்யானம் செய்கிறீர்களோ, அப்படியே அவன் உள்ளான். அவனது அவதாரங்கள் மூலம் அவன் செய்த லீலைகளை வர்ணனை செய்து ஸ்தோத்திரம் செய்யுங்கள். ஞானிகளே! அனைவருக்கும் அனைத்து விதமான இன்பத்தையும் அளிக்கும் அவனது திருநாமங்களைப் பாடுங்கள் மஹாவிஷ்ணுவே! இப்படியாக உனது திருநாமங்களை மட்டுமே பாடி உன்னைப் பற்றிய ஞானம் அடைவேனாக.

4 விஷ்ணோ: கர்மாணி ஸம்பச்யத மநஸி
ஸதா யை: ஸ தர்மாந் அபத்நாத்
யாநி இந்த்ரஸ்ய ஏஷ ப்ருத்ய: ப்ரியஸக
இவ ச வ்யாதநோத் க்ஷேம காரீ
ஈக்ஷந்தே யோக ஸித்தா: பரபதம் அநிசம்
யஸ்ய ஸம்யக் ப்ரகாசம்
விப்ர இந்த்ரா: ஜாகரூகா: க்ருத பஹு
நுதய: யத்ச நிர்பாஸயந்தே

**பொருள் -** குருவாயூரப்பா! அந்த மஹாவிஷ்ணு பலவகையான செயல்கள் மூலமாக, செய்ய வேண்டிய கடமைகளை அதனைச் செய்ய வேண்டியவர்களுக்கு வழங்குகிறான். இந்திரனின் பணியாளாகவும், தோழனாகவும் இருந்து உலக நன்மைக்காக பல நற்செயல்கள் செய்தான். யோகம் கைகூடப் பெற்று சித்தி பெற்றவர்கள். அவனது பரமபதத்தை என்றும் பார்க்கின்றனர். அந்தணர்கள் மிகவும் விழிப்புடன் பலவகையாக

ஸ்தோத்திரம் செய்து அவனை நன்றாக அனைவருக்கும் விளங்கும்படி செய்கின்றனர். இப்படிப்பட்ட மஹாவிஷ்ணுவின் லீலைகளை என்றும் உங்கள் மனதில் த்யானம் செய்யுங்கள்.

5 நோ ஜாத: ஜாயமாந: அபி ச ஸமதிகத:
த்வத் மஹிம்ந: அவஸாநம்
தேவ ச்ரேயாம்ஸி வித்வாந் ப்ரதிமுஹு:
அபி தே நாம சம்ஸாமி விஷ்ணோ
தம் த்வாம் ஸம்ஸ்தௌமி நாநாவித நுதி
வசநை: அஸ்ய லோக த்ரயஸ்ய அபி
ஊர்த்வம் விப்ரஜாமாநே விரசித வஸதிம்
தத்ர வைகுண்ட லோகே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! விஷ்ணுவே! நாராயணா! உனது மகிமைகளின் எல்லை என்பதை அறிந்தவன் யாரும் இதுவரை பிறந்ததும் இல்லை. பிறக்கப்போவதும் இல்லை. நன்மைகள் கிடைக்கும் உபாயமான வழியை அறிந்த நான் உனது திருநாமத்தையே மீண்டும் மீண்டும் கூறுகிறேன். உனது வைகுண்டலோகம் மூன்று உலகங்களை விட மேலானது. அங்கு உள்ள உன்னைப் பலவாகத் துதிக்கிறேன்.

6 ஆப: ஸ்ருஷ்டி ஆதி ஜந்யா: ப்ரதமம்
அயி விபோ கர்ப்ப தேசே தது: த்வாம்
யத்ர த்வயி ஏவ ஜீவ: ஜல சயந
ஹரே ஸங்கதா ஐக்யம் ஆபந்
தஸ்ய அஜஸ்ய ப்ரபோ தே விநிஹிதம்
அபவத் பத்மம் ஏகம் ஹி நாபௌ
திக் பத்ரம் யத்கில ஆஹு: கநக
தரணி ப்ருத் கர்ணிகம் லோக ரூபம்

**பொருள் -** குருவாயூரப்பா! எங்கும் உள்ளவனே! ஸ்ருஷ்டி காலத்திற்கு முன்பு எங்கும் நீராக இருந்தது. அந்த நீரானது தனது கர்ப்பத்தில் வைத்தது போல் உன்னைத் தாங்கி நின்றது. நீ அதில் பள்ளி கொண்டிருந்தாய். அப்போது அனைத்து ஜீவன்களும் உன்னிடமே ஒடுங்கியிருந்தன. அந்த நேரம் பிறப்பில்லாத உனது தொப்புளின் நடுவில்

இருந்து ஒரு தாமரை மலர் தோன்றியது. திசைகளையே இதழ்களாகவும், மேருவை தனது கொட்டையாகவும் கொண்ட அந்த மலரை உலகின் ரூபம் என்று கூறுகின்றனர்.

7 ஹே லோகா விஷ்ணு: ஏதத் புவநம்
அஜநயத் தத் ந ஜாநீத யூயம்
யுஷ்மாகம் ஹி அந்தரஸ்தம் கிம் அபி
தத் அபாம் வித்யதே விஷ்ணுரூபம்
நீஹார ப்ரக்ய மாயா பரிவ்ருத மநஸ:
மோஹிதா: நாமரூபை:
ப்ராண ப்ரீதி ஏக த்ருப்தா: சரத
மகபரா ஹந்த ந இச்சா முகுந்தே

**பொருள் -** மக்களே! மகாவிஷ்ணுவே இந்த உலகைப் படைத்தவன். அதனை நீங்கள் உணரவில்லை. விவரிக்க இயலாத அவனது ஸ்வரூபம் உங்கள் இதயத்திலேயே ஜீவனை விட மாறுபட்டதாக உள்ளது. அதனையும் நீங்கள் அறியவில்லை. காரணம் உங்கள் எண்ணம் மூடுபனி போல் மூடப்பட்டுள்ளது. இதனால் பெயரிலும், உருவத்திலும் மயங்கியவர்களாக, உயிர் வாழ்வதில் கருத்தை உடையவர்களாக, வயிற்றுப் பிழைப்பிற்காக யாகம் செய்பவர்களாக உள்ளீர்கள். மேலும் முகுந்தனான க்ருஷ்ணனிடம் பக்தியும் இல்லை. என்னே பரிதாபம்!

8 மூர்த்நாம் அக்ஷ்ணாம் பதாநாம் வஹஸி
கலு ஸஹஸ்ராணி ஸம்பூர்ய விச்வம்
தத் ப்ரோத்கம்ய அபி திஷ்டந் பரிமித
விவரே பாஸி சித்த அந்தரே அபி
பூதம் பவ்யம் ச ஸர்வம பரபுருஷ பவாந்
கிஞ்ச தேஹ இந்த்ரிய ஆதிஷு
ஆவிஷ்ட: அபி உத்கத த்வாத் அம்ருத
ஸுக ரஸம் ச அநு புங்க்ஷே த்வம் ஏவ

**பொருள் -** குருவாயூரப்பா! பரமபுருஷா! நீ ஆயிரம் தலைகள், கண்கள், கால்கள் உடையவன். அனைத்து உலகங்களிலும் பரவி உள்ளாய். அதனினும் அப்பாலும் உள்ளாய். இருந்தாலும் மிகவும் சிறிய மனித மனத்திலும் உள்ளாய். முன்பு இருந்தது.

இருப்பது, இருக்கப்போவது ஆகிய அனைத்தும் நீயே. உடலிலும் புலன்களிலும் நீயே உள்ளாய். ஆயினும் அவற்றின் மீது பற்று இல்லாமல் மோட்ச சுகத்தை அனுபவித்து வருகிறாய்.

9 யத்து த்ரைலோக்ய ரூபம் ததத் அபி
ச தத: நிர்கத: அநந்த சுத்த
ஜ்ஞாந ஆத்மா வர்த்தஸே த்வம் தவ
கலு மஹிமா ஸ: அபி தாவாந் கிம் அந்யத்
ஸ்தோக: தே பாக ஏவ அகில
புவநதயா த்ருச்யதே த்ரி அம்ச கல்பம்
பூயிஷ்டம் ஸாந்த்ர போத ஆத்மகம்
உபரி தத: பாதி தஸ்மை நமஸ்தே

**பொருள் -** குருவாயூரப்பா! முடிவு என்பதே இல்லாதவனே! மூன்று உலகங்களிலும் ரூபமாக நீயே உள்ளாய். அதற்கும் அப்பால் நின்று சுத்த ஞான ரூபமாகவும் உள்ளாய். இப்படி நீ உள்ளதற்கு அளவிட்டுக் கூற இயலாத உனது பெருமைகளே காரணம் ஆகும். உனது நான்கில் ஒரு பாகம் மட்டுமே உலகங்களாக உள்ளது. மீதம் உள்ள முக்கால் பகுதி உலகங்களைத் தாண்டி பரமானந்த ரூபமாக உள்ளது. அப்படிப்பட்ட உனக்கு என் வணக்கம்.

10 அவ்யக்தம் தே ஸ்வரூபம்
துரதிகமதமம் தத்து சுத்த ஏக ஸத்வம்
வ்யக்தம் ச அபி ஏதத் ஏவ ஸ்புடம்
அம்ருத ரஸ அம்போதி கல்லோல துல்யம்
ஸர்வ உத்க்ருஷ்டாம் அபீஷ்டாம் தத்
இஹ குண ரஸேந ஏவ சித்தம் ஹரந்தீம்
மூர்த்திம் தே ஸம்ச்ரயே அஹம் பவந
புர பதே பாஹிமாம் க்ருஷ்ண ரோகாத்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது ஸ்வரூபம் அறிந்து கொள்வதற்கு மிகவும் கடினமானது. சுத்தமான ஸத்வ குணம் உடைய உருவம் இந்த்ரியங்களான கண் போன்றவற்றுக்குப் புலனாகிறது. இது பரமானந்தக் கடல் அலைக்கு ஒப்பானது. எனவே

இந்தக் க்ருஷ்ண வடிவம் அனைத்திலும் சிறந்தது; அனைவருக்கும் ப்ரியமானது; கல்யாண குணங்களால் அனைவரையும் ஈர்க்கக்கூடியது. இப்படிப்பட்ட உனது விக்ரத்தை நான் வணங்குகிறேன். க்ருஷ்ணா! குருவாயூரப்பா! எனது பிணிகளில் இருந்து காக்க வேண்டும்.
***

1 அக்ரே பச்யாமி தேஜ: நிபிடதர
கலாயா ஆவலீ லோபநீயம்
பீயூஷ ஆம்லாவித: அஹம் ததநு
தத் உதரே திவ்ய கைசோரவேஷம்
தாருண்யா ஆரம்ப ரம்யம் பரம ஸுக
ரஸ ஆஸ்வாத ரோமாஞ்சித அங்கை:
ஆவிதம் நாரத ஆத்யை: விலஸத்
உபநிஷத் ஸுந்தரீ மண்டலைச்ச

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! இதோ என் கண்களின் முன்னால் ஓர் ஒளிப்பிழம்பை நான் பார்த்துக் கொண்டுள்ளேன். அது காயாம்பூ மலர்க்கொத்து போல் அழகான நிறமுடையதாக உள்ளது. அதன் மூலம் நான் அமிர்தத்தில் நனைகிறேனே! அந்த ஒளியின் நடுவில் மனம் கவர்கின்ற சிறிய சிறுவனாகிய ஓர் உயர்ந்த உருவத்தைக் காண்கிறேன். அது மிகவும் அழகாக உள்ளது; இளமையுடன் உள்ளது. நாரதர் போன்ற முனிவர்கள் அதன் இன்பத்தை அனுபவித்த வண்ணம் உள்ளனர். உபநிஷத்துக்கள் அனைத்தும் தேவலோக மங்கைகளாக மாறி அதனைச் சுற்றி நிற்கின்றனர்.

2 நீல ஆபம் குஞ்சித அக்ரம் கநம்
அமலதரம் ஸம்யதம் சாரு பங்க்யா
ரத்ந உத்தம்ஸ அபிராமம் வலயிதும்
உதயத் சந்த்ரகை: பிஞ்ச ஜாலை:
மந்தார ஸ்ரக் நிவீதம் தவ ப்ருது
கபரீ பாரம் ஆலோகயே அஹம்
ஸ்நிக்த சவேத ஊர்த்வ புண்ட்ராம்
அபி ச ஸுலலிதாம் பால பால இந்துவீதீம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! அந்த அழகான குழந்தையின் தலைமுடியானது கறுத்து உள்ளது; சுருள் சுருளான நுனிகளை உடையது; அடர்த்தியாக உள்ளது; அழகாக மடித்து கொண்டையுடன் கட்டப்பட்டது; சிறந்த ரத்தினக் கற்களால்

அலங்கரிக்கப்பட்டுள்ளது; பெரிய கண்களை உடைய மயிற் பீலிகள் உள்ளன. மந்தார மாலை அணியப்பட்டுள்ளது. இப்படியாக அதன் தலையழகைக் காண்கிறேன். கீழே இளம்சந்திரன் போன்ற வெண்மையான நெற்றியைக் காண்கிறேன்; அதில் உள்ள நாமம் பளபள என்று உள்ளது. அந்த நாமம் மேல்நோக்கி இடப்பட்டுள்ளது.

3 ஹ்ருத்யம் பூர்ண அநுகம்பா அர்ணவ
ம்ருது லஹரீ சஞ்சல ப்ரூவிலாஸை:
ஆநீல ஸ்நிக்த பக்ஷ்ம ஆவலி
பரிலஸிதம் நேத்ர யுக்மம் விபோ தே
ஸாந்த்ர ச்சாயம் விசால அருண
கமல தல ஆகாரம் ஆமுக்த தாரம்
காருண்யா ஆலோக லீலா சிசிரித
புவநம் க்ஷிப்யதாம் மயி அநாதே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! கருணை பெருகி நிற்கும் கடலின் அலைகள் போல் வளைந்து அசைகின்ற புருவங்கள் மனதை ஈர்க்கின்றன. கண் இமையின் முடிகள் கறுப்பாகவும், பளபளப்பாகவும் உள்ளன. அவற்றுடன் இணைந்த கண்கள் தாமரை மலர் போன்று அழகாகவும் சிவந்தும் உள்ளன. அந்தக் கண்களின் உள்ளே உள்ள கருவிழிகள் தனது பார்வை மூலமாக இந்த உலகத்தையே இன்பம் அடையச் செய்கின்றன. கருணை நிறைந்த உனது இந்தப் பார்வை அனாதையாக உள்ள என் மீது விழக்கூடாதா?

4 உத்துங்க உல்லாஸி நாஸம் ஹரி மணி
முகுர ப்ரோல்லஸத் கண்ட பாலீ
வ்யாலோலத் கர்ண பாச கஞ்சித மகர
மணி குண்டல த்வந்த்வ தீப்ரம்
உந்மீலத் தந்த பங்க்தி ஸ்புரத்
அருணதர ச்காய பிம்ப அதர அந்த;
ப்ரீதி ப்ரஸ் யந்தி மந்த ஸ்மித
மதுரதரம் வக்த்ரம் உத்பாஸதாம் மே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது முகத்தில் மூக்கு எடுப்புடன் உள்ளது. பச்சை நிற மணியால் செய்யப்பட்ட கண்ணாடி போல் உன் கன்னங்கள் உள்ளன. காதுகளில் அணிந்துள்ள மகர குண்டலங்கள் அழகாக அசைந்து அசைந்து அந்தக்

கன்னத்தில் இடித்து ப்ரகாசிக்கச் செய்கின்றன. தந்தம் போன்ற அழகான பல்வரிசை ஒளிவீசி உள்ளது. உதடுகள் இரண்டும் கோவைப்பழம் போன்று சிவந்து உள்ளன. அந்த உதடுகளில் உள்ள புன்னகை அருளை அள்ளி வீசுகிறது. இப்படியான உனது அழகான முகம் எனக்குக் தெளிவாகப் பதியட்டும்.

5 பாஹு² த்வந்த்வேந ரத்ந உஜ்வல
வலய ப்ருதா சோண பாணி ப்ரவாலேந
உபாத்தாம் வேணு நாலீம் ப்ரஸ்ருத
நக முக அங்குலீ ஸங்க சாராம்
க்ருத்வா வக்த்ர அரவிந்தே ஸு²மதுர
விகஸத் ராகம் உத்பாவ்ய மாநை:
சப்த ப்ரஹ்ம அம்ருதை: த்வம் சிசிரித
புவநை: ஸிஞ்ச மே கர்ண வீதீம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது கைகளில் அழகிய இரத்தின வளையல்கள் உள்ளன. உள்ளங்கையானது இளம்தளிர் இலை போன்று சிவப்பாக உள்ளது. அந்தக் கைகளில் உள்ள நகங்கள் ஒளிவீசுகின்றன. இத்தனை அழகான விரல்கள் புல்லாங்குழலைப் பிடித்துள்ளதால், அது விரல்களின் சேர்க்கை மூலம் பல நிறங்களுடன் உள்ளது. நீ அந்தப் புல்லாங்குழலை தாமரை இதழ் போன்ற சிவந்த உனது வாயில் வைத்துள்ளாய். அதில் இருந்த இனிமையான ராகத்தை உண்டுபண்ணுகிறாய். அதைக் கேட்ட உலகங்கள் மகிழ்கின்றன. அப்படிப்பட்ட இனிய நாதத்தின் மூலம் எனது காதுகளை நீ குளிரும்படி செய்ய வேண்டும்.

6 உத் ஸர்ப்பத் கௌஸ்துப ஸ்ரீ ததிபி:
அருணிதம் கோமளம் கண்ட தேசம்
வக்ஷ: ஸ்ரீவத்ஸ ரம்யம் தரளதர
ஸமுத்தீப்ர ஹார ப்ரதாநம்
நாநா வர்ண ப்ரஸூ²ந ஆவளி
கிஸலயிநீம் வந்ய மாலாம் விலோலத்
லோலாம்பாம் லம்பமாநாம் உரஸி
தவ ததா பாவயே ரத்ந மாலாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது கழுத்துப் பகுதி, அங்கு உள்ள கவுஸ்துபம் என்ற மணியின் ஒளியால் சிவந்து அழகாக உள்ளது. மார்பில் உள்ள ஸ்ரீவத்ஸம் என்ற மச்சம் மேலும் அழகு சேர்க்கிறது. அந்த மார்பில் உள்ள முத்து மாலைகள் அழகாக அசைகின்றன. பல நிறங்களை உடைய மலர்களாலும், தளிர் இலைகளாலும், தொகுக்கப்பட்ட வைஜயந்தி என்ற மாலை அழகாக உள்ளது. அதில் உள்ள மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன. மேலும் ரத்தினங்களால் ஆன மாலையும் அசைகிறதே! இப்படிப்பட்ட உனது திருமார்பை நான் த்யானம் செய்கிறேன்.

7 அங்கே பஞ்ச அங்கராகை: அதிசய
விகஸத் ஸௌபர ஆக்ருஷ்ட லோகம்
லீந அநேக த்ரிலோகீ விததிம் அபி
க்ருசாம் பிப்ரதம் மத்ய வல்லீம்
சக்ர அச்ம ந்யஸ்த தப்த உஜ்வல கநக
நிபம் பீத சேலம் ததாநம்
ந்யாயாம: தீப்ர ரச்மி ஸ்புட மணி
ரசநா கிங்கிணீ மண்டிதம் த்வாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது அழகான திருமேனியில் ஐந்து பொருள்கள் கொண்ட குழம்பு பூசப்பட்டுள்ளது. அதில் இருந்து வீசுகின்ற நறுமணத்தின் மூலம் அனைவரையும் ஈர்க்கின்றாய். பல உலகங்கள் உனது வயிற்றில் உடையபோதிலும், உனது இடையானது மிகவும் மெல்லியதாகவே உள்ளது. அந்த அழகிய இடையில், இந்திர நீலக்கற்கள் உடையதும், தங்கத்தையே உருக்கி ஆடையாகச் செய்ததுபோல் உள்ள மஞ்சள் பட்டாடையை அணிந்துள்ளாய். உன்னுடைய அரைஞாண் கயிற்றில் உள்ள கற்கள் ஒளி வீசுகின்றன. அதில் சிறிய மணிகள், சதங்கைகள் கட்டப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட உனது திருமேனியை த்யானம் செய்கிறேன். (ஐந்து வகை=குங்குமம், அகரு, கஸ்தூரி, கோரோகனம், ஹரிசந்தனம்)

8 ஊரு சாரூ தவோரூ கந மஸ்ருண
ருசௌ சித்த சோரௌ ரமாயா:
விச்வ க்ஷோபம் விசங்க்ய த்ருவம்
அநிசம் உபௌ பீத சேல ஆவ்ருத அங்கௌ

ஆநம்ராணாம் புரஸ்தாத் ந்யஸந
த்ருத ஸமஸ்த அர்த்த பாலீ ஸமுத்க
ச்சாயம் ஜாநு த்வயம் ச க்ரம
ப்ருதுல மநோஜ்ஞே ச ஜங்கே நிஷேவே

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது தொடைகள் இரண்டும் பருத்து மிகவும் அழகாக உள்ளன. மஹாலக்ஷ்மியின் மனதையே கொள்ளை கொண்டவை அல்லவா அவை? அவை மக்கள் மனதில் புகுந்து மயக்கிவிடும் என்பதால் எப்போதும் மஞ்சள் ஆடை மூலம் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. இரு முழங்கால்களும் இரு பாத்திரங்கள் போல் உள்ளன. உன்னை வணங்குபவர்களுக்கு அவர்கள் கேட்பதை அவற்றில் வைத்துள்ளாய் போலும்! கணுக்கால்கள் அகலமாக பருத்து உள்ளன. இவற்றை நான் த்யானம் செய்கிறேன்.

9 மஜ்ஜீரம் மஞ்ஜு நாதை: இவ
பத பஜநம் ச்ரேய: இதி ஆலபந்தம்
பாத அக்ரம் ப்ராந்தி மஜ்ஜத்
ப்ரணத ஜந மந: மந்தர உத்தார தர்மம்
உத்துங்க ஆதாம்ர ராஜத் நகர
ஷிம கர ஜ்யோத்ஸ்நயா ச ஆச்ரிதாநாம்
ஸந்தாப த்வாந்த ஹந்த்ரீம் ததிம்
அநுகலயே மங்களாம் அங்குலீநாம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! உனது கொலுசுகள் இரண்டும், எனது திருவடிகளை அடைவதே பேரானந்தமும், நன்மைகளையும் வழங்கும் என்று கூறுவதை போல் இனிமையாக ஒலிக்கின்றன. அஞ்ஞானத்திலும் மோகத்திலும் ஆழ்ந்துள்ளவர்களின் மனதை, மேருமலை ஆமையால் தூக்கப்பட்டது போல், தூக்கிவிட உனது நுனிக்கால்கள் ஆமைக்கு ஒப்பாக உள்ளது. உனது கால் விரல்களில் உள்ள நகங்கள் சிவந்து அழகாக உள்ளன. அதில் இருந்து வெளியில் வரும் சந்திரனின் ஒளிக்கீற்று போல் குளிர்ந்த ஒளியானது, உன்னை அடைந்தவர்களின் துன்பங்களையும் அறியாமையையும் நீக்குகிறது. இப்படிப்பட்ட கால் விரல்களை நான் த்யானம் செய்கிறேன்.

10 யோகீந்த்ராணாம் த்வத் அங்கேஷு

அதிக ஸுமதுரம் முக்தி பாஜாம் நிவாஸ:
பக்தாநாம் காம வர்ஷ த்யு தரு
நாத தே பாத மூலம் கிஸலயம்
நித்யம் சித்த ஸ்திதம் மே பவந
புர பதே க்ருஷ்ண காருண்ய ஸிந்தோ
ஹ்ருத்வா நிச்சேஷ தாபாந் ப்ரதிசது
பரமானந்த ஸந்தோஹ லக்ஷ்மீம்

**பொருள் -** க்ருஷ்ணா! குருவாயூரப்பா! கருணைக் கடலே! உன்னுடைய அனைத்து உறுப்புகளிலும் யோகிகளுக்கு மிகவும் ப்ரியமானதும் இனிமையானதும் உனது திருவடிகளே ஆகும். மோட்சம் பெற்றவர்களின் இருப்பிடமும் அதுவே. பக்தர்கள் வேண்டுவதை அவர்களுக்கு அளித்து மகிழும் கற்பக மரத்தின் தளிரானது அந்தப் பாதமே ஆகும். அத்தகைய உயர்ந்த உனது திருவடிகள் என்றும் என் மனதில் நிலையாக இருக்க வேண்டும். அப்படி இருந்துகொண்டு, எனது துன்பங்கள் அனைத்தையும் நீக்கி, எனக்கு பரமானந்தமான மோட்ச செல்வத்தையும் அளிக்க வேண்டும்.

11 அஜ்ஞாத்வதே மஹத்வம் யத்

இஹ நிகதிதம் விச்வநாத க்ஷமேதா:
ஸ்தோத்ரம் ச ஏதத் ஸஹஸ்ரை
உத்தரம் அதிகதரம் த்வத் ப்ரஸாதாய பூயாத்
த்வேதா நாராயணீயம் ச்ருதிஷு
ச ஜநுஷா ஸ்துத்யதா வர்ணதேந
ஸ்பீதம் லீலா அவதாரை: இதம் இஹ
குருதாம் ஆயு: ஆரோக்ய ஸௌக்யம்

**பொருள் -** க்ருஷ்ணா! க்ருஷ்ணா! க்ருஷ்ணா! குருவாயூரப்பா! விச்வநாதனே! உனது பெருமைகளை முழுவதுமாக நான் அறியாதவன். இருப்பினும் இங்கு நான் கூறியவற்றை நீ ஏற்றுக் கொண்டு பொறுக்க வேண்டும். ஆயிரம் ஸ்லோகங்களுக்குச் சற்றுக் கூடுதலாக உள்ள இந்தத் தொகுப்பு உனது அருளைப் பெற வேண்டும். வேதங்களில் உள்ள உனது லீலைகளைப் ப்ரமாணமாக (சாட்சிகள்) கொண்டு இந்த ஸ்தோத்திரம் உள்ளது. இது இரு வகையில் நாராயணீயம் என்று பெயர் கொண்டுள்ளது. நாராயணன் என்ற கவியின் மூலம் இயற்றப்பட்டதாலும், நாராயணனைக் குறித்து உள்ளதாலும் ஆகும். இது இந்த

உலகில் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் நீண்ட ஆயுளையும், அப்படி வாழ நல்ல உடல் ஆரோக்கியத்தையும் அளிக்கட்டும்.